T. 1121.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று

மாதத்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்தொன்பதாந்தொகுதி.

VOL-XIX.



பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1920—1921.

செந்தமிழ்ப்
பத்தொன்பதாந்தொகுதியி னுள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அகத்தியர்:—	ஸ்ரீமத். சேஷசுந்தரதேசிகரவர்கள்	ஈஈச
அகலிகைவெண்பா 2-ஆம் பதிப்பின் அநுபந்தம்:—	,, வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள்	கஈஎ
அணிற்பிள்ளையின் அருமைத் தொண்டு:—	,, ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள்	கஈசு
அரசியலாராய்ச்சி:—	,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்	ஈஅகூ
அரிச்சந்திரசரிதையில்ஒருதிருத்தம்:—	,, T. N. அப்பணயங்காரவர்கள்	ககூஅ
	,, K. G. சேஷையரவர்கள் B.A.,B.L.,	உடுசு
அன்பு:—	,, ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள்	அடு
கெடு:—	,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்	அகூ
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—		உசக
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைவினா:—		கடுசு, உ0க, உஎடு, உகூடு
ஆந்தையைப்பற்றிபஜபம்:—	ஸ்ரீமத். T. N. அப்பணயங்காரவர்கள்	உஅக
ஆழ்வார்பிள்ளைத்தமிழ்:—	உதவிப்பத்திராதிபர்	சூ
இடைச்செருகல்:—	ஸ்ரீமத். K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள்	ஈடு
கெடு:—	உதவிப்பத்திராதிபர்	ஈசு
இந்தியரின் பள்ளியெழுச்சி:—	ஸ்ரீமத். K N. வெராஜபிள்ளையவர்கள் B. A.	கஉஎ

இமயமலை:—ஸ்ரீத் ஊ. சா. வேங்கடராமையரவர்கள் உஅ

இராமநாதவித்யாலயப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— நஅ

இளங்காக்கைபாடினியார்:— பெயர்விழையான் உசூஉ

இறந்துகொண்டு வரும் தமிழ்த்தொன்னூல்கள்:— ஷை நகநக

ஒரு குறிப்பு:— ஸ்ரீமத். T. N. அப்பணையங்காரவர்கள் உஅசு

ஒருசெய்யுளுரை:— சா. சிதம்பரன் கநக

ஒரு வாழ்த்து:— ஸ்ரீமத். R. R. குணரத்தினம் அவர்கள் B. A. எஅ

ஒரு விஞ்ஞாபனம்:— ,, ப. மு. மதுரையார் கஉசு

ஓ சொருதல்முடிவின் மறுதலைமுடிவு:— பத்திராதிபர் க0டு

கற்புநிலை:—ஸ்ரீமத். வித்யாநிதி ர. கிருஷ்ணமாசாரியரவர்கள் M.A., உஉச

காக்கைபாடினியார்:— பெயர்விழைபான் உஅள

குமரிக்கருமணல்:—ஸ்ரீமத். K. C. வீராகவையர் அவர்கள் M.A., நகஉள

கூட்டுறவுமுறையின் வரலாறும் அதனை வளர்க்கும் முறைபும்:— ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்கள் நிள, எசூ

சங்கச்செய்புளில் ஏகாரமடுத்த ஓணீற்றுவினை:— ஸ்ரீமத். T. N. அப்பணை பங்காரவர்கள் உ0சூ

சிலசெய்புட்கள்:— ,, ப. மு. மதுரையார் நக

சிறப்புப்பாயிரம்:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் க

சிறைவிடந்தாதி:— ,, சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் உகஉ, உசசு, உசுங, ந0உ, நஉஅ

சிறைவிடந்தாதி நூலாசிரியர்வரலாறு ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் நகநக

சோதிடப்பொருத்தம்:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள் உசசு

தத்துவரத்நாகர விஷயசூசிகை:— பெயர்விழையான் நகசு

தமிழ்க்கவிவாணருக்கு ஒருவிண்ணப்பம்:– ஸ்ரீமத். K. N. சிவராஜபிள்ளை அவர்கள் B.A., ககூக

தமிழ்ப்பயிர்:– ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் கஉக

தமிழ்ப்புலவர்களுக்கு ஒருவேண்டுகோள்:– ,, சா. சிதம்பரன் நருரு

தமிழ்மொழியுள் வடமொழிக்கலப்பு:– ககூக

தமிழ்மொழிவளர்ச்சி:– ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் நருஉ

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:– உசநி

தனித்தமிழ்ப்பரீக்ஷைவினா:– நருஅச

திருக்கச்சிநெறிக்காரைக்காட்டுச் சோழசிலாசாசனங்கள்:– ஸ்ரீமத். அ. நடேசசெட்டியாரவர்கள் ககூஎ, உ0ஊ

திருநள்ளாறு:– ,, சோமசுந்தரதேசிகரவர்கள் உநி

திருவாரூர் ஒருதுறைக்கோவை:– ஷை நரு0நி

தென்னாட்டாரும் சோதிடமும்:– ஷை நருஉஉ

தொல்காப்பிய உரையாசிரியருரை:– ஸ்ரீமத். T. N. அப்பனையங்காரவர்கள் எநரு

தொல்காப்பியக் கல்லாடருரை:– ஷை உ0

தொல்காப்பியாதுசமயம்II:–ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளை அவர்கள் B. A. B. L. ககநரு

தொல்காப்பியர்சமயநிலை:–ஸ்ரீமத். T. N. அப்பனையங்காரவர்கள் உகக

தொல்காப்பியர்சைநராம் II:–,, K.S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள் உகள

தொல்காப்பியவாராய்ச்சி:– ஷை நரு0க

நல்லந்துவனார்சோதிடப்பொருத்தம்:– ஸ்ரீமத். R. கணபதிஐயரவர்கள் B.A., B.L., நருள0

நாலடியாரின்காலம்:— ஸ்ரீமத். தி. ந. சுப்பிரமணியன் கஉ

படிமை:— ,, K.G. சேஷையர் அவர்கள் B.A.,B.L., ஙஊ

பண்டைத்தமிழ்மாதரும் ஆபரணமணிதலும்:— ஷை நி

பதினெண்ரும்பரிபாடற் காலநிர்ணயம்:— ஸ்ரீமத். R S. நாராயணஸாமிஐயர் அவர்கள் B A., B.L., ஙஎஅ

புதின்மூன்ரும்புறப்பாட்டும் உரையும் V:— ,, S. வைபாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L., ஙஊ

பரிபாடல் 11-ம்பாட்டின் கிரகநிலை:— பத்திராதிபர் ஙஊநி

பாண்டிமண்டலசதகம்:— பத்திராதிபர் உநிஎ

பார்வதியார் பாதாதி கேசாந்தவருணனை:— ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்கள் ஙகஅ

பிழைதிருத்தம்:— ஙஉ

புத்தகமதிப்புரை:— பத்திராதிபர் கஅஉ,உகஊ,உஎஊ,ஙகஉ,ஙஅள.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபதாம்வருடக் கொண்டாட்டம்:— உதவிப்பத்திராதிபர் ஙஉக

ஷை ஷை மங்களவாழ்த்து:—ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளைபவர்கள் ஙநிக

ஷை ஷை ஷை:— ஸ்ரீமத். K. S. ஸவநீதகிருஷ்ணபாரதியவர்கள் சஙஊ

ஷை ஷை அக்கிராசனருபதிபாசம்:— ஙநிஎ

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகசபைத்தீர்மானங்கள்:— உஙஎ, உசஅ, ஙஅ, ஙசஅ.

மரபின்முறைக்குலத் தாரிமை:— ஸ்ரீமத். ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள் கஙஊ

மார்கழிஞோன்பாகிய தைங்நீராடல்:— ,, மு. இராகவையங்காரவர்கள் சகஅ

முன்மே முனிபாகி என்றதற்குச் சரிதம்:— ,, ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள் எஉ

வாழ்க்கைப்பாட்டு:— ஸ்ரீமத். R. R. குணரத்தினம் அவர்கள் B.A., கo

விவாகரகசியம்:— ,, வித்யாநிதி ர. கிருஷ்ணமாசாரிய ரவர்கள் M. A. உ, உ, ங, சo.

வைரப்புறக்கணிப்பு:— பத்திராதிபர் உஎ

இத்தொகுதியில் வெளிவந்தநூல்கள்:—

(முற்றுப்பெற்றவை)

1. அகராதிநிகண்டு:— பத்திராதிபர் க, உ, ங பகுதிகள்.
2. திருநறையூர்நம்பி மேகவிடுதூது:— உதவிப்பத்திராதிபர் ச-ஆம் பகுதி.
3. திருக்குற்றாலமாலை:— உதவிப்பத்திராதிபர் எ, அ, கூ பகுதிகள்.
4. தண்டலையார்சதகம்:— ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் கூ, கo, கக பகுதிகள்

(முற்றுப்பெறுகது.)

1. பழமொழிமூலமுமுரையும்:— பத்திராதிபர் டு, எ, அ, கூ, கo பகுதிகள்.

க—வுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககூ.] ரௌத்திரி- ஹூ கார்த்திகை-மீ [பகுதி க.
Vol. XIX. November—December-1920. No. 1.

சிறப்புப்பாயிரம்.

சிறப்புப்பாயிரமாவது நூற்குரிய பாயிரவகைகள் இரண்டனுள் ஒன்று. அஃது "ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை—நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே—கேட்போர் பயனே டாயெண் பொருளும்-வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே" என்புழிக் கூறிய எட்டுவிடயங் களையும் இனிதுணர்த்துவது. இப்பாயிரம் தன்னுற் கூறப்படும் நூல் ஒன்றற்கே உரிமையாதல்பற்றிச் சிறப்புப்பாயிரம் எனப்பட்டது. சிறப்பு-விசேடம். பாயிரம்—வாசகம், வரலாறு. இதனை வடநூலார் உபோற் காதம் என்பர். சிலர் சார்த்துகவி, துதிகவிமுதலிய பெயர்களுங் கூறு வர். சார்த்துகவி—நூலாசிரியன் பெயர் முதலியவைகளிலே சார்த்திச் சொல்லப்படுவது. சார்த்துவரி என்பதற்குப் பாட்டுடைத்தலைவன் பெயர் முதலியவற்றையும் சார்த்திச் சொல்லப்படும் பாட்டு என்று சிலப் பதிகாரவுரைகாரர் கூறுவர்.

ஆக்கியோன்—நூல்செய்தவன். நூல்செய்தவருள்ளே சிலர் பாயிரக் கவிகளாலும், வேறு வாக்கியங்களாலும் பலவாறு புகழ்ந்துரைக்கப்படு கின்றனர். வித்துவான், மஹாவித்துவான், புலவர், பண்டிதர், ஆசிரி யர், தமிழாசிரியர், போதகாசிரியர், பிரசாரகர், நூலாசிரியர் முதலிய சிறப்புப் பெயர்களாலும் புகழ்ந்து கூறப்படுகின்றனர். சிலர் தந்நூற் பிரகடனகாரர் தாமேயாயும் விளாசபக்கத்திலே மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமத், ஸ்ரீமான், அவர்கள் முதலிய பூச்சியவாக்கியங்களையும், ஆசிரியர், புலவர், பண்டிதர் முதலிய விசேடநாமங்களையும் தாமே இட்டுக்கொள்ளுதின்

றனர். பல நூலுரைகளை இயற்றினவரும், பரிசோதித்து அச்சிட்ட வருமாய் விளங்கியும் சிலர் யாதொரு விசேடணங்களுமின்றித் தமது நாமங்களை வாளாங்ரு வரைந்துவிடுகின்றனர். இவர் செயல்களுள்ளே தகவுடையது யாது?

நூற்பெயர்—நூலுக்கு இட்டுக்கொள்ளும் பெயர். ஒரு நூலுக்குப் பெயர் கூறுமிடத்து அந்நூலிற் கூறப்படும் பொருளின் தலைமைபற்றி யாவது பன்மைபற்றியாவது ஒரு பெயர்ப் பொதுச்சொல்லாய் அப் பெயர் வரல்வேண்டும். நூற்பெயர்போலவே வாக்கிய வடிவமாக எழுதப் படும் விடயங்களின்பெயர்களும் வரல்வேண்டும். நூற்பாகுபாடுகளின் பெயர்களும் வரல்வேண்டும். பெயர் பொதுமொழியினின்றுந் தவற லாகாது. நன்னூலார் நூ "பொதுமொழிதொடரின்" என்பர். சுருக் கமும், தொகைநிலையும், சொல்லின் அடிப்பாடும் பெற்றுவரும் பெயர் களை அறிஞர்க்கு அழகு பயப்பனவாகும். கந்தபுராணம், இராமாயணம் முதலிய காவியங்களிலுள்ள படலப்பெயர்களை ஆராய்வார்க்குப் பெயர் களின் பேரழகு நன்கு புலப்படும். நட்புக்கோட்படலம், கோலங்காண் படலம் முதலிய பெயர்களை ஆராய்க. பன்மொழித்தொடரால் வந்து நீண்டிசைக்கும் பெயர்களும், பக்கிசைக்கும் பெயர்களும், அடிப்பாடுறாப் பெயர்களும் அறிஞர்க்கு அழகுபயப்பனவல்ல. "உருவம் முதலிய நான்கிற்குமுள்ள நித்தாநித்தங்களின் விவரணம்" "பிரதிகண்டனத்தின் மேற்கண்டனம்" "ஆகுபெயரன்மொழித்தொகையாராய்ச்சி" முதலிய பெயர்களை ஆராய்க. சிலர் தமது நூற்குத் தாமாகப் பெயரிடல் அறியாது பிறர்நூற் பெயர்களைப் படியெடுத்துச் சிறிதுமாற்றித் தமது நூற்கு இட்டுக்கொள்வர். வாழ்த்தலங்காரம், குமாரநாயகாலங்காரம், சிவ பெருமானலங்காரம், தோத்திரமஞ்சரி, கதாமஞ்சரி, துதிமஞ்சரி, வழுக் களை வச்சிரதண்டம், வழுக்களை வச்சிரகுடாரம், இலக்கணதீபம் முதலிய பெயர்களை ஆராய்க. முதனூல், கருத்தன் முதலியவற்றுல் வரும் பெயர் இவற்றொடு மாறுபடுவதன்று.

யாப்பு—வாக்கியங்களைத் தொடுத்து நூல்களை ஆக்குதல். அது தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பு என நான்கு வகைப்படும். இவற்றுள்ளே மொழிபெயர்ப்பு என்னும் யாப்பினுலே இப்பொழுது நூலியற்றுவோருட் சிலர் பெரிதும் வேறுபாடுறச்செய்வர்,

சங்கத மொழியினின்று தமிழ்மொழியிற் பெயர்த்த நூல்களுள்ளே சில வற்றிலே சங்கத நடையும், தமழிற் பயிலாத சங்கதச்சொற்களும் விரவி வருகின்றன. இதோபதேசம், மானவதருமநூல், உலோகநீதி, கண்ணுடி முதலியன நோக்கி ஆராய்க. அங்கிலமொழியினின்று தமிழ் மொழியிற் பெயர்த்தவைகளுள்ளும் சிலவற்றிலே அங்ஙனம் வருகின் றது. கந்தபுராணம், கம்பராமாயணம் முதலியவைகளிலே மூலமா யிருந்த சங்கதமொழிநடையையும், தமிழ்மொழியிலே வாராத சங்கதச் சொற்களையுங் காண்டலரிது.

நூதலியபொருள்—நூலியற்றினோர் சொல்லக் கருதியுரைத்த பொருள். இது பாயிரகாரரலே தவிராது கூறப்படுவது. இதனைக் கூறுது வேறுபொருள்கூறிய பாயிரகாரருமுளர்.

ஆக்கியோன் பெயர் முதலிய எட்டினேனே காலம், களம், காரணம் என்னும் மூன்றையுஞ் சேர்த்து மொழிவாருமுளர். பண்டைக்கால நூலுரைகாரருள்ளே பலர் அறம், பொருள், இன்பம், வீடு என்பவை களைத் திறம்படக் கூறல்வேண்டும் என்பதனையன்றிக் காலங் கூறல் வேண்டும் என்பதனை மேலதாகக் கொண்டிலர். சிலர் காலங்களையுங் கூறினர். கந்தபுராணகாலம் "ஏதமறு சகாத்தமெழுநூற்றேழின்மேல்" என்பர். இராமாயணகாலம் "எண்ணியசகாத்தமெண்ணூற்றேழின்மேல்" என்பர். சங்கற்பநிராகரணகாலம் "ஏழஞ் சிருநூறெடுத்தவாயிரம்—வாழு நற்சகனம்" என்பர். செங்கழுநீர்விநாயகர்பிள்ளைத்தமிழின்காலம் "இலகுசகமீரெட்டுநூற்றுநாற்பத்தேழு" என்பர். சிலர் நூலரங்கேற் றியபோது அவ்வரங்கத் தலைவனுயிருந்த அதிபதி காலங்கொண்டு காலம் இது என்று உய்த்துணரவைப்பர். அப்படி வைக்கப்பட்டவை வில்லி பாரதம் முதலியன. காலங்கூறுத நூலுரைகாரர்களும், தக்க நூலுரை களும் இகழ்ந்து விலக்கப்படவில்லை. நற்றமிழ்வல்லுநராலே நூலுரை காரரும் புகழ்ந்து போற்றப்படுகின்றனர். நூலுரைகளும் பாராட்டிப் படித்துப் பயன்கொள்ளப்படுகின்றன.

இங்ஙனமாகவும், அங்கிலங் கற்கும் நமது தமிழ் மாணவகர் சிலர், சில தமிழ்நூல்களிற் காலங் கூறப்படவில்லை என்று குறைகூறிப் பிற வழியாலே காலங்களை ஆராய்ந்து வாதிக்கின்றனர். அந்நூல்களிற் கூறப் படும் அறம், பொருள், இன்பம், வீடு என்பவைகளை ஆராய்ந்தறிதலிலே

பெரும்பாலுஞ் செல்வதில்லை. திருவாதவூரர்காலத்திலே பெருவாதம் நிகழ்ந்தது. அவர்காலம் மற்றைய சமயகுரவர்க்கு முன் என்று சிலரும், பின் என்று சிலரும் வாதிப்பர். அவரிடத்திலே அன்புள்ளார்க்கு முன்னுயினென்! பின்னுயின் என்! காலநிச்சயத்திற்கு ஏதுக்களாகச் சிலாற் கொள்ளப்படும் சொற்பிரயோகங்களும், அரசநாமங்களும், பிறவும் மறுத்துரையாடவும் படுகின்றன.

இப்பாயிரங் கூறுதற்கு அதிகாரிகள் என்று இப்பொழுது பலருங் கொள்ளப்படுகின்றனர். தக்க புலமையிருந்தும் நூல்களை முற்ற நோக்கிக் குற்றங்களுளவாயின் மறுத்துரையாடாது புனைந்துரையாடிக் கவிகூறும் புலவர்களுங் கொள்ளப்படுகின்றனர். தமிழ்மொழியை நன்கு கல்லாது பிறமொழியையே நன்கு கற்ற அறிஞருங் கொள்ளப்படுகின்றனர். புத்தகம் நன்கு விலையாதற்குக் காரணர் என்பாருங் கொள்ளப்படுகின்றனர். இவரெல்லாம் இப்பாயிரம் கூறற்கு அதிகாரிகளல்லர். இப்பாயிரங் கூறற்கு அதிகாரிகள் நால்வர்.

க. ஆக்கியோராகிய நூலாசிரியர்க்குப் பல நூல்களையுங் கற்பித்த உபாத்தியாயர்.

உ. நூலாசிரியரிடத்தே பல நூல்களையும் படித்துக்கொண்ட மாணவகர்.

ங. நூலாசிரியரோடு கூடி ஒருசாலையிற்சென்று பல நூல்களுங் கற்று அவரோடு நன்கு பயின்றவர்.

ச. நூலாசிரியரியற்றிய நூல்களிலுள்ள சொற்பிரயோகங்களையும், பொருள்களையும், பிறவற்றையும் பலமுறை நோக்கி நல்லுரை கூறிய உரைகாரர்.

இந்த நால்வருமே நூலாசிரியருடைய கல்வியின் பெருமை சிறுமைகளையும் நூல்களின் குணதோஷங்களையும் நன்கறிய வல்லவராவர். இவர் கூறும் பாயிரமும் நம்பிக்கைகொள்ளற்பாலதாகும். "தன்னுசிரியன் றன்னெதி கற்றோன் தன்மா ணாக்கன் றகுமுரை காரனென்—றின்னோர் பாயிர மியம்புதல் கடனே" என்ற நன்னூற் சூத்திரத்தைப் பாயிரம் கொடுக்கல யாங்கள் செய்வோர் பார்ப்பது நன்று. நூலாசிரியர் தாமே பாயிரங் கூறும் வழக்கம் சிறுபான்மை உண்டு. சூடாமணிநிகண்டு, பிரயோகவிவேகம் முதலியவைகளை நோக்குக.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

பண்டைத் தமிழ்மாதரும் ஆபரண மணிதலும்.

சென்ற செப்டம்பர்மீ 5க நடைபெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கத் தின் வருஷக்கூட்டத்தில் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்கள் 'தமிழ ராய்ச்சி' என்ற விஷயமேற்கொண்டு பேசியதருணத்தில், பண்டைக்காலத் துத் தமிழ்மக்கள் ஆபரணாதிகளால் ஆடம்பரவேடங்கொள்ளாதிருத்தலே நாகரிகமென்று கருதினரென்ற கொள்கையை வெளியிட்டுத் தொன்னூல் களிலிருந்து மேற்கோள்காட்டி வற்புறுத்தியதாகச் 'செந்தமிழ்'ப்பத் திரிகையில் கூறியிருக்கின்றது (செந்தமிழ்; தொகுதி 18. பகுதி 10. பக் கம்க்கூக). ஐயங்காரவர்கள் தொன்னூல்தோர்ச்சி மிகவேபெற்ற பேரிசைப் புலவராகையால், தமிழ்நாட்டின் முன்காலத்துநடத்தையைப்பற்றி அவர் கள்விளம்புங் கூற்று என்போலியரா லெளிதில் மறுக்கத்தக்கதன்று. என்னே? "ஈபாடுவதோ கருடற்கெதிரே, இரவிக்கெதிர் மின்மினியாடுவ தோ?" ஆயினும், இழைபூணல் தற்காலத்து மக்களின் தவறெழுக்க மென்றும், முன்காலத்தார் அணிபறித் தழகுசெய்யு மியல்பினரென்றும் தமிழிலக்கியத்தால் தாபிக்கமுடியாதென்ற ஐயம் என்மனத் தெழுந்தது பற்றி ஈண்டுச் சிலவரிக ளெழுதத் துணிவுற்றேன்.

தமிழில் தொன்றுதொட்டுப் 'பெண்' எனும்பொருளை அன்மொழித் தொகையாலுணர்த்திவரும் பன்மொழிகளுள் 'ஆயிழை', 'ஏந்திழை', 'சேயிழை' 'நேரிழை' முதலியன சிலவாம். உதாரணமாக இங்குச் சிலநூற் பிரயோகங்கள் காட்டப்பட்டுள:—

"ஆயிழையொடின்புறு மறத்தைமுதலாற்றுய்" கந்தபுராணம்.

"இருண்மையீருண்கணிலங்கிழையீன்றுட்கரியளோ"

8-ம் பரிபாடல்.

"நீருரைசெய்நீர்மையில் சூளென்றி நேரிழாய்" அ-ம் பரிபாடல் 73.

"நேசமும்வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர் சீரி இவையுஞ் சிலவோ." திருவாசகம் 7. 6.

"நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்"

ஆண்டாள் திருப்பாவை.

"திங்கள் திருமுகத்துச்சேயிழையார் சென்றிறைஞ்சி"

ஆண்டாள்திருப்பாவை.

"செங்கனிவாயிதழுந்துடிப்பச்சேயிழையீர்சிவலோகம்பாடி"

திருவாசகம் கூ-நிகூ.

அன்றியும், மகளிரை "அணியிழை நல்லார்" என்று கூம் பரிபாட லிற் கூறியிருப்பதும், அதே பரிபாடலில் வள்ளியை 'ஒள்ளிழை' என்ற ஆகுபெயராலுணர்த்தியதும் கவனிக்கத்தக்கது. மேற்கூறிய நூற் பிரயோகங்களால், தமிழ்ப்பெண்களின் பண்டைக்கால முக்கிய இலக்க ணம் ஆபரணங்களால் தங்கள் தேகத்தை யலங்கரித்துக்கொள்ளுதலென் றும், அவ்வழக்கம்பற்றி இலக்கணையாக, ஆபரணத்தைக்குறிக்குஞ் சொல்லாகிய "இழை" என்ற பதத்தைத் தனியாகவும் அடைமொழி சேர்த்தும் பெண்மக்களையுணர்த்த முன்னோர்கள் பிரயோகித்துவந்த தென்றும் தெள்ளிதிற் காணக்கிடக்கின்றது. அழகு பெண்டிரின் உரிமை யாகக்கருதி, காரிகை, சுந்தரிபோன்ற மொழிகளாற் பெண்மக்களையுணர்த் திய முற்காலத்தறிஞர்கள், அணிகலன்பலபூண்டு அழகுக்கழகுசெய்யும் வழக்கம் பெண்டிரிடந் தொன்முறைவிளங்குதல்கண்டு, ஒள்ளிழை, ஏந் திழை போன்ற பன்மொழிகளாற் பெண்பாலார்க்கு விசேடணப்பெயர் கற் பித்தார்கள். இவ்வழக்கால் தமிழ்நாட்டுப் பெண்மக்கள் பண்டைக்காலத் திற் கலனணிவதி லார்த்திப்பெருக்கு அடைந்திருந்தார்களென்று ஐயமறக் கூறலாம்.

முன்காலத்தில் தமிழ்மாதர் உச்சிமுத லுள்ளங்கால்வரை ஒவ்வோ ருறுப்பிலும் பலவாபரணங்க ளணிந்துவந்தார்களென்பது தொன்னூல் களால் நன்குவிளங்கும். சான்றுகப் பின்வருவனவற்றை ஆய்ந்துநோக் குக. ஆறும் பரிபாடலில், வையைப்புனலாடும் மகளிரைக்கூறுமிடத்து.

தொடிதோள்செறிப்பத்தோள்வளையியங்கக்
கொடிசேராத்திருக்கோவைகாழ்கொளத்
தொகுகதிர்முத்தத்தொடைகலிழ்புமழுக

என்று. ஆசிரியர் நல்லந்துவனார் வர்ணித்திருக்கின்றார். ஏழாம் பரி பாடலில்,

துணைந்தாடுவாராய்கோதைய
ரலர்தண்டாரவர்காதிற்
றளிர்செரீஇக்கண்ணிபறித்துக்
கைவளையாழிதொய்யகம்புனைதுகின்
மேகலைகாஞ்சிவாகுவலய
மெல்லாங்கவருமியல்பிற்றுய்

என்று மையோடக்கோவனரும் பாடியிருக்கின்றார். ஆண்டாளும் திருப்பாவையில்,

சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்

என் றருளிக்கூறுவது இவண் உவனிக்கத்தக்கது. சிலப்பதிகாரம் கடலாடுகாதையில்,

அலத்தக மூட்டிய வஞ்செஞ் சீரடி
நலத்தகு மெல்விர னல்லணி செறீஇப்
பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை
யரியகங் காலுக் கமைவுற வணிந்து
குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்துப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடீஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து
மத்தக மணியொடு வயிரங் கட்டிய
சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை
பரியக்கம் வால்வளை பவழப் பல்வளை
யரிமயிர் முன்கைக் கமைவுற வணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரங்

கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி
காந்தண் மெல்விரல் காப்ப வணிந்து
சங்கலி நூண்டொடர் பூண்ஞாண் புனைவினை
யங்கழுத் தகவயி ஞரமோ டணிந்து
கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்தாங்
கிந்திர நீலத் திடையிடை திரண்ட
சந்திர பாணித் தகைபெறு கடிப்பினை
யங்கா தகவயி னழகுற வணிந்து
தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகந் தொடர்ந்த தலைக்கணி
மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து

என்று இளங்கோவடிகள் அக்காலத்துப் பெண்மக்கள் பாதாதிகேசம் வரையிற் பூணு மாபரணங்களை விளக்கிக் கூறியுள்ளார். அடியார்க்கு நல்லாருரையிலும் மூலத்தைத் தழுவியும் விரித்தும் ஏனையோர் கூற்றுக்களும் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. இவற்றை யெல்லாம் ஆய்ந்த பிறகு, முன்காலத்துத் தமிழ்ப்பெண்டிர் பல்வகைக்கலன்கள் அங்கமொவ்வொன்றிலும் அணிந்து விளங்கினரென்று துணிதல் சற்றுந் தவருகாது.

திருவனந்தபுரம்.

கே. ஜி. சேஷையர்.

ஸ்ரீ:

ஆழ்வார்பிள்ளைத்தமிழ்.

[ஆழவார் பிள்ளைத் தமிழ்:--இந்நூலை இயற்றியவரது பெயர் காலம் முதலியன புலப்படவில்லை. இந்நூற் செய்யுட்களிற் சில எனக்குக் கிடைத்தன. அவை பத்திச்சுவையைப் பெருக்குவனவாகவும், இலக்கியங்கற்கப்புகுவார்க்குப் பெரிதும் பயன்படத்தக்கனவாகவும், செய்யுள் செய்யுந்திறத்தை யுண்டாக்குவனவாகவும், இனிய நடையில் இயற்றப்பட்டனவாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு செய்யுளும் அழகர் பிள்ளைத்தமிழேபோல வெவ்வேறு சந்தச்சுவைபெறப் பாடப்பட்டுள்ளது. இச்செய்யுட்கள் எனக்குக் கிடைத்தபடியே பதிக்கப்பெற்றுள்ளன. இதிற் காணப்படும் பிழைகளைத் திருத்திக்கொள்ளும்படி அறிஞர்களை வேண்டுகிறேன். இந்நூலின் எஞ்சியபாகமுழுமுள்ள ஏட்டுச்சுவடிகள் வைத்திருப்போர் அவற்றைக் கொடுத்துதவுவார்களாயின் இயன்றவரை திருத்திச் செந்தமிழிற் புத்தகமாக வெளியிடற் குபகாரமாகும்.]

பாயிரம்.

கட்டளைக்கலித்துறை.

ஆயுந் தமிழ்த்தென் குருகூரி லேவந் தவதரியா
நாயும் பரகதி பெற்றதைக் கேளு நமக்குவந்து
போயும் பிறருற வல்லநெஞ் சேதினம் போற்றுதும்வா
தாயும் பிதாவுநம் மாழ்வார் திருவடித் தாமரையே. (க)

தேடிய செல்வமெல் லாந்திரு வாய்மொழி தேர்ந்துவழி
கூடிய ஞர்களெல் லாங்குரு கூர்சொற் கொழித்தெடுத்துப்
பாடிய நாமமெல் லாமகிழ் மாறன் பரிவுடன்சென்
றூடிய தீர்த்தங்க ளெல்லாந் திருச்சங் கணித்துறையே. (உ)

வேறு.

தேனரு மகிழ்த் தொடையலு மௌலியுந்
திருக்கிளர் குழைக்காதுங்
கானரு மலர்த் திருமுகச் சோதியுங்
கயிரவத் துவர்வாயு

மோனமாகிய வடிவமு மார்பமு
முத்திரைத் திருக்கையு
ஞானதேசிகன் சரணதா மரையுமென்
னயனம்விட் டகலாவே. (சு)

பாராத கல்விப் பரந்த பொருளனைத்து
நேராக முன்வந்து நிற்குமே—தேராது
தேவீறு கொண்ட திருமாலை முத்தமிழ்தேர்
நாவீ றனைத்தி தித்த நாள். (சு)

என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமா
னென்று மெனக்கே பிராணுவா—னென்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமு
மறவாது வாழ்த்துகவென் வாய். (நு)

காப்பு.

பூபார மன்பதைக ளீடேற வருள்பெரும்
பூதூர் தழைத்துமலியப்
புகழ்தருஞ் சித்திரைத் திருவா திரைப்பரம
புண்ணிய தினத்தவதரித்

தாபாச வறுசமய வோறுத் தெட்டெழுத்
தாதிமுத லென்றுகூத்
தாழ்வான் மதித்தருள வாழ்வான தற்சரண
மபிடேகம் வைத்தருளினார்

கோபாலர் தொழுபெரிய பெருமா ளரங்கர்தங்
கோயிற் றிருப்பதிமுதற்
கூறுந் திருப்பதிகள் யாவுந் தழைப்பருங்
குழகனழ கியகம்பிமுன்

சீபாடியஞ் சுருதி வேதந் தனக்கரு
ளிராமா நுசற் றெழுதுமெஞ்
சிறியசொற் புன்கவிதை சீபராங் குசமுனிவர்
திருவுள முவந்தருளவே.

நூல்.

காப்புப்பருவம்.

கார்கொண்ட திருமேனிப் பசும்பொருப்பி னடுவே
கதிரெறிக்கு மின்போலக் குடியிருக்கு மொருத்தி
தார்கொண்ட மூலியழுந்தித் தழும்பிருந்த மார்பத்
தனிப்பெருநா யகக்கடவுள் சரணமலர் தொழுவாஞ்
சீர்கொண்ட மணிமாடந் திகழ்குருகூர் நங்கை
திருவயிறு வாழவந்த திருக்குழவி மாறன்
பார்கொண்ட மறைநூலின் பயன்கொண்டு தமிழ்நூல்
பாடவல்ல பெருமானைப் பாங்குசனைக் காக்கவே. (க)

வேறு.

பொதியு மிதழ்வீடு தாமரைக் கோற்றெடி
புணருமணிமார்ப மாயனைத் தாட்சுடர்
புவனி பதினலு மூடுறத் தாக்கிய
பொருளே யவிராழி வால்வளைக் கோட்டொடு

முதிய கதைவேணு வார்சிலைத் தோற்றிய
மூகிலே யுறிதேடி வீடுபுக் காய்ச்சியர்
முறுவல் செயவாடு நீள்சூடக் கூத்தனை
முருகு வனமாலை நாதனைப் போற்றுதுங்

கதிய மதகூடு பாய்புனற் சேற்றெழு
கமல மணநாறு வாவியைப் போட்டுகள்
கடிய நெடுவாளை பாளையைத் தூக்கிய
கமுக மடல்பீறி யூறுபட் டேற்றிடை

குதிகொண் மதுவாச நீருடைத் தாற்றிடை
குமிழி யெழவோடி மேலிடப் பார்ப்பொடு
குருகு கரையேறி யேதெனப் பார்த்தெழு
குருகை வருகாரி மாறனைக் காக்கவே. (உ)

வேறு.

நறைகம ழிதழி தாங்கிய வேணிக் காட்டிடை
நதிசெரு கியபுராந்தனை மூரிப் பேய்ப்படை
நடமிட வினிய தாண்டவ மாடிக் காட்டிய
நவையறு கெவுரி காந்தனை மாறித் தூக்கிய
வறைகழ லிசையி லோங்கிய ஞானக் கூத்தனை
யயனிடு சொலவு வேண்டிய சாபக் கோட்டியை
யடிமொரு குழகர் பூந்தொடை மார்பக் கோட்டக
மழகெழ வினிது தோய்ந்தருண் மாதைப் போற்றுது
முறைபடி தயிரை மாந்தி யுபாயப் பேய்ச்சியை
யுறவொடு மருவி வாந்தவ மாகிக் கீழ்ப்பட
வுயிர்நிலை பருகி வாங்கிய மாயச் சூழ்ச்சிய
னுளமறி கருணை யீன்றுயிர் சேரக் காத்திடை
மறைதமி ழிசைக ளாம்படி பாரிற் ரோற்றிய
வரதனை நறவு தேங்கிய தாமப் போர்க்கழி
மகன்மக னியம மோங்கிய வாசத் தோட்டவிழ்
மகிழ்புனை புயப ராங்குச மாலைக் காக்கவே. (க)

வேறு.

மட்டவிழ்ந்த துழாய்த்தொடை மற்புயன்பர மேட்டியை
வைத்தசிந்தை வரோத்தமன் மட்டெழுந்தமி ழூட்டிய
தொட்டனைத்திரு தாட்டொழு சுத்தகங்குரு கூர்ப்புயல்
துப்பிளங்கனி வாய்ச்சிறு சொற்பெறும்படி காப்பவன்
நெட்டிலைந்த பலாச்சுளை நெக்குடைந்தொழு கக்கழை
நித்திலந்தெரி யாப்பய னித்தல்விண்டு களாப்பல
புட்டழங்கி யெழாச்சில புட்பமண்டப வாய்க்குடி
புக்கிருந்திசை தேக்கிய பொற்குறுங்குடி மூர்த்தியே. (ச)

வேறு.

பரமவை குந்தையி லொருதனி யொண்சுடர்
வரகுண மங்கையின் மாமணிக் கார்க்கடல்
பரவு புளிங்குடி தொலைவிலி மங்கல
முகில்பது மந்தகு லோசனக் காட்சியர்

வரமுனி பெண்கொடி தொழுத குளக்தையின்
மரகத மன்பினர் மாகிதிச் சேர்ப்பினர்
வருணன் வணங்கிய மகர நெடுங்குழை
மணிமுது குன்றுறை பேரையைப் போற்றுது

மரவம் வெகுண்டெழு கணபண பந்தியி
னடன விதந்தரு நீள்குடக் கூத்தின
னகிலமு மண்டமு மெவைகளு மிந்த்ரிய
மவைகளு மின்றிய நாளிடைத் தோற்றிய

சுரர்புவ னம்புவி கடவுளர் மன்பதை
சுருதி தரும்பெரி யோனைமுற் பூத்தவர்
துளவணி புங்கவர் பரிபுர பங்கய
துணைமுழு குஞ்சட கோபனைக் காக்கவே. (நி)

வேறு.

இருபுடை யொளிரு மடிபடை வெயிலு
மெயிலெழு நிலவும் ப்ரகாசித்தார்ப்பன
வெழுபுவி நடுவு திரிதரும திரை
யெறிசுடர் வெகுண்ட பானுவைக்கர்ட்டுவ

வொருவிழி பரிதி யொருவிழி ஞெகிழி
யொருவிழி யொழுகுங் க்ருபாகிதிப்பாற்கட
லொருபுற முதிய திகிரியி னுருவ
வொருபுற ந்ரசிங்க ரூபனைப்போற்றுதும்

பொருதிரை யுததி மொகுமொகு மொகென
நடுதறி நடுமந்த ராசலப் பூட்டுறு
புழைபடு மூரக கயிறிறை சுலவி
யருளமு தியலின்சொ லாயிரத்தாற்றரு

குருபர னியம குணபர னுபய
குலவரன் வளர்சந்த்ர சோதியைத் தேக்கிய
குளிர்முக வனச மொழுகிய திரும
ணழகெழு தியசெஞ்சொன் மாறனைக்காக்கவே. (சு)

வேறு.

மாடமீட்டிய வீதிநாற்றிசை வாவுதாட்கொடியேழ்
வாசிபூட்டிய தேரையோட்டுவ வானநாட்டவர்வாழ்
வீடுகாட்டுவ போல்விடாப்புகழ் வீசுநூற்குருகூர்
வேதம்வாய்த்தருண் மாறனேத்தரு மேனிகாத்தருள்வா
ரீடன்மாக்களி கூரநோக்கிய வாதிமூர்த்தியன்மா
லாழிகோட்டொடு சாபம்வாட்கதை காவலாய்ப்புடைசூழ்
சேடன்மேற்றிரு மாதர்போற்றிய சேயதாட்பெரியோன்
றேசுநாட்டமர் வாசனூற்றிசை சேணைகாப்பவரே. (எ)

வேறு.

விழிக்கட்பொங் கழற்கக்குஞ் சினத்துக்ரந் தெவிட்டிக்கொண்
டெயிறு முறுகிய பாந்தளைக் கிழ்ப்பட
மிதித்துத்தன் க்ருபைக்கட்பங் கயத்தைக்கொண் டிரட்சிக்குந்
தருண வருண பதாம்புயக் கூத்தினர்
தெழித்துச்செந் தயிர்க்கட்டுண் டுரற்கட்டுண் டழக்கற்குங்
குழவி மதமுது தூங்கலைக் காத்தவர்
திருச்சக்ரந் தடக்கைச்சங் கடற்கட்கந் தனிப்பொற்றண்
டரிய வரிசிலை யாந்துதித் தேத்துவஞ்
சுழித்துத்தெண் டிரைத்தத்துந் தடத்திற்பங் கயத்திற்கண்
குமரி வரிவளை யீன்றமுத் தாற்றிருள்
சுருட்டிச்சந் த்ரவட்டத்தின் கதிர்ச்சுற்றுந் திருச்சுற்றுங்
கனக மணியணி காஞ்சனத் தாற்கொடி
கிழித்துப்பைம் புயற்பக்கம் பிலிற்றித்தண் டுளிக்கர்ப்பங்
கமுக மடல்வழி பாய்ந்தெழப் பார்ப்பொடு
கிளிக்குப்பஞ் சாத்திற்செஞ் சிறைப்பொத்தும் பொழிற்சுற்றுங்
குருகை நகர்வரு மேந்தலைக் காக்கவே. (அ)

வேறு.

உரக பணமுடி மேற்றுயி லொளிமணி மேகசி லோச்சய
மொருதிரு நாபியின் மூர்த்திய வுணர்வரி தாய்மறை கூப்பிடு
பரம விழுகமு லாக்கினி பருகிவி டாமல்வி டாய்த்தெதிர்
பாவு திராவிட நூற்பொதி பழமறை யோனிசை காப்புவ

னரவ கிரீட பணைற்பவ வயிர்பணி யாயிர வாய்த்தழ
லடர்கதி ரோனெளி காட்டிய வணிவின தாசுத சித்துவன்
வரமலி வானவர் நாட்டிடை மணியணி கோபுர மேற்செலு
மதின்முடி மேல்வட கீழ்த்திசை வளர்கரு டாசல மூர்த்தியே (கூ)

வேறு.

இருநிலஞ் சேரடைவு நெடுவிசும் பூடருவி
யெழுதருங் கார்கடவுளா
மெவர்களுஞ் சேரவர வொருகிழங் காமொளியை
யிதயபங் கேருகம்விடா
தருகியொன் றுனசுவை பருகிளம் பாலனமு
துமிழ்தரும் பாவினிசைதே
சொருபெரும் பாவலவன் மகிழலங் காரனரு
ளுறுதிகொண் டாளுவனதேன்
மருவிருஞ் சோலைசெறி குருகைதண் சேறைகடன்
மலிசெழுங் காழியுறையூர்
வரிசைவண் டேர்புருடை திருவழுந் தூர்முதிய
வதரிதண் காவுறைகுவார்
திருவரங் கேசர்திரு மலியலங் காரரணி
திருவுளம் பாடிநகரார்
திருவநந் தேசரழ கியகுறுங் கேசிவர்
சிறியசெஞ் சேவடிகளே. (கo)

வேறு.

செம்பொற் ப்ரகாசங்வ ரத்நரா கக்கிரண்ண
சித்ரவித் தாரசிகரத்
தெய்விகவி மானகா வற்கடவு ளாகவுஞ்
செய்தொழிற் பகுதியிலவா
மும்பர்க்கு மெட்டாத வெம்பிரா னும்படொடு
முலகுநிய மித்துலகிடத்
துயிரைநிய மித்தருள வயனைநிய மித்திடுமு
னொருவரிவ ரென்னவுளவோ

கம்பக் கடாசயில வுலகமிக் கவிதைதா
வ.....றென்பராற்
காவற்கு மிக்கடவுள் யாவர்க்கு மிக்கடவுள்
கடவுளெவ ருக்குமுதலா
மம்பொற்.....வையு
மவனலாற் றெய்வமிலையா
லாழ்வாரை யெங்கள்குல வாழ்வாரை நங்குருகை
யாதிநா தன்காக்கவே. (கக)

காப்பு முற்றும்.

செங்கீரை.

ஒருமக் தரப்பரிய சயிலக் திரித்துததி
யுதரங் குழப்பியபிரா
னுலகுண் டடர்த்துவெகு பகிரண்ட முட்டவிடு
மொருபங்க யத்தறிவுநோய்
கருமக் தரித்துமன னகமொன்று பட்டினிய
கருமஞ் சலித்துமறைநூல்
கழறும் பரப்பிரம வொளிகண்டு தத்வநெறி
கரைகண் டருட்பகுதியால்
வருமிந் த்ரியக்கருவி தனைவென் றழுக்குடைய
மலபெந் தனக்குடில்புகா
வழிதண் டமிழ்ச்சுருதி யமுதம் புகட்டியதி
மதுரந் தெவிட்டியெழவே
திருமக் திரக்கவள மிசையுங் குழக்களிறு
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே. (க)

வேறு.

பஞ்சரப் பலவித விகாரமோ கிதமுடைப்
பஞ்சபூதிகளின் வகையைப்
பகுதிசெய் தறிவினைப் பிறிதுபடு வித்தகொரு
பரமஞா னக்குழவியே

வெஞ்சமத் தத்தரித் தத்திரி தருந்திகிரி
வித்தில்முத் தித்தசுடாரம்
விரிசடைக் கடவுளுந் திசைமுகத் தொருபானும்
வேறுவே றுருவுமடைவே
யஞ்சனக் கிரியுருவி லொன்றுகி யொன்றுன
வண்டகோ டிகளின்வெளிமூ
டந்தகா ரத்தைவிட் டந்தர்யா மித்துவத்
தப்புறப் பட்டபரம
செஞ்சுடர்க் கதிர்வபிர வொளிவிடுஞ் சிறுபால
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே. (உ)

வேறு.

சலதி தழங்கொலி குலவு கயங்களில் வண்டா னஞ்சேரத்
நமர மிடும்பல படிகர் தொறுஞ்சிறு சங்கோ டும்போகிப்
புலரி வலம்புரி குலவு கயங்களின் மண்டு கந்தாவிப்
பொதியவிழ் பங்கய நறவுக விண்டலர் திண்டா டுந்தாள்பட்
டலசி யுடம்பிடை புதைய விளம்பெடை ஞெண்டோ டும்போகித்
தலவ னுறங்கிய வமளி குலைந்திட வண்டா டுஞ்சோலித்
திலக வளம்புனை குருதை நெடுந்தகை செங்கோ செங்கீரை
திரிபுவ னம்புகழ் பெருமுது பண்டித செங்கோ செங்கீரை. (ரு)

வேறு.

வெங்கட் பணமகுட காகோ தரத்திணெடு
மேகோ தயக்கடவுணல்
வேதப் பாப்பிரம வாதிக் குறுங்குடிபுள்
வேரித் தழாய்நிமலர்ப்பற்
றங்கட்கு மகவாசை பெரிதான காரியார்
தகவுடைப் நங்கையுடனே
தருமநெறி யுறவந்து தவமுயலு மதுகண்டு
தனிநா யகப்பொருண்மகிழ்ந்

செந்தமிழ்

துங்கட்கு மகவாகி யாமுலகில் வருதுமென்
றுற்பவித் தருளியுலகத்
துயிர்முழுது மீடேற வுபதிடத நான்மறையை
யோரா யிரத்தமிழினுற்
செங்கட் பராபரனை யறிவித்த சிறுகுழவி
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே. (ச)

வேறு.

ஆதிநான் முகபுரா ணங்கலி யுகாதியி
லகண்டலோ காதிபதிவர்
தருமறைத் தமிழ்புகலு மெனவுரைத் திடுநெறியி
லவதரித் தருளுமளவிற்
போதஞா னக்கிரண வாதபோ தயசோதி
புவியிரு ளகத்தெழுதலாற்
பொங்குநீர் வடதிசைக் கங்கையிற் கண்டபிற்
றென்றிசைப் புவனத்துநம்
வேதநா தக்கடவுள் வெளிவந்த தெனவென்று
விடைகொண்டு மனுரகவிபால்
விழிதிறந் தெதிர்கண்டு பொய்ந்நின்ற ஞானமென
மெய்ந்நின்ற மொழியருளியோய்
சீதநாண் மலர்மகிழ்த் தொடைமார்ப சடகோப
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே. (நி)

வேறு.

வரிசைவை காசியிற் றிருவிசா கத்தினிய
வாரமொரு புகரில்நெறியாய்
வளர்பக்க மூவைந்தி லணியெகின யோகத்து
வந்தவ தரித்தளவிலா

வுரிசையா ரமுதுண்டு திருமுலைப் பாலமுத
முண்ணும ணண்ணுதலே .
சொளிகண்ட கண்பிரியில் வெளியுண்டு போமென்ன
வுள்ளஞ்சி நயனமூடிப்
பரிசன முராரிதிரு நாமபா ராயணம்
பழுதுபடு மென்னவெருவிப்
பவளவாய் திறவாத ஞானபோ தகமதலை
பரமவா நந்தநியமத்
தெரிசனவ சோநயக் கவிதையமு தக்குழவி
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே. (சு)

இராமானுஜையங்கார்,
உதவிப்பத்திராதிபர்.

படிமை.

"படிமை" என்ற மொழி, படிமா என்ற பிராக்ருதமொழியின் திரி பென்று என் நண்பர் ஸ்ரீமான் வையாபுரிப்பிள்ளை எழுதியிருக்கிறார். "படிமை" என்ற பதத்தை, படி+மை என்று பிரித்து 'மை' தொழிற் பெயர்விகுதியாகக்கொண்டு அம்மொழிக்குப் "படிப்பு" என்ற பொருள் கோட்டல் தவருமோ? மடிமை, மீடிமைபோன்ற மையீற்றுமொழிகளையும் இங்குக் கவனிக்க. படிமை அல்லது படிப்பு எல்லாவகைப் படிப்பையு முணர்த்துமாயினும், முன்காலத்தில் வேதாந்தஞானம் பெறுவீதையே மெய்ப்படிப்பாய்க் கருதினராகையால், படிமை என்ற பதத்திற்கு இளம் பூரணர் கூறியவாறு சிறப்புப்பொருள்கொள்ளப்பட்டதென்று நினைக்க லாம். அவ்வாறே, ஒத்து என்றதன்பொருள் பொதுவாய் 'ஓதப்படுவது என்றிருப்பினும் "மறப்பினுமோத்துக்கொளலாகும்" என்றவிடத்து, வேதமென்றும், "அகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாம்" என்ற விடத்து வேதாந்தஞானம் என்றும் பொருள்படுதல் காண்க.

கே. ஜி. சேஷையர்,

ஸ்ரீ:

தொல்காப்பியக் கல்லாடருரை.

ஒல்காப்பெருமைத் தொல்காப்பியமுனிவ ரருளிய விலக்கண நூலுக் குரைவகுத்த பெரியோர் உரையாசிரியரும், சேனவரையரும், போசிரியரும், நச்சினர்க்கினியரும், கல்லாடருமாவர். அவர்களியற்றியவுரைகளுள் உரையாசிரிய ரிளம்பூரணருரை தொல்காப்பியம் முழுமைக்கு முள்ளது. சேனவரையருரை சொல்லதிகாரத்திற்கே யுள்ளது. போசிரியருரை சொல்லதிகாரத்திற்கும் பொருளதிகாரவிறுதி காண்டியல்கட்கு முள்ளது. நச்சினர்க்கினியருரை முதல் இரண்டதிகாரங்கட்கும் பொருளதிகார முதல் ஆறியல்கட்கும் இப்பொழுது காணப்படுவது. கல்லாடருரையோ சொல்லதிகாரத்திற்குள்ளும் சிறிதுபாகத்துக்கே நிரம்புதலில்லாததாயில் அருகியிருக்கிறது.

இதன் பிரதியொன்று "தொல்காப்பியம்—கல்லாடனர்விருத்தி' என்றபெயருடன் சென்னை இராசாங்கக் கையெழுத்துப்புத்தகசாலையில் இருப்பதாகத்தெரிகிறது. இவ்வுரையெழுதிய கல்லாடனர் சங்கத்துச் சான்றோருள் ஒருவராகிய கல்லாடனர்தாமோ அன்றி அப்பெயர்கொண்ட வேறொருவரோ என்பதே ஈண்டாராயப்புக்க விஷயமாகும்.

இவ்வாராய்ச்சிவிஷயமாக அவ்வுரைப்பிரதியுண்மையைக் கண்ணுற்ற ஸ்ரீமான் சேஷகிரிசாஸ்திரியார் (M. A.) அவர்களுடைய அபிப்பிராயமாகவுள்ள வாக்கியங்கள் முதலிற் கவனிக்கத்தகும். அவை,—"The work under notice is a commentary on the second part of the Tolgappiyam, viz, the chapter on Etymology, attributed to Kalladar, one of the poets of the third Tamil Sangam and author of the famous poetical work Kalladam and portions of Agananuru, Purananuru, Kurundogai and Tiruvalluvamalai; but from the nature and style of the commentary under notice, one would naturally be led to the conclusion that *the commentary is the production of a very inferior hand*"* என்பனவாம். இவற்றுல் அவ்வுரை சங்கப்

* Report on a search for Sanscrit and Tamil manuscripts for they are 1893. 94. No. 2. Page 111.

புலவராகிய கல்லாடனாரால் இயற்றப்பட்ட பெருமையுடையதென்று கொள்ள இடமில்லையென்று வெளியாகிறது. அதனை யடிப்படையாகக் கொண்டு பழயதமிழ்நூலுரைகளை யாராயப்புக்கவிடத்து அவர்கள் கூறுவது உண்மையுடையதென்றே விளங்குகிறது.

உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள், ஆனைப்புலமைச் சேனவரையருள்ளிட்ட தொல்லாசிரியர் பல்லோரானும் பெருஞ்சுட்டுப் பெற்றவர். சேனவரையர் உரையாசிரியரைக் குறிக்கநேர்ந்தவிடத்தெல்லாம் அவர்மாட்டு மிகுந்த அச்சத்துடனும் மரியாதையுடனும் எழுதிச்செல்வர் என்ப. இன்னும், "முன்னூ லொழியப் பின்னூல் பலவினும், நன்னூ லார்தமக் கெந்நூ லாரு, மிணையோ வென்னுந் துணிவே மன்னுக" என்று முதன்மைபெறுதற்கேற்ற சிறப்புக்குரிய 'நன்னூலாசிரியரும் தம் சூத்திரங்கள் சிலவற்றை இளம்பூரணருரைக்கருத்தைத்தழுவியே இயற்றிப்போந்தா' ரென்றுங் கூறுப. இதனாலும் அவ்வுரையின்பெருமை விளக்கமுறும். நன்னூலுரையாசிரியரான மயிலைநாதரும், இவ்வுரையாசிரியரைக் கூறுமிடத்து, "உளங்கூர் வேள்வி இளம்பூ ரணரெனு, மேதமின்மாதவர்" என மிகுந்த நன்குமதிப்புடன் குறிப்பர். அடியார்க்கு நல்லாரும், "உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள்" என்றும், "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" என்னுஞ் சிலப்பதிகார அடியுரையில், குமரியாறு கடல்கொண்டசெய்தி, "எற்றூற் பெறுதுமெனின் நக்கீரர் உரைத்த இறையனார் பொருளுரையானும் இளம்பூரணவடிகள் முகவுரையானும் பெறுதும்" என்றும் உரையாசிரியரைப் பெயர் குறித்துள்ளார். அன்றியும் கற்றோர் பலரும் இளம்பூரணரையே தொல்காப்பியத்துக்கு முதன்முத லுரைகண்ட பெருமைக்குரியவரென நாட்டினர்.

இனி, சேனவரையரது பெருமையை நோக்குமிடத்து அஃதெம்மாலளந்துரைக்குந் தரத்தினதன்றென்பதைக் கற்றார்பலரும் நன்கறிவர். அவர் நச்சினார்க்கினியராற் குறிக்கப்பட்ட பழமை வாய்ந்தவர். இன்னும் தொல்காப்பியப் பாயிரவிருத்தியானும் பிறவற்றானும் அவருரையின் பெருமை இனிது விளங்கும்.

அவர்களோ டொப்பவே போசிரியரும் பல வுரையாளராற் குறிக்கப்பட்ட பழமையும் பெருமையும் உடையோராவர். நச்சினார்க்கினியர்

தொல்காப்பியக் களவியலுரையின்கண்ணே "நாட்டமிரண்டு மறிவுடம் படுத்தற்குக், கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்" என்னுஞ் சூத்திர வுரையில் "இங்ஙன மிதற்குப் பொருள்கூறல் ஆசிரியர்க்குங் கருத்தாதல் 'புகுமுகம் புரிதல்' என்னும் மெய்ப்பாட்டியற்சூத்திரத்தா னுணர்க. அதற்குப் பேராசிரியர் கூறிய உரையானு முணர்க" என்று போசிரிய ருரையினைச் சுட்டிச் செல்வர். அன்றியும், யாப்பருங்கலவிருத்தியினும் "பிறைநெடுமுடிக்-கறைமிடற்றரனார் பெயர் மகிழ்ந்த போசிரியர்" "நீர் மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த போசிரியர்" "பெண்ணொருபாகன் பெயர் மகிழ்ந்த போசிரியர்" "திரிபுரமெரித்தவர் பெயர் மகிழ்ந்த பேரா சிரியர்" "வாமமேகலை மாதையோர் பாகனார் நாமமகிழ்ந்த நல்லாசிரியர்' எனப் பலவாறுக அவர் பாராட்டப்பெறுதலைக் காணலாம். இன்னும் அவர் "நல்லறிவுடைய தொல்போசான்" என்றும் சிறப்பித்துச் சொல் லப்படுவர். நன்னூல் விருத்தியுரைகாரரும் 'ஆத்திரையன் போசிரியன்' என இவர்பெயரைக் கூறியுள்ளார்.

இது நிற்க, நச்சினார்க்கினியரோவெனின், அவரும் அங்ஙனமே உரையாசிரியரென் றெண்ணப்படும் பெருமையிற் சிறந்த பகுதி பெறுதற் குரியரென்பது கற்றார் பலரும் நன்கறிந்தது. அதனை அவருடைய உரைச்சிறப்புப்பாயிரத்தானும் பிறவற்றானு மறியலாம். "வேதபோத, நச்சினார்க் கினியா னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்" என்பதும் ஆன் றோர் கூற்றும்.

ஆகவே, இங்ஙனம் தொல்காப்பியத்திற்கு உரையிட்ட பெரியோர் களின் பழமை பெருமைகளை மூன்றேருரைகொண்டு ஒருவாறு எடுத் துக் காட்டினேன். அதனால் உடனெத்த கல்லாடருரையும் அவ்வாறு தமிழ்நூலுரைகளில் யாண்டும் பயிலாமை அதன் பழமையில் நம்பிக்கை வைப்பதற்கு விழைவுடைய நம்மனோர்க்குப் பெரிதும் இடையூறாய் நிற் பது நன்குவிளங்கும்.

தொல்காப்பியச்சொல்லதிகாரத்திற்கு நிரம்புதலில்லா இவ்வுரையியற் றிய ஆசிரியர், கடைச்சங்கத்துப் புலமைவகித்து, அகநானூறு, புற நானூறு குறுந்தொகை முதலிய நூல்களின் சில பாடல்களியற்றியவரு மாகிய, கல்லாடரேயாயின் அவர் இளம்பூரணர் முதலிய உரையாசிரியர் களுக்குக் காலந்தால் மிகவும் முற்பட்டவரே யாகவேண்டும். ஆகவே

அவருரைபற்றிய குறிப்புக்கள் பண்டையுரை நூல்களுள்ளே மேற்கோளாக நன்குமதிப்புடன் பயிலவேண்டுவதும் இன்றியமையாத தாகும். அங்ஙனமாக முன்னோர் யாரும் தொல்காப்பியக் கல்லாடருரையைப்பற்றிக் கூறுததே அது சங்கப்புலவராகிய கல்லாடரால் செய்யப்பெற்றதன்றென்பதற்குச் சான்று பகர்கின்றது.

இக்கொள்கை இன்னும் மற்றொரு சிறந்த நியாயத்தானும் வலியுறும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின்கண்ணே,

> "உயர்திணை யென்மனர் மக்கட் சுட்டே
> அஃறிணை யென்மனர வவரல பிறவே
> யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே."

என்பதே முதற்சூத்திரமாதலைக் கற்றார்பலரும் நன்கறிப. அதற்குக் கல்லாட ரெழுதியவுரையில் என்மனர் என்னுஞ்சொல் பின்வருமாறு விளக்கப்படுகிறது. அதாவது:—

"என்மனரென்றது என்பவென்னு முற்றுச்சொல்லினைக் குறைக்கும்வழிக்குறைத்தலென்பதனால், பகரங்குறைத்து விரிக்கும்வழிவிரித்தலென்பதனால் மன்னுமாருமென் றிரண்டிடைச்சொற்பெய்துவிரித்து என்மனர் என்றுயிற்று. இம்முற்றுச்சொற்குப் பெயராகிய ஆசிரியரென்பது செய்புள்விகாரத்தாற் றொக்கது. இஃ தெச்சவகை. என்றார் எனற்பாலதனைக் காலமயக்கத்தால் என்ப என்றாரென வுணர்க" என்பதே. உரையாசிரியரான இளம்பூரணவடிகளுருரையிலும் 'என்மனர்' என்பதற்கு இங்ஙனமே யுள்ளது. இதனை, சொல்லதிகாரமுதற்சூத்திரத்தின் அவருரைப்பிரதிநோக்கி யுணர்க. இனிச் சேனாவரையர், என்மனரென்பதற் குரைக்குங்கால் "என்மனரென்பது செய்யுண்முடிபெய்திநின்ற தோராற்றுநிகழ்காலமுற்றுச்சொல். என்றிசினோர் கண்டிசினோர் என்பனவும் அவ்வாறு வந்த நிகழ்காலமுற்றுச்சொல். என்பவென்னு முற்றுச்சொல்லினது பகரங் குறைத்து மன்னுமாருமென விரண்டிடைச் சொற்பெய்துவிரித்தாரென் றுரையாசிரியர் கூறினராலெனின் என்மனரென் றிடர்ப்பட்டிழிச் சிறுபான்மை வாராது நூலுள்ளுஞ் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்றுவருதலானும் இசைநிறையென்பது மறுத்துப் பொருள்கூறுகின்றார் பின்னும் இசைநிறையென்றல் மேற்கோண்மலிவாதலானு மவர்க் கது கருத்தன்றென்க. மாணாக்கர்கட் குணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக்கூறாது உய்த்துணரவைத்த லவர்க் கியல்பாகலாற்

செய்யுண்முடிபென்பது கூராயினர். என்மனு ராசிரியரெனவே யுய்ர் திணை யஃறிணை யென்பன தொல்லாசிரியர் குறியாம்." எனக் கூறினமை யாவரும் நன்கறிந்தது. இவ்வாறு கூறிய சேனவரையர், கல்லாடருரை யிற் கூறிய வழுவினை யெடுத்துக் காட்டிக் களையாது, உரையாசிரியருரை யின்கட் காண்படுவதனை, அவருரை யன்றென்றுதோன்ற இடைச் செருகலென்று குறிப்பாற் பெறவைத்து விலக்கினமையால், சேனவரை யர்காலத்து இக் கல்லாடருரை பயிலப்பெற்றிலதென்பது நன்கறிய லாகும். இச்சூத்திரவுரையில் நச்சினர்க்கினியரும், என்மனுவென்பதற் குக் கல்லாடருரையிற்கூறிய இலக்கணத்தை யெடுத்துக்காட்டிக் களையாது சேனவரையர் கூறியதனையே தழுவிச்சென்றமையால் நச்சினர்க்கினியர் காலத்தும் இக்கல்லாடருரை வழங்கப்படவில்லையென்பது சொல்லாமலே விளங்கும். சொல்லதிகாரத்திற்கு உரைவகுப்பான்புகுந்த சேனவரையர் முதலியோர் அதற்கு,மிகப்பழமையான கல்லாடருரையொன்றுண்மையை அறவே மறந்தொழிந்தனரென்பது சிறிதும் கொள்ளற்பாலதன்றும். ஆக வே இக்கூறியவற்றாற் கல்லாடனர்விருத்தி என இக்காலத்து வழங்கு வது உண்மையிற் சங்கப்புலவராகிய கல்லாடனரியற்றிய வுரையன்றென் பது போதரும். எனவே யவ்வுரை பிற்காலத்தாருள் அப்பெயர்பூண்டார் யாரோ வொருவர் இயற்றிய தென்றேனும், அன்றி முற்காலத்ததேயாயின் அது ஏனையுரையாளரால் நன்குமதிக்கப்படவில்லை யென்றேனுங் கொள்ளத்தகும். கொள்ளவே அவ்வுரை ஏனையோருரைகளுடன் மாறு பட்டுழித் தக்க சான்றுகும்வலியிலதா மென்பதும் எளிதினறியப்படும்.

இனிக் கல்லாடரென்ற பெயர்கொண்டார் பலர் இருந்திருக்கலா மென்பதற்கும் சான்று காணப்படுகிறது. செந்தமிழ் தொகுதி 4, பக்கம் 261-ல்,புதுக்கோட்டையைச் சேர்ந்த சாஸனம் ஒன்றிலும், வாதவூரடிகள் "கல்லாடம்.....தனில்" எனக் கூறியதனிலும் ஸ்ரீமான்-கு. அ. கோபி நாதராயரவர்கள், கல்லாடம் என்ப தோரூர்ப்பெயரென்று காட்டியிருக் கிறார்கள். கல்லாடம் எனப் பெயரிய ஊரின்கண்ணேவதிந்த தமிழா சிரியர்கள் கல்லாடனர் எனச் சிறப்புப்பெயர்பெறுதற்கேற்ற உரிமை யுடையோரென்றே நினைக்கிறேன். மற்றும் அறிஞர்கள் ஆராய்ந்து உண்மை யுரைப்பாராக.

T. N. அப்பனையங்கார்,

மதுரை.

திருநள்ளாறு.

கொய்யுலாம் மலர்ச்சோலை குயில்கூவ மயிலாலும் சோழவள நாட்டிலே அந்திப்பிறைவண்ணனது சடாபாரத்திலே வதியும் பாக்கியம்பெற்ற புண்ணியநதியான கங்கையின்பாவத்தையும் போக்கவல்ல புனிதமாம் காவிரிநதியின் தென்பாலுள்ள தெய்வத்தானங்கள் பலவற்றுள் திருநள்ளாறு ஒரு கேஷத்திரமென்பது பலரும் அறிந்தவிஷயமே. பாலருவாயராம் திருஞானசம்பந்தப்பெருமான், "வண்டோதைமாறுமலர்வேணியின்வந்தநீத்த" மாயிலும் என் விடாய்தணியாதென வெம்பிவீழ்ந்த குடையெடுக்குங் குறியதாட் குறளாம் குண்டோதரன்பொருட்டு வந்த வான்யாறும் வையைசூழ் ஆலவாயிலே வளவர்கோன்பாவை வரிவளைக்கை மடமானியாம் பங்கயச்செல்வி பாண்டிமாதேவியாரின் வேண்டுகோட்படி திருமடத்திற் றங்கியகாலத்துப் புரட்டமண்குண்டாரா லிடப்பட்டதீயைச் சிட்டர் நோக்கி அத்தீயினைத் தென்றமிழ்க்கூடலட்டமூர்த்தியை யங்கிருந்து அருமறைப்பதிகம் பாடித் துட்டர் பொய்யுரைமேற்கொண்டு தொன்முறைதறந்துவிட்டவேந்தனைப் பற்றும்படிசெய்தகாலத்து மங்கையர்க்கரசியாரால் வேண்டப்பட்டபடி அவன் வெப்புநோய்தீர்ந்ததும் பறிதலைக்குண்டர் கழுவேறியதும் உலகறிந்ததே.

கவுணியர்குலக்கொழுந்து பின்னர் மதுரைமாநகரினின்றும் நீங்கிப் பலதலங்களையும் தொழுது கண்ணுதலார் திருத்தொண்டர் பல ருஞ்சூழ மணமேற்குடியிற்றங்கிச் சிலநாட்கழித்து மங்கையர்க்கரசியார்க்கும் இடையறுவன்புபூண்ட மந்திரியார் குலச்சிறையார்க்கும் விடைகொடுத்துப் பொன்னிவளநாடுபுகுந்து திருக்களருடைய நாயகனைச் சேவித்துப் பாதாளீச்சரம்புகுந்து முள்ளிவாய்க்கரையடைந்து ஓடம்விடுவாரின்றிக் "கொட்டமே கமழும் கொள்ளம்பூதூர் நட்டமாடிய நம்பனையுள்கச் செல்லவந்துக" எனத் தாமே ஓடம் விட்டு வில்வவனநாதரைப் பணிந்து வசிக்குநாளில்,

"போற்றிசைத்துப் புறம்போக்தங் குறையுநாளிற் பூழியன்முன்
புன்சமயத் தமணர் தம்மோ
டேற்றபெரு வாதின்த ணெரியின் வேவாப் பதிகமுடை
யிறையவரை யிறைஞ்ச வேண்டி
யாற்றவுமங் கருள்பெற்றுப் போந்துமுன்ன மீனாந்தபதி
களுமிறைஞ்சி யன்பர் சூழ
நாற்றிசையும் பரவுதிரு நள்ளா றெய்தி நாடுடைநா
யகர்கோயி னண்ணி னரே. (பெரி. திருஞா. 901)

என்று காணப்படுகிறது.

கன்மனமுங் கரைந்துருகப்பாடிய மதுரவாசகரும் திருவாசக முடையாரால், கல்லாடத்துக் கலந்தினி தருளியுமென் றேத்தப்பட்ட பெருமைவாய்ந்த பனுவலின் 61-வது செய்யுளிலே

மதுமல ரணிந்த மதுமயக் காலே
யெழுசிறை தியு மெருவையும் பருந்துங்
குவளையுங் காட்டுக் குருகொடு புதாவே
வலியழி பகடு வாய்நீர்ச் செந்நாய்
தழைமடி மேதியும் பிணரிடங் கருமே
பட்டுலர் கள்ளி நெற்றுடை வாகை
கருள்விரி சாலியுங் குலையரம் பையுமே
வடதிரு வால வாய்திரு நவ்வூர்
வெள்ளி யம்பல நள்ளா றிந்திரை
பஞ்சவ னீச்சர மஞ்செழுத் தமைத்த
சென்னி மாபுரஞ் சேரன் றிருத்தளி
கன்னிசெங் கோட்டங் கரியோன் றிருவுறை
விண்ணுடைத் துண்ணுங் கண்ணிலி யொருவன்
மறிதிரைக் கடலுண் மாவெனக் கவிழ்ந்த
களவுடல் பிளந்த வொளிகெழு திருவேற்
பணிப்பகை யூர்தி யருட்கொடி யிரண்டுடன்
முன்னும் பின்னு முதுக்குள நிறைந்த
வருவியஞ் சார லொருபரங் குன்றஞ்
சூழ்கொள விருந்த கூடலெம் பெருமான்

என்று காணப்படுகிறது. இவ்வகவலிற் கூறப்பட்ட தெய்வத்தானங்களாவன:—

1. வடதிருவாலவாய்:—முழுதுணர்ந்த கபிலன் றன்பாற் பொழிந்த பெருங்காதன்மிகுகேண்மையினுன் இடைக்காட்டுப் புலவன் அரிதிற் பாடிக்கொணர்ந்த பனுவலைக்கேட்டு வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும் பகிர்ந்தருந்தவல்லோனும் குலேச பாண்டியன் ஒன்று முரையான் வாளாவிருத்தலைக் கண்ட புலவன் மானம் புறந்தள்ள எம்பெருமானுறை கோயினண்ணிச் சன்னிதியில் வீழ்ந்தெழுந்து தமிழறியும் பெருமானே தன்னைச் சேர்ந்தார் நன்னிதியே இப்பாண்டியன் என் பனுவல்கேட்டு வாளாவிருத்தல் தகுதியேவென்ன வவன் பின்சென்று தங்கியவூர்.

2. திருநடுவூர் தெரியவில்லை.

3. வெள்ளியம்பலம்:—உலகமுழுதீன்ற பசுங்கன்னி திருமணத்துக்கு வந்த மத்தியந்தமுனிவரது புதல்வரான மழமுனிவர் தமது பக்திமகிமையாற்பெற்ற புலிக்கால்களுங் கண்களுமுடைமையாற் புலிக்காலன் எனப் பெயர்பெற்ற வியாக்கிரபாதரும் தாருகவன நடனங் காணவிரும்பிய ஆதிசேடன் அனுருயையின் அஞ்சலியிற் றோன்றிய காரணத்தால் பதஞ்சலியான முனிவரும் நின் னருணடனங் கண்டுண்பது அடியேங்கள் நியமமென்று கூற, அக்கூத்தை இவ்வால வாயிலே செய்த இடம்.

4. நள்ளாறு:—தெரியவில்லை.

5. இந்திரை:—தருவாசமுனிவரதசாபத்தாற் காட்டானை யாகத்திரிந்து கடம்பமாவனத்தாதியைப் பூசித்து இந்திரன்பேரால் தாபித்த தலம் இந்திரை.

6. பஞ்சவனீச்சரம்:—தெரியவில்லை.

7. அஞ்செழுத்தமைத்த சென்னிமாபுரம்:—சோழபுரமென்பர் உரையாசிரியர்.

8. சேரன்றிருத்தளி:—தெரியவில்லை.

9. கன்னிசெங்கோட்டம்:—அழிவில்லாத செங்கோட்டம். இது இப்பொழுது செங்கோட்டை என்று வழங்கப்படும் ஊராமோ என்று ஊகிக்கப்படுகின்றது.

10. கரியோன்றிருவுறை:—திருமாலது அழகிய சோலைமலை.

11. அருவியஞ்சாரல் ஒரு பரங்குன்றம்:—ஒப்பற்ற திருப்பரங்கிரி.

சூழ்கொளவிருந்தகூடல்—இந்தத் தெய்வத்தானங்களாற் சூழப்பட்ட மதுரைமாநகரம் என்ப.

இதுகொண்டு, கல்லாடர்காலத்தில் (காலத்தைப்பற்றி பின்னர் ஆராய்வாம்) திருவள்ளாறு என்ற ஒரு சேஷத்திரம் இருந்ததென்பது வெள்ளிடைமலையாம்.

அங்ஙனமாயின், சோழிப் பெருவாழ்வின்காலத்து இத் தெய்வத்தானங்கள் இருந்தனவா? அவை இப்பொழுது எவ்வாறு உருமாறிக்கிடக்கின்றன என்பதை அன்பர்கள் கருணைகூர்ந்து தெரிவிப்பார்களாயின் பின்னர் எனது ஆசங்கைகளை வெளியிடுவேன்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர். சோமசுந்தரதேசிகன்.

இமயமலை.

இலகுசீர்ப் பிருதுகாட் டிலகாம் பசுக்கட்
பிறங்குநன் மணிமருத் திலைகளாம் பாலை
மேருவைக் கைவல கேவல ஞக்கிக்
கறப்பா னேனைப் பொறைகளாற் கன்றுக்
கொள்ளத் தக்கதும்; குணங்களுக் கிடையிற்
பட்டதோர் குற்றமும் பண்புறு மாதலிற்
பான்மதி யிடையிற் காண்முய லென்னப்
பன்மணி யிமைப்பிற் பனியா ணியிற்

குன்று திருப்பதும்; நன்றுத் தேவ
மங்கையர் கண்டுநன் மாலைப் பொழுதென
மயங்கித் தம்மை மதிக்கப் புனைதல்
செய்வான் சிதைந்த செல்லின் றிரளைச்
செம்மை நிறமாச் செயவல சீர்சால்
செங்கற் பொடிகளைச் சேர்ந்த சிரசைப்
பெற்றதும்; வெயிலில் வெதும்பிய சித்தராண்
டரைசேர்ந் தலைகா ரணிநிழ லமைந்த
தாழ்வரை யதனிற் றங்கிய மழையால்
வெருட்டப் படுங்கான் மேனிலை யுற்றுங்
காலம் போக்கச் சாலச் சிறந்ததும்;
வேடர் வேழம் வீழ்த்தரி மாவின்
கறையுறு மடியைப் பனியுறைந் தழிப்பக்
காணு ராகக் காலுகி ரிடையிற்
றொத்திச் சிந்திய முத்தின் றொடர்பிலச்
சிங்கஞ் செல்லத ரிங்கென் றன்னூர்க்
கறிவிப் பதுவும்; அன்பர்க் குள்ளக்
கருத்தைத் தெரிப்பான் காதலில் விச்சா
தரமங் கையருக் கிதழாய்ச் செங்கற்
பொடிநீர் மையாற் பொறிக்கத் துணையாக்
கரிமுதிர் பருவத் தறுகுறிச் செம்மை
நிறமமைந் துடையபூர்ச் சரவுரி யுடைத்தும்;
பாண்மிழற் றுறுகின் னரர்க்கிய பாகத்
தான்குகை வாயிற் காற்றை மூங்கிற்
றொளைவழி நிரப்பிச் சுருதியாக் கொடுக்குந்
தன்மையுற் றிலகுந் தரத்ததும்; தானப்
பெருக்காற் கன்னத் துண்டா மரிப்பைத்
தணிப்பா னுராய்ந்த சரலத் தருநின்
றிழிந்த பாலின் பொழிவா லடித்தாழ்
வரையை மணத்த தாகச் செய்வதும்;
கன்னிய ருடனுக் காடலை வேட்டுவ
ரின்பந் துய்த்திடு மில்லக் குகையுற்

றிரவிலின் னொளிக்காங் கெண்ணெயின் றொளிரும்
பச்சிலை யொளியைப் பரப்புவ தாயதும்;
நளியால் விரலை நடுங்கச் செயுமா
வழியினி னுறைந்த பனிநனி மிகுத்த
தெனினும் பாய்மா முகமங் கையர்தந்
தலைச்சுமை யனக்கத் தாங்கார் தளர்ந்த
நடையிற் செல்லற் கிடமா கியதும்;
அனைத்திலுந் தாழ்ந்தோ ராயினு மவரைச்
சரணம் புகுவா ராயிற் றம்மவ
ராக்கொண் டருளுவ தான்றோர் வழக்காற்
பகலவ னொறுக்கப் பயந்தடை பகலின்
பகைக்குத விடமாப் பகர்குகை யுடைத்தும்;
விரியுஞ் சந்திர கிரணம தென்னத்
தெரியுற் வெள்ளிய வாலைக் கவரி
மாவிரித் தசைத்திம் மண்டலத் தேனப்
பொறைகட் கிறையாந் தன்மையைப் பொருளாச்
செய்வதொத் தங்கு மிங்குந் திரிதற்
கிடமா கியதும்; தடமாக் குகையின்
முன்றிலி லுருவோ டொன்றித் தொங்கித்
தானையை பிழந்து நாணுகிம் புருட
மங்கையர்க் கெண்ணு நிலையிற் றுங்கத்
திரையாத் தோன்றும் பலகரு மேகம்
படரிட மாயதும்; பகிரத னளித்த
கங்கைப் பெருக்கிற் கிளைத்த தூளியிற்
கலந்து குளிர்ந்துங் காவளர் தேவ
தாருவிற் றுக்குவ தான்மணம் பெற்றும்
மாக்கலை வேட்ட மாடி மாய்க்கும்
வேட்டுவ ரசையிற் பூட்டிய மபிலின்
பீலிற் பட்டுச் சாலவும் மென்மையைக்
கெண்டுமாங் குறைகர்க் கின்படிக் கடிதருங்
காற்றிற் கிடமா பிருப்பதும்; மீமிசைப்
பொய்கையுட் டோன்றிய பொற்ற மரையுட்
கையா லிருடிய செழுவருங் கொய்தன
போக்கிநீக் கிருக்கும போதுகண் மலரக்
கீழே சுற்றுங் கதிரோன் கிரணந்
தம்மை மேலே தான்விரித் திடுமா
றத்துணை யுயர்ச்சியொ டிருப்பதும்; அன்றியும்
வெள்விக் குறுபொரு ளுடைமையும் புவியின்
பொறையைத் தாங்கு முறுதியுங் கண்டபின்
மகத்திற் பாகம் பெறும்பே றுடனெம்

மலைக்கு மதிபதி யாம்பேற் றினையுந்
தானே பிரமன் றகுதியென் றளிக்க
நிலமடந் தைக்கோ ளளவுகோன் மானக்
குணகுட கடலுக் கிடையிற் கிடையாத்
தெய்வத் தன்மையொ டிடையப் பெயர்பூண்
டிருப்பது மாமலைக் கிறையொன்
றுள்தால் வடதிக் குற்றுநன் குயர்ந்தே.

பாராத காலத்தும் பார்த்தவனைப் போலமிகு
பேராசை கொண்டிமயப் பேரரசன்—சீராகத்
தந்தே னுயர்காளி தாசன் சுருத்திஃது
வந்தா தரிப்பீர் மகிழ்ந்து.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தோண்டன்.

சில செய்யுட்கள்.

தன்மசக்காப்பிரவர்த்தநாசாரி அடிமலரேத்திக் கல்வி கேள்விகளிற் சிறந்த மாட்சிமைபெற்ற செந்தமிழ்ப் பத்திராதிபரவர்கட்கும் விஷய தானஞ்செய்யும் செந்தமிழ்ப்புலமை மிக்க பண்டிதசிகாமணிகட்கும் விஞ்ஞாபனம்.

ஐயன்மீர்! பின்வரு மொன்பது மூவடிவெளிவிருத்தங்களும் எனக்குக்கிடைத்த "பழந்தமிழ்க்கவிக" ளென்னும் புத்தகத்திலுள்ளன. அச்செய்யுட்களின்முன்னர், "பிரிவாற்றுமற்பாடிய மூவடிவெளிவிருத்த" மென்றுமாத்திரம் வரையப்பெற்றிருந்ததன்றி நூற்பெயர், ஆசிரியர்பெயர் முதலியவை வரையப்பெற்றில.

இவ்வொன்பது மூவடிவெளிவிருத்தத்துள், முதலிரண்டும் வீர சோழியம் யாப்புப்படலம் 15ம் சூத்திரவுரையிலும், மூன்றுவீரியம் யாப் பதிகாரம் செய்யுளியல் 33ம் சூத்திரவுரையிலும், மற்றுஞ் சில செய்யு ளுரைகளிலும் சிற்சில பாடபேதத்துடன் இருப்பது யாரு மறிந்ததே.

மற்று மேழு செய்யுட்களும் என் சிற்றறிவிற்கெட்டியநூல்களி லெவ்விடத்தும் அறிவு தரிதாகவிருக்கின்றமையால் அறிந்த பெரியோர் கள் நூற்பெயர், ஆசிரியர்பெயர் முதலியவற்றுடன் விளக்குவாயின் எமக்கு மெம்போன்ற தமிழபிமானமாணவர்கட்கும் ஒருசிறி தூக்க மதி கரிக்குமென்ற பேரவாவோடு இவ்விஷயத்தை வெளியிடலாயினேன்.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

பிரிவாற்ருமற்பாடிய மூவடிவெளிவிருத்தம்.

கொண்டன் முழங்கினவாற்கோடல்பரந்தனவாலென்செய்கோம்யாம்
வண்வெரிபாடவார்தளவம்பூத்தனவாலென்செய்கோம்யாம்
எண்டிசையுந்தோகையிசைத்தகவியேங்கினவாலென்செய்கோம்யாம். (1)
வீரசோ—முத்துவீரியம்.

மருளறுத்தபெரும்போதிமாதவரைக்கண்டிலமாலென்செய்கோம்யாம்
அருளமர்ந்ததிருமொழியாலறவழக்கங்கேட்டிலமாலென்செய்கோம்யாம்
பொருளறியுமருந்தவத்துப்புரலரைக்கண்டிலமாலென்செய்கோம்யாம் (2)
வீரசோழியம்.

உலகமிருண்டனவாலுள்ளொளிபிரிந்தனவாலென்செய்கோம்யாம்
இலகுமொளிகுளிர்ந்துளங்கும்பரந்தனவாலென்செய்கோம்யாம்.
சலமலிந்தகடலலைகள் சாலவமர்ந்தனலாலென்செய்கோம்யாம் (3)

குலமரபோர்கூடுமொருகூக்கல்முழங்கினவாலென்செய்கோம்யாம்
கலகலெனுங்கிண்கிணியாரகாதல்நிறைந்தனவாலென்செய்கோம்யாம்
பலகலையுமீர்ந்ததெரினிபாகல்மறைந்தனவாலென்செய்கோம்யாம் (4)

அமுதவாக்கின்மொழியாம்அறமுமறைந்தனவாலென்செய்கோம்யாம்
குமுதமலர்வீற்றிருந்தகோமான்மறைந்தனவாலென்செய்கோம்யாம்
சுமுகசுகவாருயிர்சூழலமர்ந்தனவாலென்செய்கோம்யாம் (5)

கங்குல்பரந்தனவாற்காந்தள்நிறைந்தனவாலென்செய்கோம்யாம்
சங்கங்குமிங்கினவாசாக்கையொடுங்கினசாலென்செய்கோம்யாம்
எங்குமமர்ந்தகுருவங்கமறைந்தனகாலென்செய்கோம்யாம் (6)

எல்லாமுணர்ந்தமொழியார்பாலுணர்ந்தறிவோமென்செய்கோம்யாம்
கல்லாலமர்ந்தசுகக்காட்சியெங்குகண்டறிவோமென்செய்கோம்யாம்
சொல்லாலுணர்த்துசுகசூட்சமொழிகண்டறியோமென்செய்கோம்யாம் (7)

சீலசுகமளித்தசெல்வநிலையெங்குணர்வோமென்செய்கோம்யாம்
காலநிலையைவென்றகாட்சிதனையென்றுணர்வோமென்செய்கோம்யாம்
வாலவறிவமர்ந்தோன்வாய்மொழியைக்கேட்டிலமாலென்செய்கோம்யாம் (8)

துக்கநிலைநாலுணர்ந்தத்தூயவனைக்கண்டிலமாலென்செய்கோம்யாம்
பக்குவமெய்ப்பாங்குரைக்கும்பரதன்மொழிகேட்டிலமாலென்செய்கோம்யாம்
திக்கெட்டுணர்ந்தானின்றேய்வுநிலைக்கண்டறியோமென்செய்கோம்யாம் (9)

(இன்னுஞ் சிலசெய்யுட்கள் பின்னும் வரும்.)

ப. மு. மதுரையார்.
தமிழ்மாணவன்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க	2	தமழிற்	தமிழிற்
எ	கக	சீரடி	சிறடி.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககூ.] ரௌத்திரி-ஹ மார்கழி-மீ [பகுதி உ.

Vol. XIX. December—January-1921. No. 2

தமிழ்ப்புலவர்கட்கு ஒரு வேண்டுகோள்.

செந்தமிழாம் நம் தாயைச் செம்மைசெய்வான் முன்வந்துழைக்கும் பெருங்சருணைப் புலவீர்காள்! நுமக்கு எனது பெ ம் பணிவைச் செலுத்தி எனது எண்ணைத்திற்ரேன்றிய சில புல்லுரைகளைப் புகல்கின்றேன். அவை நுங்கள் தொள்கைகளுக்கு ஏற்றதாயின் ஏற்பீர். இன்றேல் வேண்டாப்பொருள்களில் ஒன்றென விடுப்பீர்.

அவையாவையெனின் நமது தாய்மொழியாகிய தமிழ்மொழி பல் லீற்ரூலுஞ் சீருற்றிலகுவது வெள்ளிடைவிலங்கலேயாம். ஏற்றம் உளதாவதற்கேது வென்னேயோ வெனின்? எப்பொருள்களையும் எளிதிற் றெரிந்துகோடற்கேற்ற சொற்களைத் தன்னிடத்தே நிரம்பப் பெற்றிருத்தலேயாம்.

அன்றியும் காலங்கட்கேற்பக் கிராமியச் சொற்களையும் தன்னுட் படுத்தி இயங்கும் ஆற்றலும் அமைந்துள்ளது. அவ்வாறு கூட்டிக்கோடற்கு நமது பண்டைய இலக்கண ஆசிரியர்கள், வ ட மொ ழி யொன்றையே தமிழியைபுக்கேற்பத் திரித்துச் செந்தமிழில் இன்றியமையாவிடங்களிற் கொள்ளலாம் என விதிகூறிப் போந்தனர்.

அ ன் றி த் தற்காலம்போலக் கண்டசொற்களெல்லாவற்றையும் கூட்டியெழுதுவதற்கு விதிகூறிற்றிலர். பண்டைய தமிழ்ப்புலவர்கள் வடமொழியுணர்ச்சியும் பெற்றிருந்தாராதலின், தாம்தா மி ய ற் று ம் செந்தமிழிலக்கியங்களில் இன்றியமையாவிடங்களில் வடமொழியைத் தமிழியைபுக்கேற்பத் திரித்துப் புணர்த்தனர். அதனால், தண்டமிழில் சொற்கள் மிகுதியும் பல்கி மேன்மையுற்றதேயன்றிக் குறைபாடு கொண்ட

தில்லை. இஃதன்றி அவ்வடமொழி எழுத்துக்களையே சேர்த்துக் கொள்ளுமாறு கூறிற்றிலர். சேர்த்துமிலர். மணிப்பவாளநடையென ஒன்றுளதே? எனக் கடாவுவீராயின் மணிப்பவாளம் என்ற அச் சொல்லையே உற்றுநோக்குவீரேல் அவ்வினு வழுவென்று விடுப்பீர். அது வடமெழுத்தும் தமிழ்மொழியும் இடையிடையே கலந்து வரையும் உரை நடையானதால் வடமொழியின் உருவங்குலையாதே வரைதல் வேண்டும். ஆதலின் மணி என்ற தமிழ்ச்சொல்லும் ப்ரவாளமென்ற வடமொழிச் சொல்லும் கூடியே ஒருபெயராய் அமைந்துள்ளது.

ஆகையால் இக்காலத்து எழுதும் உரைநடைக்கு இது விதியுமன்று விலக்குமன்றென விடுக்க.

நிற்க, யான் தங்களை வேண்டிக்கோடல் என்னெனில்? இக்காலத்தே உரைநடைவரைவான்புகுந்த சிலரால் தமிழ் மிகச் சீர்கேடுற்றிருப்பதால் தமிழார்வமுடையார், ஒவ்வொருவரும் அக்கேட்டைப் போக்குவதற்கு முயலவேண்டியது ஒருதலை. முதற்கண் செய்யவேண்டியதென்னெனின்? தாம்வரையும் உரைநடைகளிற் பிறசொற்கள் விரவாது எளிதிற் பொருள் தெரிதற்கேற்ற தமிழ்ச்சொற்களாலேயே எழுதப் பயிறல்வேண்டும். இன்றியமையாவிடங்களில் வடமொழிச் சொற்களையும் தமிழிலக்கண விதி பிறழாது திரித்துக் கூட்டல்வேண்டும். இவ்வாறே முயல்வேமாயின் நமது தமிழ் பண்டைநிலைக்குக் கூடியவிரைவில் வந்து மேன்மை பெறுமென்று துணிந்துகூறுவேன். அவ்வாறு செய்யவேண்டுமென்றும் மன்றுடுகின்றேன்.

ஸிம்ஹம், ப்ரதாபம், ஹிம்சை, ம்ருகம், ஸ்பஷ்டம், வாத்ஸல்யம், என்றின்னன பலவற்றைத் தமிழிற் கூட்டியெழுதுவதனால் பிற்காலத்தே தமிழினது உருவத்தையறிதற்கு ஒருவழியுமின்றியொழியுமேயென மனங்கவன்று இதனைத் தங்கள் திருமுன்னர்ப் பணித்தேன். மனஞ் சென்றவழியே செய்வீராக.

மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.

என்ற ஒரு நீதிமொழியை ஈண்டுக் குறிப்பிட்டு அறிவுறுத்துகின்றேன். இவ்வுரைநடையிற் கரணும் பிழைகளுக்காகக் கடைக்கணிக்குமாறு முதறிஞர்களை வேண்டுகின்றேன்.

இறைவனருள்விலங்க.

இங்ஙனம் தங்கள் பணிவுள்ள,

சா. சிதம்பரன்.

மாணவன்

தருமை தமிழ்ச்சங்கம்.

"இடைச்செருகல்."

சென்ற புரட்டாசிமாதச் செந்தமிழில் "உரைகாரர்களும் அண்மை விளியும்" என்ற விஷயம் ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டது. அதில் "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்ற சூத்திரம் சிங்கநோக்கு எனவும் னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்த வேனைய கொள்ளப்படும் எனவும் பேராசிரியர் பாயிரங்கூறினர். ஆதலின் னகரவீற்றுச் சொற்களுக்கு "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்ற சூத்திரம் விதியாகாது என மறுத்திருக்கிறார்கள்.

இன்னும், பிள்ளையவர்கள் பண்டுக் கூறிய தமது கொள்கைக்கு மாறுகப் பேராசிரியர்தம் கூற்று இருத்தல்பற்றி அக்கூற்றையும் தள்ளுகிறார்கள். அடியார்க்குநல்லாரை இலக்கணவிஷயத்திலே தள்ளியொதுக்கிய பிள்ளையவர்கள் பேராசிரியரையும் பிறரையும் ஒதுக்குதலொருவியப்பாமா.

"அண்மைச் சொல்லே யியற்கை யாகும்" என்ற சூத்திரத்தைச் சிங்கநோக்கெனக்கொண்டு செம்பொருள்கண்ட பத்திராசிரியரவர்கள் கூற்றைப் பேராசிரியர்கூற்றுப் பெரிதும் ஆதரிக்கிறது. அதனுள் "னகரவீறு சிறப்புவிதி பெறுதலின் அஃதொழிந்த வேனைய கொள்ளப்படும்" என்பதுவே பிள்ளையவர்களுக்குச் சாதகம்போலத் தோற்றப்படுகிறது. சிறப்புவிதிபெறும் னகரவீற்றை விலக்கியவர் சிறப்புவிதிபெறும் லளவீற்றுக்களையும் அங்ஙனமே விலக்குதல்வேண்டும். அவற்றை விலக்காதபொழுது னகரவிறுதியையும் விலக்குதல் கூடாது. ஆதலின் "னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்தவேனைய கொள்ளப்படும்" என்றது இடைச்செருகலாம்.

இனி ஆசிரியர் நச்சினார்க்கினியர் கிழவோன் என்றதனீற்றை அன் ஆன் என்னும் ஈற்றுள் அமைக்காமல் ஒன் என்னும் ஈற்றுள் அமைத்தனராதலின் அது சிறப்புவிதிபெற்றதொன்றன்றும். "அண்மைச்சொல்லே" என்றதற்கு உயிரீற்றுச்சொற்களெனப் பொருள்பண்ணிக்கொண்டு

அயனீடாத லளவீறுகளே ஓனே நம்பன் என்றுங்குவரும் அன்னே என் றற் றொடக்கத்தன அண்மைவிதியாதற்கு எச்சூத்திரத்துட் புகுத்திப் பொருத்துவோம் என் றிடர்ப்படுவதுவோ இலக்கணவாற்றல். பிள்ளே யவர்களும் ஈண்டுத் தகுதியொடு சிந்திப்பார்களாக.

பிள்ளேயவர்களது மறுப்புவரிசைகளே நோக்கும்பொழுது "வேழ மூன் ஞுய்க்கலே யாய்ப்பிற வாய்ப்பின்னு மென்றழையாய்—மாழைமென் னேக்கி யிடையாய்க் கழிந்தது வந்துவந்தே" என்ற திருப்பாசுரம் நினே விற்கு வருகிறது. பிறவுமன்ன.

இங்ஙனம்,

நவநீதகிருஷ்ணபாரதி.

ஸ்ரீ:

இதுவுமது.

I. இங்கு எடுத்துக்கொண்ட பேராசிரியருரையின் றொடக்கத்தில் 'இத்தினேக்கண்' என்று சுட்டியது எத்தினேயை? எனநோக்குவார்க்கு மூன்பின் றொடர்பால் அத்தினே உயர்தினேயென்றே புலப்படுவதாயிருக் கிறது. அதற்கு விரோதமாக அங்கு அஃறினேபுகுவது அசம்பாவித மாகையால் அவ்வுரையில் அஃறினேயுதாரணம் காட்டியிருப்பதும், இடை வெளியில் அஃறினேயென்ற பெயரை நுழைப்பதும் இடைச்செருகலாம்.

II. இன்னும், அவ்வுரையுள் 'னகரவீறு சிறப்புவிதி பெறுதலின்' என்று எழுதியிருப்பதும் 'குதிரை கோம்புடையதாதலால்' என்பது போலும் அசம்பாவிதமாயிருக்கிறது. எங்ஙனமெனில், னகரவீறு என் றது அன், ஆன், ன் என்னும் மூன்றீற்றுப் பெயர்களுக்கும் பொதுப் பெயரேயாம். அண்மைவிளியில் அம்மூவகையீறும்பற்றியதொரு சிறப்பு விதி ஓரிடத்தும் இல்லே.

III. 'அண்மைச்சொல்லிற்ககரமாகும்' என்ற சூத்திரம் அன் னீற்றுச் சிறப்புவிதியாதலால் அது னகரவீறுகுமென்று நண்பரவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. அதுவும் அன்னீற்றுச் சிறப்புவிதியாகாது. ஏனென்னில் அச்சூத்திரவுரையுட் பேராசிரியரே அதனேச்சிறப்புவிதியென் றெழுதாது புறனடை விதியென் றெழுதிப் போந்தனர். புறனடைவிதி யும் சிறப்புவிதியும் ஒன்றுகமாட்டாதென்பதை அவர் அறியாதவ ராகார். இதனே இலக்கணநூல்வல்லாரெல்லாரு மறிவர். ஆதலால், 'னகரவீறு சிறப்புவிதி பெறுதலின் அஃதொழிந் தேனேய கொள் ளப்படும்' எனப் பேராசிரியருரையி லெழுதப்பட்டிருக்கும் வாக்கியம் அவ்ரெழுதியதன்றென்றும், யாரோ அறியாதார் தமக்குத் தோன்றியவா றெழுதிவைத்த இடைச்செருகலென்றும் அறியக்கிடக்கிறது.

IV. இனி அவர்கள் கல்லாடனுரையொன்றையே தம்கூற்றுக்குச் சாதகமாகக் காட்டியிருக்கிறார்கள். அவ்வுரை சங்ககாலக் கல்லாடனுடையதன்றென்றும், அது பிற்காலத்துள்ளாரெவராலோ எழுதப்பட்டு இதுகாறும் ஒருவராலும் பயிலவும் எடுத்தாளவும்படா தொதுக்கப்பட்டதொரு சிறுபகுதி என்றும் சென்ற செந்தமிழ்ப்பகுதியில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால் அது நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களால் நன்கு மதிக்கப்பட்ட போராசிரியருரையை மறுக்குமாற்றலுடையதாகாது. அன்றியும், போராசிரியருரை நச்சினார்க்கினியர்க்கு முற்பட்டதாய் அவரால் அறியப்பட்டுப் பிரமாணமாயொப்புக்கொள்ளப்பட்டதாதலால் 'அண்மைச் சொல்லே யியற்கையாகும்' என்ற சூத்திரம் சிங்கநோக்கென்றும், அது மெய்யீற்றுக்குமுரியதென்றும் போராசிரியர் கூறியதே நச்சினார்க்கினியர்க்கும் உடம்பாடென் றறியலாகும். அல்லாக்கால் அவர் அச் சூத்திரவுரையில், போராசிரியருரையை எடுத்துக்காட்டி மறுத்துரைத்திருக்கவேண்டும். அங்ஙனமில்லாமையால் அவரும் போராசிரியருரையை யுடம்பட்டவராகவே மெய்யீற்றுக்கும் உரியதென்று உய்த்துணருமாறு "தான்கீற் றண்மைச்சொல்லும்"எனப் பொதுப்பட எழுதிப்போந்தாரென நன்கறியலாகும்.

இளம்பூரணர், சேனவரையர் ஆகிய இருவரும் உயிரீறென்று சிறப்பித்துக் கூறுமையால், பொதுப்பட மெய்யீற்றுக்கும் உரியதாகவே கொண்டனரெனத் தெளியலாம்.

ஆதலால் உரையாசிரியர், போராசிரியர், சேனவரையர், நச்சினார்க்கினியர் இந்நால்வரும் அடியார்க்குநல்லார்கொள்கையையே வெளிப்படையாயும் குறிப்பாயும் வெளியிட்டுவிட்டமையால் 'அண்மைச் சொல்லே யியற்கையாகும்'என்ற சூத்திரம் உயிரீற்றுக்கே யுரியதென்னும் கொள்கை வலியற்றதாமென்று தோன்றுகின்றது.

இவ்விஷயத்தை விரிவாய் ஆராயவிரும்புவோர் தொல்காப்பியச் சொல்லதிகார உரைப்பிரதிகளை வைத்துக்கொண்டு செந்தமிழ்த்தொகுதிகள பகுதி - அல் கூசுகூம் பக்கமுதல் ச00-ஆம் பக்கம் வரையுள்ள விஷயங்களை வினவிடையுடன் உற்று நோக்குக.

உதவிப்பத்திராதிபர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் ரௌத்திரி-ஷு ஐப்பசி-மீ 9, 10, 11 (1920-ஷு அக்டோபர்-மீ 25, 26, 27)-ஆம் தேதிகளில் நடத்திய சுன்னகம் இராமநாதவித்யாலயப் பெண்மாணவர்களின் மேல் வகுப்புப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும், யோக்கியதா பத்திரமும் பெறும் மாணக்கர்களின் விவரம்.

I-வது வகுப்பு.

1. மாணிக்கம். சிவக்கொழுந்தம்மாள், இராமநாதவித்யாலயம், சுன்னகம்.....(முதற்பரிசு).

மொத்த அம்சம் 600க்குப் பெற்ற அம்சம் 414½.

2. து. பராசத்திஅம்மாள், இராமநாதவித்யாலயம், சுன்னகம் .....(இரண்டாவதுபரிசு).

மொத்த அம்சம் 600க்குப் பெற்ற அம்சம் 374½.

II-வது வகுப்பு.

1. த. மனோன்மணி அம்மாள், இராமநாதவித்யாலயம், சுன்னகம். மொத்த அம்சம் 600-க்குப் பெற்ற அம்சம் 315.

2. ச. அன்னம்மாள், இராமநாதவித்யாலயம், சுன்னகம். மொத்த அம்சம் 600-க்குப்பெற்ற அம்சம் 304½.

B. இராஜாஜ்ஜூரவேதுபதி.
அக்கிராசனாதிபதி.
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

13-ம் புறப்பாட்டும் உரையும் V.

(செந்தமிழ்ப் பதினேட்டாந்தொகுதியின் அசு-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இதுவரை செய்யுளிற் காணப்படுவனகொண்டே 'கிழவோன்' என்றது சோணையேயாமெனக் காட்டுதற்கு நண்பரவர்கள் பலவாறுக முயன்றார்கள். அம் முயற்சிகள் சிறிதும் பயன்தராமாட்டா தொழிந்தமை "செந்தமிழ்" நேயர்கள் நன்குணர்வார்கள். இனிச் செய்யுளுக்குரிய பழைய உரையினைக்கொண்டு அதன்கட் கூட்டிக் காட்டிய விசேமுடிபு வாக்கியத்துணின்று சில நியாயங்கள் வருத்தித் தாம் எடுத்தகருதினைய நிறுவுதற்கு முயலுகின்றார்கள். அவற்றை யிப் பொழுது முறைப்பட ஆராய்தல்வேண்டும்.

உரையிலுள்ள விசேமுடிபுவாக்கியம் வருமாறு:—

'களிற்றுநிசையோகுகிய இவன், யாரென்குவையாயின், நாடு கிழவோன்; இவன் களிறு மதம்பட்டது; அதனால் இவன் நோயின்றிப் பேயர்க'.

(a) இவ் வாக்கியத்துள், 'என்குவையாயின்' என்பதனை முதலாவதாக எடுத்துக்கொள்ளுகின்றார்கள். இது விசேயெச்சமாதலால் 'நாடுகிழவோன்' என்னும் பெயர்கொள்ளமாட்டாதென்றுகூறி, இக் காரணத்தால் அப்பெயர் யாரென்பதன்கிடையாதற் குரியதன்றெனக் கருதுகின்றார்கள்.

இங்ஙனமெழுந்த நியாயத்தை யாராயப்புகுமுன்னர் நண்பரவர் கள் கூறியமுடிபு எத்துணைப்பொருத்தமுடைத்தென உதாரணமுகத் தால் ஒன்றுநோக்குதல்வேண்டும். நாம் ஆராய்ந்துவருஞ் செய்யுளி னைப் பெரிதுமொப்பதாய்ப் புறநானூற்றிலே பிறிதொரு செய்யு ளுளது. அதன்கண் 'இவர்யாரென்குவையாயின், இவரே..... நெடுமாப்பாரிமகளிர்' (புறம்-201) என வந்துளது. இங்கே 'என்கு வையாயின்' என்பது விசேயெச்சமாகும். இவ் எச்சம் விசேகொண்டு முடியுமேயன்றிப் பெயர்கொள்ளமாட்டாதென்பது யாவரும் அங்கீ கரிக்க வேண்டுவதொன்றேயாம். எனினும் இத் தொடரில் 'இவர் யார்' என்பதற் குரியவிடை 'பாரிமகளிர்' என்பது சந்தேகத்துக்கிட

மின்றி விளங்கிக் கிடக்கின்றது. ஆகவே 'என்குவையாயின்' என்பது வினைகொண்டுமுடியவேண்டியதாயிருத்தல்பற்றிப் பெயர் விடையாகா மற்போய்விடவில்லை. 'நுங்கோயாரென வினவின் எங்கோ சேரலாதன்' என்ற பதிற்றுப்பத்துச்செய்யுளை (செய். 20) நோக்குக. இங்கே 'வினவின்' என்பது வினையெச்சமாதலின், அது வினைகொண்டு முடியுமேயன்றிப் பெயர்கொண்டு முடியமாட்டாது. எனினும் யாரென்ற வினாவிற்குப் பெயரே விடையாய் வந்துள்ளமை காணலாம். ஆகவே தமிழ்க்குவரம்பாகிய சங்கத்தான்றோர்களது வாக்கியங்களைப் பிழையென்றுகூறத் துணிந்தாலன்றி நண்பரவர்கள்கூறும் வாதம் நிலைபெறுமாறில்லையென்பது எளிதினறியக்கிடக்கின்றது.

இனி அவர்களால் தரப்பட்ட நியாயத்தை யெடுத்துக்கொள்வோம். 'என்குவையாயின்' என்பது 'எனின்' என்பதன்பரியாயமாகிய வினையெச்சமாதலால் அது 'நாடுகிழவோன்' என்னும் பெயர் கொள்ளமாட்டாது. இக் காரணத்தால் 'நாடுகிழவோன்' என்றபெயர் விடையாதற்குரியதன்றெனக் கொள்ளுகின்றார்கள். இங்கே விடையாய்வருஞ் சொல்லினது இலக்கணம் நிச்சயிக்கவேண்டுவதாயுளது. இதன்பொருட்டு விடையினைக்கொண்டுமுடிவதாக வொருசொல் கருதிக்கொள்ளப்படுகிறது. இச் சொல் வினையெச்சமாதலின் இது கொண்டுமுடியுஞ்சொல்லும் வினையாதல்வேண்டுமென்றமுடிபு பெறப்படுகிறது. ஆனால் இவ்வாதம் நிலைபெறவேண்டுமாயின் வினையெச்சச் சொல் விடையினையன்றிப் பிறிதொருசொல்லினையுங்கொண்டு முடியமாட்டாதென்பது இருசொற்குமுரிய பொருளியைபினைச் சந்தேகமறத் தெளிவிக்கப்படுதல்வேண்டும். அஃதாவது 'என்குவையாயின்' என்னும் எச்சமானது கொண்டுமுடியுஞ்சொல்லும் 'யார்' என்னும் வினாவானது எதிர்பார்க்கும் விடைச்சொல்லும் வேறு வேறு தனிச் சொல்லாகாது ஒரு சொல்லாகவே யாண்டும் நிற்குமென்பது நண்பரவர்களது வாதத்திற்கு மர்மஸ்தானமாயுள்ளது. இவ்வாறு கொள்ளினன்றி அவர்கள்கூறும் நியாயம் பொருந்துமாறில்லை. தமது வாதத்திற்கு உயிர்நிலையாயிருக்கின்ற இவ் விஷயத்தை அவர்கள் யாண்டேனும் நிரூபித்திருக்கிறார்களா? நிரூபணஞ்செய்தல் தானும் யார்க்கும் ஏலுவதொன்றா? ஒரிடத்தும் உண்மையாதல்செல்லாதவொன்றினை ஆதாரமாகக்கொண்டெழுந்த வாதமும் பயனுடைத்தாகுமா?

இது ஸம்பந்தமாக ஒன்றுமட்டுங்கூறி யமைகின்றேன். 'என் குவையாயின்' என்றசொல் வினாவிற்குரிய விடையினைக்கொண்டுமுடிவ தாகும் என்ற அவர்களதுகருத்து உண்மையொடு பொருந்துவதா யின், வினாவோடியைந்து 'என்குவையாயின்' வருமிடத்தெல்லாம் விடையும் வினாவாகவே இருத்தல்வேண்டும். ஏனெனின்: இச் சொல் வினாவெச்சமாதலின்; ஆகவே பெயர் விடையாய்வரும் இடங்களில், 'என்குவையாயின்' என்பதும் அதன் பரியாயச்சொற்களும் வினாவோ டியைந்து வரமாட்டாவெனல்வேண்டும். அஃதாவது 'இது குற்றி யோ மகனேவெனில், குற்றி' என்ற வாக்கியம் இலக்கணவழுவுடைய தாய் முடியும்! இவ்வாறுள்ள குத்ஸித முடிபுகளைவிலக்கி ஹாஸ்ய ஹேதுவாய்நிற்குங் கொள்கைக்கு யாரே உடன்படுவர்!

'என்குவையாயின்' என்ற எச்சத்தான் எதனைக்கொண்டுமுடிவ தாகும் என்பதனை யொருசிறிது நோக்குவோம். இதற்கு 'இவர் யார் என்குவையாயின் இவரே பாரிமகளிர்' என்றவாக்கியத்தைப் பொருள் பற்றிப் பகுத்துச் சொன்முடிபினை யறுதியிடுதலே (analysis) போதிய தாகும். 'இவர்யார்' எனத் தாம் வினவப்பெற்றதாகக்கருதி அவ் வினாவிற்குக் கபிலர் விடையிறுப்பதாக இவ் வாக்கியம் அமைத்துள்ளது. 'இவர் யார்' என்றது வினா அறியலுற்ற விஷயமாகின்றது. 'என்குவை யாயின்' என்பது 'என்று வினவுவையாயின்', 'என்ற வினா நின்னின் றெழுமாயின்' எனப் பொருள்படும். இவ்வாறு பொருள்படுதலின் இச்சொல் வினாவெழுகுறிப் புணர்த்திநின்றது. 'இவரே பாரிமகளிர்' என்றது விடைக்குரிய விஷயமாகும். ஆகவே மேலைவாக்கியம்,

1. வினா. 2. வினாவெழுகுறிப்பு. 3. விடை.

என்ற மூன்று பகுதிகளையுடையதா யமைந்திருக்கின்றது. ஈண்டுக் காட்டிய வினாவெழுகுறிப்பு எதனைக்கொண்டு முடிதல்வேண்டும்? பொருளியைபு ஒன்றே இவ்விஷயத்தில் நாம் துணையாகக்கோடற் குரியது. அவ் வியைபுபற்றி நோக்குவதாயின் வினாவெழுகுறிப்பு விடைதருகுறிப்பினைக் கொண்டுமுடியவேண்டுமேயல்லது பிறிதொன் றினைக்கொண்டு முடியமாட்டாது. அஃதாவது 'இவர் யார்' என்குவை யாயின், கூறுவேன்: 'இவரே பாரிமகளிர்'—என வாக்கிய அமைதி முற்றுப்பெற்றுநின்று 'என்குவையாயின்' என்ற எச்சம் 'கூறுவேன்'

என்ற முற்றேடு முடிவதாகும். இவ் வாக்கியத்திற் போன்றே வியவ காரு விஷயமாகிய வாக்கியத்தின்கண்ணும் 'என்குவையாயின்' என்ற எச்சம் 'கூறுவேன்' என்பதனோடு போன்ற விடைதருகுறிப்போடு முடிதற் பாலது. ஈண்டெல்லாம் விடைதருகுறிப்பு இல்லையேயெனின், அதனை வருவித்து வாக்கியமுற்றுறச்செய்து இலக்கணமுடிபுகோடலே தகுதி யாமென் றறியத்தக்கது. நாடோடி ஸம்பாஷணை வழக்கில் வாக்கியம் சரியாய் முற்றுப்பெறுதுநின்று பொருளையுணர்வித்குந் தொடர்கள் எத்தனையோவுள்ளன. அவற்றின்கண் எல்லாம் இருக்குஞ்சொற்கள் கொண்டே வாக்கியலக்ஷண அமைதி முற்றக்காட்டுதல் ஏலுமா? பொருள்செல்நெறிக்கு விருத்தமாய் இலக்கணமுடிபுகூறல் யாண்டும் இல்லையென்பதுமட்டும் நன்கு மனங்கொள்ளுதல்வேண்டும். யான் கூறியதொன்றே பொருள்செல்நெறி யென்பதனை மாணவரவர்களே தாம் எழுதியுள்ள ஒரு வாக்கியத்திற் சொல்லாமற் சொல்லியிருக்கின் றார்கள். 'அதனை இடையிட்டுக்கூறிய தென்னையெனிற் கூறுவேன்' ('செந்தமிழ்'-XVI. 5-262-ம் பக். 2-வதுவரி) என் றெழுதிச்செல்கின் றார்கள். இங்கே 'என்குவையாயின்' என்றதன்பரியாயமாகிய 'எனின்' என்ற வினைபெச்சம் 'கூறுவேன்' என்ற விடைதருகுறிப்புடன் முடிந் திருத்தல் காணலாம்.

இங்ஙனமாக 'என்குவையாயின்' என்ற எச்சம் 'யார்' என்ற வினவிற்குரிய விடையினைக் கொண்டு முடியமாட்டாதென்பதே உண் மையாய் முடிதலின், நண்பரவர்கள் தொடுத்த வாதமும் அழிவெய்திய தாயிற்று.

(b) இனி, இவ் வினைமுடிபுவாக்கியத்தின்கண்ணே 'என்குவை யாயின்' என்பதனையடுத்துக் காணப்படுகிற 'காடுகிழவோன்' என்ற சொல் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இது 'முன்னும்பின்னு மியை யாது தன்னந்தனியே யொரு தனிமொழியாயிருப்பதால்.....விளிப் பெயரேயாகுமென அறியத்தக்கது' என மாணவர் வாதிப்பாராயினர்.

இவ் விஷயத்தைத் தனிப்பட எடுத்துக்கூறித் தமதுமுடிபிற்குத் தாம் முன் எழுதியவற்றின்வேறுகப் பிறிதொரு நியாயம் வகுப்பார் போன்று நண்பரவர்கள் எழுதுகின்றார்கள். ஆனால் இது தனிப்பட எழுக்கதொரு நியாயமாயின், இதன் உண்மை அவர்கள் முற்படக்

கூறிக்கொண்டதொன்றனைச் சார்ந்துநிற்றல் கூடாது; பிறிதோராற்றான், வேறுகாரணங்கொண்டு துணியப்படுதல்வேண்டும். இந்நெறியால் நாடுகிழவோன் முன்பின் இயைபின்றித் தனித்து நிற்கிறதென்பதனை யாண்டேனும் அவர்கள் நிரூபிக்கமுயன்றுள்ளார்களா? முயலவில்லை. இவன்யார் என்ற வினாவிற்கு 'நாடுகிழவோன்' என்ற பெயர் விடையாகமாட்டாதெனத் தாம் புதுவதாய்ப் படைத்துக்கொண்ட ஆச்சரிய முடிபினையாதாரமாகக்கொண்டு, அச்சொல் முன்பின் இயைபின்றி நின்றதென அவர்கள் கருதினார்களாகல்வேண்டும். ஆனால் அம் முடிபு சிறிதும் பொருந்தமாட்டாதென எனது ஆராய்ச்சியின் நான்காம்பகுதியில் நன்கு நிறுவியுள்ளேனதனின், அம் முடிபுடன் அதனையொட்டியெழுந்த இந்நியாயமும் அறவே வலியிழந்து ஒழிகின்றது.

(c) மேலதனையடுத்துக் 'களிற்றுமிசையோனுகிய இவன்' என்ற வினாமுடிபுவாக்கியப்பகுதி யெடுத்துக்கொள்ளப்படுகின்றது. இதினின்றும் வருபவன் சோழனெனச் சேரன் அறிந்திருந்ததாக அனுமானித்து நாடுகிழவோனென்றதனை விடையாகச் சேரன் வேண்டிலனென்று நண்பரவர்கள் துணிகின்றார்கள். இவ்வாறு விடையாகாதொழியவே, அது விளியேயாதல்வேண்டுமென்பது அவர்கள் கருத்து. சேரன் அறிந்திருந்தமை பின்வருமாறு ஊகிக்கப்படுகின்றது:—

(i.) 'களிற்றுமிசையோனுகிய இவன் யார்' என்பது 'என்குவையாயின்' என்ற அதுகாரக்குறிப்பின் புரோவாதமாதலால், அது சேரனும் கூறப்பட்டதேயாகும். ஆகவே 'புலிநிறக்கவசம்.....மிசையோனே' என்ற தொடர்முழுதும் சேரனதுவாக்கே ஆதல்வேண்டும்.

(ii.) இத்தொடருள் 'எய்கணைகிழித்தபகட்டெழின்மார்பு' எனச் சோழன்மார்புவருணிக்கப்பட்டுளது இங்குஅவன் போர்செய்து புண்பட்டுவாராமையால் அது முன்புபட்ட புண்ணைக் குறித்ததாகவேண்டும். எய்கணை என்றநிலை எய்தல்தொழிற்கு வினைமுதல் கூறப்படாமையால் அது யானெய்கணையென்றுகூறப்பெறிற் றற்புகழுமென்று விடுத்தற்குரிய சேரனையாதல்வேண்டும்.

(iii.) ஆகவே 'புலிநிறக்கவசம் பூம்பொறிசிதைய—எய்க ணை கிழித்த பகட்டெழின் மார்பின்—மறலியன்னகளிற்று மிசையோனே' என்றவரிகள் களிற்றுமிசையோனுப்ப் பண்டும் எதிர்ந்தபகைவனு மிவனேயெனச் சேரனது துணிபு கூறுவனவாகவே கொள்ளப்படும். அவற்றிற்கு இங்குவருபவன் முன்பு என் ணை டு போரேற்றுவந்து விழுப்புண்பெற்ற பகைமையுடையான் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் சேரன் கூறுதலின் வருபவன் சோழனென்பதனை அவன் நன்கு அறிந்திருக் கின்றான்.

இம் மூன்றனையும் முறையே ஆராய்தல்வேண்டும். முதலாவ தாக, 'களிற்றுமிசையோனுய இவன்' என்றது சேரன்வாயினின்றும் பிறந்ததன் அதுகாரத்தானுவென்பதை நோக்குவோம். இது செய் யுள் நோக்கியே நிச்சயிக்கற்பாலது. உரைகாரராற் கொடுக்கப்பட் டுள்ள அக்வயத்தினும் செய்யுளே பிராதான்யத்தின் மிக்கது. செய் யுளே நிகழ்ந்ததனை யுள்ளவாறு வெளிப்படுத்துவதாக நிற்பது. செய் யுளாற் பெறப்படு முடிபோடு அக்வயத்தாற்பெறப்படுமுடிபு சிறிதும் மூணுதல் தகாது. ஆதலால், செய்யுள் உணர்த்திநிற்பது யாதெனத் தெளிந்துகொள்ளுதல்வேண்டும். 'என்குவையாயின்' என்ற அது காரக்குறிப்பிற்குப் பூர்வத்திலுள்ள பகுதியே யாண்டும் புரோவாத மாதற்குரியது; அதற்குப் பிற்படவுள்ளது புரோவாதமாதல் ஓரி டத்துமில்லை. செய்யுளில் அதுகாரக்குறிப்பினையடுத்து முன்புள்ளது 'இவன் யார்' என்பது மட்டுமேயாகும். ஆகலால் இஃதொன்றே புரோவாதம் என்று சொல்லற்குரியது. சாதாரணமாக 'என்குவை யாயின்' என்றதன்பின் விடை தொடங்கவேண்டுமென்று யாரும் எதிர் பார்ப்பார்கள். செய்யுளின்கண்ணும் அவ்வாறே யுளதென்பது எவ னைக்குறித்துப் புரோவாதம் நிகழ்ந்ததோ அவனையே சுட்டிச்சொல் லத் தொடங்குகின்றமையால் அறியலாகும். அஃதாவது இவன் யாரென்று சேரன் வினவியவுடன் முடமோசியாரும் 'இவனே' என்று சுட்டியதுணர்ந்து விடைதருகின்றார். இவ்வாறே பிறவிடங்களிலும் வந்துள்ளமை காணலாம் (cf 'நுங்கோ யாரென வினவின் எங்கோ'; 'இவர் யாரென்குவையாயின் இவரே'). இங்ஙனமே பொருள்கொள்

ளற்பாலதென்பது உரையினுலும் நன்கறியக்கிடக்கின்றது. 'இவன் யாரென்று வினவுவையாயின் இவன்முன்.....களிற்றின்மேலோன்' என்று உரையுளது. ஈண்டுக்காட்டியவற்றுல் 'களிற்றுமிசையோன்' என்பது விடையின் பகுதியாகுமேயன்றி யோராற்றுனும் புரோவாதத் தின் பகுதி ஆதலில்லையென்பது நன்கு தேறப்படும்.

செய்யுளினின்றும் பெறப்பட்ட மேலைமுடிபோடு முற்றும் பொருந் தத்தக்கவாறே அன்வயத்தினை நாம் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். அல்லாக்கால் செய்யுளும் அதன் பொழிப்பும் ஒருபுறமாகவும் வினைமுடிபு வாக்கியம் மற்றொருபுறமாகவும் வேறுபட்டு அன்வயம் சிறிதும் பயன்தர மாட்டாதா யொழியும். உலகவழக்கில் 'இவன் யார்' என் றொருவன் வினவியவழி இங்ஙனமாகிய இவன் இன்னன் என விடையிறுப்போன் தானே படைத்துமொழிதல் காணலாம். இது போன்றே, 'இவன் யார்' என்று சேரன்வினவ, 'களிற்றுமிசையோனுகிய இவன் நாடுகிழவோன்' எனப் புலவர் விடையிறுப்பதாக அன்வயத்தினைக் கொள்ளுதல்வேண்டும். இங்ஙனங்கொண்டு பொருட்டொடர்புபட வாக்கியம் அமைக்கும்போது வினவின் முக்கியாம்சமாகிய 'யார்' என்பது மட்டுமே புரோவாதமாய் அன் வயத்தில் எஞ்சிநின்றது. ஆகவே 'களிற்றுமிசையோனுகிய இவன் யாரென்குவையாயின் நாடுகிழவோன்'என்ற அன்வயவாக்கியத்தில்'களிற்று மிசையோனுகிய இவன்' என்பது விடையின்பகுதியாய் மோசியாரது வாக்காகநின்றதெனலே செய்யுளோடும் பொழிப்புரையோடும் பொருந் துவதாகின்றது. புறநானூற்றுப் பதிப்பாசிரியரவர்களும் யான்காட்டிய வாறே கொண்டு "களிற்றுமிசையோனுகிய இவன், யாரென்குவையாயின், நாடுகிழவோன்" என யாவர்க்கும் எளிதில் விளங்குமாறு புள்ளியீடு செய் திருக்கின்றுர்கள். யாரென்ற வினவிற்குக் 'களிற்றுமிசையோன்' என் பதனை விடையாக்குதலாற் பயனில்லை; வினவிற்குரிய விடையினைச் செவ் வனே யெடுத்துக்காட்டற்குவேண்டி அத் தொடரை நேர்விடையோடு சார்த்தாது முற்படக்கூட்டி வினைமுடிபுகாட்டிய வுரைகாரரை நாம் மயங்கி யுணரலாகாது.

இங்ஙனமாக, 'களிற்றுமிசையோனுகிய இவன்' என்றது 'என் குவையாயின்' என் ற அநுகாரக்குறிப்பிற்குரிய புரோவாதமன்றும். எனவே அது சேரனது வாக்காதலும் இல்லை. ஆதலால், 'இவனே, புலி

நிறக்கவசம்.....களிற்றுமிசையோனே' என்ற செய்யுட்பகுதி சேரனது புரோவாதத்தை அநுகரித்ததன்றெனல் எளிதினுணரத்தகும். 'புரோவாதம்' 'அநுகாரம்' என்று நண்பர்கள் கூறியதனையே யானும் எடுத்தெழுதியவளவில், உண்மையாகவே சொல்லொடுபட்ட வினு வொன்று நிகழ்ந்ததெனவெண்ணிக்கொள்ளுதல் தவறாகும். 'என்குவை யாயின்' என்ற சொல்லின்பொருளை யுற்றுநோக்கும்பொழுது அங்ஙன மொரு வினு வெழுந்ததாகக் கருதுதற்கே இடனின்று. சேரனது நெஞ் சிடை நிகழ்ந்ததனைக் குறிப்பினுணர்ந்து புலவர்—தாமாக வினு வும் விடையுமாயறிவுறுக்கின்றாரெனலே பொருத்தமுடையது. இம் முறையா னேக்குமிடத்துப் புரோவாதமே இல்லையென்பது உணரற்பாலது. 'களிற்றுமிசையோனுகிய இவன்' என்றதனைச் சேரனது கூற்றாகக்காட்ட நண்பர்கள்முயன்றதற்கு உத்தேச மொன்றுண்டு. சேரனது முன் வருவோன் சோழனேயென அவன் அறிந்துள்ளானென்பதே அவர்கள் கைக்கொண்டமுடிபு. சோழனை முன்னொரு சந்தர்ப்பத்திற் சேரன் நேரிட்டறிந்திருந்தாலன்றி இப்பொழுது கண்டவுடன் இன்னனெனத் துணிதல் கூடாதாகலின் அவ்வாறாய சந்தர்ப்பமொன்றுளதாதல் செய்யு ளாற் பெறப்படுவதாக நண்பர்கள் நிரூபிக்கவேண்டியதாவசியகமா யிற்று. இச் சந்தர்ப்பத்தினையும் சேரனே வெளிப்படுத்தல் தகுதியாமா கலின் அதனை அவனது புரோவாதமாகக் கொள்ளலாவதன்கண், பொ ருத்தமுயல்வதே நேரிதாய்முடிந்தது. புரோவாதமொன்று நிகழ்ந்ததெ னக் கொள்ளினும் செய்யுள், உரை, அன்வயம்—இம் மூன்றனையும்நோக்க அஃது 'இவன் யார்' என்பதேயாகல்வேண்டும். ஆனால் இவ்விரு சொற் களினின்றும் நண்பர்கள் கருதிய சந்தர்ப்பம் ஓராற்றானும்—எத்துணை நுணுகிநோக்கினும்—பெறப்படுமாறில்லை. ஆதலால் வேறு சில சொற் களும் அவன் வாயினின்று பிறந்தனவாகக் காட்டுதல் அவர்களுக் காவ சியமாயிற்று. இவ்விஷயத்தில் அவர்களுக் குறுதுணையாக அன்வய வாக்கியம் உதவுவதுபோல் தோன்றவே அதனைமட்டுங் கைக்கொண்டு, அதன் பொருணிச்சயத்திற்கு ஆஸ்பதமாயுள்ள செய்யுளையும் உரையை யும் மெல்லக் கைநெகிழவிட்டு, 'களிற்றுமிசையோனுகியஇவன்' என் பதும் சேரனது புரோவாதமாகும் என்று துணிந்தார்கள். இவ்வாறு துணிந்த அளவில் புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய—எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்-மறலியன்ன களிற்றுமிசை யோனே' என்ற மூன்று

வரிகளும் நண்பரவர்களாற் கைப்படுக்கப்பட்டன. இனி இவ்வரிகளி னின்றும் மேற்கூறிய சந்தர்ப்பம் எவ்வாறு ஈர்த்துக்கொணரப்படுகின்றது என்பது பின்னர்க் காணப்படும்.

'இவனே, புலிநிறக்கவசம்.....மிசையோனே' என்ற செய்யுட் பகுதியிற் சேரனைக்குறித்து யாதொன்றுங் காணப்படவில்லை. இங்ஙன மிருத்தலின், இம்மூன்றுவரிகளினுமுள்ள சொற்களில் யாதாயினு மொன் றன் துணைகொண்டு வேண்டுஞ் சொல்லை வருவித்துக் கருதியதனைச் சாதித்தலே கூடுவதொன்றுமின்று. 'எய்' என்ற சொல்லினது வினை முதல் கூறப்படவில்லை. இச்சொல்லின் துணையினால் ஒரு வினைமுதலை வருவித்தற்குச் சௌகரியங்கிடைத்தது. இச்சொல் சேரனது புரோ வாதத்தினுட்பட்டதென்பது நண்பரவர்கள் கருத்தாதலின், மிக நுணுகி யாராய்ந்து காரணமொன்று தெரிந்து 'யான்' என்றதோரெழுவாயை வரு வித்து 'யான் எய்கணை' யெனமுடித்துச் சேரனைச் செய்புளுட் புக விடுத் தார்கள். இவ்வாறு சேரனைக்கொணர்ந்துபுகுத்தல் நியாயமுறையால் வலியுடையதுதானு? முதலாவதாக, உரையை யெடுத்துக்கொள்க. அதன்கண் 'யான்' என்றசொல் வருவிக்கப்படவுமில்லை; சேரனெய்தகணை யென விளக்கப்படவுமில்லை. யானெய்கணை யென்றுகூறின், தற்புகழ்ச்சி யாய் முடிதலின் 'யான்' என்பது செய்யுளில் ஒழிக்கப்பட்டதாயின், அதனைக் கூறி விளக்குதல் உரைகாரரது கடமையாகும். அவ்வாறு அவர் செய்யாமையால் அவரது கருத்து மாணவர்கூறுவதன்றென்பது விளங்கும். இரண்டாவது, 'யான்' என்றதனை வருவித்துப் பொருள் கொள்வதாயின் அது பெரியதோர் அஸம்பாவிதத்திற் கொண்டுய்ப்ப தாகும். 'இவனே, புலிநிறக்கவசம்.....மிசையோனே' என்பது புலவரது விடையின்பாற்பட்டதென முன்னரே நன்கு விளக்கியுள்ளேன். ஆதலால் 'யான்' என்பது விடையிறுத்த முடமோசியாரையே குறிக்க வல்லது. இப்புலவரை வில்லேருழவராக்குவதற்குச் சிறிதும் ஆதார மில்லை; சந்தர்ப்பமும் இடந்தராது; நண்பரவர்களுக்குப் பயனுமில்லை. மூன்றாவது, 'எய்கணை' யென்றதன் வினைமுதல் கூறப்படாமை காரண மாக, எய்தவன் இரும்பொறைதானென்றுதணிதல் தருக்கமுறை யாகாது. கூறியே தீரவேண்டுமென்ற ஆவசியகமில்லாதவிடத்துக் கூறப் படாததொன்றினின்றும் பிறிதொரு உடன்பாட்டுமுடிவு (positive conclusion) காணுதல் ஏற்புடையதாக மாட்டாது. நான்காவது,

பொதுப்பட விழுப்புண் நிரம்பியமார்பு எனக் கூறவிரும்புஞ் சந்தர்ப்பத்தில், இன்னரால் நேர்ந்த விழுப்புண் என வருவித்துணர்தல் ஆசிரியர் கருத்துமன்று; அதனாற் பயனுமில்லை. ஒளிறுவாளருஞ் சமமுருக்கிக் களிறெறிந்துபெயர்தல் காலையோர்க்கெல்லாம் கடனென நினைத்த பண்டைக்காலத்தே—போர்க்குறிக்காயமே புகழின்காயமெனக் கொண்டு அடும்வினையில் மனமுடுகிநின்ற வீரர்பெருமக்கள் திகழ்ந்த புராதன காலத்தே—அலைமேலலைபடிப்பதுபோன்று மாற்றரதுபடை மீண்டு மீண்டு மேற்கிளம்பிவருவதனைத் தன்னிறந்துவாராமை விலக்கிப் பெருங்கடற்கோராழியனையனுய் ஏந்துவாள் வலத்தனொருவனுகிப் பொருதலே வாழ்வின்பயனெனக்கொண்ட வசையில்வீரர் அளவிலர் வாழ்ந்த நமது புராதன தமிழ்ப்பூமியிலே—ஒரு பேரரசன் விழுப்புண் நிரம்பிய மார்பனயிருந்தான் என்றல் அஃது இன்னசமயத்து இன்னரால் நேர்ந்ததென்று வெளிப்படக் கூறப்படினன்றிப். பிறவாறு அறிதல் கூடாதாம். பொதுப்படக்கூறியதொன்றிற்குக் காலதேசவர்த்தமானங்களைத் தாமே இயைந்துப் புதுவதொருபொருள் கண்டு அதனை யாதாரமாகவெடுத்து மேற்செல்லுதல் ஆராய்ச்சியாளர் கைக்கொள்ளவேண்டு முறைமை யன்றும்.

முதலில் 'புலிநிறக்கவசம்' என்று தொடங்கும் பகுதியைச் சேரனது புரோவாதத்தின் அநுகாரமாகக் கொண்டார்கள். பின், 'யான் எய்கணை' யென எழுவாயொன்றை வருவித்தார்கள். இவ்விரண்டும் உண்மைக்கும் நியாயத்திற்கும் மாறுனவையென்பது இதுவரை காட்டினேன். இனி அவர்கள் இப்பகுதியைப் பொருள்படுத்துப் பெருகற் கிள்ளியை இரும்பொறை முன்னரேயறிந்ததாகத் தாம்கூறுஞ் சந்தர்ப்பத்தினை விளக்குகின்றார்கள். அவர்கள் கூறும்பொருள் வருமாறு:—

செய்யுட்பகுதி.	மாணவரவர்கள்கூறும்பொருள்.
இவனே, புலிநிறக்கவசம்பூம்பொறிசிதைய எய்கணைகிழித்தபகட்டெழின்மார்பில் மறலியன்னகளிற்றுமிசையோனே	இங்குவருபவன் களிற்றுமிசை யோனுய்ப் பண்டும் எதிர்ந்த பகைவனே.

இவ்வாறுகொண்டு மூன்பொருகாலத்திற் போர்நேர்ந்ததன்மூலமாகச் சோழனையறிய இடம்வாய்த்தது எனக் கருதுகின்றார்கள். இவ்வுரை யுண்மைப்பொருளைத் தருவதாகுமா?

ஒருரையை உண்மையுரையெனக் கொள்ளவேண்டுமாயின், அதிற் காணப்படும் முக்கியமானகருத்துக்களில் ஒவ்வொன்றும் அதன்மூலத் திலு முளதாதல்வேண்டும். மூலத்திலுள்ள கருத்துக்களே விளக்குவதே உண்மையுரையின்நோக்கமாதலால்,மூலத்திலில்லாதகருத்துக்களை-அவற் றுள்ளும் முக்கியமான கருத்துக்களை—உரையில் வருவித்துப் பொருள் கொள்வதாயின் அது போலியுரையாகுமேயன்றி உண்மையுரையாகமாட் டாது. உண்மையுரையெனப்படு மொவ்வொன்றும் இங்கே கூறிய நியதி யிற் சிறிதும் பிழைத்தலாகாது. 'இங்குவருபவன் களிற்றுமிசையோ னுப்ப் பண்டும் எதிர்ந்தபகைவனே' என்ற தொடரில் இரண்டு முக்கிய மானகருத்துக்கள் உள்ளன: இவை (1) இங்குவருபவன்; (2) பண்டும் எதிர்ந்தபகைவன் என்பன. 'களிற்றுமிசையோனுப்' என்பது 'பகைவன்' என்னும் பெயரைக்கொண்டு முடியும் 'எதிர்ந்த' என்னும் பெயரெச்சத்தி லுள்ள வினையை விசேடிக்கு மாத்திரையாயுள்ளது; ஆகவே அது 'பண் டும் எதிர்ந்தபகைவனே' என்றதைநோக்க அப்ரதானமாயுள்ளது. நண்ப ரவர்களது உரையில் அதிமுக்கியமான கருத்தாகிய 'பண்டும் எதிர்ந்த பகைவனே' யென்பதற்குரியசொற்கள் யாதொன்றும் செய்யுளிற் காணப் படவில்லை. இங்ஙனமாக நண்பரவர்கள்கூறும் பொருளானது உரை காரர்கள் கைக்கொள்ளவேண்டும் மூலநியமத்திற்கு முற்றும் விரோதமா யுள்ளது. இதுவொன்றே அவர்களது உரை பொருத்தமில்லையாதல் காட்டுதற்குப் போதியதாகும். அவர்கள் கொண்டபொருள் ஆசிரியரால் கருதப்பட்டதாயின், அப்ரதானமாகும்விஷயங்களைக்கூறிப் பொழுது போக்காது, பிரதானவிஷயமாகிய 'பண்டும் எதிர்ந்த பகைவன்' என் னுங் கருத்துப்படச் செய்யுளியற்றுவர். தமக்குப்பின் ஏதோவொரு காலத்தில் யாரேனும் உரைகாரரொருவர் வரலாமென் றுட்கொண்டு அவ் வுரைகாரர் பொருளுக்குயிர்நிலையாயுள்ள சொற்களைத் தங்கூரிய மனோ பாவத்தாற் பெய்துகொள்ளுமாறு விடுத்துச் செய்யுள் செய்யார். அங் ஙனம் விடுத்தல் நல்லிசைப்புலமையின் லக்ஷணமுமாகாது.

அன்றியும், நண்பரவர்கள் கொண்டபொருளே யங்கீகரிப்பதாயின் அதினின்றும் பெறப்படவேண்டு மொரு சிறுமுடிபு உளது. அம்முடிபு ஒருகாலும் உண்மையாதல்செல்லாதாகலின் அதற்குக் காரணமாகிய உரையும் பொய்படுகின்றது. களிற்றுமிசையோன் என்றதிலுள்ள களிறு முன்பு இரும்பொறையோடு இறப்பிற் போர்செய்த அக்களிற்றைச் சுட்

டியதென்பதும், களிறே என்றதிலுள்ள களிறு நிகழ்ச்சியில் மதம்பட்ட தெனத் தெளியப்பட்ட அக்களிற்றைச் சுட்டியதென்பதுமே மேற்கூறிய முடிபு. இதனை நண்பரவர்களே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். பண்டு ஊர்ந்துவந்தகளிற்றினையும் இப்போது கொண்டுசொல்லுங்களிற்றினை யும் அடுத்துவைத்துப் பிற்கூறப்பட்டகளிறு முற்காணப்பட்டகளிற் றினையே குறிக்கிறதென்று வாசிப்போரெண்ணும்படி மயங்கச்செய்து, சந்தர்ப்பம் வெவ்வேறு என நினைத்தற்குத்தானும் வெளிப்படையாக யாதொன்றும் எடுத்துக்கூறாது புலவர்சிகாமணியாகிய முடமோசியார் செய்யுளியற்றினரென்றுகொள்ளுதல் சிறிதேனும் பொருந்துவதாகு மா? நினைத்தகருத்து மிக ஏளிதிற்புலப்படுமாறு ஏற்றசொற் பெய்து பேரழகுபயப்பப் பாடும் இயல்பினரன்றே சங்கத்தான்றோர்கள்? இங்ஙன மாதலின், செய்யுளையும் முடமோசியாரது புலமையினையுங் குற்றங்கூறத் துணிந்தார்க்கன்றி ஏனையோர்க்கு வேறுவேறு சந்தர்ப்பங்களில் ஊர்ந்த களிறுகள் என்ற அநுமானவிஷயம் சிறிதும் அங்கீகாரயோக்கியமாகாது; அன்றியும் ஈரிடத்தும் ஒரேகளிறுதான் கருதப்பட்டதென்பது வே றொரு ஆவசியகத்தானும் வெளியாகும். சோழன் துஷ்டவிசாரத்தோடு வந்தவனல்லன் எனக் காட்டுதற்கு அவன் ஏறிவரும் அக்களிறே மதம் பட்டதெனக் கூறுதல்வேண்டும். 'களிற்றுமிசையோன்' என்றது 'வே றொரு சந்தர்ப்பத்தினை யுத்தேசித்தெனக்கூறின், களிறு மைந்துபட் டமைமாத்திரம் செய்யுள் அறிவிக்குமேயன்றி, சோழன் அக்களிறூர்ந்து வருகின்றமை அஃது உணர்த்தாது. எனவே குன்றக்கூறலெனுங்குற்றத் திற்கிடனும். இதனாலும் இருவேறுகளிறெனக்கொண்டமை பிழையென அறியலாம். பழைய உரையினும் 'இவன்யாரென்று வினவுவாயாயின், இவன் றன்.....கூற்றம்போன்றகளிற்றின்மேலோன்; இக்களிறுதான்' என்று காணப்படுகிறது. இதிலுள்ள இகரச்சுட்டு இச்சொல்லிற்கு முன்காணப் படுகின்ற களிற்றினையே குறிப்பதாகும். எனவே ஈரிடத்தும் நிகழ்வில் ஊர்ந்துவருங்களிறே குறிக்கப்படுகின்றமை புலனும். இதனால் உரை காரர்க்கும் நண்பரவர்கள்கூறும் சந்தர்ப்பவேறுபாடு அங்கீகாரமன்றெனல் தெளிவாகின்றது. மேலும் உரையின்கீழுள்ள அந்வயத்தில், 'களிற்று மிசையோன் ஆகிய இவன்' என்று காணப்படுகின்றது. இதற்கு 'களிற்று மிசையோனுய்வரும் இவன்' என்பதே தெளிவானபொருள். 'பூர்வத்தில் களிறூர்ந்து எதிர்பொருத இவன்' என்பது உரைகாரர்க்குக் கருத்தா

யின், அக்கருத்துப் புலப்படும்படி வாக்கியத்தை யமைத்திருப்பர். அங்ஙனஞ் செய்யாமையானே, 'பூர்வத்தில் ஊர்ந்த களிறு' என்பனபோன்றன நண்பரவர்களது கற்பிதமேயன்றி யுண்மையில் உளவல்ல வென்பது தெளிவாம். செய்யுளிவிளக்கவந்த வுரைகாரர் நண்பரவர்கள்கொண்ட பொருளை மனதில்வைத்து அவ்வயவாக்கியத்தை யெழுதியிருப்பாராயின், உரைவகுத்த நோக்கத்தினையும் நிறைவேற்றமாட்டாமையோடு தமது கருத்துச் செவ்வனேவிளங்க வாக்கியமமைக்கும் திறமையு மிலராயினு ரென வுரைகாரர்மீது குற்றங்கூற நேரிடுமென்பதும் அறியத்தக்கது. ஆகவே இருவேறு சந்தர்ப்பங்களிலூர்ந்துவந்த இரண்டுகளிறுகளைச் செய்யுள் கூறுகின்றதென்பது சிறிதும் கொள்ளற்பாலதன்றும். இதனினும் நண்பரவர்களது உரை யுண்மைப்பொருளைத் தெரிப்பதன்றெனல் விளங்கும்.

தாங்கூறுவதே பொருளெனத் தெளிதற்குக் காரணமொன்றும் அவர்கள் தருகின்றார்கள். அக்காரணமாவது 'வினைமுடிபுகூறுமிடத்துக் களிற்றுமிசையோனுகிய இவன் என்று இரண்டு வாக்கியத்தை யொன்றுபடக்கூட்டியுரைத்தமையே'. இவ்வாறு கூட்டியுரைத்தமையால் தாங்கூறும்பொருள் எவ்வாறுபெறப்பட்டது என்பதை அவர்கள் ஒரு சிறிது விளக்கியிருப்பார்களாயின் நலமாயிருக்கும். 'இவன் யார் என் குவையாயின்: இவனே களிற்றின்மேலோன்; களிறு மதம்பட்டது; நோயின்றிப்பெயர்க, நாடுகிழவோன்' எனச் செய்யுள் அமைந்துளது. இதனை நோக்குமிடத்து 'களிற்றின்மேலோன்' என்றது இவன் யாரென்ற வினாவின் செவ்வனிறையாகக் கருதப்பட்டதுபோல் தோன்றுகிறது; ஆனால், இங்ஙனங்கொள்வதனும் சிறிதும் பயனில்லை; இரும்பொறையது காட்சியிற் பட்டதனையே அவற்குக் கூறுவதாய் முடியுமாகலின். எனவே செவ்வனிறையாக 'நாடுகிழவோன்' என்றதனையே கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு கொள்ளவேண்டும் விடையைத் தெளிவுபெற எடுத்துக்காட்டவிரும்பிய வுரைகாரர் 'களிற்றுமிசையோனுகிய இவன்' என முற்படஎடுத்துக்கூட்டியெழுதினர். உரைகாரரது நோக்கம் இங்ஙன மெளிதிலறியக் கூடியதாயிருக்கிறது. முற்படக்கூட்டி வினைமுடிபுகாட்டிய மாத்திரையில், இரும்பொறையும் பெருநற்கிள்ளியும் முன்பொருமுறை பொருதார்களென்பதும், அப்பொழுது பெருநற்கிள்ளி களிலூர்ந்து எதிர்ந்தானென்பதும், அவ்வாறு பண்டும் எதிர்ந்த பகை

வன் இவனேயென இப்பொழுது சேரன் தெளிந்தானென்பதும் பெறப் பட்டனவென்று கூறுதல் சிறிதும் ஏற்புடையதாகாது. ஒவ்வொரு முடிபும் காரணசகிதம் நிறுவப்படவேண்டுமென்ற தருக்கநெறிக்காக வேண்டியாதானுமொன்றைக் காரணமாகக் கூறிக்கொள்ளுதல் தகாது.

இதுகாறுங் கூறியவற்றால் 'புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய— எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்—மறலியன்ன களிற்று மிசை யோனே' என்ற அடிகளுக்கு 'முன்பு என்னெதி போரேற்றுவந்து விழுப் புண்பெற்ற பகைமையுடையான்' என்பதே கருத்தென்று மாணவநண்ப ரவர்கள் எழுதியது சிறிதுங் கொள்ளத்தக்கதன்றென்பது எளிதினுணர லாம். இப்பொருள் ஒன்றன்மேலொன்றாய் மூன்றுகூற்றுக்களை ஆதார மாகக்கொண்டது என்பதும் அவற்றுள் ஒவ்வொன்றும் பிழையாமென் பதும் நன்கறியத்தக்கது. இப்பொருளின்மூலமாய் வருபவன் சோழ னெனச் சேரன் அறிந்ததாகக் கூறுதல் பொருந்தமாட்டாது.

(d) இவன் நாடுகிழவோன்' என வினைமுடிபு வாக்கியத்தில் காணப்படாமையால் 'நாடுகிழவோன்' என்பது விடையன்று என நண்ப ரவர்கள் கூறுகிறார்கள். பனம்பாரனாரது சிறப்புப்பாயிரத்துக்கு உரை யிடும்பொழுது இளம்பூரணர் தன்பெயரைத் தோற்றுவித்து அவ்வாறு தொகுத்தான்: அவன் யாரென்னில், தவத்தான் வரும் பல் புகழ்களை யுலகிலே நிறுத்தின தவவொழுக்கத்தினையுடையோன்' என்று எழுது கின்றார். இங்கே 'அவன்யார்' என்ற வினாவினது விடைக்குமுன் 'அவன்' என்னுஞ் சுட்டில்லாததுபற்றி அவ்வினாவிற்கு விடை வேறு காணவேண்டுமெனல் பொருத்தமுடையதாகுமா? இதுபோன்ற தொரு நியாயமே நண்பரவர்கள் கூறுவது. மேலும் நண்பரவர்கள் கூறும் ஸ்தானத்தில் 'இவன்' என வொரு சுட்டிருப்பதே அனுவசியகமாகும். புரோவாதமொன்று நிகழ்ந்ததெனக்கொண்ட இடத்தும் அதன் அது காரமாய் வினைமுடிபு வாக்கியத்தில் எஞ்சிநிற்பது யார் என்னுஞ்சொல் லொன்றேயென மேலே நன்குவிளக்கியுள்ளேன். அவ்வாறுகொள்ளு மிடத்து 'யார்' என்பதற்குப் பூர்வத்திலுள்ள இவன் என்ற சுட்டு நாடு கிழவோன் என்ற பயனிலைக்கு எழுவாயாய்நிற்கும்; இப்பயனிலைக்கு முன்னும் ஒரு சுட்டினை வருவித்தல் வாக்கிய அமைதி அறியாதாரது செய்கையாகும். பதிப்பாசிரியரவர்களும் யான் கூறியவாறே கொண்டிருக் கிறார்களென்பதும் மேலேசொல்லியுள்ளேன். இவ்வாறு கொள்ளலொன்றே பொருந்துவது.

(ஏ) வினைமுடிபுவாக்கியத்தில் 'நாடுகிழவோன்' என்பது முடிய வுள்ள சொற்றொடர்களில் ஒவ்வொன்றினையும் எடுத்துக்கொண்டு காரணங் கற்பித்து நாடுகிழவோன் என்பது விடையாகாதென நண்பரவர்கள் இதுவரை வாதித்தார்கள். இனி அதற்குப்பின் காணப்படுவன அனைத்தையுங்குறித்து ஒரு நியாயந் தொடுக்கின்றார்கள். யார் என்ற வினாவிற்கு 'நாடுகிழவோன்' என்பது விடையாயின் அதுகொண்டே முற்றிவிடுமாதலால் 'இவன்களிறுமதம்பட்டது' முதலியன வேண்டா கூறலாய் முடியும், அங்ஙனம் முடியாதிருக்கவேண்டுமாயின் 'நாடுகிழவோனை' விடையாகக்கொள்ளுதல் கூடாதென அவர்கள் துணிகின்றார்கள்.

வியவகாரரீதிக்கு இந்தநியாயம் பொருந்துமென வைத்துக்கொள்வோம். மானவரவர்கள் நாடுகிழவோனை விடையாகக்கொள்ளுதல் கூடாதெனவிடுத்து 'நோயிலனுகிப்பெயர்க' என்றதனை விடையாக்கினார்கள். இது விடையாயின் இதுகொண்டே முற்றிவிடுமாதலால் 'களிற்றின் மேலோன்'; 'களிறு மதம்பட்டது'; 'நாடுகிழவோன்' என்பன வேண்டாது கூறலாம். இவ்வாறு நண்பர்தந்த காரணங்கொண்டே அவர்கள் கருதிய விடையையும் ஆசங்கித்தல் எளிது.

ஆனல் உண்மையைவிசாரிக்குமிடத்து, இவன்யாரென் றொரு வினு வெழுவதாயின் அதற்கு நேரே யுரியவிடையன்றிப் பிறிதொன்றும் விடையொடுசேர்த்துக் கூறப்படுதல்கூடாதென நண்பரவர்கள் நினைப் பது தவறெனல் வெளியாம். அங்ஙன மொருவினு நிகழ்ந்தபொழுது, இன்னுனென நேரேவிடையிறுத்தப் பின் அவனைப்பற்றிக் கேட்போனறியவேண்டுமென்று தான்விரும்புகிற அனைத்தையும் அல்லது கேட்போன் அறியவிரும்பக்கூடிய அனைத்தையும் விடையிறுப்போன் கூறுதலே மரபாகும். பின்வரும் 212-ம் புறப்பாட்டுரையை நோக்குக:—

> 'நுங்கோ யாரென வினவின் எங்கோ கோப்பெருஞ்சோழன்; அவன் பசிப்பகையாகிப் பொத்தியொடு வைகலும் நக்குக் கோழியிடத்திருந்தான்.'

இங்கே கோப்பெருஞ்சோழன் என்ற நேர்விடையோ டமையாது வேறுசிலவும் கூறப்படுகின்றன. இவ்வாறே பாரிமகளிரை இருங்கோ வேளிடம் கொண்டுசென்றபொழுது கபிலர் பாடியதாகவுள்ள 201-ம்

புறப்பாட்டினும் நேர்விடையேயன்றிப் பிறவுங் கூறப்படுதல் காணலாம். உலகவழக்கினும் இம்மரபு பயின்றுவருதல் சாதாரணமா யுளதாம். இம் மரபும் பயனற்றதன்று. 'இவன் யார்' என்று ஒருவனைச்சுட்டி வினு நிகழ்வதாக வைத்துக்கொள்வோம். விடையிறுப்போன் 'இவன் ராமன்; சாத்தன் புதல்வன்; இவன் ஈண்டுவருதலின்நிமித்த மின்னது' என்பது போன்ற மறுமொழியைத் தருகுவன். 'ராமன்' என்றுமட்டுங் கூறி நிறுத்துவனையின், வினுக்களும் விடைகளும் மேன்மேலும் பிறக்கவேண்டி யனவாயேற்படும்; அப்பெயர்மட்டுங்கொண்டு திருப்தியடைதலில்லையாக லின். இங்ஙனம் ஒன்றன்மேலொன்றாய்க் கிளைத்துவரக்கூடும் வினுக் களுக்குத் தனித்தனி விடையிறுக்கும் அசௌகரியத்தைநீக்குதற்கு வேண்டியே இம்மரபு ஏற்பட்டதாகும். பயன்பற்றியதோர் மரபுவழிப் பட்டுச் செவ்வனிறையோடு வேறுசிலவற்றையும் ஆசிரியர் கூறுதல் வேண்டாதுகூறியதாகாது. வேறுசில காணப்படுதல்கொண்டு தர ப் பட்டுள்ள செவ்வனிறையும் விடையாகாமற்போய்விடாது.

'நாடுகிழவோன்' என்றவிடை யெழுந்தஅளவில் இன்னனென உணர்ந்துகொள்ளக்கூடிய சேரன் அந்நாடுகிழவோன் இங்ஙனம்வருவதற் குக் காரணமென்னென அறியவிரும்புதல் இயற்கை. அவ்விருப்ப மறிந்து அதனைத் திருப்திப்படுத்தற்குவேண்டி 'இவன் களிற்றுமிசை யோன்; இக்களிறு மதம்பட்டது; ஆதலின் இவனை இங்குக் காணநேர்ந் தது' எனச் சோழனதுவருகையின்காரணத்தை மூடமோசியார் கூறு கின்றார். தாம் யாருடைய அடிநிழலிலே வாழுகின்றாரோ, யாருடைய அருளுக்குப் பாத்திரராய்த் தாம் விளக்கமெய்தினாரோ அப்பேரரசனே இப்பொழுது பகையகப்புக்குவருதலின் அவற்குத் தீங்குறுதல் கூடு மென்று சட்டென மின்வீழ்ந்ததுபோற் புலவரது மனத்தே பட்டது. அங்ஙனந் தீங்குவராமற்செய்தலே தமக்குரிய பெருங்கடனாக எண்ணிய அவர், அவ்வரசன் தீங்கின்றித் தன்நாட்டிற்குப் பெயர்தலே தமது விருப்பமென்பதனைக் குறிப்பாற் சேரனுக்கு அறிவித்தல் கருதி, 'நோயிலனாகிப் பெயர்க' என வருவோனை வாழ்த்திக் கூறுகின்றார். இவ்வாறாக வேண்டாதுகூறியது யாதுமில்லையெனல் தெளிவாகின்றது. ஆதலால் இக்காரணம்பற்றி 'நாடுகிழவோன்' விடையாகாமற் போய் விடாது.

(f) வினைமுடிபு வாக்கியத்தில் ஒவ்வொருபகுதியையும் எடுத்துக்கொண்டு 'நாடுகிழவோன்' விடையாய்நில்லாது விளியாய் நின்றதெனத் தெளிவித்தற்குமுயன்றார்கள். கடைசியாக இவ்வாக்கியத்தில் 'நாடுகிழவோன் என்ற (தங்கருத்தின்படி) அண்மைவிளி இடையிட்டுக் காணப்படுதற்கு ஒரு காரணந் தருகின்றார்கள். 'களிற்றுமிசையோனுகிய இவன்யார்' என்னுஞ் சொற்றொடர் இரும்பொறை வார்த்தையின் அதுகாரமாகையால் அதன்முன்பே இரும்பொறையை விளிப்பதாகிய நாடுகிழவோனை வைத்தல் சரியன் றென்கிறார்கள். ஆனால் 'களிற்றுமிசையோனுகிய இவன்' அதுகாரமன்றென்பது மேலே என்னால் நன்கு நிறுவப்பட்டுளது. அந்நிலையில் தாம் ஏதேனுமொன்று சொல்லத் தொடங்குமுன்பே சேரனைவிளித்து முன்னிலைப்படுத்துதல் இயல்பாகும். 'நாடுகிழவோன்' என்பது விளியாயின் அதனை யெல்லாவற்றிற்கு முற்படவுரைகாரர் வைத்திருப்பதென்பது நண்பரவர்களது நியாயத்தினும் மிக்க தோர் வன்மையுடையதாகும். அங்ஙனமுற்படக்கூறுமையானும் செய்யுளிற் கடைசியிலிருந்த அதனை 'இவன்யார் என்குவையாயின்' என்றதனை அடுத்துவைத்தமையானும், அது விடையாகவே கருதப்பட்டதென்பது விளங்கக்கிடக்கின்றது.

மேலும் வினைமுடிபு கூறுமிடத்திலே 'நாடுகிழவோன்' என்பது வைக்கப்பட்ட ஸ்தானத்தை நண்பரவர்கள் கூர்ந்தாராய்வதன்பயன் விளங்குதற்கரிதாயிருக்கிறது. சேரனும் புலவரும் நிகழ்த்தியதாக எண்ணப்படும் சம்பாஷணத்தைச் செய்யுளே சரியாகக் காட்டுவதன்றி வினைமுடிபுகூறும் உரைப்பகுதி காட்டாதாம். தாங்கூறுவனவற்றைப் பாமுகமின்றிக்கேட்டற்பொருட்டே அண்மைவிளி நிகழ்ந்ததென்னும் அவர்களதுகொள்கை உண்மையாயின், அவ் அண்மைவிளிச்சொல்லைச் சொல்லவேண்டுவன யாவுஞ் சொல்லிமுடிந்ததன் முடிவில்வைத்தல் பொருத்தமாகுமா? முடிவில்வைத்துச் செய்யுள்செய்திருப்பதனாலேயே பாமுகமின்றிக் கேட்பித்தற்பொருட்டு இச்சொல் புலவரால் வழங்கப்பட்டதன்றென்பது வெளியாகின்றது. ஆதலால் அதனை விடையாக்குதலினுங்காட்டிற் சிறந்ததொருநெறி இல்லையென்பதே முடிவாகக் கொள்ளப்படுதல்வேண்டும்.

இப்பகுதியில் எழுதியவற்றால், மாணவரவர்கள் வினைமுடிபுவாக்கியத்தினின்று அரிதில் திரட்டித்தந்த நியாயங்களெல்லாம் 'நாடுகிழ

வோன் விளியாம்' என்னும் அவர்களது முடிபினை நிலைநிறுத்துதற்குச் சிறிதுக் துணைபுரியமாட்டாவாயொழிந்தமை அறியலாகும்.

முடிவுரை.

இப்பகுதியோடு 'இவனியாசென்னும் புறப்பாட்டாராய்ச்சி' யைப் பற்றியெழுந்த எனது ஆராய்ச்சியுரை முடிவெய்துகின்றது. செய்யுளுரை இரண்டினும் அமைந்து கிடக்குஞ் சரித்திரமென்றுகொண்டு சில சில மாணவரவர்கள் எழுதியுள்ளார்கள். அவற்றையும் ஆராய்ந்தெழுத வேண்டுமென்று முன்பு யான் எண்ணியதுண்டு. இதற்கு ஆவசியகமில்லையென நினைத்து விடுக்கின்றேன். 'இவன் யார்' என்ற வினாவிற்கு 'நாடுகிழவோன்' என்றதே விடையாதல் பற்றி, நாடுகிழவோனெனச் சோழனே குறிக்கப்படுகிறனென்றமுடிபுதான் யான் இத்துணையும் ஆராய்ந்ததன் பயனாகும். ஆனால் இவ்வாராய்ச்சியால் வேறுசில முக்கிய விஷயங்களும் விளங்கின. அவற்றுள் அதிமுக்கியமான சில வருமாறு:—

(1) மகோததி என்பது இந்தியாவின் குணபாலுள்ளகடலுக்குப் பிற்காலத்தார் வழங்கினபெயர்.

சங்கத்தான்றோர் இப்பெயர் வழக்கினையறிந்தார்களெனற்கு லக்ஷியமில்லை.

(2) 'அன்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற தொல்காப்பியச்சூத்திரம் நான்கு உயிரீற்றுச் சொற்களுக்குமட்டுமே ஏற்புடைய விதி.

(3) சங்கதூல்வழக்கின்கண்ணே ஏகாரம் அடுத்த ஓனீற்றுச் சொற்கள் யாண்டும் படர்க்கையாகவே வந்துள்ளன.

(4) இவன் யார் எனற வாய்பாட்டினுள்ள வினாக்களுக்குப் பெருரேயல்லது வினை விடையாதல் இல்லை.

S. வையாபுரிப்பிள்ளை,
திருவனந்தபுரம்.

கடவுள் துணை.

கூட்டுறவுமுறையின்வரலாறும், அதனைவளர்க்கும் முறையும்.*

(கும்பகோணம்-டவுன்-ஹைஸ்கூல்-தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான்-ஊ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது.)

1. இந்தியாவிற்கு ஆதாரம் விவசாயமே.

ஆதிகாலந்தொடங்கி நமது நாட்டிற் பெரும்பாலோர், அனைவர்க்கும் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய உழுதொழிலைக்கைக்கொண்டவர்களாய்ச் சுகாதாரக்கேடுமுதலிய தொல்லைகளைச் சிறிதுமட்டுபெற்றிராதனவும், பொன்விளையும் 'சுரங்கங்கள்' எனப் பொருளாதார சாஸ்திரிகளாலே புகழப்பெற்றனவுமாகிய கிராமங்களிலே வாழ்ந்துவந்தனர். அவர்களிற் சிலபொருளாளர் கிராமவாசத்தைக்காட்டிலும் நகரவாசத்தில் ஏதோ நற்பயன் இருப்பதாகக்கருதி அங்கே குடியேறி அதன்பயனை நமது நாட்டையே வறுமையானநிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டனர். அதனால் அவர்கள் அடைந்ததும் துன்பமே. இப்படியிருக்க, இவர்களது பொய்யான ஆடம்பரங்களைப்பார்த்த சாமானியர்களிற்பலரும் கிராமங்களை விட்டுப் பட்டணங்களுக்குச் செல்வாராயினர். இதனால் நமது பெருமை பொருந்திய கிராமவாழ்க்கை தற்காலம் மிகத் தாழ்ந்தநிலைமைக்கு வந்துவிட்டது. அதிகம் சொல்லுவானேன்; அந்தக் கிராமங்கள் தற்காலம் பாலைவனங்களாக இருக்கின்றன என்பது மிகையாகாது. இங்கு, கிராமங்களின் முற்கால தற்காலநிலைமையை நன்னிலையிலே தொடங்கித் துக்கத்திலேமுடியும் ஒருநாடகத்துக்கு ஒப்பிடலாம். நிற்க; நமது கிராமங்களில்வசித்து உழுதொழிலைக்கைக்கொண்டு வாழ்ந்துவந்தவர்கள்

* இது, கும்பகோணம், தாராசுரத்தன உயர்தரக்கல்லூரிப் போதகாசிரியர் ஸ்ரீமான் டி. கே. ஹரதமந்தராவ் (பி.ஏ., எல்.டி.,) அவர்கள், திருவாரூரிலே (22-1-21.) நடைபெற்ற தஞ்சைஜில்லாக் கூட்டுறவுமகாநாட்டிலே தலைமை வகித்தபொழுது செய்த முகவுரை உபந்யாசத்தின் சாரமாகத் தொகுத்தெழுதப் பட்டது.

அதிகமாகக் கல்வி அறிவு முதலியவற்றைப் பெற்றிராதவர்களாயிருந்தாலும் அவர்கள் தங்களது உழைப்பினால் அனைவர்க்கும் உண்ண உணவும், உடுக்க உடையும் கிடைக்குமாறு செய்துவந்தார்கள் என்பது இங்கே கவனிக்கத்தக்கது. நமது தேசபக்தருட்சிறந்தவரும், இந்தியப் பொருளாதார சாஸ்திரத்தில் வல்லுநரும் ஆகிய ஸ்ரீமான். ராதா குமார முகர்ஜீ அவர்கள் "இந்தியப்பொருளாதாரத்தின் அஸ்திவாரம்" என்ற தமது அரியநூலிற் கூறியிருக்கிறபடி நம்முடைய கிராமங்களின் பழைய மேலானநிலைமையையும், தற்காலத்திய தாழ்ந்தநிலைமையையும் உற்று நோக்கில் எந்த உண்மைத்தேசபக்தனும் உள்ளபடியே மனங்கரையாமலிருக்கமுடியாது. அன்றியும், அவர் 'நமது நாடு தனது பழையபெருமையை அடையப் பாடுபடவிரும்புவோர் முதன்முதலில் தங்களது பிரசாரவேலையை இனிமேற் கிராமங்களிலேயே செய்யவேண்டும்' என்று வற்புறுத்துவதும் இங்கு அறியத்தக்கது. அந்நூலைப்படித்தபிறகு கைக்கொண்ட எனது சிறு அனுபவத்திலும் இம்முறை நல்லபயனைத் தரலாம் என்பது ஊகிக்கப்படுகிறது. அதுவும் இந்தக் கூட்டுறவுஇயக்க முறையினாலேதான் நிறைவேறும் என்பது எனது துணிபு. இதுவே அவருடைய கருத்தும்.

2. இந்தியாவிற் கூட்டுறவுஇயக்கத்தின் உற்பத்தி.

உலகமுழுவதும் விவசாயிகளின் நிலைமை ஒருமாதிரியாகவே இருந்துவருகிறது. விவசாயிகள் தங்களது தொழிலை இனிது நடத்திக்கொண்டு வாழ்வதற்காதாரமாக நமது சென்னைத்துரைத்தனத்தார் அவர்களுக்கு ஒருவகைக் கடன்கொடுத்து உதவிவந்தனர்; அம்முறை எதிர்பார்த்தபடி ஏதும் பெரும்பயனைத் தந்துவிடவில்லையாதலினாலே 'பொருளாதாரவிஷயத்தில் விவசாயிகளுக்கு உபயோகமான பாங்குகளை ஸ்தாபிக்க என்ன என்ன முறைகளை ஆங்காங்குள்ள துரைத்தனத்தார் கைக்கொண்டுவருகிறார்கள்' என்பதைக் கண்டறிந்துவருமாறு இருபத்தெட்டுவருஷங்களுக்குமுன் (1892) நிக்கில்ஸன் என்பவரை மேல்நாடுகளுக்கு அனுப்பிவைத்தனர். அவர் அங்ஙனம்சென்று ஆங்குத் தாம் கண்ட அனுபவத்தைக்கொண்டு ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அதன்பயனாக இந்தியா கவர்ன்மெண்டார் ஒருசட்டத்தை (1904-ம் வருஷத்து 10-வது ஆக்ட்) இயற்றினார்கள். அந்தச் சட்டப்படிதான் தற்காலம் நமதுநாட்டில், ஜர்மனியில் ரைபீஸன் என்பவர் ஸ்தாபித்து

வந்த பாங்குகளைப்போன்ற 'ரூரல் சொஸைட்டி'களும், ஷ¤ல்ஸ்டெலீட்ஸ் என்பவர் ஸ்தாபித்துவந்த பாங்குகளைப்போன்ற 'அர்பன் சொஸைட்டி'களும் ஸ்தாபிக்கப்பட்டுவருகின்றன. இதுதான் நமதுநாட்டில் இந்த இயக்கம் உற்பத்தியான தின் வரலாறு. இங்கு, ஜர்மனியில் இந்தமுறை எப்படித் தோன்றி வளர்ந்துவருகின்றது என்பதைத் தெரிந்துகொள்வது இன்றியமையாதது.

3. ஜர்மனியிற் கூட்டுறவு இயக்கம்.

முற்கூறிய ரைபீஸன் என்பவர் 1818-ம் வருஷத்திலே பிறந்தவர். அவர் தமது முப்பதாவது (1848) வயதில் தமது தேசத்திலுண்டான பஞ்சத்தால் உணவுப்பொருள் கிடைக்காது வருந்திக்கொண்டிருக்கும் ஏழைகளுக்கு இரங்கிச் சில பொருளாளரது உதவியையும் கூட்டுறவையும் பெற்று ஏழைகளுக்கு வேண்டிய தானியம் சொட்டி உருளைக்கிழங்கு என்ற மூன்றையும் மொத்தமாகவாங்கி நியாயமானவிலைக்கு அவர்களுக்குக் கொடுத்து உதவிவந்தார். அக்காலத்தில் இவர்கூட்டத்தார் ஏழைகளுக்கும் அப்பொருளாளர்களுக்கும் இடையில் ஜாமீன்தாரர்களாகமாத்திரமே இருந்துவந்தனர். அப்பால் (1850) உழவர்களுக்குவேண்டிய கால்நடைகளையும் வாங்கிக்கொடுத்துவந்தனர். இங்ஙனம் இந்தமுறை நற்பயனை அளித்துவர, அப்பால் (1862) இவற்றோடு பிறவற்றைத் தேடிக்கொள்ளப் பொருளும் அந்த ஏழைகளுக்கு எளிதிற் குறைந்தவட்டிக்குக் கிடைத்தாற் பெரிதும் நன்மையாயிருக்குமே என்ற கொள்கை உண்டாக, அப்பொழுதுதான் இப்பொழுது உள்ளனபோன்ற உத்தரவாதம் வரையறுக்கப்படாத 'ரூரல் சொஸைட்டி'கள் ஏழைகளைப் பங்குக்காரர்களாகக்கொண்டு உண்டாயின. 'ரூரல் சொஸைட்டி'தான் கூட்டுறவு இயக்கத்தின் முதல்உற்பத்தி என்றுசொல்வது பொருந்தாதாம் என்பதும் இவ்வரலாற்றை ஊன்றி ஆராய்வார்க்கு இனிதுவிளங்கும். இவ்வரலாற்றை விரிவாக அறியவிரும்புவோர் காகில் என்பவர் 1913-ம் வருஷத்தில் ஆங்கிலத்துரைத்தனத்தாருக்கு எழுதியனுப்பியுள்ள விரிவான அறிக்கையைப் படிப்பதால் தமதுகருத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம். இவ்வறிக்கை, மிஸ்டர். நிக்கில்ஸன் அறிக்கை வெளியான பலவருஷங்களுக்குப்பிறகு ஆராய்ந்து எழுதப்பட்டதாதலின் அதனினும் பலவகையில் விசேஷமானது என்பது சொல்லாமலே

விளங்கும். ஜர்மனியில் இந்த ரைபீஸன் என்பவர் முறையைப்பற்றி நடைபெறும் 'சொஸைட்டி'கள் கைக்கொண்டிருப்பன அடியில் வருவன:—

1. அங்கத்தினர் (பங்குக்காரர்.) ஒருவருக்கொருவர் அறிமுகமானவராகவும், உதவிசெய்துகொள்ளக்கூடியவராகவும் இருத்தற்குச் சாதகமாயிருக்கும்பொருட்டு விவகாரஎல்லை குறுகின அளவினையுடையதாக,—நானூறு ஜனங்களுக்குக் குறையாமலும், இரண்டாயிரம்ஜனங்களுக்கு மேற்படாமலும்,—இருத்தல்.

2. ஏழைகள் நடையின்றி அங்கத்தினராதற்குத் துணையாகக் குறைவான பங்குத்தொகையினை வாங்குவதாக,—(பங்குத் தொகையே இல்லாமற் சேர்த்துக்கொள்ளவேண்டு மென்பது மூலபுருஷரது கருத்து,)—இருத்தல்.

3. சாசுவதமானதும், எந்தக்காரணம்பற்றியும் எந்தக்காலத்திலும் பிரித்துக்கொடுக்கமுடியாததும் ஆகிய கூடுமானநிதியை உண்டாக்கியிருத்தல்.

4. உத்தரவாதம் வரையறுக்கப்படாத அங்கத்தினர்களைப் பெற்றிருத்தல்.

5. உபயோகப்படக்கூடிய பொருள்களை உண்டாக்கிக்கொள்வதற்கும், பிற இன்றியமையாத நற்காரியங்களுக்குமே பங்குக்காரர்களுக்குக் கடன்கொடுத்து உதவிவருதல்.

6. நீடித்தகாலத்திற்குக் கடன்கொடுத்துச் சிறிது சிறிதாகத் தொகையைத் திரும்ப வாங்கிக்கொள்ளுதல்.

7. ஒவ்வொரு பங்குக்காரரும் இவ்வளவு தொகையைத்தான் 'சொஸைட்டி'யிற் சேர்த்துவைத்துக்கொள்ளலாம் என்பதையும், ஒவ்வொரு பங்குக்காரரும் இவ்வளவுதொகைக்குமேற் கடன்பெறக்கூடாது என்பதையும் வருஷத்திற்கு ஒருமுறை எல்லாப்பங்குக்காரர்களும் ஒன்றுசேர்ந்து மூடிவுசெய்து கொள்ளுதல்.

8. இலாபம் என்பதையே கருதாமலிருப்பதையும், அந்த வகையில் ஏதேனும் அங்கத்தினர்களுக்குப் பகுத்துக்கொடுக்கப்

படின் அது அபலார்க்குக் கொடுக்கப்படும் வட்டித்தொகைக்கு மேலாகாமல் இருக்கவேண்டும் என்பதையும் கவனித்து நடத்திவரல்.

9. எவ்வகை நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளம் கிடையாது என்பதையும், அவசியம் நேர்ந்தால் காரியதரிசிக்கு மாத்திரம் சம்பளம்கொடுத்துவருதல் என்பதையும் கைக்கொண்டு நடத்திவரல்.

10. அங்கத்தினர்களுக்கு நன்னடக்கையையும், நன்னிலைமையையும் வளர்த்துவருவதுடன் அவர்களது உழுதொழிலுக்கான கால்நடை முதலியவற்றையும் பிறகருவிகளையும் வாங்கி உதவுதலைக் கைக்கொண்டு நடத்திவரல்.

இந்த ரைபீஸன்முறையைப் பின்பற்றி 1910-ம் வருஷக்கடைசியில் ஜர்மனியில் சற்றேறக்குறைய 14,000 'சொஸைட்டி'கள் இருந்தன. ஒவ்வொரு 'சொஸைட்டி'யிலும் அங்கத்தினர்களின்தொகை சராசரி நூறுக்குஅதிகப்படாம லிருந்தது. தாம் இறப்பதற்குள் (1888) ரைபீஸன் என்பவர் 463 'சொஸைட்டி'களைத் தமது கண்ணுற்கண்டார். அக்காலத்தில் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்குத் துரைத்தனத்தாரால் எத்தகைய உதவியும் கிடைக்கவில்லை என்பதும், ஏழைகளிடத்தில் இரக்கங்கொண்ட ரைபீஸன்போன்ற நற்குணம்வாய்ந்த பெரியோர்களது கூட்டுறவாலாகிய இடைவிடாஉழைப்பே பேருதவிபுரிந்துவந்தது என்பதும் கவனிக்கத்தக்கன. இப்பொழுதும் நமது நாட்டில் 'ரூரல் சொஸைட்டி' ஒன்றை ஸ்தாபிக்கவிரும்புவோரைப்பார்த்து "உங்கள் ஊரில் முதலில் ஒரு ரைபீஸனைக் கண்டுபிடியுங்கள்" என்று கூறும் வழக்கம் இருந்துவருகிறது. இத்தகைய பெருங்குணம்வாய்ந்த ரைபீஸன் இறந்தகாலத்தில் அவரது உழைப்பால் விசேஷநன்மையை அடைந்த ஏழைகள் "ஆ! எங்கள்தந்தையாகிய ரைபீஸன் என்பாரோ இறப்பது?" என்றுகூறி வருந்தியது ஓர் அதிசயமாகாது. நிற்க, ஜர்மனியிலுள்ள இந்த 'சொஸைட்டி'கள் அங்கத்தினர்களுக்குப் பொருளை 'மிகுத்துக் கொடுப்பது, கடன்கொடுப்பது' என்ற இரண்டுதுறையிலும் பாடுபட்டு வருகின்றன. அவற்றிற்கு வேண்டியதொகையில் சுமார் நூற்றுக்குத் தொண்ணூறுபாகம் அங்கத்தினர்களிடமிருந்தே பெறப்படுகின்றது.

மேலும், அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்குத்தக்கவாறு சிறிதுசிறிதேனும் பொருளை மிகுத்துக்கொள்வதற்கு உதவியாகும் பொருட்டுப் பலவகையான மந்திப்புள்ள,—தற்காலத்திய நோட்டுக்களைப் போன்ற,—சீட்டுக்களையும், தபால்தலைகளைப்போன்ற சிறுசீட்டுக்களையும் உண்டாக்கி அவரவரிடமிருந்து இயன்றவளவு தொகைகளைப்பெற்று மிகுத்துக்கொடுத்துவருகின்றன. இம்முறையன்றி 'உண்டிக்கலயம்' மூலமாகவும் மிகுத்துக்கொடுக்கின்றன. அங்கத்தினர் அல்லாதவர்களுக்கும் இந்தநன்மையைச் செய்கின்றன. உதாரணமாக, ஒருகிராமத்தில் சற்றேறக்குறைய இருநூறு 'உண்டிக்கலயம்' உண்டாம். 'சொஸைட்டி'யின் காரியஸ்தரில் ஒருவர் ஒரு குறித்தகாலில் அந்த 'உண்டிக்கலயம்' இருக்கும் வீடுகள்தோறும்போய் அவற்றிலுள்ள தொகைகளை எடுத்து அவ்வவர்பேரால் வரவுவைத்துக்கொள்வார். பின்னர் உரியகாலத்தில் வட்டியோடுகிடைக்கும். இவ்வளவு கஷ்டப்பட்டேனும் ஏன் இத்தகையமுறைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்றால் "ஏழைகளுக்குப் பொருளைமிகுத்துக்கொள்ளும்துறையில் பழக்கத்தை உண்டாக்குவது அவசியமானது; அது 'சொஸைட்டி'களுக்கும் ஏழைகளுக்கும் பெரிதும் நன்மைபயக்கும்" என்று நியாயஞ் சொல்லப்படுகிற்து. ஜனங்களுக்கு இம்முறையில் விசேஷநம்பிக்கை உண்டு. இதுவரையிற்கூறியன ரைபீஸன் என்பவர் முறை. இனி ஷூல்ஸ்டெலிட்ஸ் என்பவர் முறையைப்பற்றிச் சிறிதுகூறுவது பொருத்தமானது. இவரது முறையைப் பின்பற்றியும் ஜர்மனியிலே பல 'சொஸைட்டி'கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவை, நிர்வாகிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் சம்பளம் கொடுத்துவரக்கூடியமாதிரியில் விரிந்த, விவகார எல்லையினையுடையனவாகவும், உத்தரவாதம் வரையறுக்கப்பட்டனவாகவும், மாதவாரி வரும் படியுள்ளவர்கள் மிகுத்துவைப்பதற்கு உதவிசெய்யக்கூடியனவாகவும், ஏழைகளை 'லேவாதேவி' முறையிற் பழக்குகின்றனவாகவும். சராசரி அறுநூறுக்கு மேற்பட்ட அங்கத்தினர்களை உடையனவாகவும் உள்ளன. இம்முறையில் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே உத்தரவாதமாகியவர் என்பதும் பிறவும் கவனிக்கத்தக்கன. இங்கு ரைபீஸன் முறைமைக்கும் இவர் முறைமைக்கும் உள்ள வேறுபாடு நன்கு ஆராயத்தக்கது. இவர்முறையில் அங்கத்தினர்களின் தொகை பதினாயிரமாகவும் உயரலாம். அதனால்தான் இது கிராமங்களுக்குப்

பொருந்துவதில்லை. இம்முறை பெரிதும் இலாபம் சம்பாதிப்பவர்க்கே துணைசெய்வதாகும். இந்த இரண்டு முறைகளும் இந்தக் கூட்டுறவு இயக்கம் பிறந்த இடமாகிய ஜர்மனியில் இன்றும் நடைபெற்று வருகின்றன. தற்காலம் நமது நாட்டில் இந்த இருவர்களுடைய கற்பனையின்படி ஸ்தாபிக்கப்பட்ட இந்த இயக்கம் நடைபெற்றுவரும் முறைமைக்கும் அவை பிறந்தஇடத்தில் நடைபெற்றுவரும்முறைமைக்கும் உள்ள வேறுபாடு அறியத்தக்கது. இதனைடு நமது நாட்டில் 'தபாலாபீஸ்—சேவிங்க்ஸ் பாங்'கில் நூற்றுக்கு மூன்றே அணாக்கால் வட்டிக்கும், 'பாஸ்பாசகாயநிதி'போன்றவைகளில் நூற்றுக்கு ஆறேகால்வட்டிக்கும் பத்துலட்சக்கணக்கிற் பொருள்வந்து குவிந்துகொண்டிருக்க, கிராமங்களிலும் பட்டணங்களிலுமுள்ள நமது கூட்டுறவு இயக்கத்திற் சேர்ந்த சகோதரர்களுக்கு நூற்றுக்குப் பத்துவட்டிக்குக் கொடுத்துதவக்கூட என் வேண்டியஅளவு கிடைக்கவில்லை? என்பதையும் பொருளாதாரநிபுணர்கள் ஆராய்ந்தறிவது இன்றியமையாதது.

4. இங்கிலாந்திற் கூட்டுறவுஇயக்கஉற்பத்தி.

இங்கிலாந்திலே மான்செஸ்டர் நகரத்திற்குச் சமீபத்திலே ராஸேடேல் என்ற ஒரு சிறிய பட்டணம் உண்டு. அது சுற்றேறக்குறைய 69000 ஜனங்களைக்கொண்டது; கம்பளிநெசவுக்குப் பேர்போனது. அந்நியவாபாரம் ஒருகாலத்தில் (1843) மிகவும் செழித்தோங்கி முதலாளிகளுக்கு விசேஷலாபத்தைக் கொடுத்தது. அப்பொழுது அந்த நெசவுசாலைத்தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளைத் 'தங்களது சம்பளத்தைச் சிறிது உயர்த்திக்கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள'த் தீர்மானஞ்செய்தார்கள்; ஒருபிரதிநிதிக்கூட்டத்தை அனுப்புவதாகவும் முடிவுசெய்துகொண்டார்கள். ஆனால், அது முதலில் 'பூனையின்கழுத்திலே மணியைக்கட்ட முடிவுசெய்த எலிகளின்கதை' யாயிற்று. எனினும், அப்பாற் சிலர் பிரதிநிதிகளாகப்போய்வர முன்வந்தனர். அங்ஙனம் அவர்கள் சென்று கேட்டும் அவ்வேண்டுகோளுக்கு முதலாளிகள் செவிசாய்த்து இணங்கவில்லை. இதை அறிந்ததும் தொழிலாளர்கள் 'தாங்கள் இனி வேலைக்குப்போவதில்லை' என முடிவுசெய்துகொண்டார்கள். அதனைடு 'தங்களது தற்காப்புக்குத் தலைக்கு இரண்டுபென்ஸ்வீதம் வாரத்திற்கு ஒருமுறை கொடுத்து ஒருநிதி சேர்ப்பது' என்றும் முடிவு செய்துகொண்டார்கள்,

இங்கிலேயில், அவர்களுள் ஒருவர் 'வேலைநிறுத்தம்செய்து முதலாளி களுடன்போராடுவது அறிவில்லாதவர்களும் முரடர்களும் செய்வதா கும்' என்றனர். அது நியாயமானதாக எண்ணப்பட்டது. எனினும், எந்தவழியிலும் முதலாளிகளிடமிருந்து நியாயம்பெறவேண்டியது என் பதை மறந்துவிடவில்லை. இப்படியாக அவர்களிற் பிறிதொருவர் "நம்மிடத்திலோ சிறிதும் பொருளில்லை. முதலாளிகளோ பெரும் பணக்காரர்கள். நமக்குவேண்டிய உணவுப்பொருள்களோ வியாபாரிகளிட மிருக்கின்றன. தரித்திரத்திற்குப்பயந்து நாம் 'ஏழைகள்விடுதி'க்குச சென்று சுகமாய்ச் சாப்பிடலாமா? அது சோம்பேறிகளுடைய செய்கை யாயிற்றே; அன்றியும், அது தன்மதிப்பைக் குறைத்துவிடுமே. தேசாந் தரம் சென்றுவிடலாம் என்றாலோ அது தரித்திரனுகப்பிறந்த குற்றத் திற்காகத் 'தன்னைத் தானே தீவாந்தரசிட்சைக் குட்படுத்திக்கொள்வது போலல்லவோ ஆகிறது. அங்கும் இத்தகையதொல்லை நம்மைத் தொட ராதென்று எங்ஙனம் உறுதியாக நம்பமுடியும்?" என்று பலவாறுக ஆலோசனைசெய்தனர் அதன்பயனுகத் "தங்களது தற்காப்புக்கென இரண்டுபென்ஸ்வீதம் சேர்த்துவரும் தொகையைக்கொண்டு எல்லார்க் கும்பொதுவாக ஏதேனும் ஒருதொழிலைச்செய்து பெருமுதல் சம்பா திக்கவேண்டும்" என்ற முடிவு செய்யப்பட்டது. இம்முறையிற் பலர் நம்பிக்கைகொண்டனர். சிலர் நம்பிக்கையற்று விலக எண்ணலாயினர்.

இவ்வாறுக, ஒருஞாயிற்றுக்கிழமை மாலையில் மதுவிலக்குச்சங்கத் தில் எல்லாத்தொழிலாளர்களது கூட்டம் ஒன்று கூடியது. அக்கால் ஒருவர் 'நம்மவர்களது தரித்திரத்தை எப்படிப் போக்கிக்கொள்ளமுடி யும்? அதற்கு ஒரு வழிகாட்டுவது பேருபகாரமாகும்' எனக் கூறினர். கூறலும், ஒரு மதுவிலக்குக்காரர் 'நம்மவர்பொருள் பெரும்பாலும் குடிப் பதாலேயே அழிவுறுகின்றது. குடியை நிறுத்தி நமதுசம்பாத்தியத்தை வீட்டுக்குக் கொண்டுபோவோமானுல் நம்மவர்க்குச் சிறிதும் கஷ்டம் வராது' எனக் கூறிமுடித்தார். பிறிதொருவர் "நமக்குச் சுயஆட்சி கிடைத்து விடுமானுல் நிர்வாகிகள் அனைவரும் நமது 'வோட்' பலத்தி னுலே தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். அப்பொழுது நமக்குக் கஷ்டம் உண்டாகச் சிறிதும் இடமிராது. ஆதலின் நாம் அனை வரும் சுயஆட்சியைப்பெறுவதற்கு முயலவேண்டும்" எனப்பேசிமுடித்த னர். இதனை எல்லோரும் உயர்ந்ததாகவே எண்ணினர். இங்கிலேயில்

சேவுத் தொழிலாளரில் ஒருவர் 'சுயஆட்சிகிடைத்தபிறகு நன்மையுண்டாகலாம் என்பது பொருத்தமானதே. மதுவிலக்கினாலும் நன்மையுண்டாகலாம். சுயஆட்சிகிடைக்கும் வரையில் எப்படிக் கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்கிறது? ஆகவே முற்கூறப்பட்ட அந்த இரண்டுதுறைகளில் முயன்றுவருவதோடு நம்மவர்க்கு வேண்டிய உணவுப்பொருள் முதலாயவற்றை நாமே வாங்கிவிற்று ஏன் லாபம் சம்பாதிக்கப்படாது?' எனக் கூறினர். இது எல்லோராலும் ஒருமனதாய் ஒத்துக்கொள்ளப்பட்டது. சிலநாட்களுக்கெல்லாம் தங்களது தொழிலைத் தொடங்குவதற்கு அங்கத்தினர்களைச் சேர்க்கவும், மூலதனம் சம்பாதிக்கவும் ஒரு கையொப்பச்சீட்டு வெளியிடப்பட்டது; அங்குள்ள தொழிலாளர்களுக்கெல்லாம் அது அனுப்பப்பட்டது. கையொப்பத்தொகையோ ஒவ்வொருவருக்கும் இரண்டு பென்ஸாகும். கையொப்பத்தொகையை வசூல் செய்ய மூன்று கௌரவ உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். ராஸ்டேல் குபேரர்களுக்கு இந்த இரண்டுபென்ஸைக் கொடுப்பதும் அப்பொழுது பெரிய கஷ்டத்தை விளைப்பதாயிருந்தது. கையொப்பத்தொகையை வசூல்செய்ய அந்தக் கௌரவ உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரிடத்திலும் பலதடவைகள் செல்லநேர்ந்தது. இவ்வளவு கஷ்டப்பட்டாலும் அவர்கள் 'தங்கள்முயற்சி ஏழைகளுக்கு நன்மைசெய்யக் கூடியது' என்ற நம்பிக்கையுள்ளவர்களாதலினாலே தங்கள்தொழிலை ஒரு மதக்கடமைபோலப் பாவித்து ஊக்கத்தோடு முயன்றுவந்தார்கள். இவர்கள், இப்படிக் கஷ்டப்பட்டு வசூல்செய்த இருபத்தெட்டுப்பவுனுகிய அந்தச் சிறியதொகைதான் ஒரு குறித்தகாலத்தில் உலகத்தையே புதியதாக மாற்றும் முதற்கருவியாகிய 'கூட்டுறவுப்பண்டகசாலை'யின் உற்பத்திக்கு மூலதனமாகியது.

அப்பால் (24—10—1844.) அடியிற் குறிக்கப்படும் நோக்கங்களுடன் 'ராஸ்டேல் நியாயவாதிகள்சங்கம்' என்றபெயருடன் ஒ நஸ்தாபனம் பதிவுசெய்யப்பட்டது.

அதன்நோக்கங்கள்.

1. அங்கத்தினர்களுக்குவேண்டிய உணவுப்பொருள், உடைமுதலியவற்றை வாங்கிவிற்பதற்கு ஒரு 'கூட்டுறவுப்பண்டகசாலை'யை ஸ்தாபித்தல்.

2. ஒருவருக்கொருவர் உதவிசெய்துகொண்டு தங்கள் தங்கள் நிலைமையை உயர்த்திக்கொள்ள விரும்புகிற அங்கத்தினர் களுக்கு வீடுகளைப் புதுவதாகக்கட்டியோ விலைக்குவாங்கியோ கொடுத்தல்.

3. வேலைகிடைக்காமல் வருந்திக்கொண்டிருக்கும் தொழிலாளர்க் கும், வேலையிலிருந்து வரும்படிக்குறைவாற் கஷ்டப்படுகிற வர்களுக்கும் வேலைகிடைக்கவும், போதியஅளவு வரும்படி கிடைக்கவும் துணையாகப் பலதொழிற்சாலைகள் ஸ்தாபித்தல்.

4. விலைக்கோ அல்லது குத்தகைக்கோ நிலங்களை வாங்கி வேலை கி டை யா த அங்கத்தினர்களுக்கு வேலைகிடைக்குமாறு செய்தல்.

5. அங்கத்தினர்களுக்குவேண்டிய பொருள்களை உண்டாக்கல், விற்றல், ஆளுதல் ஆகியவற்றிற்குத் துணையாகும்பொருட்டுக் குடியேற்றநாடுகளை ஸ்தாபித்தல்; தங்களை ஒத்த கொள்கை யினையுடைய சங்கத்தார்க்கு உதவிபுரிதல்; என்பன.

கவனியுங்கள்! இருபத்தெட்டுத் தரித்திரர்கள்சேர்ந்தா இத்தகைய பெரு மாறுதலை உண்டாக்கக்கூடிய காரியத்தைச் செய்வது?! என்று நம்மவருட் சிலர் நினைக்கக்கூடும். அது சரியே. ஆயினும், அவர்கள் தங்களது உறுதியான உழைப்பினால் இருபத்தைந்து வருஷத்திற்குள் தங்களது நோக்கத்திற் சரிபாதியைப் பூர்த்திசெய்து கொண்டமுறைமையிற் பெரிய வெற்றியைப் பெற்றுவிட்டார்கள். இன்னும் மேற்போய்க்கொண்டிருக் கிறார்கள். இனி, இந்த 'ராஸடேல் நியாயவாதிகள்சங்கம்' கொண்டிருந்த கோட்பாடுகளை அறிந்துகொள்வது பொருத்தமானது. அவை வருமாறு:-

1. தங்களது சொந்தமுதலைக்கொண்டே தொழிலை நடத்தல்.

2. இயன்றவரையில் நல்லசாமான்களையே வாங்கல்.

3. சரியான அளவு, நிறைகளுடன் கொடுத்தல்.

4. கொள்முதலுக்குக் குறைத்தாவது, அயல்வியாபாரிகளுடன் போட்டிபோட்டாவது விற்பதை நிறுத்திக் கடைவிலைக்கே விற்றல்.

5. அங்கத்தினர்கள் கடனாளிகளாகாவண்ணம் செய்யு எக்காரணம் பற்றியும் கடன்கொடுப்பதும், கடன்வாங்குவதும் கூடாது என்ற கொள்கையுடன் இருத்தல்.

6. எவரால் லாபம்கிடைத்ததோ அவர்களே அதனைத் திரும்ப அடையவேண்டியது என்ற நியாயத்தை நிலைநிறுத்தச் சாமான்வாங்கிய விதப்படி லாபத்தைப் பிரித்துக்கொடுத்தல்.

7. சங்கத்தாற் கிடைத்தலாபத்தைச் சங்கத்திலேயே சேமித்து வைத்தல்.

8. சாமான்வாங்கியவர்களுக்கும், வேலைசெய்கின்றவர்களுக்கும் லாபம்கிடைப்பதற்கு உதவியாயிருக்கும்படி சேமித்துள்ள முதலுக்கு நூற்றுக்கு ஐந்துவீதம் குறைந்தவட்டி கொடுத்து வரல்.

9. தொழிற்சாலைகளிலுள்ள வேலையாளர்களுக்கு அங்கேகிடைக் கும் லாபத்தை அவர்கள்பெறும் சம்பளவிகிதப்படி பிரித்துக் கொடுத்தல்.

10. அங்கத்தினர்களின் அறிவை வளர்ப்பதற்காக லாபத்தில் நூற்றுக்கு இரண்டரைப்பங்கைக் கல்விக்காகச்செலவுசெய்தல்.

11. ஒவ்வொரு அங்கத்தினரும் ஒவ்வொரு 'ஓட்' உரிமையையே உடையவராயிருத்தல்.

12. குற்றச்செயல்களும்,போட்டிகளும் ஒழிவதற்காகக் குடியேற்ற நாடுகளே ஸ்தாபித்து அங்கும் இந்த முறையை நிலைநிறுத்தல்.

13. மொத்தவியாபார ஸ்தாபனங்களே ஸ்தாபித்துத் தங்களது இரண் டாவது கோட்பாட்டை நிறைவேற்றல்.

14. இந்தஸ்தாபனம் அங்கத்தினர்களது நன்னடக்கையையும் சுக வாழ்வையும் வளரச்செய்யும் என்ற நம்பிக்கையுடன் இருத்தல்.

இக்கூட்டத்தார்க்கு 'நியாயவாதிகள்' என்ற பெயர் பொருத்தமானது என்பதை அவர்களது ஆறாவதுகோட்பாடு வலியுறுத்தும். இவர்கள் கடன்விஷயத்திற் பெரிதும் எச்சரிக்கையுடன் இருந்தார்கள். 'கடன் கொடுத்த மைலக் என்பவன் வெனிஸ்வர்த்தகனுடைய குடலைக்கேட் டதைக்காட்டிலும், உணவுப்பொருள்களைக் கடன்கொடுத்த வியாபாரிகள் தங்களிடம் கடன்பட்டவர்களது குடலைக்கேட்பது நியாயமானது' என்

பது. இவர்கள் கருத்து. "குடிப்பதால் உண்டாகும் தீமையைவிடக் கடன்படுவதால் வரும்தீமை குறைந்ததாகாது. ஆனால், ஏழை ஜனங்கள் இதை ஒருபொருட்டாக எண்ணுகிறார்களில்லை. முதலாளிகளோ தங்களிடம் வேலைசெய்யும் தொழிலாளர்களைக் கடன்படாதவர்களாகச் செய்யப் பாடுபடுவதில்லை. ஆனால், கடன்பட்டு வேறுகதியற்றவர்களாகி விட்டால் அவர்களுக்குத் தங்கள் சுயலாபத்தைக்கருதிச் சிலதருமமாக உதவிசெய்கிறார்கள். இது, நோய்அதிகமானதற்குப்பிறகு மருந்து கொடுப்பதுபோலாகிறது. நோய்வராமலே தடுப்பது மேலானதா? வந்த பிறகு, அதிலும் அதிகமானபிறகு, மருந்துகொடுத்துத் தடுக்கப்பார்ப்பது மேலானதா? இக்கடனுகிய பேய் ஒருவனைப் பற்றிவிடுமாயின் அது அவனைப் பெரிதும் துன்புறுத்தும். கடன்படுதல் அடிமைத்தனத்திற்கு ஒப்பாகும். ஆதலின் இக் கடன் தொல்லையிலிருந்து அங்கத்தினர்களைக் காக்கவேண்டும்" என்பது கருதி இக்கூட்டத்தார் கடன் கொடுத்தும், வாங்கியும் வரும் வழக்கத்தை முற்றும் நீக்கியுள்ளார்கள். இவை இவர்களுடைய கொள்கைகளுள் முக்கியமானவை.

இத்தகைய கோட்பாட்டினையுடைய இக்கூட்டத்தார் தங்களது வியாபாரத்தொழிலே இருபத்தெட்டு அங்கத்தினர்கள்சேர்ந்து இருபத்தெட்டுப்பவுனை மூலதனமாகக்கொண்டு முதன்முதல் ராஸ்டேல் பிட்டணத்தில் வருஷத்திற்குப் பத்துப்பவுன் வாடகைகொடுப்பதாக ஓரிடத்தை அமர்த்திக்கொண்டு (21—12—1844) தொடங்குவதாக முடிவுசெய்தனர். இவர்களது நிலைமையைக்கண்ட 'கியாஸ்லெட்' கடைக்காரர் 'இவர்களாற் கூலிகொடுக்கவும் முடியாது' என்று கருதி விளக்குக் கொடுக்கக்கூட மறுத்துவிட்டனர். அங்கத்தினர்களே தாராளமாய்த் திறப்புக்கொண்டாட்டத்திற்குவரத் தங்களது ஏழைமைநிலையைக் கண்டு வெட்கப்பட்டனர். பெரியவியாபாரிகள் இவர்களதுதொழிலைப் பார்த்துப் பழிப்பதற்காகக் கூடியிருந்தார்கள். பண்டகசாலையைத் திறப்பதற்கு ஒருவரும் துணிந்து முன்வரவில்லை. இந்நிலையில், ஒரு தைரியமுள்ள வாலிபஅங்கத்தினர் அதனைத் திறந்துவைத்தார். உடனே, அந்த ஏழைநெசவுத்தொழிலாளர்களின் சிறுவர்கள் 'இந்த ஸ்தாபனம் இனிது தழைத்தோங்கி வாழ்வதாக' என வாழ்த்துக்கூறினர்கள். அக்காலத்தில் இவ்வளவு இடையூறுகளுக்கிடையில் இந்த ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டிராவிடின் இப்பொழுது, இரண்டுதலைமுறைகளுக்குப் பின்வந்த அவர்களது பரம்பரையினர் நல்லுணவையும், நல்லுடையையும்

பெற்றுச் சுகவாசிகளாய்ச் சுதந்தரபுருஷர்களாய் வாழ்ந்துவரமுடியாது. இந்தத்தலைமுறையாது அதிர்ஷ்டத்தால் அந்தக்காலத்தில் இந்த ஸ்தாபனம் நிலைபெறுவதாயிற்று. இங்ஙனம் தொடங்கிய இக்கூட்டத்தார்க்கு அதிசீக்கிரத்தில் தங்களது ஆரம்பதசையிலேயே 'தங்களது ஏழைமை நிலையோடுகூட வேறு பல பகைமைகளும் தங்களுக்கு உண்டு' என்பது வெளியாயிற்று. வேண்டியபொருள்களை நல்லனவாகப் பெறமுடியவில்லை. அங்கத்தினர்களிற் பலர் அயல்வியாபாரிகளிடம் கடன்பட்டிருந்தனர். கடன்படாதசிலரும் தங்களது கடமையை நன்குணர்ந்து வேண்டிய வற்றைச் சரியாக வாங்காதவர்களாயிருந்தனர். 'சரியானஅளவு, நிறை, நடுநிலைமை ஆகியவற்றைக்கொண்டு கடைபெறுகிறது' என்பதை அறிந்துவைத்தும் 'அயலிற் சிறிது விலைகுறைவாக இருக்கின்றது' என்ற காரணத்தாலும், வேறு காரணங்களாலும் எந்த ஏழைகளுக்காக இது ஏற்பட்டதோ அந்த ஏழைகள் அதிகமாக இதிற் சம்பந்தப்படாமல் நிற்கத் தலைப்பட்டார்கள். அந்தப் பொல்லாத அயல்வியாபாரிகளும் வேண்டுமென விலையைக் குறைத்து விற்றுவந்தார்கள். 'எப்பொழுதும் குறைந்தவிலைக்குக்கொடுப்பவரிடம் மோசச்செயல் இல்லாதிருக்க மூடியுமா?' என்றுகூட அங்கத்தினர்களாகிய அவர்கள் உணரவில்லை. 'எவ்வளவுதீமைவந்தாலும் அதனை அனுபவிக்க உடன்படுகின்ற இந்த ஏழைகள், தீமைவராதிருக்க ஒருவழியைக்காட்டினால் அதனைப் பின்பற்றி நடக்க மறுக்கின்றார்களே' என்று அவர்களது நிலைமையைக்குறித்துப் பொறுப்புள்ளவர்கள் இரங்கினர்கள். முதலில் அங்கத்தினர்களுக்கு வேண்டிய கோதுமைமா, சர்க்கரை, வெண்ணெய், இறைச்சி என்ற நான்குமே விற்கப்பட்டுவந்தன. இந்த இயக்கத்தில் விசேஷநம்பிக்கைவைத்த சிலரே எவ்வளவு இடையூறுகள் நேர்ந்தாலும் அவை அனைத்தையும் பொறுத்து அங்குத் தங்களுக்குவேண்டியவற்றை வாங்கிவந்தார்கள். அவர்களது ஊக்கத்தாலேயே அது உறுதிபெறுவதாயிற்று. இந்நிலையில், விடாதுசாமான்வாங்கி உறுதியுடன் இருந்துவந்த ஒருவர் ஒரு நிர்வாகக்கூட்டத்தில் 'சாமான்வாங்காது அங்கத்தினராகமாத்திரம் இருந்துவருபவரை விலக்கிவிடல்வேண்டும்' என ஒரு தீர்மானங்கொண்டுவந்தார். அது, 'நமது சங்கத்திற்சேர்ந்ததற்காக ஒருவர் தமதுசுதந்தரத்தை இழந்துவிடமுடியாது; சுதந்தரம் எல்லாவற்றிற்கும் மேலானது' என்று மறுக்கப்பட நிறுத்திக்கொள்ளப்பட்டது. இந்தப் பண்டகசாலை இப்பொழுது (1916) இருபத்தொராயிரத்தெண்ணூறு அங்கத்தினர்களைக்

கொண்ட நாற்பத்தெட்டுக் கிளைச்சங்கங்களைப் பெற்றிருக்கிறது. சற்றேறக்குறைய அப்பட்டணத்தின் ஜனத்தொகைக்கு மூன்றிலொருபங்கிற்கு இதன் அங்கத்தினர்களின்தொகை வந்துவிட்டது. இன்றைக்கோ இன்னும் அதிகமாயிருக்கிறது என அறியப்படுகிறது. மனிதவாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப்பொருள்களும் இப்பண்டகசாலையிற்கிடைக்கின்றன. இதற்குச்சொந்தமாகப் பல பெரியகட்டிடங்களும், பலவிளைநிலங்களும், கப்பல்களும், புகைவண்டிகளும், பன்னீராயிரம்புத்தகங்களைக்கொண்டஒரு புத்தகசாலையும், பலபத்திரிகைகளும் கிடைக்கக்கூடிய ஒருவாசகசாலையும், இரண்டாயிரம்ஜனங்கள்கூடக்கூடிய ஒரு பெரிய பிரசங்கமண்டபமும் உண்டு. 'கூட்டுறவுமுறையில் இந்த ஒருசங்கம் மாத்திரம்தான் வளர்ந்திருக்கின்றது' என்று எண்ணிவிடலாகாது. இதைப்பார்த்துத் தொடங்கப்பட்டனவாகச் சற்றேறக்குறைய நாற்பதுலட்சம் அங்கத்தினர்களைக்கொண்ட ஆயிரத்தைந்நூறுபண்டகசாலைகள் இப்பொழுது இங்கிலாந்தில்மாத்திரம் இருக்கின்றன. இந்த ராஸடேல்முறையும், முற்கூறிய ரைபீஸன்முறையும் நாளடைவில் ஐரோப்பா முழுவதிலும் பரவி ஏழைஜனங்களுக்குப் பெரிதும் நன்மையைச் செய்துவருகின்றன.

5. பிறநாடுகளிற் கூட்டுறவுஇயக்கத்தின் பரவுதல்.

இப்படியாக, ராஸடேல் நெசவுத்தொழிலாளர்வழிகாட்டிய இக்கூட்டுறவுவிதையானது நாளடைவில் ஐரோப்பாமுழுவதும் பரவுவதாயிற்று. அதன்வளர்ச்சி பத்துவருஷத்திற்குள் ஒன்றிற் கிரண்டாக உயர்ந்துவிட்டது. இப்பொழுதோ இந்தஇயக்கத்திற் சற்றேறக்குறைய ஒருகோடி பங்குக்காரர்கள் இருக்கிறார்கள். அப்பால், 'இந்த இயக்கசம்பந்தமாகக்கூடிய மகாநாட்டில், இருபத்துநான்குதேசங்களிலிருந்து இரண்டுகோடிபங்குக்காரர்களையுடைய ஒருலட்சத்துமுப்பதினாயிரம்சங்கங்களின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்' என்று சொல்லப்படுகிறது. துரைத்தனஉத்தியோகஸ்தர் அல்லாதவர்களின் பிரதிநிதிக்கூட்டமாக இவ்வளவுபெரியகூட்டம் வேறு எந்தவழியிலும் எவ்விடத்திலும் கூடியதில்லை.

இங்ஙனம், பரவிய இந்த இயக்கம் ஐரோப்பாவிலுள்ளபலவகைத் துரைத்தனத்தின்கீழ் வாழும் பலவகைஜாதியாரிடத்திலும் பரவி அவர்களுக்கு நற்பயனை விளைத்துவருகின்றது. ஜர்மனியில் ரைபீஸன்முறையிலும், இங்கிலாந்தில் ராஸடேல்முறையிலும், பிரான்ஸிலும் பெல்ஜியத்தி

லும் உற்பத்திமுறையிலும், டென்மார்க்கிலும் அயர்லாந்திலும் விவசாய முறையிலுமாக இந்த இயக்கம் ஒவ்வொருதேசத்தில் ஒவ்வொருதுறையிற் பற்றுமிக்குளதாகிப் பரவிவருகிறது. சண்டைச்சுப்பிறகு இந்த இயக்கம், சண்டையிற் சம்பந்தப்பட்டும் படாமலும் இருந்த எல்லாநாடுகளிலும் இன்னும் பலமடங்காக வளர்ந்திருக்கின்றது. அவற்றில் தற்காலம் இந்தப்பண்டகசாலைமுறையில்மாத்திரம் அங்கத்தினர்களின் தொகை சுமார் நான்குகோடிமுதல் ஐந்துகோடிவரையில் வளர்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இக்கோடிக்கணக்கான எண்ணிக்கையே இந்த இயக்கத்தின்பெருமையை உறுதிப்படுத்தும். மேல்நாடுகளிலுள்ள ஒவ்வொருதலைநகரங்களிலும் இப்பண்டகசாலைகளின் உபயோகத்துக்காகப் பல மொத்தக்கூட்டுறவுமளிகைகள் இருக்கின்றன என்பது இங்கு அறியத்தக்கது.

இக் கூட்டுறவுப்பண்டகசாலை இயக்கம் 'ஜனங்களது விசுவாசத்திறமையால் இங்கிலாந்தில்மாத்திரம்தான் பயன்தரமுடியும்' என்று சொல்லப்படுகிறது. இது பொருந்தாது. எங்ஙனமெனில், இந்த இயக்கம் 'இங்கிலாந்தில் நல்லபயனைத் தந்துவருகிறது'என்பதை அறிந்ததும் (1864) ஜர்மனியில் இது பெரிதும் பரவத்தொடங்கியது. பல சங்கங்கள் தோன்றின. அவற்றுள், அறுபத்தையாயிரம்அங்கத்தினர்களையுடைய 'லேப்ஸிக்' பண்டகசாலையும், எழுபத்தொன்பதினாயிரம் அங்கத்தினர்களையுடைய 'ஹாம்பர்க்' பண்டகசாலையும், ஒருலட்சம் அங்கத்தினர்களையுடைய 'ப்ரஸ்லா' பண்டகசாலையும் சேர்ந்திருக்கின்றன. உலகத்திலுள்ள பண்டகசாலைகளுக்கெல்லாம் மிகப்பெரியபண்டகசாலை இந்த 'ப்ரஸ்லா' பண்டகசாலையே. இந்த இயக்கத்திலே 'துரைத்தனஉத்தியோகஸ்தர்கள் அங்கத்தினர்களாக இருத்தல்கூடாது' என்றதடையை, இந்தப் பெரியசண்டைக்குப்பிறகு இதனாலுண்டாகும் நன்மைபைக்கருதித் துரைத்தனத்தார் நீக்கிவிட்டனர். இதனால் இப்பொழுது அங்கே ஒவ்வொரு 'சோஸைட்டி'யிலும் அங்கத்தினர்களின் தொகை பெருகிக்கொண்டேவருகிறது. முற்கூறிய 'லேப்ஸிக்' பண்டகசாலை அறுபத்தையாயிரத்திலிருந்து இப்பொழுது தொண்ணூறுயிரம் அங்கத்தினர்களைக்கொண்டதாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்.)

'முன்னமேமுனியாகி'என்றதற்குச் சரிதம்.

திருநாவுக்கரசுநாயனார் புராணம். சஅ-ங் கவி.

"மன்னுதபோதனியார்க்குக்கனவின்கண்மழவிடையா
ருன்னுடையமனக்கவலையொழிதியுன்னுடன்பிறந்தான்
முன்னமேமுனியாகியெமையடையத்தவமுயன்று
னன்னவனையினிச்சூலைமடித்தாள்வமெனவருளி"

இதில் 'முன்னமே முனியாகி' என்ற விருத்தாந்தம் கீழ்வருமாற்று னறியப்படும்.

ஆரியாவர்த்தத்திலுதித்து வேதவேதாங்கங்களை யோதியுணர்ந்த சிவபக்தராகிய சுதபாமுனிபென்பவர், நருமதாதீரத்தில் வசித்துக்கொண் டிருந்த காந்தரென்னுமுனிவர் தன்மாணவர்களுக்கு உபநிடதங்களின் அர்த்தமாகிய ஜீவான்ம பரமான்ம ஐக்கியத்தை உபதேசிக்குங்கால் அவருழைச் சென்று வேதம் அப்பிரமாணியமென்று சைனமதத்தைப் பிரசங்கஞ் செய்தனர். அப்பொழுது அம்முனிவர் வெகுண்டு "நீ வேத பாஹ்யனாய்ச் சைனமதத்திற் பிரவேசி" யென்று சபித்தனர். அதனால் அம்முனிவர் சைனமதத்தில் பிரவேசித்தனர் என்று அகத்திய பக்த விலாசத்திற் கூறப்படும்.

ஜி. சதாசிவம்பிள்ளை.
நாகை நீலலோசனிப் பத்திராதிபர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககக.] ரௌத்ரி-ஹேவிளம்பி [பகுதி ஈ.

Vol. XIX. January—February—1921. No. 3.

தொல்காப்பிய உரையாசிரியருரை.

தொல்காப்பிய உரைகளுள்ளே உரையாசிரியருரையென்று வழக்குப் பெறுவது இளம்பூரணவடிகளா லியற்றப்பெற்றதாகும். உரையாசிரியரும் இளம்பூரணரும் ஒருவரேயாவரென்பது சிலப்பதிகார அடியார்க்குநல்லா ருரையில் "உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள்" என வருவதனாற் றெளியப்பட்டது.

உரையாசிரியராகிய இளம்பூரணரே தொல்காப்பியத்துக்கு ஆசிரியர் கருத்துக்கிணங்க முதன்முதல் உண்மைப்பொருள் கண்டோராவர். கற் றோர்பலராலும் மிகுதியும் போற்றற்குரியதாய் இக்காலத்துவழங்கும் சேனவரையருரைக்கு இவ்வுரையாசிரியருரையே வழிகாட்டியாக அமைந் தது. சேனவரையர் தம் உரையிற் பலவிடங்களில் உரையாசிரியரைக் குறித்துள்ளார். சிற்சிலவிடங்களில் சேனவரையர், நச்சினார்க்கினியர், நன்னூலுரைகாரர் முதலியோர் தம் கொள்கைகளை வலியுறுத்த உரையா சிரியருரைப்பகுதிகளைச் சான்றுகாட்டுவது முண்டு. இவ்வுரையே தொல் காப்பியநூலுக்குத் தொன்றுதொட்டுவழங்கிவந்த உரைகளில் ஆசிரியர் கருத்தொடுபட்ட உண்மையுரையென்று சான்றோர்பலராலும் போற்றப் பட்டுவந்தது. இவ்விஷயம் அவ்வுரையின் பழையவட்டெச்சுவடிகளின் இறுதியில் "உண்மைப்பொருளும் உதாரணமும் முடிந்தது" என்று எழுதியிருந்தல்கொண்டு அறியலாவது. சேனவரையர்கருத்து மிஃதே

யாமென்பது அவர் தம் உரையின்கண் உரையாசிரியருரைப்பிரதியில் ஒரோவழிக்காணப்படும் குற்றங்களின்பொருந்தாமைகாட்டி "ஆசிரியர் (தொல்காப்பியனார்)க் கது கருத்தன்மையின் உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க" எனக் கூறுவதா லறியக்கிடக்கிறது. இன்னும் இவ் வுரையின் அருமைபெருமைகளை நன்குபரிசீலனைபண்ணி வெளிப்படுத்த முன்னோர்மொழிகள் பொன்னேபோற் போற்றற் குரியனவாயுளவாகலின் அவற்றையும் கீழே தருகின்றேன்.

"இப்பெரியோர் (இளம்பூரணர்) பழையதமிழிலக்கணநூலாகிய தொல்காப்பியத்துக்கு முதன்முதல் உரையிட்ட ஆதியுரைகாரர். ஆதி யுரையாளர் என்பதுபற்றியே உரையாசிரியரென்னும் பொதுப்பெயரே இவர்க்குரிய சிறப்புப்பெயராக வழங்குவதாயிற்று. பிறர்நுழைந்து காணமுடியாவண்ணம் இருண்டுகிடந்த தொல்காப்பியமென்னும் சுரக் கறையுள் தம்மறிவென்னும் அவியாவிளக்கைக்கொண்டுதூவி அங்கே குவிக்கப்பட்டிருந்த அரதனக்குவியல்களை உலகிற்கு முதலிற்காட்டிய பெருந்தகையார் இவரே. இவர்க்குப்பின்வந்த உரைகாரரது செய்கை யெல்லாம் தொல்காப்பியச்சரக்கறையுள் இவ்வடிகள் ஏற்றிவைத்திருந்த அவியாவிளக்கினுதவியால் அங்கிருந்த அரதனக்குவியல்களைக்கண்டு வியந்ததும் அவ்வரும்பெறற்பொருள்களை மாசுநீக்கித் தூசிபடியாவண் ணம் சுத்தஞ்செய்துவைத்ததுமேயாகும்" (செந்தமிழ், தொகுதி 4 பக்கம் 116).

இங்ஙனம் உரைகாரர்களுள் மிகுந்தசிறப்புப்பெறுதற் குரியவராய், நன்குமதிப்புடனெண்ணப்படும் இளம்பூரணவடிகளுரை இப்பொழுது தொல்காப்பிய முழுமைக்கு முள்ளது, அதன் எழுத்ததிகாரப்பகுதியே அச்சுப்புத்தகமாக அமைந்துள்ளது. பொருளதிகாரத்திற் சிலபகுதிகள் இப்போது அச்சிடப்பட்டுவருதல் காணப்படுகிறது. அங்ஙனமே சொல் லதிகாரவுரையும் அச்சியிற்றி வெளியிடப்பெறுவதாயின் அப்பேற்றிற் குத் தமிழகமுழுவதும் நன்றியறிதற்கடப்பாடுடையதாகும்.

இதுநிற்க; அவ்வுரைமுழுதும் இப்பொழுது நமக்குக் கிடைத்த நிலையில் உரையாசிரியருரைத்த உண்மைப்பொருள்கள் சிற்சில மாறுதல் களுக்கு உட்பட்டிருத்தல் தேறப்படும். அம்மாறுதல்களிற் சில இங்கே குறிக்கப்படுகின்றன.

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர்மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந."

என்னும் மதுரைக்காஞ்சியடிகளி னுரையில் நச்சினார்க்கினியர் "இரா வணன் (தென்றிசை) ஆளுதல் பாயிரச்சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையானுமுணர்க" எனக் கூறினமை யாவரும் நன்குறிந்தது. இவ்விஷயம் அச்சிட்ட எழுத்ததிகார இளம்பூரணருரையி லில்லை.

அடியார்க்குநல்லார், சிலப்பதிகாரத்தில் "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" என்பதன் உரையிலே, குமரியாறு கடல் கொண்ட செய்தி, "எற்றுற் பெறுதுமெனின், நக்கீரருரைத்த இறையனர் பொருளுரையானும் உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரை யானும் பெறுதும் எனக் கூறியுள்ளார். இப்பகுதியும் இளம்பூரண ருரையில் யாண்டுங் காணப்படவில்லை.

தொல்காப்பியப் பாயிரத்தின்கண்ணே ஆசிரியர் நச்சினார்க்கினியர் பதவுரைகூறிமுடித்து "இப்பாயிரமுஞ் செய்யுளாகலின் இங் ஙன மம் மாட்டுறுப்புகளுக் கூறினர். இதற் கிங்ஙனங் கண்ணழித்தல் உரையா சிரியர்க்குங் கருத்தென்பது அவருரையா னுணர்க" என்றுகூறி, மேலும், "இனி இவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவுகூறுவாரு முளராலெனின்", எனத் தோற்றுவாய்செய்து காரணங்காட்டி, முடிவில், "அது பொரு ளன்மையுணர்க" என்றுரைத்தார். பாயிரச்சூத்திரத்தின் இளம்பூரண ருரையில் நச்சினார்க்கினியர் கூறியவாறு கண்ணழிவு கூறப்படவில்லை. ஆனால் அவர் எடுத்துக்காட்டிய இரண்டாவது கொள்கையே ஆண்டுக் காணப்பெறுவது.

நான்மறை "மெய்யோ டியையினும் என்னும் சூத்திரவுரையில் 'விளங்காய்திரட்டினரில்லைக் களங்கனியைக் காசெனச்செய்தாருமில்' என் பதே காட்டினர் உரையாசிரியரும்" என்று நச்சினார்க்கினியர் சுட்டின இப்பகுதியும் இளம்பூரணத்திலில்லை.

ஆகவே, இங்ஙனமாகிய மாறுதல்களைக்கொண்டு இப்பொழுது நமக் குக் கிடைத்துள்ள எழுத்ததிகார இளம்பூரணருரை உரையாசிரியருரை யன்றென வொருதலையாகத்துணிதல்கூடுமோ வென்றாராயப்புக்கவிடத்து அது சிறிதும் இயலாததென்றே முடிகிறது.

நூன்மரபு "ஞநமவ" என்ற முதற்குறிப்புடைய சூத்திரத்தில், நச்சினார்க்கினியர், உரையாசிரியருரையுள் உரிஞ்யாது பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது, என இருமொழிக்கண்வருவன உதகரிக்கப் பட்டமையைக் காரணங்காட்டிப் பொருந்தாதெனவிளக்கினர். இளம் பூரணருரையில் இப்பகுதி குறிப்பிட்டபடியே காணப்படுகிறது.

மொழிமரபு, "குறுமையு நெடுமையும்" என்னும் சூத்திரவுரையில், அவர், "இனி உரையாசிரியர் புகர் புகழ் எனக் குறிலீறிணைக்கீழ் ரகார ழகாரங்கள் வந்து தொடர்மொழிகளெல்லாம் தார் தாழ் என்றாற்போல ஓசையொத்து நெட்டெழுத்தின்தன்மையவாம் என்று" எனக் காட்டி யது இளம்பூரணருரையிலுமுள்ளது.

புள்ளிமயங்கியல், "இலமென்கிளவிக்கு" என்னும் சூத்திரத்தில் "இ த னை இலத்தாற்பற்றப்பட்ட புலவரென வேற்றுமையென்றாரா லுரையாசிரிய"ரென்று குறித்திருப்பதும் இளம்பூரணருரையில் மாறுத லின்றிக் காணப்படுகிறது.

இ ங் ங ன மே மற்றுஞ் சிலவிடங்களிலும் நச்சினார்க்கினியரால் உரையாசிரியருரையென்று காட்டப்பட்ட பகுதிகள் அச்சிட்ட இளம் பூரணருரையி லமைந்துள்ளன,

ஆதலின் இவற்றையெல்லாங்கொண்டு நோக்குமிடத்து உரையா சிரியருரையும் இளம்பூரணருரையும் ஒன்றேயாபென்று விளக்கமுறுவ துடன் உரையாசிரியருரையானது ஏடெழுதுவோராலும் பிறராலும் செய்யப்பட்ட பலமாறுதல்களாகிய கூட்டல் கழித்தல்களுக்குட்பட்ட தென்றுங் கொள்ளக்கிடக்கிறது.

இக்கூறிய வேறுபாடுகளெல்லாம், அடியார்க்குநல்லார், நச்சினார் க்கினியர் இவர்களுக்கும் நடக்கும் இடைப்பட்ட காலவரையறைக்குட் பட்டனவாகும். இனிச் சொல்லதிகார வுரையாசிரியருரையின்கண்ணே ஆசிரியர் சேனவரையர்காலத்துக்குமுன்னும் பற்பல வழூஉக்கள் இடம்பெற்றிருந்தன வென்பது ஆராய்ந்தறியப்படும்.

சேனவரையர் உரையாசிரியருரைப்பிரதியிற் பிறரால் சேர்ந்த பல வழக்கவழூஉக்களையும் முன்னெடுபின்மலிதல் முதலிய காரணங்களால் ஆய்ந்தறிந்து அவற்றின் பொருந்தாமை நன்குவிளக்கி "அவர்க் கது

கருத்தன்று" என்றும் "அவ்வுரை போலியுரை" என்றும் அவை இடைச் செருகல் என்ற கருத்தினையே யுட்கொண்டு பலவிடங்களிலும் எழுதிச் செல்வர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரம் "உயர்திணை என்மனார்" என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையருரையி லிக்கருத்து நன்கு வெளியாதல் காண்க. அதனைத் 'தொல்காப்பியக் கல்லாடருரை' என்ற ஆராய்ச்சியில் எடுத்துக் காட்டினேன். அது நிற்க. அச்சூத்திரத்திலேயே "இன்சாரியை வேற்றுமையுருபுபற்றியும் பற்றாதும் நிற்குமென் றுரையாசிரிய ரிரண்டாவது விரித்தா"ரென்று எடுத்துக்கொண்டு "செலவினும் வரவினும் தாவினும்" என்புழியும் பிறாண்டும் உரையாசிரிய ருண்மைப் பொருள்கூறியிருப்பதனைக்கொண்டு "அவர்கக்கதுகருத்தன்"றென்று நிரூபித்துள்ளார். அவர்க்கது கருத்தன்றென்று கூறினுல் அஃதிடைச் செருகலான பிறர்கருத்தென்பது சொல்லாமையே அமையும். அங்ஙனமின்றி முன்னெடுபின்முரணுமாறு உரையாசிரியர் பொருளுரைத்தாரென்பதே சேனாவரையர்கருத்தாகுமா? அஃதவர்கருத்தாயின் "ஆடூவறி சொல்" என்னுஞ் சூத்திரவுரையினும் பிறவிடங்களிலும் அவருரையினையேகொண்டு தமதுகொள்கையை வலியுறுத்தல் யாது பயனுடைத்தாம்? அன்றியும், அவர், உரையாசிரியர் தணுகிய வுணர்வுடையரென்பது தோன்ற "மாணுக்கர்க் கறிவுபெருக்கல்வேண்டி உய்த்துணரவைத்துச் செல்லுத லவர்க்கியல்பென்க" என்று கூறியிருப்பதும் பொருளில்லாத பொய்யுரையாகுமா?

இங்ஙனமே "செப்பும்வினுவும்" என்பது முதலாகப் பல சூத்திரங்களினும் சேனாவரையர் 'அவ்வுரை போலியுரை' என்று கூறுவதை முன்னும்பின்னும்கொண்டு உற்றுநோக்கின், அவர் அவ்வழுவுக்களையெல்லாம் அறியாதார் இடைச்செருகியனவாகக் கொண்டாரென்பதே இனிது விளங்கும். இங்ஙனமே மேலும் நோக்கிக்கொள்க. அவற்றையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இதுகாறுங் கூறியவற்றுல், உரையாசிரியரும் இளம்பூரணரும் ஒருவரேயாவரென்பதும் "அறிதற்கரிதாகிய தொல்காப்பியக்கடலைத் தம் மதிவலிகொண்டு கடைந்து முதன்முதல் இலக்கணவமுதமளித்த பெரியோ"ராகிய இளம்பூரணருரை மிகுந்தசிறப்புடன் போற்றத்தகுவ

தென்பதும், அதன்கண்னே அறியாதார் சிலர் தமக்குத்தோன்றியவாறு புகுத்தெழுதிய வழூஉக்கள் பல முற்காலத்தும் பிற்காலத்தும் இடம் பெற்றன என்பதும், பிறவும் நன்குவிளங்கும்.

இவையெல்லா மிங்ஙனமாதலி முற்றிலும் மறைக்கப் புகுந்தாராய்ச் செந்தமிழ்த்தொகுதி 18, பக்கம் 508-ல் "இலக்கணவுரைபோன்ற விசேஷ நூல்களில் (Technical works) இடைச்செருகல் உளதாதல் மிகவும் அரிதாம்" என் றெழுதினது முளர். இலக்கண நூலாகிய நம்பி யகப்பொருளின்கண்ணே தஞ்சைவாணன்கோவைச்செய்யுட்கள் இடைப் புகுந்ததும், இறையனர்களவியலுரையில் சரித்திரவாராய்ச்சியிற் புகு வாரை இடர்ப்படுப்பனவாய சில பிற்காலச்செய்யுட்கள் சேர்க்கப்பெற் றிருத்தலும் அறியத்தக்கன.

இவைபோலவே உரையாசிரியருரையின்கண்ணும் இடைச்செருக லுண்டென்பதும், அவ்வுரையாசிரியருரையில் நன்மதிப்புடைய சேனா வரையர் போலியுரையென்று காட்டும் பகுதிகள் சேனாவரையர்கருத்தால் உரையாசிரியருரை யல்லவென்பதும் நன்கறியலாகும்.

T. N. அப்பனையங்கார்.

மதுரை.

வாழ்த்து.

தேனினு மினிமை மிக்குத் தீஞ்சுவை யூறுஞ் செஞ்சொற்
பானலம் கலந்த போதம் பரவு "செந்தமிழ்" பல்லாண்டு
மேனலம் புரக்க வாழ்ந்து விழுமிய புகழ்கொண் டோங்கி
மாநிலத் தவர்க்குக் காட்சி வழங்குக சிறந்து மன்னே!

ஆர். ஆர். குணரத்நம் **B. A.**

கூட்டுறவுமுறையின்வரலாறும்
அதனைவளர்க்கும் முறையும்.
(எக்ம் பக்கத்தொடர்ச்சி.)

6. பலவகைச்சங்கங்களும், சங்கங்களின்சங்கங்களும்.

இதுவரைபிற் கூறியதுகொண்டு இந்தியா, ஜர்மனி, இங்கிலாந்து என்ற மூன்றுதேசங்களிலும் இந்தக்கூட்டுறவுஇயக்கம் எப்படித் தோன்றிப் பரவிவருகின்றது என்பதும், அவற்றுள்ளும் பிற்கூறிய இரண்டு தேசங்களுமே உலகமுழுவதுக்கும் இந்த இயக்கத்திற்கு வழிகாட்டியாக இருக்கின்றன என்பதும், இந்த இயக்கத்தைக் கைக்கொண்டால் அது, பலவழிகளிலும் ஏழை ஜனங்களுக்குப் பேருதவிபுரிந்துவரும் என்பதும், 'உலகத்தில் நியாயமில்லை; நமக்குநியாயங்கிடைக்காது' என்று நம்பியிருந்த பாமரஜனசமூகத்தார் தங்களது ஜீவாதாரஉரிமையை நிலைநிறுத்தி நியாயத்தைப்பெற இதனை ஒருசாதனமாகக் கண்டுபிடித்தனர் என்பதும், பிறவும் ஒருசிறிது விளங்கும். இனி, இந்த இயக்கத்தைப் பற்றி ஆராயவிரும்புவோர் 'கூட்டுறவுமுறை என்றால் என்ன? கூட்டுறவு மளிகை, கூட்டுறவுப்பொக்கிஷசாலை, கூட்டுறவுத்தொழிற்சாலை என்றவற்றிற்கும் தனித்துநடத்தப்படும் மளிகை, பொக்கிஷசாலை, தொழிற்சாலை என்றவற்றிற்கும் உள்ள வேறுபாடு என்ன?' என்ற வினாக்களுக்குச் சரியானவிடையை அறிந்துகொள்ளவேண்டும்.

இந்த இயக்கமோ மனிதர்களுக்கு இயற்கையான சகோதரப்பான்மையை வளர்ப்பது; எவரையும் வேண்டிக்கொள்வதேதவிரக் கட்டாயப்படுத்துவதன்று; சுதந்தமாகவே தொழிலைநடத்திவருவது; பல ஏழைகளும் ஒன்றுசேர்ந்து பொருளாளர்களால்வரும் கஷ்டத்தைத் தடுத்துக்கொள்ளமுயல்வது; பிறரைத் துன்புறுத்தக்கூடும் பலசாலிகள்கூட்டம் போலாகாமல் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளப் பல ஏழைகள் ஒன்றுசேர்ந்து தொழில்செய்வது; ஒருவருடைய அல்லது ஒரு கூட்டத்தாருடைய லாபத்தைமாத்திரம் கருதாமல் சேர்ந்த எல்லார்க்கும் லாபத்தைக்கொடுத்துவருவது; அதிகம் சொல்லுவானேன்; 'எல்லார்க்கும் ஒருவர்; ஒருவர்க்கு எல்லாரும்' என்பதே இந்த இயக்கத்தின் உயிர்நிலையான கொள்கை.

இந்தக் கூட்டுறவுச்சங்கங்களை ஐந்துவகையாகப் பகுக்கலாம். அவை:—

1. கடன் கொடுத்துவாங்கும் சங்கங்கள்.
2. விவசாயிகளுக்கு உபயோகமாகும் சங்கங்கள்.
3. கூட்டுறவுப் பண்டகசாலைகள்.
4. வீடுகள்கட்டிக்கொள்வதற்கு உதவக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள்.
5. தொழிலாளர்களுக்கு உபயோகப்படக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள்.

கூட்டுறவு என்பது உலகத்தில் நடைபெறுகிற எல்லாத்துறைகளிலும் உபயோகப்படுத்தக்கூடிய ஒருமுறையாகும். ஆதலால் உலகத்திலுள்ள எல்லாக்கூட்டுறவுச்சங்கங்களையும் மேற்கண்ட ஐந்துவகைக்குள் அடக்கிவிடலாம். இனி, அந்த ஐந்துவகைச்சங்கங்களையும்பற்றிக் கூறுவது பொருத்தமானது.

1. கடன்கொடுத்துவாங்கும்சங்கம்:— இது, கடன்வாங்குவோர்களது சங்கமாகும். இதன் நோக்கம், அதிகவட்டிக்குக் கடன்கொடுத்துக் கடன்பட்டோரைத் துன்பத்திற்குள்ளாக்கும் முதலாளிகளிடமிருந்து விடுதலைபெறுவதுடன், இனிக் கடன்வாங்காதநிலையிலிருக்கவும் செய்தல்.

2. விவசாயிகளுக்கு உபயோகமாகும் சங்கம்:—இதன் நோக்கம், தன்னிடம் அங்கத்தினர்களாயிருக்கும் எல்லா விவசாயிகளுக்கும் முற்கூறிய நன்மையைச் செய்வதோடு, உழுதொழிலுக்குவேண்டிய கருவி, கால்நடை, விதை முதலாயவற்றை வாங்கிக்கொள்வதற்கும் உதவிபுரிதல், தனித்தனியாகவாங்குவதைக்காட்டிலும் மொத்தமாகவாங்குவதால் கிடைக்கும்லாபத்தை அடைவித்தல்.

3. கூட்டுறவுப்பண்டகசாலை:—இது, உணவுப்பொருள், உடை முதலியவற்றை வாங்கி உபயோகப்படுத்துபவர்களது சங்கமாகும். இதன் நோக்கம், வியாபாரிகளிடத்திற் சாமான்களைக் கடனுக்குவாங்குவதால்வரும் தீமையினின்றும் நீக்கிக்கொள்ளுதல்; சரியானவிலை, அளவு,

நிறை இவைகளுடன் சுத்தமான சாமான்கள் அங்கத்தினர்களுக்குக் கிடைக்குமாறுசெய்தல்; இதனால் கிடைக்கும் லாபத்தைக்கொண்டுமுதல் சேர்த்து அங்கத்தினர்களுக்குப் பொதுவாக விளைநிலங்களைவாங்கல், வேண்டியபொருள்களை உண்டாக்கல், தொழிற்சாலைகளை ஸ்தாபித்தல் என்பன.

4. வீடுகள்கட்டுவதற்கு உதவக்கூடிய சங்கம்:—இது, குடியிருக்க வீடில்லாதவர்க்கு வீடுவாங்கிக்கொள்ளப் பணங்கொடுத்துச் சிறிது சிறிதாகவாங்கிக்கொள்ளுதல் என்னும் நோக்கமுள்ளது.

5. தொழிலாளர்களுக்கு உதவும் சங்கம்:—இது, கூலிக்குவேலை செய்து ஜீவனம்பண்ணும் எல்லாத் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து குறைந்த கூலிகொடுத்துவரும் முதலாளிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள உதவிபுரிவது. 'வேலைசெய்யாமலேயே சுகமாக ஒருகூட்டத்தார் வாழ்வதும், வேலைசெய்து ஒருகூட்டத்தார் வாழ்வதும், வேலைசெய்தும் ஒருகூட்டத்தார் கஷ்டத்தையே பெற்று வாழ்வதும், தரித்திரராகவே ஒருகூட்டத்தார் வாழ்வதும் உலகத்தில் அநியாயமானவை; ஆதலினாலே இம்முறையைப் போக்கவேண்டும்' எனக் கருதி ஒன்றுகூடி முதல்சேர்த்துத் தொழில்செய்தல் இதன் நோக்கமாகும்.

இவற்றைத் தவிர எல்லாச்சங்கங்களையும் மேற்பார்ப்பதற்காகச் சங்கங்களின் சங்கங்களும் உண்டு. அவை:—மூன்றுவகைப்படும். கடன் கொடுத்துவாங்கும் சங்கங்களுக்கு உதவிபுரியப் 'பாங்கிங்யூனியன்' என்றும், உணவுப்பொருள் முதலியவற்றை விற்றுவரும் கூட்டுறவுப்பண்டக சாலைகளுக்கு உதவிபுரிய 'டிரேடிங்யூனியன்' என்றும், பிரசாரவேலையும், பிற மேற்பார்வையும் செய்ய 'சூப்ரவைஸிங்யூனியன்' என்றும் அவை பெயர்பெறும். இவற்றிற்கெல்லாம் மேற்பட்ட 'மகாசங்கம்' ஒன்றும் உண்டு. இவையெல்லாம் ஜர்மனியில் இன்றும் நடைபெற்றுவருகின்றன. இங்கிலாந்தில் எல்லாக்கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் உதவக்கூடிய ஹோல்ஸேல்சொஸைட்டி என்ற 'மொத்தக்கூட்டுறவு மளிகை'யும் எல்லாச்சங்கங்களையும் மேற்பார்க்கவும், பிரசாரவேலைசெய்யவும் ஏற்பட்ட 'சூப்ரவைஸிங்யூனியன்' என்ற சங்கமுமாக இரண்டு சங்கங்களின் சங்கங்கள் உள. இந்தியாவிலும் இம்மாதிரியான சங்கங்களின் சங்கங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் அவ்விடங்களில் இருக்

கும் மாதிரியில் அவை ஸ்தாபிக்கப்படவில்லை. அங்கே, பல சிறுசங்கங் கள் தோன்றி அவற்றிற்கு 'இத்தகையசங்கங்களின் சங்கங்கள்தேவை' என்று தோன்றியபின்னர் ஸ்தாபிக்கப்படுகின்றன: இந்தியாவிலோ முன்னர்ச் சங்கங்களின் சங்கங்களை ஸ்தாபித்துப் பின்னர்ச் சிறுசங்கங் களை ஸ்தாபிக்க முயலுகின்றனர். இந்தியாவில் இந்த இயக்கம் வளரா திருப்பதற்கு இதுவு மொரு தடை. மேலும், இந்தியாவில் அந்தச்சங்கங் களுக்குப் பெயர்கொடுத்துவருவதே பொதுஜனங்களைச் சந்தேகத்திற்கு உள்ளாக்குவதாயிருக்கிறது. இதுவும் ஒரு தடைக்காரணம். இவ்விஷ யத்தில் அதிகாரிகளும் பிறரும் சேர்ந்து ஒரு நல்ல ஏற்பாடுசெய்வது விரும்பத்தக்கது. பொதுவாக நம் தேசத்திலுள்ள சங்கங்களெல்லாம் துரைத்தனத்தாரின் உதவியையும், பிறர்உதவியையுமே நாடிக்கொண் டிருக்கின்றன. ஆனால், கூட்டுறவுப்பண்டகசாலை விஷயத்தில் மாத்திரம் 'உத்தியோகஸ்தர்கள் அவற்றை ஸ்தாபிக்க எவ்வித முயற்சியும் செய்ய லாகாதென்றும், சென்ட்ரல்பாங்குகள் அவற்றிற்குக் கடன்கொடுத்துத வல் கூடாது' என்றும் விதிசெய்திருக்கிறார்கள். அது, பண்டகசாலை களின் வளர்ச்சிக்கு உதவியாகவே இருந்துவருகிறது.

7. சாசுவதநிதிகளும், சீட்டுகளும்.

இதுவரையில் மேல்நாடுகளிலிருந்தே பலவகைச் சங்கங்களும் தோன்றின என்பது கூறப்பட்டது. இனி, நமது இந்தியாவுக்குச் சொந்தமான சங்கங்களைப்பற்றிக் கூறுவது பொருத்தமானது. இந்தியா வில் 'ரூரல்சொஸைட்டி'கள்போன்ற சீட்டுகளும், 'அர்பன்பாங்கு'கள் போன்ற சாசுவதநிதிகளும் இருந்துவருகின்றன. சீட்டுகள் கிராம வாசிகளுக்கும், நிதிகள் மாதவரும்படியுள்ள நகரவாசிகளுக்கும் உபயோ கப்பட்டு வருகின்றன. இந்தச் சீட்டு நிதி இவற்றின் கொள்கைகளிற் சில வற்றைக் கூட்டுறவுச்சங்கத்திலும் சேர்த்திருக்கிறார்கள். எனினும் கூட்டுறவுச்சங்கத்தார் இவற்றைச் சரியாக எண்ணுவதில்லை. அது தவறுனது. நிற்க, இனியேனும் இவ்விரண்டனையும் கூட்டுறவுச்சங்கத் துடன் சேர்த்துநடத்துவது நலமானது. இந்த நிதிகளைச் சிலர் 'வீடு கட்டப் பொருளுதவும் சங்கங்கள்' என்றும் புகழ்ந்துகூறுகிறார்கள். இத் தகைய நிதிகளின்உதவியால் வீடுவாங்கியவர்கள் பலர் பட்டணங்களில் இருக்கின்றனர். சீட்டுகளால் மலையாளம், திருநெல்வேலி முதலிய இடங் களிலுள்ளவர்கள் பெரிதும் நன்மையடைந்துவருகிறார்கள். மதுரை,

திருவல்லிக்கேணி முதலிய இடங்களிலுள்ள கூட்டுறவுச்சங்கங்கள் இக் தச்சீட்டின் நன்மைகளை அறிந்து தாங்களும் ஸ்தாபித்து நன்மை அடைந்து வருகின்றன. நிதி, சீட்டு என்ற இரண்டுஸ்தாபனங்களிலும் வட்டி அவரவர்களுடைய தர்மசிந்தனைக்கேற்ப இருந்துவருகின்றது. இவற்றை முற்கூறிய நிக்கில்ஸன் துரையவர்களும் புகழ்ந்திருக்கின்றனர்.

8. 1912-ம் வருஷத்துப் புதிய கூட்டுறவுச்சட்டம்.

1904-ம் வருஷத்திய பத்தாவது சட்டம், விவசாயிகளுக்குக் கடன் கொடுத்துவருவது ஒன்றையே தனது கடமையாகக்கொண்டிருந்தது. இங்கிலையில் இந்த ராஜதானியிற் சில கூட்டுறவுப்பண்டகசாலைகள் தோன்றித் தங்களுக்கும் இடம் தரவேண்டின. அவற்றுள், திருவல்லிக் கேணி, மதுரை, கோயம்புத்தூர் முதலிய நகரங்களிலுள்ளன முக்கிய மானவை. இவற்றின் வேண்டுகோளுக்கிணங்கிச் சட்டத்தில் இடமில் லாமலிருந்தும் சென்னைத்துரைத்தனத்தார் தங்களுடைய விசேஷ அதி காரத்தால் அவற்றைப் பதிவுசெய்துகொடுத்தனர். அது பெரிதும் விரும்பத்தக்கது. ஆனால் புதிதாக ஏற்பட்ட இந்தச்சட்டமோ எல்லாத் துறைகளிலும் கூட்டுறவுமுறையினாற் கிடைக்கக்கூடிய நன்மைகளை ஜனங்கள்பெறுவதற்குத் தூண்புரிவதாயிருக்கின்றது.

9. உலகநிலையைப் புதுப்பித்தல்.

சிலவருஷங்களுக்குமுன் மேல்நாடுகளில் நடைபெற்ற பெரியயுத்த மானது உலகத்தையே ஒருபெரிய மாறுதலுக்குள்ளாக்கிவிட்டது. உல கத்திலுள்ள பலவகுப்பினரும் வறுமைக்குள்ளாகிப் பொருளாதாரப் போராட்டத்திற்கு உள்ளாகவேண்டியதாயிற்று. இங்கிலையில் கடவுளரு ளால் இந்தக்கூட்டுறவுமுறை நமக்குக் கிடைத்திருக்கின்றது. இதனை நாம் சரியானவழியிற் பின்பற்றிப் பிறதேசத்தார் இம்முறையைக் கைக் கொண்டு எத்தகைய நன்மைகளைப் பெற்றிருக்கிறார்களோ அத்தகைய நன்மைகளை நாமும் அடையவேண்டியது மிக அவசியமானது. தனக் குத்தானே உதவிசெய்துகொள்ளக்கூடிய இந்த முறையைப் பின்பற்றி நடந்து நன்மையை அடைவது நம்மவர் ஒவ்வொருவருக்கும் உரிமை யும் கடமையுமாகும். இதுவே உலகத்தைப் புதியநிலைமைக்கு மாற்ற வல்லது.

10. கூட்டுறவு இயக்கத்தின் கருத்து.

உலகத்திலுள்ள மனிதர் அனைவரும் ஒருதன்மையினரே. இதனால் லாபநஷ்டங்களும், சுக துக்கங்களும் எல்லோர்க்கும் பொதுவாகவே இருக்கின்றன. ஆகையால், நாம் செய்யத்தொடங்கும் ஒவ்வொருகாரியத்தையும் முன்னர் நன்கு ஆராய்ந்து அது பொதுஜனங்கள் எல்லார்க்கும் நன்மையைச்செய்வதாயின் அதனைக் கைக்கொள்ளவேண்டும். ஒருவர்க்குத் தீமையைச் செய்வதாயினும் அதனை விட்டுவிடல்வேண்டும். இப்படிச் செய்ய உடன்படாதவர் இந்த இயக்கத்திற்குப் பொருந்தாதவராகார்.

11. பிரசாரவேலையின் அவசியம்.

உலகத்திலே பொதுவாக ஜனத்திரளுக்கு எவ்விததீர்மானமும் இயல்பாகவே உண்டாவதில்லை. அறிவுடையோர் எந்தவழியிற் செல்கின்றார்களோ அதனையே தாங்களும் பின்பற்றுபவர்களாய் அவர்கள் இருக்கிறார்கள். இதனால், இந்தக் கூட்டுறவுஇயக்கம் நன்கு பரவவேண்டுமானால் சாமானியஜனங்களிடத்தில் இதன் நன்மையையும் அவசியத்தையும்பற்றிப் பலமாகப் பிரசாரவேலை செய்யவேண்டியதும், ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவுக்காரர்களைக் கண்டுபிடிப்பதும், அத்தகையினர் இல்லாவிட்டால் அவர்களை அறிவுள்ளவர்களாக்கித் திருத்துவதும் கூட்டுறவுக்காரருடைபகடமைபாகும். இதன் அவசியத்தை நன்குணர்ந்தே ராஜாடேல் வழிகாட்டிகள் லாபத்தில் நூற்றுக்கு இரண்டரைப்பங்கை இவ்விஷயத்திற் செலவுசெய்துவருகிறார்கள். இத்தமுறையை நமது ராஜதானிக்குக் கொண்டுவந்தவர்கள் துரைத்தனத்தார்களாகையினால் அவர்கள் இந்த இயக்கத்தின்வளர்ச்சிக்குத் துணைசெய்யும்பொருட்டு இத்தகைய பிரசாரவேலைசெய்ய உதவிபுரிவதும் விரும்பத்தக்கதாம். ஜர்மனியில் இத்தகைய உதவியைத் துரைத்தனத்தார் செய்துவருகின்றனர். இங்ஙனம் செய்து பொதுஜனங்களின் அறிவை வளர்த்துக்கொள்ளாமல் மேலும் மேலும் புதிதுபுதிதாகச் சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு போதல் ரோமாபுரிபற்றி வண்டித்தொடரை ஓட்டுவதுபோலாகும்.

12. தலைவர்களின் அவசியம்.

இந்த இயக்கம் சம்பந்தமாக என்மனத்தேதோன்றியவற்றைக் கூறிவிட்டேன். எனினும் ஒருவிஷயம். எந்தக்காரியமும் தலைவன் இன்றி

அநுபந்தம்.

1914-ல்.

உலகிலுள்ள பண்டகசாலை (வ்ஸ்டோர்)களின் விவரம்.

எண்.	தேசம்.	பண்டகசாலைகளின் எண்.	மெம்பர்களின் தொகை. ஆயிரக் கணக்கு.	ஐரோப்பாவுக்கு வெளியில் அமைந்திருப்பவைகளின் எண்.	விற்பனைத் தொகை இலக்கங்களாக.
1	ஆங்கிலத்தீவுகள்	1385	3054	264	13062
2	ஜெர்மனி	2375	2000	121	4156
3	ரஷ்யா	13000	1500	34	4750
4	பிரான்ஸ்	3261	881	90	1905
5	ஆஸ்டிரியா	1471	500	70	1068
6	இட்டலி	2283	450	51	1009
7	ஸ்விட்ஸர்லண்ட்	396	276	290	854
8	டென்மார்க்	1560	250	350	890
9	ஹங்கரி	1750	200	40	475
10	பெல்ஜியம்	205	170	90	285
11	ஸ்வீடன்	608	153	108	362
12	ஹாலண்ட்	135	108	72	154
13	பின்லண்ட்	512	100	120	374
14	போலண்ட்	950	96	33	249
15	ஸ்பெயின்	200	40	30	95
16	நார்வே	172	39	42	136
17	இந்தியா	443	....	....	...

நன்கு நிறைவேறமுடியாது. சேனாதிபதியின்றிச் சைனியம் நடைபெற முடியாதல்லவா? ஆதலின் நாம் எல்லோரும் ஒன்றுகூடி நமது இயக்கம் நற்பயனையளிப்பதற்குத் துணைசெய்யக்கூடிய தலைவர்களைக் கண்டுபிடித்தல்வேண்டும். அவர்கள் பரிசுத்தமனமுள்ளவர்களாகவும், உடல், பொருள், ஆவி என்ற மூன்றுவகையாலும் உள்ளன்போடு பொதுஜனங்களுக்குப் பாடுபடக்கூடியவர்களாகவும், நமதுகொள்கையை இனிது பரப்புவதற்குத்தக்க பேச்சுவன்மையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டியது மிகவும் அவசியமானது. நமது கூட்டுறவுஇயக்கம் செழித்தோங்கி உலகத்திற்குப் பெரிதும் நன்மையைச்செய்ய நாமெல்லோரும். ஒருமன தாய்க் கடவுளை வணங்கி இடைவிடாது முயலுவோமாக.

"உலகம் வேண்டுவ தொன்றே யாகும்;
என்னெனிற் கேளீர்; இயம்புவன்; அதுதான்;
அறிவும் ஒழுங்கும் அன்றே; யார்க்கும்
அன்னம் முதலாத் துன்னிய பலவுங்
கொடுத்துத வுவதாங் கொள்கையு மன்றே;
எதனையும் அழியா தெழுதும் சீரிய
கைவன் மையும் அன்றே; மெய்யோடு
உறுதியாய் உழைத்தலில் உள்ளம்
தளரா தகமஆண் தன்மைசேர் மக்களே."

சுபம்.

அன்பு.

எங்கட்கினியரென்றெண்ணப்பட்டவர்
தங்கள்மேல்விருப்பம்தாமேநிகழும்
எங்கட்கியாரிடம்இச்சைநிகழுமோ
அவரிட்டத்தேயெமக்கன்புநிகழும்
விரும்பப்பட்டவர்மேலேநிகழும்
உள்ளநெகிழ்ச்சியேயோதுமன்பாகுட்

தந்தைதாய்மனைவிதனபாதியோர்
நங்கட்கினியராய்நவிலுவோமானால்
நீரிற்குமிழிபோல்நிலையிலாவுடம்பு
நீங்கவேதொடர்ப்பம்நீங்கியொழியும்
உடம்புத்தொடர்ச்சியுள்ளகாலத்தும்
தீவினைப்பயன்முன்சேர்ந்தனுபவிக்க
உறவும்பகையாயுற்றுநீங்குவரே
நல்வினைப்பயனாமனுபவிக்கப்
பகைவரும்உறவாய்ப்படருவாரன்றே?
தம்பயன்கருதியேதாமிதஞ்செய்வர்
ஆதலாலொருவரும்அன்பினரன்றே
நம்முயிர்க்கினியவர்நாமேயென்னில்
கேவலதசையில்கிளராணவத்தால்
அறிவுக்தொழிலும்அணுத்துணையேனும்
விளக்கமுறுதுவிரிசகலத்திலோ
சிற்றறிவாதியற்செய்வினையோரா
தின்பதுன்பமியல்பெலாமுணர்ந்து
தன்பம்நீக்கிச்சுகமனுபவிக்கும்
ஆற்றலிலாமையாலன்பும்பொய்யே

ஆதலால்,

அநாதிகேவலத்தில்ஆணவமலத்தில்
உணர்வுமுதலாம்ஒன்றுமின்றிக்
கிடந்தஆன்மாக்களைக்கிருபைமேலீட்டால்
எடுத்ததன்கன்மமியல்புக்கேற்பத்
தனுகரணதிரைத்தந்துபக்குவம்
வருதற்பொருட்டேவளர்சகலத்தினில்
பலதரம்விட்டுப்பாகமாகும்
இருவினைபொப்புமலபரிபாகம்
எய்தியபின்னர்எழிற்குருவாகித்
தீட்சையாற்சஞ்சிதந்தன்னைத்தீய்த்தே
யாகாமியம்அணுகாவகையருளி
ஆன்மாவுடனேஅபேதமாய்நின்றே

உடலொடுபிராரத்வத்தையும்போக்கிப்
பேரின்பமுத்திப்பேற்றினைநல்கும்
எம்பெருமானேயெமக்கினியவனும்
இக்கருத்ததனால்"என்னில்யாரும்
எனக்கினியாரிலையென்னிலுமினியவன்
ஒருவனுளனென்"றுரைத்தனர்மேலோர்
ஆகையால்அவரிடத்தன்புசெலுத்துக
அன்பும்பத்தியும்அதற்பொருளாம்
குடத்துவிளக்கும்தடத்துவாளும்போல்
காட்டக்காணும்காரியமன்றே
அன்பின்செயலாலனுமித்தறியலாம்
சிவபெருமான்றன்றிருவிளையாடலை
நினைக்கவுங்கேட்கவுங்நோய்க்கானவும்
நேர்ந்தபொழுதெலாம்நிலைதடுமாறலும்
ஆடலும்பாடலும்அருவிசொரிதலும்
மெய்ம்மயிர்சிலிர்த்தலும்விதிர்விதிர்ப்பெய்தலும்
ஆகியஇவையெலாம்அன்படையாளமாம்
இவ்வன்புடையரேயெய்துவர்சிவனை
யிவ்வன்பிலாதாரெய்தவேமாட்டார்
நெக்குநெக்குருகிநினைப்பவர்நெஞ்சுளே
புக்குநிற்குப்புண்ணியனென்றனர்
என்பேறிறகாஇறைச்சியையறுத்துப்
பொன்போற்கனலிற்பொரியவறுப்பினும்
அன்போடுருகியகண்குழைவார்க்கலால்
என்பொன்மணியையெய்துதலரிதாம்
பற்பலபிறப்பிற்டயன்குறியாது
செயும்புண்ணியத்தாற்றிகழுமிவ்வன்பே
அன்பின்முதிர்ச்சியில்அரனார்விளங்குவர்
முதலிடைகடையெனமூவகையன்பாம்
நாயகன்நாமம்நாயகிகேட்கவும்
தன்வசமழிதல்தலையன்பாகும்
கணவனைக்காணவுங்கூடவுங்கைதல்

இடைகடையன்பென்றிசைத்தனர்மேலோர்
மந்தபக்தியும்மந்ததரமும்
தீவிரபக்தியும்அதிதீவிரமும்
பக்திநால்வகையாய்ப்பகர்ந்தனர்மேலோர்
குடும்பித்தேவரைக்கும்பிடலாமென
நாணன்கவிலநாகன்குமாரன்
தன்வசமழிந்ததுதலையன்பன்றே?
காளத்திநாதர்கடைக்கணைக்கெப்தலும்
அன்பேயுருவமாய்அப்பனைத்தழுவி
மூவகையன்புமுறுகிவளர
இரும்புபொன்னுகியவற்றம்போலச்
சிவச்செயல்போய்ச்சிவச்செயலாகி
ஆறுதினங்களிலானடியடைந்த
கண்ணப்பன்பைக்கழறவும்போமோ
வரகுணரன்பைவழுத்தவும்போமோ
மானிடர்நிற்கமற்றுளபிராணியில்
ஈயும்எறும்புப்புலியும்இபமும்
நாகமும்குரங்கும்நன்றுகொள்பசுவும்
காகமுங்கழுகுங்கானகமயிலும்
நாரையுமணிலும்நவிலுஞ்சிலந்தியும்
அன்பினுலேயரனையர்ச்சித்துப்
பேரருள்பெற்றபெருமையெல்லாம்
அதனதன்பெயரால்அமைந்ததலங்களே
இன்றும்சான்றுயிலகுறுமன்றே?
ஆதலாற்சிவனிடத்தன்பைச்செலுத்திச்
சிவச்செயலெலாம்சிவச்செயலாகப்
பேரின்பமுத்திப்பேற்றினையடைந்து
உய்குதும்உய்குதும்உய்குதும்யாமே.

ஜி. சதாசிவம்பிள்ளை.
நாஷனல் ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர்
நாகபட்டணம்.

கூ

கணபதிதுணை.

அன்பு.*

அன்பு:—ஒருவர்பாலொருவர்வைக்கும் பற்று.—இதற்குப் பரிவு, நார், வாரம் முதலாய பெயர் நிகண்டிற் கூறப்படும். இவ்வன்பு, இல்லறத்தார்க்குந் துறவறத்தார்க்கும் வேண்டும்.

"அருளென்னு மன்பீன்குழவி" என்றதற்கு அன்பினுலீனப் பட்ட அருளென்னுங்குழவி என வுரை கூறினமையால், அன்பினுலே அருளுண்டாமென் றறிக.

உயிரானது உடம்போடியைந்தல்லது அன்பு செய்யலாகாமையின் அவ்வன்புசெய்தற்பொருட்டு உடம்போடுண்டாகிய தொடர்ச்சி உயிர்க்குளதாயிற்று என்பது விளங்க "அன்போடியைந்தவழக்கென்ப வாருயிர்க்—கென்போடியைந்ததொடர்பு" என்றார் திருக்குறளில். இனி, இராமாயணத்திலும்,

"என்பென்பதிபாக்கையென்பதுயிரென்பதிவைகளெல்லாம்
பின்பென்பவல்லலேவனுத்தம்முடைநிலையிற்பேரா
முன்பென்பவுளவென்றுமுழுவதுந்தெரிக்தவாற்று
லன்பென்பதொன்றின்றன்மையமரருமறிந்ததன்றுல்"

எனக் கூறுதல் காண்க.

இனி, அன்பில்லாரையும், அன்புடையாரையுங் கூறுங்கால், "அன்பிலரெல்லாந்தமக்குரியரன்புடையா—ரென்புமுரியர்பிறர்க்கு" என்றார் திருக்குறளில்; தமக்குரியர்என்பதற்கு "எல்லாப்பொருளானுந் தமக்கேயுரியர்" என்றும், "என்பு முரியர்பிறர்க்கு" என்பதற்கு "அவற்றுனேயன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர்" என்றும் பொருள்படக் கூறினர்; என்புமுரியார் கிபி, தகிசி முதலாயினோ ரென வறிக.

---

* இது, தேவகோட்டை, பெரியமனைர் ஸ்ரீமான்-இராமநாதச்செட்டியார் அவர்கள் வேண்டுகோளின்படி திருக்கோயிலிற்செய்த உபந்யாசத்தைச் சுருக்கியெழுதப்பட்டது.

இஃ திங்ஙனமாக, சிவஞானசித்தியாரில், "ஈசனுக்கன்பில்லா ரடியவர்க்கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார்தமக்குமன்பில்லார்" எனக் கூறலால், அன்பிலரெல்லாந் தமக்குரியர் என்பதற்கு மாறு படுமோவெனில், மாறுபடுதலில்லை; திருக்குறளிலே தமக்கு என்றது உடம்புக்கு எனவும், சித்தியாரில், தமக்கு என்றது உயிர்க்கு எனவும் பொருள்படுதலா லென்க. ஈசனுக்கன்பில்லா ரடியவர்க்கன்பில்லார் என்பதற்கு, காமுகனொருவன் ஓர் வனிதையிடத் தன்புடையானென் பது அவள் சுற்றத்தாரைக் கண்டாலுண்டாகு மன்பினளவுபற்றியே தெளியப்படும். அடியவர்க் கன்பில்லார் ஈசனுக் கன்புடையராமோ முகுதல் நாடகமாத்திரையேயன்றிப் பிறிதில்லையென்க.

"எவரேனுமொருத்திசா தனங்கண்டாலெதிர்வணங்கி
யவரோடும்பிறப்பறுக்கவடிவெடுத்தகரனென்று
கவராதவன்புள்ளங்கசிந்துருகியருச்சித்துச்
சுவையாறின்னமுதருத்தியெஞ்சியவின்சுவைதெரிவான்"

"சிவனடியார்க்கன்பிலரச்சிந்தையேயிருப்பேவல்செய்துநாளு
மவனடியாரிடத்தெதாழுகாவாக்கையேமருஞ்செவிகண்ணிரண்டும்
பவனடியாரிடைச்செலுத்தாப்படிவம்மேபாவைமறைபரவுஞ்சைவ
தவநெறியல்லாநெறியேபவநெறியென்றளியளாய்த்தளர்வாள்பின்னும்"

என்றும், இளையான்குடிமாறநாயனார் புராணத்தில்,

"ஆர மென்பு பூண்ந்த வையர்த மன்ப ரென்பதோர் தன்மையா
னேர வந்தவர் யாவ ராயினு நித்த மெய்திய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்
தீர நன்மது ரப்பதம்பரி வெய்த மூன்றுரை செய்தபின்"

"கொண்டுவந்துமணிப்புகுத்துகுலாவுபாதம்விளக்கியே
மண்டுகாதலினுதனத்திடைவைத்தருச்சனைசெய்தபி
னுண்டிநாளுவிதத்திலாறுசுவைத்திறத்தினிலொப்பிலா
வண்டர்நாயகர்தொண்டனிச்சையிலமுதுசெய்யவளித்தளார்"

என்றும், பிறவுங் கூறலா லன்புடைமை தெளியப்படு மென்க. "எவ்வுயிர்க்குமன்பில்லார்" என்பதற்கு - எவ்வுயிர்க்கண்ணு முளனு கிய ஈசனிடத் தன்புடையார்க்கே அத் தொடர்புபற்றி அன்புடைய ராதல் கூடுமென்க, தமக்கு மன்பில்லார் என்பதற்கு-இவ்விடங்களிலே

அன்பில்லாதார் தம்முயிர்க் கூறுதிசெய்துகொள்ளுபவ ரல்லரென்க. எதிர்மறைமுகத்தா லன்புடையார்பெருமை கூறியவாறு காண்க. ஆகலால், அன்பினைப்பார்க்கினு முயர்வுடையதொன்றில்லை; இதனை, இராமாயணத்தில்,

"என்புதோ லுடையார்க்குயிலார்க்குந்தம்
வன்பகைப்புலன்மாசறமாய்ப்பதென்
முன்புபின்பின்றிம்மூவுலகத்தினு
மன்பினல்லதோராக்கமுண்டாகுமோ"

எனக் கூறுதல் காண்க.

இவ் வன்பு, தலைபாயார்மாட்டும், இடையாயார்மாட்டும், கடையாயார்மாட்டுஞ் செய்யப்படுமென்க.

தலையாயார்மாட்டுச் செய்யுமன்பின் மேலாயினது சிவபிரான்மாட்டுச் செய்யு மன்பென்க.

எத்துணைத் தவமுதலாயினசெய்யினும் அன்பில்லாவழிச் சிவபிரானை யடையமுடியாதென்பதனை,

"என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழைவார்க்கன்றி
யென்பொன் மணிபிடி யெய்தவொண் ணாதே"

எனத் திருமந்திரத்திற் கூறியதனுற் காண்க.

அன்பிலார்செய்யும் பூசைமுதலியனவற்றைச் சிவபிரான் றிருவுளமகிழ்ந்துகொள்ளா ரென்பதனை,

"ஆசறுமனத்தெழுமன்பையன்றியே
பூசனையுவக்கிலன்புராரிசென்னிமேல்
வீசுறுதிரையினுகிக்கவோசொலா
பூசல்செய்மனமுடையொருவனுட்டுநீர்"

என்பதனுற் காண்க. "பொக்கமுடைபார்செய்யும்பூசைதவங்கண்டு நகும்புராணபோற்றி" என்பதனையு மறிக.

இனி, மெய்யன்புடையாரியல்புகூறுங்கால்,

"எனைத்துயிர்க்குமுதியிகபரமென்பவனைகொடுப்பானெல்லாந்தானு
யினைத்துயிர்க்குமுயிராகுமரனென்பவனறிவார்க்கங்கம்வாக்கு
மனத்துறுமெய்ப்பத்திவழிவருமென்பவப்பத்திவழிநிற்பார்க்கு
வினைத்துயர்நீர்த்திடலெடுத்தவடிவென்பத்வனடியார்வேடமன்றே"

என அடியார்வேடத்தைச் சிந்தைசெய்து,

"ஈசருக்கே யன்பானூர் யாவரையுந் தாங்கண்டாற்
கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனமகிழ்வுற்
றூசையினு லாவின்பின் கன்றணைந்தாற் போலணைந்து
பேசுவன பணிந்தமொழி யினியனவே பேசுவார்"

"யாதானு மிவ்வுடம்பாற் செய்வினைக ளேறுயர்த்தார்
பாதாரவிந்தத்தின் பாலா வெனும்பரிவாற்
காதார்வெண் குழைபவர்க்காம் பணிசெய்வார் கருக்குழியிற்
போதார்க ளவர்புகழ்க்குப் புவனமெலாம் போதாவால்"

("புவனமெலாம் போதாவால்" என்பதற்கு இடம் போதாவென்றும், விலைபோதாவென்றுங் கூறுவர். பணி - திருமெழுக்கு முதலாயின.)

"ஈசனையே பணிந்தருகி யின்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
பாசிலா நிறழித்தங் கருளிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே யுடல்கம்பித் திடுவார்மெய்க் குணமிக்கார்."

"நின்றாலு மிருந்தாலு நிலந்தோய்ந்தாலு நடந்தாலு
மென்றாலுந் துயின்றாலு மெய்விழித்தாலு மைதந்தாலு
மன்றுடமலர்ப்பாதமொருகாலுமறவாமைக்
குன்றாதகுணமுடையார்தொண்டராங்குணமிக்கார்"

எனப் பெரியபுராணத்திற் கூறியவாறும், பிறவுங் காண்க.

எல்லாவற்றையும்விடுத்து, இவ் வன்பேவேண்டுமென்று பெரியோர்பலருங் கூறுவர்.

"உத்திவாளராமுடித்தபால்வண்ணனேயுனது
பத்திவேண்டுவதன்றியேந்ரகிடைப்படினு
முத்திவேண்டிலேன்றுறக்கமும்வேண்டிலேன்முனிவர்
சித்திவேண்டிலேன்வேண்டிலேன்றிசாதிபர்சிறப்பே"

"இறவாதவின்பவன்புவேண்டுப்பின்வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டுமீண்டுப்பிறப்புண்டேலுன்னையென்று
மறவாமைவேண்டுமின்னுமவண்டுநாமகிழ்ந்தபாடி
யறவாரியோடுமேபோதுன்னடியின்கீழிருக்கவென்றார்" என்றும்,

"புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டும்"

"பூதம்யாவுநிலையிற்பலங்கினு
மாதார்பாகர்மலர்த்தாண்மறப்பிலா
ரோதுகாதலுறைப்பினெரிகின்றார்
கோதிலாதகுணப்பெருங்குன்றனார்" என்றும்,

(காதலுறைப்பென்பதற்குப் பத்திவைராக்கியமென்க.)

"கேடுமாக்கமுங்கெட்டதிருவினு
ரோடுஞ்செம்பொனுமொக்கவேநோக்குவார்
கூடுமன்பினிற்கும்பிடலேயன்றி
வீடும்வேண்டார்விறலின்விளங்கினார்"

என்றும் பிறவுங் கூறுதல் காண்க.

இனி, 'அன்பேசிவமா' மென்பதற்குத் திருமந்திரத்தில், "அன்பு சிவமிரண்டென்பாரறிவிலார்" என்றும், திருவாசகத்தில், "அன்பினில் விளைந்தவாரமுதே" என்றும் கூறுதல் காண்க

பத்தரெனினும், அன்பரெனினும் பொருளொன்றேயென்பதும், சிவபிரானும் அவ்வன்பருக்கன்பராய் வேண்டியவாறருள்வாரென்பதும் "பத்தர்மொழிப்பகுதிசேவையினைக்கூறும்பரிசாலிசன்-பத்தரவர்கினிபசவனெனபாதலின்" எனக்காஞ்சிப்புராணத்திலும், "வேண்டுவார்வேண்டியதேயீவான்கண்டாய்" எனத் தேவாரத்தும்,

"அடியார்க்கெளியன்சிற்றம்பலவன்கொற்றங்
குடியார்க்கெழுதிபகைச்சீட்டுப்-படியின்மிசைப்
பெத்தான்சாம்பானையின்றுபேதமறத்தீக்கைசெய்து
முத்தியிலேசேர்க்கைமுறை"

என நடராசமூர்த்தி கூறியருளிய வெண்பாவிலும், "அன்புக்கெளிய னருள்" எனத் திருவிளையாடற் புராணத்திலும், பிறவற்றிலும் கூறுதல் காண்க.

அன்பர் எதுசெய்யினுஞ் சிவபிரான் மகிழ்ந்தருள்வார் என்பதனை,

"அடையாளம்படவொருவனடித்தகொடுஞ்சிலைத்தழும்புந்
தொடையாகவொருதொண்டன்றொடுத்தெறிந்தகல்லும்போற்
கடையானேன்வெகுண்டடித்தகைப்பிரம்புமுலகமெலா
முடையானேபொறுத்தீதாவுன்னமைத்திருமேனி"

எனத் திருவிளையாடற்புராணத்திலும்,

"அடிக ணேவச்சென் றுளென விறகுமண் சுமந்து
மடி பொறுத்துமோ ரிவைதூ தாற்றியும் வெள்கா
தடிய ரெண்ணமே முடிப்பது விரதமாக் கொண்ட
வடிகள் வாகையிக் கண்ணனுக் களித்தது வியப்பே"

எனக் காஞ்சிப்புராணத்திலும், "புத்திவலையிற்படுவோன்காண்க" எனத் திருவாசகத்திலும், பிறவற்றிலும் கூறுதல் காண்க.

இனி, அன்பினையுஞ் சிவபிரானருளினையுஞ் சீர்தூக்கிநோக்கில், அன்பே மேலானது என்னுங் கருத்தமையச் சேக்கிழார்நாயனார், அமர்நீதிநாயனார் புராணத்தில்,

"மூட்டிலன்பர்தமன்பிடித்தட்டுக்குமுதல்வர்
மட்டுநின்றதட்டருளொடுந்தாழ்வுமம்மழுக்காற்
பட்டொடுந்துகிலேகதோடிகளிடப்பத்தர்
தட்டுமேற்படத்தாழ்ந்ததுகோவணத்தட்டு"

எனக் கூறியருளினர். அன்புக்கியல்பு மேன்மேலுயர்தலும், அருளுக் கியல்பு தாழ்ந்து பதிதலுமுடைமையால் இவ்வாறு கூறினரென்க. இன்னுஞ் "சத்திநிபாதத்துத்தர்" என்பதிலே, சத்திநிபாதம் என்பதற்குச் சத்தி - அருள். பாதம் - பதிதல். நி - உபசருக்கம் என்பதனையு மறிக.

உலகிலான்மாக்கள்செய்கின்ற நித்திய நைமித்திக காமியக்கட் குப் பயனுதவிக் கதியருளுமாறு மூர்த்தி தலந் தீர்த்தமாயுங் குருவா யுஞ் சங்கமமாயு மெழுந்தருளியிருப்பதனை விவ்விடங்களிலே அன்பு

செய்யவேண்டும். "அரிலறுத்தகைமித்திகாமியமாம்வினைக்குக் - காரணமூர்த்திதலந்தீர்த்தமாயமர்காமணியே" என்றார் பஞ்சாக்கரதேசிகமூர்த்தியக்காதியிலும். இன்னுஞ் சிவஞானசித்தியாரில்,

"திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யுருக்கோலி மந்திரத்தா லெனநின்னை யுமவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெளிதோன்
மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பர்க்கே"

எனக் கூறுதல்காண்க.

சிவனெனவேகண்டவர் - பருத்துணர்தலின்றிச் சிவலிங்க முதலிய திருமேனியே சிவனெனக்கண்டு வழிபடுஞ்சரியையாளர்; இவர்க்கு ஆண்டு வெளிப்படாதகின் றருள்செய்வன் என்க. உருக்கோலிமந்திரத்தா லெனநின்னையுமவர்—அருவப்பொருளாகிய சிவன் ஈசானாதி மந்திரங்களாற் சிவலிங்கமுதலிய திருவுருக்கொண்டானெனக் கருதி மந்திரநியாசத்தால்வழிபடுங் கிரியையாளர்; உளனெங்குமிலனிங்குமுளனென்பார் யோகிளுள்ளமெங்கு மில்லமாகவாழுகின்ற சிவன் இத்திருமேனியிலு மிருந்து பூசைகொண்டருள்வானெனக் கருதிச் சாத்திய மந்திரங்களால் வழிபடும்யோகிகள்; என்க. கடைந்தவழி விறகிற் றோன்றுமெரியும், கறந்தவழித்தோன்றும் பாலும் போல அவ்வம் மந்திரங்களால் அவரவர் விரும்பியவடிவாய் அத்திருமேனியி லப்போதப்போது தோன்றிநின் றருள்செய்வ னென்க. இதனை,

"பிறகிற்பீயினன் பாலிற்படுநெய்போன்
மறையகின் றுளன்மாமலரிச்சோதியா
னுறவுகோனட்டுணர்வுகயிற்பினன்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே"

எனத் தேவாரத்திலுங் கூறியிருத்தல் காண்க. அன்பர்க்கு-அவர்போ லேகதேசமாய்க் குறித்தலின்றி அன்புமாத்திரையா னுண்டவழி

டடு ஞாலிகட்கு என்க. மிதஞ்சரபிக் கெங்கு முருக்காணவொண் ணுகபான்முகிப்பால்லிம்மி யெ முகுவதுபோல் வெளிப்பட்டருளு வன்–கன்றைநிலைந்த புலிற்றுனின்முகிபோலக் கருணைமிகுதிபால் அவ்வன்பே தானுப் எப்போதும் ஆண்டுவெளிப்பட்டுநின் றருள்செய் வன்; ஆதலா லஃதறிந்து வழிபடுக; என்ப தெச்சம். இதனுற் சிவலிங்கமுலிய திருமேனிகளெல்லாஞ் சரியைமுதலிய நான்குவகை யாளர்க்கும் வழிபடுமிடமாயிற் றென்க.

இனி உலகுடுத்திவாழுமியல்பிற் சிலயுழைப்போர்க்கு எவ் வா றன்டுசெய்யமுடியுமென்றுல், " கள்ளக்காதலனிடத்தன்பு கலந்து வைத்தொழுகு, முள்ளக்காரிகை " என மொழுகியிருந்த வாதவூ ரடிகள்போல அவ்வுழைப்போர் அகத்திலென்று மறவாதிருத்தல் வேண்டுமென்க.

இவ்வன்பை இருவகையாகக் காஞ்சிப்புராணத்தில்,

"தத்தலொண்டிரைவேலோஞ்சிடற்றடக்கியதபிரான்
பத்திமார்க்கமிவ்வுலகுறுபற்றுமுதுபரசமீர்
புத்திகல்குகொன்றிரண்டுபூரணப்பொருளோடுலா
முத்திகல்குகொன்றிரண்டுவண்முன்னியாபியபத்திதால்"

(புத்தி-போகம்.)

"சார்புபற்றியுதிக்குமற்றையதொன்றுசாத்திபதித்தமெய்ச்
சார்பினைத்தம்மிரண்டுமுத்திதழைக்குமாயினும்வெவ்வினைச்
சார்பினேர்பெறுசார்புபற்றியபத்திதானிடைனினருஞ்
சார்பிலாதெழுமுணைமையன்புணைப்புறுதெவர்க்குமே"

(சத்திபதிதல்-அருள்பதிதல்)

"செய்த செய்வன வாவு நீகின யாவு யிங்கெ பத்தர்பா
லெய்தி டாமை வதிந்கேக்கமு வத்தி னென்றறி யின்னோ
வைது காயம் விழைத்த டுத்தியுதல்ல நத்தறை யாப்பெறி
னேத மாதிது யத்தி யேத முணர்ந்து னோர்வில் கிற்பதே"

எனக் கூறியிருக்கின்றுர்.

இவ்வுண்மையன்பையுடையராய்ச் சிவகுடையடுத்த நாயன்மா ரனேகர் முளர்; அவருள்ளே கண்ணப்பநாயனுரையும் வாதவூரடி

கனையும்பற்றி யிங்கே பேசத்தொடங்கினேன்; இவ்வாசகர்கள் பிணைக்கூறுங்கால், இவர் திருவாசகப்பாடலேயோதினர் கருங்கன் மனமுடையரேனும் அம்மன முடைந்துருகி யன்பராகுவர்; இவ் வாறு கால்வர்கான்மணிமாலையில்,

"விளங்கிழைபங்கிற்கமெய்புடைமுக்கட்
காரணனுரையெனுமாரணமொழியோ
வாதிசிற்பரவும்வாகவூரண்ணல்
மலர்வாய்ப்பிறக்தவாசகத்தேதேறு
யாதோதெறக்தகென்குவீராயின்
வேதமோதின்விழிகீர்பெருகி
நெஞ்சுகெக்குருகிற்பவர்க்காண்கிலக்
திருவாசகமிங்கொருகாலோதிற்
கருங்கன்மனமுங்கரைந்துக்கண்க
டொடுமெய்ந்கேணியிற்சுரந்துநீர்பாய
மெய்ம்மயிர்பொடிப்பவிதிர்விதிர்ப்பெய்தி
யன்பராகுவரனறி
மன்பதையுலகின்மற்றைபரிலரே"

என்னும் மகவலிற் கூறியிருக்கின்றார். இவரன்பிற்சிறக்தபாடலைக் கேட் டுவக்கும்பொருட்டுச்சிவபிரானும் மிகவரியபணிகளைச் செய்திருக்கின் றார்; ஏனைய வடியாரெல்லா மன்பி லரியபணிகளைச்செய்து சிவபிரா னருளை யடைந்திருக்கின்றார்கள்; இக்கருத்தமைய அக் நால்வர்நான் மணிமாலையில்,

"கடனிறவண்ணல்கண்ணென்றிடக்து
மறைச்சிலம்பரற்றுமலாடிக்கணியப்
பரிதிகொடுத்தசருதிநாயகற்கு
முடிவிளக்கெரித்துங்கடிமலர்க்கோதைச்
சுரிகுழற்கருங்கட்டுணைவியையளித்து
மருமகணும்பூங்கருமயிருதவியு
நென்முனைவாரியின்னமுதருத்தியுங்
கோவணைநேர்தகுனிறுத்தக்கொடுத்து
முகப்படிமணிமீனாற்கெனவிடுத்தும்

பூட்டிபரிவாலூட்டியரிந்துக்
கலியுடைபொலிக்குஞ்சிலையிடைமோதியு
மொய்ம்மலர்க்கோதைதைகம்மலர்தூணித்துங்
தந்தையத்தடிந்தூனைந்தினக்கொன்றும்
குற்றஞ்செய்தசுற்றங்களேந்தும்
பூக்கொளுமாதர்மூக்கினையறிந்து
மிளமுலைமாதர்வளையாதறந்தும்
பண்டைநாளொருசிலர்தொண்டராயினர்
செங்கண்மாறடக்கையிற்சங்கநாண்
முட்டாட்டாமரைமுறுக்கவிழ்மலர்மேல்
வலம்புரிகிடக்குவாதவூரன்ப
பாடியபணிகூடியபொருடு
மதுரைமாநகரிற்குதிரைமாறியும்
விண்புகழ்முடிமிசைமண்பொறைசுமந்து
நீற்றெழின்மேனியின்மாற்றடிபட்டு
நின்னைதொண்டனென்னக்கொண்டன
னிருக்குமடிக்கலரக்கனெடுப்ப
முலைபொரவரைபொருமொய்ப்பின்
மலைமகடழுவமனமகிழ்வோனே"

எனக் கூறியிருக்கின்றார். இவரது அரியபெரியவன்பிற் சிறிதுவேண்டு மென்று இவரை வேண்டுகின்றதாக, அந்நூலில்,

"வேண்டினின்னடியார்மெய்யன்பெனக்கு
மருள்செய்சிவனேயலந்தேனந்தோ
மூறையோமுறையோவிறையோனேயென்
றழுதுசெம்பொனம்பலக்கூத்த
னருளாற்பெற்றவன்பினிலொருசிறி
தடியனேற்குமருளல்வேண்டு
நீயேகோடனின்னருட்பெருக்கிற்
கேற்றதன்றிளவேறுகந்தேதறியைப்
பரிமாமிசைவரப்பண்ணியவித்தக

திருந்தியவேதசிரப்பொருண்முழுதும்
பெருந்துறையிடத்துப்பெருஞ்சீர்க்
குருந்துமீழலிற்கொள்ளுகொள்வோயே"

எனக் கூறியிருக்கின்றார். திருவிளையாடலில்,

"எழுதருமறைகடேருவிறவனையெல்லிற்கங்குற்
பொழுதறுகாலத்தென்றும்பூசனைவிடாதுசெய்து
தொழுதகைதலேமேலறத்துளும்புகண்ணீருண்மூழ்கி
யழுதடியடைந்தவன்பனடியவர்க்கன்புசெய்வாம்"

எனவே கூறினர். இவர் பாண்டியனுக்கு மந்திரியாயிருக்கும் காலத்தில், "பத்திசெய்தானருட்பெறும்பத்தருக்கன்றி, முத்தியெய்தரிது" என்றுட்கொண்டு, அதற்குரிய ஞானாசாரியனைப்பொழுது வருவான் என்று தீர்விடாயுற்றவன் நீரைத்தேடுவதுபோலத் தேடியிருந்தார்; பின்னர் அரசன்பொருட்டுப் பரிவாங்கச்சென்றவர் பெருந்துறையடைந்து சிவபிரான் குருவடிவாகிக் குருந்தடியிலெழுந்தருளியிருக்கக்கண்டு தெரிசித்துபதேசமபெற்று,

"பார்த்த பார்வையா லிரும்புண்ட நீரெனப் பருகுந்
தீர்த்தன் றன்னையுங் குருமொழி செய்ததுந் தம்மைப்
போர்த்த பாசமுந் தம்மையு மறத்துமெய்ப் போத
மூர்த்தி யாயொன்று மறிந்திலர் வாதவூர் முனிவர்"

என்றபடியிருந்து பின்பு குதிரைவரவில்லையெனக் கண்டித்த அரசற்கஞ்சி அவர் முதலானவரை நோக்கி,

"சுற்றமுந்தொடர்புந்தேசுந்துன்பமுமின்பமுமற்றேம்
வெற்றுடன்மானந்தீர்ந்தேதம்மெய்யுறுக்கைமேல்வெறுக்கைவைத்தேஞ்
செற்றமுஞ்செருக்குஞ்சாய்த்தேந்தீவினையிரண்டுந்தீர்ந்தேஞ்
சுற்றுவார்சடையான்கோலந்காட்டியாட்கொண்டவன்றே"

"தந்தைதாய்குருவனுசன்றங்கனிராசைபெண்டிர்
மைந்தர்பல்லுயிருஞ்சுற்றமாசிலாவீசனன்ப
ரந்தமில்பிறவியேழுபடுகையென்பதோர்ந்தே
மெந்தையார்கருணைகாட்டியெம்மையாட்கொண்டவன்றே"

"ஊரெல்லாமட்டசோறுபம்பதையுவரிசூழ்ந்த
பாரெலாம்பாயதுன்னற்கோவணைபரிக்குமாலட
சீரொளிறந்தசார்ந்தெய்வநீறணிபூண்கண்டி
நீரெலாம்பொலிந்தவேணிநிருத்தனடகொண்டவன்றே"

எனவுங்கூறினர். பின்பு தம்மைத் தண்டஞ்செய்த அரசனடி பணிந்து பொறுத்தருளவண்டினபோது,

"உம்மைமா னடுத்த நீரா லுலகியல் வேத நீதி
செம்மையா லிரண்டு கண்ணுஞ் தெளிந்தது தெளிந்த நீரான்
மெய்ம்மையாஞ் சித்த சுத்தி விளைந்தது விளைந்த நீரார்
பொய்ம்மலம்வா னவரி னீங்கிப் போந்தது சிவன்பாற் பத்தி"

"வந்தபத் தியாலே மாயையின் வருத்தி யான
பந்தமாம் பவஞ்ச வாழ்க்கை விளைவினுட் பட்ட துன்பம்
வெந்தது கருணை யாகி மெய்யுணர் வின்பந் தன்னைத்
தந்தது பாதஞ் சூட்டித் தன்மய மாக்கிற் றன்றே"

எனவுங் கூறினர். இவர் இவ்வாறு பத்திசெய்து குருவருள்பெற்று முத்திநிலையடைந்தவராதலாலே, கண்ணப்பநாயனார் காளத்திநாதரைக் கண்டவுடன் பூர்வவாசனைத்தொடர்பு மேலெழ,

"திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காண முன்ன
மங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்த்த
தங்கிய பவத்தின் மூன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானார்"

"மாகபார்திருக்காளத்திமலையெழுகொழுந்தாயுள்ள
வேகநாயகரைக்கண்டாரெழுந்தபேருவகையன்பின்
வேகமானதுமேற்செல்லமிக்கதோர்விரைவினோடு
மோகமாயோடிச்சென்றுதழுவினர்மோந்துநின்றார்"

என்றடி பிரபஞ்சப்பாசத்தின்றி யன்புவடிவாய்நின்று பின்,

"சார்வருந் தவங்கள் செய்து முனிவரு மமரர் தாமுங்
கார்வரை யடனி சேர்ந்துங் காணுதற் கரியார் தம்மை
யார்வமுன் பெருக வாரா வன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார் நீளிரு ணீங்க நின்றார்"

என்றபடியு நின்று ஆறுநாட் பூசைசெய்யச் சிவபிரான் அவரது வாய்மொழிக்கு இருமஞ்சனமாகவும், அவர்தலையிற்சூடிய பூக்களைத்திருப் பள்ளித்தாமமாகவும், அவர் மென்று ருசிபார்த்துவைத்து நிவேதித்த வஸ்துவைத் திருவமுதாகவுங்கொண்டு திருவுளமிழ்ந்து இவரது அன் பினைச் சிவகோசரியார்க்கு வெளிப்படுத்தக் கண்ணிடந்து தங்கண்ணி லப்புமாறுசெய்தருளிக் கதிகொடுத்தமையறிந்து இவ்வா றன்பு தாம் புரியவில்லையென்பது விளங்கவும், சிவபிரான் பெருங்கருணைத்திறம் விளங்கவும்,

"கண்ணப்பனெப்பதா னன்பின்மைகண்டபி
னெண்ணப்பனென்னெப்பிலென்னையுமாட்கொண்டருளி"

என வெடுத்துரைத்தார்.

இவர் இங்ஙனமெடுத்துரைத்தாரெனில், அக் கண்ணப்பநாயனா ரன்பின்மகிமையை நா னெவ்வாறுரைத்துரைப்பேன். இவர்களும் ஏனைய நாயன்மார்களுமன்றிக் குரங்கு பாம்பு யானை சிலந்தி எறும்பு முதலிய அஃறிணைகளுஞ் சிவபிரானை யன்பினால் வழிபட்டுக் கதி யடைந்தசரித்திரமுங் கேட்டிருக்கின்றோம்; ஆதலால், தன்னையன்பி னால் வழிபட்டுய்யுமாறு இம்மானிடவுடலெடுத்தைக் கொடுத்தருளிய சிவபிரானை அன்பினியன்றவாறு வழிபாடுசெய்வது நம்முடைய கடமையென்று அறிவுடையோர் கொள்ளவேண்டும். இங்ஙனமே தேவாரத்தில்,

"வாழ்த்தவாயுந்நினைக்கமடநெஞ்சு
தாழ்த்தச்சென்னியுந்தத்தலைவனைச்
சூழ்த்துபாமலரிடுதுதியாதே
வீழ்த்தவாவினையேன்பிறவாலமே"

என்று கூறியருளினர். இன்னும் விரிக்கிற் பெருகுமாதலிற் சங்கிரக மாகத் தெரிந்தவரை கூறியதைப் பெரியோ ரங்கீகரிக்கவேண்டு கின்றேன்.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்தைச் சைவதூற்பரிசோதகருமான,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

மதிப்புரை.

I. ஹரிணீ:—இது, வடமொழியில் காளிதாசமகாகவியாற் செய்யப்பட்ட இரகுவம்மிசத்துவரும் அஜன்கதையை ஆதாரமாகக்கொண்டு திரிசிரபுரம் ஸ்ரீமத்-அ. கு. மதனகோபாலதீக்ஷிதரவர்களால் இயற்றப்பட்ட ஒரு தமிழ்நாடகம். இதில் இடையிடையே பாத்திரங்களின் தகுதிக்கேற்பப் பாட்டுக்களும், இறுதியில் பாட்டுக்களுக்கு விசேடவுரையும், அரும்பதவிளக்கமும் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

II. தமிழபிமானி:—இப்பெயர்கொண்ட மாதாந்தப்பத்திரிகையின் முதற்பகுதி நமது பார்வைக்கு வந்தது. இது, அம்பாசமுத்திரத்திலிருந்து ஸ்ரீமத். வாசுதேவராவ்கேய்க்வாட் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவருவது. இதன் முதற்பகுதியில், கடவுள், கல்வி, தமிழ்ச்சிறப்பு, சிவஞானயோகிகள் சரித்திரம், காலபேதங்களின் உண்மை முதலிய பதினுறுவிஷயங்கள் தக்கவர்களால் நன்னடையில் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. சிறிய எழுத்தில் திருத்தமுற அச்சிடப்பட்டுள்ளது. காளிது ரௌத்ரிஹ தைமீ தோடங்கி நடைபெறுவது. இதன் வருடச்சந்தா ரூபா இரண்டு. தனிப்பிரதி ரூபா **0—4—0**. வேண்டுவோர் மானேஜர், தமிழபிமானி, அம்பாசமுத்திரம் **S. I. R.** என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

III. இந்திய விவசாயம்:—இது சென்னை அரமனைக்காரத்தெரு இந்திய விவசாயநிலயத்திலிருந்து கடந்த நவம்பர்மாதமுதல் மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. பயிரிடும்வகை, பிருதிவி இலக்கணம், தாவரசாத்திரம், மிருகபரிபாலனம், பயிர்களுக்குக் கெடுதியுண்டாக்கும் புழு, பூச்சி, நோய், இவைகளையறிந்து தடுக்கு

முறை, ரசாயனசாஸ்திரம், தேனீ, பட்டுப்பூச்சி, பறவை இவைகளை வளர்த்தல், கூட்டுறவுமுறை முதலியவற்றைத் தக்க அறிவாளர் எழுதும் உரைநடைகளாலும் சென்னை விளம்பரசபையார் வெளியிடும் அறிக்கைகளாலும் கிருஷிகர்களுக்குப் போதிப்பதே இதன் நோக்கமென்று தெரிகிறது. இதன் முதன்மலரில் இரண்டாம்இதழ் நமது பார்வைக்குக் கிடைத்தது. அதில் நெற்பயிர், கால்நடையின்கதி, பூமியிற் பொன் உளது என்ற விஷயங்கள் தக்கவர்களால் ஆராய்ச்சியுடன் எழுதி வெளியிடப்பட்டிருப்பதுடன், சென்னை விளம்பரசபையார் வெளியிட்ட தமிழ் ஜில்லாக்களில் உபயோகப்படக்கூடிய பசுந்தழை எருப்பயிர்கள், கிணறு வெட்டுவதற்கும் இதர விஷயங்களுக்கும் இராசாங்கத்தார் குடிகளுக்குக் கடன் கொடுத்து உதவிசெய்தல் என்ற விஷயங்கள் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டும் உள்ளன. இது, கிருஷிகர்கள் வழங்கும் பழமொழிகளைக்காட்டி அவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களைத் தெளிய விளக்குவதால் அவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கதாயிருக்கிறது. இதன் வருடச்சந்தா தபாற்கூலியுள்பட சாதாரணப் பதிப்புக்கு ரூ **1—4—0**. உயர்தரப் பதிப்புக்கு ரூ **3—4—0**, வேண்டுவோர் "மானேஜர், இந்தியவிவசாயம் ஆபீஸ், **82** அரமனைக் காரத்தெரு, சென்னை" என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.

வாழ்க்கைப்பாட்டு.

ஆருயிர் வாழ்நா ளாம்வெறுங் கனவென
விடர்ப் படுஉச் செய்புளி னெடுத்துரை யற்க
மற்றியா தென்னின் மடிவாந் தியினும்
புறம்படு தோற்றம் பொருளியல் பன்றே.
மக்கள் வேண்டுவது வாணு ளுண்மை
போமிட முயிர்க்குப் புறங்கா டன்று.
"நீயே யிறுதியி னிலம்புக்கு மண்ணுய்ப்
போகுதி" யென்று புகறருஞ் சொற்றொடர்
உடலக் கன்றி யுயிர்க்கா குங்கொல்?

இன்பமுந் துன்பமு மெம்மனோர்க் கிறைஉ
னமைத்த முடிவுமோ ராறுமன் றம்மா:
மற்றியா தெனினே வாழ்தரு நாண்மன்
னென்றின்மற் றொன்றுயர் வுறவொழு கற்கே.
காலங் கழிமே கற்பன சுரையில,
வன்மைபுக் தணிபும் வல்லாங்குப் பெறினு
மிடிகாட் டகம்புக லெப்துவோற் காணி
னெம்மனஞ் சாப்படை யெஞ்சுறத் துடிக்கும்.
உலகெனும் போர்க்களத் துறுநிலை கல்லா
மாவெனப் படாஅது வாழ்க்கை தானே
நிலத்துவரை மான நின்றூற்று மறவனி
னருங்குணம் பெறுதி; யதாஅன்று வருநா
ணன்றே யாயினு நம்பா தொழிதி:
கழிந்த வாறே கழிந்தநாள் கழிக.
உள்ளு முளத்திற்கு முயர்நிலை யிறைக்கு
மேற்றவா றொருவினை யின்றுபுகுந் தியற்றுக.
பெரியோர் நடாத்திய பெட்புறுஉம் வாழ்க்கை
யன்னோர்க்கு நன்னிலை யாதலொடு நமர்க்கும்
காலமா மணன்மிசைக் காற்சுவ டிருத்திநம்
வாழ்வுமுற் றுதற்குநல் வழிசெயும்; அம்முறை
யமைத்த சுவடுமற் றடுதுயர் பெருகுபுன்
வாழ்வாம் வன்திடை வழிதெரி யாது
மனமனி நொந்து வருந்தியழி பேதை
மாக்க டமக்கு மனவலி யூட்டும்.
ஆதலி னெழுஉமி னமர்ந்த வந்நிலையின்
யாதியாது வரினு மிகைப்புரு தாற்றுமின்.
முயற்சியோ டடக்க முட்டின்றிப் போற்றுமின்.
உயர்ச்சிதரு வாணு ளுவப்புறு வீரென.

ஆர். ஆர். குணரத்நம் பி. ஏ.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககூ.] ரௌத்திரி-ஹெ மாசி-மீ [பகுதி சு.

Vol. XIX. February—March—1921. No. 4.

ஓ ரொருதலைமுடிவின் மறுதலைமுடிவு.

சென்ற செந்தமிழ்ப்பகுதிகளில் நெடிதாக வெளிவந்துகொண்டிருந்த "13-ம் புறப்பாட்டும் அதனுரையும்" என்ற ஆராய்ச்சி கழிந்த மார்கழிமாதப் பகுதியோடு முடிவடைந்திருக்கிறது. அதிற் கூறிய விடயங்கள் பலவும் எவ்வாறிருப்பினு மிருக்க; முடிவுரையுட் கூறிய வற்றைமட்டும் சுருக்கமா யிங்காராய்வோம்.

அம்முடிவுரையி னகவாய்முடிவில், (அப்புறப்பாட்டினுள்) நாடு கிழவோன் எனச் சோழனே குறிக்கப்படுகிறன் என முடிவு கூறப்பட்டிருக்கிறது.

அவ்வாறு குறிப்பதற்கேற்ற பிறகுறிப்பு ஒன்றேனும் அப்பாட்டினுள்ளாயினும், உரையினுள்ளாயினும், ஆராய்ச்சியுள்ளாயினும் காட்டப் படவில்லை.

நாடுகிழவோன் என்ற பெயர், ஆற்றலாலும் அதன் அடைமொழிகளாலும் பொதுவாக ஓரரசனே யுணர்த்திநிற்பதல்லது சேரபாண்டியர் முதலிய பிறவரசரை விலக்கிச் சோழனொருவனையே சிறப்பாகக் குறிக்குந் திறனுடையதன்று.

அது, சோழனொருவனையே குறித்துணர்த்தவேண்டுமாயின்,

"குறித்தோன்கூற்றம் தெரித்துமொழிகிளவி"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால்,

"ஒரு பொருள்வேறுபாடு குறித்தோன் அஃ தாற்றல்முதலாயின வற்றுல் விளங்காதாயின் அதனைத் தேரித்துச் சொல்லுக"

என்று விதிக்கப்பட்டிருக்கிற கட்டளைக்குட்பட்டுச் சோழனுக்கே யுரிய சிறப்படையால் தேரித்துணர்த்தியிருக்கவேண்டும். (அதாவது "விழு மிய நீர்நாடு கிழமை யோனே" என விசேடிக்கப்பட்டிருக்கவேண்டு மென் பதாம்)

இங்கு "நீர்நாடு" என்னும் அடைமொழித்தொடர், தன்னைத் தேடிப்பிடிக்கவேண்டாது தொடையழகுடையதாகச் சோழனை விசேடிக் கும்படி திருந்துமொழிப் புலவரது சிந்தையிலும் வாக்கினும் தெரிநிலை யாய் நிற்கவும் அவற்றைச் சேரவிடாது இடையே வேலியைபிட்டு விலக்கி நீர்வேலிநாடென வேறுபொருள்குறிக்க விசேடித்தமையால் அவர்க்கு அச்சொல்லாற் சோழனையுணர்த்துங் கருத்தில்லை என்பதே துணியத் தக்கதாயிருக்கிறது.

* * *

இனி அம்முடிவுரையின் புறவாயில்.— "(1) மகோததி (பெருங் கடல்) இந்தியாவின் குணபாலுள்ள கடலுக்குப் பிற்காலத்தார் வழங்கின பெயர்" என்றும், "சங்கத்தான்றோர் இப்பெயர்வழக்கினை யறிந்தார்க ளெனற்கு லக்ஷிய மில்லை" யென்றும் முடிவுகள் கூறப்பட்டுள்ளன.

இங்கு, குணபாலுள்ளகடலை அவ்வாறு கூறுதலால் முடிவுரை யுடையார்க் கொருபயனுமின்மையால் அது குடபாலுள்ளகடலென்னும் கருத்துடன் தவறுயெழுதப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகின் றது. குடபாலுள்ளகடலைப்பற்றிக் கூறியதாகவே வைத்துக்கொண்டு விவகரிப்போம்.

சங்கத்தான்றோர்கள் தமிழ்மண்டலத்தின் குடபாலுள்ளகடலே யியற்கையாயமைந்த பெருங்கடலென்றும், குணபாலுள்ளகடலே செயற் கையானமைந்த சிறுகடலென்றும் பகுத்தறிந்து வழங்கிவந்திருக்கிறார்க ளென்பதற்கு இலக்கிய மில்லாமற்போகவில்லை. குமரியாறு கடல் கொள்ளுமுன்பிருந்த பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யைக் காரிகிழார்பாடிய கூற்றம் புறப்பாட்டில்,—

"குணஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"

என்ற இரண்டடிக ளுள்ளன. இவற்றின் உரையும் பின்வருமாறு.—

"கீழ்கண்ணது கரையைப் பொருகின்ற சகரரால் வெட்டப்பட்ட சாகரத்தின் கிழக்கும், மேல்கண்ணது பழைதாய் முதிர்ந்த கடலின் மேற்கும்" என எழுதப்பட்டிருக்கிறது. இங்கு மேல்கடலைப் பழைதாய் முதிர்ந்தபௌவமென்றும், கீழ்கடலைச் சகரரால் வெட்டப்பட்ட தொடுகடலென்றும் சொல்லியிருத்தலால், தமிழ்மண்டலத்தின் கீழ்பாலுள்ள கடல் உலகுதோன்றிய பல்லாயிரம்யாண்டுகளுக்குப்பின் தரையினொருபுடை சகரரால்மேண்டப்பட்ட சிறுகடலென்றும், மேல்பாலுள்ளது உலகு தோன்றுமுன்னமே அது தோன்றுதற்கிடமாயிருந்த மிகப்பழமை வாய்ந்த பெருங்கடலென்றும் சங்கப்புலவர்கள் நன்கறிந்து வழங்கிவந்தனரென அறியலாம். ஆதலால் விழுநீர்வேலிநாடென்பதற்குப் பெருங்கடலை வேலியாகவுடைய சேரநாடெனப் பொருள்கொள்வது பிழையாகாது.

* * *

இனி, "(2) 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்ற தொல்காப்பியச்சூத்திரம் நான்கு உயிரீற்றுச் சொற்களுக்குமட்டுமே ஏற்புடைய விதி" என்று ஒரு முடிவு கூறப்பட்டிருக்கிறது.

அண்மைச்சொல் என்றது அணியாரைவிளிக்கும் சொல் என்ற பொருளுடையதாதலால் அது அவ்விளியேற்கு மெல்லாவீற்றுச் சொற்களையும் பொதுப்படவுணர்த்துமென்பது சொல்லாற்றலாலும் பொருந்துமாற்றானு மறியலாம். இக்கருத்து ஆசிரியர்க்கில்லையாயின் விளியேலாப் பெயர்களை விலக்கியதுபோல மெய்யீற்றண்மைச்சொற்களையும் விதந்தோதி விலக்கியிருக்கவேண்டும். (அதாவது "மெய்யீறண்மை விளியேலாவாம்" என விலக்கவேண்டு மென்பதாம்) அவ்வாறு விலக்காதிருப்பதும் ஆசிரியர்க் கொரு தவறும்.

இஃதன்றியும், உயிரீற்றண்மைவிளி யுதாரணவகைகளையும், மெய்யீற்றண்மைவிளி யுதாரணவகைகளையும் எண்ணி அளவிடுவோமாயின், உயிரீற்றுதாரணவகைகளைக்காட்டிலும் மெய்யீற்றுதாரணவகைகளே

மிகப் பலவாகுமென அறியலாம். சிறுபகுதியான உயிரீற்றண்மைவிளிக்குத் தனியே ஒரு சூத்திரம் வகுத்த ஆசிரியர், பெரும்பகுதியான மெய்யீற்றண்மைவிளிக்கும் அவ்வாறு தனியே ஒரு சூத்திரம் வகுக்க அறியாது மறந்துபோயினரென்பதும் அவர்க் கொரு தவறுகும்.

அன்றியும், "ஏனைப்புள்ளி" என்னும் சூத்திரத்திற் பெரும்பகுதியான மெய்யீற்றண்மைவிளிகளையெல்லாம் அமைத்துக்கொண்டனரெனக் கொள்வோமாயின், அவ்வாறே "ஏனையுயிரே" என்ற சூத்திரத்துட் சிறுபான்மையான உயிரீற்றண்மைவிளிகளையு மமைத்துக்கொள்ள வறியாது, அவற்றிற்குத் தனியே ஒரு சூத்திரம் வகுத்துவைத்திருப்பதும் முறைபடக்கூறாது பிழைபடக்கூறலென்னுங் குற்றமாம்.

இன்னோரன்ன பலகுற்றங்களைத் தொல்காப்பியர்மே லேற்றிக் கொண்டு, பேராசிரியர் பிழைபடக்கூறினர், அடியார்க்குநல்லார் அறியாது கூறினர் என்று உரையாசிரியர்களையும் குறைகூறும் கருத்தோடுகூடி, நாம் கூறுவதே உண்மைப்பொருளென நாட்டமுயலுவதைக்காட்டிலும் கல்வி கேள்விகளாற்சிறந்து பேரறிவாலுயர்ந்த அந்நூலாசிரிய ருரையாசிரியர்வாக்கியங்களுக்கும் தமிழிலக்கியங்களுக்கு மிணங்க நம்முடைய கருத்தைத் திருத்திக்கொள்ளுதலே நலமென்று தோன்றுகிறது.

* * *

இனி, "(3) சங்கநூல் வழக்கின்கண்ணே ஏகாரமமைத்த ஓரீற்றுச் சொற்கள் யாண்டும் படர்க்கையாகவே வந்துள்ளனவென ஒரு முடிவு கூறப்பட்டிருக்கிறது. இதனால் 13-ம் புறப்பாட்டிறுதிச்சொல்லும் அவ்வாறேயாகுமெனக் கருதுவதாகத்தெரிகிறது.

இது; இக்காலத்திலகப்படாதனவும் இறந்தொழிந்தனவுமான சங்கநூல்களெல்லாவற்றையும் ஒரு சிறிதும் குறையின்றி யாராய்ந்தறிந்து கொண்டபின்பன்றி நம்பற்பாலதன்று.

அன்றியும், ஒவ்வொருசொல்லும் சங்கநூல்களில்வந்தபடியே வரவேண்டுமென்று எந்நூலிலெழுதப்பட்டிருக்கிறது? அப்படி ஒருவிதியிருக்குமாயினும் அது தன்னைப்பற்றுதல், ஒன்றனையொன்று பற்றுதலென்னும் குற்றங்களையுடையதாகும். ஆதலால், தொல்காப்பிய முதலிய

இலக்கணத்தால் அமைக்கப்பட்ட சொற்களுள் எது எவ்விடத்தில் எப் படியிருந்தாற் பொருட்பொருத்தமுடையதாயிருக்குமோ அது அவ் விடத்தில் அப்படியேயிருக்கலாமென் றறியத்தக்கதாயிருக்கிறது.

* * *

இனி, "(4) 'இவன் யார்' என்ற வாய்பாட்டிலுள்ள வினுக்களுக் குப் பெயரேயல்லது வினை விடையாதலில்லையென்று ஒருமுடிவு திடமா யுரைக்கப்பட்டிருக்கிறது.

அவ்வாய்பாட்டிலுள்ள 'யார்' என்னும் சொல் 'வினுவினைச்சொல்' எனத் தொல்காப்பிய முதலிய இலக்கணநூல்களால் நன்குதெரிவிக்கப் பட்டிருக்கிறது. பெயர்வினுக்களுக்குப் பெயர்விடையும், வினைவினுக் களுக்கு வினைவிடையும் வருவது மரபு; இதற்கு மாறுகப் பெயர்வினு வுக்கு வினைவிடையும், வினைவினுவுக்குப் பெயர்விடையும் வருமாயின் அது விடைவழுவாம்,

"செப்பும்வினுவும்வழா அலோம்பல்"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் வினுவும் விடையு மாறுபடலாகா தென விதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதிக்கு மேற்கூறியமுடிபு முற்றும் விரோதமாயிருக்கிறது.

இனி வழக்கின்கண், வினுப்பெயர்களுள் சாத்தனே? கொற்றனே? உழுகிறன்? என வினவியவழி (இவ்வினுப்பெயருக்கு) சாத்தன் அல்லது கொற்றன் என்ற பெயரே விடையாய்வருவதல்லது வினை விடையாக வருதலில்லை.

வினுவினையுள், சாத்தன் உண்கிறனே? உறங்குகிறனே? என வினவியவழி (இவ்வினுவினைக்கு) உண்கிறன், அல்லது உறங்குகிறன் என வினையே விடையாகவருவதல்லது பெயர் விடையாக வருதலில்லை.

இனி, குறிப்புவினையுள் கொற்றன் நல்லனே? தீயனே? என வினவியவழி நல்லன் அல்லது தீயன் என விடையிறுக்கக் காண்கிறேம். இங்கு நல்லன், (அல்லது) தீயன் என்ற விடைமொழிகள் பெயர்ச்சொற் கள்போலத் தோன்றுமாயினும் அவை வினவினுனென்கருத்துணர்ந்து விடையிறுத்தோன்கருத்தால் நோக்கில், குறிப்புவினைப்பொருளுணர்த் தும் வினைச்சொற்களென்றே தெளியத்தகும். இங்கு, நல்லன் என்னும்

வினைக்குறிப்புக்கு நல்லோழுக்கமுடையனுயிருக்கிறன், நன்னெறியி லொழுகுகின்றன் என அக்குறிப்பை வெளிப்படுத்தும் பரியாயமாகிய தெரிநிலைவினையும் விடையாக வருதலால் அது பெயர்ச்சொல்லில்லை யென்றும் வினைச்சொல்லே யாமென்றும் அறியத்தக்கது.

இவ்வாறே, பயறிருக்கிறதா? வென்று வினவியவழி இத்தெரிநிலை வினைவினைக்குப் பயறிலதாயின் இல்லை என்ற குறிப்புவினை விடையும், பயறில்லையா? என்று வினவியவழி (உளதாயின்) பயறிருக்கிறது என்ற தெரிநிலைவினையும் பரியாய விடையாகவருதலும் தவறில்லையென்று தெரிகின்றேம். (இவை புறநிலைவினை)

இனி அகநிலைவினைவுள் யாவன் வருகிறன் என்ற வினைப்பெயர்க்குக் கோற்றன் வருகிறன் எனப் பெயரே விடையாகவருகிறது. வினை விடையாதலின்று. அது போல இவன் யார் என்ற அகநிலை வினை வினைக்கு வினையே விடையாகவேண்டுமென்பது தெளியத்தக்கது. அவ் வினை தெரிநிலைவினையாகவேனும், குறிப்புவினையாகவேனு மிருக்கலா மென மூன்கூறியவாற்று லறியலாம்

இலக்கணமும் வழக்கு மிப்படியிருக்கவும், "இவன்யார்" என்னும் 13-ம் புறப்பாட்டின் வினைவினைக்குத் 'தீதிலனுகிப்பெயர்க' என்னும் தெரிநிலை வினை விடையாகமாட்டாதென்றும், நாடுகிழவோன் என்ற பெயரே விடையாகவேண்டுமென்றும் சிலர் கருதுகிறர்கள். இக்கருத் துக்கு யாதோ ராதரவும் காணப்படவில்லை.

ஆனல் "இவன்யார்" என்ற வாய்பாட்டிற்கெல்லாம் யாண்டும் பெயரே விடையாய்வந்திருப்பதாக ஒருதலை ஆராய்ச்சியுள் மேற்கோள் காட்டப்பட்டன. அவையெல்லாம் பெயர்போலத் தோன்றும் குறிப்பு வினைச் சொற்களென்பதைப் பின்வரும் விளக்கத்தா லறியலாம்.

'இவன்யார்' என்னும் வினைவினைக்குறிப்புக்கு, இவன் என்னுடை யன்? என்பதே பொருளாகும். ஆகவே இங்கு உடைமையாகிய வினையே வினவப்படுவதாயிருக்கிறது. வினைக்குறிப்பாவது வினைமுதற்குரிய வினை, சினை, பண்பு, உடைமை, சாதி, பெயர், முறை, இயைபு முதலிய வற்றுள் ஏதேனுமொன்றை யுடைமையே வினையாகி, காலங்காட்டு முறுப்பின்றிப் பெயரொடு வேற்றுமைதோன்றுது பயனிலையாக வழங்கப் படுவது.

ஒருவனைச்சுட்டி இவன்யார்? என வினவியவழிப் பொன்னன் என விடை வரலாம்; இது, என்னுடையன்? என்ற வினாவினைக்குறிப் புக்கு விடையானமையால், பொன்னுடையன் என்ற குறிப்புவினை விடை யாயிற்று. இது பெயர்விடை யாகாது.

இது தானே, இவன் யாவன்? என்ற பெயர்வினாவுக்கு விடையாக வரின், குறிப்புவினையாகாது; பெயர்விடையாம்.

இவ்வாறே இவன்யார்? என்றவழிச் சாத்தன் என விடைவரின் அது, சாத்தனுயுள்ளோன் என்ற குறிப்புவினைவிடையாகவும் 'இவன் யாவன்' என்ற வழிச் சாத்தன் என விடைவரின் அது சாத்தன் என்ற பெயர்விடையாகவும் பகுத்தறியற்பாலது. இவ்வாறே முறைப்பெயர் முதலிய பிறபெயர்களும் குறிப்புவினையும், பெயருமாகி நிற்கும் நிலை வேறுபாடுகளை இடம்நோக்கி யறிந்துகொள்க.

இனி, இவன்யார் என வினவியவழி உழுவான், அல்லது ஊருக் குப்போவான் எனத் தெரிநிலைவி னை விடையாதல் கூடுமோ என்ற சந்தேகம் சிலர்க்கு உண்டாகலாம். ஒவ்வொரு வினாவிற்கும் வினவினோன் கருத்துணர்ந்தே விடையிறுக்கவேண்டும்.

இவன் என்செய்வான் என்னும் கருத்துடன் இவன் யார் என வின வியவழி, வினவப்பட்டானிடத்து நிகழும் தொழில்பற்றி உழுவான், அல்லது ஊர்க்குப்போவான் எனத் தெரிநிலைவினையால் விடையிறுப்பின் அது தவறுகாது. அக்கருத்தின்றி, உனக்கு இவன் 'என்ன முறை யுடையன்' என்னும் கருத்தால் இவன்யார்? என வினவியவிடத்தும் உழுவான் அல்லது ஊருக்குப்போவான் என விடையிறுப்பின் விடை வழுவாம்; மாமன் என விடையிறுப்பின் வழுவன்றென்றுணர்க. அது இங்கு மாமனுயுள்ளோன் என்ற குறிப்புவினையாய் நிற்கும். இவன் யாவன் என்று வினவியவழி மாமன் என்பது பெயர்விடையாம். இங்கு மாமன் என்ற ஒருசொல்லே ஓரிடத்துக் குறிப்புவினையாகவும், பிறி தோரிடத்துப் பெயர்ச்சொல்லாகவும் கொள்ளுதற்கண்ணுள்ள பொருள் வேறுபாட்டினைக் குறிப்புவினைக்கும், பெயர்ப்பயனிலைக்கு முள்ள பொருள்வேறுபாட்டின் நுண்ணுணர்வுடையோர்வாய்க் கேட்பின், தெளி விதி னுணரலாகும்.

இனி 'இவன் யார்' என்ற வினவினைக் குறிப்புக்கு இவன் என் செய்வான் என்ற பொருளுண்டோ? என்ற சந்தேக முண்டாகலாம். இங்கு, 'என் செய்வான்' என்ற தெரிநிலவினை என்செயலுடையான் என்ற குறிப்புவினையின் வெளிப்படையான வினவினையாகிய ஒருபொருளுடைய பரியாயச்சொல்லாதலால் அதுவும் யார் என்னும் வினவினைக்குறிப்புக்குப் பொருளாகத் தடையில்லை. இதனை,

> "ஊதைகூட்டுண்ணும்உகுபனியாமத்தெங்
> கோதைகூட்டுண்ணியதான்'யார்'மன்—போதெல்லாம்
> தாதொடுதாழ்ந்தார்க்கச்சிவளநாடன்
> தூதொடுவாராதவண்டு"

என்ற சான்றோர்வாக்கினுள், தூதொடுவாராதவண்டு எம்கோதை கூட்டுண்ணிய யார்? என உயர்திணைவாய்பாட்டால்வந்த வினவினைக் குறிப்புச்சொல், தூதொடுவாராதவண்டு எம்கோதை கூட்டுண்ணுதற்கு 'ஏன் வருகிறது? என்ற தெரிநிலைவினவினைப்பொருளுடையதாயிருத்தலாலும், அதன் குறிப்பாகிய வாரற்கவென்னும் தெரிநிலைவினைவிடையைப் பயனிலையாகக்கொண்டு முடிதலாலும் கண்டுகொள்க. இங்கு வண்டு வினவப்படாது, அவ்வண்டின் வருகையே வினவப்படுவதுபோல "இவன்யார்" என்ற புறப்பாட்டுவினவினைக்குறிப்பாலும் சோழன் வினவப்படாமற் சோழனது வருகையே வினவப்படுதலால் இவன் 'ஏன் வருகிறான்' என்பதே வினாப்பொருளாகவும், களிறு மதம்பட்டமையால் வழிதவறிவருகிறான்; தீதின்றிப் பெயர்க்கடவன்; என்பன விடையாகவும் கொள்ளத் தடையில்லை.

இங்குக் கூறியவாற்றால் 'இவன் யார்' என்னும் வாய்பாட்டினுள்ள 'யார்' என்னும் வினவினைக்குறிப்புக்கு 'என்னுடையன்' என்பதே பொதுவானபொருள் என்றும் அவ்வுடைமையாகிய வினையே வினவப்படுவதென்றும், உடையோன் வினவப்படுவோ னல்லனென்றும், அவ்வுடைமையுள் வினையும் ஒன்றென்றும், அவ்வினவினைக்கு வினையே விடையாகவேண்டுமென்றும், பெயர் விடையாகமாட்டாதென்றும் காட்டப்பட்டன.

திரு. நாராயணையங்கார்.

செந்தமிழ்ப்பத்திராதிபர்.

தொல்காப்பியரது சமயம். II.

சென்ற ஆடிமாதப்பத்திரிகையில், தவவொழுக்கம் என்று பொருள்கொள்ளப்பட்ட 'படிமை' யென்னுஞ்சொல்லை யாராய்ந்து தொல்காப்பியர் ஜைனராதல்வேண்டுமெனத் துணிந்தேன். யான் எழுதினவற்றை மறுத்து ஸ்ரீமத்- நவநீதகிருஷ்ணபாரதியவர்களும் பத்திராசிரியரவர்களும் இரண்டு கண்டனவுரை யெழுதியுள்ளார்கள். அவைகளைக்குறித்து யான் கூறவேண்டுவனவற்றைப் பின்னர் எழுதுவேன். .தொல்காப்பியர் ஜைனராவரென்பதற்கு அவரது நூலின்கண்ணேயே சான்றுகள் உளவென்று எனது உரையின் முடிவிற் சுட்டியிருந்தேன். அச்சான்றுகளில் ஒன்றை இப்பொழுது விவரிக்க எண்ணுகிறேன்.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சமயமும் தனக்கே சிறப்பாகவுரிய சில மூலதத்துவங்களை வித்தாகக்கொண்டு முளைத்தெழுந்து தழைத்து நிற்கின்றது. ஒவ்வொரு சமயமும் அதற்குரிய தத்துவங்களை அதன் கொள்கைகளுக்கும் ஆசாரங்களுக்குந் தக்கபடி பாகுபாடுசெய்து வையறுத்துக்கொள்ளும். ஒரு சில தத்துவங்கள் இரண்டுமூன்று சமயங்களுக்குப் பொதுவாயினு மாகலாம். ஆனல் அவற்றின் உட்பாகுபாடுகள் அங்ஙனம் பொதுவாயிருத்தல் அரிது.

ஜைனர்கள் தமது சமயநூல் ஒப்புக்கொண்ட தத்துவங்களை இரண்டுமுதற் பலவாகப் பிரித்துக்கொள்வார்கள். மிக விரித்துப் பாகுபாடுசெய்யுங்கால், தத்துவங்களைப் பத்து என அறுதியிடுவர். அவை யாவன:—

"தந்தானற்பொருள்தன்மாத்திகாயமு
மதன்மாத்திகாயமுங்காலாகாயமுந்
தீதில்சீவனும்பரமாணுக்களு
நல்வினையுந்தீவினையுமவ்வினையாற்
செய்வுறுபந்தமும்வீடுமித்திறத்த"

—மணிமேகலை XXVII(172-6.)

மிகச்சுருங்கவுரைக்குமிடத்து இவையெல்லாம் 'ஜீவன்' 'அஜீவன்' என்ற இரண்டனுள் அடங்கும். "அத்ர ஸம்க்ஷேபத: தாவத் ஜீவாஜீவாக்யே த்வே தத்வேஸ்த:" என்று ஸர்வதரிசனஸங்கிரகம் கூறுகின்றது.

இவ்வாருகவுள்ள தத்துவங்களில் ஜீவன், 'ஸ்தாவரம்' 'திரசம்' என் றிருவகைப்படும். ஸ்தாவரம் = நிலைத்திணைப்பொருள்; திரசம் = இயங்குதிணைப்பொருள். ஸ்தாவரங்கள் ஐவகைப்படும்: பிருதிவிகாயன், அப்புகாயன், தேயுகாயன், வாயுகாயன், வனஸ்பதியென. வனஸ்பதி யென்றது மரம், புல்லென்பனவற்றை. இந்த ஐவகைஸ்தாவரங்களும் ஓரறிவுயிர்களாம்: அஃதாவது இவை பரிசனேந்திரியமட்டு முடையன. 'ஸ்தாவரா: ஸ்பர்சனைகேந்த்ரியாஸ்' என்பது ஸர்வதரிசன ஸங்கிரகம்.

திரசம் ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் எனப் பகுக்கப்படுகின்றது. ஸ்பரிசம் ரஸம் என்ற இரண்டிணையு மறிவன ஈரறிவுயிர்; அவை சங்கு முதலியன. ஸ்பரிசம், ரஸம், கந்தம் என்ற மூன்றிணையும் அறிவன மூவறிவுயிர்; அவை எறும்பு முதலியன. ஸ்பரிசம் ரஸம் கந்தம், ரூபமென்ற நான்கிணையும் அறிவன நாலறிவுயிர்; அவை வண்டுமுதலியன. ஸ்பரிசம், ரஸம், கந்தம், ரூபம், சப்தம் என்ற ஐந்திணையும் அறிவன ஐயறிவுயிர்; அவை விலங்கு முதலியன. இவற்றையெல்லாம் மேருமந்தரபுராணம் தெளிவாய்க் கூறுகிறது:—

"ஒன்றிரண்டொருமூன்றுநாலைந்தாய்
நின்றவைம்பொறிநெறியின்வாழுயிர்
ஒன்றுநீர்மரம்நிலம்நெருப்புக்காற்று
என்றிக்காயம்ஐந்தெய்திவாழுமே"


"கந்துசிப்பிசங்காதிநாவன;
சூந்தெறும்புகோபாதிமூன்றன;
அந்தும்பிவண்டாதிநால; ஐந்து
இந்தியம்பசுநரகர்தேவர்"

—(வச்சிராயுதனுத்தரம். 10, 11)

கடைசியாய் நிறுவப்பட்ட ஐயறிவுயிர் ஒரு சாராரதுகருத்துப்படி இருவகைப்படும்; மனமில்லன (அஸம்க்ஞி) மனமுள்ளன (ஸம்க்ஞி)

என. விலங்கும் ஒருசார் மக்களும், அஸம்க்ஞியாம். மக்கள் தேவர் நரக ரென்றித்திறத்தினர் ஸம்க்ஞியாம். இங்ஙனம் 'The Heart of Jainism' என்ற நூல் தெரிவிக்கின்றது.

இதுவரை கூறிய பாகுபாடுகளின்னத்தையும் அடியிற்காட்டியிருக்கிறேன்.



இங்ஙனம் உயிர்வகைகளைப் பகுத்துணர்ந்துகோடல் ஜைன சமய ஆசாரத்துக்கு மிக அத்தியாவசியகமாவதாம். கொல்லாவிரதத்தினை இச் சமயத்தினர் பிறவறங்களெல்லாவற்றிலும் மிக மேலாக மதித்துள்ளார். ஜைனதுறவிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆசாரங்களை நோக்கினால் இதனுண்மை நன்கு புலப்படும். தாம் நடக்கும்போது தமது கால்பட்டு எறும்பு முதலிய சிற்றுயிர்கள் அழிதல் கூடாதென்று கருதி மயிற்பீலியாற்பூமியிலுள்ளனவற்றை மெல்லெனவொதுக்கிச் செல்லுங் கடப்பாட்டினர் இத்துறவிகள்; குளிர்ந்த சுத்த ஜலத்தில் உயிரிருப்பதாக எண்ணி அதனை உட்கொள்ளார்; பேசும்போது காற்றிலுள்ள சிற்றுயிர்கள் வாயிற்பட் டழியுமென்றஞ்சி வாய்மூடியிட்டுக்கொள்வர். பல படச்சொல்லியென்? இவர்களது இறைவராகிய அருகக்கடவுள்தாமும் இக்கொல்லாவிரதம் அநுஷ்டிப்பாராகக் கருதப்படுகின்றார். 'கேள்வியினுங்-கொல்லாவதத்தெங்கள்கொற்றவன்'என்பர் அவிரோதியாழ்வார்;(திருநூற்றந்தாதி- 42)இவ்விரதத்திற் சிறிதும் வழுவாதிருக்கவேண்டுமாயின், எவையெல்லாம் உயிரென்று சொல்லற்குரியனவென்பது நன்கு அறியப்

படுதல்வேண்டும். ஜீவாஜீவபேதங்களைத் துறவியாவான் உணர்ந்து கொள்ளவேண்டியது ஆவசியகமென உத்தராத்யயனம் கூறுகின்றது. (Sacred Books of the East-Vol. XLV-p. 206). இவ்வாறுக, உயிர்வகைகளை யாராய்தல் ஜிநதர்மத்தின் ஓர் ஆவசிகநோக்கமாய் முடிந்தது. இதற்கிணங்கவே 'உலகுபுகழ்பெருந்துறவியும் கேவலஞானப் பெருஞ்செல்வருமாகிய மகாவீரர் ஐம்பெருவிரதங்கள், அவற்றின் உட்பாகுபாடுகள், அறுவகையுயிர்கள்–இவைகளைக்குறித்து ஸ்ரமணர்களுக்கும் நிக்கந்தர்களுக்கும், கௌதமர் முதலாயினர்க்கும் உபதேசித்தருளினர்' என்று ஆசாராங்க சூத்திரம் கூறுகின்றது. (Sacred Books of the East. Vol. XXII. p. 202.) திருநூற்றந்தாதியினும் "ஜீவனுள்ளிட்டத்திலைத்தானுள்ளவாறறைந்தாய்" என்று காணப்படுகின்றது. ஈண்டெழுதியவற்றால் இவ்வகையுயிர்ப்பாகுபாடு ஜிநதர்மமொன்றற்கே பூர்வத்தில் உரியதாயிருந்தமை தெளியலாகும். பிற சமயத்திற்குரிய பொருட்பாகுபாட்டில் இது காணப்படாமை ஸர்வதரிசன ஸங்கிரகம் நோக்கி அறிந்துகொள்க. தொல்காப்பியர் தமது பெருநூலின் கண்ணே பின்வருமாறு கூறுகின்றார்:–

"ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே
இரண்டறிவதுவேயதனெடுநாவே
மூன்றறிவதுவேயவற்றெடுமூக்கே
நான்கறிவதுவேயவற்றெடுகண்ணே
ஐந்தறிவதுவேயவற்றெடுசெவியே
ஆறறிவதுவேயவற்றெடுமனனே
நேரிதினுணர்ந்தோர்நெறிப்படுத்தினரே"

–மரபியல்–27.

'புல்லுமரனுமோரறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே' (–28)

'நந்துமுரளுமீரறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே' (–29)

'சிதலுமெறும்புமூவறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே' (–30)

'ஈண்டுந்தும்பியும்ஈன்கறிவினவே
பிறவுமுளவேஅக்கிளைப்பிறப்பே' (–31)

'மாவுமாக்களுமையறிவினவே
பிறவுமுளவேஅக்கிளைப்பிறப்பே' (–32)

'மக்கள்தாமேஆறறிவுயிரே
பிறவுமுளவேஅக்கிளைப்பிறப்பே' (–33)

இங்கே காட்டப்பட்ட சூத்திரங்களின்பொருள் ஜைனசமயக்கொள்கை யோடு முற்றும்பொருந்துவது காணலாம். மக்களே ஆறறிவுயிர் என்பது அந்தச் சமயத்தினருள் ஒரு சாராரதுகொள்கையாதலின் அது பெரு வரவிற்றாய்க் காணப்படுதலில்லை. தொல்காப்பியர் தாமாகவே இப் பாகு பாட்டினை அமைத்துக்கொண்டாரெனக்கூறுதலுந் தகாது; ஏனெனில், இவ்வுயிர்வகையை 'நேரிதினுணர்ந்தோர்நெறிப்படுத்தினரே' என அவரே யெடுத்துமொழிகின்றார். ஜைனசமயமன்றிப் பிறசமயங்கட்குரிய பொருட்பாகுபாடுகளில் ஒன்றின்கண்ணும் இவ்வுயிர்வகை தரப்படவில் லையென்பது மேலே கூறினேன். ஆகவே ஜைனசமயத்திற்குரிய தத்துவ வுட்பாகுபாட்டினையெடுத்துத் தொல்காப்பியர் ஆளுதலினாலே, அவர் ஜைனராதல்வேண்டும் என்னுந் துணிபு உறுதியடைகின்றது.

S. வையாபுரிப்பிள்ளை,

திருவனந்தபுரம்.

---

* இவர் (பவணந்தி) சைனமதத்தினர்.....உயிர்களை ஓரறிவுயிர்முதல் ஐந்தறிவுயிர் இறுதியாக அமைத்திருக்குமுறையும்.....இதனைப் புலப்படுத்தும்" என்று ஸ்ரீ சாமிநாதையரவர்கள் எழுதியது இங்கே சிந்திக்கற்பாலது. (மயிலைநாதருரை: முகவுரை: பக். vii.)

கடவுள் துணை.

பார்வதியார் பாதாதிகேசாந்தவருணனை.

சீர்சால் தக்கன் மகளாய்ச் சிவனுர்க்
கோர்கொள் மனையா யிருந்த சதிப்போர்த்
தேவியோர் பிணக்கிலத் தேகம் விட்டுப்
போயோர் மகவாய்ப் பொறைக்கிறைக் கருளக்
கண்டவவ் விமவான் கொண்டுநோன் பியற்று
மேதகு சிறப்பிற் காதலி மேனைக்
களித்தன னப்போ தந்த்ர துந்துபி
முழக்கித் தேவர் மழைபோற் பூவைப்
பொழியவு மவளாங் குழுவலன் பினளாய்ப்
பெற்றன ளதனைப் பெரிதும் பேணித்
தாணுறு பெருமைக் கானசீ ருடனே
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு
மாவளர்த் திடநன் காவளர் மகவுக்
குற்ரு ருறவின் முறையா ருவந்தக்
குலத்திற் கேற்பக் குறித்துப் பெயரைப்
பார்வதி யென்னப் பகர்ந்தன ரன்றியும்
பெரிதும் போற்றிப் புகழ்ந்தன ருவக்கச்
சிற்றி லிழைத்துஞ் சிறுகழங் காடியுஞ்
சேடிய ரிடைநின் றூடுவாள் போன்று
நடித்து மேலைப் படிப்பின் றொடர்பாற்
கற்கா தெல்லாக் கலைக டம்மையுங்
கற்றும் வளரக் கன்னிப் பருவங்
கடந்ததன் பின்னுக் காசினி யதனிற்
பெயர்த்தடி வைக்கும் பொழுதெலா மரத்தங்
கக்குவ போலுயர் கட்டை விரல்களொர்
டொட்டுசெந் நகங்களும், ஓர்ந்துயர் வாவா

னிலையிற் றிரிந்த நிலத்தா மரையி
னெழிலைக் கவருவ போன்றிரண் டடிகளும்;
சுரலினி தாக்கிக் கொள்ள நூபுரத்
தின்னெலி கற்றங் கிராச வன்ன
மெதிராக் கற்பித் ததனு லியைந்த
தொத்தசைந் தணிசே ருத்தம நடையும்;
படைப்போற் கேண யுறுப்பிற் காமா
றழகைத் தேடுந் தொழிலைத் தந்தன
போன்றெருங் கமைந்த பொலிவொடு சற்று
மேற்றத் தாழ்வுக ளில்லா தனவா
யிணையொத் துருண்ட கணைக்கா லிரண்டும்;
பொரியரை யுளவா லரிகரிக் கையு
மென்றுமிக் குளவா கின்றதண் மையினு
லீங்குயர் வாழையு மோங்குபே ரெழிலோ
டோருருப் படைத்து நேரவாம் படியீண்
டமையா தனவாய்ச் சமையும் பெருமைக்
கிடமா யிலகுந் துடையோ ரிரண்டும்;
ஏண நாரியர்க் கெண்ணவு மியலாச்
சங்கரன் மடியிற் றங்கும் பேற்றைப்
பின்னே பெறலாற் றன்னே ரெழிலொன்
றிலதா மொருமே கலைபா ரையும்;
சேலைச் செருகின் மேலா யுறுமே
கலையின் முகத்தி லிலகும் பச்சை
மணிபோன் றெளிசேர்ந் தணியார் மென்கரு
ரோமச் சுழிசூழ் காமரு வுந்தியும்;
நுண்ணிய நுசுப்பும்; கண்ணிய காமற்
கேறும் படியென் றெண்ணும் படியீங்
கிளமைபி னிழைத்த வளமார் மூன்று
மடிப்பும்; மரையின் றண்டினி லெடுத்த
நூலுமுண் ணுழைதற் கேலா வகையிற்
பருத்து முகக்கண் கறுத்தழ கமைந்து
புணருஞ் சீரிய நுணையார் தனமும்;

உடைபடு மீனக் கொடியோன் றன்னுற்
கறுத்துக் கால கண்டன் கழுத்திற்
கட்டச் செயவல கெட்டிக் கயிறு
மொள்ளிய வாகை மலரின் மெல்லிய
தன்மையுங் கடந்த மென்மைய வென்றென்
னூகத் திற்கிட மாகுங் கைகளும்;
ஒன்றற் கொன்றெழி லொன்றிய தன்மையி
னணிசே ரிடமே யணியே யெனநல
முத்தின் வடத்தொ டொத்துயர் கழுத்தும்;
சந்திர னிடையிற் முமரை மணமுந்
தாமரை யிடையிற் சந்திர னொளியுங்
காணு ளாகிப் பேணு தலையுங்
குணமார் திருவவ் வொளியொடு மணமென்
றிரண்டு மொத்தாங் கிருக்கக் கண்டே
தங்கிட மாகுந் துங்கமா முகமும்;
இருசெந் தளிரிடை வருவெண் மலருநல்
வித்திரு மத்திடை யொத்துறு முத்து
முளவே லிணையென் றோதும் படிசெவ்
விதழோ டுறுவெண் முறுவற் றிரளும்;
பிறழத் தொடையைப் பிணைத்த யாழைக்
கோலிற் றட்டக் சாலுங் கொடிதா
மொலிபோ லயலில் வளருங் குயிலின்
குரலைத் தன்னுறு மழலைக் கெதிரே
செய்யுந் தெள்ளமு தென்னுங் குரலும்;
கடுவளி தனிலுறு காவியிற் கலங்கி
மான்பிணை வேண்டித் தான்பெற் றனவோ
தானது வேண்டத் தந்தன வோவென்
றேவரு மையுறு மெழிலொடு காதள
வோடிய கண்களும்; கோடிய கரும்பாந்
தன்னுடை வில்லிற் றென்னு லடைந்த
செருக்கை வீடுமா மதனைச் செய்வான்
மைதீட் டியதொத் தெய்திய கோட்டோ

டிலகும் வளைந்த புருவத் தெழிலும்;
விலங்கினத் திற்கும் வெட்கமிக் குளதான்
மானம் படவரின் வாழாக் கவரி
மானுறு சிறப்பைக் காணிற் றானுறு
வாலழ கதனில் வைத்துள மதிப்பைத்
தானே விடுதற் கானபே ரெழிலொடு
கொங்கார் கூந்தற் கற்றையும்; கொண்டவண்
டுவமா னப்பொரு ளனைவுள பலவுஞ்
சேர்ந்தோ ரிடத்திற் றிகழக் காண்பான்
மேவிய விருப்பிற் பூவரு மபனுய்ந்
தெழிலோ டமைத்த பழிதீ ருருவொடு
பகலோன் கிரணப் பரப்பா லலர்ந்த
செந்தா மரையுந் தீட்டுங் கோலாற்
செவ்விதி னெழுதிய சித்திர மும்போ
லழகொருங் கமைந்த பளகரு மேனியைப்
புத்தள மையினிற் பிரிப்பது மதற்காங்
கியற்கை யணியா யிருப்பட்டு மதுவன்
றுயினு மபக்குவ தாயது மதற்குப்
பூவினீங் கியகல் லேவா யிருப்பது
மாகிய மங்கைப் பருவமாங்
குற்றன ளவ்வென் னுளமம ருமையே.

பார்வதியார் பேரெழிலைப் பாதாதி கேசாந்த
மார்வமதா லாரியத்தி லாராய்ந்து—சீர்வதியுங்
காளிதா சக்கவிஞர் கட்டுரைத்த வாறுரைத்தேன்
கோளிதனிற் கொள்ளீர் குறித்து.

சுபம்.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்.

நாலடியாரின் காலம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரால்இயற்றப்பட்டு யாவராலும் போற்றிப் புகழப்பெற்ற திருக்குறளுக்கு இரண்டாவதாய் நிற்கும் பெருமைவாய்ந்துள்ளது நாலடியாரென்னும் முதுநூலேயாம். இந்நூல் இனிமைவாய்ந்த பப்பத்துவெண்பாக்களாலாய நாற்பது அதிகாரங்களையுடையது. அறம் பொருள் இன்பமென்னும் மூன்றினையும் நன்கு விளக்குவது; நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார் முதலிய தொல் லுரையாசிரியர் பலராலும் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் பெருமைவாய்ந்தது. இந்நூல் கடைச்சங்கம் மருவிய பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் முதலாவதென்றும், திருக்குறட்குமுன்னரியற்றப்பெற்றதென்றும் கூறுவர் பலர். இதற்கு அன்னர்கூறும் சான்றுவது,

"நாலடிநான்மணிநானூற்பதைந்திணைமுப்
பால்கடுகங்கோவைபழமொழிமாமூல
மெய்ந்நிலையகாஞ்சியோடேலாதியென்பவே
கைந்நிலையவாங்கீழ்க்கணக்கு"

என்னும் வெண்பாவேயாம்.

ஒருநூல் இயற்றப்பட்டுள்ள காலத்தை நடுநிலையுடன் ஆராய்ந்து நிலைநாட்டுதல், அக்காலத்து மாந்தரது வழக்கத்தைத் தற்காலத்து மாறிந்துகோடற்கு ஏற்ற சாதனமாமென்பது யாவரும் நன்கறிந்த விஷயமே. ஆதலால், அதன் காலத்தையும் அவ்வெண்பா எம்மட்டில் உண்மை யென்பதையும் ஈண்டு ஆராய்வோம்.

நாலடியாரிலுள்ள 200-வது 296-வது செய்யுட்களில் பெருமுத்தரையர்* என்னும் ஒரு வகுப்பினர் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றனர். அச்செய்யுட்கள் பின்வருமாறு.

---

* இவர்கள் பாண்டியர்களுள் ஒரு வகுப்பினராவர். இவர்களன்றி, மீனவர், தென்னவர், உக்கிரர் என்னும் வகுப்பினர்களு மிருந்தனர். J. S. I. Association Vol. II. page-2-3.

"பெருமுத்தரையர்பெரிதுவந்தீயுங்
கருணைச்சோழர்வர்கயவர்—கருணையைப்
பேருமறியார்நனிவிரும்புதாளாண்மை
நீருமமிழ்தாய்விடும்" (தாளாண்மை. 10 செ.)

"மல்லன்மாஞாலத்துவாழ்பவருளெல்லாஞ்
செல்வரெனினுங்கொடாதவர்நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக்கண்ணும்பெருமுத்தரையரே
செல்வரைச்சென்றிரவாதார்" (மானம். செ. 6)

ஆகவே, இச்செய்யுட்களியற்றப்பட்டகாலத்துப் பெருமுத்தரையர் என்பார் சிறப்புற்றுவிளங்கியிருத்தல்வேண்டும். பண்டைக்காலத்து முத்தரையர் என்று ஒருவகுப்பினர் இருந்தனரென்பது சிலாசாஸன வாராய்ச்சியால் தெரியவருகின்றது. "இவர்கள் காலத்திற்குத் தக்கபடி பல்லவர்களிடத்தோ பாண்டியர்களிடத்தோ கப்பங்கட்டிவந்தனர்." (Pallava Antiquities Vol. II p. 16). இன்னவரில் விடேல்விடுகு முத்தரையனென்பான் மலையடிப்பட்டிச் சாஸனங்களிரண்டில், தான் தந்திவர்மன்கீழ்ச் சிற்றரசனேயென வொப்புக்கொண்டிருக்கின்றன். (J. S. I. Association Vol. II p. 23. Inscriptions 3 and 4.) தவிர, புதுக்கோட்டைச் சமஸ்தானத்திலுள்ள மலையடிப்பட்டி நார்த்தாமலை முதலிய இடங்களிற் குகைக்கோயில்கள்* செதுக்கியிருக்கின்றனர். "அவைகள் சிற்பவடிவு சாஸ்திரப்படி 'பாண்டியன்வடிவை' யொக்குமேயொழிய 'நந்திவர்மன்வமிசத்தியவடிவை' யொவ்வாது." (Pal. Ant. Vol. II p. 16.) நந்திவர்மன் வமிசத்திற்குமுன்பு ஆண்டலிம்ஹவிஷ்ணுவமிசத்தவர்களி லெவராவது முத்தரையர்நாட்டையாண்டதாகத் தெரியவில்லை. அக்காலத்திலிங்நாட்டிலும் சோழர்களிருந்ததாகவுந் தெரியவில்லை. ஆகவே லிம்ஹவிஷ்ணுவமிசகாலத்தில் இவர்கள் இந்நாட்டிலாண்டுவந்தனர். ஆனால் அவர்கள் ஆண்டது மதுரையைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த பாண்டியர்களின் கீழோ அல்லது தனிமையாகவோ என்பது நமக்குத் தெரியாது. நாலடியாரிற்

* குகைக்கோயில் என்பது ஒரு மலைக்குள் குடையப்பட்டு, அநேகமாக ஒரு தாழ்வாரத்தையும் அறையையும் உடையதாயிருக்கும். அவ்வறைகளுள், சுவாமிவடிவமிருக்கும். இதுதான் மணிமேகலையிற் 'குச்சரக்குடிகை' எனக் கூறப்பட்டது.

கூறப்பட்டதிலிருந்து இவர்கள் அச்சமயத்துப் பாண்டியர்களின் கீழோ அல்லது தனிமையாகவோ அரசுநடாத்திவந்திருக்கவேண்டும் என அறிகின்றோம். நாலடியார்காலம் கி. பி. 717க்குப் பிறகே யாரம்பிக்கின்றது. ஆகவே நாலடியார் 717க்குப்பிறகு இயற்றப்பெற்றதாகும். அதிலிருந்து நாலடியார் என்பது கி. பி. ஏழாம்நூற்றாண்டின்கடைசியிலோ எட்டாம்நூற்றாண்டின் முதலிலோ எழுதப்பட்டிருத்தல்வேண்டும் என்பது விளங்கியவாறு கண்டுகொள்க.

கடைச்சங்கம் கி. பி. இரண்டாம்நூற்றாண்டிலும் அதற்கு முற்றியகாலங்களிலும் நடைபெற்றதாதலின் நாலடியார் கடைச்சங்கம் மருவிய நூல்களி லொன்றன்றென்பது நன்கு வெளியாதல் காண்க.

இனி, நூலின்முவக்கத்தில் அருகக்கடவுள்வணக்கங் கூறப்பட்டிருப்பதால் நூலியற்றியோர் ஜைனரென்பதும், பதுமனாரால் அதிகாரம் பெறத் தொகுக்கப்பட்டிருப்பதால் நூலிலுள்ள செய்யுட்களெல்லாம் ஜைனமுனிவர்பலரா லியற்றப்பெற்றதாகுமென்பதும் இனிது புலப்படும். அன்றியும், இந்நூலை முழுதும் நன்காராய்வார்க்கு இந்நூலிலுள்ள செய்யுட்களெல்லாம், பலரால், ஒருகாலத்திலியற்றப்பெற்றுப் பின்னர் ஒருவரால் தொகுக்கப்பட்டிருக்கவேண்டுமென்பது விளங்காமலிருக்காதென்க. இதனால், கடைச்சங்க காலத்திற்குப்பிறகு ஜைனமுனிவர் பலர் ஒருங்குசேர்ந்து, தமிழ்வளர்ப்பதற்கு மிக முயன்றுள்ளனரென்பது வெளியாகின்றது. இனித் திகம்பரதரிசனம் என்னும் ஜைனநூலில், தென்மதுரையகத்துப் பூஜ்யபாதர்மாணைக்கர் வச்சிரநந்தி என்னும் ஜைனமுனிவரால் ஒரு தமிழ்ச்சங்கம் கூட்டப்பட்டதென்று கூறப்பட்டிருக்கின்றது*. இச்சங்கம் முந்நூற்றுவரைப் புலவராகவுடையது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணி அரங்கேற்றப்பட்டதும் எலிவிருத்தம், நரிவிருத்தம், கிளிவிருத்தம் முதலிய நூல்களியற்றப்பட்டதும் இச்சங்கத்திலேதான்.†

இச்சங்கத்திருந்த புலவர் பலரும் ஜைனராதலின் இவர்கள் காலத்திருந்த பாண்டியனும் ஜைனமதப்பற்றுடையனாகி அம்மதத்திற் புகுந்து

---

* செந்தமிழ் மூன்றாந்தொகுதியுள், பிரம்மஶ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் எழுதியுள்ளதைப்பார்க்க.

† இது அடுத்த வியாசத்தில் நன்கு விளக்கப்படும்.

சைவத்தை யிகழ்ந்து வந்தனன். ஆயினும் இவனது கற்புடை மனைவி யாகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் சைவசமயத்தில் மிகுந்த பற்றுள்ளவர்களாதலின் அரசனறியாவண்ணம் தங்கள் மதத் தைப் பரிபாலித்துவந்தார்கள். இவர்கள் இருவருமே பரசமயகோளரி யாகிய திருஞானசம்பந்தசுவாமிகளை வரவழைத்து மேற்கூறிய சங்கத்து ஜைனமுனிவர்களுடன் வாதஞ்செய்து சைவசமயத்தை மீண்டும் நிலை நிறுத்தினர்கள். சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தசுவாமி களுடன் அனல்வாதஞ்செய்து தோல்வியடைந்து புனல்வாதஞ்செய்யப் புகுந்த மேற்கூறிய சங்கத்து ஜைனமுனிவர்களாலியற்றப்பட்ட செய் யுட்களே பின்னர்ப் பதுமனரால் நாலடியாரென்னும் பெயருடன் தொகுக் கப்பட்டது. ஜைனவித்வான்கள் பலரும் நம் சுவாமிகளுடன் செய்த புனல்வாதத்திலும் தோல்வியடைந்தனராயினும் அவர்களது செய்யுட் கள் பலநீதிகளை இனிமைவாய்ந்த வெண்பாக்களில் எடுத்துக்கூறியமை யால் அவற்றை யவமே போக்காது பதுமனர், திருக்குறளை முழுதும் பின்பற்றி, முப்பால்படும் வண்ணம் தொகுத்தனரென்ப. வைணவசமயா சாரியராகிய நம்மாழ்வார் வாதஞ்செய்தது மிச்சங்கத்தாரோடுதான்.

• பாண்டியன் நெடுமாறனையே முடத்திருமாறனென்றும், கூன் பாண்டியனென்றும் சுந்தரபாண்டியனென்றும் வழங்குவர். இவ்வரசர் பெருமானுக்கே "நெல்வேலிவென்ற நெடுமாறனடியார்க்கு மடியேன்" என்று திருத்தொண்டத்தொகையில், சுந்தரமூர்த்திசுவாமிகள் வணக்கங் கூறியுள்ளார்கள். (பாட்டு 8.) இவன் நெல்வேலியில் நடந்த வொரு பெரும்போரில் வாகைமிலைந்தனனென்பது வேள்விக்குடிச் செப்பேடு களால் நன்கு விளங்குகின்றது. அது இவன் "நெல்வேலிப்போரில் வில்வேலியின் கடல்போன்ற படையை ஜெயித்துக் கோளரிஜாவின் சேனையையும் வென்றான்" எனக் கூறுகின்றது. இவருடன் சமகாலத் தவரான சம்பந்தர், முதல் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ அரசனுடன் வாதாபியைவென்ற சிறுத்தொண்டநாயனரின். சமகாலத்தவராவர். (பெரியபுராணம். 318.) "அவர்கள் வாதாபியைக் கைக்கொண்டது கி. பி. 642க் கணித்தாகும்." (The Pallavas by G. Jouream-Dubrevil p. 40.) ஆகவே நெடுமாறன் கி. பி. 650க் கணித்தாக வாழ்ந்தவனேயாம்.

அன்றி, முதலாம் பரமேசுவரவர்மன் வீரச்செயல்களைப்பற்றிக் கூறும் "கூரம் செப்பேடுகள்" "அநேகலகூடம் படைகளையுடைய விக்கிரமாதித்தனைத் தோற்கடித்து ஒரு கந்தைத்துணியைமட்டும் மூடிக் கொண்டு பிறகிட்டோடும்படி செய்தான்," எனக் கூறுகின்றன. அவ் விக்கிரமாதித்தன் உறையூரிலிருந்தபோது கொடுத்த 'காட்வல் (Gadval) செப்பேடுகள் அது கி. பி- 674ல் நிகழ்ந்தது என்று நிச்சயமாகக் கூறுகின்றன. அப்பொழுது ஆண்டுவந்தவனும் அச்சண்டையில் விக்கிரமாதித்தனை எதிர்த்தவனுமாகிய பாண்டியன் கோச்சடையனைப்பற்றி 'அவன் மருதூரிற் கட்டல்போன்ற சேனையைவென்று மங்கலபுரம் என்னும் பெரியபட்டணத்தில் வைத்து மஹாரதனையும் வென்று அழித்தான்." என வேள்விக்குடித் தானசாசனம் கூறுகின்றது. இக்கோச்சடையன் நெடுமாறனது புதல்வனுகும். ஆகவே பாண்டியன் நெடுமாறன் 650க் கணித்தாக வாழ்ந்தவனே.

இதிலிருந்து அனல்வாதம் புனல்வாதஞ் செய்து தோல்வியடைந்த மேற்கூறிய ஜைனமுனிவர் பலரால் கி. பி. ஏழாம்நூற்றாண்டின் மத்தியிலியற்றப்பெற்றது நாலடியாரென்பதும், பின்னர் நாலடியார் என்னும் பெயருடன் அதிகாரம்படப் பதுமனரால் தொகுக்கப்பட்டதென்பதும், "நாலடி.....கீழ்க்கணக்கு" என்னும் வெண்பா, பிற்காலத்திலொருவராற் காலவரிசைநோக்காது எதனை மோனை நோக்கி இயற்றப்பட்டதென்பதும் நன்கு விளங்கியவாறு கண்டுகொள்க.

வாலிபர் தென்னிந்தியசரித்திர வாராய்ச்சிச் சங்கம், கும்பகோணம்.

நா. சுப்பிரமணியன்.
காரியதரிசி.

ஒரு விஞ்ஞாபனம்.

பன்னருஞ்சிறப்பிற் பவணந்திமுனிவரருளிய "நன்னூ"லில் உத்தமமாணாக்கருக்கு அன்னத்தை உவமைகூறினர்; அதற்கு உரைகாரரெல்லாம் பாலும் நீரும் பிரித்துப்பருகும் அன்னம்போலுமென்றார். அன்னத்திற்குப் பாலும் நீரும் பிரித்துப்பருகுந்தன்மையுண்டா? அப்பறவை தற்போது எங்குள்ளது? இதற்கு நூற்சாகூியுண்டா? இவற்றிற்கு விடையளித்து எனது அறியாமையை அகற்றும்படி அறிஞர் கணை வேண்டுகின்றேன்.

—— ப. மு. மதுரையார்.

இந்தியரின் பள்ளியெழுச்சி.

(1) கிழக்கொளி கிளர்ந்தது; கிழிந்தது இருளும்;
கேடறு மெனவிண்மீன் ஓடறும் கடலுள்;
விளக்கொளி மழுங்கின; மழுங்கிற்று மதியம்
வீரியர் முன்வலி பூரியர் கெடல்போல்;
வழக்கொழி யதிர்ந்தது; அதிர்ந்தது சங்கம்;
வயப்பறை யொலித்தது; மாந்தரும் தாந்தம்
இழக்கரு மேனிலைக் கெழுந்தன ரதனுல்
இந்தியரே பள்ளி யெழுந்தரு ளீரே.

(2) சோலையும் கலித்தது; துறைகளும் கலித்த;
தூவின மலர்மணம்; கூவின சேவல்;
வேலியும் கொதித்தெழல் விண்டது சுழல்வோர்
வெவ்வுரை பொழிந்தயர்ந் தடங்கிடல் போல;
ஆலயந் தொறும்முழ வரற்றின; குளிர்நீர்
ஆடலே வேண்டினர் ஈண்டினர் மறுகில்;
எலமார் குழலியர் இளைத்தனர் எழுந்தார்;
இந்தியரே பள்ளி யெழுந்தரு ளீரே.

(3) கதிரெனுங் கைகொடு ஒளிக்கள்வன் மலரின்
கதவங்கள் திறந்தனன் பைப்பயக் கள்ளில்
கொதியெழு வண்டினம் கூக்குர லுடனே
கோட்டையுட் புகுந்தன வேட்டைவந் தெனவே;
அதிசயம்! ஈயெறும் பாதிய எல்லாம்
அடுத்ததந் தொழிலையே தொடுத்தன போகா;
எதுசெய லாகினும் தாழ்த்திட லாகா;
இந்தியரே பள்ளி யெழுந்தரு ளீரே.

(4) காளை வில்லதோர் காலம்நீர் சும்ப
கருணைனப் பூசித்தே கலங்கினீர் தொழிற்கு;
மாளவில் மேற்கர் மதியினில் நிதியில்
வலியரே யெனினுமோர் எறும்புந்தன் கைக்கொண்

சாணள வென்றுநீர் தரித்திலீர்; சோம்பல்
தழைத்துயர் கோயின்கீழ்ச் சாய்ந்துளீர் சயனம்;
ஏணள வில்லவர் எங்கும் எழுந்தார்
இந்தியரே பள்ளி யெழுந்தரு ளீரே.

(5) எழுந்தனர் ஈனரென் றெண்ணிய பல்லோர்
ஏற்றமாம் ஜாதிக்கோர் கூற்றுவ ரெனவே;
எழுந்தனர் தொழில்புரிந் தெய்க்கின்ற கையார்
இடும்பையே தருஞ்செல்வம் இடும்பை கிறிடவே;
எழுந்தன ஜனத்திரள் இருட்டறை விட்டே
இந்திர வரசும்தம் மந்திரம் நிற்க;
எழுந்தனர் சிறுவரும் இசையுறு நசையால்;
இந்தியரே பள்ளி யெழுந்தரு ளீரே.

(6) வேலையும் கடந்துளீர்; வெற்றுரை நம்பி
விட்டிளீர் செல்வமும் வீரமும் ஒருங்கே
சாலையுந் தாழிட்டுச் சாத்தினீர்; ஞானம்
தருதற்கோ வருதற்கோ வழியிலை; எமனார்
ஓலையும் மறந்துநீர் ஒன்றுஞ் செய்யாதே
உறங்குகின்றீர்; கற்பம் இருப்பவரோ தாம்!
ஏலள விற்பணி இனிச்செயல் வேண்டும்;
இந்தியரே பள்ளி யெழுந்தரு ளீரே.

(7) உடலையும் வெறுத்துளீர் உறவையும் வெறுத்தீர்
உடைமையும் வெறுத்துளீர் ஊக்கமும் வெறுத்தீர்;
திடமுள செயல்செயல் தீவினை யெனவே
செப்பினீர்; தீச்செயல் விலக்கலீர்; பெரிய
மடமுள விடங்களில் வாழ்ந்துளார் போல
மயக்கமுந் தியக்கமும் மருவினீர்; இனிதும்
மிடமுள குற்றங்கள் இவைவிடல் வேண்டும்;
இந்தியரே பள்ளி யெழுந்தரு ளீரே.

K. N. சிவராஜன் பீ. ஏ.,

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககூ.] ரௌத்ரி-வரு பங்குனி-மீ [பகுதி டு.

Vol. XIX. March—April—1921. No. 5.

தமிழ்ப்பாஷை.

க. தமிழ்ப்பாஷை இமயமலையிலிருந்துவந்தது என்று சிலரும், இமயமலைக்குக் கிழக்கேயிருந்துவந்தது என்று சிலரும், கங்காநதிக் கரையிலிருந்துவந்தது என்று சிலருஞ் சொல்லுகிறார்களே! இப்படியெல்லாஞ் சொல்லுதற்குப் பழந்தமிழ்நூல்களிலே பிரமாணமு முண்டா? அவ்விடங்களிலே தமிழ்ப்பாஷை ஆதியிலே வந்தது எப்படி? தமிழ்நூல்களே அறியாத அந்நியபாஷையாளர் சொல்லும் சான்றுகளும் இங்கே பிரமாணமாகுமா?

உ. தமிழ்ப்பாஷையைத் தாய்ப்பாஷை என்றும், பிறிதொன்று கலவாததனிப்பாஷை என்றும், சொல்லுகிறார்களே! பிரமாணம் யாது? தமிழ்ப்பாஷை தாய்ப்பாஷையாயின்; மற்றைய முறைகள் அமைந்து நின்ற பாஷைகள் யாவை? தனிப்பாஷையாயின், தொல்காப்பியம் முதலிய பழையநூல்களிலே வடசொற்களும் வடநூற் பொருள்களும் கலந்துவருவதென்னையோ?

ங. பாலபாடம் ஒன்றிலே நாவலரவர்கள் தமிழ் என்பதற்குக் கூறிய முடிபை மறுத்து அது வடசொல்லாயிருத்தல் அடாது என்பதுஞ் சொல்லி, அதற்கு "இனியபாஷை" என்று பொருள்கூறுவார்க்குப் பிரமாணம் யாது? தமிழ்நாட்டிலே வழங்கும் பெயர்களுள்ளே வடமொழிப்பெயர்களில்லையா? தமிழ் என்பது இனிமை என்பதையன்றி இனியபாஷை என்பதையும் அறிவிக்குமோ? ஆரியம் முதலிய பாடைகளில் இனிமை இல்லையா?

ச. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதிநூல்களைப் படிப்போர்க்கும், பாரதம் முதலிய இலக்கியங்களைப் படிப்போர்க்கும், படிப்பிப்போர்க்கும் படிப்பைச் சோதனைசெய்து சரி பிழைகள் சொல்வோர்க்கும், பழையநூல்களைப் பரிசோதிப்போர்க்கும், புதியநூல்களைச் செய்வோர்க்கும் நிகண்டுநூலுணர்ச்சியும் இலக்கணநூலுணர்ச்சியும் வேண்டுமா? வேண்டாமா?

ஞ. தமிழ்நூல்களைப் படித்துக் கருத்துப் பதப்பொருள் முதலியன கண்டற்கும், கற்போர்க்கு ஐயமறப் போதித்தற்கும், புதியனவாக நூலுரைகளைச் செய்தற்கும், புதிய நூலுரைகளை முற்றவாசித்துச் சரி பிழைகள் கண்டு சரியானவைகளைக் கொள்ளுதற்கும், பிழையானவைகளைத் தள்ளுதற்கும் நல்ல புலமைபெறுதற்கு எத்தனைவருடம் படிக்க வேண்டும்? படித்ததுமாத்திரம் போதுமா?

ஃ. பழையநூல்களைப் பரிசோதித்தல், புதியநூல்களைச்செய்தல் என்னும் இரண்டனுள்ளே அரியசெயல் யாது?

எ. நூலுரைகளை அச்சிடுங்கால் மூலபாடங்களைச் சந்தி பிரித்து அச்சிடவேண்டுமா? பிரியாமல் அச்சிடவேண்டுமா? "அகரமுதலவெழுத்தெல்லாம்" என்னும் மூலபாடத்தை "அகரம், முதல, எழுத்து எல்லாம்" என்று பிரித்துவிட்டாற் பக்கிசைத்துப் படிப்பவர்க்குத் தட்டுளுப்புவாராதோ? முன்னோர் எங்ஙனம் செய்தனர்?

அ. சிறுவர்படிக்கும் வசனபுத்தகங்களிலேவருஞ் சொற்றொடர்களை முற்றுகப் பிரித்துவிடவேண்டுமா? பிரிக்கவேண்டிய சிலவற்றை மாத்திரம் பிரித்துவிடவேண்டுமா? கற்கட்டு, விற்பூட்டு, பொற்பாத்திரம், பஃறொடை, மறைக்காட்டுப்பதிகம் என்பவைகளைக் கல் கட்டு, வில் பூட்டு, பொன் பாத்திரம், பல் தொடை, மறைக்காடு பதிகம் எனப் பிரித்துவிடுங்கால் அது சிறுவர்க்கு இலகுவாய் முடியுமா? கடினமாய் முடியுமா? அறிஞர்க்குப் பிழையாய்முடியுமா? சரியாய்முடியுமா?

கூ. பாட்டுவடிவாக நூல்செய்தலா? வசனவடிவாக நூல்செய்தலா? அரியது யாது? நூல்செய்தலா? உரைசெய்தலா? அரியது யாது?

கo. இலகுவாகும் என்று காலி, சுமார், ஆஜர் முதலிய திசைச் சொற்களை எழுதிவிடுதலும் இருஷி, கஷ்டம், கஜீ முதலிய வடசொற்

களை எழுதிவிடுதலும், எழுத்திலக்கணம் படிப்பிக்குமுன் சொல்லிலக் கணம் படிப்பித்தலும் மாணவகர்க்கு இலகுவாய்முடியுமா? சுடினமாய் முடியுமா?

கக. வழுவில்லனவாகவும், எளிதில் அறிதற்பாலனவாகவும் நாவல ரவர்களாலே மாணவகர்பொருட்டுச் செய்யப்பட்ட புத்தகங்கள் சிலரா லே நொதுமலாக விடப்படுதற்கும், பலவகை வழுக்கள் நிறைந்த சில புத் தகங்கள் கொள்ளப்படுதற்கும் காரணம் யாது?

கஉ. மாணவகர்க்கு நியமிக்கப்படும் பாடபுத்தகங்களும், படிப்பிப் போர் தெளிவும், பரீகைகூவினுக்களும், செப்புநோக்கமும் வழுவுறுமா யின், மாணவகர்பயன் யாதாய்முடியும்!

கங. காணப்படும் வழுக்களை உலகறிய வெளிப்படுத்தல் நல்லதா? மறைத்துவைத்தல் நல்லதா? வழுக்கள் சொல்வோரை உவத்தல்வேண்டு மா? வெறுத்தல்வேண்டுமா? பெரும்பாலும் வழுவில்லது என்றன்றி ஒன்றும் வழுவில்லது என்று கொள்ளப்படுவதும் உண்டா?

கச. ழகர ளகரங்களும், நகர னகரங்களும் சொற்களிலே மாறு படாமல் வழங்குதற்கு யாது செய்தல்வேண்டும்?

கரு. தமிழ்ப்பாஷையிலே செய்யப்பட்ட நூல்கள் தக்க தமி ழுணர்ச்சியுந் தமிழபிமானமுமில்லார்க்குக் காட்டி அங்கீகரிக்கப்படுதலும், பாயிரம் சொல்லப்படுதலும், சரி பிழை தெரிந்துந் தெரியாதும் கொள் ளப்படுதலும் அறிஞர்க்கு யாதாய்முடியும்?

கசு. உபாத்திமார், ஆணுவாத்தி, பெண்ணுவாத்தி, உபாத்தியா யனி, உபாத்தியாயினி, ஆசிரியகாசிநாதர், ஆண்கல்வி, பெண்கல்வி, காகூஷி, மாகூஷி, ஐயா அவர்கள், உமாபதிசிவாசாரியார் அவர்கள், பண் டிதர் அவர்கள், சுவாமிநாதன் அவர்கள், நாவலர்பெருமான், திரிகராட்டி ரன், ஸ்ரீராமர், செத்தினம், பொதிகைமலை, வாழைமீன், திமிங்கிலம் பெரிது, "சாமானிய அல்லதுமந்த" அநான்று, "தமிழ் படித்தவர் பாட புத்தகம் எழுதமாட்டார்" நதி யோடிக்கொண்டிருக்கையில், சுகாத்தியம், யௌவனதிசை, முற்றிக்கை, பங்கிகரணம், பிணமரம் என்பன வழுவில் லனவாகுமோ? வேறுகுமோ?

கஎ. விளக்கினர், விளக்கியுள்ளார், எழுதினர், எழுதியுள்ளார், பாடினர், பாடியுள்ளார், உரை எழுதப்பட்டது, உரை எழுதப்பெற்றது, கருத்துக் கூறப்பட்டது, கருத்துக் கூறப்பெற்றது என்னும் வினைமுற்றுக்களுள்ளே பொருந்தாதனவும் மங்கலத்துக்கு மாறுவனவும் உளவா? இல்வா?

கஅ. உபநியாசம், வியாசம், அன்றேல், ஆகவே, இறவுக்கை, குறிப்பு, ஆசிரியர், கோரிக்கை, பவனம், அற்சிரம், கணியாளி, சீவபிராணி, பாஷைப்படுத்தல், உருண்டை, துலாக்கோல், கண்டிசின், ஆஷாடபூதி என்னும் சொற்களுக்குப் பொருள்கள் யாவை? பரியாயமாகக் கொள்ளத்தகும் சொற்கள் யாவை? இவற்றுள்ளே சான்றோர் நூல்களிலேவருஞ் சொற்களு முளவா? உளவாயின், அவை யாவை? எப் பொருள்களிற் கொள்ளப்பட்டன?

கஉ. தமிழிலே இடும் கைச்சாத்தின்முன்னே இடப்படும் முதலெழுத்துத் தமிழிலே இடப்படுதல் நல்லதா? வேறுபாஷையில் இடப்படுதல் நல்லதா?

உ0. இன்னசொல்லுக்கு இன்னது பொருள் என்னும் சங்கேதம் நோக்காது கதாநுகதிகந்யாயமாகச் சொற்களை வழங்குதலும், இலக்கிய லக்கணங்களிலே முன்னோர்கொண்ட முறைகளை வேறுமுன்றகொள்ளும்வாயிலாலே மறுத்தலும், தமிழபிமானிகளும், அறிஞரும் பிழைகளைத் திருத்தாதுவிடுதலும், தமிழ்ப்பாஷைக்கு யாதாகும்? தமிழ்ப் பாஷை இலக்கணவரம்புடையது என்பது பெரியோர்வாக்கு.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

ஒரு செய்யுளுரை.

இத்தமிழ்நாட்டிற் பண்டைக்காலத்துப் புலவர்களாற் பாடப்பெற்ற பாடல்கள், சிறுநூல்களாகவும் பெருநூல்களாகவும் பல அமைந்துள்ளன. அவற்றிற்குச் சில ஆன்றோர்களியற்றிய உரைகளும் அமைந்துள்ளன. அவ்வுரைகள், நூலாசிரியர்கருத்தைச் செவ்வனே விளக்குகின்றன.

ஆன்றோர்களா லுரையியற்றப் பெறுதனவாகிய சில அருமையான நூல்களுக்கு இக்காலத்துப்புலவர்கள் பலர், உரையியற்றி யுவகையெய்துமாறு தமிழ்மக்களுக் குதவுகின்றனர். இவர்கட்கு எஞ்ஞான்றுந் தமிழுலகம் நன்றிபாராட்டுங் கடப்பாடுடைத்து. அவ்வுரைகளிலே சில, ஆசிரியர்கருத்தையும், உண்மையையும், விளக்குவனவாயும், சில உரைகள் உண்மையை இன்னதென்றறிதற் கேலாதனவாயும் உள்ளன.

அவ்வாறு உண்மைகாணற் கியலாதனவாயிருக்குஞ் செய்யுட்களிலும், உரைகளிலும் ஒன்றுக, ஔவையாரருளிய நல்வழியின் இறுதியிலுள்ள,

> "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
> திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்"

என்னுஞ் செய்யுளும், இதன் உரையும் உள்ளன.

மேற்கண்ட செய்யுளுக்கு இக்காலத்தாருரை வருமாறு:—

திருவள்ளுவநாயனருடைய திருக்குறளும், சிறப்பமைந்த நால் வேதமுடிவாகிய உபநிடதங்களும், ஞானசம்பந்தர் நாவுக்கரசர் சுந்தரர் என்னும் மூவரருளிய தேவாரங்களும், வியாசமுனிவரருளிய வேதாந்த சூத்திரமும், திருவாதவூரரருளிய திருக்கோவை திருவாசகங்களும், திருமூலநாயனாருளிய திருமந்திரமும் ஆகிய இந்நூல்களனைத்தும் ஒரு பொருளே நுதலிவருவன; என்பதே இக்காலத்தாருரையாகும்.

இவ்வுரையின்கண் சில ஐயங்கள் நிகழ்தற் கிடனுண்டு. அவை, செந்தமிழ்ச் செழுநூல்களிற் சிறப்பமைந்தனவாயுள்ளன இத்துணைதானு? இச்செய்யுளுரையிற் கூறப்படும் நூல்களினும் பெருமையாகப்

பேணப்படும்நூல் உள்ளதே; அதனைக் கூறுதகாரண மென்னை? தண்டமிழ் பயிலும் மாணவகர்கள் தெய்வ அன்பையும் நீதியையும் அறிந்து கோடற்பொருட்டு என்புருக்குஞ் செஞ்சொற்பாடற் சமயநூல்களையும், பசுமரத்தாணிபோற் பதியுஞ் செவ்விய நீதிகளைப் புகட்டற்கேற்ற நூல்களையும் கூறுதற் கெடுத்துக்கொண்ட இச்செய்யுளில், செந்தமி ழிளைஞர்கள், அறிதற்கரிதாயுள்ளனவாய உபநிடதங்களையும் வேதாந்தசூத்திரத்தையுங் கூறியகாரண மென்னை? என்பனவாம்.

இவ்வையங்களைத் தெளிந்துகோடற்கெண்ணி ஆராய்ந்ததில் இவ்வையம்நிகழற் கிடனின்றியே செய்யுளமைந்திருக்கிறதென்று தோற்றுகின்றது. அது வருமாறு:-

தேவர்குறளும் — வள்ளுவநாயனார் வழங்கிய திருக்குறணூலும், திருநான்மறைமுடிவும்—சிறப்பமைந்த நான்மறைமுடிவாகிய பெருமைசான்ற நாலாயிரப்பிரபந்தமும், மூவர்தமிழும்—சம்பந்தர் நாவுக்கரசர் சுந்தரர் ஆகிய வருட்டேரோரளித்த தேவாரமும், முனிமொழியுங் தோவை திருவாசகமும்—வாதவூர் முனிவர் அருளிய திருக்கோவை திருவாசக மென்னும் நூல்களும், திருமூலர்சொல்லும்—திருமூலநாயனாரருளிய திருமந்திரமும் ஒருவாசகமென்று உணர்—ஆகிய இவை யாவும் ஒரு பொருணுதலிய தண்டமிழ்நூல்களென் றறிக.

திருநான்மறைமுடிவென்றதற்கு நாலாயிரப்பிரபந்த மென்றும், முனி என்றதற்கு, வாதவூர்முனிவரென்றும் பொருள்கூறிய காரணம் வருமாறு.

சைவசமயத் தமிழர்களுக்கு வேதமாகிய தேவார திருவாசகங்களைக் கூறியுவர் வைணவசமயத்தமிழர்களுக்கு வேதமாகிய நாலாயிரப்பிரபந்தத்தையுங் கூறவேண்டுமாகலானும், தாமரைக்கண்ணன் ரூட்டுணைமற வாத் தொண்டர் குழாங்களிற் றாயசீர்சான்ற ஆழ்வார்களாற் பாடப் பெற்ற அரும்பெருந் திருமறையாகலானும், நான்மறைகளின்முடிவான மெய்ப்பொருளையே முழக்கும் முதுமொழியாகலானும், இறைவன் திருவுலாப்போங்கால் வடமொழி வேதத்திற்கு முன்னின்று முழங்கிச்செல்லும் பெருமைபுடைமையானும், இன்றும் தென்கலைவைணவர்கட் குரிய தூயவேதமாகக் காணப்படுதலானும், திருநான்மறைமுடிவென்பது நாலாயிரப்பிரபந்தமே யென்க.

இச்செய்யுளியற்றிய ஔவைப் பிராட்டி சைவசமயத்தைச் சார்ந்தவராகலின், நாலாயிரப்பிரபந்தத்தைக் கூறார்; உபநிடதங்களையே கூறினர்; எனின்; இச்செய்யுளின் முதற்கண்கூறிய திருக்குறள் எச்சமயத்தோர்க்கும் ஏற்புடைத்தான இன்றமிழ்ப் பெருமறையாகலானும், உபநிடதங்களும் அறுவகைச்சமயத்தார்க்கும் ஒப்பமுடிந்தனவாகலானும், இச்செய்யுள் சைவவைணவர்களாகிய இருமதத்தினர்க்கும் ஒப்பக்கூறியதாகலானும், பண்டைக்காலத்தே சமயப்பொறுமை மிகுதியாக இன்றென்பது தெளிவாகலானும், இது சமயச்சார்பாகக்கூறியதன்றென்க.

முனியென்பது வாதவூரடிகளுக்கே பொருந்துமாதலானும், நிலையிலாப்பொருளினைத்தையும் நில்லாவெனவுணர்ந்து நீத்த பெருந்தகையாராதலானும்,

'கற்றவாதவூர் முனிவரையழைத்து, என்றும்'
'மரித்தமனமும்புலகமுமாய்நின்றார்வாதவூர்முனிவர்' என்றும்,
'இனியமாமுனிவர்' என்றும்,
'செல்வமாமுனி' என்றும்,
'பாடன்மாமுனிவர்' என்றும்,
'பின்னியல்முனிவர்' என்றும்,
'நன்முனியடிவிடென்று நாயகனருளிச்செய்தான்' என்றும்,
'அறந்தருமுனிவன்' என்றும்,

பண்டைப்பனுவல்களில்வழங்கும் பெருவழக்குண்மையானும், முனியென்பது வாதவூர்முனிவரையே யென்க.

இவ்வுரையை முத்தமிழ்த்துறையின்முறைபோகிய உத்தமப்புலவர் ஆய்ந்து உண்மையைவெளியிடுமாறு வேண்டுகின்றேன். எனது சிற்றறிவுக்கெட்டியமட்டும் வரைந்த இவ்வுரையிற் காணுங் குற்றங்கட்காக என்னை அறிவுடையார் கடைக்கணிப்பாராக.

இங்ஙனம்,

மானவன். சா. சிதம்பரன்,

கரந்தைத்தமிழ்ச்சங்கம்.

அணிற்பிள்ளையின் அருமைத்தொண்டு

——:o:——

"அணிலெனும்பிராணி யயோத்திராமனுக்
குதவிசெய்ததா யுலகெலாங்கூறும்."

அணிலெனும் பிராணியின் சிறுமை யென்ன? அயோத்தி ராமபிரானின் பெருமை யென்ன? இவருக்கு இவ்வற்பப்பிராணி யென்னவுதவியை யெவ்வாறு எப்பொழுது செய்தது? என்று விசாரிக்குங்காலத்தில் ஸ்ரீராமபிரான் திருவணைகட்டியகாலத்தில் இது தன்னாற்கூடியவுதவியைச் செய்யவேண்டுமென்றுட்கொண்டு சமுத்திரத்தில் மூழ்கிவந்து சமுத்திரக்கரை மணலிற்புரண்டு உடலில் ஒட்டிய மணலைத் திருவணையிற்சேர்த்தது. இவ்வாறு திருவணை நிறைவேறுகிறவரையிற் செய்தது. கருணையங்கடலாகிய ஸ்ரீராமமூர்த்தி அன்புமேலீட்டாற்செய்யும் அணிலின் திருத்தொண்டிற்குத் திருவுள்ளமகிழ்ந்து அதன்முதுகிற் றடவிக்கொடுத்த திருக்கைவிரலடையாளமே அதன்முதுகில்தோன்றும் அடையாளமென்பர்.

இவ்விஷயம், கம்பராமாயணம் சேதுபந்தனப்படலத்திற் காணப்படவில்லை. வான்மீகத்திலும் இல்லையென்றே வடமொழிவாணர்கள் கூறுகிறார்கள். பின் இச்செய்திவழங்கக் காரணம் என்னவென்றுபார்க்குங்கால், தொண்டரடிப்பொடியாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய வேதாந்தசாரமாகிய திருமாலை (உள) இருபத்தேழாம்பாசுரத்தில் இது நன்குவிளக்கப்பட்டிருக்கக் கண்டோம். அப்பாசுரம் இது.

"குரங்குகண்மலையைத்தூக்கக் குளித்துத்தாம்புரண்டிட்டோடித்
தரங்கநீரடைக்கலுற்ற சலமிலாவணிலும்போலென்
மரங்கள்போல்வலியநெஞ்சம் வஞ்சனேனெஞ்சுதன்னால்
அரங்கனூர்க்காட்செய்யாதே யணியற்றேனையர்க்கின்றேனே.

இதுபோன்ற அரியவிஷயங்கள் பிரபந்தத்திற் காணப்படுகின்றன. சமயம்நேருங்காலங்களிற் காண்பதை வெளியிடுவோம்.

ஜி. சதாசிவம்பிள்ளை,
நாகை நீலலோசனிப்பத்திராதிபர்.

அகலிகை வெண்பா

இரண்டாம் பதிப்பின் அநுபந்தம்.

(*All rights reserved by the author.*)

முன்னுரை.

1. அகலிகைவெண்பா இரண்டாம்பதிப்பு அச்சிடப்பெற்றபின்பு, காலஞ்சென்ற பிரமஶ்ரீ சிவபுராணப் பிரசங்க சிரேட்டர் சுந்தரேசுவர ஐயரவர்களுடன் இந்நூலைப்பற்றி நான் பேசிக்கொண்டிருந்தபோது "கௌதமன் இந்திரன் இருவரும் நீரில் முழுக, எவன் பின்னெழுவானே அவனுக்கே அகலிகை உரியவள்" என்று பிரமதேவர் கூற, இருவரும் முழுகக் கௌதமர் பின்னெழுந்து அகலிகையை அடைந்தாரென்னும் கதையேயன்றி, அந்தப் பிரமதேவரே "எவன் முன்னும் பின்னும் முகமுடைய பசுவை மூன்பாகக் கண்டு மூன்று முறை வலஞ்செய்துவருவானே, அவனே அகலிகைக்கு நாயகனுவான்" என்றுகூற, இந்திரன் மேகவாகனமேறி உலகெல்லாந் தேடாநிற்பப், பிரமசாரியாயிருந்த கௌதமரைக் கிருகஸ்தராக்க நெடுங்காலம் கருதியிருந்த நாரதர் சந்தித்து, அத்தகைய ஒரு பசுவினிடம் கொண்டுபோய்விட்டு, அதனை வலம்வரச்செய்து, அகலிகையை அடையச்செய்தாரென்னும் வேறொரு கதையு முண்டென்று அவர்கள் கூறினார்கள்.

2. இவ் விரண்டுகதைகளுள் முதலாவது, அகலிகைவெண்பா இரண்டாம்பதிப்பில் "ஆழமுதொ" என்னும் 10-ம் பாட்டிற் கூறப்பட்டுள்ளது. அதனோடு இரண்டாவதனை முரணுமற் சேர்த்தற்கு இன்றியமையாத அளவு அந்தப் பாட்டின் இறுதியடியை மாற்றிக்கொண்டு பாடிய புதுப்பாட்டுக்களே இந்த அநுபந்தத்தில் அடங்கியிருக்கின்றன.

3. அந்தப் புதுப்பாட்டுக்களை அகலிகை வெண்பா மூன்றும்பதிப்பு வெளிவருவதாயிருந்தால், அப்போது அதனோடு சேர்த்துப் பதிப்பிக்க லாமென் றிருந்தேன். அவைகளைப் பார்வையிட்ட எனது நண்பர், திரு நெல்வேலி ஹிந்துகாலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர், மகா-ள-ள-ஸ்ரீ மே. சொ. சுப்பிரமணிய கவிராயரவர்கள் இப்பொழுதே வெளியிடல் நல மென்று கூறியதற்கிணங்கி, இந்த அநுபந்தத்தை வெளியிடலானேன்.

4. இவ் வநுபந்தத்தில் வரும் பாட்டுக்களுக்குக் குறிப்புரை அத னதனடியிற் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

5. ஷ பாட்டுக்களின் கருத்து விளங்கும்படி எழுதிய வசனம், பாட்டுக்களடங்கிய பகுதிக்குப்பின், இடையிடின்றி ஒருசேர வாசிக்கும் படி, ஒரு தொகுதியாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வப் பாட் டுக்குரிய வசனப் பகுதியின் தொடக்கத்தில் பாட்டுக்களின் எண்கள் ஓர் ஓரத்திற் பதிப்பிக்கப்பட்டிருத்தலால், ஒவ்வொருபாட்டுக்குரிய உரையை யும் பகுத்துத் தெரிந்துகொள்ளலாம்.

6. அகலிகைவெண்பா இரண்டாம்பதிப்பில் உள்ள 10-ம் பாட் டையும் அதற்குரிய வசனபாகத்தையும் நீக்கிவிட்டு, அவற்றிற்கு மாறாக முறையே இவ் வநுபந்தப் பாட்டுப்பகுதி வசனப்பகுதிகளை வாசித்தல் வேண்டும்.

7. இவ் வநுபந்தக் கையெழுத்துப்பிரதியைப் பார்வையிட்டுத் திருத்தங்கள் குறிப்பித் துதவிய பல வித்துவநண்பர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனங்களுரியன.

8. ஷ பாட்டுப்பகுதி வசனப்பகுதிகளில் உள்ள "குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்" செய்யும்படி கற்றோரை வேண்டிக் கொள்கின்றேன்.

" 24-3-1921.
திருநெல்வேலி. } வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

அகலிகைவெண்பா

இரண்டாம் பதிப்பின் அநுபந்தம்.

அகலிகையைக் கௌதமர் அடைந்தவரலாற்றை இந்திரன் நினைவுகூர்தல்.

[6-ம் பாட்டுமுதல் (இவ் வநுபந்த முழுதும் உள்பட) 43-ம் பாட்டில் 'உய்வதரிது' என்பதுவரையும் உள்ளவை யாவும், சபையிலிருக்கும் போது இந்திரனுக்கு அகலிகையின் ஞாபகம் வரக் காமபரவசனாகி அவள் விஷயமாக முன் நிகழ்ந்தவற்றை அவன் தானே நினைந்தவையே யன்றி யாருக்கும் தெரிவித்தனவல்ல வென்பதை வாசிப்போர் கவனித்தல் வேண்டும். இவ்வாறே 45முதல் 68-ம் பாட்டுவரை யுள்ளவையும் அவன் நினைந்தவையே.]

அகலிகையை அடைதற்குப் பிரமதேவர் நியமித்த முதற் சபதம்.

ஆரமுதொ டன்னாள்தோன் றாநாளே யான்காதல்
கூரமயல் கோதமனுங் கொள்ள,அயன்,—நீர்முழுகி
முன்னெழுந்தார் தோற்பரென, மூழ்கினேம்; மூழ்க, அவன்
பின்னெழுந்தான்: தோற்றேன். பிறகு,

அன்னாள்—அப்படிப்பட்டவள்—அகலிகை. கோதமன்—கௌதமன். அயன் - பிரமன். 10.

இரண்டாஞ் சபதம் நியமிக்கும்படி பிரமதேவரை இந்திரன் வேண்டல்.

வேத,இவன் கும்பகமா வித்தை மிகப்பயின்ற
சாதனையின் நீருள்ளநனி தங்கினனே:—நீதி
தவறு தெமக்குச் சமமாம் ஒருசூள்
நுவல்வாய் பிறிதென்றேன் நொந்து.

வேத—பிரமனே. கும்பகம் மா வித்தை—மூச்சடக்குதலாகிய பெரிய வித்தை. பயின்ற சாதனையின்-பழகிய பழக்கத்தால். நனி - (என்னினும்)

மிக (நெடுநேரமாக). பிறிது ஒரு சூள் நுவல்வாய்=வேறொரு சபதம் கூறுவாயாக. 10-1.

சீசி! இனியமொழி செப்புதலும் சீர்மைத்தோ!
ஆசை மதியை அழித்ததோ!—நீசர்
புகலுமொழி சொற்றாய்! புரந்தர,போ! போபோ!
அகலஒழி! என்றான் அயன்.

சீர்மைத்தோ - சிறப்புடையதோ. சொற்றாய் - சொன்னாய். புரந்தரன் - இந்திரன். அயன் - பிரமன். 10-2.

என்னலுமே, கோதமனும், ஈசன் திருவருளால்,
இன்னமும்யான் வெல்வேன்: இவன்நொந்து—சொன்னபடி
வேறுசூள் கூறுவாய் வேத, எனப்,பிரமன்
கூறினன் வேறு குறித்து.

என்னலுமே - என்று சொன்னவுடனே. 10-3.

எதிரியே சூள்வே றியம்பென் றதனால்
புதுமையா ஓர்சூள் புகல்வேன்:—இதுவே
இறுதி: பிறிதொன் றினிமேல் இசையேன்:
உறுதி: இதுநன் குணர்.

புதுமையா - (1) புதியதாக; (2) ஆச்சரியமானதாக. 10-4.

இரண்டாம் சபதம்.

முன்போலப் பின்னும் முகமுடைய ஓர்பசுவை
முன்பாகக் கண்டதனை மூன்றுமுறை—அன்பா
வலம்வருதல் செய்ய வலவன்எவன்? அன்னன்
வலவன்எழில் கூர்இம் மகட்கு.

வ(ல்)லவன் – (1) வல்லமையுடையவன்; (2) கணவன். எழில் அழகு. கூர் – மிகுந்த. மகட்கு – பெண்ணுக்கு. 10-5.

இரண்டாம் சபதத்தைப் பற்றி இந்திரன் எண்ணுதல்.

என்ன அயன் கூற, எனக்கே இதுநன்றென்
றுன்னி,இவன் காலால் உழந்துதிரிந்—தன்னபசுக்
காண்பனலன்; கார்மேற் கடிதெவணும் போய்க்கண்டு
மாண்பொடிவண் மீள்வல் மகிழ்ந்து.

இது - இந்தச்சபதம். உழந்து - பிரயாசப்பட்டு - வருந்தி. காண்பன லன் – காணமாட்டான். எவணும் – எங்கும். இவண் – இங்கே. மீள் வல் - திரும்புவேன். 10-6.

அணிலேற விட்டநா யாகஇவன் ஏங்க,
மணிலேஇம் மாதை மணந்து,—விண்ணுளோர்
குடிமைஇவள் கொண்டரசு கொள்ள, அடிமைக்
கடிமையென வாழ்வேன் அமர்ந்து.

"அணில் ஏறவிட்ட நாய்போல" என்பது ஒரு பழமொழி. தான் பிடிக்கமுயன்ற அணிற்பிள்ளையைத் தான் ஏறக்கூடாத மரத்தின்மேல் ஏறவிட்டு ஏங்குகின்ற நாய்போல என்பது கருத்து. குடிமை(யை)— குடியாந் தன்மையை-குடிகளாவதை. அமர்ந்து-திருப்திப்பட்டு அமர்ந்து. அமரர்க் கரசனுக வாழ்தலினும் அகலிகைக் கடிமையாக வாழ்தல் அதிக இன்பந்தருவதாக, இந்திரன் கருதினன். 10-7.

உரைமகளைக் கொண்ட உலகின்ற தேவும்
மரைமகளைக் கொண்டநெடு மாலும்—வரைமகளைக்
கொண்ட அரனும்இவட் கொண்டஎனை நேரார்;வே
றண்டர் தமில்நேர்வார் ஆர்?

உரை – சொல். உரைமகள் – சரசுவதி. மரை – தாமரை. மரை மகள் - இலக்குமி. வரை - மலை. வரைமகள் - பார்வதி. இவட் கொண்ட- இவளைக் கல்யாணஞ்செய்துகொண்ட. நிச்சயம் பற்றி எதிர்காலம் இறந்த காலமாகக் கூறப்பட்டது. 10-8.

அனையமினர், தங்கொழுநர் ஆகத்தோர் பாகம்
மனும்இடம்எய் பேதையர்;இம் மாதோ,—தனதுரியோன்
உள்ளம் முழுதும் உறையுளாக் கொள்ளைகொளும்
கள்ளம் மிகுசமர்த்தி காண்.

தனது உரியோன் – தன் கணவன். உறையுள்–இருக்குமிடம். ஆகத் தோர்பாகமென்றது தத்தம் கணவர்தேகத்தில் சரசுவதி நாவையும், இலக்குமி மார்பையும், பார்வதி இடப்பாகத்தையும் உறைவிடமாகக் கொண்டதை. 10-9.

இவர்காதற் கேள்வன் இதயத்தே வாழ்வை
இவள்போலப் பெற்றிலே மென்றே—அவருள்
ஒருத்தி வெளுத்தாள் ஒருத்தி சிவந்தாள்
ஒருத்தி பசந்தாள் உடம்பு.

இவர்தல்—ஏறுதல் — மிகுதல். பசந்தாள் — பச்சைநிறம் அடைந்தாள். தன் கணவன் இருதயத்தில் இவள் வாழ்தல்போல, நம் கணவன் இருதயத்தில் நாம் வாழப்பெற்றேமில்லையென்று கருதியோ, என்பது முதலிரண்டடியின் கருத்து. 10-10.

அவரெலாம், அவ்வவர்தம் அன்ப ருடலைத்
தவிருரு தெக்காலும் சார்ந்து—தவருக்(கு)
உடலொடிட லானார்: உயிரொடுயி ரானாள்
இடுகுமிடை இம்மா தெனக்கு.

அன்பர் - கணவர். தவிருருது - நீங்காமல். தவருக்கு - (தங்கள் தங் கள்) கணவருக்கு. இடுகுதல் - சுருங்குதல். 10-11.

கண்ணின்மிகு கண்ணுய்க் கருத்தின் மிகுகருத்தாய்
ஒண்ணுயிரின் மிக்க உயிராமிப்—பெண்ணெடு
வாழ்கின்ற வாழ்க்கையே வாழ்க்கை: பிறவாழ்க்கை
தாழ்வன்றி வேறின்று தான்.

ஒண் உயிர் - (உடலோடு) பொருந்திய உயிர். 10-12.

இந்திரன் இரண்டாம்சபதத்தை நிறைவேற்றமுயன்று தவறி வருந்தல்.

என்று பலபலவும் எண்ணிக் கருமுகில்மேற்
சென்று திசைமுழுதும் தேடினேன்—துன்றும்
இருளேமுகில் மின்னி இரிக்க, இரவும்
துருவிமிக நொந்தேன் துயர்ந்து.

துருவி - தேடி. துயர்ந்து - துன்புற்று. " தூமமென் கூந்தற் செவ் வாய்த் துடியிடை துயர வன்றே" கைடதம். 10-13.

பூதலத்துங் கண்டிலன்,யான் போற்றும் புலவர்உறை
நீதலத்துங் கண்டிலேன், மேதினிக்கீழ்ப்—பாதலத்துங்

கண்டிலன்அவ் ஆவதனைக் காணுமே உள்ளத்துக்
கொண்டதுயர் சாலக் கொடிது.

யான் போற்றும் - என்னால் காக்கப்பெற்ற. ஆ–பசு. 10-14.

இரவுபகல் யான்பலநாள் எவ்வயினுந் தேடிக்
கருவிமுகில் மேலிலங்குங் காண்–ஒருபசுவைக்
கோதமன்ஓர் காற்கண்டான் கொல்லோ வெனமரண
வேதனையை உற்றேன் வியர்த்து.

வயின் - இடம். கருவி - காரணம். கருவிமுகில்–(உலகம் வாழ்தற்குக்) காரணமான (மழையைப் பெய்யும்) மேகம். வியர்த்து - வேர்த்து. 10-15.

நாரதர் உதவியால் கௌதமர் இரண்டாம்சபதத்தை நிறைவேற்றல்.

இவ்வா றுளைந்தலைந்தேன் யான். அப் பசுக்காண,
எவ்வா றெனினும், இறைவன்அருள்–செய்வான்,
பெருந்தவந்தான் செய்வெனென்று, பிஞ்ஞகனைச் சிந்தை
புரிந்திருந்தான் கோதமன்அப் போது,

உளைந்து - மனவருத்தமுற்று. செய்வான்-செய்யும்படி. பிஞ்ஞகன்-சிவன். சிந்தைபுரிதல் - தியானித்தல். 10-16.

சோதிஒன்று வானில்நெடுந் தூரத்தே தோன்ற,அவன்
யாதிதென்று சிந்தித் திடுமுனம்,அச் - சோதி
நெருங்க,மிளிர் செம்மேனி நீள்சடைகண் டீசன்
இருங்கருணை செய்துவந்தா னென்று

யாது இது என்று. இருங் கருணை - பேரருள். 10-17.

பாரதன்மேல் வீழ்ந்து பகவ! எனத்தொழுதான்
நாரதனுங் கன்னவனை நாரதனுல்–வாரி
எடுத்திருகை கொண்டுதழீஇ என்னேய, இங்கண்.
அடுத்ததனை யான்அறிவ னுல்.

ஆங்கு – (தொழுத) அவ்விடத்தில். நார் – அன்பு. நாரதனுல்–அன்பினுல் - அன்போடு. இங்கண் - இங்கே. அடுத்தது - சம்பவித்தது - நிகழ்ந்தது.

மிகுந்த தூரத்திலே கேவலம் பகுத்தறியக்கூடாத சோதிமயமாகவும், குறைந்த தூரத்திலே சிவந்த உடலும் சடையும் புலப்படத் தான் தியானித்துக்கொண்டிருந்த சிவனேயாகவும், (சிவனென்றெண்ணிக்கீழே விழுந்து தொழுது கிடந்த தான் தூக்கி நிறுத்தப்பட்டபோது) சமீபத்திலே தன் சிநேகிதனாகவும் கௌதமர் கண்டது நாரதர் உருவை.10-18.

ஒருவன் தனதுள்ளத் துள்ளுவது, சேய்த்தின்
மருவும் பிறன்தன் மனத்தே–தெரிதல்,
இனியதோர் அற்புதமே யென்னினுமெய் யன்றே?
அனையதாம் தூர உணர் வால்,

சேய்த்தின் - தூரத்தில். பிறன் - மற்றொருவன். தூர உணர்வு -தூரத்தில் உணர்தல். இதனை ஆங்கிலசாஸ்திரிகள் 'டெலிபதி' என்பர். இவ்வாறு "உணர்ச்சியொத்தல் பிரிந்தையார்க்கும் கோப்பெருஞ் சோழற்கு முண்மை புறப்பாட்டிற் கண்டது" என்பது ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ இராகவையங்காரவர்கள் தெரிவித்தது. 10-19.

மனக்கவலை நீஉற்ற வாறென்உளம் ஓர,
நினக்கவலம் நீக்கும் நிமித்தம்–உனைத்துனினேன்:
தன்பம் அரையாம் துணைவரது கூட்டத்தால்
இன்பம் இரட்டியா மே.

அவலம் - மனக்கவலை. "நெஞ்சத் தவல மிலர்" குறள் 1072. பின் இரண்டடியும் ஓர் ஆங்கிலப் பழமொழியின்கருத்தைத் தழுவியது.10-20.

உனைப்பிரம சாரியென ஓதல் ஒழிய,
மனைக்கண்உனை மாதொடியான் வைக்க,–நினைத்த
நெடுநாள் நினைவு நிறைவேறு காலம்
கடிதே புகுந்துளது காண்.

கடிதேபுகுந்துளது – (எதிர்பார்த்ததினும்) விரைவாக வந்திருக்கின்றது. 10-21.

அயல்வய் தொழுவில்ஓர் ஆயிரஆ உண்டால்,
வயவார் பருவ'நிதால், வாளா–முயலாதே,
முன்னேடு பின்னும் முகமுடைய ஓர்பசுவை
என்னேடு காண்வா என,

வயவு ஆர் பருவம் இதால் - இது (அப்பசுக்கள்) கருப்பம்நிறைந்திருக்கும் காலமாதலால். வாளா முயலாதே – (அப்பசுவைக்காணத்தக்க இடமாகிய அந்தத் தொழுவைவிட்டு • வேறு இடங்களில்)வீணே (தேடும்) முயற்சி செய்யாமல். 10-22.

இப்பாரில் ஓர்கன் றிரண்டுமுகம் முன்புறம்வய்
உற்பாதம் யான்கண் டுளனெனினும்–எப்பாலும்
உற்றபசு முன்பின்முகம் உள்ளதனைக் கண்டிலேன்,
நற்றபசு செய்நா ரதா,

உற்பாதம் - (இயற்கைக்கு மாறான) பிறவி. எப்பாலும் உற்ற பசு- எங்கும் உள்ள பசுக்களுள்ளே. நற் றபசு - நல்(ல)தபசு. 10-23.

என்ன,அவன் வாய்பேசா திட்டன் கரம்பற்றிச்
சொன்னதொழு உய்த்தத் தொழுவிலுறும்–நன்னிரையுட்
சூலுளீயும் ஓர்பசுவைச் சுட்டி, முகம்அதன்பின்
பாலும்உள தாங்குற்றுப் பார்

எ(ன்)னலும் - என்று சொன்னவுடனே. சொன்ன - முன் சொல்லப் பட்ட. நல்(ல)நிரை (- பசுக்கூட்டம்). சூல் உளீதல் - பிரசவவேதனைப் படுதல். 10-24.

என்ன, அவன்,என்னை எள்ளுதியோ வென்று
பன்னு முனம்அப் பசுவினது–பின்னெர்
முகந்தோன்ற மூன்று முறைவலம்வந் துள்ளம்
உகந்தான்தன் தோழனைநோக் குற்று,

எள்ளுதியோ - பரிகாசம்பண்ணுகின்றாயோ. பின் ஓர்முகம் - பிறப்புறத் தில் ஒரு முகம் (-பிறந்துகொண்டிருக்கும் கன்றின்முகம்.) 10-25.

நாரதருக்குக் கௌதமர் நன்றியறிவு கூறல்.

அவலமெலாம் நீக்கும் அரனடியைச் சிந்தித்(து)
அவனருளால் வேட்ட தடைந்தேன்–அவனடிகள்
வாழி! அவனேபோல் வந்தென்னை வாழ்வித்தாய்
வாழி! பலநலமும் வாய்ந்து.

அவலம் - மனக்கவலை, வேட்டது - விரும்பியது, 10-26.

உடுக்கை இழந்தவன்கை பொப்ப உடனே
இடுக்கண் கனைந்தாய்; எனக்குக்–கிடைக்கரிய
தேவியையோ ஈந்தாய்; சிறியனேன் ஆவிக்கோர்
ஆவியையே ஈந்தாய்: அறி. 10-27.

உடுக்கை - உடை. இடுக்கண் - துன்பம்.

விண்ணிடைநான், சேந்தொளிரும் மேனி சடைகண்டு,
சுண்ணுதலே யென்று கழல்பணியப்–பண்ணும்
உருவாலும் உன்னியதை உன்னியவா றீந்த
அருளாலும் ஈசனெத்தா யால். 10-28.

சேந்து ஒளிரும் - சிவந்து பிரகாசிக்கும்.

மின்னை அளித்தாய்க்கு வேறுருகைம் மாறுமிலேன்
என்னை யளித்தேன். இறைவன்நேர்–உன்னினால்,
உன்னையலால் இல்லை: உனதுடைமை யானதனால்,
என்னையலால் என்நேர் இலை. 10-29.

மின்னை - (எனக்கு என் உயிரினும் இனியவளும் எல்லாப்பொருள் களினும் சிறந்தவளுமாகிய) அகலிகையை. அளித்தாய்க்கு - கொடுத்த உனக்கு. உன்னினால் - ஆராய்ந்து பார்த்தால்.

என;நா ரதன்முகமன் எற்றுக்(கு?)யான் வேறே?
உனினால் இருவேம் ஒருவேம்:–நினின்நான்வே
றல்லேன் எனின்நீவே றல்லாய். இஃதெல்லாம்
வல்லாய் அறியாயோ? மற்று. 10-30.

முகமன் - உபசாரவார்த்தை. எற்றுக்கு-எதற்கு. உ(ன்)னினால்.நி(ன்) னின் (நின்று), எ(ன்)னின் (நின்று). மற்று - அசை.

இருவேம் ஒருவேமா எய்தலா னன்றே,
ஒருநீ உனதுள்ளத் துள்ளே–கருதியதென்
உள்ளம் உணர,உனை உற்றேன்; எனைவேறுக்
கொள்ளல் தகுதிகொலோ? கூறு. 10-31.

அகலிகையைக் கௌதமர் அடைதல்.

நான்முகமன் வேண்டலேன்; நங்கை தனையடைவான்,
நான்முகமன் ஆணைபெறல் நன்றென்று,–பான்மிகநல்(கு)
ஆத்தானம் ஆம்தொழுதத் தன்பணைபி சென்றலரோன்
ஆத்தானம் தன்னை அடைந்து,

முகமன் - துதிமொழி. நால் (-நான்கு) முகம் (உடைய) மன் (-இறைவன்)-பிரமன். பால் மிக நல்கு ஆ தானம் ஆம் தொழு-பால் மிகுதியாகக் கொடுக்கும் பசுக்களின் இடமாகிய தொழு. அலரோன்-பிரமன். ஆத்தானம்-சிறந்த உறைவிடம். 10-32.

சூள்முடித்த வாறுரைத்தான். 'தோகை மணத்தினை இந்
நாள்முடிக்க' என்று நளினத்தோன்-சூள்முடித்த
கோத்மற்கம் மாதைக் கொடுத்து விடைகொடுத்தான்.
மாதவத்தர் சென்றூர் மகிழ்ந்து.

தோகை மணத்தினை இந் நாள் முடிக்க-அகலிகை கல்யாணத்தினை இன்றைத்தினமே நிறைவேற்றிடுக. நளினம்- தாமரை. நளினத்தோன்-பிரமன். 10-33.

இமையா விழிகொண் டிளைப்பா றிடற்கும்
அமரா தலைந்தனைய ஆவைக்-கமையோடு
தேடுநாள் அந்தோ! செவியுற்றேன் இவ்வல்லாம்.
வாடினேன் என்செய்வேன் மற்று.

கமை - பொறுமை. இவ் - இவை. 10-34.

முகில்மிசைநான் மூவுலகு முற்றும்போய் எய்தா
அகலிகைதான் நொய்தின் அவன்கைப்-புகுதல்,
முடவனது வாயுள் முகில்தேரய் இனைத்தேன்
வடிதலினை நேருறுமால் வாய்ந்து.

மூ உலகு - மூன்று உலகம். நொய்தின் - எளிதாக. அவன்கைப் புகுதல் - (கௌதமன் தழுவும்படி அவனுடைய இரண்டு) கைகளின் உள்ளே செல்லுதல். இனைத்தேன் - கொம்புத் தேன். வாய்ந்து (வாய்க்கு நேராக வாய்ந்து) வடிதலினை நேருறும். ஆல் - அசை. 10-35.

வெந்தீயில் வீழ்ந்து வெதும்பி எழுந்தார், அச்
செந்தீயில் வீழ்ந்த செயலென்ன,-அந்தோ!
ஒருமுறைதுஞ் சுற்றார்மீட் டோர்முறைசெத் தென்ன,
இருமுறையும் தோற்றேன் இனைந்து.

துஞ்சுற்றார் — செத்தார். செத்தென்ன — செத்தாலென — செத்தாற் போல. இனைந்து - வருந்தி. 10-36.

முற்றிற்று.

அகலிகை வெண்பா

இரண்டாம்பதிப்பின் அநுபந்த வசனம்.

அகலிகையைக் கௌதமர் அடைந்த வரலாற்றை இந்திரன் நினைவுகூர்தல்.

[6-ம்பாட்டின் வசனமுதல் (இவ்வநுபந்தம் உள்பட) 43-ம்பாட்டு வசனத்தில் 'அரிதாயிருக்கிறது' என்பதுவரையும், சபையிலிருக்கும் போது, இந்திரனுக்கு அகலிகையின் ஞாபகம்வரக், காமபரவசனாகி, அவள்விஷயமாக முன் நிகழ்ந்தவற்றை அவன் மனத்துள் நினைந்து கொண்டதேயன்றி, யாருக்கும் வாய்விட்டுத் தெரிவித்ததன்றென்பதை வாசிப்போர் கவனத்தில்வைத்துக்கொண்டு வாசித்தல் வேண்டும்.]

அகலிகையை அடைதற்குப் பிரமதேவர் நியமித்த முதற்சபதம்.

10 தேவர்கள் அமிர்தம் பெறுதற்காகக் கடலைக்கடைந்த காலத்திலே உண்டாகிய உண்ணமுதத்தோடு அந்தப் *பெண்ணமுதும் தோன்றினாள். அவள் தோன்றிய அப்பொழுதே, †நானும் கௌதமனும் அவளைக் காதலித்தோம். அவ்வாறு காதலிக்கவே, எங்களில் எவன் அவளைப் பெறுதற்குரியனென்று முடிவுசெய்தற்காகப் பிரமதேவர் எங்களைநோக்கி 'நீங்கள் இருவீரும் இந்தக் கடல்நீர்க்குள் முழுகுங்கள், உங்களில் எவன் பின் எழுவானை அவனே இவளுக்கு நாயகன்' என்றார். அப்படியே நாங்கள்முழுக, நான்முன்னெழுந்துவிட்டேன். எனக்குப் பின் அவன் எழுந்தான். இவ்வாறுக, யான் தோற்றதனால் ஏங்கி இனிச்செய்யத்தக்கதென்னென்று ஆலோசித்துப் பின்வருமாறு பிரமதேவரைநோக்கிக் கூறினேன்.

---

*அகலிகை.

† இந்திரன்

10- 1 பிரமதேவரே, யானும் யோகஞ்செய்யும்படி கோந்தசமயங்
களில் மூச்சடக்கப்பழகியுள்ளேனெனினும்,
இரண்டாம் சபதம் நியமிக்கும்படி பிரம தேவரை இந்திரன் வேண்டல்.
இவன் அதுவே எப்போதும் செய்வோனைப்
என்னினும் அதிகமாக மூச்சடக்கப் பழகி
யிருக்கின்றான். ஆதலினாலேதான், இப்
போது நீர் கூறிய சபதத்தில் வெற்றிபெற்றான். இது இருவருக்
கும் சமமான சபதமன்று. நியாயம் தவறிப்போகாமல், எங்
கள் இருவருக்கும் சமமானதாக, வேறொருசபதம் கூறுதல்
10- 2 வேண்டுமென்றேன். உடனே பிரமதேவர் என்மேற்கோபங்
கொண்டு, சீ சீ! இந்திரா, இப்படிப்பட்டவார்த்தைகள் கூறுவது
யோக்கியமாமோ! ஆசையினாலே புத்திகெட்டுப்போனாயோ!.
அயோக்கியர் கூறும் வார்த்தைகளைக் கூறினாய்! போ! போ!
10- 3 தூரஒழிந்துபோ! என்றார். உடனே, கௌதமன், பிரமதேவரை
நோக்கி ஈசுவரன் கிருபையினால் நானே இன்னமும் வெற்றிபெற
வேன்; இவன் வேண்டிக்கொண்டபடியே வேறொருசபதம் நிய
10- 4 மிப்பீராக என்றான். அப்போது, பிரமதேவர், என்னைநோக்கி,
உன்எதிரியே வேறொருசபதங்கூறும்படி சொன்னதனால், நான்
புதுமையானதாக ஒருசபதங் கூறுவேன். இதுவே முடிவானது.
இனிமேல் வேறொருசபதமுங் கூறமாட்டேன். இது உறுதி
யென்று நன்றாகத் தெரிந்துகொள்வாயாக.

10- 5 அந்தச் சபதமாவது, முன்புறம்போலப் பின்புறமும் முக
முள்ள ஒருபசுவை எவன் முந்திக்கண்டு
இரண்டாம் சபதம்.
மூன்று முறை வலஞ்செய்துவருவானே,
அவனே இவளுக்குக் கணவனுவான் என்பது.

10-6 என்று பிரமதேவர்கூறவே, இந்தச் சபதம் எனக்கே அது
கூலமானது. ஏனெனில், இந்தக் கௌதமன்
இரண்டாம் சபதத்தைப்பற்றி இந்திரன் எண்ணுதல்.
வாகனம் ஒன்றும் இல்லாதவனுதலால்,
காலால் வருந்தி நடந்து திரிந்து தேடி அப்
படிப்பட்ட அருமையான பசுவைக் காண
மாட்டான். நான் மேகவாகனனுடனும் விரைவாக எங்கும்
சென்று அதனைக் கண்டு, அதனால் மேன்மையும், மகிழ்ச்சியும்
கொண்டு, இங்கே திரும்புவேன். திரும்பின உடனே

10-7 அகலிகையை அடைந்துவிடுவேன். இவன் *அணிலேறவிட்ட நாய்போல ஆகி, ஏக்கமடைந்து வருந்த, நான் இவளே இந்த மண்ணுலகத்திலே கல்யாணம் செய்துகொண்டு, இவளுடன் விண்ணுலகம் போய், அங்கே என்குடிகளாகிய தேவர்கள் இவள் குடிகளாக, இவள் கிரீடம் சூடிச் செங்கோல்கைக்கொண்டு அரசாள, நான் இவளுக்கு அடிமைக்கும்அடிமையாய்த் தொண்டு புரிந்துவாழ்வேன். அவ்வாறு வாழ்வது நான் இதுவரை அர
10-8 சாண்டஇன்பத்தினும் அதிக இன்பந் தருவதாம். சரசுவதியைக் கல்யாணஞ்செய்துகொண்ட இந்தப் பிரமதேவரும், இலக்குமியைக் கல்யாணஞ்செய்துகொண்ட அந்தத் திருமாலும், பார்வதியைக் கல்யாணஞ்செய்துகொண்ட பரமசிவனும் இவளைக் கல்யாணஞ்செய்துகொண்ட எனக்குச் சமானமாகார். ஆதலால் மற்றைத்தேவருள் என்னைநேர்வார் யார் இருக்கின்றார்கள். ஒரு
10-9 வருமிலர். மேற்கூறிய மூன்றுமாதரும் முறையே தங்கள் கணவரது நாவையும் மார்பையும் இடப்பாகத்தையும் தாங்கள் வாழும் இடமாகக்கொண்டு, தங்கள் கணவரது உடலிலேயே அடைந்தார்கள். உடலிலும் முழுதும் அடையாமல் ஒருபாகத்தையே அடைந்தார்கள். ஆதலால் அவர்கள் அறிவில்லாதவர்கள். இவளோ, தனது கணவனுகிய எனது (உடலே இலட்சியம் பண்ணுமல், அதனினும் மிகச்சிறந்த) உள்ளம்முழுமையுமே தனக்கு உறைவிடமாகக் கொள்ளேகொண்டுவிட்ட கள்ளம்
10-10 மிகுந்த சமர்த்தியாயுள்ளாள். இவள் தன்கணவனது இருதயத்திலே வாழ்தல்போலத் தாங்கள் தங்கள்கணவரது இருதயத்திலே வாழப்பெற்றேமில்லேமே என்ற ஏக்கத்தினுலோ, அவர்களுள் சரசுவதி வெளுத்தும், இலக்குமி சிவந்தும், பார்வதி
10-11 பசந்தும், நிறமாறிப்போனார்கள். அவர்களெல்லாரும், தங்கள் தங்கள் கணவரது உடலிலே எப்போதும் நீங்காமல் வாழ்வோராய்த் தங்கள் கணவருக்கு உடலோடுடலானார்கள். இவளோ,
10-12 தன்கணவனுகிய எனக்கு உயிரோடுயிராளுள். கண்ணிற் சிறந்த கண்ணுகவும் கருத்திற்சிறந்த கருத்தாகவும் உயிரிற்சிறந்த உயி

* அணிலேறவிட்ட நாய்போல என்பது ஒருபழமொழி. தான் பிடிக்க முயன்ற அணிற்பிள்ளேயைத் தான் ஏறக்கூடாத மரத்தின்மேல் ஏறவிட்ட நாய் போல என்பது கருத்து.

ராகவும் உள்ள இவளோடுகூடிவாழும் வாழ்வே வாழ்வாவது: மற்
றெந்த வாழ்வும் தாழ்வாவதேயன்றி வேறொன்றுமாகாது.

10-13 என்று பலபல இனிய எண்ணங்களே எண்ணிக்கொண்டு
மேகவாகனத்தின்மீதேறி எல்லாத்திசைகளி
இந்திரன் இரண்டாம் சபதத்தை நிறைவேற்ற முயன்றுதவறிவருந்தல்
லும் சென்று, அந்தப் பசுவை நாடித் தேடி
வாளுயினேன். பகலெல்லாம் தேடியதனேடு
அமையாமல், என் ஏவுதலால் மேகம் பின்னு
நின்று இருளே ஓட்டிவிட, இரவு பகல்போலாக, இராக்காலங்களி
லும் விடாமல் நான் தேடி அலைந்து நொந்து சோர்ந்து துன்ப
10-14 மடைந்தேன். அந்தப் பசுவை நான் பூலோகத்திலே காண
வில்லை. தேவலோகத்திலும் காணவில்லை. பாதாளலோகத்திலே
யுங் காணவில்லை. இவ்வாறுக அப்பசுவைக் காணுததனுல்
10-15 எனக்கு உண்டாகிய துன்பம் மிகவும் கொடிதாயிருந்தது. இப்
படிக் கொடுந்துன்பமடைந்திருந்த சமயத்திலே, யான் விரை
வான மேகத்தின்மேலேறிப் பலநாளாக இராப்பகல் ஓயாமல்
எங்கெங்கும் அலைந்துதேடியும் காணமுடியாமற்போன பசுவை
ஒருவேளே கௌதமன் கண்டுவிட்டானேலென்ற நினைவு தோன்ற
வே, என் தேகம் வேர்க்க மனம் சாகுந்தருணத்திலுள்ளார்படும்
மரணவேதனேபோன்ற வேதனையை அடைந்தது.

10-16 யான் இவ்வாறுக மனவேதனேயோடு அந்தப் பசுவைத்
தேடி அலைந்துகொண்டிருந்தேன். அவன்
நாரதர்உதவியினுல் கௌதமர் இரண்டாம் சபதத்தை நிறைவேற்றல்.
அதைத் தான் எவ்வாறுயினும் கண்டுகொள்
ளுதற்கு ஈசுவரன் கிருபைசெய்யும்படி அவ
ரை நோக்கித் தவஞ்செய்வேனென்று தியா
னம்பண்ணிக்கொண்டிருந்தான். அப்படி அவன் தியானஞ்
10-17 செய்துகொண்டிருக்கும்போது, வானத்திலே, நெடுந்தூரத்திலே,
ஒருஜோதி பிரகாசிக்கக் கண்டான். கண்டவன் அது எவ்வாறு
தோன்றியது, என்னதன்மையுடையது என்று ஆராய ஆரம்பிக்
கும்முன்பே, அந்தஜோதி அவனேநோக்கி விரைந்து சமீபிக்க,
அதிலே சிவந்தமேனியும் சடைமுடியும் தோன்ற, தான் தியா
னித்துக்கொண்டிருந்த சிவபெருமானே பெருங்கருணைபுரிந்து

10-18 பிரத்தியட்சமாகக் காட்சிதந்தருளவந்தாரென்று கருதிப் பூமி
யின்மீதே பகவானே! என்று தோத்திரஞ்செய்துகொண்டு
விழுந்து சாட்டாங்கநமஸ்கார்ம்பண்ணினன். அப்படி நமஸ்
காரம்பண்ணிய சமயத்திலே கிட்டவந்துவிட்ட *நாரதன் அவனை
வாரியெடுத்து ஆலிங்கனம்பண்ணி, எனது நண்பனே, இங்கே
நடந்ததெல்லாம் நானறிவேன். நீ சொல்லித் தெரியவேண்டிய
தொன்றுமில்லை. எப்படி யறிவே னென்றால், சொல்கிறேன்
10-19 கேள். ஒருவர் மனத்திலே நினைப்பது தூரத்திலேயுள்ள மற்
றொருவருடைய மனத்திலே தோன்றுவது ஆச்சரியமானதாயி
10-20 னும் உண்மைநிகழ்ச்சியன்றே! அத்தகைய தூரஉணர்ச்சியினா
லே, நீ பிரமதேவர் கூறிய பசுவை எவ்வாறு காண்பது, கண்டா
லன்றி அகலிகையை அடையலாகாதே யென்று கவலையடைந்
தது என்மனத்திலே தோன்ற, உடனே அந்தக்கவலையை நீக்
கும்பொருட்டு நான் உன்பால் வந்தடைந்தேன். ஒருவன் தன்
சிநேகிதனைச் சந்தித்து அளவளாவுங்கால், அவன் கவலையுள்ள
வனாயிருந்தால், அந்தக் கவலை (சிநேகிதனால் பாகிக்கப்பட்டுப்)
பாதியாகுதலும், களிப்புள்ளவனாயிருந்தால், அந்தக்களிப்பு
(சிநேகிதனுற் கூடச்சேர்ந்து அநுபவிக்கப்பட்டு) இரட்டியாத
10-21 லும் அநுபவசித்தமானவை. உன்னை உலகத்தார் 'பிரமசாரி
பிரமசாரி' என்று வழங்குவது ஒழிய, ஓர் அழகிய மனைவி
யுடன் இல்வாழ்வானுகவைக்கும்படி யான் நெடுங்காலமாகக்
கருதியிருந்த கருத்து நிறைவேறுங்காலம் நான் எதிர்பார்த்ததி
10-22 னும் விரைவாக வந்திருக்கின்றது. அதோ தோன்றுகின்ற
சமீபத்திலே உள்ள தொழுவிலே, ஆயிரம் பசுக்கள் நிற்கின்றன.
இந்தக் காலம் பசுக்கள் பூர்ணகர்ப்பமாகியிருக்குங் காலமாத
லால், நீ பார்க்கவேண்டிய முன்னும் பின்னும் முகமுள்ள பசு
வை அங்கேபோய் எளிதிற்காண என்னோடுவா. வேறிடங்களிற்
10-23 காணக்கருதி வீண்முயற்சி செய்யவேண்டாம் என்று நாரதன்

---

*மிருந்த தூரத்திலே கேவலம் பகுத்தறியக்கூடாத ஒரே பிண்டமான
ஜோதியாகவும், குறைந்த தூரத்திலே சிவந்த தேகமும் ஜடைமுடியும் உடைய
தாகத் தோன்றித் தான் தியானித்துக்கொண்டிருந்த சிவனேயாகவும் (சிவனென்
றெண்ணிக் கீழேவிழுந்து தொழுதுகிடந்த தான் தூக்கிநிறுத்தப்பட்டபோது)
சமீபத்திலே தன் சிநேகிதனுகவும் கௌதமர்கண்டது நாரதர் உருவை.

கூறக் கௌதமன் அவனைநோக்கி,—இந்தப் பூமியிலே முன் புறத்திலே இரண்டுமுகமுடைய கன்றை நான் பார்த்திருக் கிறேனென்றுஞ், எந்த இடங்களிலும் உள்ள பசுக்களிலும் முன்னும் பின்னும் முகமுடைய பசுவொன்றையும் நான் பார்த்த
10-24 தில்லையென்று கூறினன். அதற்கு நாரதன், மறுமொழியொன் றுங் கூறாமல், அப்படிப்பட்ட பசுவைப் பிரத்தியட்சமாகக் காட்டுதலே தக்க மறுமொழியாமென்று கருதிக் கௌதமனது கையைப்பற்றிச்சென்று முன்சொன்ன தொழுவினுள்ளே கொண்டுவிட்டு அங்கே நின்ற பசுக்கூட்டத்திலே சூலு லைந்துகொண்டிருந்த ஒரு பசுவைச் சுட்டிக்காட்டி அந்தப்பசு வுக்குப் பின்புறமும் முகமிருக்கிறது, கிட்டப்போய் உற்றுப்
10-25 பார் என்றனன். அப்படியே கௌதமன் அப்பசுவின் அருகே போய்ப் பார்த்து நாரதன் சொன்னபடி பின்புறத்தே முகம் காணப்படாமையால், ஏ, நாரதா, நீ என்னைப் பரிகாசம்பண்ணு கின்றாயோ? என்று சொல்லஆரம்பித்த தற்சமயத்திலே, அப் பசுவின் பின்புறத்திலே கன்றின்முகம் வெளிப்பட அதனால் முன்போலப் பின்னும் முகமுடையதாகத் தோன்றிய அந்தப் பசுவை மூன்றுமுறை வலம்வந்து, அகலிகையை அடைந்து விட்டோமென்று மனமுவந்து தன்தோழனைப் பார்த்துக் கூறு கின்றனன்.

10-26. தியானஞ்செய்வோர்களுடைய துன்பங்களெல்லாவற்றை யும் நிவிர்த்திசெய்யும் சிவபெருமானது திரு வருளால் யான் அடையவிரும்பியதை அடை யப்பெற்றேன். அவருடைய திருவடிகள் வாழ்க. அவரே போல வந்து என்னை வாழ்வடையச்செய்த நீ எல்லா நன்மைக
10-27 ளும் எய்தி வாழ்வாயாக. ஆடை அவிழ்ந்தவன்கை, அவன் வேண்டாமலே, அதனை உடனே கட்டி உதவுதல்போல, எனக் குற்ற கவலையை நான் வேண்டாமலே உடனே நீக்கி உதவிசெய் தாய். நீ எனக்கு என் உயிருக்குயிராகிய அகலிகையைத் தந்த தனால், சாதாரணமான தேவியைத் தந்தாயல்லை, எனது ஆவிக்கு
10-28 ஆவியையே தந்தாயானாய். ஆகாயத்திலே நீண்ட சடையுடனும்

நாரதருக்குக் கௌதமர் நன்றி யறிவு கூறல்.

சிவந்த மேனியுடனும் தோன்றிச் சிவபெருமானேயென்று நான் காலில்வீழ்ந்து கும்பிடச்செய்த உருவினாலும், (நான் அகலிகையை அடைய) எண்ணியதை எண்ணியபடியே அடையும்படி செய்த அருவினாலும் நீ ஈசனை ஒத்தாய்.

10-29 என்க்கு என்னினும் இனியவளும் எல்லாப்பொருள்களினும் சிறந்தவளுமாகிய அகலிகையையே கொடுத்துதவினாய். அவ்வாறு உதவிய உனக்குச் செய்யத்தக்க கைம்மாறு ராசராசர்களிடத்துமே யில்லை. அப்படியிருக்க, என்னிடத்தில் உனக்குப் பிரதிஉபகாரமாகக் கொடுக்கத்தக்கது யாதிருக்கக் கூடியது. என்னையன்றி வேறு ஒன்றுமில்லை. ஆதலால் என்னையே கொடுத்தேன். ஏற்றுக்கொள்வாயாக. உனக்கு உன்னையன்றி ஒரே சமானப்பொருள் உள்ளது. அது ஈசனே. உனக்கு உடைமையாகிய எனக்கு யானே நேர்: என்னையன்றி வேறொரு சமானப்பொருளும் இல்லை. நீங்கள் இருவீரும் அவரவர் அவரவரையொத்தும் ஒருவர் மற்றொருவரையொத்தும் இரண்டு சமானப்பொருள்களை உடையீர்கள். யானோ, உனது உடைமையாகிய காரணத்தால், என்னையன்றி ஒருவரையும் ஒவ்வாமல் ஒரே சமானப்பொருளுடையேனுய் தும்மிருவரினும் அதிகனாகி

10-30 னேன் என்றுபுகழ, நாரதன், அவ்வாறு புகழ்வதைத்தடுத்து எனக்கு உபசாரவார்த்தை எதற்காகக் கூறுகின்றாய்? அந்நியனுக்கன்றே கூறவேண்டும். நான் உன்னினின்று வேறானவனல்லேனன்றே. ஆராய்ந்துபார்த்தால் நாம் இருவேமும் ஒருவேமே. உன்னினின்று நான் வேறல்லேன், என்னினின்று நீ வேறல்லாய். எல்லாம் தெரிந்த உனக்கு இவ்வுண்மை தெரிந்

10-31 ததுதானே. நாம் இருவரும் அபேதமாய் ஒருவராகவே இருத்தலாலன்றே, நீ ஒருவருக்கும் சொல்லாமல் உன் மனத்துக்குள்ளே நினைத்ததை, நினைத்தபடியே என்மனம் உணர, அதனால் நான் உன்னிடம் வந்துசேர்ந்தேன். அவ்வாறு சேர்ந்த என்னை நீ அந்நியனுகக் கருதிப் புகழலாமோ என்று கூறிப் பின்னும் கூறுகின்றான்.

10-32 நான் உபசாரவார்த்தைகளில் விருப்பில்லாதவன். அகலி
கையை நீ அடைவதற்குப் பிரமதேவரது
அகலிகையைக் கௌதமர் அடைதல். கட்டளையைப் பெறும்படியாக, நாம் இனித்
தாமதஞ்செய்யாமல் அவரிடம் செல்வதே
நல்லதென்று கூறி, வளமாகப் பால்கொடுக்
கும் பசுக்கள் வாழும் அந்தத் தொழுவைநீங்கித் தன்சிநே
10-33 கிதனோடு பிரமதேவரை அடைந்து அவருக்கு அவர் நியமித்த
சபதத்தைக் கௌதமன் நிறைவேற்றிய விவரத்தைத் தெரிவித்
தான். உடனே, அவர் இந்நாள் நன்னாள், இன்றே அகலிகை
கல்யாணத்தை நிறைவேற்றுக என்றுசொல்லிக் கௌதமனுக்கு
அகலிகையைக் கொடுத்து எல்லாருக்கும் விடைகொடுக்க, அவர்
கள் மகிழ்ச்சியடைந்து தங்களிடம் சென்றார்கள்.

10-34 இறைப்பொழுதும் இளைப்பாறுதற்கும் தங்காமல் பொறு
மையுடனே அகன்று (என் தெய்வப்பிறப்
இந்திரன் தான் உற்ற தோல்விக்கு வருந்தல். புக்கு இயல்பாகவுள்ள) இமையாத கண்க
ளால் அந்தப் பசு எங்கேயுள்ளதென்று நான்
தேடிப்பார்த்துக்கொண்டிருந்த நாள்களிலே
கடைசியான ஒருநாளிலே இந்த வரலாறு முழுதுங் கேள்வி
யுற்றேன். அதனால் வாடி வருந்தினேன். வேறொன்றும் செய்
10-35 தற்கில்லாதவனாயினேன். நான் மேகவாகனரூடனாய்ச் சுவர்க்க
மத்திய பாதாலமென்ற திரிலோகங்களும் சென்றும் எனக்குக்
கிடையாத அகலிகை கௌதமனுக்கு எளிதாகக் கிடைத்தது,
மேகந் தோயும்படி உயர்ந்த கொம்பிலுள்ள தேன் ஒரு மூடரு
னுடைய வாய்க்கு நேராக வாய்ந்து வடிதலினை ஒத்தது.
10-36 கொடிய தீயிலேவிழுந்து சுடப்பட்டெழுந்தோர் திரும்பவும் அந்
தத் தீயிலேவிழுந்தாற்போலவும், ஒருமுறை மாண்டார் மறு
முறையும் மாண்டாற்போலவும், நான் இரண்டுமுறை தோல்வி
யடைந்து வருந்துவேனாயினேன்.

முற்றிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் **1921**-ஆம மார்ச்சுமீ **5**உ நடத்திய

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷாவினா.

பீ.ஏ. வகுப்பு.

I. இலக்கியம்.

பரீக்ஷகர்:—**A. M.** சடகோபராமாநுஜாசாரியர்.

1921-ஆம மார்ச்சுமீ 5உ சனிக்கிழமை பகல் 10—1.

[அம்சம் 120.]

N. B.—ஏட்டுக்கேள்விகள் VIII. ஒவ்வொன்றிலும் ஏதேனும் நான்கிற்கு விடையெழுதினற் போதும்.

I. 1. 'பட்டினப்பாலை' பொருளென்ன? பா, திணை, துறை யாவை? 1. 'நேரிழைமகளிருணங்குணக்கவரும்' 2. 'பொற்காற்புதல்வர் பூவியின்றுருட்டும்' 3. 'வயலாமைப் புழுக்குண்டும்,வறளடம்பின் மலர்மலைந்தும்'இவை என் னென்ன அடிகள்?

2. இந்நூலிலிருந்தும் தமிழ்நாட்டுப் பழைய கொள்கைகள் சரித்திர நாகரிக விஷயங்கள் சில கூறுக.

3. கரிகாலன் வீரச்செயல்கள் என்னென்ன வெளியா கின்றன.

4. எந்தெந்தக் காரியங்களுக்காகப் பட்டினத்தில் கொடிகள் அசைந்துகொண்டிருக்கும்?

5. வைசியர் செய்கைகளிற் சில கூறுக.

II. 1. பொருளெழுதுக.—கூடல், மஞ்சிகை, அட்டி, இருத்து, கவான், புதை, சிமிலி, ததர், இதை.

2. பின்வரும் உவமைகளாற்றெரிவன யாவை? 'நெடுநுகத் துப் பகல்போல, மதிசேர்ந்த மகவெண்மீன், கான்யாற் றுக் கருப்பம்பூ, நிலவடைந்த இருள், காந்தளந்துடுப் பிற்கவிகுலை.

3. 'மணிமேகலை' பட்டினப்பாலைக்குப்பிந்திய தென்பதற்கு இரண்டாதாரம் காட்டுக.

4. நாலுஷாய்மை, ஐந்துசீலம், ஐம்பெருங்குழு, எண்பேராயம்; யாவை?

5. சித்திராபதி, காஞ்சனன், காயசண்டிகை, தீவதிலகை; இவர்கள் யார்?

III. 1. அந்தராணம், ஏதுநிகழ்ச்சி, இலவந்திகை, பட்டிமண்டபம், கடைமுகம்; இவற்றை விளக்குக.

2. மணிமேகலையென்பாள் கற்றுத் துறைபோகிய கலைகளிற் சிலவற்றையாவது கணவனையிழந்த பத்தினிப்பெண்டிர் செய்கைத்திறத்தையாவது கூறுக.

3. சுதமதிகூறிய உடம்பின் அசுத்தங்கள் யாவை?

4. பளிக்கறைமண்டபவனத்துள் தாமரைப்பீடிகையின் செய்கை விநோதம் யாது?

5. மணிமேகலை செல்லத்தகாததாகச் சுதமதியாற் குறிப்பிடப்பட்ட இடங்கள் யாவை?

IV. 1. எச்சமும் சிறப்புமாய்வந்த உம்மை, ஆக்கம், இல்பொருளுவமை, அர்த்தாபத்தி, செற்பொருட்பின்வருநிலை: இவற்றுக்குத் திருக்குறளிலிருந்து உதாரணம் காட்டுக.

2. இருபொருள்கூறுக:— "பொய்யாமைபொய்யாமையாற்றினறம்பிற, செய்யாமைசெய்யாமைநன்று" "எல்லாவிளக்கும்விளக்கல்ல" "அருளல்லதியாதெனிற்கொல்லாமைகோறல்"

3. கீற்றிட்டவற்றிற் காதாரத்துடன் பொருள் கூறுக:— குன்றிமூக்கிற்கரியாருடைத்து, கள்வார்க்குத்தள்ளுமுயிர்நிலை, தன்னையே கொல்லுஞ் சினம்.

4. பின் வருவனவற்றை விளக்கியுரைக்க:—நல்லாற்றூண்டி, துறந்தார்போல வஞ்சித்து, அளவினகணின்றுழுகலாற்றூர்.

5. பின்வரும் உவமைகளாற் றெரிவன யாவை?

1. 'பெற்றம் புலியின்றோல்போர்த்துமேய்ந்தற்று'

2. 'கணைகொடிது யாழ்கோடுசெவ்விது'

3. 'நிலத்தறைந்தான்கைபிழையாதற்று'

V. 1. 'யாமெய்யாக்கண்டவற்றுளில்லையெனத்தான்றும், வாய்மையினல்லபிற' என்று முற்கூறிப் பின் 'ஒன்றுகநல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமைநன்று' என்று மூரணிக்கூறியது எவ்வாறு பொருந்தும்.

2. பூவைநிலை, கையறுநிலை, செவியறிவுறூஉ இத்துறைகளை விளக்கி ஒவ்வொன்றும் இன்னின்னதிணையைச் சேர்ந்ததென்று தெரிவிக்க.

3. இலவந்திகை—நன்மாறனைப்பாடிய புலவர்கள் எவர்கள்? அவர்கள் அவனைப்பற்றிச் சொல்லுவ தென்ன?

4. திருமாவளவனும் பெருவழுதியும் ஒருங்கு எவ்வாறு வர்ணிக்கப்படுகிறார்கள்.

5. பின் வருவனவற்றை விளக்குக:—'பொதுவெனப்பொருன்' 'விரிப்பினகலுந் தொகுப்பி னெஞ்சும்' 'விசும்பாடெருவை பசுந்தடிதடுப்ப'

VI. 1. தீயமந்தரை இவ்வுரை செப்பலும் தேவி, தூயசிந்தையும் திரிந்தது; எவ்வுரை? ஏன் திரிந்தது? அது நமக்கு நன்மையான தெப்படி?

2. கம்பர் தமது சுதேசாபிமானத்தையும் சுபாஷாபிமானத்தையும் எப்படிக் காட்டியிருக்கின்றார்?

3. கம்பர் திருக்குறளைத்தழுவிய இரண்டு சந்தர்ப்பம் எடுத்துக் காட்டுக.

4. அத்தயங்குதானை தமிழ்த்தலைவனையொத்த தெவ்வாறு?

5. 'என்னிற்கேகையனங்கையே கடைமுறை நல்லள்போலும்' இது யார் கூற்று? ஏன் அவ்வாறு சொல்லுகிறார்?

VII. 1. இராமலக்குமணர் அடைவதற்கு முன்னிருந்த வனக் கொதிப்புக்கு, யாது உவமை கூறப்பட்டுளது.

2. பழமொழி சங்கநூல்களுக்குப் பிற்பட்டதென்பதற் கோர் உள்ளாதாரங் காட்டுக.

3. முல்லைக்குத்தேரு மயிலுக்குப்போர்வையு மளித்தவர்கள் யார் யார்? இவ்விருத்தாந்தம் இன்னும் எந்தெந்த நூல்களிற் கூறப்பட்டுளது?

4. 'ஒன்றுமுமுன்றிலோ இல்' இதற்கு இருபொருள்கூறிக் கதாசந்தர்ப்பமுங் காட்டுக.

5. 'சுரம்போக்கியுல்குகொண்டார்' 'நாவற்கீழ்ப்பெற்ற கனி', 'தினலாமோ அக்காரஞ்சேர்ந்த மணல்'; இவை ஒவ்வொன்றினுடனும் கூறப்பட்டுள்ள வேறு விஷயங்கள் யாவை?

VIII. 1. 'இம்மூன்றும் நீலச்சிற்றுடைக்கு நேர்' எம்மூன்றும்? சந்தர்ப்பங்காட்டுக.

2. 'கபிலர்' பொய்கையாரைத் தன்னிலுஞ் சிறந்தவரென்று கருதித் தன்னை வெறுத்துக்கொள்வ தென்னை ?

3. தமிழர் தர்மயுத்தம் ஆரம்பிக்கும்போது முதல் அம்பு விடுமுன் கூறுவது யாது ?

4. உபயபாரதி, துரோடகாசாரியர், கௌடபாதர், மண்டன மிசிரர், கோவிந்தபாதர்; இவர்கள் யார் ?

5. சங்கரரின் காலம் யாது ? இந்நாட்டின் வைதிகமதத்தை நிலைநிறுத்த அவர் காரணமாயிருந்த தெங்ஙனம் ?

II. இலக்கணம்.

பரீக்ஷகர்:—பண்டித. மு. வேங்கடசாமிநாட்டார்.

1921ஆம் மார்ச்சுமீ 5உ சனிக்கிழமை பகல் 2—4.

(அம்சம் 90.)

நன்னூல்—அகத்திணையியல்.

I. (1) தமிழ்நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் முறை வைப்புக்கு நியாயம் கூறுக.

(2) காரணப்பெயரெல்லாம் பகுபத மாமா?

(3) ஈட்டுபொருள், அஃறிணை, தாடலை, மழகளிறு: இவற்றுக்குப் புணர்ச்சிவிதி கூறுக.

II. (1) இருதிணைப்பொதுப்பெயர்கள் எவை? இருதிணைப்பொது வினைகள் எவை?

(2) ஐ, ஆன்: இவ் வேற்றுமையுருபுகள் செய்யுளில் எங்ஙனம் திரிந்துவருதலுண்டு?

(3) அஃறிணையியற்பெயர், முற்றெச்சம், எச்சத்திரிபு, வேறுவினையுடனிகழ்ச்சி, உபலக்கணம், எதிர்நிரனிரை: இவற்றைவிளக்கி ஒவ்வோருதாரணம் தருக.

III. (1) தொல்காப்பியம் எவ்வரசன தவைக்களத்தில் யாருக்குக் கேட்பிக்கப்பட்டது?

(2) கைக்கிளை, பெருந்திணை, பாலை: இப்பெயர்களின் காரணத்தை ஆராய்க.

(3) முதற்பொருள்கூறுங்காற் கருப்பொருளாகிய தெய்வத்தை உடன்கூறியது ஏன்?

IV. (1) வைகுறு, எற்பாடு என்ற சொற்களின்பொருளை விளக்குக.

(2) 'தெய்வமுணவே' என்னுஞ் சூத்திரத்திற் பிறவும் என்றதனாற்கொள்ளப்படும் கருப்பொருள்கள் யாவை?

(3) மான், கரடி, கிளி, அன்னம், அகில், கொன்றை புன்னை, தாமரை: இவை எவ்வெந்நிலத்திற் குரியன?

V. (1) 'மன்னர்பாங்கிற்பின்னோர்' 'வேந்தனினோரீயவேனோர்' இவற்றில் யார் யார் குறிக்கப்பட்டிருக்கின்றனர்?

(2) 'முந்நீர்வழக்கம்' என்பதற்கு நச்சினார்க்கினியர்கூறும் பொருள் என்ன?

(3) மடலூர்தல் யாருக்குரித்து? ஊரும் முறைமையென்ன? இஃது உலகியலாமா?

VI. (1) உள்ளுறை எத்தனைவகைப்படும்? உள்ளுறையுவமத் திற்கு வாராத கருப்பொருள் யாது?

(2) பெருந்திணையின் இலக்கணம் என்ன?

(3) அகனைந்திணையைப் பலவாறு முறைப்படுத்துவதும் தொல்காப்பியர்கருத்து என்பதற்கு ஆதாரங்காட்டுக?

VII. (1) அகப்பொருட்கு உரிமையுள்ள பாட்டுக்கள் யாவை?

(2) புலனெறிவழக்கில் நாடகவழக்காவன யாவை? உலகியல் வழக்காவன யாவை?

(3) கொண்டுதலைக்கழிதல், வன்புறை, கற்பொடுபுணர்ந்த கௌவை: இவற்றை விளக்குக.

III. வியாசம்.

பரீக்ஷகர்: ***Justice K. G.*** சேஷையர் B.A., B.L., M.R.A.S.

1921ஆம் மார்ச்சுமீ 5ஆ சனிக்கிழமை பிற்பகல் 4½–5½

(அம்சம் 30.)

1. நட்பின் சிறப்பு.
2. மாணவர்களும் துரைத்தனத்தைச் சேர்ந்தொழுகாமையும்.
3. நிலத்துமொழிவளர்ச்சி.

இவற்றுள் யாதேனுமொன்றை விளக்கி ஓர் வியாசமெழுதுக.

ஊ

தமிழ்மொழியுள் வடமொழிக்கலப்பு.

முற்காலத்தில் நம் தமிழ்மொழியுள் வடசொற்கள் அருகிக்கிடந்தன; இக்காலத்திற் பெருகிக்கிடக்கின்றன. நாள்வழிஏடு, கிழமை மும்முறைஏடு, கிழமைவழிஏடு, திங்கள்வழிஏடு ஆகிய இவற்றை ஆக்குவோர்களெல்லாரும் இன்னும் வடசொற்கலப்பைப் பெருக்கிக்கொண்டு வருகின்றனர். எவ்வாற்றால் எனில், ஒருபொருளுக்குறிக்கும் தமிழ்ச் சொல் உள்ளவிடத்தும் அப்பொருளுக்குறிக்கும் வடசொல்லைக் கையாண்டும், ஆங்கிலமொழியில் உள்ளவற்றைத் தமிழில் மொழிபெயர்க்குங்காற் புதுச்சொற்கள் ஆக்கவேண்டியவிடத்து வடமொழியில் ஆக்கி அவற்றைப் பயன்படுத்தியும்வரும் இவ்வாற்றால் என்க.

இவ்வாறு நம் தமிழ்மொழி இன்னும் சிலகாலம் நடைபெற்று வருமாயின், அஃது என்னும் என்பதைச் சிறிது ஆராய்வார்களாயின், அங்ஙனம்செய்யத் துணியார். முற்றும் தமிழ்ச்சொற்களையே கையாளுவர். சொற்கள் கிடைக்காவிடிற் புதுத் தமிழ்ச்சொற்களை ஆக்குவர். இங்ஙனம் இக்காலத்தில் அருட்டிருவாளர் மறைமலையடிகள் தாம்எழுதிவரும், திருவாசகவிரிவுரையில், கூடியவரை வடசொற்களை ஒழித்து எழுதுகின்றார்கள்; முற்றும் ஒழிக்கவில்லை. ஒழிக்கமுயல்வார்களென எதிர்பார்க்கின்றும்.

இனி மற்றைய ஏடாக்குவோர்களும் தமிழ்மொழியிடத்து அன்புள்ளவர்களாஞல் அவ்வாறே இனிமேல், செய்யத்தொடங்குவர். அங்ஙனஞ் செய்யத் தொடங்காதவர் அம்மொழியிடத்து அன்பிலார் ஆவர். அன்பிலார் ஆமாறு எவ்வாற்றால் எனில், அம்மொழியினது அழகும் பெருமையும் கெடுமாறு செய்யுமாற்றால் என்க. என்னை? அன்புடையீர் அழகும் பெருமையும் உற்றுவிளங்குமாறு செய்வர். அஃதிலாரன்றே அவை கெடுமாறு செய்வர்; ஆகலான்.

இனிவடசொற்கலப்பைப் பெருக்குதல் தமிழ்மொழியின் அழகைக் கெடுக்குமாறு யாங்ஙனம்? எனில், அழகு என்பது "கண்டாரால் விரும்பப்படுந்தன்மைநோக்கம்" மொழிக்கு அழகாவது கேட்டாரால் விரும்பப்படும் தன்மை. அத்தன்மை தமிழ்மொழி ஒன்றினுக்கே இயற்கையாய் அமைந்துள்ளது என்பதையும் ஏனையமொழிகளுக்கு அங்ஙனம் இல்லை என்பதையும் "மொழியினது உண்மைக்கூறுபாட்டுநூல்" வல்லாராகிய

திருவாளர் மாணிக்கநாயகர் முதலியோர்பாற் கேட்டறிகின்றும். இங்ஙனம் ஆகலின் வடமொழிக்கலப்பின் பெருக்கால் தமிழ்மொழி தன் இயற்கை அழகை இழக்கும் என்பது பெறப்படுகின்றது.

இனிப் பெருமையைக் கெடுக்குமாற்றை ஆராய்வாம். பெருமை என்பது குறையில்லாமை. மொழிக்குப் பெருமையாவது தனித்தியங்க வல்லதாய் ஒன்றனும் குறையின்றி எல்லாவாற்றனும் நிறைந்திருத்தல். தமிழ்மொழியுள் வடசொற்கலப்பைப் பெருக்கின், தமிழ்நூல் செய்யப் புகுவோர் இருமொழியிலும் வல்லராய் இருத்தல்வேண்டும். இல்லையேல், சொற்களைப் பிழைப்பொருள்படும்படி பயன்படுத்திவிடுவர். உரை எழுதப்புகுவோரும் அங்ஙனமே இருமொழியிலும் வல்லராய் இருத்தல் வேண்டும். இல்லையேற் பிழைப்பொருள்பட உணர்ந்து உரைப்பர்.

இனி நூற்பொருளையும் உரைப்பொருளையும் கற்கப்புகுவோரும் அந்நூலையும் உரையையும் ஆக்கியவர்களின் உண்மைக்கருத்தை உணர இருமொழியிலும் வல்லராதல்வேண்டும். இங்ஙனம் தமிழ்மொழியில் நூல்இயற்றவும் உரையியற்றவும், நூலுரைகளின்பொருளைக் கற்கவும் புகுவோர் வேற்றுமொழியாகிய வடமொழியிலும் வல்லராதல்வேண்டும் என்றிருத்தல் தமிழ்மொழிக்குக் குறையன்றே? குறையுடையமொழி பெருமை அடையுமா? அடையாது. இங்ஙனம் தமிழ்மொழி பெருமையை இழக்கும்.

மேலும், தமிழ்மொழியிலே அறிவுநூல்களைக் கற்றுப் புலவராதற்கு இருமொழியிலும் வல்லராதல்வேண்டும். சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய நம்மனோர்க்கு இருமொழிகளிலும் வல்லராதல் அரிது. ஆகவே எளிதிற் புலவராதற்கு ஏற்றவழியையே நாடுவர். அதற்கேற்ற ஒருமொழியையே தேர்வர். அம்மொழியையே பயில்வர். அம்மொழியிலேயே நூல்செய்வர். அம்மொழியிலேயே உரை எழுதுவர். ஆகலின் அம்மொழியே சிறப்புறும். நம் தமிழ்மொழி சிறப்புக் குன்றும்.

இங்ஙனம் வடசொற்கலப்பின் பெருக்கால் நம் இனிமையும் பெருமையும்வாய்ந்த தமிழ்மொழி தன்அழகையும் பெருமையையும் இழக்க நேரிடும். ஆகவே அம்மொழியிடத்து அன்புடையராவார் அனைவரும் இன்றுமுதலே வடசொற்கலப்பை முழுதும் ஒழிக்க வழிதேடுவார்களாக. அங்ஙனமாக இறைவன் அருள்புரிவானாக.

———— கு. வீ. கு. வே.

மயின்முறைக்குலத்துரிமை.

"வெயின்முறைக்குலக்கதிரவன்முதலியமேலோர்
உயிர்முதற்பொருள்திறம்பினுமுரைதிறம்பாதோர்
மயின்முறைக்குலத்துரிமையையமனுமுதன்மரபைச்
செயிருறப்புலச்சிந்தையாலென்சொனாய்தீயோய்"

(இராமா-மந்தரைசூழ்ச்சிப்படலம்-சுச)

ஸ்ரீராமப்பட்டாபிஷேகத்தை விலக்கவேண்டிக் கூனியாகிய மந்தரை கைகேசியிடங் கூறக் கைகேசிவெகுண்டுரைத்ததாக இக்கவி வந்துள்ளது.

இதில் "மயின்முறைக்குலத்துரிமையை" என்பதற்குத் தமிழ் வித்துவான்களிற் பலர் பலவிதமாகப் பொருள்கூறுகிறார்கள். ஒருவர் மையின்முறை யென்றது எழுத்து முதற்போலியாய் மயின்முறை யென்று வந்தது; குற்றமற்ற முறையுள்ளகுலம். எனப் பொருள்கூறுவர். ஒருவர் மயில் என்றதற்குக் கேகயம் என்பது பரியாயநாமம். மயில்களில் மூத்ததற்கே கலாபம் முளைக்கும். யான் கேகயத்தரசன்புத்திரியாகையால் மூத்தவர்க்குரித்தான இராச்சியத்தை விரும்பேன். என்வயிற்றுதித்த பரதனும் விரும்பான் என்ற கருத்தையடக்கித் தான் பிறந்த குலத்தின்பெருமையையும் கூறினளென்பர். ஒருவர் ஒருமயிலுக்குப் பலகுஞ்சுகளிருந்தாலும் மூத்தகுஞ்சிற்கே உச்சிக்கொண்டை முளைக்கும் அது மரித்தபின்னரே அதையடுத்தகுஞ்சுக்கு முளைத்து வரிசையாய் வால்போல மூத்தவராகிய ஸ்ரீராமபிரானுக்கே முடிசூட்டல் முறைமை யெனக்கூறினளென்பர். இவைகளிலிவிட மூத்தமயிலுக்கே கலாபம் முளைப்பதென்பதற்குத் தக்கஆதாரம் தணிகைப்புராணத்தில் இருக்கிறது.

களவுப்படலம் செய்-244.

தன்னறிவுளதெனத் தலைவற் கிகுளை
முன்னுறுபுனர்ச்சி முறை திறுத்துரைத்தல்

"பலாவம்பொழிலினெருதாயுயிர்த்தபலமயிற்குங்
கலாவம்புனைந்தகளிமயின்மூத்ததெனக்கருதச்
சுலாவம்பரநிமிர்வெற்பினெம்மாதுக்குத்தோன்றன்முன்ன
மிலாவம்புவாய்ப்பமுதுக்குறைந்தாளெனவெண்ணமுண்டே".

இதனால், பலமயிற்குங் கலாவம்புனைந்தகளிமயில் மூத்தாற்போலச் சக்கரவர்த்தி திருக்குமாரர் நால்வரினும் மூத்த திருக்குமாராகிய ஸ்ரீ ராகவனுக்கே ராச்சியவுரிமை யென்று கூறினதாகப் பொருள்கூறல் பொருத்தமாகும்.

அன்றியும், ஸ்ரீமகாபாரதம் சாந்திபர்வத்தில் பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு ராஜதர்மங்களை யுபதேசிக்குங்கால் மயின்முறையை அனுசரிக்கவேண்டுமென்று கூறியுள்ளார். அது வருமாறு:-

"மயிலானது பலவர்ணங்களுள்ள தோகைகளை யெவ்விதம் தரிக்கிறதோ அவ்விதம் தர்மமறிந்த அரசன் பலவிதமான ரூபத்தைக்கொள்ள வேண்டும். கடுமையையும் கபடத்தையும் (வரி) வாங்குகின்றதையும் ஸத்தியத்தையும் நேர்மையையும் அதுபோலத் தைரியத்தையும் அடைந்து நடுவுநிலைமையாயிருக்கும் அரசன் சுகமடைவான். எந்த விஷயத்தில் எவ்வித உருவம் இருக்கவேண்டுமோ அந்த விஷயத்தில் அந்த உருவத்தைக் காட்டவேண்டும். அதாவது சிகையில் குரூரனாகவும் ரகையில் சாந்தனாகவும் இருக்கவேண்டும். பல உருவமுடைய அரசனுக்குச் சூட்சுமமான விஷயமும் நாசமடையாது.

மயிலானது சரத்காலத்திற் சப்தியாம்லிருப்பதுபோல அரசன் எப்பொழுதும் மந்திராலோசனையை வெளிவிடாமற் காக்கவேண்டும்.

மயில் இனிமையான குரலும் உடம்பின் அழகும் தன் செய்கையிற் சாமர்த்தியமும் பொருந்தியிருப்பதுபோல அரசனும் அழகானசொற்களுள்ளவனும் சம்பத்துள்ளவனும் சாஸ்திரங்களிற்சமர்த்தனுமாயிருக்கவேண்டும்.

மயிலானது நீரருவிகளில் நாட்டமுள்ளதாயிருப்பதுபோல அரசன் வரவுசெலவுகளிற் சாக்கிரதையுள்ளவனாயிருக்கவேண்டும்.

மயிலானது மலையிலுள்ள ஜலத்தை ஆச்ரயித்திருப்பதுபோல அரசன் சித்திபெற்ற பிராம்மணர்களை ஆசரிக்கவேண்டும்.

மயில் தன் தலையிலுள்ள சிகையை எப்பொழுதும் தூக்கிவைத்துக்கொண்டிருப்பதுபோலப் பொருளில் விருப்பமுள்ள அரசன் இயற்கையில் தர்மிஷ்டனென்று பிறர்நினைக்கும்படி தருமத்துக்குக் கொடிகட்டுவதுபோல அடையாளங்களைக் காண்பிக்கவேண்டும்.

மயிலானது தன்னைப் பாதுகாத்துக்கொண்டு பாம்பு மு த லி ய வற்றை அடக்க எப்போதும் சாக்கிரதையாயிருப்பதுபோல அரசன் எப்பொழுதும் தண்டத்தைமேற்கொண்டவனும் ஆசாரத்தில் அஜாக் கிரதையில்லாதவனுமா யிருக்கவேண்டும்.

மயிலானது இருக்கிற மரத்திலிருந்து அதிகச்செழுமையுள்ள மரத் துக்குச் செல்வதுபோல அரசன் உலகிலுள்ள வரவுசெலவைக்கண்டுவரவு அதிகமும் செலவு குறைவுமாகவுள்ள காரியங்களிற் செல்லவேண்டும்.

மயில் தன் தோற்றத்திலுலேயே காக்கைமுதலியவற்றின் கு ற தோன்றும்படியிருத்தல்போல அரசன் தன் நேர்மையிலுலேயே சத்துரு வின் குற்றங்கள் வெளியாகும்படி யிருத்தல்வேண்டும்.

மயில் உயர்ந்த செழிப்புள்ள மலைகளையடிப்பதுபோல அரசன் உயர்ந் தவர்களும் விர்த்தியடைந்தவர்களும் மலைபோன்றவர்களுமான அரசர் களை யடிக்கவேண்டும்.

மயில் கலைத்தகாலத்து நிழலையடிப்பதுபோல அரசன் இளைத்த காலத்தில் ஞாதியை ஆச்சயிக்கவேண்டும்.

மயில் வேனிற்காலத்தில் மரத்தில் ம ற ந் து ஒன்றுவதுபோல அரசன் ரஹஸ்யமாய் ரகூஹனையடையவேண்டும்.

மயில் வருஷாகாலத்திற் களிப்பதுபோல அரசன் இ ர வி ல் ஜன மில்லாவிடத்திற் களிக்கவேண்டும்.

மயில் ராத்திரியில் வெளிப்படாததுபோல அரசன் மழைக்காலத் தில் வெளிப்படாமல் அந்தப்புரத்தில் ஸஞ்சரிக்கவேண்டும்.

மயிலினுடைய குணம்போலவே ஸ்திரீகளால் ரகூஷிக்கப்பட்டவனுக ஸஞ்சரிக்கவேண்டும். கவசத்தை விடக்கூடாது. தானே தன்னை ரகூஷித் துக்கொள்ளவேண்டும்.

மயில் தான் ஸஞ்சரிக்கும் இடங்களிற் போடப்பட்ட வ லை க ளை விலக்கிக்கொள்வதுபோல அரசன் சாரர்களால் காண்பிக்கப்பட்ட விடங் களிற் கபடமாக வைக்கப்பட்ட (தன்னைக்கொல்வதற்காக வைக்கப்பட்ட

விஷம் முதலியவைகள்,) பாசங்களை விலக்கவேண்டும். தெரிந்தும் அவ்விடத்திற் செல்லுவானுகில் நாசமடைவான்.

இவ்விதம் மயிலின் தர்மப்படி யெப்பொழுதும் நடந்துவரும் மனிதன் (மயிலானது விஷமும் கோபமும் கோணலானநடையு முள்ள பாம்புகளைக் கொல்லுவதுபோல) அதிக விஷமுள்ளவர்களும் கோபமுள்ளவர்களும் கோணலானநடையுள்ளவருமான சத்துருக்களைக் கொல்லுவான்.

மயில் புழு முதலியவற்றை வெறுக்காததுபோல அரசன் இகழ்ச்சியாயிருப்பவைகளிடத்தில் அசூயைப்படக்கூடாது.

மயில் உறுதியான பசூதங்களையடைந்திருப்பதுபோல அரசன் உறுதியான மூலமுள்ள மந்திரிமுதலிய தன்பசூதங்களை நிலைக்கவைத்துக் கொள்ளவேண்டும்.

மயிலானது எப்பொழுதும் தன்னிஷ்டப்படி தன்பசூதங்களை விரிவாகச்செய்வதுபோல அரசன் தன்பசூதத்தார்களைப் பரவச்செய்கிறதென்கிற சிறந்தகாரியத்தைச் செய்யவேண்டும்.

அரசன் இப்படி மயில்போலத் தன்ராஜ்யத்தைப் பரிபாலிக்கவேண்டும்."

இவ்வாறு ஆதித்தன்குலமுதல்வனுகிய மனு முதலான எல்லா அரசர்களும் மயின்முறையிற் றவருதவர்களாகையால், "செயிருறப்புலச் சிந்தையாலென்சொனுய்தியோய்" என்று கூறினுளெனக் கூறுவது பொருத்தமாயிற் கொள்ளலாம்.

ஜி. சதாசிவம் பிள்ளை.
நாலக நீலலோசனிப் பத்திராதிபர்.

திருக்கச்சிநெறிக் காரைக்காட்டுச் சோழசிலாசாஸனங்கள்.

(செந்தமிழ் 18-ஆம் தொகுதி 8ஆ-ம் பகுதியின் கூகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

(திருக்கச்சிநெறிக்காரைக்காட்டில் திருக்கையாலீசுவரர்கோவிலின் கர்ப்பக்கிரகத்தின் தென்மேற்குமூலையில் ஆரம்பம். அடிப்படை அல்லது முதற்படைவரிசை)

ஸ்வஸ்திஸ்ரீ

திருமன்னிவளரஇருநிலமடந்தையும்,போர்ச்சயப்பாவையும்சீர்தனிச்செல்வியும்,தன்பெருந்தேவியாக்கிஇன்புற, நெடியஞாழியுள்இடைதுறைநாடுந்,துடர்வனவேலிப்படர்வனவாசியும், சுள்ளிசூழ்மதிட்கொள்ளிப்பாக்கையும், நண்ணற்கருமுறண்மண்ணீக்கடக்கமும், பொருகடலீழத்தரையர்தம்முடியும், முன்னவன்பக்கல்தென்னவன்வைத்த, சுந்தரமுடியும் இந்திரஞரமும், தெண்டிரையீழமண்டலமுழுவதும், எறிபடைக்கோளன் முறைமையிற்சூடும், குலதனமாகியபலர்புகழ்முடியும், செங்கதிர்மாலையும் சங்கதிர்வேலைத், தொல்பெருங்காவற்பல்பழந்தீவும்,செருவிற்சினவில்இருபத்தொருகால். அரசுகளைக்கட்டபரசுராமன், மேவருஞ்சாந்தியமத்தீவரண்கருதி,. இருத்தியசெம்பொற்றிருத்தகுமுடியு, மாப்பெருந்தண்டாற் கொண்டகோப்பரகேசரிவன்மராகியஸ்ரீராஜேந்திரசோழதேவற்குயாண்டு அ-வது (தாம் இராஜ்யாதிகாரம்பெற்ற 8-வது ஆண்டில்)

எயில்கோட்டத்துநகரம் கச்சிப்பேட்டு திருநெறிக்காரைக்காடுடைய வருஷ பீசுவர்க்கு:-

இப்பழுவேட்டரையர் மகளார் முஞ்ஞுவல்லவரையர் இராஜசேகர் தேவியார் அமராசியன் சேமடிகள்வைத்த திருநந்தாவிளக்குமூன்று

இம்மூன்றும்-சந்திராதித்தவரை எரிக்க நெய்அட்டஆடுகொண்ட மன்றுடி-

ஊற்றுக்காட்டுக்கோட்டத்து தமனூர்நாட்டு திருநெறிக்காரைக்காட்டுப்புறம் அவ்வள்ளூர் இருக்கும் மன்றுடிமோடன்கும்பை கொண்ட ஆடு நாற்பத்தேழரையினல் திருவேகம்பனுல் நிசதம் அட்டக்கடவிய நெய் ஆழாக்கும் தானத்தார் பக்கல் திங்கள்தோறும் அறவட்டி சந்திராதித்தவரை செலுத்துவதாகவும்

(2) இக்கோட்டத்து இவ்வூர் மன்றுடி எழுவன்.....றங்கடம் கொண்ட ஆடு நாற்பத்தேழரையினல் திருவேகம்பனுல் அட்டக்கடவிய நெய் ஆழாக்கு இந்நெய் ஆழாக்கும் திங்கள்தோறும் அறவட்டி சந்திராதித்தவரை செலுத்துவதாகவும்

(3) இக்கோட்டத்து இவ்வூர் மன்முடி மாறன் 'ஒட்டியானழியன்' கொண்ட ஆடு நாற்பத்தேழரையினுல் திருவேகம்பநாழியால் மேற்படி (நிசதம்) நெய் ஆழாக்கு இந்நெய் ஆழாக்கும் ஸ்தானத்தார்பக்கல் திங்கள் தோறும் அறவட்டி சந்திராதித்தவரை அறப்பதாகவும்.

(4) மேற்படியூர் மன்முடியான "யங்கன்" கொண்ட ஆடு இருபத்தி மூன்றெழுகாலினுல் (இஃது இருபத்துமூன்றேமுக்காலினுல் என்றிருத்தல்வேண்டும்) திருவேகம்ப நாழியால் அட்டக்கடவநெய் இருசெவிடரையும் (2½ செவிடு=½ ஆழாக்கு) ஸ்தானத்தார்பக்கல் சந்திராதித்தவரை திங்கள்தோறும் அறஅட்டி (முழுதும் செலுத்தி) செலுத்துவதாகவும்,

(5) இக்கோட்டத்து ஷையூர் (திருநெறிக்காரைக்காட்டுப்புறம் அவ்வள்ளூர் "குட்டன்கலியாணகோமாடி" கொண்ட ஆடு இருபத்திமூன்றேமுக்காலினுல் மேற்படி திருவேகம்பநாழியால் அட்டக்கடவநெய் இருசெவிடரையும் (2½ செவிடு நெய்) மேற்படி தேவஸ்தான முடையார் பக்கல் செலுத்துவதாகவும்,

(6) மேற்படியூர் மன்முடி "புலியன் கண்டன்" கொண்டஆடு இருபத்திமூன்றேமுக்காலினுல் மேற்படி திருவேகம்ப நாழியால் அட்டக்கடவநெய் இருசெவிடு.....மேற்(....படி செலுத்துவ) தாகவும்—(2½ செவிடு).

(7) மேற்படி ஊற்றுக்காட்டுக்கோட்டத்து, தமனூர்நாட்டு, திருநெறிக்காரைக்காட்டுப்புறம் அவ்வள்ளூரிலிருக்கும் மன்முடி "திருமாகாளன்தாழி" கொண்ட ஆடு நாற்பத்தேழரையினுல் ஷை திருவேகம்ப நாழியால் அட்டக்கடவநெய் ஆழாக்கும் (1 ஆழாக்கு நெய்) ஷை தானத்தார் பக்கல் அறஅட்டி செலுத்துவதாகவும்.

(8) இக்கோட்டத்து (ஊற்றுக்காட்டுக்கோட்டத்துமாகறல் நாட்டு வயலூர் இருக்கும் மன்முடி "காமன்சேரி" கொண்ட ஆடு இருபத்தி மூன்றேமுக்காலினுல் திருவேகம்பநாழியால் அட்டக்கடவ நெய் இருசெவிடரையும் (2½ செவிடுநெய்) தானத்தார்பக்கல் சந்திராதித்தவரை செலுத்துவதாகவும்,

ஆகத் திருநந்தாவிளக்கு மூன்று, இம்மூன்றும் சந்திராதித்தவரைக்கும் வைத்தேன்.

முஞ்சைவல்லவரையர் இராஜசேகர் தேவியார் அமராசியன் சேமடிகளேன். இவர் அருளிச்செய்ய எழுதினேன் இவர்கன்மி 'மணலூர்கிழவன்' ஆச்சன் சிவதேவனேன்.

இவை என்னெழுத்து.

(தொடரும்)

காஞ்சிபுரம் அ. நடேசசெட்டி,
85. செட்டித்தெரு,
சின்னக்காஞ்சிபுரம்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி க்க.] தர்மதி- வரு சித்திரை-மீ [டருதி கூ.
Vol. XIX. April—May—1921. No. 6.

தமிழ்க்கவிவாணருக்கு ஒருவிண்ணப்பம்.*

கனவான்களே!

கவியின் உண்மைலக்ஷணத்தைச் செவ்விதின் உணர்ந்து நாம் இன்பறுதற்பொருட்டும், நமது தாய்மொழியாகிய தமிழில் அவ்வகை லக்ஷணங்கள்நிரம்பிய செய்யுளிலக்கியம் இனியோடிவளர்தற்பொருட்டும், இப்பிரசங்கம்செய்ய நான் முன்வந்துள்ளேன். பிரசங்கம் ஒன்றினால் எனது நோக்கம் நிறைவேறுமோவெனின், ஒருவாறு நிறைவேறுமென்றே நம்புகிறேன். ஒருநிலத்திற் பயிர் செழித்து உண்டாகவேண்டுமானால் அதற்கு நிலத்தின்வளமும் வித்தின்நலமும் முக்கியமானவையாம். வித்துநான் எத்தன்மையதாயிருந்தாலும் விளைவைப்பாதிக்கமாட்டாது: அதுபோலத் தங்களைப்போன்ற பண்புமிக்கோரது மனதிலே சில உண்மைக்கருத்துக்களை விதைத்தால் அது மிக்க பயனைக்கொடுக்கும என்பதே எனது துணிபு.

நமது தமிழ்ப்பாஷையின் பழமைபினையும் பெருமைபினையும் குறித்து நான் தங்களுக்கு விரித்துரைக்கவேண்டிய ஆவசியகமில்லை. இந்தியபாஷைகளில் வடமொழியோடு ஒப்பிடக்கூடியது தமிழ் ஒன்றே. வட இந்தியாவில், சமஸ்கிருதமும் அதன்கிளைகளாகிய பங்காளிமுதலிய பாஷைகளும் எப்படிப் பரவி நிலைபெற்றிருக்கின்றனவோ அப்படியே தென்னிந்தியாவில் தமிழும் அதைச்சேர்ந்த இதர திராவிடபாஷைகளும்

* இது 1898ல்—திருவனந்தபுரம் சாலைச்செந்தமிழ்க் கழகத்திற்செய்த பிரசங்கக் குறிப்பினின்றும் விரித்தெழுதப்பட்டது.

நின்று நிலவுகின்றன. இதனாலேயே தமிழின்பெருமை இனிது விளங்கும். மேலும், வடமொழிபோல் தமிழ் உலகவழக்கு அழிந்துவிட வில்லை. இலக்கியவழக்கோடு ஜனங்களிடையில் இன்றும் உயிர்த்து உலாவுகின்ற 'நாடோடி' பாஷை யென்னும் பெருமையும் வாய்ந்துள்ளது நம்தமிழ். இதுபற்றியன்றே பூர்வதனர்களுள்ளே கல்வியிற்பெரிய கம்பரும், ஆதுனிகர்களில், தமிழ்ப் புலமைசான்ற மனோன்மணீயநூலாசிரியரும் தமிழைக் கீழ்வருமாறு புகழ்ந்துரைக்கின்றார்கள்:—

'உழக்குமறைகாலினுமுணர்ந்துலகமோதும்
வழக்கினுமதிக்கவினினும்மரபினுடி
நிழற்பொலிகணிச்சிமணிநெற்றியுமிழ்செங்கட்
டழற்புரைசுடர்க்கடவுடந்தமிழ்தந்தான்'—இராமாயணம்.

'ஆரியம்போலுலகவழக்கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரியளமைத்திறம்வியந்துசெயன்மறந்துவாழ்த்துதுமே.'
—மனோன்மணீயம்.

வடமொழிபோல் தென்மொழிக்கு இலக்கியவிரிவு இல்லையெனினும் மூன்மொழி மனிதர்களது நித்தியவியாபாரத்துக் குபகரிக்குந்தன்மை யுடையதாயிருக்கின்றது. இது தமிழ்மொழியின் வளர்ச்சிக்குரிய காரணங்களில் முக்கியமானதொன்றென்று நீங்களறிவீர்கள். உலக வழக்கத்திலிருக்கிற ஏனைய திராவிடமொழிகளோடு நமதுமொழியை ஒத்து நோக்கினும் அதன்பெருமை மேம்பட்டே நிற்கும். திராவிட பாஷைகளுக்கெல்லாம் மூலபாஷையாய்நின்றது நமது தமிழ் என்றே பாஷாசாஸ்திர விற்பன்னர்கள் துணிகின்றார்கள். இதன் உண்மை எவ் விதமாயினும் ஆகுக. வயது முதிர்ச்சியாலும் இலக்கியவிரிவினாலும் ஒலி இன்பத்தினாலும் தமிழ் மற்றைய திராவிடபாஷைகளைவிட உயர்ச்சி பெற்றதாகவே இருக்கிறது. இது கேவலம் அபிமானத்தாற் சொல்லும் புனைந்துரையென்று நினையாதீர்கள்.

ஆயினும் நமது பாஷையிலுள்ள செய்யுளிலக்கியங்களிற் சிற்சில குறைபாடுகள் ஏற்படாதிருக்கவில்லை. பிரபந்தங்களின் ரூபத்தையொட்டியோ அல்லது அவற்றிற் கூறப்படும் பொருளையொட்டியோ ஆராய்ச்சி செய்வோமாகில் இருவிதத்திலும் இலக்கியங்களின்குறை மலையிற்தீபம் போல் மிக்கு விளங்கும்.

நமது பாஷையில் இயற்றப்பட்டிருக்கிற நூல்களெல்லாம் செய்யுள் ரூபத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன; வசனரூபத்தில் அமைத்த நூல்கள் இல்லையென்றே கூறவேண்டும். வசனநூல்கள் இல்லாதது தமிழ்ப்பாஷைக்கு ஒரு பெருங்குறைவே. அவைகளின்மையாற் சாதாரண ஜனங்களிடையில் அறிவு பரவுவதற்கு இடமில்லாமற்போனது மாத்திரமல்ல; பாஷையே வளரமாட்டாது ஒரேநிலையில் நின்றுவிட்டது. எவ்வெவ்வழிகளில் நூதனமான சொற்கள் அமைப்பெற்று வழக்கிற் புகுந்து பாஷையை வளர்க்கவேண்டுமோ, அவ்வவ்வழிகளிற் றடைகள் ஏற்பட்டுச் சொல்வளங் குன்றிச் சொல்வனப்பு, சொல்லாற்றல், முதலிய புகழ்தற்குரிய குணங்கள் விருத்தியடையாது போயின. தற்காலத்திற் சிலர் 'நாவல்' என்னும் புதிய கதைநூல்களியற்றி இக்குறையை நீக்க ஆரம்பித்திருக்கின்றனர். இனி வசனநூல், கதைமாத்திரத்தில் நில்லாது சரித்திரம், ஜீவியசரித்திரம், வியாசம், மதிப்புரை முதலிய, பலபிரகாரங்களில் வெளிவரவேண்டும். பிரகிருதி சாத்திரங்களோ, இயற்கையுண்மை மேலெழுந்த தத்துவசாஸ்திரங்களோ, சரித்திரங்களோ, கலைநூல்களோ நம்மிடம் இல்லை. இக்குறைகளும் தக்க வசனநூல்களால் நீக்கப்படவேண்டும். தமிழ்நூல்கள் பெரும்பாலும் செய்யுள்ரூபமாக இருப்பது ஒரு சரித்திர உண்மையை நமக்கு விளக்குகின்றது. ஒவ்வொரு தேசத்தாருடையவும் ஒவ்வொரு சமுதாயத்தாருடையவும் பூர்வ இலக்கிய சரித்திரத்தை ஆராய்ச்சிசெய்தாற் செய்யுள்நடை நூல்களே முதன்முதலில் மிகுதியாக இருந்ததாகக் காணப்படுமென்று மெக்காலே என்னும் ஆங்கிலேய ஆசிரியர் கூறுகின்றார். இவ்வுண்மை நமது பாஷைக்கும் பொருத்தமுடையதாகவே யிருக்கின்றது. நமது பூர்வீகர்கள் இருந்த நிலையினின்றும் நாம் சிறிதும் பெயராது முன் இருந்தபடியே யிருப்பதனாற்றான் நமது இலக்கியமும் ரூபத்தால் மாறுதலடையாது அதன் ஆரம்பகாலத்திலிருந்தநிலையிலேயே இன்றும் இருக்கிறது. ஆனால் தற்காலத்திற் பரவிவரும் நல்லுணர்ச்சியினால் வெகு சீக்கிரத்தில் இக்குறை நிவர்த்தியாய்விடுமென நம்புவதற்கு இடமுண்டு.

பெரும்பாலும் செய்யுள்ரூபமாகத் தமிழ்நூல்கள் இருப்பதுடன் பொருளைக் கவனிக்குமிடத்து அவை, இதிகாச புராணங்கள், ஞான சாஸ்திரங்கள் என்ற இரண்டில் ஒன்றின்கண் அடங்கியொழிகின்றன. நீடித்தகாலம் நம்மிடம் வெளிநோக்குமியல்பு குறைந்து உள்நோக்கு

மியல்பு அதிகரித்தே இருந்தது; இன்று மிருக்கிறது. இதனாலேயே இயற்கைப்பொருள்களைக் குறித்த சாஸ்திரங்கள் குறைந்து மானசிக தத்துவ நூல்களாகிய ஞானநூல், தருக்கநூல், சன்மார்க்கநூல் முதலியவை அதிகரித்தன. செய்புள்ரூபத்தில் நூல்கள் அமைத்துவந்த போதிலும் கவியின் உண்மை லக்ஷணத்தையும், நோக்கத்தையும், கற்று வல்லாருங்கூடப் பிழைபட உணர்ந்தார்கள். செய்புளுக்குரிய விஷயங்களைத் தெரிந்தெடுத்தோ அல்லது அதனை இயற்றவேண்டும் ரீதிகளை விசாரித்துணர்ந்தோ நம்மவர்கள் நூல்செய்தார்களில்லை. இக்குறை இலக்கிய மதிப்பாசிரியர்கள் இல்லாததால் வந்ததேயன்றி வேறன்று. தமிழ்ச்சங்கப் புலவர்களும் பிற்கால ஆசிரியர்களும் இலக்கியங்களைத் தக்கவாறு ஆராய்ச்சிபுரிந்து மதிப்புரை தந்தார்களில்லை. ஆராய்ச்சி வல்லாரது கழகமொன்று ஏற்படாத படியால் தமிழிலக்கியமென்னும் அகன்ற பிரதேசம் சிற்சில அலங்காரமாளிகைகளால் அழகுபெறுவதோடு நமக்கு அருவருப்புத்தரத்தக்க குடிசைகளையும் குப்பைமேடுகளையும் காட்டி விகாரமடைந்து மிருக்கின்றது. தமிழிலக்கியத்தின் குறைபாடுகளிங்ஙனமிருக்க, தமிழ்க்கவியின் குறைகளைமட்டுமே இங்கே எடுத்து விசாரிப்போம்.

கவியின் பொதுவிலக்கணங்களையும் சிறப்பிலக்கணங்களையும் அறிந்துகொள்ளாது காவியம் அமைக்கத்தொடங்கும் ஆசிரியர் அரங்கின்றி வட்டாடல்தொடங்கும் சிறுவரைப்போல் இடர்ப்படுவர். நற்கலைகளின் ஒரு பிரிவாகிய கவி, நற்கலைகளெல்லாவற்றிற்கும் பொதுவாகவுள்ள நோக்கத்தைத் தழுவியே நிர்மிக்கப்படல்வேண்டும். நற்கலைகளின் பொதுநோக்கம் இன்பம் பயத்தலே. இவ்வின்பத்தைச் சித்திரம் சிற்பம் முதலியன ரூபவழியாகவும், இசை அல்லது சங்கீதம் ஒலிவழியாகவும், கவி சொல்வழியாகவும் ஊட்டுகின்றன. 'செஞ்சொற்கவியின்பம்' என்றார் கம்பநாடரும். இவ்வின்பம் எங்குக் கெடுகின்றதோ அங்கு நற்கலையென்பதே இல்லாதாகின்றது. தமிழ்க் கவிக்கடலிற் சற்று இறங்கி நோக்குவோமானால் அங்கே ஆரவாரமும் கொந்தளிப்பும் நுரைநிரைகளுமே ஏராளமாகக் காண்போம். கம்பராமாயணம்போன்று பலவகையானும் சிறந்த காவியங்கள் கிடைப்பது அருமையினுமருமை.

முன்முதல், நம்முடைய கவிஞர்கள் காவியப்பூளையுமுள் காவியத்திறகாம்விஷயத்தைத் தெரிவதிற் கவனம்செலுத்துகிறார்களில்லை.

இஃதொரு பெருங்குறை. பௌதிகசாஸ்திரங்களும் தத்துவநூல்களும் காவியநிர்மாணத்திற்கு இடங்கொடுக்குமா? கணிதம், சோதிடம், வைத்தியமுதலிய சாஸ்திரவிஷயங்கட்கும் காவியத்தாற் பிரதிபாதிக்கப்பட வேண்டும் விஷயங்கட்கும் எத்துணை வித்தியாசம். இதை அறியமாட்டாமையினலன்றே வேதாந்த சித்தாந்த சாஸ்திரவுண்மைகளெல்லாம் காவியத்துறையி லுட்புகுத்தப்பட்டன! காவிய இன்பம் தருதற்கெவ்வாக் கணிதத்தையும் கவியிற் புனைந்தனரன்றே! மருந்தைப்பற்றி இயற்றிய கவிகளெல்லாம் மருந்திலும் கசப்பே! ஞான காவியமெல்லாம் மோன காவியமாகவே முடிந்தன! சோதிடப் பாக்களாவெனின் வாதிடவேண்டிய பாக்களே!

கவியின்பம் கேடுறுவதற்கு இரண்டாவது காரணம் கவித்திறம் சிறிதும் அமையப்பெறாத அறிவிலிகளாலும் போலிக்கவிகளாகிய சித்தர் முதலியோர்களாலும் கவியியற்றப்பட்டமையே. பல்லிசாஸ்திரம், பகுதி சாஸ்திரம், பாம்பாட்டிச்சித்தர்பாடல், ஞானவெட்டி முதலிய நூல்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளிற் 'கோளப்பா' என்று தொடங்கி வேண்டிய அடிகளில் 'நாளப்பா' 'தாளப்பா' 'மாளப்பா' என்று எதுகை சேர்த்துக் கவியைமுடித்துவிடுவார்கள். 'பொருள்' இக் கவிஞர்களுக்கு ஓர் பொருளன்று. சித்தர்களெல்லாம் கவியின் அழகைக்கெடுக்கவந்த பிரசித்தர்களே யென்று அண்ணர் இயற்றியநூல்களை வாசிக்கும் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளாதொழியார்.

மூன்றாவதாக, வித்துவான்களென்று மதிக்கப்படுமெவரும் கவி எழுதப் புகுந்தது கவிச்சிறப்புக் குன்ற வேறொருகாரணமாயிற்று. கவி பாடுந்திறம் ஒருவனிடம் இல்லையெனின் அவனை ஒரு தமிழ்வித்துவான் என மதித்தலே கூடாதென்ற தப்பெண்ணம் நம்மிடம் வேரூன்றி நிற்கிறது. இதனால் உத்தமக்கவிகளாகிய நன்மணிகளோடு போலிக் கவிகளாகிய பதர்களும் விரவிக்கிடக்கக் காரணமாயிற்று.

இயற்கையிலேயே கவிவாசனை அமையப்பெறாத வித்துவான்களது கவிகளிற் கவிச்சுவை சிறிதும் காணுதலரிது. அவைகள் பல கல்வித் துறையினும் அவர்களுக்குள்ள நிறமையினைக் காட்டுமாயினும் ரசமில்லாக் கனிபோல் இன்பம் சிறிதும் பயவா. அதிவீராமபாண்டியனது 'நைடதம்' சிவஞானசுவாமிகளின் 'கம்பரந்தாதி' மகாவித்துவான்

மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களின் 'திருத்தில்லையமகவந்தாதி' முருகதாச சென்னும் தண்டபாணிசுவாமிகளின் 'ஒலியலந்தாதி' முதலிய நூல்கள் நான்சொல்லும் உண்மையை விசதமாக்கும். இக்கவிஞர்கள் புத்திசாமர்த்தியத்திலோ பாண்டித்தியத்திலோ குறைந்தவர்களென யாரும் சொல்லத் துணியார். ஆயினும் அவர்களது பாடல்களை இன்பம் ஒழுகும் பாக்களாக நற்கலையுணர்ச்சியுடையார் மதிப்பரோ? மேலான கவிமாதரியம் அமையவேண்டுமாயின் ஒரு கவிஞரிடம் இரண்டு விசிஷ்டதர்மங்கள் ஒருங்கே அமைந்திருத்தல்வேண்டும். அவற்றி லொன்று பிறப்புவிசேடத்தினுலமைவது. அழகில் ஈடுபடும் உணர்ச்சி நலன், அவ்வழகினைக் கருத்தினுல் நூதன ரூபங்களில் அமைக்கவல்ல மனோதர்மம், முதலிய குணவிசேஷங்கள் ஒருகவிஞனிடம் பிறவியிலேயே பொருந்தியிருத்தல் வேண்டும். உலகத்திலுள்ள மகாகவிகள் எல்லாரும் இவ்வகைப் பிறப்பு விசேஷமுடையவர்களே. மற்றொன்று அநுபவவிசேடத்தினுலமைவது. லோகாநுபவத்தால் மக்களைப்பற்றியனவும் பிரகிருதியைப்பற்றியனவுமாகிய உண்மைத்தொகுதிகளை உணர்ச்சிவழியே அறிந்தவனுதலோடு காவியப்பயிற்சியும் கிரமப உடையனுதல். இவற்றுற் காவியத்திற பிரதிபாதிக்கவேண்டிய உண்மைகளும் அவ்வுண்மைகளைத் தக்க அழகோடு வெளியிடவேண்டிய பாஷாபரிஞ்ஞானமும் ஏற்படும். இந்த விசேஷ குணமும் மகாகவிகள் எல்லாரிடமும் காணப்படுவனவே.

நான்காவதாகப் பொருளைக்காட்டினும் உருவத்திற்கு அதிகச் சிறப்பு நமது கவிஞர்கள் கற்பித்துவிட்டார்கள். சந்தப்பாக்களும் எகபாதங்களும் கோமூத்திரி முதலிய சித்திரக்கவிகளும் பாற்கடலிலெழுந்த விஷமென்று சொல்லலாமேயன்றிப் பிறதென்சொல்வது? ரதபந்தம், நாகபந்தங்களெல்லாம் கவியின் மனோபந்தங்களேயல்லாமல் வேறென்ன? 'மாலைமாற்று' என்பது உண்மைக்கவியின் வேலைமாற்றே! 'சுழிகுளம்' என்பது கவிஞர்மூழ்கும் இழிகுளமல்லவோ! 'காதைகரப்பு' என்று கூறுவதைக்காட்டிலும் கவிஞரின் போதகரப்பு என்று சொன்னுற் றவறில்லையே! 'பிறிதுபடுபாட்டு'ச் சமைக்கப் புகும் கவியின்பாடு சிறிது பரிதாபமோ! ஐயோ! இக்கவிஞர்கள் எல்லாரும் வாயையும் மூக்கையும் மூடிச் செவிவழிசுவாசம்விட்டு மாளுகின்றார்களே! சிவஞானசுவாமிகள் செய்த காஞ்சிப்புராணத்திற் சுரகரீசப்படலம்நோக்கிச் சித்திரப்பாக்களின் விசித்திரங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். நிரம்பவழகியதேசிகர் செய்த சேதுபுராணத்தில்,

'நேசமோடுதமிழ்நிலமொழிதன்னைநீத்தான்
பூசுரனென்றுதொக்கபுணர்மொழியிரண்டுதம்மில்'
(–வேதாளவரதச்சருக்கம்) எனவும்,
'வெறுங்கையாரென்னும்பேரின்மென்மையையவன்மைசெய்யும்'
(–இலக்குமிதீர்த்தச்சருக்கம்) எனவும்,
பெரும் செய்யுட்களிற் கவியின்பம் உளதாகக் கருதுவாரும் உளரன்றே!

ஐந்தாவதாக, நம்மிடையே கவி இலக்கணவித்துவான்களால் வளை யறுக்கப்பட்டு வளர்ச்சிகுன்றிப் போய்விட்டது. இதனாற் காவியத்துறை யில் நூதனக் கருத்துக்களும் நூதன அணிகளும் தோன்றுமற்போயின. சங்ககாலத்து இலக்கிய கர்த்தர்கள் இக்கட்டுப்பாட்டினுல் வருந்தினர்க ளில்லை. பிற்காலத்துப் புலவருக்கோவெனின் முன்னோர்களது இலக்கிய இலக்கணநூல்கள் 'சுருதி' போன்று இன்றியமையா ஆதாரங்களாய் முடிந்தன. நூல்கள் இன்னின்ன மொழிகளிற்றொடங்கி, இன்னின்ன மொழிகளில் முடியவேண்டுமென்றும் உவமானங்கள் இன்னின்னபொருள் களில் அடங்கியிருக்க வேண்டுமென்று மூள்ள நிபந்தனைகள் கவிஞ னது மனோதர்மத்தை வளரச்செய்யுமா? இலக்கண விளக்கமென்னும் சிறந்தநூல், மலைமகள் என்று அமங்கலப்பொருள்படத் தொடங்குதலை ஆக்ஷேபித்துப் புலவரேறு என மதிக்கப்படும் சிவஞானசுவாமிகள் குறை கூறினரென்பதை அறியாதார் யார்? இதைத் தற்காலத்துக் கல்விவல் லார் அங்கீகரிப்பரோ? மேற்கூறிய சுவாமிகள் செய்ததுபோன்ற குதர்க்க வாதச் சண்டமாருதத்தினுற் கவியென்னும் பசுங்கோம்பு முற்காலத்திற் சிதற அடிக்கப்பட்டதென நாம் அறியவேண்டும்.

ஆறுவதாக, நமது காவியங்களெல்லாம் மதசம்பந்தமாகவமூந்தனவா யுள்ளன. பாரதம், இராமாயணமென்னும் இதிகாசங்களும், பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலிய புராணங்களும் காஞ்சிப்புராணம், குற்றாலப்புராணம் முதலிய ஸ்தலபுராணங்களும் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய திருமுறைகளும் தாயு மானவர், பட்டினத்தார் முதலியோரது தோத்திரப்பாக்களும் பதிகம், பாணி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, உலா, அந்தாதிமுதலிய பிரபந்தத்தொகைகளும் சைவ வைஷ்ணவ வைதிக மதங்களைத் தழுவி இயற்றப்பட்டனவேயாகும். சிந்தாமணி, மணிமேகலை, சூளாமணி முத லிய நூல்களினும் ஜைன புத்தமதக்கொள்கைகள் நிரம்பப் பயின்றுவந்

திருப்பதைக் காணலாம். ஆனால், சங்க நூல்களில் இவ்வாறு காணுதல் அரிது. புறநானூறு, கலித்தொகைமுதலிய தொகைநூல்களை நோக்கினால் இங்கே கூறியதன் உண்மை யறியலாம். இந்தச் சமயப்பற்று ஆரிய நாடு ஊடாடினபிறகுதான் திராவிடர்களிடம் அளவுக்குமிஞ்சி அதிகரித்து விளங்கியதெனத் திட்டமாகக் கூறக்கூடும். உதாரணமாக அக்காலத்திருந்த தமிழர்களுடைய பெயர்களையும் தற்காலத்துத் தமிழர்களுடைய பெயர்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் மதத்தால் முற்றும் விழுங்கப்பட்டோமென்பது அறியலாகும். ஜீவிதத்திலேயே மதப்பற்று அளவுகடந்து நிலைபெற்றால் அது சமுதாயத்தாரது இலக்கியத்திலும் புகாதிருக்குமோ? பிற்காலத்துத் தமிழ்நூல்களெல்லாம் மேற்கூறிய காரணத்தால் மதநூல்களேயாயின. சிதம்பரம்-ராமலிங்கசுவாமிகளின் கவித்திறம் அநுட்பாவை வாசித்து அதில் ஈடுபட்டோர் யாரும் எளிதிலுணருவர். எனினும் இவரது அருமையான கவித்திறத்தைப் பக்திக் கடலின்மட்டும் கலந்தனரேயன்றி மனிதரது உலகவாழ்க்கைக்குத் தூணையான வேறுகாரியத்தை நாடிக்காட்டினரில்லை. இது மிகவும் விசனிக்கத்தக்கது.

எழுவதாகச் சங்கச்செய்யுட்களை யொழித்து பிற்காலத்துக் காவியங்களில் 'உண்மை' முழுதும் மறக்கப்பட்டது. அவைகளிற் பிரகிருதிவருணனை தலைமையே இருக்கும். அரசர்கள் கூடவேண்டுமாயின் ஏற்பத்தாழ தேசத்தரசர்களும் கூடிவிடுவார்கள்! 'திணை' 'திணைமயக்கம்' முதலியவருணனைகள் கவிருணது சொல்வளத்தைக் காட்டவேண்டியதே தவிர நிலவளத்தைக் காட்டவேண்டியதில்லை! 'வரம்பொழுத்தம் தத்தும் மடையெலாம்பணிலம்' என்றமாதிரி எங்கு நாம் கண்ணைத்திருப்பினும் பொற்குன்றமும் முத்தின்குவையும் பவளத்திரளுமேயல்லது வேறொன்றுமில்லை! பசையற வறந்த பாலைநிலமேயானாலும் கவிசாதுரியத்திற்காக அது பாலும் தேனும் பொங்கித் ததும்பும்! உருவத்தால் எப்புருடனும் மன்மதனாகவும் எப்பெண்ணும் இரதியாகவும் சர்வசாதாரணம்! வறுமைநோயால் நலியப்பட்ட மாந்தரும் குபேரராய்விடுவார்கள்! சுருங்கச் சொல்லிற் கவிஞனுடைய இயற்கைவருணனைகளை அலங்காரமாக நாம் எடுத்துக்கொள்ளவேண்டுமேதவிர உண்மைக்கூற்றாக நினைத்துவிடக்கூடாது. அலங்காரசாஸ்திரத்தில் 'உயர்வுநவிற்சியணி' என்று ஒரு அணியிருப்பதாக அறிவீர்களே. அது மிதமாகக்கையாடப்

படுமானுற் கவிக்கு ஒருவித அழகும் மனதிற்கு ஒருவித இன்பமும் கொடுக்குமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இந்தியக்கவிகள் அதனை அளவுகடந்து உபயோகப்படுத்தி அருவருக்கத்தக்கவிதத்தில் ஆக்கிவிடுகின்றனர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவோ. ஆங்காங்குச் சிற்சில இடங்களில் உபயோகப்படுத்தினால் அணியாகும்; இல்லாவிட்டால் அது மகிழ்ச்சியைக்கொல்லும் பிணியாகவே முடியும்.

எட்டாவதாக, நமது காவியங்களிற் சந்மார்க்கநாசத்திற்கேதுவான கதைகளும் வருணனைகளும் மலிந்துகிடக்கின்றன. பாதாதிகேச வருணனையில் ஸ்திரீகளின் ஒவ்வொரு அவயவமும் வருணிக்கப்படாவிடிற் குற்றமாக முடியுமாம். கலவிப்போரைப் பாரதத்திலும் பெரியபோராக விரித்து வருணிக்கின்றார்கள் அதிவீரராமபாண்டியன் முதலிய புலவர்கள். வாலியைக்கொன்ற இராமனதுவஞ்சனையும் பாரதப்போரில் சூரியனை மறைத்த கிருஷ்ணனதுவஞ்சனையும் இகழத்தக்கனவாயிருந்தும் மதக்கோட்பாட்டின்மருட்சியாற் புகழப்பட்டன. சாதாரணக் கவிஞர்கள் இங்ஙனம் இழுக்கினும் சைவசித்தாந்தபாதுவாய்விளங்கித் திராவிடமகாபாஷ்யம்வகுத்த முனிபுங்கவரும் இராமாயண நாந்திச்செய்யுட்குறைகுற்றங்கூறித் தமதுபெருமையை நிலைநாட்டினவருமாகிய சிவஞான சுவாமிகள் தமது காஞ்சிப்புராணத்திற் சுரகரீசப்படலத்திற் கூறியுள்ளது போன்ற ஆபாசக்கதைகளைக் கூறுதல் தகுதியாகுமா? சைவசமய ஆசாரியர்களின் தலைவரான ஞானசம்பந்தருங்கூடப் பாண்டிமாதேவியை வருணிக்குமிடத்து, 'பையரவ.....பாண்டிமாதேவி' என்று கூறி நம்மைப் பிரமிக்கச்செய்கின்றார்.

இக்குறைகளாகிய கொப்புளங்களாற் காவியம் என்னும் மெல்லணங்கின்றேகம் விரூபமடைந்திருக்கின்றதென்பதை யாரும் சம்மதிக்கவேண்டும். இம்மாதிரிப் பலகுற்றங்களும் அம் மெல்லியலைப் பீடிக்கத் தக்க காரணங்கள் உண்டென்றே சொல்லுவேன்.

(i) சமுதாயத்தாரது அறிவின் வறுமை:—சிறந்த காவியங்கள் அமையவேண்டுமாயின் அவற்றிற்குத்தக்க கருத்துச்செல்வம் மிகுதியாக விருத்தல்வேண்டும். கருத்துச்செல்வம் உண்டாவது சமுதாயத்தாரது பலதிறப்பட்ட அநுபவ முதிர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. அநுபவமுதிர்ச்சியென்பது அறிவுமுதிர்ச்சியே. ஆதலால் அறிவு

முதிர்ச்சியில்லாதே அஞ்ஞானம் என்னும் இருளிற் கிடந்து தத்தளிக் கும் மனிதர்களிடையிற் பெருங்காவியங்கள் உதிப்பது அருமை. இயற் கையிலேயே அதி நுட்பபுத்திவாய்ந்த புலவர்களும் தம் காலதேசங்களி னுற் கட்டுண்டு கிடக்கவேண்டியதாய் எற்படுகின்றது. தம் சமுதாயத் தாரோடு ஒட்டியொழுகுதல்வேண்டுமேதவிர அவரைப் புறமே நிராகரித் துத்தள்ளி மேற்சொல்லுதல் கூலாது. ஆகையினுற்றான் ஒவ்வொரு கவிஞனது நூலினும் அவனது சமுதாயத்தின்நிலையும் ஒருவாறு தோன்றி நிற்கிறது.

(ii) கவியைப்பற்றிய தப்பெண்ணம்:—கவியின் பொதுவான இலக்கணத்தைப்பற்றியும் சிறப்பிலக்கணத்தைப்பற்றியும் தவறான எண் ணம் நம்மில் அநேகர் இன்னும் வைத்திருக்கின்றனர். கவி நற்கலைக ளில் ஒன்றென்றும் அதன்நோக்கம் இன்பம் பயப்பதே என்றும் முன் கூறியுள்ள உண்மையை இன்னும் அறியாதார் மிகப் பலர். மாத்தியு ஆர்னல்டு (Mathew Arnold) என்ற ஆங்கில ஆராய்ச்சியாளர் ஜீவித மகத்தத்துவங்களை ஆராய்ந்துவிளக்கும் கருவியே கவியாம் என்று கூறியதனின்மாத்திரம் கவி நற்கலையாகாமற்போய்விடுமா?

(iii) அளவுகடந்த மதப்பற்று:—இதனால் மதவிஷயங்களை எடுத்துக் காவியம்புனைவார் நற்கலையுணர்ச்சிகளை விருத்திசெய்யுமாறு கவிபுனையாது மதவுணர்ச்சியைமட்டிலும் விருத்திசெய்யக்கூடிய செய்யுட் களை இயற்றியிருக்கின்றனர். இதற்குப் பெரியபுராணம் கந்தபுராணம் முதலிய புராணங்களே சான்றாகும். இவைகள் உண்மைக் கவியின்பம் தரத்தக்கவையல்ல. இராமசரித்திரம் என்னும் ஒரே விஷயத்தை எடுத் துத் துளசிதாசரும் கம்பரும் காவியஞ் செய்துள்ளார்கள். துளசிதாச ரது காவியம் பக்திச்சுவை துளும்புதலின் மதவுணர்ச்சியை விருத்தி செய்வதும், அதுபோலாது கம்பரது காவியம் கவிச்சுவை துளும்புத லின் நற்கலையுணர்ச்சியை விருத்திசெய்வதாங் காணலாம். ஆங்கிலேய கவிஞராகிய மில்டனும் (Milton) இத்தாலியக்கவிஞராகிய டாண்டேயும் (Dante) மதவிஷயத்தைக் காரியார்த்தமாக எடுத்துக்கொண்டபோதி லும் அவர்களுடைய சிறந்த கவித்திறத்தால் உயர்தரமான காவியங்கள் இயற்றியிருக்கின்றார்கள்.

இங்கே கூறியதுபோன்ற பலகாரணங்களினால் நமது காவியங்களில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை முழுதும் நீக்கிக் கவியை ஓர் உன்னத நிலைக்குக் கொண்டுவரவேண்டிய வழிகளைப்பற்றி இனி ஆலோசிப்போம். காவியம் இயற்றப்போகும் கவிஞன் இரண்டு முக்கிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும். அவையாவன:—

(i) காவியத்திற்காம்விஷயங்களைத் தெரிந்தெடுத்தல்.

(ii) அவ்விஷயத்தைக் குறித்துச் சிறந்த காவியம்புனையும் முறைகளையறிதல்.

இவ்விரண்டினும் ஒருபடியே கவனஞ்செலுத்தாவிடிற் காவியம் அழகு குன்றிவிடுதல் நிச்சயம். ஆதலாற் கவிஞர்கள் இவ்விரண்டினும் கவனஞ் செலுத்தக் கடமையுள்ளராகின்றார்கள்.

காவியத்திற்குரிய விஷயங்களை எடுத்துக்கொள்வதில் பொதுவாகக் கவிஞனது அறிவுமுதிர்ச்சியும் அவனது வழுவுதலமையா உணர்ச்சிப் போக்குமே வழிகாட்டியாயிருப்பினும், புறமேயிருந்து சிலவிதிகளை ஏற் படுத்திக்கொள்வது நலமாகும். முதலாவது:—இன்பம்பயக்கும் விஷ யங்களையே தெரிந்து எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விதிக்குமாறுக வே ஆங்கிலநாடகக்கவிஞராகிய ஷேக்ஸ்பியரது (Shakespeare) டீட்டஸ் அன்டிரானிக்கஸ் (Titus Antronicus) என்ற நாடகமும் பெரியபுரா ணத்திற் சிறுத்தொண்டர்சரித்திரமும் கவிஞர்கையிற்புகுந்த வாள் மாதிரி வாசிப்போர் மனத்தை அறுத்துப் போழ்கின்றன. தற்காலம் அபிநயிக்கப்படும் புதிய நாடகங்களை நடித்துக் காட்டும் நடர்களோ எந்தக்கதையானாலும் நிமிஷநேரத்தில் நாடகமாக்கிவிடுவர்! ஒரு ராஜாவும் ஒரு விதூஷகனும் ஒரு ராக்ஷஸனும் ஒரு ரிஷியும் ஒரு கலியாணமும் வேண்டும்; க்தை எவ்வளவு அசம்பாவிதமாயிருந்தாலுஞ் சரி; அது அவர்கள் கையில் நாடகமாகிவிடும்! அரபிக்கதையில் வருகிற அதியற்புத விநோதகதைகளெல்லாம் அவர்களுக்கு நாடகத்திற்காம் கதைகளே! அறிவு முதிர்ச்சியில்லா, இந்நடர்கள்போலாது கவிஞர் தா மியற்றும் காவியத்துக்கு விஷயம், நற்கலையுணர்ச்சிவழியால் ஆராய்ச்சி செய்தே எடுத்துக்கொள்ளல் வேண்டும். இரண்டாவது:—சாஸ்திரவிஷ யங்களோ, சரித்திரவிஷயங்களோ எடுத்துக்கொள்ளப்படினும் அவை களில் உதிக்கும் உண்மைகளைக் காவிய இன்பமெனும் அமுதளாவியே

படைக்க வேண்டும். ஷெல்லி (Shelly) யெனும் ஆங்கிலக்கவி இயற்றிய 'மேகம்' (Cloud) என்னும் கவிதையை வாசிப்போருக்கு இவ்வுண்மை நன்றுகப் புலப்படும். மூன்றுவது:—இன்பவுணர்ச்சிக்கு இடங்கொடுக் காதவிஷயமோ அல்லது துன்பவுணர்ச்சியைமட்டும் தரத்தக்கவிஷய மோ எடுத்துக்கொள்ளப்படின் அவற்றைக் குறித்து விஸ்தரியாமல் அவற்றோடு சார்புள்ள வேறு இனிமைதரத்தக்க விஷயங்களையும், அது வும் சாத்தியமில்லையெனக்கண்டால் அவ்விஷயத்தினின்றெழும் நமது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் இன்பவழிப்படுத்தி வருணிக்க வேண்டும். கிரே (Grey) என்னும் ஆங்கிலக்கவிஞரின் 'எலிஜி' (Elegy) என்றுசொல்லுகிற இரங்கற்பா முன்னதற்கும், கூப்பர் (Cowper) என் பவரின் 'சோபா' (Sofa) பின்னதற்கும் உதாரணமாய் எடுத்துக்கொள்ள லாம். நான்காவது :—எடுத்துக்கொள்ளப்படும்விஷயம் இயன்றவரை யிற் புதிதாயிருப்பின் நலம். எப்பொழுதும் புதுவிஷயம் கவிஞர் எடுத் துக்கொள்வதில்லை. ஏனெனில் ஜனங்கள் ஏற்கனவே அறிந்திருக்கும் விஷயமானால் அதைக்கொண்டெழுந்த காவியம் ஜனங்களுடைய மன தில் நன்றுகப்பதிந்து இன்பங்கொடுக்குமென்று கவிஞர்கள் நம்புகிறார் கள். இது மறுக்கக்கூடியதன்று. எனினும் நூதனவிஷயங்களாக விருப் பின் ஜனங்களுக்கு முன்னதினும் பலமடங்கு ஆநந்த முண்டாமென்ப தற்குச் சந்தேகமில்லை.

ஒரு தக்கவிஷயம் தெரிந்தெடுத்துக்கொண்டபின் காவியம் இயற் றும் முறையிற் கவிஞன் சிற்சில விதிகளைக் கையாடல் வேண்டும். இவை கள்:—

1. காவியத்தின்பொருளைப்பற்றியன

2. காவியத்தின் உருவத்தைப்பற்றியன

என்று இருவகைப்படும்.

பொருளைக் கவனிக்குமிடத்து, முதலாவது:—கவிஞன் காவியம் புனையும் நீதியில் ஆலோசனைசெய்யவேண்டும். கதையின்போக்கை முற்பட வகுத்துக்கொண்டு அம்முறை வழுவாது ஒரேநீதியில் அதனை அமைக்கவேண்டும். சில இடங்களில் அநாவசியமாக விரித்தும் சில விடங்களில் அநாவசியமாகச் சுருக்கியும் கதை நடைபெறச்செய்தல்

கூடாது. கைடதமென்னும் காவியம் சென்றுதேய்ந்திறுதல் என்னும் குற்றத்திற்கு இலக்கானது, இவ்விதியை ஆசிரியர் கவனியாதபடியால் தான். மேலும் பெருங்காப்பியங்களுள், சிறுகதைகள் ஆங்காங்குக் கிளைகளாகப் பிரியவேண்டுமானாலும் முக்கியகதையின் நெடுர்ச்சியை அவை முறித்துவிடாவண்ணம் கதைகள் இயைக்கப்படவேண்டும்.

இரண்டாவது:—காவியத்தில்வரும் இயற்கைவருணனையோ, நாயகன் நாயகி முதலிய பாத்திரங்களின்வருணனையோ, உண்மையோடு முரணிதிருக்கவேண்டும். இவை உண்மையினின்று பிறழுமாயின் நற்கலையின் முக்கிய நோக்கமான இன்பம் இல்லாதொழிகின்றது. இவ்விதியை ரஸ்கின் (Ruskin) என்ற ஆங்கிலகலாசாஸ்திரி விரிவாகத் தமது நூல்களிற் பலவிடத்தும் கூறுகின்றார். ஆனால், இன்பம் பயத்தலைக்கருதி உண்மையை அலங்கரித்து மாற்றிக்கூறுவதனும் கவிஞன் உண்மையைக் கைவிட்டவனுகமாட்டான். காமத்தை ஒரு வெப்பநோயாக வருணிப்பது தமிழ்க்கவிஞரின் மரபு; அதனும் கிடக்கைமலர் கரிந்து போவது வெப்பத்தின் கொடுமையைக்காட்டக் கவிஞர் எடுத்துக்கொள்ளும் கற்பனை. இதனைப் பொய்யென்றுதள்ளவேண்டிய ஆவசியமில்லை. ஓரணியாகமாத்திரம் மதிக்கவேண்டும். கற்பனை ஆவசியங்களுக்கல்லது இயற்கையுண்மைகள் சிதைய ஒருவன் கவி இயற்றுவானுகில் அது இன்பம் பயக்கும் கவியின் மூலலக்ஷணமே பொருந்தாதாகிவிடும்.

மூன்றுவது:—சொல்லிப்பார்க்கினும் பொருளிற் கவனம் செலுத்தப்படல்வேண்டும். சிறந்த பொருளமைதியில்லாக் கவி உயிரில்லா உடம்பு போலாம். இவ்வகைச் செய்யுட்களை ஆங்கிலத்தில் 'வெர்ஸ்' (Verse) (யாப்பு) என்றும், அதை இயற்றுகின்றவரை (Versifir) யாப்புறுப்போர் என்றும் கூறுவர். கவியிற் பொருள் நயம் ஏற்படுதற்கு முக்கியகாரணமாவது கவிஞனது மனேதர்மமே. இதில் ஒரு பகுதியை ஆங்கிலேயர் (Creative Imagination) கற்பனைசக்தி என்று பெயரிட்டு வழங்குகின்றனர். இந்தச்சக்தியோடு ஒரு கவிஞனுக்கு ஏராளமான காவியக் கருத்துக்களும் (Poetical ideas or concepts) வேண்டும். இது உணர்ச்சிவழியொழுகும் புத்திசாதுரியத்தினால் வரவேண்டிய பாகம். இவ்விருவகை மானஸதத்துவங்களாலும் பொருட்செறிவும் பொருள் வனப்பும் கவியில் ஏற்படும். இப்படிக்கன்றிப் பொருளை முழுதும்

விளக்கிக்காட்டுவது கவியின் லக்ஷணம்மாகாது. ஒருசரித்திரகர்த்தா கதைத்தொடரைச் சாங்கோபாங்கமாக விரித்து ஒன்றையும் விடாது கூறக் கடமைப்பட்டவராகிறார். கவிஞனே அங்ஙனம் செய்தல் கூடாது. சிற்சில விடங்களிற் கதைத்தொடரையும் அதில்வரும் சம்பவங்களையும் கதாபுருஷர்களின் மனோபாவங்களையும் அவர்களது சம்பாஷணைகளையும் சிறிது சூசிப்பித்து விட்டுவிடவேண்டும். இவ்வித சூசனைகளிலிருந்து காவியம் வாசித்தோ கேட்டோ உணர்வார் மனதில் அநேக தொனிப் பொருள்கள் தோன்றுமாறு கவிபுனைதல் வேண்டும். இதனையே ஆங்கில நூலார் (Suggestiveness) என்றும், வடநூலார் வியங்கியம் என்றும் கூறுவர். இதுவே கவியின் உயிர்நிலையென்றெண்ணுங்கள். கம்பராமாயணத்திற்குப்பின்வந்த புராணகர்த்தர்களில் அநேகர் இவ்வரிய இலக்கணம் பெறாது, கவிஞர் என்னும் பெயருக்கே உரியரல்லராய்விடுகின்றனர்.

நான்காவது:—காவியத்திற் சம்மார்க்கவழு ஏற்படாதிருக்கவேண்டும். வாய்மை, பொறுமை, தயைமுதலிய நற்குணங்களுள்ளார் இன்புறுதலும் அவையில்லார் துன்புறுதலும் ஆவசியமே. இதனையே மேற்றிசையோர் (Poetical justice) காவியநீதி என்று சொல்லுவர். ஆயினும் சிற்சில இடங்களில் தருமம் தாழவும் அதருமம் தழைக்கவும் காண்கின்றோம். இம்மாதிரிக் கதைகளைக் கவிஞர் எடுத்துக்கொள்வார்களேயானால் அவைகளை விஸ்தாரமாகக் கூறுமிடத்துக் கேட்போர் வாசிப்போர்மனதில் அவை ஒரு குறைபாடான நிலையைக் குறிக்கின்றன என்று தோன்றுமாறே அறிவுறுத்தல்வேண்டும். சம்மார்க்கத்தோடு முரணிக் காவியம்புனைவது நலம்பயக்கவேண்டியதோர் சக்தியைத் தீயவழியிற் செலுத்துவதாகும். பைரனுடைய (Byron) டான் ஜுவான் (Don juan) என்னும் ஆங்கில காவியமும் தமிழில் அகத்திணையிற் களவினைச் சிறப்பித்துக் கூறும் நூல்களும் இவ்விதிக்கு மாறுபாடாகவே எழுதப் பெற்றனவென்று எளிதில் அறியக்கிடக்கின்றன. விறலிவிடுதூது என்ற நூல் சிறுவரை நன்னெறியில் ஊக்குமென யார்தாம் சொல்லுவர். இதையொட்டி அதிவீராமபாண்டியர், கம்பர் இவ்விருவரையும் ஒப்பிட்டு நோக்குங்கள். நளனும் தமயந்தியும் அநுபவித்த சுகத்தை எத்தனையோ செய்யுட்களில் விரித்து வருணிக்கின்றார் முன்னவர். கம்பரோவெனின், சீதைபால் இராமன்றுய்த்த இன்பத்தை 'மார்க்கடலன்ன மனத்தவளோ

டும், கார்க்கடல்போல் கருணைக்கடல் பண்டைப், பாற்கடலன்னதோர் பள்ளியணைந்தான்' எனற வளவே சுருக்கப்பித்துள்ளார். ஒரு உயர்தர கவிஞன் சந்தர்ப்பகதனுகவும் ஏற்படவேண்டியவனுதலால் அறநெறி வழுவாவண்ணம் சிலசம்பவங்களை மறைக்கக் கடமைப்பட்டவனுக ஆகின்றன்.

இனி, காவியம்புனையும் முறையில் உருவத்தைப்பற்றியுள்ள விதி களை யாராய்வோம். முதலாவது:—ஜனங்களிடை வழங்குகின்ற சொற்களை யும், சொற்றொடர்முறைகளையும் அநுசரித்தே காவியம்புனைதல் உசித மாகும். ஆனல் அங்ஙனம் புனையுங்காலத்து பாஷையைச் செப்யுள் நடையாக்கிக்கொள்ளுதற்குத் தக்க வேறுபாடுகள் முறையறிந்து செய்து கொள்ளப்படல்வேண்டும். சுவபாஷாரீதியைச் சற்றுங் கவனியாது, சிறிதும் தொடர்பில்லாத அந்நியபாஷாரீதியிலே தமிழிற் காவியமியற் றப்புகுவோமானல், அது வீண்முயற்சியாகவே முடியும். 'வீலநாடகம்' 'இரவிவர்மா' என்ற நாடகநூல்கள் இதனை உண்மைப்படுத்தும். இப் படிச்சொல்லுவதனல் முழு மாமூலைப் பின்தொடர்ந்தே கவியியற்றல் வேண்டுமென்று நான் சொல்லவரவில்லை. நமது காவியஅமைப்பிற் சிற் சிலவிடங்களில் மாற்றம் செய்தால் நலமாகவேயிருக்கும். அவைகளை இங்கே விரிவாக எடுத்துக்காட்டவேண்டாமென்று நினைக்கிறேன். பாயி ரம், காப்பு, அவையடக்கம், பதிகம், நாட்டுப்படலம், நகரப்படலம் முத லிய நூலமைப்புகள் இனிவருங் காவியங்களில், இதுவரை உள்ளன போலவே இருக்கவேண்டுவது ஆவசிகமில்லை. இப்படிக் கருப்பிடித்துக் கொடுத்ததனற்றன் கவிஞரது மனேதர்மம் அவைகளிற் கட்டுண்டு காவியங்கள் ஒரேமாதிரியில் வார்க்கப்பட்டுவந்தன. இவ்வழக்கத்தினற் புதியன புனையும் ஆற்றல் (Originality) அறவே கெட்டுவிட்டது.

இரண்டாவது:—கவியை அலங்கரிக்கும் அணிகள் புதியனவாகவும் பொருத்தமுடையனவாகவும் மனதிற்கு இன்பம் தரத்தக்கனவாகவு மிருக்கவேண்டும். 'பிறைதுதல்' என்று சொல்லிச்சொல்லி நூதலினது விசேஷ அழகைக் கெடித்தார்களேயன்றி அதனைமேம்படுத்தினர்களில்லை. முற்காலக் கவிஞர்களைத் தொடர்ந்தே பிற்காலக்கவிஞர்களும் அலங்காரங் களை அமைத்துக்கொள்ளவேண்டுமென்பது ஆவசிகமில்லை. மேற்றிசைக் கவிஞர்கள் அணிபுனைவித்திற் றத்தம் மனேதர்மவழியே சென்றிருக்கின்

ரூர்கள். இதனால் அவர்களுடைய காவியங்கள் நூதன ஆணிகளால் அலங்கரிக்கப்பெற்று வாசிப்போரது மனதைக் கவருகின்றன. தமிழ்க் கவிஞர்களிற் பிற்காலத்தார் பூனைந்துள்ள காவியங்களோ ஒரு அச்சிலே யிட்டு அடித்த பிரதிகள்மாதிரி ஒரேதன்மையுடையனவா யிருக்கின்றன. இதனால் அவற்றிற் காவியச்சுவை குன்றிவிடுகின்றது.

மூன்றுவது :—சொற்களைப்புணர்த்திச் சிருஷ்டிக்கும் காவியநடை யிற் சில முக்கியகுணங்களைதல் ஆவசியம்.

(1) முதன்முதல், தெள்ளியநடையாகவிருக்கவேண்டும். கவியி னதுபொருள் வாசிப்போர்மனதில் எளிதிற் பதியத்தக்கதாக விருத்தல் வேண்டும். பொருளைப்பற்றி மயங்குதற்கோ திகைப்பதற்கோ கவி யிடங் கொடுக்கக்கூடாது. இந்தத் தெளிவு என்னும் கவியின் உத்தமகுணத் தைக் கம்பர் தமது இராமாயணத்திற் பலவிடங்களிலும் அழுத்திக் கூறுகின்றார். ஒருகவியிற் 'புன்கவியெனத்தெளிவின்றி' என்றனர். பம்பைவருணனையில் அந் நீர்நிலையின் தெளிவையும் ஆழத்தினையும் வியந்து 'கற்பகமலையவக்கவிஞர்காட்டிய சொற்பொருள்'போடு உவமிக்கி றார். கோதாவரியை வருணிக்குஞ் சந்தர்ப்பத்திலும் 'சவியுறத்தெளிந்து தண்ணென்றெழுக்கழுத் தழுவிச் சான்றோர்—கவியெனக்கிடந்த கோதா விரியினை வீரர்கண்டார்' என்று எடுத்துக்கூறுகின்றார். கவியில் இத் தெளிவு ஏற்படவேண்டுமானால் கவிஞரது கருத்துக்கள் தெளிவுபெற் றிருப்பதோடு அக்கருத்துக்களைத் தக்க சொற்றொடர்களில் அமைத்து நமக்குப் புலப்படவும் சக்தி ஏற்படவேண்டும். இவற்றில் முன்னது இயற்கைநலத்தாலும், பின்னது காவியம் முதலிய நூற்பரிசீலனையி னாலும் வருமேதவிர வேறல்ல.

(2) ஒழுகிசைநடையினவாகவும் கவிகள் இருத்தல்வேண்டும். இந்நடை கம்பராமாயணத்திற் பலவிடங்களிலும் பயின்றுள்ளது. ஒழு கிசைநடையென்றால் வாசிப்போனது நாத் தடையுறுவண்ணம் ஆற் றொழுக்குப்போலக் கவியோடிச்செல்வது. இராமாயணத்திற் கங்கைப் படலத்து முதல் நான்குகவிகளையும் வாசித்து அவற்றின் ஒழுகிசையை யறிந்து ஆனந்திக்கவேண்டியதே:

'வெய்யோளெளிதன்மேனியின்விரிசோதியின்மறையப்
பொய்யோவெனுமிடையாளொடுமிளையாளெடும்போனன்
மையோமரகதமோமறிகடலோமழைமுகிலோ
வையோவிவன்வடிவென்பதொராழியாவழகுடையான்.'

கலன்காண்படலத்தில் 34-வது கவிதொடங்கி இறுதிவரை வாசித்துப்பார்க்க. பள்ளத்துப்பாயும் நன்னீர்போலவே தட்டுத்தடையில்லாமல் விரைந்துசெல்லும் கவியினிசையில் உங்கள் மனதும் இழுக்கப்பட்டுப் போய்விடும்.

"வெங்கணெளியேறுமீளிமாவும்வேகமாகமும்
சிங்கவேறிரண்டொடுந்திரண்டவன்னசெய்கையார்
தங்குசாலமூலமார்தமாலமேலமாலைபோற்
பொங்குநாகமுந்துவன்றுசார லூடுபோயினர்."

கார்முகப்படலத்தில் 47-வது கவி முதல் 55-வரை யுள்ளனவெல்லாம் ஒழுகிசையினை விளக்கும் செய்யுட்களே.

'நாணுலாவுமேருவோடுநாணுலாவுபாணியும்
தூணுலாவுதோளும்வாளியூடுலாவுதூணியும்
வாணிலாவினாலுலாவுமாலைமார்புமீளவும்
காணலாகுமாகினுவிகாணலாகுமேகொலாம்.'

கைகேசிசூழ்வினைப்படலத்தில் 46-முதல் 63-வரையுள்ள பாடல்களும் இவ்வொழுகிசையை நன்கு காட்டும்.

(3) நடை சந்தர்ப்பத்திற்குத் தக்கதாகவுமிருத்தல்வேண்டும். இராக்கத வேஷத்தைவிடுத்து ஸ்ரீராமனை வசீகரிக்கத்தக்கதான அழகிய தோர் மெல்லுருவம் தாங்கிச் சூர்ப்பணகை வருதலைக் கம்பர் கீழ்வருமாறு வருணிக்கின்றார்.

'பஞ்சியொளிர்விஞ்சகுளிர்பல்லவமனுங்கச்
செஞ்செவியகஞ்சநிமிர்சீறடியளாகி
அஞ்சொலிளமஞ்ஞையெனவன்னமெனமின்னும்
வஞ்சியெனகஞ்சமெனவஞ்சமகள்வந்தாள்.'

இதன்பின்வரும் ஆறுகவிகளும் சூர்ப்பணகையின் வசிகரசக்தியைத் தெள்ளிதிற்காட்டும். தாடகையின் கோவுருவத்தையும் கோபக்

குறியையும் வருணிக்குமிடத்து வல்லின எழுத்துக்கள் மிக்குவரச் செய்யுளியற்றியுள்ளார்.

'இறைக்கடைதுடித்தபுருவத்தளையிறென்னும்
பிறைக்கடைபிறக்கிடமடித்தபிலவாயள்
மறக்கடையரக்கிவடவைக்கனலிரண்டாய்
நிறைக்கடன் முளைத்தெனநெருப்பெழவிழித்தாள்.'

இரவிற் றுயின்றுரை மெல்லிய ஒலியாற் காலையிலெழுப்பும் பல வாத்தியங்களும் அயோத்தியாநகரில் எவ்விதம் முழங்கினவென்று கூறுமிடத்துக் கம்பர்தாமும் அழகிய செய்யுள் முன்னதோடு ஒப்பிடுக. மெல்லின இடையின வெழுத்துக்களே இதில் மலிந்து வருகின்றன.

'வங்கியம்பலதேன்விளம்பினவாணிமூந்தினபாணியின்
பங்கியம்பரமெங்கும்விம்மினபம்பைபம்மினபல்வகைப்
பொங்கியம்பலவுங்கறங்கினபூரங்கள்புலம்பவெண்
சங்கியம்பினகொம்பலம்பினசாமகீதம்நிரம்பவே'.

பரசுராமன் கோபாக்கினியால் ஜ்வலிக்கும்போது உலகமானது பயத்தாற் பீடிக்கப்பட்டு நடுக்குற்றுத் தளர்வதைக் கீழ்வரும் கவியில் வருணிக்கின்றார். பெரும்பயத்தால் ஏற்படும் தேக நடுக்கம், பயம் அளவு கடந்துபோகும்போதுண்டாம் ஸ்தம்பிதம் அல்லது நடுக்கமின்மை இவையாவும் அக்கவியடிகளிற் குதித்துநிற்கக் காணலாம்.

'கம்பித்தலையெறிநீருறுகலமொத்துலகுலையத்
தம்பித்துயர்திசையானைகடளரக்கடல்சலியா
வெம்பித்திரிதரவானவர்வெருவுற்றிரிதரவோர்
செம்பொற்சிலைதரியாவயின்முகவாளிகடெரிவான்.'

விரைவுக்குறிப்பைக் காட்டவேண்டிக் கம்பர் எடுத்துக்கொண்ட 'சந்தமும்' 'சொற்சுருக்கமும்' மிகவும் பாராட்டத்தக்கன.

'மாமமக்கணம்வாளியைத்தொட்டதும்
கோலவிற்கால்குனித்ததுங்கண்டிலர்
காலனைப்பறித்தக்கடியாள்விட்ட
சூலமற்றன தண்டங்கள்கண்டனர்.'

இதுபோலவே கார்முகப்படலத்திலும்.

'தடித்திமையாமலிருந்தவர்தாளின்
மடித்ததுநாணுதிவைத்ததுநோக்கார்
கடிப்பினில்யாருமறிந்திலர்கையால்
எடுத்ததுகண்டனர்இற்றதுகேட்டார்.'

(4) கவியினதுநடை அதனை இயற்றும் கவிஞனுக்கே உரித்தான விசேஷவனப்புவாய்ந்த நடையாக விருக்கவேண்டும். இதனை ஆங்கில நூலார் Individnality of style என்று கூறுவர். மகாகவியங்களிலெல்லாம் இக்குணம் ஏற்படாமலிராது. கம்பரது கவிப்போக்கையாண்டும் அறிந்துகொள்ளலாமென்பதே எனது துணிபு. இந்த நடைவிசேஷத்தைவைத்தே அவரது காவியத்தில் இப்போது உள்ள இடைச்செருகற்செய்யுள்களை இரத்தினங்களுடன்கலந்த பருக்கைக்கற்களைப்போல எளிதிற் பிரித்தெடுத்துவிடுதல்கூடும்.

நான்காவது:-கவிக்குத்தக்கசொற்களைத் தெரிந்தெடுத்தல். பொருளினுற் கவியழகு பிரகாசிக்குமானாலும் சொல்லழகும் உடன்சேரிற் பொன்மலர் மணம்பெற்றதுபோல் அதிகமாகச் சோபிக்கும். இயற்கையிலேயே பொருள்வனப்புள்ள செய்யுள்கள் சொல்வனப்புடனேயே யாக்கப்படுகின்றன. சொல்வளங்குன்றுவது கவிஞனுடைய கருத்தின் வறுமைபற்றியேயன்றிப் பிறிதன்று. ஆயினும் சோனைமாரியாக ஒருகவிஞன் சொற்கள் பொழியவேண்டுமானால் பலவேறு இலக்கியக்கடலையும் அவன் பருகியிருக்கவேண்டும். சொற்களைத் தெரிந்தெடுத்துக்கொள்வதிற் கவிஞன் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன:—

(1) எளிய, தெள்ளிய சொற்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளல் வேண்டும். கடினமான பதப்பிரயோகங்களும் பலபொருள்பயக்கும் சொற்பிரயோகங்களும் கூடாவாம். கீழ்வரும் இராமாயணச்செய்யுட்களைக் கவனியுங்கள். உரையாசிரியரின் உரையின்றியே அவற்றின்பொருள் அறியக்கிடக்கின்றது.

'ஓங்குமரனேங்கிமலையோங்கிமணலோங்கிப்
பூங்குலைகுலாவுகுளிர்சோலைபுடைவிம்மித்
தூங்குதிரையாறுதவழ்சூழலதோர்குன்றின்
பாங்கருளதாறையுள்பஞ்சவடிமஞ்ச'. அகத்தியப்படலம் 5.

'மயிலும்பெடையுமுடன்றிரியமானுங்கலையுமருவிவரப்
பயிலும்பிடியும்கடகரியும்வருவதிரிவபார்க்கின்றன்
குயிலுங்கரும்புஞ்செழுந்தேனுங்குழலும்யாழுங்கொழும்பாகும்
அயிலுமமுதுஞ்சுவைநீத்தமொழியைப்பிரிந்தாலழியானே.'
—அயோமுகிப்படலம் 29.

'அருந்துதற்கினியமீன்கொணரவன்பினல்
பெருந்தடங்கொம்பிடைப்பிரிந்தசேவலை
வருந்திசைகோக்கியோர்மழலைவெண்குரு
கிருந்ததுகண்டுநின்றிரங்கலெய்தினன்.'
—விபீடணனடைக்கலப்படலம். 30.

இரட்டுறமொழிதலென்பது ஒருத்தியேயாயினும் செய்யுள் முழுவதுஞ்சேர்ந்து இங்ஙனம் இரண்டாலதோர் அருத்தம்பயந்தாலழகாயிருக்குமேதவிர அதிற் சிற்சில பதங்கள்மட்டிலும் இருபொருள் தந்தால் அவை வாசிப்போர்மனதைத் திகைப்புறச்செய்யும்.

(2) எடுத்துக்கொள்ளப்படும் சொற்கள் பிண்டப்பொருளைத் (Concrete pictures) தரக்கூடியனவாயிருத்தல்வேண்டும். கேவல குணத்தைமட்டும் கூறும் மொழிகள் மனதிலுற் பாவிக்கத்தக்கவுருவந் தரவேமாட்டா. அதனாலேயே கவிஞர்கள் மனோபாவங்களை இந்திரியங்கட்குப் புலப்படக்கூடிய தேகவிகாரங்கள் அல்லது மெய்ப்பாடுகள் மூலமாக வருணிக்கின்றார்கள். அசோகவனத்திற் சீதையடைந்த துயரை நாம் உணருமாறு கம்பர் சொல்லும் கவியை நோக்குக:—

'விழுதல்விம்முதன்மெய்யுறவெதும்புதல்வெருவல்
எழுதலேங்குதலிரங்குதலிராமனேயெண்ணித்
தொழுதல்சோருதளங்குதறியருழுத்துயிர்த்தல்
அழுதலன்றிமற்றயலொன்றுஞ்செய்குவதறியாள்.'

பிராட்டி களங்காண்படலத்திலும் சீதையின் ஆற்றொணாத்துயரம் வருணிக்கப்படுகின்றது.

'விழுந்தாள்புரண்டாளுடல்முழுதும்வியர்த்தாளுயிர்த்தாள்வெதும்பினஞ்
எழுந்தாளிருந்தாண்மலர்க்கரத்தைநெரித்தாள்சிரித்தாளேங்கினாள்
கொழுந்தாவென்றாளையோத்தியர்தங்கோவேயென்றாளெவ்வுலகும்
தொழுந்தாளரசேயோவென்றாள்சோர்ந்தாளரற்றத்தொடங்கினாள்.'

மாயாசீதைப்படலத்திற் சீதை கொல்லப்பட்டாள் என்று அநுமா னுற் கேள்வியுற்ற இராமனது மனைதுக்கம் இதிலும் ஒருபடிகடந்து நிற்பதைக் காணலாம்.

'துடித்திலனுயிர்ப்புமில்லனிமைக்கிலன்றுள்ளிக்கண்ணீர்
பொடித்திலனியாதுமொன்றும்புகன்றிலன்பொருமியுள்ளம்
வெடித்திலன்விம்மிப்பாரின்வீழ்ந்திலன்வியர்த்தானல்லன்
அடுத்துளதுன்பம்யாவுமறிந்திலாமரேயும்.'

(3) எடுத்துக்கொள்ளப்பட்ட சொற்கள் உசிதமான சொற்களா யிருக்கவேண்டும். சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமில்லா மொழிகளை யொழித்துவிடவேண்டும்.

'ஓதிமமொதுங்கக்கண்டவுத்தமனுழையளாகுஞ்
சீதைதன்கடையைநோக்கிச்சிறியதோர்முறுவல்செய்தான்
மாதவள்தானுமாண்டுவந்துநீருண்டுமீளும்
போதகநடப்பநோக்கிப்புதியதோர்முறுவல்பூத்தாள்.'

இதில், சீதையின் மந்தகாசத்தைச் சிறிது உயர்த்திக் கூறவேண்டிப் 'புதிய'வென்றும் 'பூத்தாள்'என்றும் இரண்டுசொல்லைப் பொறுக்கிவைத்து அம்மெல்லியலின் அளக்கொணு அழகையும் குறிப்பித்தார். பூங்கொடி போல்வாள் சிரிப்பைப் 'பூத்தாள்' என்று சொல்லுவதும் அச்சிரிப்புப் புதுமலர்போல் ஒளியையும் மணத்தையும் மகிழ்ச்சியையும் தாத்தக்கது என்று சொல்வதும் எவ்வளவு உசிதமென்று பாருங்கள்.

அயோத்திநகரின் வெண்மாடங்களை வருணிக்கத்தொடங்கின கம்பர் தங்கவியில் என்னென்ன பொருள்களை என்னென்னசொற்களிற் றெடுத் துத் தருகின்றார் என்று கவனியுங்கள்.

'திங்களுங்கரியதெனவேண்மைதீற்றிய
சங்கவெண்சுதையுடைத்தவளமாளிகை
வெங்கடுங்கால்பொரமேக்குநோக்கிய
பொங்கிரும்பாற்கடற்முரங்கம்போலுமே.'—நகரப்படலம் 27.

இதில்வரும் ஏழு மொழிகளாற் குறிக்கப்படும் வெண்மை ஒன்று சுத்திரண்டு வெண்மையின் அதிதாவள்யத்தை நமது கண்முன் கொண்டு வாதிருக்குமோ ?

உண்டாடல் அமைந்தார் விரும்புவதான நிலாத்தோற்றத்தைக் கீழ் வருமாறு வருணிக்கிறார்.

'ஆறெலாங்கங்கையேயாயஆழிதாம்
கூறுபாற்கட்கலேயேயொத்தகுன்றெலாம்
சாறிலான்கைலையேஇயைந்தஎன்னினி
வேறியான்புகல்வதுநிலவின்வீக்கமே.'

இது நிலவின் தண்ணியவொளியை அதிகரித்துக்காட்டுகின்றதல்ல வோ! வெண்மையை இவ்விதம் வருணிக்கும் கவியே கருமையை எப்படி வருணிக்கிறரென்பதும் இங்கே கவனிக்கத்தகுந்தது.

விராதனது கரியவுருவத்தை எடுத்துப் பேசுங்கவி யிது:—

'தங்குதிண்கரியகாளிமைதழைந்துதவழப்
பொங்குவெங்கொடுமைவஞ்சனேபுழுங்கியெழுமா
மங்குல்பாதகம்விடங்கனல்வயங்கிநிமிரக்
கங்குல்பூதிவருகின்றகலிகாலமெனவே.'

இக்கவியிற் கருமை தழைத்துநிற்கின்றதை எளிதிற் காணலாம். இதுபோலவே தாடகை வாசஞ்செய்யும் பாலைநிலத்தின் கொதிப்பை வருணிக்குமிடத்து, 'சூடளவுகருவி'யினால (Thermometer) மளக்க முடியாத சூட்டுமிகுதியைத் தமது வார்த்தைகளினால் அளந்து காட்டுகின்றார்.

'படியின்மேல்வெம்மையைப்பகரினும்பகருநா
முடியவேமுடியமுடிருளும்வான்முகடும்வேம்
விடியுமேல்வெயிலும்வேமழையும்வேமின்னினே
டிடியும்வேமென்னில்வேறியாவைவேவாதவே.'

(4) மிகுந்த சொல்வன்மை (Copiousness of vocabalary) அமைந்திருக்கவேண்டும். அதாவது ஒருபொருளையோ ஒருகருத்தை யோ குறிப்பதற்குப் பலசொற்கள் கவிஞருக்கு வந்துதவவேண்டும். இல்லாவிடிற் கூறியமொழிகளையே திரும்பக்கூறி இன்பத்தைக்குறைத்து விடுவர். பலவகை ஒலிக்குறிப்புச்சொற்களைக் கம்பர் உபயோகிக்கும் திறனைப் பாருங்கள்.

'ஆறுபாயரவமள்ளராலிபாயமலியாலைச்
சாறுபாயோசைவேலைச்சங்குவாய்பொங்குமோதை
ஏறுபாய்தமரநீரிலெருமைபாய்துழனியின்ன
மாறுமாறுகித்தம்மின்மயங்குமாமருதவேலி.'—நாட்டுப்படலம்.

மிதிலை நகரத்தில் ஸ்ரீராமனை வந்து காணக்கூடின மாதர்வரும்விதம் பலமாதிரியெனக் காட்டப் பின்வருமாறு கூறுகின்றார்.

'மானினம்வருவபோன்றும்மயிலினந்திரிவபோன்றும்
மீனினம்மிளிர்வபோன்றும்மின்னினமிடைவபோன்றும்
தேனினம்சிலம்பியார்ப்பச்சிலம்பினம்புலம்பவெங்கும்
பூணைகூந்தன்மாதர்பொம்மெனப்புகுந்துமொய்த்தார்.'

கவிவாணருக்குச் சொல்வன்மை ஆவசியம் வேண்டுமென்று கம்பர் தாமே முதற்போர்ப்படலத்திற் கூறுகின்றார்.

'பல்லியலிலகுறுபாடைபாடமைந்
தெல்லையினூற்கடலேறநோக்கிய
நல்லியனவையறுகவிஞர் நாவரும்
சொல்லெனத்தொலிவிலாத்தூணிதூக்கினன்.'

சொல்வளம்போலவே கருத்துவளமும் இராமாயணத்தில் நிரம்பியுளதெனக் காட்டுதல் மிக எளிது. ஒருகவிமட்டிலும் இங்கெடுத்துக் கூறுகிறேன்.

'நிலமகண்முகமோதிலகமோகண்ணெனிறைநெடுமங்கலநாணை
இலகுபூண்முலைமேலாரமோவுயிரினிருக்கையோதிருமகட்கினிய
மலர்கொலோமாயோன்மார்பினன்மணிகள்வைத்தபொற்பெட்டியோமலரோன்
உலகின்மேலுலகோவூழிபினிறுதியுறைபுளோயார்தெனவுரைப்பாம்.'

இவ்வாறு அயோத்தியாநகரம் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

(5) சொல்வன்மையோடு பலவிகற்பங்கள் அல்லது பேதகநியமைந்த சொற்றொடர்புணர்க்கும் வல்லமையும் ஓர் கவிஞனுக்கு ஏற்பட வேண்டும். கம்பர் கண்ணென்னும் ஓர் உறுப்பை எவ்வித வேறுபாட்டுடன் பலவிடங்களிலும் வருணிக்கிறார் என்று பார்ப்போம்.

(a) 'கொல்லும்வேலுங்கூற்றமுமென்னுமிவையெல்லாம்
வெல்லுமவ்வெல்லுமென்னமதர்க்கும்விழி'

(b) 'வென்றம்மானைத்தாரயில்வேலுங்கொலைவாளும்
பின்றம்மானச்சேர்கயலஞ்சப்பிறழ்கண்.'

(c) 'புள்ளுறைகமலவாவிப்பொருகயல்வெருவியோட
வள்ளுறைகழித்தவாள்போல்வரியுறவயங்குகண்'

(d) 'களிப்பனமதர்ப்பநீண்டுகதுப்பினையளப்பகள்ளம்
ஒளிப்பவாவெளிப்பட்டோடப்பார்ப்பனசிவப்புள்ளுற
வெளுப்பனகறுப்பவானவேற்கண்'

(e) 'நஞ்சிடையமிழ்தங்கூட்டிநாட்டங்களானவென்னச்
செஞ்சவேநீண்டுமீண்டுசேயரிசிதறித்தீய
வஞ்சமுங்களவுமின்றிமழையெனமதர்த்தகண்கள்'

(f) 'குவளையினெழிலும்வேலின்கொடுமையுங்குழைத்துக்கூட்டித்
திவளுமஞ்சனமென்றெய்ந்தஞ்சினைத்தெரியத்தீட்டித்
தவளவொண்மதியுள்வைத்ததன்மைசால்தடங்கண்'

(g) 'வாளும்வேலும்விட்டளாயினவஞ்சகண்.'

(h) 'குருதிவாளெனச்செவ்வரிபாய்தகண்.'

(i) 'வடிவின்மாவகிரிவையெனப்பொலிந்தகண்.'

(j) 'நெய்கொணீருண்டுநெருப்புண்டுநீண்டமைநிறைந்த
வைகொள்வேலெனக்காலனும்மறுகுறுங்கண்.'

(k) 'அஞ்சம்பையுமையன்றனதகலம்பையுமளவா
நஞ்சங்கோலவெலவாகியநயனங்கள்.'

(l) 'சேணுறநீண்டுமீண்டுசெவ்வரிசிதறிவெவ்வே
றேணுறமிளிர்ந்துநாணுவிதம்புரண்டிருண்டவாட்கண்.'

இதை இம்மட்டில் நிறுத்திவிட்டுத் திரிமூர்த்திகளோ ராமாயணத்திற் பலவிடங்களிலும் எங்ஙனம் குறிக்கின்றரெனக் கவனிப்போம்.

(a) 'கரியமாலினுங்கண்ணுதலானினும்
உரியதாமரைமேலுறைவானினும்'

(b) 'உமைக்குரூதற்குமோங்குபுள்ளூர்திக்கும்
இமைப்பிளட்டமொரெட்டுடையானுக்கும்'

(c) 'புலியினதளுடையானும்பொன்னுடைபுனைந்தானும்பூவிளனும்'

(d) 'முளரிமேல்வைகுவான்முருகற்றந்தவத்
தளிரியல்பாகத்தான்றடக்கையாழியான்.'

(e) 'சிவனும்நான்முகத்தொருவனுந்தேவர்க்குந்தெரியா-அவனும்'

(f) 'பூவுளான்புணரிமேலான்பொருப்பினன்முதல்வராய'

(g) 'பங்கயத்தொருவனும்விடையின்பாகனும்
சங்குகைத்தாங்கியதருமமூர்த்தியும்'

(h) 'உமைக்கொருபாகத்தொருவனுமிருவர்க்கொருதனிக்
கொழுகனுமலர்மேற்–கமைப்பெருஞ்செல்வக்கடவுளும்.'

(6) இங்ஙனம் சொல்வன்மையிலும் சொற்றெடுக்கும் வன்மையிலும் தேர்ந்தபுலவன் அர்த்தமில்லாதனவும் அர்த்தபுஷ்டியில்லாதனவுமானசொற்களைக் கடிந்தகற்றுதல்வேண்டும். பொருள்பயவாத இடைச்சொற்களும் அடைமொழிகளும் விரவாமற் கவிபுனைவதே சிலாக்கியம். கீழ்வரும் கம்பரதுகவிகளில் நிரர்த்தகமொழி ஏதேனும் நுழைந்திருக்கிறதா என்று கவனியுங்கள்.

'காகதுண்டம்நறுங்கலவைக்களி
யாகமுண்டதடங்கலும்நீங்கலாற்
பாகடர்ந்தபனிக்கனிவாய்ச்சியர்
வேகடஞ்செய்மணியெனமின்னினர்'

'மூந்துஞ்சுனைகாண்முழைவாழரிகாள்
இந்தந்நிலனேடுமெடுத்தகைகா
லுந்துந்தலபத்துமலுந்துலையச்
சிந்தும்படிகண்டுசிரித்திடுவீர்'

'பொன்கொண்டிழைத்தமணியைக்கொடுபொதிந்த
மின்கொண்டமைத்தவெயிலைக்கொடுசமைத்த
என்கொண்டியற்றியவெனத்தெரிகிலாத
வன்கொண்டல்விட்டுமதிமுட்டுவனமாடம்.'

அருஞ்சியச்சொற்களை அகற்றுவதுமாத்திரமல்ல: சில இடங்களில் ஒருமொழிகொண்டே மிக்க பொருளைக் கம்பர் தருகின்றார். ஓர் உதாரணம் இங்கே தருகிறேன். கையடைப்படலத்தில் விசுவாமித்திரனோடு செல்லுகின்ற ராமன்கொண்ட கோலத்தை:

'வென்றிவாள்புடைவிசித்துமெய்ம்மைபோல்
என்றுந்தேய்வுறுத்தூணியார்த்திரு
குன்றம்போன்றுயர்தோளிற்கொற்றவில்
ஒன்றுதாங்கினுண்உலகந்தாங்கினுன்.'

என்று வருணித்துப் பின் இலக்குமணன்கோலத்தைக்குறித்து 'அன்னதம்பியும்' என்று கூறி நிறுத்துகின்றார். 'அன்ன' என்ற ஒரு சொல்லினுல் அதேமாதிரி வின்முதலியன அணிந்துகொண்ட இலக்குமணன் என்று கம்பர் சூசிப்பிக்கிறார்.

(7) கவிஞன் மெல்லோசை பயக்கும் இனியசொற்களைத் தெரிந் தெடுத்துக்கொள்ளுதல்வேண்டும். இவ்வன்மை பண்டைக்காலத்துப் புலவர் பலரிடமும் இருந்ததென அவரியற்றிய நூல்கள் சான்று பகருகின்றன.

சூளாமணி:—

'காந்தளங்குலையால்களிவண்டினங்
கூந்தளம்பிடிவீசக்குழாங்களோ
டேந்துசந்தனச்சாரலிருங்கைம்மா
மாந்திநின்றுறங்கும்வரைமாடெலாம்'

சிவகசிந்தாமணி:—

'தேனலாமதுச்செய்கோதைதம்புகைகமழவுட்ட
வானலாஞ்சுடர்கண்மூடிமாகரிரவுசெய்யப்
பானிலாச்சொரிந்துநல்லரணிகலம்பகலிச்செய்ய
வேனிலான்விழைந்தசேரிமேலுலகனையதொன்றே.'

கம்பராமாயணம்:—

'தேனுகவருவிசிந்தித்தெருமரலுறுவபோலக்
கானமுழலையுமெல்லாங்கண்ணினீருகுக்குங்கங்குல்'

மாயாசனகப்படலத்திற் சீதைபால் இராவணன் இரந்து தனது ஆசையை வெளியிடுங்கவிதைகள் மிக்க அழகுடையன:

'தோற்பித்தீர்மதிக்குமேனிசுடுவித்தீர்தென்றல்தூற்ற
வேர்ப்பித்தீர்வயிரத்தோளைமெலிவித்தீர்வேனில்வேளை
ஆர்ப்பித்தீர்என்னையின்னலறிவித்தீரமார்அச்சந்
தீர்ப்பித்தீரின்னமென்னசெய்வித்துத்தீர்திரம்மா.'

இதன்முன்வரும் இரண்டு கவிகளும் பின்வரும் இரண்டு கவிகளும் இதுபோலவே அழகுவாய்ந்துள்ளன. நல்லிசைப்புலவர்கவியினின் றுதிக்கும் அழகிய பொருட்செறிவைக் கீழ்வருஞ்செய்யுளால் வருணிக் கின்றார் கம்பர்.

'நல்லியற்கவிஞர்நாவிற்பொருள்குறித்தமர்ந்தநாமச்
சொல்லெனச்செய்புட்கொண்டதொடையெனத்தொடையைநீக்கி
எல்லையில்செல்வத்தீராவிசையெனப்பழுதிலாத
பல்லலங்காரப்பண்பேகாருத்தன்பகழிமாதோ!'

(8) சுத்தத் தமிழ்மொழியையே கூடியவரையில் தெரிந் தெடுத்துக்கொள்ளுதல்வேண்டும். பிறபாஷைமொழிகள் வேண்டப்படு மாயின் அவற்றைத் தமிழ்ப்பாஷையின்போக்கை அநுசரித்து ரூப மாற்றிக் கையாளுதல்வேண்டும். எல்லாமொழிகளும் தற்சமமாக வந்து கொள்ளுத லமையாது; வந்து பிரயோகிக்கப்படினும் கவிப்பான்மைக்குத் தக்க இசையொழுக்குப் பெறவேண்டும். இதனால் வடமொழிக் கலப் பில்லாமலே தற்காலம் தமிழ்க்காவியம் இயற்றல்வேண்டுமென்பது எனது கருத்தன்று. வேண்டியவிடத்துமாத்திரம் ஸம்ஸ்கிருதமொழிகளைப்பிர யோகித்துக்கொண்டாற் போதும்.

(9) இனி எதுகை மோனை முதலியன கவிக்கு ஆவசியமான உறுப்புக்களோவென்று கவனிக்கவேண்டும். கவியியற்றுவோனது மனே தர்மத்தை இவை தளைகின்றனவென்று யாரும் ஒப்புவர். அவற்றுற் செய்யுட்குச் சந்தவின்பம் வாமற்போகவில்லை. ஆனால் ஒருவிஷயம் நாம் கவனித்துக்கொள்ளுதல்வேண்டும். பொருளின்பத்தைக் கெடுத் துச் சொல்லின்பம் கொள்ளுதற்கும் மலரையொழித்து நாரை மாலையாகக் கொள்ளுதற்கும் அதிக வித்தியாசமில்லை. ஆதலால் வேண்டுமாயின்

இச் சொல்லின்பத்தை உரிய இடத்தில் விட்டுவிடுவது தவறுகாது. எதுகையை ஒழித்துவிட்ட சில கவிகள் சிந்தாமணியில்வரக் காண்கின்றோம்.

'அங்கைபோல்வயிறணிந்தவலஞ்சுழியமைகொப்பூழ்
கங்கையின்சுழியலைக்குங்கண்கொளாதுடங்கிடையை
யுண்டெனத்தமர்மதிப்பர்நோக்கினர்பிறரெல்லா
முண்டில்லையெனவையமல்லதொன்றுணர்வரிதே'

'கங்கைமாக்கடற்பாய்வதேபோன்றுகாளைதன்கார்முக
மைந்தரார்த்தவர்வாயெலாநிறையவெஞ்சரங்கான்றபி
னெஞ்சம்போழ்ந்தழலம்புணீங்கினருயிர்நீண்முழைச்
சிங்கவேறுகள்கிடந்தபோற்சிறுவர்தோர்மிசைத்துஞ்சினர்'

இவ்வித வேறுபாடு பிற்காலக்கவிகளிற் காண்ப தருமை. எனினும் தமிழ்க்காவியவளர்ச்சிக்கு இவ்வழியையும் நாம் கையாடவேண்டிய தவசியமே.

காவியத்திற் ரேன்றவேண்டும் 'ரஸம்' 'வருணனை' முதலியவற்றை இவ்விடம் விரித்துக்கூற நான் எண்ணவில்லை. எனினும், கம்பர் புதிதாகவியற்றிய உவமான அணிகள் மனதிற்கு ஆனந்தம் தராமலிரா. அவற்றுட் சிலவற்றைக் கூறுகின்றேன்.

'ஓசைபெற்றுயர்பாற்கடலுற்றெரு
பூசைமூற்றவுக்குபுபுக்கென'

'காம்புகால்பொரக்கண்ணகன்மால்வரைப்
பாம்புதான்றெனப்பாய்பசுந்தேறலே'

'வையகமுழுவதும்வறிஞனேப்புமோர்
செய்யெனக்காத்தினிதரசுசெய்கின்றன்'

'ஐயனுமிளவலுமணிநிலமகள்தன்
* * * * * *
நெய்குழலுறுமிழையெனநிலைதிரிவார்.'

'சோர்பொழுதணிநகர்துறுகுவரெதிர்வார்
கார்வரவலர்பயிர்பொருவுவர்களியால்'

'மைவரைநெருப்பெரியவந்ததெனவந்தாள்'

'ஆலமர்வித்தினருங்குறளானுன்'

'இரண்டுகன்றினுக்கிரங்குமோவாவெனவிருந்தார்'

'அரக்கரென்கடலிடையாழ்கின்றுகொரு
மாக்கலம்பெற்றெனமறுக்கநீங்கினர்'

'தோட்டநுங்கிற்றெனோயுறுமுக்கினைக்-காட்டெனு'

'சாதாமிருகத்தலைவரிற்றிலகமன்னுன்

* * * * * *

ஆகாயமுற்றகதலிக்குவமையானுன்.'

'கோல்பிடித்தெழுகுமகுருடர்கூட்டம்போல்
வால்பிடித்தொழுகினகவியின்மாலையே.'

மேலும், 'சிரித்தபங்கயம்', 'பஞ்சின்றிப்பழுத்தபாதம்', 'வெங்களி விழிக்கொருவிழவு', 'கருநெருப்பினிடையே பெழுந்த வெண்ணெருப்பு', 'தாயரிற்பரிசேடியர்' 'நதியினுங் குளத்தும் பூவா ளினங்கள்', 'பள்ளத்துப்பாயு நன்னீரனையவர்', 'ஆம்பலொத்தமுனூறு செவ்வாய்ச்சியர்', 'தீங்கரும்பினுந் தித்திக்குமின்சொலார்', அரக்கரென்னும் கான்சுடமூளைத்த கற்பின்கனலி', 'அன்பெனும்விடமுண்டாரை யாற்றலா மருந்துமுண்டோ', 'நெய்த்தலைப்பால்கலந்தனையகேபம்', கமலத்தின் காடுபூத்த காளமாமேகம்' முதலிய அழகிய சொற்றொடர் ராமாயணத்திற் செறிந்துகிடக்கக் காணலாம்.

இதுவரையும் கூறப்பட்ட விதிகளெல்லாம் நமது செய்யுள் இலக்கியம் பரிஷ்காரமடைதற்பொருட்டேயாம். இவ்விதிகளோ ஒட்டிக் காவியம் சமைப்பினும் ஒரு சிறந்தகாவியமாக அமைவது எளிதன்று. அதற்குக் கவிஞனிடம் பிறவியிலேயே விசேஷமான கவித்துவம் பொருந்தியிருத்தல்வேண்டும். நம்முடைய விதிகளெல்லாம் அந்த இயற்கைபாற்றலை வளர்க்க உபகரணங்களாயிருக்குமேதவிரத் தாமாகவே பெரும்பயனைத் தரமாட்டா. எனினும் வையறுத்தற்கு இடங்கொடுக்கக்கூடியவை இவ்விதிகளே. இதுபற்றியே இவைகளைமட்டும் தங்கள் முன்னிலையிற் கொண்டுவந்தேன். தமிழ்க்காவியத்தின் நோக்கம் தப்பாயிருக்குமிடத்திற் திருத்தம்பெறவேண்டும்; சுருங்கியிருக்குமிடத்தில் விரிக்கப்பட

வேண்டும்; கவின் குன்றினவிடத்திற் கவினுறச்செய்யவேண்டும். இதுவே, தமிழ்ப்புலவோர்களின் முக்கியகடமை. இங்ஙோக்கம் நிறை வேறவேண்டுமாயின், பிறபாஷைகளிலுள்ள காவியங்களைக் கற்றுணர்ந்து அவற்றின்கணுள்ள மேலான லக்ஷணங்களை யறிந்து அவையனைத்தை யும் தமிழ்க்காவியங்களில் அமைக்க முயலவேண்டும். காலத்திற்கேற்ப இலக்கிய பரிஷ்காரமும் நடைபெறவேண்டியது மிகவும் ஆவசியகமே. இதை மறப்போமாயின் நமது இலக்கியம், அதிலும் காவிய இலக்கியம், வளர்ந்து விரிந்து பொலிவுபெறுதுபோகும்.

ஆகையால், தமிழர்களாகிய நாம் நமது இலக்கியவளர்ச்சியிற் றக்க கவனஞ்செலுத்தி முயலுவோமாக. முயற்சி திருவினையாக்கும் என்ற பெரிய உண்மை கடைப்பிடிக்கத்தக்கது.

K. N. சிவராஜபிள்ளை, B.A.,
திருவனந்தபுரம்.

ஸ்ரீ:

அரிச்சந்திரசரிதையில் ஒருதிருத்தம்.

அரிச்சந்திர சரிதையின்கண்ணே கோசிகமுனிவன் அரிச்சந்திரனை வாய்மையிற் பிழைத்தல் காணவேண்டி, வஞ்சனைகரந்தமனத்தனாய், அன்னவற்குப் பல்லாற்றானுந் தீங்கிழையாநிற்ப, அரசன் அவற்று ளொன் றற்கும் உடையாத உள்ளத்துடன் பொய்யாதாவினையுடையனாகிச் செந் நெறிக்கண்ணே யொழுகாநின்றான். அருந்தவமுனிவன் ஒன்றானுந் தன் சூட்கோள் கடைபோகாமை கண்டு மேன்மேலும் பெருகிய ஊக்கத்துடன் முயறலை மேற்கொண்டு அவன்றன் நாடும் நகரும் கவர்ந்து வறியனாக்கி இறுதியாக அம்மன்னவன்றன்னை அவன் கற்புடைமனையாளை வாள் கொண்டு துணித்தற்குரிய கொலைவினைஞனாக்கினான். அரிச்சந்திர னதற் குச் சற்றும் பிற்காலியாது கொலைக்களத்துத் தன் மனையாளைக்கொல் வான் வாளோச்சி நிற்ப அக்கணத்தே முனிவன் அவனை விளித்து 'நீ யுண்மையிற்றிறம்பிய வுரையொன்று புகலின் அதற்குப் பரிசாக நின திறந்தமகனை யுயிர்ப்பித்து உன்மனையாளுங் கொலையுண்ணுதகற்றி நீ யிழந்து வருந்து மரசியலுரிமை முதலியவற்றையு நினக்கே மீட்டுமளித் தருள்புரிவல் என்று கூறினான்.

அத்தருவாயில் அரசனு மவன்றேவியு மதற்கு மறுமாற்றமாகக் கூறிய பொருளடங்கிய சிலபாடல்கள் பன்முறையும் விரும்பிப் படித்தற் குரியனவாய் அரிச்சந்திர சரிதையிற் காணப்படுகின்றன. அவை:—

"செய்மையண்மையிலுயிர்க்குறுதுணையெனச்சிறந்த
வாய்மையாலகந்தூய்மையாமற்றிலம்புயத்தைத்
தூய்மைசெய்வதுநீறலாற்சொல்லின்வேறுளதோ
நோய்மைசெய்யினும்வாய்மையேநோன்பெமக்கறிதி"

"புலையனும்விரும்பாதவிப்புன்புலால்யாக்கை
நிலையெனுமருண்டியிரினுதெடிதுறச்சிறந்தே
தலைமைசேர்தருசத்தியம்பிறழ்வதுதரியேம்
கலையுணர்ந்தநீயெமக்கிதுகழறுவதழகோ"

"இம்மையம்மைவீடெனமறைபுலன்கொளவியம்பும்
மும்மையுந்தருமுறையுடைத்தெனுநிலைமுரணி
எம்மையாழ்வயிற்றடக்கிமீட்டுமிழ்கலாவெரிவாய்
வெம்மைகூர்நரகுப்க்கினுமெய்ம்மையைவிடேமால்"

"பதியிழந்தனம்பாலனீயிழந்தனம்படைத்த
நிதியிழந்தனமினிநமக்குளதெனநினைக்கும்
கதியிழக்கினுங்கட்டுரையிழக்கிலேமென்றூர்
மதியிழந்துதன்வாயிழந்தருந்தவன்மறைந்தான்"

என்பன.

இவற்றுள் முகற்கட்குறித்த "செய்மையண்மையில்" என்றசெய்யுளே ஈண்டாராய்ச்சிக்குரியது. அச்செய்யுள் மேற்காட்டியவாறே சிறிதும் பிறழ்ச்சியின்றிப் பல அச்சுப்பிரதிகளிலும் சர்வகலாசங்கத்தார் பதிப்பித்த புத்தகங்களிலும் காணப்படுகிறது. அதன்கண் "அம்புயத்தைத் தூய்மைசெய்வது நீறலாற் சொல்லின்வேறுளதோ" என்ற தொடரை உள்ளவாறே கொண்டு உரைவகுப்பான் புகுந்த பெரியோரும், "அழகிய புயங்கட்குத் தூய்மையளிப்பது திருநீறணிதலேயாகும்; அகத்துறப்பாகியமனம் தன் மாசுநீங்கித்தூய்மையுறுவது வாய்மையொன்றுனேயாகும்; ஆதலா னிடையருத்தஸ்பங்கட்குட்டுத்தியபோதிலும் யாம்வாய்மையே நோன்பாகக்கொண்டொழுகாநிற்பேம் என்பதை அறிவாயாக" என்றெழுதிச் சென்றனர். டயத்தினுஞ் சிறந்த நெற்றியிற் றிருநீறணிதலே சிறந்ததாயிருப்ப அதனையொழித்துப்புயத்தைத் தூய்மைசெய்வதுநீறு எனக் கூறுதல் பொருத்தமையாலது பாடமாகாது.

இதனை வேறுசிலர் "வாய்மையாலகந் தூய்மையா மற்றிலம் புயத்தைத்–தூய்மை செய்வது நீரலாற்சொல்லின் வேறுளதோ" எனப் பாடங் கொண்டு "சேற்றிலமுந்தி யசுத்தமடைந்திருக்கும் (அம்புயம்) தாமரையைக் கழுவுவது நீரேயன்றி வேறுண்டோ" எனப் பொருளுரைப்பர். அவ்வாறுயின் நீர் குழுதமுதலிய பிறவற்றையும் கழுவவற்றுகச்செய்தே "அம்புயத்தைத் தூய்மை செய்வது நீர்" என்று தாமரையையே எடுத்துக் கூறுவதில் யாதொருசிறப்புங் காணப்படாமையாலும், தாமரை நீர் படிந்தபாகமே பாசிபற்றி யசுத்தமாதலும், நீர்படியாதபாகமே பாசிபற்றுது சுத்தமாயிருப்பதும் பிரசித்தமாகையாலதுவும் சுத்தபாடமாகாது.

இனிச் சிறிது உற்றுநோக்குவார்க்கு அகந்தூய்மை யென்றதனை யானே அதன் மறுதலையாகிய புறந்தூய்மையு முடன்றேன்றுதலியல்பாதலால், "புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை–வாய்மையாற் காணப்படும்" என்னும் பொய்யாமொழியின் கருத்தினையே உட்கொண்டு ஆசிரியரிச்செய்யுளை இயற்றிப்போந்தாரென்பது புலனுகாதிராது.

அங்ஙனமாகவே, மேற்குறித்தசெய்யுள்,

"சேய்மையண்மையிலுயிர்க்குறுதுணையெனச்சிறந்த
வாய்மையாலகந்தூய்மையாமற்றிலம்புறத்தைத்
தூய்மைசெய்வதுநீரலாற்சொல்லின்வேறுளதோ
நோய்மைசெய்யினும்வாய்மையேநோன்பெமக்கறிதி"

என்றிருக்கவேண்டுமென்பது நன்கு தெளியப்படும். இதற்குப் பொருள் வெளிப்படையாகவின் விளக்கவேண்டாதாயிற்று.

நிற்க; இதனிறுதியில் "நோன்பெமக்கறிதி" என்றிருப்பதை "நோன்பெனக்கருதி" என்று படித்துக் குளகமாக்கிக்கொண்டு அடுத்துவரும் "புலையனும்விரும்பாத" என்ற செய்யுளுடன் ஒருதொடராக்கிப் பொருளுரைப்பாருமுளர். அங்ஙன மிடர்ப்பாடுற்றுப் பொருளுரைப்பதிலொரு சிறப்பின்மையாலதுவும் பாடமன்றென்றும், நோன்பெமக்கறிதி யென்பதே சுத்தபாடமென்றும் மதியத்தக்கன.

T. N. அப்பனையங்கார்,
மதுரை.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்

1921-ம்வரு மார்ச்சுமீ 5-உ நடத்திய

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷாவினு.

இண்டர்மீடியேட் வகுப்பு.

1. இலக்கியம்.

பரீக்ஷகர்—அ. கந்தசாமிப்பிள்ளை.

1921வரு மார்ச்சுமீ 5உ சனிக்கிழமை பகல் 10-1

[அம்சம் 120.]

செய்யுள்.

1. (a) பரணி-நூற்பெயர்க்காரணம், காலம், பாட்டுடைத்தலைவனது பெயர்கள்—எவை?

(b) இந்நூலாசிரியர் ஜைனர் என்பது சிலர்கொள்கை; அகச்சான்று (Internal evidence) காட்டி அதை மறுக்கக் கூடுமா? எப்படி?

(c) "தான்வேண்டிக் கோடலுமே தன்னுடைய தேவியரிற் றலைமைத் தேவி, தேன்வேண்டு மொழிச்செல்வி திருமகட்குத் திருமகனுய்க்கொடுத்த பின்றை" "தங்களின் மகிழ்ந்து இருகுலத்தரசர் தாமும் தனித்தனி உவப்பது."

இங்குக் குறிப்பிட்டவை யார்யாரைக் குறிக்கும்?

(d) ஜயதரன்—ஐம்படைதரித்தது, பூணூல்தரித்தது, கல்வி பயின்றது-ஏதேனும் ஒன்றைப்பற்றி ஆசிரியர் கூறுவதை எழுதுக.

2. (a) "திரிபுவனங்கள் வாழ்த்த" இருவிதமாகப் பொருள் கூறுக.

(b) i. விழித்தழற்புலியையேலிருத்தி, இமயத்தினைத்திரித்த கோவில் வளவுண்டு—இக்கதை யாது?

ii. அது "ஆடகக்கிரி (மேரு)யிற் புலிவைத்தவன்" என மற்றோரிடத்துக் கூறுவதோடு முரணுதோ?

(c) சயத்தம்பம்நாட்டி, எழுகலிங்கம்–இக்கருத்து உங்கள் பாடத்துள் வேறெங்குக் காணப்படுகிறது? காட்டுக.

3. (a) பின் வருவனவற்றிற்கு உரையெழுதுக:–

i. முடிசூடிய பவன பதத்தி னுகக்கடை முடிவினில் உலக மெனச்சுடர் விட்டெழு, கடுகிய வடவன லத்தினை வைத்தது களமுறு துரக கணத்தின் முகத்திலே.

ii. சூரன்குலத்தோர்குபேரன்குலத்தோர் சுடர்ப்பாவகப், போன்குலத்தோர்கள்முதலோரிருந்தார்கள்பேர் பெற்ற பேர், வீரங்கொலோவாகுசாரங்கொலோசெல்வமிச்சங் கொலோ, பூரம்புராசிப் புவிக்கென்று முதுவோர்கள் பொதுவோர்களோ.

(b) i. முன் கீற்றிட்ட அம்புராசி, பொதுவோர் என்பவற்றின் காரணத்தை எழுதுக.

ii. கடவி, பூதரம், சராசனம், சோனகர், ஓரை, அரிதாரம் இவற்றுள் நான்குமொழிகளுக்கு அருத்தம் எழுதுக.

(c) i. பாண்டவரின் முற்பிறப்பு, சிசுபாலனுக்குக் கண்ண னிடம் பகைமை ஏற்பட்டகாரணம்–ஏதேனும் ஒரு கதையைப் பத்துப்பதினைந்துவரிக்குள் எழுதுக.

ii. சொற்றவா நன்று சுகன்றிருத்தாதை; பராசரமுனிவன் மதலையாம்படியே பகர்ந்தனை–இவை குறிப்பதை விளக் குக.

(d) 'கன்னட்டும்படிபொருது', 'வீரசைத்துறக்கம் ஏறவிட் டிடும் இரவி,' 'வஞ்சியந்தொடைமன்னன்', இவற்றுலறி யப்படும் பழையவழக்கங்கள் எவை? ஐதிகம் எது?

(e) i. "பின்னியகுஞ்சிப்பேதையர்" என்பது மரபுவழுவாகா தோ?

ii. வள்ளன்மை பூண்டான்கட் செல்வமும் உள்ளத் துணர்வுடையா ரெதிய நூலும்–புணர்வின்கட் டக்க தறியும் தலைமகனும் இம்மூவர் பொத்தின்றிக் காழ்த்த மரம்.

இது முடிபுவழுவாகாதோ? சமாதானம் கூறுக.

iii. நன்மகன் இழிந்தகுடியிலும் பிறக்கக்கூடும் என்பதற்கு, "பெருங்கடலுட் பல்வினைய முத்தம் பிறக்கும்" என்ற உவமை பொருந்துமா? விளக்குக.

iv. ஊராண்மை என்னுஞ் செருக்கு—இத்தொடரில் எது என்னவாக உபசரிக்கப்பட்டிருக்கிறது?

வசனம்.

4. (a) i. ஆதியில் தமிழ்வசனநடை எவ்வாறு இருந்தது?

ii. ஆறுமுகநாவலர் நடையையும் வேதநாயகம்பிள்ளை நடையையும்பற்றிக் கூறப்பட்டிருப்பது எப்படி?

(b) நச்சினார்க்கினியர்—இல்லது பூணந்துரைத்தலைப்பற்றி என்ன கூறுகிறார்? என்பதையாவது

அல்லது

பரிமேலழகர் சொல்லின் நடையின் இயல்பைப்பற்றி என்ன கூறுகிறார்? என்பதையாவது எழுதுக.

(c) i. கூடசதுர்த்தம், மெய்ப்பாடு, தொடர்நிலைச்செய்யுள், பிசி,—இரண்டிற்கு விளக்கம் எழுதுக.

ii. 'மாணுக்கரைப் பரீட்சைப்பைங்கூழ்விளைக்கும் வரிக ளாக்காமல், இறைக்கலூறும் மணற்கேணிகளாக்கவேண் டும்' இக்கருத்தை விளக்கமாக எழுதுக.

5. (a) கௌதமர் துறவியானமை எதன்பொருட்டு?

(b) அவர்கண்ட உண்மைகளில் முக்கியமான நான்கை விளக்குக.

6. (a) திருநாவுக்கரசுசுவாமிகள்—சூலைநீங்கப்பெற்றது, கன் மிதப்பில் அணைந்தது, ஐக்கியமானது—இத்தலங்கள் எவை? அவை எந்த ஜில்லாவைச்சேர்ந்தவை? அச் சமயத்தில் அவர்கூறியருளியவற்றில் ஏதேனும் ஒரு பாசுரம் எழுதுக.

(b) அவர்காலத்திருந்த நாயன்மார்களில் மூவர் பெயரை எழுதி எப்படி யறிகிறோம் என்பதையும் எழுதுக.

7. (a) சாதுரியம் என்ற பாடம் தெரிவிக்கும் குறட்பாக்களில் ஒன்று கூறிச் சந்தர்ப்பமும் காட்டுக.

(b) i. என்றுங்கிழியாதென்பாட்டு.

ii. மரத்தின்கீழாகாமரம்—இத்தொடர்கள் எதை வற் புறுத்த வருகின்றன.

இண்டர்மீடியேட் வகுப்பு.

2. இலக்கணம்.

பரீக்ஷகர்:—சர்க்கரை இராமசாமிப்புலவர்.

1921-வது மார்ச்சுமீ 5உ சனிக்கிழமை பகல் 2—4.

[அம்சம் 90.]

I. 1. எழுத்திலக்கணம் எத்தனை வகைப்படும்? அவற்றினியல்களின் முறைவைப்புக்கு நியாயங்கூறுக.

2. இடுகுறிகாரணப்பெயர்பொதுச்சிறப்பின. இச்சூத்திரத்துக்குள்ள இரண்டுரையுங்கூறித் தனித்தனி யுதாரணமுந் தருக.

3. மொழிக்கிறுதியில் வாரா எழுத்துக்கள் எவை? ஈறுதிலைச் சூத்திரத்தில் உயிரெழுத்தை முற்கூறியதன்றிச் 'சாயுமுகர' மெனப் பிற்கூறுவானேன்?

4. பண்புப்பகுதி விகாரப்பட்டுப்புணரும் பதப்புணர்ச்சிகள் ஒவ்வொன்றுக்குந் தனித்தனி யுதாரணந் தருக.

5. மொழியிய லென்னுது பதவியலெனப்பெயர்குறித்தது ஏன்?

II. 1. தெரிநிலைவினைப்பகுதிகள் விகுதிமுதலியவற்றோடு புணரும்போது பலவித வேறுபாடடையுமென்பதற் கறிகுறியாகவைந்துதாரணந் தருக.

2. இ, அம், அல், இவ்விகுதிகள் குறிக்கும் பொருள்களிலொவ்வொன்றுக்குந் தனித்தனி மூன்றுதாரணந் தருக.

3. எதிர்கால விடைநிலைச்சூத்திரத்தில் இவை சிலவில என்றதற்குப் பொருள்கூறி அவற்றிற் குதாரணங்களுமெழுதுக.

4. "பெதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய், வலிவரினியல்பா" மென்றும் "ஆவியாமூன்வன்மைமிகா" வென்றும் பகுத்தோதுவானேன்?

5. "னல முன னனவ" மென்ற சூத்திரத்தில் "ஆயுங்காலே" என்றதனு லறியப்படுவது எனன?

III. 1. தன்வினையைப் பிறவினையாக்குமா றெங்ஙனம்? அவ்விரண்டுக்கும் பொதுவாகிய பகுதி யிரண்டு தருக.

2. எலுமிச்சம்பழம, வெவ்வேறு, நாஞ்சி, குடநாடு, குரக்கினம், ஏருத்துமாடு, அனுகண்டான், வேற்படை, இவை எவ்வெச்சூத்திரங்களில் எவ்வெவற்றிற் குதாரணமாகும்?

3. இருதிணைப்பொதுவினை, இருதிணைமுக்கூற்றொருமை, உளப்பாட்டுத்தன்மைப்பன்மை, இவை எவை?

4. முகாலத்திற்கும்வரும் வினையெச்சம் எது? எப்படி?

5. தன் வினைமுதல்வினையைக்கொண்டு முடியும் வினைவெச்சங்கள் யா? எவனுக்கும் வியங்கோளுக்குமுள்ள வேறுபாடியாது?

IV. கீழ் வருவனவற்றிற் கொவ்வோ ருதாரணந் தருக.

1. செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை
2. உடன்பாட்டுக்கும் எதிர்மறைகும் பொதுவினை
3. செயப்படுபொருள்கொண்ட பெயரெச்சம்
4. திரிபினுக்கட்டொருளகொண்ட ஆறனுருபு
5. ஏதுப்பொருள்கொண்ட ஐந்தனுருபு
6. பொருளாகுபெயர்க்கும் தானியாகுபெயர்க்கும் எதிரிடையாகிய ஆகுபெயர்கள்.

V. 1. பண்பு, உவமை, உம்மை, இவை எவ்வெவைபற்றி வரும்?

2. ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்குமுள்ள வேறுபாடென்ன?

3. பலபொருள் கலந்துவருகையில் எவ்வெவற்றுல் ஒரு முடிவைப் பெறும்? உதாரணம் வேண்டும்.

4. எவ் வெவைபற்றிப் பால் திணைக விழுக்கினு மியல்பாகும்?

5. ஏ, ஓ, உம், என்னு மிடைச்சொற்கள் எவ்வெப்பொருள் பற்றி வரும்? மொழிமாற்று, கொண்டுகூட்டுப்பொருள் கோள்களுக்கு உதாரணம் தருக.

இண்டர்மீடியேட் பகுப்பு.

3. வியாசம்.

பரீக்ஷகர்:—**K. C.** வீரராகவையர் M.A., L.T., F.C.S.,

1921ஹ மார்ச்சுமீ 5வ் சனிக்கிழமை பிற்பகல் 4½-5½

[அம்சம் 30.]

பின்குறித்த விஷயங்களில் யாதேனுமொன்றைப்பற்றி ஒருவியாசம் எழுதுக.

1. நீர் அறிந்த ஒரு தமிழ்க்கவியின் திறமையும் ஜீவியசரிதையும்;
2. கூட்டுறவுநாணயச்சங்கங்களும் ஜனங்களின் செட்டும்;
3. மகாமகவரலாறு;
4. "ஒத்துழையாமை இயக்க"த்தின் நன்மைகளும் தீமைகளும்.

திருக்கச்சிநெறிக்காரைக்காட்டுச்

சோழசிலாசாசனங்கள்.

(கசூஅ-ம் பக்கத்தொடர்ச்சி.)

——:o:——

கோப்பரகேசரிவன்மராகிய ஸ்ரீராஜேந்திரசோழதேவற்குயாண்டு அ-வது.

எயிற்கோட்டத்து, நகரம் கச்சிப்பேட்டு திருநெறிக்காரைக்காடுடைய மகாதேவர்க்கு:—

பிள்ளையார் அருமொழிநங்கையார் அதிகாரிச்சி எயில்கோட்டத்து எயில்நாட்டு சத்திமங்கலத்து "பாலிகிழான் வேங்கடவன்" "நக்கபிராட்டி" வைத்த திருநொந்தாவிளக்கு ஒன்றுக்கும்:—

9. ஊற்றுக்காட்டுக்கோட்டத்து தமனூர்நாட்டு, திருக்காரைக்காட்டுப்புறம், அவ்வள்ளூர்மன்றுடி "தண்டிடன்பாடி" கொண்ட ஆடு நாற்பத்தேழரையால் திருவேகம்படுனல் (ஓர் முகத்தலளவை) நிச்சற்படி அட்ட கடவநெய் ஆழாக்கும்,

10. மேற்படியூர் மன்றுடி "காளழுக்கியன் ஒற்றி" கொண்ட ஆடு இருபத்திமூன்றேமுக்காலினுல் அட்டக்கடவ நெய் ஒரு நாழியால் நிச்சற்படி (நாள்தோறும்) இரு செவிடரையும் (2½-செவிடு)

11. மேற்படியூர் மன்றுடி "பெருமாடன் மோடன்"கொண்ட ஆடு இருபத்தி மூன்றேமுக்காலால் அட்ட நிச்சற்படி அட்டக்கடவநெய் இரு செவிடரையும் (2½-செவிடுநெய்).

ஆக ஆடு தொண்ணூற்றைஞ்சினுல் நிச்சற்படி அட்டக்கடவநெய் உழக்கும் (உழக்கு=கால் (¼)-படி) இந் நெய் உழக்கும் இக்கோயில் தான பதிகள் பக்கல் திங்கள்தோறும் (மாதந்தோறும்) அற அட்டி சந்திரார்த்தவரை செலுத்தக்கடவனுகவும், இப்பரிசு சிலாலேகைசெய்து கொடுத்தோம் இவ்வண்ணமோம், இவர்கள்சொல்ல எழுதினேன்.....

அடிப்படையின் தொடர்ச்சி.

சுவஸ்திஸ்ரீ: திருமன்னிவளர இருநிலமடந்தையும், பொற்செயப்பாவையும் சீர்தனிச் செல்வியும், தன்பெருந் தேவியராகி இன்புற, நெடுதிய ஞாழியுள் இடைதுறை நாடுக், துடர்வனவேலிப்படர்வனவரசியும் (Vanavasi) சுள்ளிசூழ்மதிட் கொள்ளிப்பாகையும் (Kollippakai) நண்ணற்கருமுரண் மண்ணீக்கடக்கமும், பொருகடல் ஈழத்தரையர்தம் முடியும் (The crown of king of ceylon) ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும் முன்னவன்பக்கல் தென்னவன் வைத்த, சுந்தரமுடியும் இந்திரனுரமும்,தெண்டிரையீழமண்டல முழுவதும், எறிபடைக்கொள்ள

(கோளன் என்றும் பாடம் வழங்கும்). முறையிற்சூடும், குலதனமாகிய பலர் புகழ்முடியும், செங்கதிர் மாலையும் சங்கதிர்வேலும், தொல்பெருங் காவற் பல்பழந்தீவும், செருவிற்சினவில் இருபத்தொருகால், அரசுகளைக் கட்ட பரசுராமன், மேவருஞ்சாந்திய மத்திவரண் கருதி, யிருத்திய செம் பொற்றிருத்தகுமுடியும், மாப்பெருந்தண்டாற் கொண்ட கோப்பர கேசரி வன்மரான ஸ்ரீ ராஜேந்திரசோளதேவற்குயாண்டு கக-வது

அரையன் இராஜராஜன் (இவர் ராஜேந்திரசோளதேவரின் தகப்பனாக இருத்தல் வேண்டும். இம் மண்ணுலகாண்டு பெரும்பேறுபெற்ற இவர் தம் ஜீவியகாலத்திலேயே தம் மகற்குப் பட்டம்சூட்டி அவனது 11-வது ஆண்டில் ஸ்தலயாத்திரையாக வெளிவந்ததாகத் தெரிகிறது.)

எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து, திருக்காரைக்காடுடையார் கோவில் வேதாரும் (வேதியரும்) வேதர் சூழவல்லாரொரு சிவயோகியாக்கு (வேதம்வல்ல வேதியர்கள் புடைசூழ்ந்துமே சல்லும் ஒருசிவயோகி-சந்தியாசிக்கு).....வேண்டும் பலவதார்வச நெல்லு அறுபதின்கலமும் கல், பதர், செத்தல் (சாவி)நெல் முளை, மடி, நீக்கி உலகும், பாற்கூலியும் நாங்களேபட்டு திருக்காரைக்காடுடையார் திருமுற்றத்தே கொடுவந்து இக்கோயில் மடமுடையார்வசம் சந்திராதித்தவரை முட்டாமேயறப்பதாகவும், இந்நெல் தண்டவந்தார்க்கு மெய்கண்டு சோறுகொடுப்பதாகவும் இத் தன்மத்திற்கு விரோதநின்றோம் கங்கையிடை குமரியிடை செய்தார் செய்தபாவம்பட்டு இந்நெல்லு சந்திராதித்தவரை முட்டாமே அறப்பதாக சிலாலேகைசெய்து கொடுத்தோம்.....

நிசத அரிசி பத்தெட்டு குத்தலரிசி இருநாழியும், நெய் யாழாக்கும், கும்மாயத்திற்கு பயறுழக்கும், இட்டு உண்ணவும், முறங்கறிகிடவுஞ் சற்கரை அரைபலமும் (½ பலம்), வாழைப்பழமிரண்டும், புழுக்குகறி ஒன்று, மிளகு பொடி கறி ஒன்றும், தயிர்க்கிருநாழியும், (உநாழி தயிர்), வெற்றிலை நாலும் வெறுங்காய் இரண்டும், இப்படி இத்தனையும், இந்நெல்லு பதக்குங்கொண்டு (பத்தெட்டு=பதக்கென்றிருத்தல்வேண்டும்) குத்தி குறைவுள்ளடங்க சந்திராதித்தவரையிலூட்டுவதற்கு நிவந்தஞ்செய்தது.

அறம் அறிவற்க! அறமல்லது துணையில்லை!!

(ஸ்ரீராஜேந்திரசோழதேவன் தனது 11வது ராஜ்யவருஷத்தில்)

செயங்கொண்டசோழமண்டலத்து, ஊற்றுக்காட்டுக்கோட்டத்து தமனூர்நாட்டு திருக்காரைக்காட்டுத்தேவதானம் அவ்வளூர் ஊரோம் கையெழுத்து.

சோழமண்டலத்து தென்கரை நித்தவிநோதவளநாட்டு, ஆ வூர் கூற்றத்து, செம்பங்குடை செம்பங்குடையான் அழுதந்தேவனுகிய இராஜவிச்சாதரவி.... ....

காஞ்சிபுரத்து திருநெறிக்காரைக்காட்டு மடமுடைய திருக்காரைக் காட்டுப்பிச்சன் "கையாலிதவர்" ஸ்ரீ பண்டாரத்துவைத்த பொன் "ஆதித்தாஸசண்டேச்வரதேவர்" பக்கல் நாங்கள்கொண்ட பொன் கழஞ்சினுக்கு (1 கழஞ்சு பொன்) ஆண்டுவரை அருமொழித்தேவன் மரக்காலால் கலனே நூணி அளந்து தரவுகொள்வோமாகவும்.

இம்முதற்பொன்கொள்ளவென்றுசொல்லப்பெறுதோமாகவும், இதற்றிறம்பில் தன்மாஸனமுதலாகத் தான் வேண்டுகோவுக்கு நிசதம் கழஞ்சு பொன் தரவும், இட்டதண்டம் மன்றுபாடி சென்று மறுக்கவும், புள்ளிருத்திவைக்கவும், பெறுதோமாகவும். இப்பாவப்பட்டம், இங்கெல் சந்திராதித்தவரை முட்டாமே அறப்பதமாகவும் சிலாலேகை செய்து கொடித்தோம்.

ஊற்றுக்காட்டுக் கோட்டத்து தமனூர்நாட்டு அவ்வள்ளூரோம் சொல்ல எழுதினேன். குன்றபாக்கிழான், குறைவன்முகடுபானேன், இவை என்னெழுத்து.

இக்நெல்லுக்கு நிவந்தம் வைச்ச அரையன் இராஜராஜன் என்றுக் கலம் உண்ணும் சிவயோகிக்கு உண்ணி இட்ட வெண்கலத்தளிகைகளுல் கம்பனுல் நிறை சுயெ (47 பலம்) பலமும், தண்ணீர் ஆட்டப் "பிங்காளம்" தளிகையினுல் கம்பனுல் நிறை உயி (20) பலமும், மாட்டுவம்களுல், கம்பனுல் நிறை சு(6)பலமும் தரசாட அட்டணைக்கல்களுல் கம்பனுல் நிறை சுயி (60) பலமும் பூசம் தளிகைகளுல் கம்பனுல்நிறை உசு (26) பலமும் இவை ....

(இதில் கண்ட பதங்கள் பழமையாயிருத்தலினுற் பொருள்விளங்கவில்லை.)

காஞ்சிபுரம் அ. நடேசசெட்டி,
85, செட்டித்தெரு,
சின்னக்காஞ்சிபுரம்.

ஸ்ரீ:

சங்கச்செய்யுளில் ஏகாரம் அடுத்த ஓனீற்றுவிளி.

சென்ற சிலமாதங்களாக '13-ம் புறப்பாட்டும் அதன் உரையும்' என்ற நீண்ட ஆராய்ச்சியும், அதனையடுத்து அதன் மறுதலைமுடிவும் வெளிவந்தமை பலரு மறிந்ததே. அவ்வாராய்ச்சி சென்றவருஷத்து மார்கழி மாதப்பகுதியோடு முடிவெய்தியது.

அதன் ஈற்றில் அவ்வாராய்ச்சியாளர் தாம் ஆராய்ந்துகண்ட முடிவு களாகச் சிலவற்றைக் குறித்தனர். அவற்றிலொன்று, "சங்கநூல்வழக் கின்கண்ணே ஏகாரம் அடுத்த ஓனீற்றுச்சொற்கள் யாண்டும் படர்க் கையாகவே வந்துள்ளன" என்பது. பின்னர் மாசிமாதச் செந்தமிழ்ப்பகுதி யில் அதன் மறுதலைமுடிவும் வெளிப்பட்டது. அதில் "இது இக் காலத் தகப்படாதனவும் இறந்தொழிந்தனவுமான சங்கநூல்களெல்லா வற்றையும் ஒரு சிறிதும் குறைவின்றி யாராய்ந்தறிந்துகொண்ட பின் பன்றி நம்பற்பாலதன்று" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. முதற்கட் கூறப்பட்ட முடிவிற்கு இதுவே ஏற்ற சமாதானமாக அமையக்கூடிய தெனினும் சங்கச்செய்யுள்களில் ஏகாரம் அடுத்த ஓனீற்றுவிளியே இல் லாமற்போகவுமில்லை.

தொல்காப்பியம், செய்யுளியல், "எண்ணிடை யொழிதல் ஏதமின் றே—கின்னமல்லாக் காலமான" (146) என்னும் சூத்திரவுரையில் நச்சி னார்க்கினியரும் பேராசிரியரும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ள பொருந் தேவபாணிச் செய்யுளொன்றுள்ளது. அதனுள் "அளப்பரிய நான் மறையா ளுணர்ந்துதற் கரியோனே" என ஏகாரமடுத்த ஓனீற்றுவிளிப் பொருண்மையில் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகலினதனைக் கீழே தருகின்றேன்.

"மணிவிளங்குதிருமார்பிற் மாமலராள்வீற்றிருப்பப்
பணிதயங்குநேமியும்பானிறத்தசுரிசங்கும்
இருசுடர்போலிருகாத்திலேந்தியமர்மாயோனும்
பங்கயத்திலுறைவோனும்பாகத்தோர்பகுங்கொடிசேர்

செந்தழற்கண்ணுதலோனுந்தேருங்கானீயென்பார்க்
கவரவர்தமுள்ளத்தளவுருவாயல்லாத
பிறவுருவுநீயென்னிற்பிறவுருவுநீயேயா
யளப்பரியநான்மறையானுணர்த்துதற்கரியோனே!

எவ்வுயிர்க்குமுயிரேயாயியங்குதனின்றொழிலாகி
யவ்வுயிர்க்கணடங்கியேயருளாதுநிற்றலினால்
வெவ்வினைசெய்தவையுழந்துவெம்பிறவிக்கடலழுந்த
வவ்வினையபகற்றுதுநிற்பதுநின்னருளன்றே;

பல்லுயிரும்படைப்பதுநின்பண்பன்றேபகலினால்
வல்வினையிலகப்பட்டுவருத்தங்கூருயிர்தம்மை
நல்வினையேபயில்வித்துநடுக்கஞ்செய்பகைநீக்கி
யல்லல்வாயழுந்தாமலகற்றுவதுமருளன்றே;

அழிப்பதுநின்றொழிலன்றேயதைந்தாலுமுயிரெல்லா
மொழித்தவற்றுணர்வுகளையொருவாமலுடனிறுத்திப்
பழிப்பின்றிப்பலகாலுமிப்படரிசேபயிற்றுதலின்
அழிப்பதுவுமில்லையாலங்கதுவுமருளன்றே;

வேள்வியாற்றினிதுவழியோடுகிய
தாழ்விலந்தணர்தம்வினையாயினை;

வினையினீங்கிவிழுத்தவஞ்செய்பு
மூவர்தமக்குமுத்தியாயினை;

இலனெனவிகழ்ந்தோர்க்கிலையுமாயினை
உளனெனவுணர்ந்தோர்க்குளையுமாயினை
அருவுருவென்போர்க்கவையுமாயினை
பொருவறவிளங்கிப்போதுமாயினை;

பானிறவண்ணநீபனிமதிக்கடவுணீ
நீனிறவுருவுநீநிறமிகுகனலுநீ
யறுமுகவொருவனீயானிழற்கடவுணீ
பெறுதிருவுருவுநீபெட்பனபிறவுநீ;

மண்ணுநீவின்னுநீமலையுநீகடலுநீ
எண்ணுநீயெழுத்துநீயிசையுநீபகலுநீ
பண்ணுநீபாவுநீபாட்டுநீதொடருநீ
அண்ணனீயமலனீயருளுநீபொருளுநீ;

ஆங்க,

இனையையாகியவிறைவநின்னடியினை
சென்னியின்வாங்கிப்பன்னுள்பரவுதும்
மலர்தலையுலகின்மன்னுயிர்க்கெல்லாம்
நிலையியபிறவியைநீத்தல்வேண்டி
முற்றியபற்றொடுசெற்றநீக்கி
முனிமையாக்கியமுவாமுத்தியை
மயலறவளித்தநின்மலரடி
யரியவன்றுயரினிற்பெறவே."

இஃது எட்டடித் தாவுந் தரவின்பாகம்பற்றிய நான்கடித்தாழிசை நன்றும் ஈரடியிரண்டும் ஓரடிநான்கும் இருசீரெட்டும் ஒருசீர் பதினாறு மாகிய நால்வகையெண்ணுந் தனிச்சொல்லும் எட்டடிச்சுரிதகமும் பற்ற தலையளவுவண்ணகப் பெருந்தேவபாணி.

இச்செய்யுள் வாக்கின்போக்காலும் பிறகுறிப்புக்களாலும் சங்கத் நான்மோர்செய்யுட்களு ளொன்றென்றே கருதப்படுகின்றது. இன்ன நூலிச்சார்ந்ததென்றறியமுடியாதிருத்தலே இதன் பழமையை நன்கு னெக்கும். இச்செய்யுள் இறந்தொழிந்த எத்துணையோ நூல்களிலொன் றற்குரியதாகும்; ஆகவே "சங்கநூல்வழக்கின்கண்ணே ஏகாரம் அடுத்த ஒனிற்றுவிளி யாண்டும் படர்க்கையாகவே வந்துள்ளது" என்னும் முடிபு லையாதாயிற்று.

T. N. அப்பாஸையங்கார்,
மதுரை.

சிறைவிடந்தாதி.

[குறிப்பு:-சிறைவிடந்தாதியென்னும் இந்நூல் என்னிடமுள்ளதோ ரேட்டுப்பிரதியிலுள்ளது. இது சொற்சுவை, பொருட்சுவை, பத்திச் சுவைகளுடன் நூறுவிருத்தப்பாக்களால் வெவ்வேறுசந்தங்களில் அந் தாதித்தொடராகத் திருச்செந்தூர் முருகப்பெருமான்மீது பாடப்பட்ட தொரு பிரபந்தம். பல்லாண்டுகட்குமுன் வெளிவந்துள்ள இது, இப் பொழுது யாங்களும் கிடையாமையாலும் ஒரே பிரதியே புள்ளமையா லும் ஏட்டுப்பிரதி சிதிலமடைந்துபோதுமுன் பாதுகாக்கப்படுத லவசிய மாகலாலும், தனியேபுத்தகமாகப் பதிப்பித்தற்கு ஒப்புநோக்கிச் செப்ப னிடவேறுபிரதிகள் கிட்டாமையால் ஏட்டிலுள்ளவாறே செந்தமிழ்ப்பத் திரிகைமூலம் வெளியிடப்படுகிறது. பிரதிகள்வைத்திருக்குந் தமிழபி மானிகள் சங்கத்திற்குக் கொடுத்துதவுவாயின், பரிசோதித்துப் பின் புத்தகரூபமாக வெளியிடற்குச் சாதகமாகும். இந்நூலாசிரியர்வரலா று முதலியன தெரியவில்லை. செய்புண்முடிவிற் பாண்டியன்சிறைபிலகப் பட்டுக்கோனேரிப்புலவன்பாடிய சிறைவிடந்தாதியென்றெழுதியுள்ளது.]

நூல்.

பூவருபொலன்கழற்குமரன்பொன்னவிர்
சேவடிப்பங்கிமலர்ச்சிந்தைசேர்ப்பினுந்
தாவருங்கொடிமதிற்செந்திற்சாரினுங்
காவருங்கடவுளாரகுகைக்கொள்வார். (க)

வார்கடற்புவியினிற்பிறந்துமாண்டுபோய்ப்
போர்கெழுமறலிகைப்புகுவர்பூங்கழற்
சீர்கெழுமுருகற்சிந்தைசெய்கிலார்
பார்கெழுபிறவியுட்பட்டமாக்களே. (உ)

கள்ளுறுநறும்மலரிறைத்துக்கைதொழு
தள்ளுறுமுருகனெனொருங்குநோக்கிலீர்
வள்ளுறுசூற்படைமறலிதென்புலந்
தள்ளுறுமொருவழியெங்ஙன்சாற்றுவீர். (ங)

சாற்றுவீர்சுவர்ணன்றண்ணந்தாமரை
போற்றுவீரிம்மையிற்புரிந்தநீவினை
மாற்றுவீர்செந்தின்மான்மருகனென்றுரு
வேற்றுவீர்பிறப்பிறப்பிண்டிதீரவே. (சு)

வேதநூலுபதிடம்விரிக்கொணாப்பொரு
ளோதிவாய்விடுத்தெடுத்துரைக்கொணாப்பொரு
ளாதிகாயகற்கறிவறிவிக்கும்பொருள்
சோதியாறெழுத்தோடுதோன்றுமோர்பொருள். (டு)

பொருளெனப்பலபெருஞ்சமயம்போக்குறு
மருளுறுமாக்களுக்களித்தவான்பொருட்
கருள்வதுநின்கழற்கமலமல்லவோ
தெருண்மறைமுறைதொழுசெந்திலெந்தையே. (ரு)

எங்கையேமுழுமறையினைக்கும்பல்லுயிர்த்
தங்கையேயுமுகதருமமேமுதன்
முந்தைகான்முகன்முழுமுதல்வயாலுடைச்
சிங்கையேதுயர்துடைத்தருளிச்செய்வையே. (எ)

செப்பதொன்றறிகிலென்செழுமென்போதுதாட்
பெய்வதொன்றறிகிலேன்பேதையேன்சுடர்
வைதிகழ்வேற்படைமுருகவன்றனை
கொய்தெனக்கிரங்கியாட்கொள்ளவேண்டுமால். (அ)

வேண்டியவடியவர்க்குதவிவெவ்வினை
மாண்டறத்துடைத்தருள்வழங்கிக்காக்குமாற்
காண்டகுமமுழுக்கடவுள்செம்மணித்
தூண்டொகுபன்னிருதோளின்றிண்மையே. (கூ)

திண்மைசாலமரைச்சிறைவிடுத்தநின்
றண்மைசால்கருணையிற்றமியர்க்கேதனு
முண்மைசார்ந்துதவுதியொருவனேபெரு
வண்மைசார்குறக்கொடிவள்ளிகேள்வனே. (கூ)

வேறு.

வள்ளிக்காருயிர்க்கொழுனைக்கொழுங்கதிர்வடிவேலைப்
புள்ளிச்சேவலங்கொடியினைத்தினந்தொறும்புகழாதார்
கொள்ளிக்குர்விழிக்கூற்றுவன்றென்புலக்கொடும்பேழ்வா
யள்ளற்நீரியப்பெரும்படுகுழியகழ்வாரே. (கக)

அகழுமார்கலிப்புனரிமண்ணளப்பினுமரும்பாவி
யிகழ்பெரும்பிறப்பெண்ணிலவெண்ணிலவினையோனே
மகாவாரிதிமாமுதுதுணிபடுகெடுவானேர்
புகழவேறுடித்தணைபவர்க்கருண் மழைபொழிந்தோனே. (கஉ)

பொழிந்தகின்பெருங்கருணைபெற்றுணர்கிலேன்புலைவாழ்க்கை
யொழிந்துநின்றிருத்தொண்டுபெற்றுய்கிலனுய்வேனே
சுழிந்துமுப்புரங்கடிந்தவற்கருமறைத்தொடர்காட்டி
மொழிந்தசெந்திலெம்பரமனேயமுகமுருகோனே. (கஊ)

முருகசுந்தரகுருபரவறுமுகமுதல்வாமான்
மருகவென்பவர்க்கிம்மையுமுமையும்வழுவாதாற்
றிருகுவெள்ளெயிற்றழல்விழிச்சூருயிர்சினவாயாற்
பருகும்வேற்படைதுடைப்பதுபழவினைப்பகையன்றே. (கச)

பகையும்பாவமும்பழவினைத்தொடர்ச்சியும்பகையான
மிகையுமெய்த்திறலுக்தகன்சிற்றமும்வெருவேனுன்
முகைமென்கண்ணிபன்குருபரனமுகமுருகேசன்
சிகையஞ்சேவலங்கொடியலாற்சிந்தியேன்சிறியேனே. (கஎ)

சிறுமையெய்தினுந்தீவினையெய்தினுஞ்சிறியேன்
வறுமையெய்தினும்வாழினுமறப்பெனேமலர்த்தா
ளுறுபெரும்பொருளுணர்த்துமோங்காரவுள்ளொளியே
யறுமுகப்பெருங்கடவுளேயமர்நாயகமே. (கஏ)

அமர்வேந்தனுமசும்புறுபசும்பொனுட்டவருங்
கமலயோனியுமின்னமுங்கதிகொடுத்துயர்ந்தார்
விமலவேற்படைவிடுத்துவெஞ்சூர்கிளைதடிந்த
குமரபண்ணிருதடம்புயக்குன்றுடைக்களிறே. (கஐ)

களிறுமூர்தியுமொருதனிக்கவிகையுங்கணக்கிற்
குளிறுபல்லியப்பெருக்கமுங்குணிப்பதுகுணிப்போ
வெளிறும்வெள்ளெயிற்றந்தகற்கந்தியம்வெருவா
தொளிறுவேற்படைமுருகனென்றுணர்ந்துரைத்திருமே. (கஅ)

இருக்குமெப்பெருஞ்சமயநூல்யாவையுமெடுத்துப்
பெருக்குமப்பொருளின்றிருப்பெயரலாற்பெறுமே
திருக்கைவேற்படைச்செல்வனேசெந்திலெம்பெருமான்
மருப்பமிர்துணர்க்கடம்பனேவள்ளிநாயகனே. (கக)

வள்ளைவார்குழைமரகதப்பசுங்கொடிபயந்த
பிள்ளையேபெருஞான்மறைப்பெறலருஞ்சிறப்பே
கள்ளைவார்பொழிற்கற்பகமுழுவனங்கடவுள்
வெள்ளைவாரணற்களித்தகின்வேற்படைக்கபயம். (உ0)

வேறு

படைவேல்கொண்டனையதடங்கருநெடுங்கண்மடமகளிர்பிணைமென்கொங்கைப்
புடைபோவுணர்வுடையேற்குனதுதிருத்தாளலதுபுகலுமுண்டே
கடைபோயமுறுக்கெயிற்றுக்கருந்தலைச்சூருயிர்குடித்துக்கனன்றவாகைத்
தொடையாலகின்றெளிருநெடிவலோய்செந்திருகர்ச்சுதிவாழ்வே. ()

சுருதியினுமாகமத்தந்தலையங்கும்புடைநூலின்சொல்லின்சொல்லைக்
கருதவரும்பொருளைத்தங்கடைமுறைபோய்நீயாதல்காண்பரென்றுன்
முருகுகுருபரனுமாமுளரிநிகரதருமாமுகனேமாயோன்
மருகனெனுநிலைமையெவரளப்பரிமலர்போற்குமயங்கிற்றன்றே. (உஉ)

மயங்காதபுதுமுளரிமலராதிருமுகமுமலர்ச்செவ்வாயுஞ்
சயங்காணுநெடுவேலுந்திருக்கரமுந்தொழுமாறுதருமாறுண்டே
கயங்காலுலாவுங்கவினியிலைவேற்கடவுளைப்பக்கயவாய்வாளை
பயங்காவுகண்டுகளுந்திரைகிழியவழுதசெந்திற்பதியினனே. (உங)

நாலுதோளினைந்தலைவாளாகிப்பொருவிருக்குருவாகி
யூகியுயிராகியுயிர்க்காயிராயுயிர்ப்புரக்குமொருவனாகித்
தேகிச்சுவையாகிப்பொருடோறுங்கரந்துநின்றசிறுவாதேவர்
கோலையசுடரிலைவேற்குமரவீனயெவ்வண்ணங்குறிக்குமாறே. (உச)

குறியார்பொற்பணிமுளரித்தண்டையந்தாளாரிரண்டுகுலத்தோணேக்கி
யறியார்நின்றிருநாமநினேந்துருகியழுதழுதபித்தற்றாந்தோ
வெறியார்பைந்துணர்க்கடம்பநறுந்தாரோய்செந்தில்வந்தவிமலனேபுன்
பொறியாளர்கொந்நிரயப்படுகுழிக்காளாதல்கண்டுபொறுக்கிலேனே. ()

பொறுத்தாலுனதடியாரடிக்கமலமொருசிறிதுபொருமைகூர்ந்து
கறுத்தாலுனதடியார்க்காட்பட்டாற்குறித்திருகண்கறுத்துச்சீறி
வெறுத்தாலுனதடிமைவேண்டாரைவேற்படைபோய்விரிநீர்க்கங்கை
செறுத்தாரமுடியுணர்ந்தசிவபெருமானுவந்தளித்தசெந்தில்வாழ்வே. ()

(தொடரும்)

சு. நல்லசிவனபிள்ளை,
உதவியுபாத்தியாயர்,
தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

மதிப்புரை.

தமிழிலக்கணம்; (இரண்டாம்பாகுதி)—இது மல்லாகம் சுன்னாகம் உதவிவித்யாதர்சி ஸ்ரீமத், பொன்னையா அவர்களால் ஆங்கிலகலாசாலைகளில் ஆறாந்தரத்திற் கற்கும் மாணவர்களுக்குபகாரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இதிற் சொல்லிலக்கணந்தான், பெயர், வினை, இடை, உரி இயல்களிற் சொல்லும் இலக்கணங்களோச் சூத்திரங்களின்றி முப்பது பக்கத்துட் சுருக்கிவிளக்கியும், எழுத்திலக்கணத்துள், எழுத்தியல் பதவியல்களிற் சொல்லுமிலக்கணங்களோச் சூத்திரங்களோடு அறுபதுபக்கத்தில் விரித்து விளக்கியும், ஒவ்வொருபொருளில்வரும் பற்பலவிருதிகளுக்கும் புதிய உரைச்சூத்திரங்களியற்றியும், உதாரணங்களோ அட்டவணையிலடைத்துக் காட்டியும், அப்பியாசவினாக்களமைத்தும் தெளிவுறக்காட்டியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இதைப்படிப்பவர்களுக்கு நன்னூல் படிப்பதற்கு வேண்டியளவான தமிழிலக்கணவுணர்ச்சியுண்டாகு மென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

ஆயினும், நம் தமிழிலக்கணநூல்களிற் றொன்றுதொட்டுப்பயின்றுவரும் எழுத்துச் சொல்லிலக்கணப்பயிற்சி முறைமையை முன்பின்னாக மாற்றியுட், பொருளிடங்காலஞ்சினைசுணர்தொழில் என்னு மதுவகைப் பெயர்களுள் இடப்பெயர் காலப்பெயர்களைப் பொருட்பெயருளடக்கி நால்வகைப்பெயரென காட்டியு மிருக்கும் இன்னோரன்ன புதிய வேறுபாடுகளையும், பொருட்கள் என்பதுபோலும் புதியசொல்லமைக்கினையும் கொண்டிருப்பது பொருந்தியதாகத் தோன்றவில்லை. இவற்றை விலக்கிப் பழையமுறையைத்தழுவி யெழுதித் தந்த பண்டிதர்களுடைய நன்மதிப்போடு பிழைதிருத்தமும் சேர்த்திருந்தற் பெரிதும் நலமாயிருக்குமென்றெண்ணுகிறேன்.

பத்திராதிபர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி கக.] துர்மதி-ஹ வைகாசி-மீ [பகுதி எ.
Vol. XIX. May—June—1921. No. 7.

தொல்காப்பியர் சைனராம். II

சென்ற மாசிமாதத்துச்செந்தமிழிலே ஸ்ரீமத் வையாபுரிப்பிள்ளை யவர்கள் உயிர்களை ஓரறிவுயிர் முதலாகப் பகுத்துக்கொள்ளுதல் சைனமதவழக்கம் எனவும், தொல்காப்பியனாரும் அவற்றை அங்ஙனம் பகுத்துக்கூறுதலிற் சைனராவர் எனவும் மிகப்பெருக்கி எழுதினர்கள். அவர்கள் எழுதியவிஷயத்திலே பலப்பல ஐயங்கள் தோன்றப்பெறுதலின் அவற்றை யெல்லாம் ஈண்டெடுத்து எழுதுதலும் எமது கடமை யாயிற்று.

(1) தொல்காப்பியனார் ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிர் இறுதியாக வன்றே உயிர்களைப் பகுத்திருக்கின்றனர்?

(2) மெய் நா மூக்கு காட்டம் செவி மனம் என்னும் இவற்றை யன்றே அவ் வாறென்னுந்தொகை குறிக்கும்?

(3) ஓரறிவுயிர்முதல் ஐக்தறிவுயிர் இறுதியாக வுள்ளவற்றிற்கு மனவுணர்ச்சி இல்லையென்பது எளிதிற் பெறப்படுமே.

(4) "மநஷ்யஷ்டாநீந்திரியாணி" என்னும் தோவாக்கியம்போன்ற ஆர்யமதப் பிரமாணமன்றே ஈண்டுக் கொள்ளத்தக்கது?

(5) சைனமதத்தினர் உயிர்களை ஆறறிவுயிர்வரையிலும் யாண்டேனும் பகுத்திருக்கின்றனரா? உதாரணங்காட்டவொண்ணுமா. பிள்ளை யவர்கள் ஐக்தறிவுயிர்வரையிற்றானே உதாரணங்காட்டியிருக்கின்றனர்? அவையும் நன்னூல் மயிலைநாதருரைப்பதிப்பின் உதவியாலே பெறப் பட்டனபோலும்.

(6) கீழ்க்காட்டும் ஸ்லோகங்களில் வரும் உயிர்ப்பகுப்பு வைதிக முறையோ? ஜைனமுறையோ?

காமிகம்)—ஸுப்ரபேதாக்ஷரவபுஷம்—நகரம், நகாரம்; நகாரம்.)

வஜ்ரவஜ்ரத்ரிவஜ்ரஸ்ரீவஜ்ரதமெவச ।
சதுர்வக்த்ரஸ்திவெதஜ்ரவஜ்ரஷட்ரிவஜ்ரிதிதெஜ்ரயாச ॥

வ்ருக்ஷாதிரெகவஜ்ரஜ்ரஹ்மகாதிஉதிவஜ்ரயா ।
வஜ்ரயாதிஹ்ரீஉதிஸ்ரீவஜ்ரஸ்ரஜ்தவ்ரெவச ॥

வக்ஷிவெஜ்ரஉதிஸ்ரீவஷ்ணுதிஉபநவ்ரஷொலவெச ।
லொஜ்ராவெகஉதிவ்ரவெபசேஹஸ்ரீவரதாத்மநே. ॥

(7) ஸ்ரீமத். சாமிநாதையரவர்களும் நன்னூன் மயிலைநாத ருரைப் பதிப்பிலே ஓரறிவுயிர்முதல் ஐந்தறிவுயிர் இறுதியாக அமைத்திருத்தலை யன்றே நன்னூலார் சைனமதத்தினராவர் என்பதற்குக் காரணமாக்கி எழுதியிருக்கின்றார்கள்.

(8) "கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி" என்ற பகுதிக்குப் "புல்லு மாணு மோரறி வினவே-பிறவு மூளவே யக்கிளைப் பிறப்பே" என்ற சூத்திரத்தையும் பிறவிடங்களிலே இன்ன பிறசூத் திரங்களையும் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியரும் மேற்கோள் களாகக் காட்டியிருக்கின்றனரே? ஆசிரியர் சைனநூலுணர்ச்சி பெரிது முடையாரன்றே.

(9) "பசும்புற்றலைகாண்பரிது" என்ற பகுதிக்குப் பரிமேலழகர் எழுதிய விசேடவுரையில் "ஓரறிவுயிர்" என்று குறிப்பிட்டிருக் கின்றனரே. இத்தகைய மேற்கோள்களும் பலவுளவன்றே?

(10) நன்னூலார் தொல்காப்பியனுரைப்போல உயிர்களை ஓரறி வுயிர்முதல் ஆறறிவுயிர் இறுதியாகப் பகுத்துக்கூறுமைக்கு மயிலை நாதரும் விருத்தியுரைகாரரும் கூறும் சமாதானங்களைச் சற்று வன்றி நோக்கலாகாதா?


(11) இவ்வுயிர்ப்பிரிவுகளைத் தொல்காப்பியனர் மரபியலிற் கூறி யிருக்கின்றனரே. சைனமதமரபினையா அவ்வியல் எடுத்துக் கூற வந்தது? நன்னூலார் உரியியலிற் கூறியதுட்பத்தை உணரலாகாதா?

பிள்ளையவர்களும் ஏனைத் தமிழறிஞர்களும் நடுவுநிலையுடன் இவற்றையெல்லாம் ஆராய்வார்களாக.

நவநீதகிருஷ்ணபாரதி.

ஸ்ரீ:

தொல்காப்பியர் சமயநிலை.



தொல்காப்பியர் சைனசமயத்தவராவரென்று அறிஞரொருவர் செந் தமிழ்ப்பத்திரிகையிலே தெரிவித்தனர்.

தொல்காப்பியனூலுக்குப் பனம்பாரனர் கூறிய சிறப்புப்பாயிரத்திலே "பல்புகழ்நிறுத்தபடிமையோனே" என்பதிலுள்ள படிமையென்னுஞ் சொல் சைனமதவொழுக்கமொன்றற்கேயுரியவழக்காகலின், தொல்காப்பியர் சைனராவரென்பது அவர்கொள்கை.

அன்றியும், அவர், தொல்காப்பியனர் மரபியலின்கண்ணே ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிரிறுதியான உயிர்ப்பாகுபாட்டினை எடுத்தோதுகின்றமையானும் சைனராதல்வேண்டுமென்றார். அதில் அவர் தொல்காப்பியர்கூறிய உயிர்ப்பாகுபாடு சைனமதமொன்றற்கேயுரியதென்றும் வெளியிட்டார்.

படிமையென்றசொல் சைனமதத்திற்குமட்டு மமுரிய தன்றி வைதிகவழக்காருகவு முள்ளதென்பது "மேவிய சிறப்பின் வனேர்படிமைய" என்னுஞ் சூத்திரத்தில் தொல்காப்பியர் கூறியிருத்தல்கொண்டும், பதிற்றுப்பத்து "நலம்பெறுதிருமணியில்", "கூறினைபெருமநின் படிமையானே" என வருதல்கொண்டும் முன்னரே நன்குவிளக்கப்பட்டிருத்தலின் அதனை ஈண்டு விரித்தல்வேண்டுவதின்று.

இனித் தொல்காப்பியனர்கூறிய உயிர்ப்பாகுபாடு வருமாறு:—

"ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே
யிரண்டறிவதுவேயதனெடுநாவே
மூன்றறிவதுவேயவற்றெடுமூக்கே
நான்கறிவதுவேயவற்றெடுகண்ணே
ஐந்தறிவதுவேயவற்றெடுசெவியே
யாறறிவதுவேயவற்றெடுமனனே
நேரிதினுணர்ந்தோர்நெறிப்படுத்தினரே".

இதிலுள்ள நேரிதினுணர்ந்தோர் என்னுந் தொடர் சைனசமயாசாரியரைக் குறிக்குமென்பதை அவர் தம தாராய்ச்சியிற் குறிப்பாற் பெற

வைத்தார். அது பொருந்தாது. அங்ஙனம் வருமிடங்களிலெல்லாம் அது முதனூலாசிரியரான அகத்தியரைக்குறித்ததென்றுதல், அன்றி யவரோ டொப்ப வுயர்ந்த பிற தமிழ்ச்சான்றோரைக்குறித்ததென்றுதல் கொள்ளு தலே நேரிதாம். "கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய், முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப" என்று பிறர்மதங்கூறலாகக்கூறிய இவ்விடத்தில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் "என்பவென்றது அகத்தியனு ரை; இக்குறியீடுகளும் அகத்தியனாரிட்ட வென்றுணர்க" என்றுரைத் தார்; ஆதலின் ஈண்டும் அங்ஙனங் கோடலே ஏற்புடைத்தாகும். தொல் காப்பியர் சைனசமயாசாரியரையே கருதினவராயின் அதுதோன்றக் கூறு திரார். அன்றி யுரையாசிரியரேனும் விளங்கவுரைத்திருப்பரென்க.

இவ்வாறே, "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர், ஐயர் யாத்த னர் கரண மென்ப" என்றவிடத்து "ஈண்டு என்பவென்றது முதனூலா சிரியரையன்று; வடநூலோரைக் கருதியது" என நச்சினார்க்கினியர் ஐய மறுத்தலும் கண்டுகொள்க. எனவே, இவ்வகைப் பாகுபாடு அகத்திய நூலின்கண்ணும் உண்டென்பது பெறப்பட்டது; என்னை? தொல்காப் பியம் அகத்தியத்தின்வழி நூலேயென்பது யார்க்கும் ஒப்பமுடிந்ததொன் றாகலின். மற்றுத் தொல்காப்பியனார் இடையிடையே தம் மதக்கொள்கை களையும் அகத்தியனார் உடன்படாதன சிலவற்றையும்புகுத்து நூல் செய்தாரெனின், அதுவும் பொருந்துமாறின்று. இதனை, மரபியலில் "வினையினீங்கி" என்னுஞ் சூத்திரவுரையுள் "மூன்று நூலெனப்பட் டன முற்காலத்து வீழ்ந்தநூலெனக்கூறித் தொல்காப்பியர் அகத்தியத் தோடு பிழையும் அவற்று வழிநூல்செய்தாரென்றக்கால் இழுக்கென்னை யெனின்? அது வேதவழக்கொடு மாறுகொள்வார் இக்காலத்துச்சொல்லி னும் இறந்தகாலத்துப் பிறபாசண்டிகளும் மூன்றுவகைச் சங்கத்து நான்குவருணத்தொடுபட்ட சான்றோரும் அது கூறுரென்பது" எனப் பேராசிரியருரைத்தலையானறிக. தொல்காப்பியர் தமிழ்வழக்கமாகிய மரபினோடும் தமிழ்நூலோடும் மாறுபட நூல்செய்தாரல்லராகலின் அவர் கூறிய உயிர்ப்பாகுபாடும் வேதவழக்கொடுபட்ட தமிழ்ச்சான்றோர்கொள் கையென்பதே கொள்ளப்படும். படவே, அது வைதிகவழக்கி லில்லை யென்றல் ஏலாதாயிற்று.

இனிப் பவணந்தியார் நன்னூலிற்கூறியவுயிர்ப்பாகுபாட்டினுக்கும் தொல்காப்பியர்பகுப்பிற்கும் சிறிது வேறுபாடுமுண்டு. தொல்காப்பியர்

உயிர்களை ஆறுபகுதியவாமென்றார். நன்னூலார் அவற்றை ஐந்தின்பாற் படுத்தார். தொல்காப்பியனார் ஒவ்வோருயிர்வகையின்கண்ணும் அக் கிளைப்பிறந்தன பிறவும் உளவென்றார். நன்னூலார் அது கூறிற்றிலர். இன்னும் நுண்ணுணர்வுடையோர் இங்ஙனமே இதனை விரிய ஆராய்ந்து கொள்க. தொல்காப்பியர் கூறியது வேதவழக்கொடுபட்டது. பவணந் தியார்கொள்கை சைனசமயச்சார்பாயது. தொல்காப்பியத்தின் வழிநூல் செய்தாரெனினும் சிற்சிலவிடங்களிற் பிறர்மதந் தழுவிச்செல்லுதல் நன் னூலார்க்கியல்பு. இதனைப் பிரயோகவிவேகவுரையில் "சினேந்திரன்மதம் பற்றி நன்னூலார் பலவாகக்கூறுவர்" "நன்னூலார் வாமனன் சினேந்திரன் செய்த சத்தநூல்பற்றிக் கூறுவர்" என வரும் வாக்கியங்களானறிய லாம்.

இனித் தொல்காப்பியர் சமயநிலைபற்றித் தொல்லாசிரியர் கொள்கை இன்னதென்ப துணர்த்தப்படும்.

"உயர்ந்தோர்க்குரிய வோத்தினை" என்னு மகத்திணையியற் சூத் திரவுரையில் நச்சினார்க்கினியர் 'அகத்தியமும் அதன் வழிநூ'லாகிய தொல்காப்பியமும் வேதத்தினுற்பிறந்தன வென்பதை நன்குபெறவைத் தார். வேதந்தோன்றியபின்னர் அது கூறியபொருள்களையே தொல் காப்பியமும் ஆராய்கிறதென்பது ஆண்டு அவர் கருதிய பொருளாகும். "அவனறி வாற்ற வறியுமாகலின்" என்னுங் கற்பியற்சூத்திரத் தில் "தந்தையொப்பர்மக்கள்" என்பதனுரையில் 'மக்கள் தந்தையை யொப்பர்' என்னும் வேதவிதியோ டொற்றுமை யுடையதாகக் காட்டினர் நச்சினார்க்கினியர். இங்ஙனமே பிறுண்டும் அந்தணரருமறைப்பொருள் தொல்காப்பியத்துப் பயின்றுவருதல் அவருரையா னறியப்படும்.

"அறுவகைப்பட்டபார்ப்பனப்பக்கமும்" என்னும் புறத்திணையியற் சூத்திரத்திலே நச்சினார்க்கினியர் விரியவுரைப்பனவெல்லாம் தொல்காப் பியர் வைதிகசாத்திரங்களில் நன்குபயின்றவரென்பதை இனிது புலப் படுத்துவன. அவ்வுரையின்கண்ணே ஐந்திரவியாகரணம் வேதாங்கங் கள் ஆறனுள் ஒன்றென்று தெளியவுரைக்கப்பட்டது. "ஐந்திர நிறைந்த தொல்காப்பிய"னெனப் பனம்பார னார் பாயிரங்கூறியதனையு மீண்டைக் கேற்ப நோக்கிக்கொள்க. இதனாலும் தொல்காப்பியர் வேதம் ஓதியுணர்ந் தவரென்று நன்கு துணியப்படும்.

"இன்பமுந்துன்பமும்" என்னும் களவியற்சூத்திரத்தில் "மறை யோர் தேத்து மன்ற லெட்டனுள்" என்பதனுரையிலே "வேதம் ஓரிடத் தைக் கூறிய மணமெட்டனுள்" என் றெழுதப்பட்டுள்ளது. இங்ஙனம் ஆசிரியர் மனம் என்வகைய என்பதை வேதம் கூறிய இடங்கண்டு அதனைச் சுட்டியுரைத்தாராதலானும் இக்கொள்கை வலியுறுகின்றது.

இனி, "வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது" என்னுஞ் சூத் திரவுரையிற் பின்வருமாறுள்ளது. அது, "கல்வி வேண்டிய யாண்டு இற வாது-துறவறத்தினைக்கூறும் வேதாந்தமுதலியகல்வி வேண்டியயாண் டைக்கடவாது; மூன்று இறவாது-அக்கல்வியெல்லாம் மூன்றுபதத்தைக் கடவாது. எ-று. இறவாதென்பதை இரண்டிடத்துங்கூட்டுக. மூன்று பதமாவன அதுவென்றும் நீயென்றும் ஆனாய் என்றுங் கூறும் பதங்க ளாம். அவை பாழுஞ் சீவனும் அவ்விரண்டும் ஒன்றுதலுமாதலின் இம்மூன்றுபதத்தின்கண்ணே தத்துவங்களைக்கடந்தபொருளையுணர்த் தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறு உணர்ந்துகொள்க. இது மூன்று வருணத்தார்க்குங் கூறினர். ஏனைய வேளாளரும் ஆகமங்களானும் அப் பொருளைக் கூறிய தமிழானும் உணர்தல் 'உயர்ந்தோர்க்குரிய' என்பத னுன் உணர்க. இது இல்லறம் நிகழ்த்தினர் துறவறம்நிகழ்த்துங் கருத் தினராக வேண்டுதலின் காலவரையறை கூறுராயினர்" என்பது. இங்ங னம் அச்சூத்திரத்திற்கு வேதவழக்கொடுபொருந்த வுரைவகுத்திருத்த லும் தொல்காப்பியர் வைதிகரேயாவர் என்னும் நச்சினார்க்கினியருடைய உண்மைக் கருத்தினை வெளியிடுகின்றது.

இவை நிற்ப. நல்லறிவுடைய தொல்போசிரியரும்,

"தாயிற்சிறந்தன்றுநாண்டையலாருக்கந்நாண்டகைசால்
வேயிற்சிறந்தமென்றோளிதிண்கற்பின்விழுமிதன்றீங்
கோயிற்சிறந்துசிற்றம்பலத்தாடுமெங்கூத்தப்பிரான்
வாயிற்சிறந்தமதியிற்சிறந்தமதிநுதலே"

என்னுந் திருச்சிற்றம்பலக்கோவையுரையில் "'உயிரினுஞ் சிறந் தன்று நாணே, நாணினுஞ், செயிர்தீர்காட்சிக் கற்புச்சிறந்தன்று' என்று ராகலின் வாயிற்சிறந்த மதியிற்சிறந்தவென்பதற்குத் தாய்போல நாண் சிறத்தலும் நாணினுங் கற்புச்சிறத்தலும் ஆகிய இரண்டும் கூத்தப்பிரான் வாயிற்சிறந்த நூல்களிடத்துச் சிறப்புடைய பொருளென்றுரைப்பினு

மையும்" என்றுரைத்தார். இதனால் அவர் "உயிரினுஞ் சிறந்தன்று நானே" என்னுந் தொல்காப்பியத்தினையே எடுத்தோதி அதனைக் கூத்தப்பிரான்வாயிற்சிறந்ததூலாகக்கொண்டு நாண்சிறத்தலும் கற்புச்சிறத்தலும் இரண்டும் அந்தூலிற்சிறந்தபொரு ளெனக்கூறுதற் குடன்பட்டாராதல் தேறப்படும். இது போசிரியர்க்குமட்டிலும் உடன்பாடன்றித் தெய்வப்புலவராகிய மாணிக்கவாசகசுவாமிகளுடையதிருவுள்ளக்கருத்து மாகுமென்பது எளிதினுய்த்துணரத்தகும். ஆகவே முற்காலத்தான் றோர் பலரும் தொல்காப்பியத்தினைத் தெய்வவோத்தாகவே கருதினரா தல் தெள்ளிது.

இதுமட்டுமன்று. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் இளவியாக் கத்திலே,

"கால முலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉ
மாயீ றைந்தொடு பிறவு மன்ன
வாவயின் வருஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன"

என்ற சூத்திரத்திற்குப் பொருளுரைப்புழிப் போசிரியர் "இந் நூல்செய்தான் வைதிகமுனிவனுதலின், சொல்லென்பது வேதமென்று கொள்ளப்படும்." என்பது கூறிக் கரிபோக்கினராகலானும் தொல்காப் பியர் சைனரல்லரென்பது போதரும். "காணத்தினமைந்து" என்னுங் கற்பியற் சூத்திரத்தில் "சொல்லுறு பொருளின் கண்ணும்" என்பதற்கு "வேதஞ்சொல்லுதலுற்றபொருளின்கண்ணும்" என இவ்வாறே பொரு ளுரைத்தார் நச்சினார்க்கினியரும்.

இதுகாறுங்கூறியவாற்றால் ஆசிரியர் தொல்காப்பியனார்மேற் கொண்டசமயம் பொதுவாக வைதிகமேயாகுமென்பதும் அவர் அவைதிக நெறியொழுக்கமுடையராகாரென்பதும் நன்கு தெளிவுறுத்தப்பட்டன.

T. N. அப்பனேயங்கார்

மதுரை.

ஸ்ரீ

கற்புநிலை.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுங்
திண்மையுண் டாகப் பெறின்"

[ஸ்ரீமகாபாரதத்தில் வியாசமுனிவராற் சொல்லப்பட்ட சாவித்திரி யின்கதை சாதாரணமாய் எல்லோருக்கும் தெரிந்திருந்தபோதிலும், அதிலடங்கிய தர்மங்களின் நுட்பமான ஆராய்ச்சிகள், தற்காலம் ஆங்கில கலாசாலைகளில் ஏற்பட்டமுறைப்படி கல்விபயின்ற காந்திமதி என்ற பெண்ணுக்கும், நம்தேசத்தின் பூர்வீகமுறைப்படி கல்விபயின்று வைதிக வாசனையுள்ள சத்தியவதி என்ற பெண்ணுக்கும் அடியிற் காட்டும் கற்புநிலை என்னும் சம்பாஷணைரூபமாய் வெளியிடப்பட் டுள்ளன. இதில் நம்தேசத்துச் சிறுவர், சிறுமியர்கள் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய பல சிறந்த விஷயங்கள் எழுதப்பட்டிருப்பதுடன், நம்தேசத்துப் புராதன வழக்க வொழுக்கங்கள் தற்கால நாகரீகத்துக்கு மிகவும் ஒற்றுமையாயும் இன்றியமையாதனவாயும் இருக்கின்றன வென்றும் விளக்கப்பட்டுள்ளன.]

காந்திமதி:—தோழி சத்தியவதி! நீ எங்குப்புறப்பட்டாய்?

சத்தியவதி:—உன்னைப் பார்ப்பதற்காகவே வந்தேன்.

காந்திமதி:— அப்படியா; மிகவும் சந்தோஷம்; நேற்று நீ புராணங் கேட் கப் போயிருந்ததாகவன்றே கேள்விப்பட்டேன்.

சத்தியவதி:—ஆம். அதனை லென்ன?

காந்திமதி:— அங்கே பௌராணிகர் என்னசரித்திரம் உபந்யாசம் செய்தார்?

சத்தியவதி:—சாவித்திரியின் சரித்திரம்; அது மிகவும் அழகாயிருந்தது. மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தோம்.

காந்திமதி:— சாவித்திரியென்பவள் யார்? நான் கேட்டதில்லையே.

சத்தியவதி:—அந்தப் பெண்மணி பதிவிரதைகளில் மிகவும் சிறந்தவள்; கம்பீரமான மனதுடையவள். மத்திரதேசத்தரசனுக்குப் புதல்வியாய் அவதரித்தவள்.

காந்திமதி:— காமெல்லோரும் பதிவிரதைகளில்லையோ? அவளிடம் யாது விசேஷம்?

சத்தியவதி:—கற்புநிலை யென்பது சாரீரகமென்றும் மானசிகமென்றும் இரண்டு விதம். நம்மிடமுள்ள கற்புப் பெரும்பாலும் சாரீரகந்தான். அம்மாதுசிரோமணியிடம் இரண்டும் பொருந்தியிருந்தன.

காந்திமதி:— உன் வார்த்தை பிதிராயிருக்கிறது. அதன் பொருள் எனக்கு நன்றாய்விளங்கவில்லை.

சத்தியவதி:—சாவித்திரி யௌவனப்பருவமடையுமுன்னமே அவள் தந்தை "அம்மா! உன் மனத்துக் கிசைந்த புருஷனை நீயே பார்த்து நிச்சயிக்கலாம்" என்று சொன்னார். அவளும் அப்படியே உலகெலாம் ஆராய்ந்து தேடி த்யுமத்ஸேனன் என்றஅரசன்புதல்வனும் தருமநெறிதவறுதபுண்ணியவானுமாகிய சத்தியவானே தனக்குத் தகுந்த கணவன் என்று உள்ளத்தில் எண்ணினாள்.

காந்திமதி:— சரி. அதனு லென்ன விசேஷம்?

சத்தியவதி:—பின் பொருசமயம் அவள் தந்தையிடம் மேற்கூறிய எண்ணத்தை வெளியிடும்பொழுது தேவலோகத்திலிருந்து பிரும்மபுத்திரரான நாரதர் தற்செயலாக அந்தஅரசனுடைய ஸபைக்கு வந்தார். அவர்சாவித்திரியின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு, சாவித்திரியிடம், "அந்தச் சத்தியவானுக்கு ஆயுள் மிகவும் சொற்பம்," என்ற விஷயத்தை ஞானக்கண்ணால் அறிந்து பகர்ந்தார். அதைச் செவியேற்றும் அப்பெண்மணி அவனைத்தவிர வேறொருவனைக் கணவனாக வரிப்பதில்லை யென்று உறுதி கூறினாள்.

காந்திமதி:— அப்படியானால் அவளுக்குச் சித்தம் சுவாதீனமில்லை யென்று தோன்றுகிறது.

சத்தியவதி:—ஐயோ! பாவம்; இப்படிச் சொல்லுகிற உனக்குத்தான் சித்தம் சரியாயில்லை. அந்த உத்தமியின் மனவுறுதி மிகவும் புகழத்தக்கது.

காந்திமதி:– நல்லது: உலகத்தில், சரியானபுத்தியுள்ளவள் எவளோனும், தெரிந்து கொண்டே அமங்கலியாவதற்கு ஆசைப்படுவாளா?

சத்தியவதி:–தோழீ; அப்படியல்ல; அச்சமயத்தில் அப்பதிவிரதை பகர்ந்த வார்த்தையைச் சொல்லுகிறேன். ஞாபகமாய்க்கேள்.

காந்திமதி:– ஜாக்ரதையாய்க் கேட்கிறேன்.

சத்தியவதி:–"ஒருவனைக் கணவனாக ஒருதரம் மனத்தால் வரித்தபிறகு அவன் நீண்டவாழ்நாளுடையவனாயினும், குறுகியவாழ் நாளுடையவனாயினும் குணமுள்ளவனாயினும் குணமில்லவ னாயினும் அவனையே மணம்புரியவேண்டுமேயன்றி வேறொ ருவனைக் கனவினும் நினைக்க நியாயமில்லை. உலகத்தில் எந்தவிஷயத்தையும் முதலில் மனதினால் நிச்சயித்து கா வா ல் வெளியிட்டுப் பி ற கு அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிறார்கள்; ஆதலால் மனதுதான் எல்லாவற் றிலும் முக்கியமானது" என்று சாவித்திரி தர்மத்தின் இரகஸியத்தை நுட்பமாய் ஆராய்ந்துசொல்லும்பொழு தா சாதமஹரிஷியே அவளுடைய மனோதர்மத்தை மிகவும் புகழ்ந்துபேசினர்.

காந்திமதி:– இப்படிப்பட்ட மனோதர்மத்தைக் காயக்லேசஞ்செய்து ஜம்புலனடக்கிக் கடுந்தவம்புரியும் மஹரிஷிகளே புகழ வேண்டும்! பிறகு என்ன நடந்தது?

சத்தியவதி:–உண்மைதான். லாகிரி வஸ்துக்களையும் மதகரமான உண வையும் புசித்து உல்லாசமாய்த்திரிகிற நமக்கு மிகவும் நுட்பமான கற்புநிலையின்தன்மை எப்படிப்புலப்படும்.

காந்திமதி:– அப்படியானால் அந்தத் தர்மநெறியின் இரகஸியத்தைக் கொஞ்சம் தெளிவாய் எனக்கு நீ உபதேசிக்கவேண்டும்.

சத்தியவதி:–அவ்வுத்தமியின்சரித்திரமுழுதும் கேட்டால், கற்புடை மையின்பெருமை தானாகவே விளங்கும்.

காந்திமதி:– தோழீ! அவள்சரித்திரமுழுதுங்கேட்க எனக்கு ஆவல் அதிகரிக்கிறதென்று சொல்லவும் வேண்டுமோ?

சத்தியவதி:—சாவித்திரி கணவனுகவரித்த சத்தியவானுடைய தந்தை அச்சமயத்தில் வேற்றரசர்களால் முறிய அடிக்கப்பட்டு ராஜ்யபிழந்து குடும்பத்துடன்கானகஞ்சென்று ரிஷிவேஷம் பூண்டு கனி கிழங்குகளையருந்திக் கஷ்டப்பட்டுக் காலங் கழித்துக்கொண்டிருந்தார். அதை யறிந்தும் மத்திரதேசத் தரசன் தன் பெண்ணின் நிர்ப்பந்தத்துக் கிணங்கித் தானே அவரிடஞ்சென்று அவர் புதல்வரான சத்யவானுக்குத் தனது புத்திரியான சாவித்திரியை மணம்புரிந்துகொள்ளு மாறு வேண்டிக்கொண்டார்.

காந்திமதி:— சம்பந்திகளின் தற்காலநிலைமை குழந்தையான சாவித்திரிக் குத் தெரிந்திராது.

சத்தியவதி:—அதைத்தெரிந்துகொண்டே சாவித்திரி தானும் அவர்க ளுடன் வனவாசத்தை அனுஷ்டிக்கத் தயாராக இருந்தாள்.

காந்திமதி:— கஷ்டம்; மலர்போல் மிருதுவானசரீரமுடையவளும் பிறந் ததுமுதல் அரண்மனையில் சுகமாக, வளர்ந்தவளுமான அரசன்புதல்விக்கு இவ்வித நிச்சயமுண்டானது ஆச்சரி யந்தான்.

சத்தியவதி:—சத்தியவானைப்போற் குணங்களும் சீலமும் வாய்த்தவர் கள் இவ்வுலகத்தில் வேறொருவருமில்லையென்று தெரிந்து கொண்டு நல்லபகுத்தறிவுள்ள சாவித்திரி விவேகத்துடன் அவனைக் கணவனுகஅடைவதே பரமசௌக்கியத்துக்குக் காரணமென்று தீர்மானித்தாள்.

காந்திமதி:— இதிலென்ன விவேகம்? என்ன பகுத்தறிவு? அதிபால்யம், நன்மை தீமையறியுந்திறம் உண்டாகவில்லை. அவளது பற்றித் தன்சுகத்தைத் தானே மாய்த்துக்கொண்டாள். எனக்கு மிகவும் பரிதாபமாயிருக்கிறது.

சத்தியவதி:—பிறகு சாவித்திரி சத்தியவான் இருவருக்கும் விவாகம் மனுமுறைப்படி நடந்தது.

காந்திமதி:— தோழீ! விவாககாலத்தில் எதோ சில மந்திரங்கள் சொல்லு கிறார்களே. அவற்றின் பொருள் தெரியுமா?

சத்தியவதி:—ஒரு மஹாகவி விவாக மந்திரங்களின் கருத்தை ஒரு சுலோகத்தில் வருணித்திருப்பதாக என் தகப்பனார் அடிக்கடி சொல்லுவது வழக்கம்.

காந்திமதி:— அப்படியானால் அந்தச் சுலோகத்தையும் அதன் பொருளையும் தயவுசெய்து கூறவேண்டும்.

சத்தியவதி:—"ஸ்வெயொ தித்ரம் வம்யூதா வா வஸூஜா
ஸவெஃ காரோ: ஸௌவயிஜீவிதம் வ।
ஸீணாம் ஜதூ-ர் யதூ-ரூராஸு வ்ரம்வர
தூ
தித்ரு நெயூ-நயூம் வஸ்ஸயொஜூ-ர் தஸ்தூ ॥"

பேதையர்களுக்குக் கணவன்தான் பிரியமான நேசன். சகல பந்துவர்க்கமும் ஸ்வாபீஷ்டங்களும் சகல ஐச்வர்யமும், உயிரும் அவனேதான்; புருஷர்களும் தர்மபத்தினியை அப்படியே நினைக்கவேண்டும். இக்கருத்தை மணமகனும் மணமகளும் எப்போதும் நினைவில் வைக்கவேண்டும்.

காந்திமதி:— தோழி! சுலோகமே இனிமையானது. அதிலும் நீ சொல்லுவது மிகவும் மதுரமாயிருக்கிறது. நல்லது, மேல்நடந்த விருத்தாந்த மென்ன?

சத்தியவதி:—அப்பெண்மணி விவாகம்நடந்தினம்முதல், சிரத்தையுடன் கணவனுக்கும், மாமி மாமன் முதலிய பெரியோர்க்கும், பணிவிடைசெய்து விரதங்களாலனுஷ்டித்துத் தெய்வங்களைத் தொழுது நல்லொழுக்கந் தவறாமல் நடந்து நாரதமுனிவர் குறிப்பிட்டகாலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

காந்திமதி:— ஐயோ! விதியைவெல்ல யாரால் ஆகும்? அரசன் செல்வப் புதல்வியாகிய இப்பெண்மணி மிகவும் சுகமாயிருக்க வேண்டிய இனிய இளமைப்பருவத்தில் தானுகவே இவ்விதம் கடுமையானவிரதங்களை யனுஷ்டிக்கப்புகுந்ததை விட வேறு திருஷ்டாந்தம் வேண்டுமா? (என்று கண்ணீர் துளும்பப் புலம்பினாள்.)

சத்தியவதி:—நாரதர் குறிப்பிட்டகாலம் சமீபிக்கவே ஆயுள்விர்த்திசெய்யும்பலனைக்கருதிச் சாவித்திரி ஒரு கடுமையான விரதம் அனுஷ்டிக்கத் தொடங்கினாள்.

காந்திமதி:— என்ன அவிவேகம்? குறுகிய ஆயுளுடன் ஜனித்த மானிடர்க்கு விரதங்களாலும் உபவாசங்களாலும் வாழ்நாளை விர்த்திசெய்யக்கூடுமோ? ஔஷதமுதலிய சிலாக்கிய மானமுறைகள் ஒருவற்கு ஆயுள் இருந்தாலொழியப் பயன் படாதென்று கவிகாமணியாகிய காளிதாஸர் கூறியது கேட்டதில்லையோ?

"வ்ருதிகாரவியா நரோயஷ்ஃ।
ஸதி ஔஷெ ஹி மஹாய கல்பதெ ॥"

சத்தியவதி:—அடிபேதாய்! நீ சொல்வதெல்லாம் பொதுவான நியாயம். ஆனல் தவத்தினல், சாதிக்கக்கூடாதவிஷயமும் உலகத் தில் ஒன்றுண்டோ? மணிமந்திர ஔஷதங்களுக்குரிய பிரபாவம் எளிதில் அறியக்கூடியதல்ல.

காந்திமதி:— தோழி! அதிருக்கட்டும். அப்படிப்பட்ட விரதம் என்ன? அதை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமல்லவா?

சத்தியவதி:—நிரோதசிமுதன் மூன்றுதினம் உபவாசம்; பிரதமையன்று சூரியன் அஸ்தமித்தவுடன் பாரணை. இதுதான் இந்த விரதத்தின் முக்கியமான முறை.

காந்திமதி:— பிறகு சாவித்திரி என்ன செய்தாள்?

சத்தியவதி:—மாமி மாமன் முதலிய பெரியோர்களெல்லாரும் "அம்மா இது கடினமான விரதமாயிற்றே; உன்னற் சாதிக்கமுடி யாது; வேண்டாம்" என்று தடுத்தும் அவ்வுத்தமி உறுதி யாயிருந்து விரதத்தை அநுஷ்டித்தாள்.

காந்திமதி:— ஈசன்செயல். நாமென்னசெய்யலாம். சுவாசம்விடுவது கூடத் தன்னிச்சையல்லவென்று பெரியோர்கள்சொல்லு கிறார்கள்.

சத்தியவதி:—கணவன்மரிக்கவேண்டியநாள்வந்ததும் வழக்கம்போற் காலையில் விறகு கொண்டுவருவதற்குக் கோடாலியை எடுத் துக்கொண்டு காட்டுக்குப் புறப்படுகிற சத்தியவானுடன் சாவித்திரி விரதத்தைமுடித்துவிட்டு ஆகாரமில்லாமலே

காந்திமதி:— கஷ்டம். பெரியவர்களிருந்தும் அக்குழந்தையைக் கணவனுடன் காட்டுக்குப் போகவேண்டாமென்று தடுக்காமல் எப்படிச் சகித்தார்களோ?

சத்தியவதி:—தோழீ! அவர்கள் சாவித்திரியைப்பார்த்து "அம்மா நீ முன் ஒருபோதும் காட்டுக்குப் போனதில்லை. வழி மிகவும் கஷ்டமானது. நீயோ உபவாசத்தால் மிகவும் மெலிந்திருக்கிறாய். கால்நடையாய்ப்போக முடியாது" என்று மிகவும் தடுத்தும் சாவித்திரி அதற்கிணங்காமல் ஊக்கத்துடன் கணவனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

காந்திமதி:— (பெருமூச்செறிந்து கொண்டு) தலையிலெழுதிய எழுத்தை யழிக்க யாரால் ஆகும்?

சத்தியவதி:—இளமைப்பருவமுள்ள சாவித்திரி மனதிலுள்ள அபிப் பிராயத்தைக் கொஞ்சமேனும்வெளியிடாமற் புன்சிரிப் புடன் அழகாய்ப்பேசிக்கொண்டு கணவனுடன் உல்லாச மாய்ச் சென்றாள்.

காந்திமதி:— அதன்பிறகு என்னநடந்தது?

சத்தியவதி:—அனேகவனங்களைக்கடந்து பழங்களைப் பறித்துவைத்து விட்டு விறகுவெட்டுகையிற் சத்தியவானுக்குப் பொறுக்க முடியாத தலைவலியுண்டாயிற்று.

காந்திமதி:— அம்மா! இதற்குமேல் என்னைக் கேட்கமுடியாது.

சத்தியவதி:—இளகிய மனமுடையவளே! சற்று நிதானித்துக்கேள்.

காந்திமதி:— கல்லது.

சத்தியவதி:—பிறகு சத்தியவான் மனைவியிடம் வந்து "எனக்குத் தலை வலி அதிகமாயிருக்கிறது. உலகெலாம் சுற்றுவதுபோற் றோன்றுகிறது. மனது சக்கரம்போற் சுழல்கிறது. ஒன்றும் தெரியவில்லை" என்று சொல்லிக்கொண்டு அவளுடைய மடியிற் றலைவைத்து அயர்ந்து மூர்ச்சையடைந்தான்.

காந்திமதி:— அம்மா! உன்மனது மிகவும் கடினமாயிருக்கிறது. இப் படிப்பட்ட விஷயத்தைக்கூடச் சிறிதேனும் கலங்காமல் வருணிக்கின்றனை.

சத்தியவதி:—பிறகு சிறிதுநேரத்திற் சத்தியவான்பக்கத்தில் ஒரு புரு ஷன் நிற்பதைச் சாவித்திரி கண்டாள். அவன் சிவப்பு வஸ்திரமும் வெண்மைகலந்த நீலநிறமும் ரத்தமான கண் களும் கையிற் பாசமும் சூரியனைப்போன்ற காந்தியுமுடைய வனுய் விரதத்தினால் மெலிந்த சாவித்திரியின் கண்ணுக்குப் புலப்பட்டான்.

காந்திமதி:— (மிகவும் வருத்தத்துடன் "அம்மா சாவித்திரி! உனக்கு இவ்விதமான கதியா ஈசுவரனல் ஏற்படுத்தப்பட்டிருக் கிறது" என்று அழத் தொடங்கினுள்.)

சத்தியவதி:—சாவித்திரி உடனே மெதுவாய்க் கணவனுடைய சிரத்தைப் பூமியில்வைத்துவிட்டுக் கைகுவித்துச் சரீரநடுக்கத்துடன் வணக்கமாயும் கௌரவமாயும் அந்தப்புருஷனைப்பார்த்துப் பின்வருமாறு பேசத்தொடங்கினுள்.

காந்திமதி:— அப்படிப்பட்ட சமயத்திற்கூட அவளுக்கு மனங்கலங்காத தைரியம் ஏற்பட்டது வியக்கத்தக்கதுதான்.

சத்தியவதி:—சாவித்திரி அவரை நோக்கி,"பகவானே! தங்களைப்பார்த்தால் தெய்வமாகத் தோன்றுகிறது. தங்கள் வடிவம் அமானுஷ மாயிருக்கிறது. தேவர்கள் நாயகமே! அடியாளிடம் கிருபைகூர்ந்து, தாங்கள் யார்? இவ்விடம் வந்த காரிய மென்ன? என்று சொல்லவேண்டுமென்றுள்.

காந்திமதி:— அவ ரென்னசொன்னர்?

சத்தியவதி:—"அம்மா! சாவித்திரி! நீ கற்புநிலையுடையவள். விரதா னுஷ்டானத்திலும் மிகவும் ஊக்கமுடையவள். அதனல் உனக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவனுகிறேன். அம்மா! என்னை யமனென்று சொல்லுவார்கள். உன்னு டைய கணவனுகவும், ராஜபுத்ரனுகவும் உள்ள இந்தச் சத் தியவானுக்கு இப்போது ஆயுள் முடிந்திவிட்டது. அவ

ருயிரைக் கட்டிக்கொண்டுபோவதற்காகவே நான் இங்கு வந்தேன்" என்றார் தர்மராஜன்.

காந்திமதி:- காரியமெல்லாம் காலவசமல்லவோ? நாமென்னசெய்யலாம்?

சத்தியவதி:-"தெய்வமே! தங்களுடைய தூதர்களல்லவோ இக்காரியங்களில் ஏவப்பட்டிருக்கிறார்களென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியிருக்கத் தாங்களே நேரில்வந்ததற்கு யாதுகாரணம்" என்றாள் சாவித்திரி.

காந்திமதி:- இவளுக்கு இந்த இளமைப் பருவத்தில் இவ்வளவு தைர்யம் ஏற்பட்டது மிகவும் ஆச்சரியமே?

சத்தியவதி:-"அம்மா! இவர் நீதிநெறிதவறுத குணக்கடலாதலால் என்னுடைய சேவகர்கள் இவரைத் தொடுவதற்கும்யோக்கியரல்லர். ஆதலின் யானே நேரில்வரும்படி நேர்ந்தது" என்று சொல்லிக்கொண்டே சத்தியவான்சரீரத்திலிருந்து கட்டைவிரலளவுடையபுருஷனை வெளியிலிழுத்துப் பாசத்தாற் கட்டிக்கொண்டு தர்மராஜன் தென்றிசைநோக்கிப் புறப்பட்டார்.

காந்திமதி:- தெய்வச் செயலைமாற்ற யாரால் ஆகும்?

சத்தியவதி:-தோழீ! கொஞ்சம் கவனித்துக்கேள். கற்புநிலைவழுவாத சாவித்திரியும் அப்படிப் புறப்பட்டுப்போகும் தர்மராஜனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

காந்திமதி:- இதென்ன? அற்புதமாயிருக்கின்றதே!

சத்தியவதி:-அப்படிப் பின்தொடர்ந்துவரும் சாவித்திரியைப்பார்த்து, "அம்மா சாவித்திரி! நீ திரும்பலாம்; இவருக்குப் பிராணவியோகத்தின்பின் செய்யவேண்டிய சடங்குகளைச் சரியாகச் செய். வேறுலகத்துக்குச்செல்லும் கணவனுக்கு எவ்வளவுதூரம் வழிவிடலாமோ அவ்வளவுதூரம் வந்துவிட்டாய்" என்று தர்மராஜன் மொழிந்தார்,

காந்திமதி:- நன்றுயுய்த்தெடுத்தார்,

சத்தியவதி:—தர்மாஜனே! கணவனுடன்செல்வதே என்போன்றவர் களுக்கு ஏற்றமுறை. தவத்தாலும் குருபக்தியாலும் கண வனிடமுள்ள நிநேகத்தினாலும் விரதானுஷ்டானத்தினாலும் தங்களருளாலும் எனக்குப் பின்றொடர்ந்துவரும் சக்தி குன்றுமலிருக்கிறது. "எழுதி கூடகடந்தாற் பெரியோர் களுக்கு நட்பேற்படுகிறது" ("ஸாவஜஹம்ஜெித்ரம்")என் கிற நியாயப்படி, தங்கள் முன்னிலையில் நான் ஏதோ சில வார்த்தைகள் அநுசிதமாய்ப் பேசினாலும் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் அறத்தில்வழுவாத மன முடையவள். பொருளிலும் காமத்திலும் எனக்கு விருப்ப மில்லை" என்று சாவித்திரி மறுமொழிகூறினாள்.

காந்திமதி:— யமனுடைய மனது மிகவும் கடினமானதென்றல்லவோ பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள்.

சத்தியவதி:—அப்படியல்ல, தர்மநெறி தவறுத அவளுடைய வார்த்தை யைச் செவியுற்றுத் தர்மராஜன் அகமகிழ்ந்து "அம்மணி சத்தியவானுடைய உயிரைத் தவிர வேறு உனக்கு வேண் டிய வரம் கேள். கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்று பகர்ந்தார்.

காந்திமதி:—மிகவும் ரசமாயிருக்கிறது.

சத்தியவதி:—"கானகத்திற் கண்ணிழந்து வருந்துகிற என்னுடைய மாமனருக்குத் தங்களருளாற் கண் தெரியவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்றாள் சாவித்திரி.

காந்திமதி:—அந்தச் சமயத்திற்கூடச் சாவித்திரியின் மனது எவ்வளவு கெம்பீரமாயிருக்கிறது.

சத்தியவதி:—"அம்மா! அப்படியே ஆகட்டும். உபவாஸத்தினால் மெ லிந்து வழிநடையாற் களைத்துப்போய்விட்டாய். இனித் திரும்பிப்போகலாம்" என்றார் தர்மராஜன்.

காந்திமதி:— என்ன அழகான சந்தர்ப்பம்!

சத்தியவதி:—"தேவேசா! கணவன்சமீபத்தில் எனக்குக் கோப்பென்ப தில்லை. முக்கியமாய் அறநெறியில் ஊக்கமுள்ள எனக்குப் புருஷவடிவுகொண்டுவந்திருக்கிற தருமதேவதையின் முன்னிலையில் உள்ளம் பூரித்திருக்கவேண்டியதே தவிர வேறில்லை" என்று மெல்லிய குரலுடன் சொன்னாள் சாவித் திரி.

காந்திமதி:— சிறியவளாயினும் சாவித்திரி கன்னுடைய கெம்பீரமான ஸ்வபாவத்தை என்ன அழகாய்வெளியிடுகிறாள் பார்.

சத்தியவதி:—"உத்தமி! உன்வார்த்தையைக்கேட்க என்னுள்ளம் மிகவும் பூரிக்கிறது. சத்பவானுயிரைநீக்கி இரண்டாவதுவரம் கேட்டுக்கொள்" என்றுர் தர்மராஜன்.

காந்திமதி:— கல்லும் கரைந்துவிடுமல்லவா?

சத்தியவதி:—"பகவானே! காடிழந்து காட்டில் தவிக்கிற என்மாமனுக்கு மறுபடியும் ராஜ்யம் கிடைக்கும்படி அருள்புரிய வேண்டும்" என்றுள் சாவித்திரி.

காந்திமதி:— இப்படிப்பட்ட மனநிலை மக்களில் எவர்க்கும் எளிதிற் கிடைக்கக் கூடியதன்று.

சத்தியவதி:—"நல்லது; அப்படியேயாகட்டும். இனித் திரும்பலாமே" என்றுர் தர்மராஜன்.

காந்திமதி:— வேறு என்ன சொல்லுவார்?

சத்தியவதி:—"தர்மதேவதையே! ஜனங்களை ஒருவழியாய் அடக்கியாளுவது தாங்கள் அங்கீகரித்த வேலை. அறநெறிதவறுத மனிதர்கள்கூட அடைக்கலம்புகுந்தவர்கள் விரோதிகளாயினும் அவர்களிடம் கருணைபுரிவார்கள். இப்படி நடக்க வேண்டியது, சனாதனதர்மமாக உலகத்திற் றங்களுடைய கட்டளையினுலேயே ஏற்பட்டுவருகிறது."என்றுள் சாவித்திரி.

காந்திமதி:— இதற்குத் தர்மராஜன் என்ன மறுமொழிகொடுத்தார்?

சத்தியவதி:—"மங்கையே! மதுரமாய் விஷயங்களை எடுத்துரைக்கின்றுய். உன்னைச் சந்தோஷப்படுத்தாமற்போவதற்கு என்னுலியலவில்லை. சத்தியவானுடைய வுயிரைநீக்கி மூன்றுவது வரம் கேட்கலாம்" என்றுர் தர்மராஜன்.

காந்திமதி:— மிகவும் நன்றுயிருக்கிறது.

சத்தியவதி:—"புத்திரனில்லாத என் தந்தைக்கு வம்சம்விளங்க நூறு புத்திரர்கள் தங்கள் திருவருளால் உண்டாகவேண்டும்" என்றுள் சாவித்திரி.

காந்திமதி:— இவளுடைய தர்மத்தால் இரண்டுகுலமும் உயர்ந்து ஓங்கித் தழைத்தது.

சத்தியவதி:— "அப்படியே ஆகக்கடவது. இப்பொழுது வெகுதூரம் வந்துவிட்டாய். உடனே நீ திரும்பவேண்டியதுதான்" என்றுர் தர்மராஜன்.

காந்திமதி:— மாங்கல்யத்தையடையாமல் எப்படித்திரும்புவள்?

சத்தியவதி:—"கணவன் சமீபத்தில் என் மனம் உத்ஸாகமாய் முன் சென்றுகொண்டிருக்கிறது. என்னுடைய பேச்சினால் தங் களுடைய பிரயாணத்திற்குத் தடையுண்டாகவேண்டாம். பெரியோர்களுடைய இயற்கை இவ்விதந்தான். எல்லாப் பிராணிகளுக்கும் நல்லமனத்தால் விசுவாசமுண்டாகிறது. ஆதலால் சத்துக்களிடம் பழகப்பழக விசுவாசம் அதிகரித் துக்கொண்டுவருகிறது." என்றாள் சாவித்திரி.

காந்திமதி:— இப்படிப்பேச ஒருவராலும் முடியாது.

சத்தியவதி:—அதைக்கேட்டுத் தர்மராஜன் உள்ளம்பூரித்துமற்றொருவரம் கேட்கும்படி சொன்னார். அவளும், "சத்தியவானுடைய வம்சம்விளங்க என்னிடம் சத்தியவானுக்கு நூறு ஔரச புத்திரர்கள் உண்டாக அருள்செய்யவேண்டும்" என்றாள். அவ்விருப்பத்தையும் அவர் முகமலர்ச்சியுடன் அங்கீகரித் தார்.

காந்திமதி:— சத்தியவான் பிழைக்காமல் இது எவ்வாறு பூர்த்தியாகும்?

சத்தியவதி:—பிறகு மறுபடியும் நுட்பமான தர்மங்களை அழகாய்ப்பேசு கிற சாவித்திரியைப்பார்த்துத் தர்மராஜன் ஐந்தாவது வரம்கொடுக்க இசைந்தபொழுது, சாவித்திரி, அவரை வணங்கிச் சிரமேற் கைகுவித்துப் "பகவானே! சத்திய வானைவிட்டு நான் எப்படி உயிர்தரிப்பேன். கணவனின்றி எனக்கு வேறுசுகம் ஏது? அவரையின்றி ஸ்வர்க்கலோக மும்வேண்டேன். அவரில்லாத ஐசுவரியத்திலும் விருப்ப மில்லை. உயிரையும்விடத்தயாராயிருக்கிறேன். என்னிடம் சத்தியவானுக்கு நூறுபுத்திரர்கள் உண்டாகும்படி தாங் களே அருள்புரிந்திருக்கிறீர்கள். அவரையுங் கட்டிக் கொண்டு போகிறீர்கள். பேதையான அடியா ளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவரை உயிர்பிழைக்கும் படிசெய்து, தங்கள்வார்த்தை பொய்யாகாமல் அருள்புரிதல் வேண்டும்" என்றாள் சாவித்திரி.

காந்திமதி:— என்னே கற்பின்மகிமை? என்னே தவத்தின்பலன்? என்னே உபவாசத்தின் பெருமை? அறநெறிவழுவாது நடக்கும் உத்தமிகளுக்கு எது தான் சாதிக்கமுடியாதது. அவர்களுக்கு அரியது ஒன்றுமில்லை. அருந்ததி முன்னொரு சமயம் சீதாதேவியைப்பார்த்து,

"ஸிஶுர்வ-ர ஸிஷ்யா வா யதி வா 88 தத்திஷ்-தா தயா ।
விஶுத்தஷ்-ஃ கயி தா 88 லக்ஷ்ம உபயதி ॥"

"நீ எனக்குச் சிசுவாயினும் சரி. சிஷ்யையானலும் சரி. அது ஒருபுறமிருக்கட்டும். உன்னுடைய மனதின்சுத்தியைப் பார்த்தால்,பக்தியுடன் உன்னை நான் தலைவணங்கிப் பூஜிக்க வேண்டியதாயிருக்கிறது" என்றாள்.

சத்தியவதி:—பிறகு தர்மராஜன் "அம்மா! பதிவிரதாசிரோமணியே! உன்னுடைய கணவனை இதோ விட்டுவிட்டேன். நுட்பமான தர்மங்களடங்கிய உன்னுடைய வார்த்தைகளைக் கேட்டு மிகவும் களிப்புற்றேன். உன் கணவன் நல்லசரீரத்துடன் ஒருவித துக்கமுமின்றி உன்னுடன் நானூறுவருடம் சுகித்து,வேள்விகளால் தேவரருள்பெற்றுத் தர்மத்தை நிலைநாட்டிப் பெருப்புகழ் பெறுவான்" என்றுசொல்லி அவளுடைய அறநெறியைப் புகழ்ந்துகொண்டு மறைந்துவிட்டார். சாவித்திரியும் உடனே திரும்பி நித்திரைசெய்தெழுந்தவன்போல், தன்னை யழைக்கும் நாயகனைத்தழுவி மாமி மாமனார்களாலும் தாய் தந்தையர்களாலும் பெருமையுடன் புகழப்பெற்றுக் குணவானகிய கணவனுடன் வெகுகாலம் வாழ்ந்து வையகத்தையும் வானகத்தையும் அலங்கரித்தாள்.

காந்திமதி:— ஆனந்தக்கண்ணீர்சொரிந்து தோழி சத்தியவதி? அப்படிப்பட்ட தெய்வத்தன்மையுள்ள பெண்மணிகளின் முன்னிலையில் நாம்யார்? என்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும். ராஜாகுணத்தில் முழுதுமாழ்ந்த நம்முடைய கற்பெங்கே? சுத்தசத்துவகுணமுள்ள மனநிலைவாய்ந்த அவ்வுத்தமியின் கற்பெங்கே. இச்சரித்திரத்தினால் அறநெறியின் நுட்பமான ஆராய்ச்சியை ஒருவிதம் அறிந்துகொண்டேன். மஹரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட உபவாசமுதலிய விரதங்களின் மேன்மையையும் அறிந்துகொண்டேன். இவ்வுபதேசத்திற்கு உனக்கு யாது கைம்மாறு செய்வேன். சாவித்திரியைப்போல் உலகிற் கீர்த்திபெறுவாயாக.

ர. கிருஷ்ணமாசாரியர், M. A.

1921-ஆம மார்ச்சு-மீ 18-உ (ரௌத்திரிஆம பங்குனிமீ 5 தேதி) காலை 8-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரிய நிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ள-ள-ஸ்ரீ M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L., —அக்கிராசனம்வகித்தவர்.
2. ,, ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள் B.A.,
3. ,, V. S. இராமஸ்வாமிசாஸ்திரியவர்கள் B.A., B.L.,
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M. L. C.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1920-ஆம ஆகஸ்டுமீ முதல் 1921-ஆம பிப்ரவரிமீ முடிய உள்ள சங்கம் வரவு செலவுகணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. 1920–1921-ம் வருஷத்திய சங்கம் வரவு செலவு மதிப்புத் திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

III & IV. சங்கத்தின் உப அக்கிராசனாதிபதியாகிய ஆண்டிபட்டி ஜமீந்தாரவர்கள், சங்கக்கட்டட நிதித்தொகை சம்பந்தமாகவும், தாம் வருஷந்தோறும் கொடுக்கும் நன்கொடைவிஷயமாகவும், 18-1-21, 3-2-21 ஆம் தேதிகளிட் டனுப்பிய கடிதங்களை நிர்வாகசபையார் சந்தோஷத்துடன் வாசித்தார்கள்.

சங்கம் அச்சாபீஸை அபிவிருத்திசெய்திருப்பது, சங்கப்பதிப்புப் புத்தகங்களின் பிரசரம், மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களும், ஸ்ரீமான் உப அக்கிராசனாதிபதியவர்களும் சங்கத்திற்காகக் கட்டிடம் வாங்கியசமயத்திலும், மற்றும் இதரசமயங்களிலும், மிக்க அன்போடு சங்கத்திற்கு நன்கொடையாகவும், கைம்மாற்றாகவும் பொருள் கொடுத்து உதவிபுரிந்தது முதலிய சம்பந்தமாக கௌரவகாரியதரிசியவர்கள் எழுதிய குறிப்பு (Memo) படிக்கப்பட்டது. இவர்களிருவரும் தகுந்தசமயங்களில் சங்கத்திற்குச்செய்த பேருபகாரத்திற்காக, ஷெயார்கட்டு நிர்வாகசபையார் மனமுவந்து வந்தனமளிக்கின்றார்கள்.

V. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-ள-ள-ஸ்ரீ T. S. நடராஜையரவர்கள், தலைமைத்தமிழ்ப் பண்டிதர், முனிசிபல் காலேஜ், சேலம்.

(2) ,, P. M. வேணுகோபாலநாயுடு அவர்கள், தமிழ்ப் பண்டிதர், M. E. L. M. High School, ஆம்பூர்.

(3) ,, பு. பொ. வைத்தியலிங்கதேசிகரவர்கள், மட்டக் களப்பு, காரைத்தீவு, யாழ்ப்பாணம்.

(4) ,, V. ராமச்சந்திர ஐயாவர்கள் B.A., L.T., உபாத் தியாயர், மதுரை.

VI. சங்கக்கட்டிடத்தில் தீப்பற்றியசமயம், சங்கத்தின் சாமான் களை அப்புறப்படுத்திப் பேருதவிசெய்த போலீஸ் உத்தியோகஸ்தர்கட் குச் சங்கத்தார் சன்மானம்செய்யவேண்டுமென்று மதுரை ஜில்லா போலீஸ் சூப்பிரண்டென்டன்டு அவர்கள் எழுதிக் கேட்டுக்கொண்டபடி சன்மானத்திற்காக ரூ 105 கொடுக்க அனுமதிசெய்யப்பட்டது. ஷை தொகையை ஜில்லா போலீஸ் சூப்பிரண்டென்டன்டு அவர்களுக்கு அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

VII. (a) அச்சாபீஸ்விஷயமாக சங்கம் மானேஜர் 12-3-21ல் எழுதிய குறிப்பு (Note)ம், சடகோபநாயுடு 11-3-21ல் எழுதிக் கொடுத்த மனுவும் வாசிக்கப்பட்டன.

அச்சாபீஸ் சீர்திருத்தவிஷயமாகச் செலவிட ஏற்கனவே அனுமதி செய்யப்பட்ட தொகைக்கு மேற்கொண்டு ரூ 700 அனுமதி செய்ய லாயிற்று.

(b) அச்சாபீஸ் சீர்திருத்தசம்பந்தமாக, சடகோபநாயுடு கூட இருந்து வேண்டிய உதவிபுரிந்ததற்குப் பிரதிப்பிரயோஜனமாக ஷை யாருக்கு ரூ. 100 கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

(c) ஷை விஷயமாகத் தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் வேண்டிய உதவிபுரிந்திருப்ப தற்காக நிர்வாகசபையார் நன்றியறிவுடையவர்களாய் ஷை யாருக்கு வந் தனமளிக்கின்றார்கள்.

(d) சங்கத்தின் அங்கத்தினர்களாகிய மகா-ள-ள-ஸ்ரீ, J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ கான்பகதூர் H. அப்துல் சுபான்சாஹிப் அவர்கள் ஆகிய இவ்விருவரும் காலஞ்சென்ற துக்க சமாசாரத்தைக் கேள்வியுற்றுச் சங்கத்தார் அநுதாபமொழிகூறி, அத னைப் புத்தகத்திற் பதிவுசெய்தார்கள். இவ்விஷயத்தைத் துக்கத்தில் மூழ்கிய ஷை யார்களின் குடும்பத்தார்களுக்குத் தெரிவிக்கும்படி தீர் மானிக்கலாயிற்று.

(e) சங்கத்தின் கட்டடத்தை முன்னைய ஸ்திதிக்குக் கொண்டு வருவதற்காக அடியிற்கண்ட கனவான்கள், பொருளுதவிசெய்வதாக அன்புடன் வாக்களித்துள்ளார்கள்.

1.	மகா-ள-ள-ஸ்ரீ, மு. மு. வீர. வீரப்பசெட்டியாரவர்கள், பல வான்குடி. ...	ரூ	150
2.	,, அரு. ப. நாராயணன்செட்டியார் வகையரா பலவான்குடி ...	ரூ	100
3.	,, ஆத. கு. பள. மு. முத்தையாசெட்டியா ரவர்கள், சிறுகூடல்பட்டி. ...	ரூ	250
4.	,, ஆத. கு. பழ. சுப. சுப்பிரமணியஞ்செட் டியாரவர்கள், சிறுகூடல்பட்டி	ரூ	350
5.	,, வீர. பழ. மு. முத்தய்யாசெட்டியாரவர்கள், சிறுகூடல்பட்டி ...	ரூ	75
6.	,, வயி. சு. நா. நாகப்பசெட்டியாரவர்கள், சிறு கூடல்பட்டி ...	ரூ	100
7.	,, ராம. பழ. நா. ராமஞ்செட்டியாரவர்கள், சிறு கூடல்பட்டி	ரூ	75
8.	,, A. கிருஷ்ணசாமி ஐயரவர்கள், ஹைகோர்டு வக்கீல், மைலாப்பூர்	ரூ	250
9.	,, ஸ்ரீ வெங்கடேச ஐயங்காரவர்கள், (மதுரை) மைலாப்பூர்	ரூ	50
10.	,, N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்கள், B.A., B.L., ஹைகோர்ட்டுவக்கீல், வண் ணாரப்பேட்டை, திருநெல்வேலி	ரூ	201
11.	,, அ. வீர. அ. அடைக்கப்பசெட்டியாரவர் கள், பட்டமங்கலம்	ரூ	750
12.	,, கு பாஷ் D. K. சையத் இப்ராஹிம் சா ஹிப், கு பாஷ் D. K. மஹம்மது இப் ராஹிம் சாஹிப்	ரூ	500
13.	,, ராம. அரு. ராம. அருணசலஞ் செட்டியா ரவர்கள், தேவகோட்டை	ரூ	150

இவர்கட்கு இச்சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றார்கள்.

M. மாணிக்கவாசகம்பிள்ளை,

அக்கிராசனம்வகித்தவர்.

18—3—21,

1921-ஆ ஜூன்மீ 6க (தூர்மதி-ஆ வைகாசி-மீ 24-ம் தேதி) காலை 11-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் காரியநிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

——:o:——

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வரஸேதுபதிமன்ன ரவர்கள்—அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A.,B.L.,
3. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A.,B.L., M.L.C.
4. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1921-ஆ மார்ச்சு, ஏப்ரல், மே-மாதங்களின் வரவுசெலவுகணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்யும்படி, மதுரை ஹைக்கோர்ட்டுவக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

III. சங்க வருஷோத்ஸவத்தை நடத்துவதற்குத் தெய்தி இடம் இவற்றைக் குறிப்பிடவும், வருஷோத்ஸவத்திற்கு அக்கிராசனரவர்களைத் தெரிந்தெடுக்கவும் சங்கத்தின் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

IV. ஆங்கிலகலாசாலைகளில், தமிழைக் கட்டாயபாடமாக வைக்கவேண்டியதைப்பற்றி அதற்குரிய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

V. இராமநாதபுரம் ஸமஸ்தானம் திவான் அவர்கள் அனுப்பிய 18-4-21-ம் தெய்திக் கடிதம் ரிக்கார்டில் வைக்கப்பட்டது. அதிற் கேட்டுக்கொண்டபடி வட்டிப்பணம் செலுத்தும்படி தீர்மானிக்கலாயிற்று.

VI. தபாற்கட்டணம் அதிகப்பட்டிருக்கிறபடி ஏற்படக்கூடியசெலவைச் செய்யும்படி தீர்மானிக்கலாயிற்று.

VII. Madura Ramnad Central Co-operative Bank-ல் வட்டிக்குப் போடப்பட்டுள்ள ரூ 50,011-5-0-யும் மறுபடியும் வட்டிக்குப்போடவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

VIII. சங்கம் அச்சாபீசு Oil Engine-ல் ரிப்பேர்செய்யவேண்டிய பாகங்களை ரிப்பேர்செய்யும்படிக்கும் அதுசம்பந்தமாக ஏற்படக்கூடிய செலவைச் செய்யும்படிக்கும் தீர்மானிக்கலாயிற்று.

IX. சங்கம் அச்சாபீசுக்கு இன்னும் தேவையான எழுத்துக்கள்முதலியவற்றை ரூ 1000த்துக்கு மேற்படாத தொகைக்குள் ஆர்டர் செய்து தருவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

B. இராஜராஜேஸ்வரஸேதுபதி,
அக்கிராசனாதிபதி.
6—6—1921.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் 1921-வது மார்ச்சுமீ 5வயில் நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

பீ. ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

தொடர்க்கி தீர்.	ரிஜிஸ்டர் தீர்.	
1.	1.	S. சோமசுந்தரம், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி. (முதற்பரிசு ரூ. 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)
2.	3.	S. சோமசுந்தரம், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம். (இரண்டாவதுபரிசு ரூ. 45.)

எப். ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1.	25.	S. V. ஹனுமந்தராவ், கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர். (முதற்பரிசு ரூ. 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2-வது வகுப்பு.

1.	30.	P. S. குருசாமி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
2.	9.	I. P. ராஜாராம், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
3.	17.	S. ராமசாமி, ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.

மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1.	169.	J. S. பொன்னையா, C. M. S. High School, ஸ்ரீவில்லிபுத்தூர். முதற்பரிசு ரூ. 30 (வெள்ளிப்பதக்கமும் மீதரூபாவும்.)
2.	133.	A. செபஸ்தியான், ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர். (இரண்டாவது பரிசு ரூ. 25).
3.	274.	A. R. ராஜகோபாலன், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர். (மூன்றுவது பரிசு. ரூ. 20.)
4.	164.	P. சுப்பிரமணியன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். (நான்காவது பரிசு ரூ. 15.)

5. 211. R. கோபாலஸ்வாமி, நாஷனல் ஹைஸ்கூல், மன்னர்குடி. (ஐந்தாவது பரிசு ரூ. 12.)

6. 279. M. பச்சையப்பன், போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்.

2-வது வகுப்பு.

1. 137. T. M. சோமஸ்கந்தன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

2. 190. G. கலியாணம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

3. 61. P. ஜோதிமுத்து, அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.

4. 258. R. வெங்கிடசாமி, ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

5. 257. V. S. K. துரைசாமி, ஷை ஷை

6. 134. S. சிதம்பரம், ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

7. 140. S. G. கணபதி, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

8. 103. M. வேலாயுதம், C. M. காலேஜ், திருநெல்வேலி.

9. 293. M. S. சுந்தரேஸன், போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்.

10. 63. P. S. சேஷாத்திரி, ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

11. 58. V. M. நடேசன், அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.

12. 271. R. பத்மநாபன், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.

13. 68. S. சேதுராமன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

14. 167. B. நாராயணசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

15. 192. V. இராஜகோபாலன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

16. 262. K. சுந்தரேசன், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.

17. 280. P. T. ரங்காமாநுஜம், போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்.

18. 128. S. R. வெங்கடேசய்யர், கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.

19. 159. P. நடராஜன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

20. 290. P. S. சேஷாத்திரி, போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்.

21. 185. V. பாலசுப்பிரமணியன், பச்சையப்பன்காலேஜ், சென்னை.

22. 179. A. K. வேங்கடேசன், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

23. 135. D. உருமாண்டையப்பன், ஸெண்ட்மிக்கேல்ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

42. 200. T. R. சீனிவாஸன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னர்குடி.

25. 170. M. S. சுப்பிரமணியம், C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

26. 218. சு. இராஜகோபாலன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.

27. 287. M. ஜெயராமன், போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்.

28. 130. C. R. நாராயணசாமி, கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.

29. 180. T. S. கலியாண்சுந்தரன், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

30. 202. B. இராஜாராம் ராவ், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.

31. 292. D. ஜெயராமுலு, போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்

32. 101. S. ஆறுமுகம், C. M. காலேஜ், திருநெல்வேலி

33. 168. S. ராமஸ்வாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

34. 226. D. அற்புதசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், உடுமலைப்பேட்டை.

35. 67. N. ஸ்ரீனிவாஸன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

36. 181. K. சதானந்தம், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

37. 188. T. P. ராமசந்திரன், பச்சையப்பன் காலேஜ், சென்னை.

38. 199. N. இராமநாதன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.

39. 156. R. வெங்கடாசலம், ராமஸ்வாமிசெட்டியார் டவுன்ஹைஸ்கூல், சிதம்பரம்.

40. 260. D. எட்வர்ட்ராஜ் நல்லேயா, ஹிந்துநாடார் விக்டோரியஹைஸ்கூல், சிவகாசி.

41. 150. D. வெங்கட்ராமன், ராமஸாமிசெட்டியார் டவுன்ஹைஸ்கூல், சிதம்பரம்.

42. 99. K. சிதம்பரம், C. M. காலேஜ், திருநெல்வேலி.

43. 186. T. வாசுதேவன், பச்சையப்பன்காலேஜ், சென்னை.

44. 139. G. S. வேங்கடரமணன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

45. 39. P. S. கிருஷ்ணன், சேதுபதிஹைஸ்கூல், மதுரை.

46. 56. B. S. வெங்கடராமன், ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை.

47. 277. R. ஜெயராமன், போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்.

48. 126. A. R. கிரீடராமராஜு, போர்டு ஹைஸ்கூல், தர்மபுரி.

49. 165. B.N. நாராயணஸ்வாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

50. 53. B. இராமநாதன், ஸௌராஷ்டரா ஹைஸ்கூல், மதுரை.

51. 196. V. வெங்கட்ராமன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.

52. 242. R. நாகேஸ்வரன், டேனிஷ்மிஷன்ஹைஸ்கூல், திருவண்ணாமலை.
53. 38. சா. வேங்கடராமன், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.
54. 80. S. M. M. முகம்மது சாலிகு, S. P. G. ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
55. 197. M K. கலியாணராமன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
56. 221. பொ. பாலசுப்பிரமணியன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
57. 109. P. பவுஸ்தீன்பருலுந்து, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
58. 153. N. வைத்தியநாதன், ராமசாமிசெட்டியார் டவுன்ஹைஸ்கூல், சிதம்பரம்.
59. 116. A. சேசையா, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
60. 62. S. சிதம்பரம். அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
61. 136. V. அரங்கசாமி, ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
62. 281. S இராஜம் அய்யர், போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்.
63. 96. A. V. கிருஷ்ணசுவாமி, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
64. 117. G. ஜாக்கப் பர்னந்து, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
65. 212. T. S. ஸ்ரீனிவாஸன், பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.
66. 224. பீ. வீ. ராதாகிருஷ்ணன், முனிசிபல் ஹைஸ்கூல், உடுமலைப்பேட்டை.
67. 204. C. கார்த்திகேயன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
68. 275. K. மனத்துணைநாதன், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
69. 82. A. இராமலிங்கம், S. P. G. ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
70. 105. N. பிச்சாண்டி, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
71. 89. N. M. உசேன்கான், V. M. H. School, போடிநாயக்கனூர்.
72. 93. N. இராஜகோபாலன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
73. 131. M. தெய்வசிகாமணி, கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.
74. 191. V. இரத்தினம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
75. 182. P. சுப்பிரமணியம், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
76. 110. M. இஞ்ஞாசிகர்வால்ய, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

17—6—21

B. இராஜாஜ்வரவேதுபதி,
அக்கிராசனதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் ரௌத்திரிஷ பங்குனிமீ 22, 23, 24 (1921ஷ ஏப்ரல்மீ 4, 5, 6)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறி யோக்கியதாபத்திரம் பெறும் மாணக்கர்களின் விவரம்.

பண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர்ச்சி இர்.	ரிஜிஸ்டர் இர்.	
1.	8.	பாலாம்பிகை அம்மாள், c/o S. சிவபாதசுந்தரம் B.A., பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.
2.	6.	ரா. திம்மப்ப ஐயர், தமிழ்ப்போதகர், முனிசிபல்காலேஜ், சேலம்.
3.	1.	அரங்கராமாநுஜ பிள்ளை, ஸ்ரீகூடலழகர் ஸந்நிதிவீதி, இராமாநுஜ கூடம், மதுரை.

பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

1.	24.	N ரங்கஞதய்யர், மகாதானபுரம்கிராமம், கன்னிமாகுமரிபோஸ்டு, திருவிதாங்கூர்.
2.	10.	ஆ. பூவராகன், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.

பிரவேசபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.


1.	28.	சிவப்பிரகாசன், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.

B. இராஜராஜேஷ்வரவேதோபாத்தியாயர்,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்

17—6—21

சிறைவிடந்தாதி.

(உகசூ-ம் பக்கத்தோடர்ச்சி.)



வாழ்வாரும்பெருவறுமையுழப்பாரும்வறிதுழன்றுவாழ்வோர்ச்சென்று
தாழ்வாருமலதுதண்டைத்தாள்பரவிப்பிறப்பொழிப்பார்தம்மைக்காணேன்
சூழ்வார்தெண்டிரைப்பரவைச்சென்தூரானடிக்கமலங்தொழுதுமேன்மேல்
வீழ்வார்கற்பகநீழல்வீற்றிருப்பதுணரார்கொல்மெய்பெற்றுரே. (உஎ)

பெற்றரும்பெறவேண்டிப்பெருந்தவங்களரிதியற்றிப்பெறுவான்வேதங்
கற்றருணினதிருத்தாளலதுபெறக்கருத்திருத்திக்கருதாரந்தோ
வற்றாரிலறப்பேதையெளியனுனைவழுத்துவதொன்றறியேன்வாழி
வற்றாதபெருங்கருணைக்குருபரனேகருங்கலபமயிலினனே. (உஅ)

ஆனேறுங்கடவுடிருப்பெருமானும்பனிமலர்ந்தணனும்வேரிக்
கானேறும்பசுந்துளபக்கார்க்கடல்போற்பாற்கடற்கண்வளருந்தேவும்
வானேருமுறைபரவவாளவுணர்க்கடந்தமறைநெறியினின்றேய்
கோனேபன்னிருதடந்தோட்குமரகுருபரசேவற்கொடியினனே. (உசூ)

கொடியாரெனினுமாறெழுத்திற்குழையாரெனினுநினைவண்காமுடியாரெனினுங்கொலைபலவுமுடிப்பாரெனினுமுருகனெருவடிவேறுணையென்றொருபொழுதுவழுத்துவாரேலவர்தமக்கேயடியேன்முழுதுமவரடிக்கேயாட்பட்டிருப்பதளியேனே. (ரு0)

வேறு

அளிகிளைத்தெழுகடம்பணிதடம்புயத்தறுமுகப்பெருமானைக்
களிவிளைத்தலர்முளரியந்தண்டையங்கழலிணைபரவாரால்
விளிதழற்பொறிவிழிவழிசிதறிடவெருண்டெழுநமனுர்கைத்
துளியொழுக்கியசெம்புனற்றிரிதலைச்சுற்படைக்கிடப்பாரே. (ருக)

பாரும்வையமுமெண்டிசைப்பரவையுமன்பதைப்பரப்பெல்லா
மாரும்வாளெயிற்றவுணரேயாழனொருதனியழல்கான்று
சூரடங்கவுந்துணித்தவைவேற்படைநினைதரத்தொடர்ந்தோடி
யீரும்வல்வினைமுருகனென்றேத்துறிலெவ்வினைகழியாதே. (ருஉ)

கழிதரும்பிறப்பிருவினைவிதிவழிக்காண்பதக்கமலத்தோன்
பொழிதருந்துணரேந்திநின்றுண்மலர்போற்றுவதறியார்யார்
பிழிததும்பியகடம்பணிமுருககின்றிருப்பெயரொன்றேனு
மொழிவரும்படிதுதிப்பவர்க்கவ்வினையுமொடும்புகலாதே. (ருரு)

புகலருஞ்சதுமறைப்பொருளாற்கொருபிரணவப்பொருள்பேசிச்
சகமடங்கலுந்தருபொருள்பரகதியனைத்தினுந்தானுகி
யகநிறைந்தருள்பரம்பொருளொருபொருள்செந்திலம்பதிதோன்றிக்
குகனெனும்பெயர்கொண்டுநின்றதுகண்டுகொண்டுதொண்டுவந்தேனே. (கூச)

உவந்தசிந்தையுமுருகியநெஞ்சமுமொருதனித்துணைத்தாண்மீ
திவர்ந்தகண்களுமுருகனென்றேத்தலுமெய்தலும்பெறுவேலே
சிவந்தபுன்றலைச்சூர்ப்படைமடிபடுசெம்புலந்தொறும்வெம்பேய்
கவந்தமாடவேற்படைதொடுமறுமுகக்கடவுளெம்பெருமானே. (கூடு)

மானவேல்விழிச்சுந்தரிவனமுலைக்குங்குமமகவேந்தன்
கானவார்பொழிற்கற்பகவரசுவெங்களிற்றிருபுடைதூங்குந்
தானவாரிவானரம்பையர்மங்கலந்தழைக்குமோமுருகோனே
ஞானநாதனின்வேற்படையில்லெனிலின்னமுநலங்கூர்ந்தே. (கூகூ)

கூசெயிற்றிரும்பன்றியாய்நெடுநிலங்கொண்டகார்முகிலென்கோ
மூரிவானமும்வையமும்படைத்தருண்முளரிநான்முகனென்கோ
வோர்விலாப்பெருந்தனிமுதலாகியயோகிநாயகனென்கோ
போரயிற்படைக்குமானேநின்னேயான்யாரெனப்புகல்கேனே. (கூஎ)

யாரும்யாவையுமண்டமுமகண்டமுமிவைசுமந்திடைநின்ற
மேருமால்வரைமுதலிறந்தநித்தியவெறுவெளிவெறும்பாழா
யோர்வருந்தனிப்பிரணவத்துள்ளொளிபொருவனீயுனையொன்றுற்
றேறிநின்னிலையளப்பவரெவர்கொலோசெந்திலெம்பெருமானே. (கூஅ)

பெருகுகங்கையஞ்சடைமுடியவற்கொருபிரணவப்பொருள்பேசி
யொருவனின்னிலையுணர்த்தினையுனையலதுனையுணர்ந்தறிவார்யார்
சுருதிதான்முறைதொடர்ந்தறிபுராணமுமாகமத்தொன்னூலுங்
கருதியின்னமுங்காண்கிலவைங்கரக்கயமுகற்கிளையோனே. (கூக)

இளையமென்மருங்கிளமுலைக்குறமகட்கிறைவனீயெளியேற்கொன்
றளமிரங்கிலையிகழ்ந்தனையெனினுநானுனைமறந்தொழிவேனே
வீளைனம்பயின்றீன்றவரொறுப்பினுமென்சிறுதலைக்கான்
மூளைதவழ்ந்தவர்மடிபிடித்தேறுமான்முனியவும்பெறுவாரே. (சூ0)

வேறு

பெறலரும்பதம்பெற்றவர்பெறுகிலார்பெறுவதற்கருந்தவம்புரிவோ
ரிறுதரும்பொழுதியாவையுமிறந்துபோயொடுங்கியுமிடாதெனப்படுமே
யறுமுகப்பெருங்கடவுளேகுன்றுதோறமர்ந்தருளாதிமற்றிமையோ
ருறுபதங்களுமோமெனும்பிரணவத்துன்னெடுமொழிபொருளன்றே. (சூக)

அன்றுமின்றுமென்றளப்பருங்காலங்களைவகழிந்தப்பெரும்பதங்க
ளென்றுநின்றவையிறையொடுமிறப்பினுமிறப்பிலாயென்றுமீளாயாய்
நின்றுனைப்பதம்பரவினும்வழுத்தினுநினையினுந்தழல்விழிப்பகட்டுக்
குன்றுகைத்தெழுமறலிகைப்படுவரோகுருபரகுமரதேசிகனே. (சஉ)

தேசிகப்பெரும்பொருளெனநின்றனமறைமுதலெழுத்தெனச்சிறந்தா
யேசிலெட்டெழுத்தாயினையாதெழுத்தெனத்திரிந்தெங்கணுநிறைந்தாய்
பேசிலஞ்செழுத்தாகியெப்பொருடொறும்பிறந்தனைபிறப்பிறப்பொழிந்தாய்
பூசல்வண்டறைகடம்பணிமுருகநின்பொருண்மயமுணர்ந்தெவர்புகல்வார். (சங)

வார்கழற்றிருத்தண்டையந்தாமரைமலரடிப்பொடிபடுசிறுதூ
ளார்முடித்தவர்புரஞ்செறுத்தயர்ந்தவர்க்கணிதருபூதியிற்சிறந்த
தோரிடக்கொடிமரகதமுகிண்முலைச்சந்தனந்திமிர்ந்தெழிலொழுகக்
கூயிற்படைமுருகமற்றிமையவரின்னமுங்கிடைத்திலர்கொற்பார். (சச)

கொதிகொள்வேற்படைமுருகனையறுமுகக்குருபரகுமாதேசிகனே
விதிதனைப்படுத்தருமறைவிளக்கியவிமலனேவேதநூற்பொருளைப்
பொதியவிழ்த்தலர்பங்கயப்பொலன்கழல்பரவினர்போற்றினர்புகல்வா
ரதிருமார்கலிநெடுநிலத்தன்னையர்கருக்குழியழுக்குறுதவரே. (சடு)

தவமியற்றுவர்தருமமென்றியற்றுவர்தடவரைப்பொருசருகருந்திப்
பவர்கொடுஞ்சடைமுடிபொருத்தருநதிகுடைந்துபூவலஞ்சுழற்படுவா
ரிவரியற்றுவதென்கொலோமுருகனேக்குமரனேயீறுதடந்தோ
ளவனையேத்திலாயினந்தகன்புரத்தருநரகவர்க்கலாதிலையே. (சஙு)

இலதடஞ்சினேபொதுளியகற்பகத்தருவரசினையனவிரும்பேன்
மலர்வனப்பதம்வாய்விடுத்துரைக்கிலேன்மற்றுளபதவியிற்குறுகே
னலகினின்பதங்கருதிநின்றெருண்டரோடாடுவேனுதரித்தமர்வே
னிலவுகக்கியவேற்படைக்குமரநின்றிருவுளநிலைமையோர்ந்திலனுல். (சஎ)

ஓரின்றநெஞ்சருகிலேமுருகனென்றெருபொழுதேத்திலையொருக்கால்
வீரவேற்றிறம்பேசிலையாசுறமெய்விதிர்த்தழுதழுதிரங்கிச்
சூடங்கலுடந்தருகடந்தருதோகைகண்டேத்திலேமனனே
யீரமன்றிமற்றென்னெடும்பிறந்தனையென்செய்கேன்பானுனக்கினியே. (சஅ)

(தொடரும்)

சு. நல்லசிவன்பிள்ளை,
உதவியுபாத்தியாயர்,
தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககக.] தூர்மதி-ஹல ஆனி-மீ [பகுதி அ.
Vol. XIX. June—July—1921. No. 8.

சோதிடப்பொருத்தம்.

"சோதிடப்பொருத்தம்" என்ற தலைப்பின்கீழ்ப் பண்டித S. சுப்பிரமணியசர்ஸ்திரிகள் 'செந்தமிழில்' XVI-வது தொகுதி 309-வது பக்கம்முதல் 312-வது பக்கம்வரை, பரிபாடல் 11-வது பாடலிலுள்ள முதற் பதினான்குவரிகளை எடுத்துக்கொண்டு "இவ் விஷயத்திற் சோதிடத்திற் கரைகண்ட பண்டிதரவர்களுக்குச் சந்தேகம் சிறிதும் தோன்றுமையின், முற்காலத்துத் தமிழ் நூலாசிரியர்களுக்குச் சங்கீதத்திற்போன்று சோதிடத்திலும் ஒப்புயர்வில்லா வல்லமையிருந்ததென்றுமாத்திரம் அவர்கள் குறிப்பித்தனர். என்னைப் போன்ற சிலருக்கு ஆங்கு இரண்டொருசந்தேகங்கள் நிகழாகின்றன. சூரியனிருக்கும் இராசிக்கு முன்னே பின்னே இரண்டாவதாயுள்ள இராசிக்கப்பாற் புதன் செல்லுதலில்லை யென்பதாலும், மூன்றுவதாயுள்ள இராசிக்கப்பாற் சுக்கிரன் செல்லுதலில்லை யென்பதாலும் சோதிடநூல்கற்றுர்யாவருக்கும் வெளிப்படையாம். சூரியனுதயமாகும்போதும் அஸ்தமிக்கும்போதும் அதற்குச் சிறிதே விலகப்பெறும்புதனை நாம் ஏதோ சிலசமயங்களிற்றான் காணக்கூடும். ஆகவே அதனைச் சூரியனிருக்குமிராசிக்கு மூன்றுவதுஇராசியின்கட் கண்டது அசம்பவமேயாமெனத் தெரியவருகின்றது. சுக்கிரன் சூரியனிருக்குமிராசிக்கு நான்காவது இராசியிற் காணப்படவேண்டுமாயிற் சூரியனது உதயாஸ்தமயகாலங்களில் அதனை உச்சியிற்காணுதல் வேண்டப்படும். அஃதன்றியும் நடுப்பகலிலும் நடு இராத்திரி

யிலும் சுக்கிரனது உதயாஸ்தமயங்கள் காணப்படுதலும்வேண்டும் அக்காலங்களில் அவற்றிற்குச் சம்பவமின்மையும் வெளிப்படையே யாம். "ஐதரையெ-ஹவெந ஸரிய-ாசு ஜுவிதளஹவதி கயம்" என்று வராகமிஹிரர்கூறியதும் இதற்குச் சான்றாகும். ஆகவே நமது பண்டிதரவர்கள் காட்டியபடிக்குச் சிங்கத்திற் சூரியனிருக்குங் கால் இடபத்திற் சுக்கிரனும், மிதுனத்திற் புதனுங் காண்டற்கு நியாயம் புலப்பட்டிலது. இதுவுமன்றி, "பாம்புமதியமறையவொல்லை வருகாளென்றது அவ்வாவணிமாதத்து மதிநின்றநாளாகிய வவிட்டத்தை னவே மதியு மிராகுவு மகரத்துநிற்க" என்று உரையாசிரியர் கூறுமாறு மகரத்து நிறைமதியையும் இராகுவையும் வைத்திடின் அது சூரியனிருக்கும் சிங்கத்திற்கு ஏழாவதே இராசியாவதுகொண்டும், ஏழாவது இராசியாகவிருந்தாலன்றி அது நிறைமதியாதற்குச் சம்பவமின்மைகொண்டும், அவிட்டத்தின் பிற்பகுதியெனக் கொள்ளின் அவை கும்பத்திருத்தலே பொருந்துவதாமெனக்கொண்டும் பல சந்தேகங்கள் பிறக்கின்றன." என்றும், பண்டிதரவர்கள் பக்ஷபாதமின்றி உண்மையைப் போதிக்கவேண்டுமென்றும் எழுதியுள்ளார்கள்.

சாஸ்திரியாரவர்கட்குத் தோன்றிய சந்தேகங்களாவன :—

i. ஆதித்தன் சிங்கத்தினிற்க வெள்ளி இடபத்திலிரா தென்பது.

ii. ஆதித்தன் சிங்கத்திலிருக்கப் புதன் மிதுனத்திலிரா தென்பது.

iii. ஆதித்தன் சிங்கத்தினிற்க, மதியம் மகரத்தினின்றுல் பூரணமதியமாகாதென்பது;

iv. மதியம்நின்றநாள் அவிட்டத்தின் பிற்பகுதியெனக் கொண்டு கும்பத்திருத்தலே பொருத்தமுடைத்து என்பது.

இவ்வாசங்கைகட்கு இடந்தந்த பரிபாடற்பாட்டின் அடிகளைக் கீழே குறிக்கின்றேன்.

விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
வெரிசடை யெழில்வேழக் கலியெனக் கிழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றென்பதிற் றிருக்கையு
ளருகெழு வெள்ளிவந் தேற்றியல்சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி

புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடிய
லங்கி யுயர்நிற்ப வந்தணன் பங்குவி
னில்லத் துணைக்குப்பா லெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுன மடைய விரிகதிர் வேனி
லெதிர்வரவு மாரி யியைகென விவ்வாற்றுற்
புரைகெழு சையம் பொழிமழை தாழ
நெரிதரூஉம் வையைப் புனல்.

இதற்கு ஆசிரியர் பரிமேலழகர்கண்டவுரையாவது:—இடப வீதி, மிதுனவீதி, மேடவீதி யென வகுக்கப்பட்ட மூவகைவீதியுள் ளடங்கிய இருபத்தேழுநாள்களுள், வெள்ளி இடபத்தைச்சேரச் செவ்வாய் மேடத்தைச்சேரப் புதன் மிதுனத்தில் நிற்கக் கார்த்திகை உச்சமாக விடிதலுண்டாக, குரு மீனத்தில்நிற்க, இயமனைத் தமய னாகவுடைய சனி மகரத்தில்நிற்க, ராகு மதியமறையும்படி வரு நாளிலே, அகத்தியன் என்னுமீன் உயர்ந்த தன்னிடத்தைவிட்டு மிது னத்தைப்பொருந்த முறுகினவெயிலையுடைய முதுவேனிற்குப் பின் வரும் கார்காலத்து மழைபெய்கவென்ற இவ் விதிவழியால் உயர்ந்த சையமலைக்கண் மழைபெய்ய மிகுதியாகவருகின்ற வையைப்புனல் என்பதாம்.

இவற்றைக் கீழ்க்காட்டும் இராசிச்சக்கரத்துட் காண்க.

வியா ழன்	செவ் வாய்	வெள்ளி	புதன் அகத்தி யன்
			கேது
மதி சனி இராகு			ஆதித் தன்

இனி, இப்பாட்டினைப் பாடியவர் ஆசிரியர் நல்லந்துவனார்; இவர் கலித்தொகையில் நெய்தற்கலியை இயற்றியதோடு கலித்தொகையைத் தொகுத்தும் தந்தவர். இதுவரையிற் கிடைத்த பரிபாடற்பாக்களில் (6, 8, 11, 20) நான்குபாக்களைப் பாடியவர்; அகநானூற்றில் நாற் பத்துமூன்றுவது செய்யுளைப் பாடியவர்; நற்றிணையில் 88-ம் பாட லைப்பாடியவர். இவர் வானசாத்திரத்திலும் சோதிடசாத்திரத்திலும் வல்லுநர் என்பது கலித்தொகையில் நெய்தற்கலியிலே உதாரணங் கூறுமுகத்தானே பரிதியையும் சோமனையும் அந்திக்காலத்தையுமே எடுத்து வெகுஅழகாகக் கூறியிருப்பதனால் விளங்கும். அது வருமாறு:—

"இன்றுனை நீநீப்ப விரவினுட் டுணையாகித்
தன்றுணைப் பிரிந்தயாஅந் தனிச்குரு குசவுமே
யொண்சுடர் ஞாயிற்று விளக்கத்தா னெளிசாம்பு
நண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணியாட்கு" (கலி-சை) என்றும்,

(இ-ள். இனியதுணையாகிய நீ கைவிட்டு உன்மனையிடத்தே இருக் கையினாலே ஒள்ளிய சுடரையுடைய ஞாயிற்றினது மிக்க ஒளியாலே தன்ஒளி கெடுகின்ற உச்சிக்காலத்து மதிபோலே நன்மைகெட்ட முகத் தினையுடையாட்கு இராக்காலத்திடத்தே தன்சேவலைப்பிரிந்து வருந் தும் தனிக்குருகு கான்துணையாகி உசவாநிற்கும் எ-று.)

"திங்க ளரவுழிற் றீர்க்கல்லா ராயினுந்
தங்காதல் காட்டுவார் சான்றவ ரின்சாய
லொண்டொடி நோய்நோக்கிற் பட்டவென் னெஞ்சநோய்
கண்டுங்கண் ணோடாதிவ் வூர்;" என்றும்,

(இ-ள். சான்றோர் திங்களைப் பாம்புசென்று மறைக்குங்கால் அதனை வருத்தத்தைத் தீர்க்கமாட்டாராயினும் அதன்மேற் றமக் குள்ளகாதலைக்காட்டித் தின்புறுவர்; அதுபோல இனிய மென்மை யினையுடைய ஒண்டொடியது நோய்செய்யும் நோக்கிலே அகப்பட்ட என்னுடைய நெஞ்சிடத்துக் காமநோயைக் கண்ணுற்கண்டுவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்க்கமாட்டாராயினும், கண்ணோட்ட மாயினும் செய்தலிலர் எ-று)

அகம் 43-ல் "நாழிகைவட்டிலாற் பொழுதறிவதல்லது ஞாயிற்றை, யறியப்படாத மழைக்காலம்" என்றும்

செய்யுள் இயற்றினுரென்றல் இவரது சோதிடவல்லமை கூறுதற் கியலாததொன்றும்; அன்றியும், மேலேகாட்டிய பரிபாடலில் அகத்திய ரென்னும் ஒரு கிரகத்தைப்பற்றி, அது தன்னுடைய நிலையைவிட்டு மிதுனத்தையடைந்ததென அழுத்தமாகக் கூறியுள்ளார். இதனைச் சாஸ்திரிகள் கவனித்திலர். அக்காலத்து இதற்கும் மற்றைக்கிரகங் களைப்போலப் பல னிருந்திருக்கவேண்டுமென்றுயிற்று. வராகமிகி ரர்காலத்து இதற்குப் பலன்கூறுமாறில்லை என்று பிருகத்ஜாதகத்தால் விளங்குகிறது. இவர்க்கு முற்பட்ட சூரியசித்தாந்தத்தில் எட்டா வது அத்தியாயத்தில் கிரகசூத்திர சமாகமத்திலே அகஸ்தியர் என் னும் கிரகம் மிதுனத்தின்கடையில் 80-வது பாகத்திலிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. அதற்குப் பண்டித பாபுதேவசாஸ்திரிகள் எழு திய வியாக்கியானத்தில் அதனுடைய அகூதாம்சம் 90 பாகையென் றும், ரேகாம்சம் 80 பாகை தெற்கிலென்றும் கூறுவர். நம்புலவரோ "பொதியின்முனிவன் புரைவரைக்கீறி மிதுனமடைய" வென்பர். இதற் குரைகண்ட ஆசிரியர் பரிமேலழகர் "அகத்தியனென்னுமீன் உயர்ந்த தன்னிடத்தைக்கடந்து மிதுனத்தைப்பொருந்த" என்பர். இதனால் கடகத்தினின்றும் இது மிதுனத்தை அக்காலத்திலடைந் தது என்று புலப்படுகிறது. சூரியசித்தாந்தமுடையார் இது தன் காலத்தே இன்னும் 20 பாகை தள்ளிக்காணப்படுமென்றல் இப் பாவின் பழமையும் தொன்மையுஞ் சொல்லவும்வேண்டுமோ? அன்றி இதற்குள்ள பலன் பிருகத்ஜாதகம்போன்றநூல்களிற் காணப்பட வில்லையாயின் அது யாருடையகுற்றமோ? தமிழ்நூல்களிலிருந்து சொல்லக்கூடாதா? என்று பண்டித சாஸ்திரிகள் கேட்பார்களாயின், போலிவித்வான்களாக அநேகர்தோன்றித் தமிழின்பெருமையைக் கெடித்தார் என்று துணிந்துகூறுவேம். அன்றியும்,

"ஏரணமுருவம்யோகமிசைகணக்கிரதஞ்சாலந்
காரணமறமேசந்தந்தம்பரீர்நிலமுலோகம்
மாரணம்பொருளென்றின்னமானநூல்யாவும்வாரி
வாரணங்கொண்டதந்தோவழிவழிப்பெயருமாள"

என்பேம். இன்னும், பண்டித சாஸ்திரிகட்குத்தெரிந்த தஞ்சை ஸரஸ்வதிமஹால் என்னும் புத்தகநிலயத்துச் சின்னூண்முன்னர்வரை தமிழ்நூல்கள் என்னநிலையிலிருந்தனவென்பதை அவர்களே அறிவார்களாதையால், தமிழ்நூல்கள் போற்றுவாரும் காப்பாருமின்றியிறந்தனவென்று துணிந்துகூறுவேம்.

இனி, பண்டித சாஸ்திரிகளது ஆசங்கைக்குவிடைபகரச் சூரியசித்தாந்தம் ஸ்புட்கதி அத்யாயத்தில் "ஒருஜிரகமானது சீக்ரோச்சத்தினின்று 3 இராசிகள் விலகிப்போகுமானால் அக்காலத்தில் அது வலது அல்லது இடதுபக்கம் சாயும்" என்று காணப்படுகிறது. அன்றியும் வெள்ளி தனது வீடான ரிஷபத்தின் கடைசிப்பாகையான 60-ல் நிற்கச் சூரியன் சிம்மத்திற் பிரவேசித்திருப்பானானால் அது மூன்று இராசியே தள்ளிநின்றதாகும்.

திருவிளையாடற்புராணம் இந்திரன்முடிமேல் வஜ்ரமெறிந்த படலத்திலே,

காய்சினவெய்யோன்சேயோன்முன்செலக்கதிர்கால்வெள்ளித்
தேசிகன்பின்புசென்றுநடக்குமிச்செயலான்முந்நீர்த்
தூசினவுலகிற்பன்னீராண்டுவான்சுருங்குமென்று
பேசினநூல்கண்மாரிபெய்விப்போர்ச்சென்றுகேண்மின்.

என்று காணப்படுவதுகொண்டும் வெள்ளி ஆதித்தன்பின்னர் வெகுதூரம்செல்லலும் இயல்பாம். அசம்பாவிதமன்று. இதனால் முதலிரண்டு ஆசங்கைகள் நிவர்த்தியாகின்றன.

இனி மூன்றுவது வினவைப்பற்றி இரண்டுவிதசமாதானம் கூறலாம். ஒன்று, ராசிஒன்றுக்கு இரண்டரைத்திதியாக 6 ராசிக்குப் பதினைந்து திதியாகிறது. சூரியசித்தாந்தப்படியும் சந்திரன் பூரணமதியத்தில் 6 ராசியிலிருக்கும். இரண்டாவது,

கோணிலைதிரிந்துநாழிகுறைபடப்பகல்கண்மிஞ்சி
நீணிலமாரியின்றிவிளைவஞ்சிப்பசியுடீடிப்
பூண்முலைமகளிர்பொற்பிற்கற்பழிந்தறங்கண்மாறி
யாணையிவ்வுலகுகேடாமரசுகோல்கோடினென்றும்.

என்று சீவகசிந்தாமணியிற் காணப்படுகிறது. இதனையொட்டியே பகல்கண்மிஞ்ச இரவுகுறைந்து அதனினே நாழிகைகுறைவுபடத் திதிகளும் குறைந்த 6 இராசிக்குள், பூரணமதியமுண்டாயிருக்கலாம். இவ்வாறு 6 ராசிக்குள் பூரணமதியமுண்டாவதியற்கையென்பது சென்ற ஆநந்தவருஷத்திலே வைகாசிமாசம் அமாவாசை கார்த்திகையில்வந்திருக்கப் பூர்ணமதியம் கேட்டையில்வந்துளது. கார்த்திகைமாதத்தில், சூரியன் விருச்சிகத்தில்நிற்க, மதியம் கார்த்திகையோடுசேர்ந்து பூரணமதியமாகுமாயின் ஆறு ராசிக்குள்வந்ததன்றே! இதகொண்டு சூரியனுக்கு ஆறுவது ராசியில் பூரணமதியமுண்டாவது இயற்கையென்பது வெளிப்படையாம்.

மேலேகூறியவற்றுற் பழந் தமிழ்ச்சரிதத்தை உற்றுநோக்குவோமாயின் அவை உண்மையென்பதும், நம்முன்னோர்களிடை நாம் அறிவிற் சிறியரென்பதும், ஒன்றையும் நன்காராயாது குறைகூறுதல் சிறிதும் பொருந்தாவுரையாகுமென்பதும் போதரும்.

இனி இதசம்பந்தமாக ஒரு விண்ணப்பம் செய்கிறேன்; அஃதியாதெனில் அகத்தியன் என்ற கிரகத்தில் தற்காலநிலையும், அதன் தினகதியும் இவ்வளவென ஆங்கிலபாஷாவிற்பன்னர்கள் தாமாகவோ அல்லது வானசாஸ்திர ஆராய்ச்சிச்சாலைகட்கு எழுதியோ தெரிந்து இச்செந்தமிழ்வாயிலாக வெளியிடுவார்களாயின் அது ஆசிரியர் நல்லந்துவனுர்காலமும் அவராற் பாடப்பட்ட இப்பரிபாடல் கலித்தொகைகளின் காலங்களும் வச்சிரலேபமாகநாட்டப் பெருஞ்சாதனமாகும்.

இங்ஙனம்,

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

அரிச்சந்திரசரிதையில் ஒருதிருத்தம்.

இன்று கிடைத்த சித்திரைமாதத்துக்குரிய சேந்தமிழ்ப் பகுதியில், "சேய்மையண்மையில்" என்ற அரிச்சந்திரபுராணச்செய்யுளாராய்ச்சி ஸ்ரீமான் டி. என். அப்பணையங்காரவர்கள் நடத்தி யெழுதியிருப்பதின் கண், நூலின் அச்சுப்பிரதிகளிலும் சர்வகலாசங்கத்தார்பதிப்பித்த புத்தகங்களிலும் அச்செய்யுளின் 2-ம் அடியில் "மற்றிலம்புயத்தை" என்றச்சிட்டிருப்பது சற்று மொவ்வாதென்று நன்குவிளக்கிச் சுத்தபாடம் "மற்றிலீபுறத்தை" என்றிருக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். அன்றியும், அச்செய்யுளின் ஈற்றுமொழியை "நோன்பெனக்கருதி" என்று பிழைபடப்படித்துப் பொருள்கூறுவாருமுளரென்றும், "நோன் பெமக்கறிதி" என்றே படிக்கவேண்டுமென்றும் வரைந்துள்ளார்.

நான் எழுதியதும் 'விவேகசிந்தாமணிப்பிரசுரங்க'ளிலொன்றாக 1896-ம் வருஷம் வெளிவந்ததுமான "சத்தியதேவதைகதை"யில் வாய்மையின்சிறப்புக்கூறுந்தருணமொன்றில், இச்செய்யுளை யெடுத்தோதியவிடத்து, இப்பொழுது ஐயங்காரவர்கள் சுத்தபாடமென்று வாதித்து நாட்டிய பாடங்களையே யானுங் கைக்கொண்டு, செய்யுளின் 2-ம் அடியினிறுதியில் "மற்றிலீபுறத்தைத்" என்றும், 4-ம் அடியினிறுதியில் "நோன்பெமக்கறிதி" என்று மெழுதியிருக்கின்றேன். (சத்தியதேவதைகதை 14-ம் பக்கம்).

1908-ம் வருஷம் திருப்போரூர்வித்வான். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் மூன்னிருந்த வழுக்களைக் களைந்து வித்தியாதானகர அச்சுக்கூடத்திற் பதிப்பித்த பிரதியிலும், 'மற்றிலீபுறத்தை' என்றும், "நோன் பெமக்கறிதி" என்றும் அச்சிட்டிருக்கிறார்கள். ஆனால், அவ்வச்சுப்பிரதியிலடங்கிய திரிசிரபுரம் மகாவித்வான் ஸ்ரீ கோவிந்தபிள்ளையவர்கள் வகுத்த பொழிப்புரையில், இரண்டாமடியில் "அம்புயத்தை" என்றபாடத்தைத் தழுவியும், நான்காமடியில் நோன்பெனக்கருதி என்றே மூலத்தைப்படித்துப்பூலையனும்விரும்பாத என்றசெய்யுளுடன் ஒருதொடராக்கியும் பொருளுரைக்கப்பட்டிருக்கிறது. (P. 303) மூலத்திற்கும் உரைக்கும் முள்ள வேற்றுமை அவ்வச்சுப்பிரதி பதிப்பித்தோர்க்குவெளிப்படாது நின்றது வியப்பே!

திருவனந்தபுரம்
June 11th, 1921.

கே. ஜி. சேஷையர்.

ஸ்ரீ

பாண்டிமண்டலசதகம்.

[இது, தொண்டைமண்டலசதகம், சோழமண்டலசதகம், கொங்கு மண்டலசதகம் என்னும் சதகங்கள்போல நூறு கட்டளைக்கலித்துறைச் செய்யுட்களாற் பாண்டிமண்டலத்தின்வைபவத்தைக் காட்டக்கருதிப் பாடப்பட்டதொரு பிரபந்தமாகக் காணப்படுகிறது. இதன் ஏட்டுப்பிரதி யொன்று சங்கத்திலுள்ளது. இதனைப் பாடியவரது ஊர் பெயர் காலம் முதலிய விருத்தாந்தங்களொன்றும் விளங்கவில்லை. இதில் விஷயங்கள் முறைபெறக் கோக்கப்படவில்லை. இடையிடையே சிலபாடல்களிற் சொற்கள் பிழைபடப் பிரயோகிக்கப்பட்டுள்ளன. சிற்சில அடிகளில் எழுத்துக்கள் கூடவும் குறையவும் தனியோசைசிதையவும் எழுதப்பட்டிருக்கிறது. சிலபாடல்களிற் சில அடிகளும் தொடர்களும் சிதைந்து குறைந்துள்ளன. ஆயினும், தமிழ்மண்டலத்திற்சிறந்த நம் பாண்டிமண்டலவைபவத்தைப் பாராட்டுதலால் இதிலுள்ள விஷயங்களி லொருசில ஆராய்ச்சிக் குபயோகமாகுமென்றெண்ணி இதிலிருந்து தெளிவான பாடல்களே ஏட்டிலுள்ளபடி இங்கு வெளியிடப்படுகின்றன. சுத்தப் பிரதிகிடைத்தால் முற்றும் வெளியிடலாகும்.]

காப்பு.

திங்கண்மும்மாரிபெய்யத்தென்னவன்செங்கோலோங்க
மங்களம்பொலியும்பாண்டிமண்டலசதகம்வாழ்க
சங்கமாமதுரைமூதூர்ச்சங்கரர்சடையின்மீதிற்
கங்கையார்பெற்றசித்திக்கணபதிகாப்புத்தானே. (க)

தண்டமிழ்வழங்கத்தென்னன்றனிச்செங்கோல்தழைக்கப்பாண்டி
மண்டலசதகமென்னும்வடிதமிழ்வளர்ந்துவாழ்க
அண்டர்கள்முனிவோர்மாந்தர்க்கருள்செய்யவமிர்தருபங்
கொண்டவர்ப்பணிகொண்டாளுங்குமரனேவணக்கஞ்செய்வாம். (உ)

(அவையடக்கம்.)

ஆண்டவர்தங்கசங்கத்தமர்ந்தவர்க்கடங்காக்கீர்த்திப்
பாண்டிமண்டலத்தைத்தானேபாடுவேன்பாவைபங்கர்
தாண்டவமாடுவார்முன்பேயாடித்தடுப்பதேபோல்
பூண்டபோரவின்முன்னம்பூகமாடல்போலும். (கூ)

[நூல்.]

பூமாதுபொன்னன்புயத்தினின்மேவிப்பொலிந்திருக்க
நாமாதுசங்கப்பலகையிலேறிநலம்பெருக்கக்
கோமான்மலயத்துவசமன்பெற்றகுமாரியெனு
மாமாதுநீதியரசாளும்பாண்டியன்மண்டலமே. (க)

விகடம்புரிதிக்குப்பாலரைவென்றுவிசயமண்ட
முகடொன்றுமும்முலைப்பெண்மாமணஞ்செய்துமூரியன்தோ
பகடும்புரவியுமூர்ந்தசௌந்தரபாண்டியனுய்
மகுடம்புனைசொக்கர்செங்கோல்செப்பாண்டியன்மண்டலமே. (உ)

பழுதும்பொன்மேருவிற்செண்டுங்கயலும்பதித்துவைய
முழுதுந்தன்கொற்றக்குடையால்நிழற்றிமுறைபுரிந்தே
யுழுதுஞ்செந்தேனுண்டுவண்டாடும்வேம்பணியுக்கிரப்பேர்
வழுதியென்றுமுருகன்காக்கும்பாண்டியன்மண்டலமே. (கூ)

தென்றிசைமேலும்வடதிசைதாழவுந்தேவிமண
மன்றுசெய்கின்றவானரசத்தியரேபொதிகைக்
குன்றினிலேகுமெனவுந்தமிழ்ப்பொதிக்கூடல்வெள்ளி
மன்றினில்வந்துசமானஞ்செய்பாண்டியன்மண்டலமே. (ச)

தண்டமிழ்கொண்டுசிவத்தலம்விட்ணுத்தலம்விளக்கி
யெண்டருமுற்சங்கமேறியிலக்கணலக்கியஞ்செய்து
குண்டகைநீர்கொண்டுகாவேரிதந்துகொழுந்தமிழின்
மண்டலங்கண்டகுறுமுனிபாண்டியன்மண்டலமே. (ஞ)

ஒருகவிக்கோரொருதேங்காய்பொன்றைச்செய்துருட்டிக்கல்வி
பெருகச்செய்நாவலர்வாழக்கொடித்துப்பிரதாபம்பெற்றான்
திருமலிதஞ்சையிற்கோவைத்தமிழ்கொண்டுசெல்வுறுக
வருதருவாகியவாணனும்பாண்டியன்மண்டலமே. (ஈ)

எரொக்குஞ்செஞ்சொலகப்பொருணூலுக்கிலக்கியமாய்
நேரொக்கவாழுமிரட்டையர்பாடிநிறுத்தவவர்
பூரிக்கத்தஞ்சைகற்கோவைகொண்டேமெச்சிப்பொக்ஷநிதி
வாரிக்கொளச்சொன்னவானைலும்பாண்டியன்மண்டலமே. (எ)

தெரிபுலவோர்தம்மதுரைமட்டாய்ச்செல்லச்சென்றபொதி
யெருதினிலேற்றிப்பொதித்தலஞ்சென்றதற்கேயஞ்சலாய்ப்
பெருமூசார்த்திடக்கப்பல்நற்கோவைப்பிரபந்தங்கொண்ட
வருகருமாணிக்கவ்வாழ்வானபாண்டியன்மண்டலமே. (ஏ)

மூவேந்தரிற்றன்னுடனிருந்தானெனமுன்முகிலைத்
தேவேந்திரன்முனிருவர்க்குநல்கிடத்தென்னனெனும்
பூவேந்தன்மேகம்விலங்கிடும்போதுபுயற்குப்பிணை
மாவேந்தன்முன்சொன்னவேளாளர்பாண்டியன்மண்டலமே. (ஙஙு)

ஈட்டுங்கொடியவரசர்கள்போர்செய்திடினுநதி
மேட்டிற்புகுந்துவந்தூர்புகுந்தாலுமிகவுயர்ந்த
கோட்டையைவிட்டுவெளியேவராரென்றுகூறுகின்ற
வாட்டமில்லாதுறைவேளாளர்பாண்டியன்மண்டலமே. (ஙரு)

பொருந்தியசீவிலிபுத்தூரின்மேவியபுண்டரிகத்
திருந்தருளேசெய்திடுநாச்சியாரம்மனென்பவளைத்
தரும்பெரும்பொன்மதிசீர்கருணைப்பெயர்தாங்குகின்ற
வரும்பெருமேன்மைகொள்வேளாளர்பாண்டியன்மண்டலமே. (ஙசு)

வீசியதென்றமிழோடுலாவும்வியன்மதுரை
யீசன்செங்கோல்செய்மகாசீர்த்திப்பாண்டியனின்பமுறத்
தேசியும்யானையுந்தேருங்கொடுத்துத்திருமுடிமேல்
வாசிகையும்புனைவேளாளர்பாண்டியன்மண்டலமே. (ஙஎ)

நந்தேனும்வீவிப்பெருந்துறையெல்லைநமக்கெனச்சொ
லிந்தேனுஞ்செஞ்சடையெம்மானுடனெதிரேற்றுக்கொண்டு
சென்தேனெழுகும்பொழின்மதுராபுரித்தென்னவன்முன்
வந்தேவளஞ்சொலும்வேளாளர்பாண்டியன்மண்டலமே. (ஙஅ)

அம்புரப்பார்முழுதுமுழுதேபயிராக்கிமுதிர்ந்
தின்புறத்தான்விளைகெல்லொடுதானியமீட்டியதைத்
தென்புலத்தோர்தெய்வமொக்கல்விருந்தொடுதென்னவனு
மன்பெறத்தந்தருள்வேளாளர்பாண்டியன்மண்டலமே. (உ0)

செந்நெல்முதிர்ந்ததுபொன்னுய்விளைந்திடச்சிந்தைமகிழ்ந்
தன்நெல்செலவிடல்போலேபுலவர்க்குமாதுலர்க்குந்
துன்னியகூவிக்கும்வேண்டியபோக்குநற்சுந்தரற்கும்
மன்னற்குநல்கியவேளாளர்பாண்டியன்மண்டலமே. (உஉ)

உழுதுண்டுவாழ்பவரேவாழ்பவர்மற்றுலகினுள்ளோர்
தொழுதுண்டுபின்செல்பவரென்றுவள்ளுவர்சொன்னவரும்
பழுதன்றியேகம்பனரேரெழுபதுபாடியதும்
வழுவொன்றிலாதவர்வேளாளர்பாண்டியன்மண்டலமே (உச)

உத்தமனுமவ்வழுதியைச்சோழனுயிர்கவர்ந்தே
யித்தலங்காக்குமவனிறந்தேவிடவிந்துகுலப்
புத்திரனுண்டிடவேளாளர்பொன்முடிநன்முடியை
வைத்தரசாட்சிகொடுத்ததும்பாண்டியன்மண்டலமே. (உடு)

நனைப்புகழ்கின்றவெண்பாவைப்பாடிநன்னட்கவிதை
களகத்தில்மிக்கபுகழேந்தியாங்கவிராசன்றன்னைத்
தளவப்பெருநகைமாதைதொடுதென்னவன்றன்மணஞ்செய்
வளவற்குச்சீதனமீந்ததும்பாண்டியன்மண்டலமே. (உசு)

பொல்லாச்சமணரிடுந்துன்பநீறிட்டுப்போக்கிக்கடல்
கல்லாற்கடந்துபடிக்காசுவாங்கிக்கபாடந்திறந்
தெல்லாரும்பேறுபெறத்திருத்தாண்டவமேத்துமைபர்
வல்லாளராகியவேளாளர்பாண்டியன்மண்டலமே. (நச)

தேனலர்கொன்றையணிசிவன்கோயிலச்செம்பொன்னிறுல்
தூணமலமாகும்பிரகாரங்கோபுரந்தூபிமுத
லானபிலாதபுரிவாயிலாரென்னுமுள்ளத்திலே
மானதபூசைசெய்வேளாளர்பாண்டியன்மண்டலமே. (சo)

தெள்ளியசங்கப்புலவோரும்வாணியுஞ்செஞ்சடைமே
லொள்ளியகங்கைதரித்தோருங்கூடியொரோர்கவிதை
வெள்ளியசெஞ்சொற்குறட்பாவைக்கேட்டுவியந்துகொண்ட
வள்ளுவர்மாலைபகர்ந்தாரும்பாண்டியன்மண்டலமே. (சகூ)

மடலிற்றபுட்பமணிநாச்சியாரம்மன்மாமணஞ்செய்
திடமிக்கவாசையுடனேபுதுவையிற்சென்றுமென்று
அடல்பெற்றவேங்கடத்தாருமன்னுருமழகருந்தென்
வடபத்திரசாயியுந்தானுனபாண்டியன்மண்டலமே. (நிஉ)

பாலினும்வெண்ணெயினுந்தயிர்மீதினும்பசுஞ்சுவைத்த
வேலினுங்கூரியகண்ணுளசோதைதன்வீட்டிடத்து
மாலினுமவேலையினுந்துயில்சங்கத்தழகரெனு
மாலிருஞ்சோலைமலையானும்பாண்டியன்மண்டலமே. (நிங)

திருவாய்மொழிதிருமேனியரானதுஞ்செந்தமிழால்
ஒருநான்மறையெனவோதியபாடல்கொண்டோங்குபதி
யிருகாலுபத்துமுடைத்தாகியெண்டிசையேற்றப்பெற்று
வருமால்திருப்பதியுள்ளதும்பாண்டியன்மண்டலமே. (நிஅ)

தெவிக்குமன்னவன்காப்பானென்றேகித்திரும்பிவந்து
மேவிக்கலந்தவிரவினிற்சோதிக்கவேந்தன்கிட்டிப்
பூவிற்பொலிகைவைத்தேகிடப்பூசுரன்போந்துதர
மாவிற்கைபொற்கைதருமாறன்பாண்டியன்மண்டலமே. (சுஉ)

புரிசைப்புறத்தினிற்சேரனுஞ்சோழனும்போர்புரிய
விரியச்சயங்கொண்டபோதினில்யாமினிரிங்கிவணைப்
பரிசுக்குகல்லகவிபாடினல்வரும்பாக்கியமென்றே
வரிசைத்தமிழ்புனைபாரியும்பாண்டியன்மண்டலமே. (சுங)

அதித்தியரேவிடவாட்சேபஞ்செய்ததங்கோட்டுமுனி
மிகக்களிசூழ்புலவோர்கள்வாழ்த்தவியன்மதுரைச்
செகத்தரசென்பவன்முன்னேதொல்காப்பியச்செந்தமிழை
மகத்துவமாயரங்கேற்றியபாண்டியன்மண்டலமே. (சுச)

மீனவன்வேதியர்பங்கைத்தடிக்கவிரைந்தனுமான்
முனுளைநொந்துமனுவிரந்தானென்றுந்தண்டமிழைக்
கோனுளமெச்சக்கொடுத்துந்தம்பங்கினைக்கொண்டுமகிழ்
வானரவீரன்மதுரையும்பாண்டியன்மண்டலமே. (எஉ)

தேனேறுமின்சொலிராமாயணத்திற்றிருவழுந்தூர்
ஆனேறனையதமிழ்க்கம்பநாடனமைத்துவைத்த
தானேரில்கீர்த்திசெய்வெண்ணெய்நல்லூரிற்சடையனெனும்
வானேறுசீர்த்திகொள்வேளாளர்பாண்டியன்மண்டலமே. (எசு)

திருந்தியசீவிலிபுத்தூரில்ஞானத்திருவுருவாய்ப்
பொருந்துசொக்கேசரதிகாரமாய்வைத்துப்பூசைசெய்து
அருந்தவராகித்தருமபுரத்திலருள்புரிய
வருந்திருஞானசம்பந்தரும்பாண்டியன்மண்டலமே. (எஎ)

தென்னுடுமுத்துடைத்தென்றமிதுவன்றிச்சேணுட
நன்னுடுகல்லென்றும்வல்லிரும்பாருமுன்னுடென்றுந்தான்
சொன்னவலர்புகழ்சோழன்முன்னேநின்றுசொல்லவுயர்
மன்னுளுநாடதுவன்றேதென்பாண்டியன்மண்டலமே. (அ0)

இடைக்காடர்முன்செலப்பின்செலுமீசனிருப்பதுபோத்
தடைக்கானகாட்டிமுட்டையென்றேபெறசாற்றிசெஞ்சொல்
தொடைக்கானபாடல்சொல்பொய்யாமொழிதொடுத்தேத்துமடி
மடக்கானபாடல்கொள்செவ்வேளும்பாண்டியன்மண்டலமே. (அக)

தூரியோதனன்கன்னனச்சுவத்தாமன்றுரோணனெடு
பொருபாண்டவர்க்குச்செயமெனும்பாரதப்போர்முடித்துத்
திருமேவுபாகவதம்புரிலீலையுஞ்செய்மதுரை
வருமாலெதுகுலக்கிட்டினனும்பாண்டியன்மண்டலமே. (அஅ)

பத்திராதிபர்.

சிறைவிடந்தாதி.

[உசஅ-ம் பக்கத்தொடர்ச்சி]

ஏறுவான்மருப்பகினப்பகட்டினுக்கெரியெனநோக்கியகோக்கிற்
கூறுசெம்புனன்முத்தலைச்சுற்படைக்குனக்கெனும்வெருவலுமுளதோ
வாறிரண்டுதோளுமுகனுந்தலத்தமர்ந்தவனடியர்க்காளானேன்
சீறினின்றனையென்றனையென்செய்வாயந்தகாதிருப்புகநெறியே. (சகூ)

நெறியிலன்றருநெறிதருநிதியிலனின்னிலநிலைமைதேர்ந்துணருங்
குறியிலன்குறிக்கொண்டொருவழிபடுகுறிப்பிலனிரங்குநாளுளதோ
செறிமுகிற்குலந்தடவரைநிவந்தெழுசிகரமால்வரைபிளந்துருவிப்
பறியவேற்படைதொடுத்தருண்முருகனேதனிமுதற்பரமதேசிகனே. (ரo)

வேறு

பரமாகியநின்பதபங்கயநின்
றிரவாதுகழிந்தனனித்தனைநா
ளாவாபரணன்றருமாமுகக்
கரமாறிருதோடருகான்மூனையே. (ரக)

காலுறுகடம்பணிநின்கருணைத்
தேனுறுகுடைந்திடர்தீர்குவனே
வானுடருமற்றையவேனையருந்
தானுகிரம்பியசண்முகனே. (ரஉ)

முகமாறுமுகப்படுமாறுணரா
தகமாறுமசட்டுமுசுண்டருடன்
புகுமாறுதவிர்த்தருள்போதுமனித்
தொகுமாறிருவேற்படுதோளினனே. (ரங)

தோளாமணியேசுடரிற்சுடரே
வாள்ளாமறையேமறைமெய்த்தவமே
யாளாயெனிலாருளரஞ்சலெனத்
தாளாமலர்தந்தருள்சண்முகனே. (ரச)

தந்தாயர்தனித்துயர்போயொழியச்
சிந்தாயெனிலாருளர்தீவினையேற்
கெந்தாயமரேசனிருந்தவமே
கந்தாமுருகாகருணாகரனே. (ரஎ)

கருமங்கருமஞ்செயல்காரணமெய்த்
தருமந்தருமப்பயனுயினையே
யிருகுன்றினிளங்குறமங்கைதனம்
பொருகுங்குமதிண்புயபூதரனே. (நிசு)

பூதங்களுமண்டமுமெப்பொருளும்
வேதங்களுமேலுறுசிற்பரமும்
நீதந்தனவன்றியுநிற்பனவோ
மாதங்கமுகற்கிளவாரணமே. (நிஎ)

இளையாவிடரோடுமிருந்தவெனக்
குளையாவிடரோடவுணர்ந்திலையே
தளைவார்குழலம்பிகைதந்தருள்கான்
முளையேயருணாறுமுகக்களிறே. (நிஅ)

ஆருவிடர்கூறியறைந்தசெவிக்
கேருதுகொலெந்தைபிரானிளையாய்
மாருநெடுவையகமன்பதையுட்
சீருதுறைந்தசிகம்பரனே. (நிக)

பரமீதுபராபரமீதுபாப்
பிரமாதியர்பேசுவதீதெனநின்
றிரவாமுருகாவெனநெஞ்சுருகார்
சுரரேனுநமன்கைதுடக்குறுவார். (ஈ0)

வேறு

வாரேறுமிருகொங்கைமலைமங்கைகடனின்றுவருவெங்கடுக்
காரேறுகளகண்டனிவரென்றுமளவின்றுகளிமூழ்குவார்
போரேறுசினவாளெயிற்றுக்கருஞ்சூர்புரம்பாழ்படத்
தாரேறும்வடிவேல்விடுக்குந்தன்மகவென்றுதருமேன்மையே. (ஈச)

தருநாடுகுடியேறவயிராணிமங்கலத்தாலிதழையச்
செருமாறியுருமர்றுமமரேசன்வெண்குடைத்திங்கள்விரியக்
கருமாயவசுரேசனுயிர்மாயவுடலுங்கதிர்க்காலவேன்
முருகாவுனைக்கொண்டுகவலாதிருந்தார்கண்முத்தேவரே. (ஈஉ)

தேவாதிதேவேதிருச்செந்திலூர்நின்றுதேவர்க்கெலாங்
கோவாயளிக்குங்குணக்குன்றமேயெங்கள்குமரேசனே
யாவாவெனத்துன்படர்க்குந்தொறும்பாவியமுதேனுநின்
பூவாமலர்ப்பங்கயத்தாள்விடேனுவிபோனுலுமே. (ஈரு)

(தொடரும்)

சு. நல்லசிவன்பிள்ளை,

ஸ்ரீ:

விவாகரகஸியம்.

சத்தியவதி:—அம்மா! உன்னைப்பார்த்து வெகுநாளாயிற்றே. இன்றுதான் என்மனங்களிப்படைகிறது.

காந்திமதி:— நம்முடையபட்டு, குறைபாதசெல்வமல்லவா? சாவித்திரியின்கதையைக்கேட்டதுமுதல் மறுபடியும் உன்னைப்பார்க்கவேண்டுமென்ற ஆவல் எனக்கு அதிகமாயிருந்தது.

ச:— தமோகுணத்திலாழ்ந்தவர்களுக்குக்கூட, அப்படிப்பட்ட பதிவிரதாசிரோமணிகளை நினைத்தமாத்திரத்தில் ஸத்வகுணம் மேலிடுமல்லவோ?

கா:—உண்மைதான். அதுமுதல் நமது சமயக்கோட்பாடுகளின் உண்மையானகருத்தை யறியவேண்டுமென்ற அவா எனக்கு மிகுதியாகவுண்டு.

ச:— எந்தவிஷயத்தில்.

கா:—அப்பொழுது சம்பாஷணையினிடையில் விவாக மந்திரங்களின் சாமானபாகம் உன்னுற் சுருக்கிச் சொல்லப்பட்டதல்லவா?

ச:— ஆம்; அதில் மணமகனும் மணமகளும் ஒருவர்க்கொருவர் இவ்விதம் இருக்கவேண்டுமென்று உபதேசிக்கப்பட்டதல்லவா? அதுமிகவும் இளமைப்பருவமுள்ள சிறுவர் சிறுமிகளால் எப்படியறிந்துகொள்ளக்கூடும். ஆதலால் இளமைப்பருவம் கழிந்தபிறகுதான் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் விவாகத்துக்குயோக்கியதை யுண்டாகிறதென்பது இக்காலத்தார் கொள்கை.

கா:—சூத்திரம்செய்த மஹரிஷிகளுடைய அபிப்பிராயமல்லவோ இது விஷயத்தில் முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது.

ச:— முக்காலமுமறிந்த மஹரிஷிகள் இந்த விஷயத்தில் தங்கள் உட்கருத்தை கன்றாய்வெளியிடவில்லை. ஆனாலும் விவாகத்தின் முறைகள், அவைகளில் உபயோகப்படுகிற மந்திரங்கள் இவைகளை நுட்பமாய் ஆராய்ச்சிசெய்து எளிதில் நீயே அறிந்துகொள்ளலாம்.

கா:—அப்படியானால் நீயே யெல்லாவற்றையும் எனக்குச்சொல்லவேண்டும்.

ச:— தோழீ! எனக்குத்தெரிந்தவரையிற் சொல்லுகிறேன். ஒருவன் முதலில் வேதத்தை முற்றுமோதிப் பயிற்சியடைந்தபின் பிரும்ம சரியவிருதத்தை முடித்துவிட்டுத் தனக்குப் பெண்பார்த்து நிச்சயிக்கும்படி, மந்திரமறிந்தவர்களும் தன்னிடம் பிரியமுள்ளவர்களுமான நான்கு நண்பர்களை அனுப்பவேண்டும்.

கா:—எனக்கு இது உசிதமாகத்தோன்றவில்லையே; தனக்கிசைந்த நாயகியைப் பிறர்கண்களாற்பார்த்து நிச்சயிக்கிறதென்பது பெண்ணுக்கும், பிள்ளைக்கும், பிறகு கஷ்டத்தைவிளைக்குமல்லவோ? ஒருவன் தானேபோய்ப்பார்த்துத் தனக்கிசைந்த நாயகியை ஏன் வரிக்கக் கூடாது?

ச:— ஒருசமயம் அழகைமட்டும் கண்டு மோகித்து அவன் தனதுகோத்திரத்திற்குத் தகுதியற்ற இடத்திற் பிறந்தவளையும், நன்னடக்கையற்ற தாயின்வயிற்றிலுதித்தவளையும் ஆலோசியாமல் மணந்துவிடுவான் என்று கருதி, நண்பர்களே இந்தக் காரியத்தை நன்றாய் முடிக்கவல்லவர்கள் என்று மஹரிஷிகள் தீர்மானித்திருக்கலாமென்று நினைக்கிறேன்.

கா:— ‘‘யஸ்யாம் ஸ்நஷ்ஷுஷோர்நிர்வையஃ தஸ்யாம் ஜீவிஃ’’

‘‘எந்தக்கன்னியைப்பார்த்தாற் கண்ணும் மனமும் களிப்படையுமோ அவளை மணம்புரியலாம்’’ என்று சில மஹரிஷிகளும், ஆகிருதியைக் கொண்டு குணங்களை அறியலாம் என்று சாமுத்ரிகாலக்ஷணம் தெரிந்தவர்களும் கூறியிருக்கிறார்களே?

ச:— அதனாலென்ன? நல்ல மனமுடைய நண்பர்களின் கண்களும் மனமும் லக்ஷணம் முதலியவற்றை நோக்கிப் பெண்ணைத்தேர்ந்தெடுத்து நிச்சயிக்கவேண்டுமென்பதுதான் என்கருத்து.

கா:—மெய்தான். பெரியோர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட தாரமென்று ஜானகியினிடத்தில் இராமனுக்கு அதிக அன்பு உண்டாயிற்றென்று வான்மீகி முனிவர் கூறியிருக்கிறார். இக்காலத்திலோ எல்லோரும் பெரும்பாலும் மிகவும் நேயமுள்ளவர்கள்போல் நடித்துத் தங்களொன்றையே கருதி யீடில்லாத பெண்ணையும் பிள்ளையையுஞ்

சேர்த்துவைத்து வஞ்சித்துவிடுகிறார்கள். இது மஹரிஷிகளுடைய பிழையல்லவே.

ச:– "இயம் ஸீதா ஸுதா தவ ஸஹயஸ–ஹரஸீ தவ"

"இவள் சீதை; என்பெண்; தர்மத்தையனுஷ்டிப்பதில் உனக்கு உதவிபுரியத் தகுதியுள்ளவள்" என்று இராமனைப்பார்த்து ஜனகர் சொல்லியவாக்கியத்தை ஆராயுங்கால், பெண்ணை மணம்புரிவது தர்மானுஷ்டானத்துக்காகவேயன்றிக் கேவலம் சுகானுபவத்துக்கு மட்டுமன்று–என்று நன்குவிளங்குகிறதே.

கா:–முன்காலத்தில் தர்மத்தையநுசரித்து வளர்ந்தது காமம். இக்காலத்திலோ காமத்தையனுசரித்து வருந்துகிறது தர்மம். இதுதான் காலவித்தியாசம்.

ச:– பிறகு பெண்ணின் தந்தை முதலியோர் தம்வீட்டிற்கு மணமகனை யழைத்துவந்து கன்னிகையை அவனுக்கு உதகபூர்வமாய்த் தானம் செய்து மதுபர்க்கங்கொடுத்து மணமகனுக்கு மரியாதையும் செய்கிறார்கள்.

கா:–தோழி! எல்லாத் தானங்களையும் ஏன் உதகபூர்வமாய்ச் செய்கிறார்கள்.

ச:– உதகத்தில் எல்லாத்தேவர்களும் சாந்நித்யமாயிருக்கிறார்களாதலால், தெய்வங்களின்முன்னிலையில் தானம்செய்வது உசிதமென்று நினைக்கிறேன். நாரம்–என்றால் ஜலம்; அயநம் என்றால் இருப்பிடம்; ஜனது பற்றி, நாராயணன் என்னும் பதத்துக்கு ஜலத்தில் வாசஞ் செய்கிறவனென்று அர்த்தம் சொல்லுகிறார்கள்.

கா:–ஜலம் ஓரிடமிருந்து மற்றோரிடத்துக்குச் செல்லுந் தன்மையுடைய தாகையால் அதனுடன் தானஞ் செய்யப்படுகிற கன்னிகை சம்பந்தமான எல்லாவித பாத்தியமும் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடத்துச் செல்லுகிறது என்பதற்கும் அடையாளமாயிருக்கலாம்.

ச:– இந்த யுக்தியும் நன்றாய்த்தானிருக்கிறது. மதுபர்க்கமென்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா?

கா:—தேனுடன் தயிர், நெய், அவல், மா முதலியவைகளைப் பாத்திரத்திற் சேர்த்துவைத்துத் தகுதியான விருந்தினர்க்குக் கொடுத்து உபசரித்தல் என்று சொல்லக்கேட்டிருக்கிறேன்.

ச:— இதைக்குறித்து விசேஷமாய்ச் சொல்லவேண்டிய பலவிஷயங்கள் உள்ளன. அவற்றைப்பற்றி வேறொருசமயம் பேசுவோம். பாணிக்கிரகணத்துக்குமுந்தி மணமகன் தன்னுடைய பிதிர்க்களை உத்தேசித்து நாந்தீசிராத்தமொன்று செய்யவேண்டுமென்றுவிதித்திருப்பது உனக்குத் தெரியுமா?

கா:—இதென்ன விந்தையாயிருக்கிறது. கல்யாணத்தில் சிராத்தஞ்செய்யலாமோ? மங்களத்தில் அமங்கலத்தைச் சேர்க்கலாமோ? மஹரிஷிகள் ஏன் இப்படிவிதித்தார்கள். இதன் நியாயம் எனக்குப் புலப்படவில்லையே?

ச:— நல்ல கேள்வி; நானும் இந்தவிஷயத்தைக்குறித்து என் உபாத்தியாயரைக் கேட்டேன். அவரும், "அம்மா! பிதிர்க்கடனை நிவர்த்திசெய்யும்பொருட்டே விவாகம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களருளால் தான் நல்லசந்தான மேற்பட்டு வம்சம் தழைக்கவேண்டும். அதனால் நாந்தீசிராத்தம் (பிதிர்க்களைச் சந்தோஷப்படுத்தும் சடங்கு) செய்யவேண்டியது உசிதம்தான்" என்றார்.

கா:—ஆம். பொருத்தமாயிருக்கிறது. "சந்தானமுண்டாகவேண்டியதற்கான சடங்குகளை அநுஷ்டித்தார்; நல்லசந்தானமுண்டாவதற்காக இல்வாழ்க்கையைக் கைப்பற்றினர்" என்று இரகுவம்ச அரசர்களைக் குறித்துக் காளிதாசர் வர்ணித்ததில் விவாகத்தின் நுட்பமான கருத்து நன்கு விளங்குகிறது.

ச:— பிறகு மணமகன் மணமகளை முதலிற்பார்த்து "அப்ராத்ருக்நீம்" (அப்ராதரஹம்) என்று தொடங்குகிற மந்திரத்தைச் சொல்லவேண்டும்.

கா:—மிகவும் நன்றாயிருக்கிறது. 'அப்ராத்ருக்நீம்' என்பதால் 'உடன்பிறந்தார் விஷயத்தில் ஸ்வபாவமாய் எனக்குள்ள நட்பைக் கெடுக்காமல் இருக்கக்கூடியமனநிலை உனக்குவாய்க்கவேண்டும்' என்று பெண்ணைப் பார்த்து முதல் வார்த்தையாக மணமகன்சொல்லுவது மிகவும் உசிதமன்றோ? தந்தை தேடிவைத்த பொருளைப்பங்கிட்டுக்

கொள்வதில் உடன்பிறந்தோர்க்குள், கலகமேற்படுவதற்கு அவரவர் மனைவிமார்களே காரணம் என்பது உலகமறிந்ததன்றே?

ச:— நீ சிறந்த புத்திசாலியென்று விளங்குகிறது.

"ஜெஸ்ஸெஸ்ஸே கஸ்தாணி ஜெஸ்ஸெஸ்ஸே ஸ வாஸ்யவாஃ।
தம் தா ஜெஸ்ஸம் ந வஸ்யாதி யத்ர ஜ்ராதா ஸஹோதரஃ॥"

"எந்தத் தேசம்போனலும் மனைவிகள் கிடைப்பார்கள். எந்தத் தேசத்திலும் சுற்றத்தார்களுண்டு. ஆனல் எந்தத்தேசம்போனலும் ஒருவயிற்றிற் பிறந்த சஹோதரன் கிடைக்கமாட்டான்" என்று ஸஹோதரவாஞ்சையின் மேன்மையை ஸ்ரீராகவன் நன்கு உபதேசித்திருக்கிறார். இப்படியிருக்க மானிடர்கள் ஏன் மனையாட்டிகள் வசமாய் ஸஹோதரர்களுக்குத் துரோகம் செய்கிறார்கள்?

கா:—வேறென்ன? படிப்பில்லாமல் அவிவேகிகளாயும் அழுக்காறு முதலிய தூர்க்குணங்களையே இயற்கையில் வாய்த்தவர்களாயுமிருக்கிறமனைவிமார்களுடைய தந்நலம்பாராட்டுந்தன்மையே ஸஹோதரர்களுக்குள் கலகம் கோரிட முக்யமானகாரணமாயிருக்கிறது.

ச:— பெண்பாலாகப்பிறந்த நீ இவ்விதம்பேசுவது உன்னுடைய கம்பீரமான மனநிலையை வெளிப்படுத்துகிறது.

கா:—உள்ளதைத்தான் சொன்னேன். அதற்காக என்னைத் துதிக்க வேண்டாம்; விவாகத்தில் மேல்நடக்குஞ் சடங்குகளையும் விடாமற் சொல்லவேண்டுமம்மா.

ச:— பிறகு மணமகன் மணமகளுக்குப்பக்கத்தில் நின்றுகொண்டு "அகோரசக்ஷுரி:" (அகோரசக்ஷுரி:) என்று தொடங்குகிற மந்திரத்தைச் சரியானஸ்வரத்துடன் சொல்லிக்கொண்டு அவளுடைய கண்களிற் றன்கண்களை நாட்டிப் பார்க்கவேண்டும்.

கா:—இந்த மந்திரத்தினல் மணமக்கள் ஒருவரையொருவர் முதன் முதற் பார்த்துக்கொள்ளும் சமயத்தில் மனவொற்றுமை யுண்டாகுமென்று முனிவர்கள் கண்டுபிடித்திருக்கவேண்டும்.

ச:– பிறகு மணமகன் அணிவிரல் சுண்டுவிரல்களுடன் கட்டைவிரலைக் கூட்டி, அவற்றால் தருப்பையை எடுத்து, மணமகளைநோக்கி, "உன்னிடம் கணவனுக்குக் கெடுதிசெய்யும் அவலக்ஷணத்தை இதனால் போக்குகிறேன்" என்ற கருத்தடங்கிய மந்திரத்தைச்சொல்லிக் கொண்டு அத்தருப்பையினால் அப்பெண்ணின் புருவமத்தியத்தைத்துடைத்து மேற்குத்திசையில் அதை எறிந்துவிடவேண்டும்.

கா:–நன்றாய் ஆராயும்பொழுது, மந்திரத்துடன் செய்யப்படுகிற இந்தச் சடங்கினால், இமையாமற்பார்த்துச் சேஷ்டைகளாற் பிறர்மனத்தை வசமாக்குகிற தாந்திரிகர்களின் (Mesmerists) செய்கை நினைவுக்கு வருகிறது.

ச:– அதன்பிறகும், பிறந்தவீட்டிலிருந்து மற்றொருவீட்டுக்குப் போக வேண்டுமேயென்று மணமகள் விசனமடைந்தால் அப்பொழுது "ஜீவாம்ருதந்தீம்" (ஜீவாஂ ஊ ஹீம்) என்று தொடங்குகிற மந்திரத்தைச் சரியானபடி சொல்லி அவளுக்கு மனதிற் களிப்பை யுண்டாக்கவேண்டும்.

கா:–மந்திரங்களின் பெருமை நம்போலியர்கட்கு எளிதிற் புலப்படாது. அதனிடத்து எண்ணவொண்ணாதசக்தி இருப்பதாக மட்டும் தோன்றுகிறது.

ச:– பிறகு இரட்டைப்படையான வேதமோதிய அந்தணர்களைத் தெரிந்தெடுத்துத் தீர்த்தங் கொண்டுவரும்படி அனுப்பவேண்டும்.

கா:–பெண்களல்லவோ புனல்கொண்டு வருவது வழக்கம்.

ச:– மந்திரஞ்சொல்லிக்கொண்டன்றே உதகம் எடுக்கவேண்டும்.

கா:–நல்லது; மேல்நடப்பதென்ன?

ச:– பிறகு தருப்பைப்புற்களைச் சேர்த்து வட்டமாகக்கட்டிப் பெண்ணின் சிரசில்வைத்து அதன்நடுவில் நுகத்தடியின் வலப்புறத் தொளைவரும்படி பிடித்து அதிற் பொற்சுண்ணத்தைத்தூவிப் பரிசுத்தமுண்டாக்கக் கூடிய ஐந்து மந்திரங்களைச்சொல்லி அதன்வழியாய் நீர்நிறைத்து மணமகளை நோட்டிப் புதியவஸ்திரமுடுத்தித் தருப்பைப்புல்லாற்செய்த புரியை மணப்பெண்ணின் இடையிற் கட்டவேண்டும்.

கா:–நல்லது மெல்லிய சரீரமுள்ள சிறியபெண்ணின் தலையில் வலிய நகத்தடியின் வலதுபாகத்தை ஏன்வைக்கிறார்கள்? அது அபாயகர மல்லவோ?

ச:– "இன்று நான் இல்வாழ்க்கையிற் புகுகிறேன். அதில் தர்மத்தை யனுஷ்டிப்பதில் எனக்கு ஏற்படும் பாரத்திற் பாதியை நீ வகிக்க வேண்டும்" என்று மணமகன் மணமகளுக்கு நகத்தடியினற் சூசிப் பிக்கிறனென்று நினைக்கிறேன்.

கா:–நன்றாய் விளங்குகிறது. பொற்சுண்ணத்தை என் தூவுகிறார்கள்?

ச:– "ஹிரண்யவர்ணா: சுசய: பாவகா:" (ஹிரண்யவர்ணா: சுசய: பாவகா:) என்றுதொடங்கி மேற்கூறிய சமயத்திற்சொல்லப்படுகிற மந்திரங்களைக் கவனித்தால்உதகம் பொற்சுண்ணத்தின் சம்பந்தத் தால் தங்கநிறமடைந்து சுத்தியாகிப் பெண்ணின் சரீரத்தைப் பரி சுத்திசெய்து அவளிடம் அபூர்வமான ஒரு சக்தியையும்உண்டாக்கு கிறதென்று என் சிற்றறிவுக்குப் புலப்படுகிறது.

கா:–உன்னுடையநுட்பமான அறிவு மிகவும் வியக்கத்தகுந்ததே.

ச:– பிறகு மணமகளை வலதுகையிலுற் பிடித்துக்கொண்டு அக்கினிக்கு முன்போய் அங்கு வடக்கு நுனியாகவிரித்தபாயில் வலதுபக்கத் தில் மணமகளுடன் மணமகன் அமரவேண்டும்.

கா:–மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்திலேயே இருக்கவேண்டும் என்பதற்கு என்ன காரணம்?

ச:– புருஷர்களுக்குச் சரீரத்தில் வலப்பாகம் சிலாக்கியமென்று சொல்லு கிறார்கள். ஆதலால் அவர்கள் இவ்விதம் உட்காருவதால் மணமகன் பெண்ணிடம் மரியாதையுடனிருப்பதாக வெளியாகிறது என்று நினைக்கிறேன்.

கா:–நல்லது.

ச:– பிறகு அக்கினியைப் பூசித்து "சோம: ப்ரதம:" (சொமோ ப்ரதம:) முதலில் சோமன்' என்று தொடங்குகிற இரண்டு மந்திரத்தை மண மகனைத் தொட்டுக்கொண்டு மணமகன் ஜெபிக்கவேண்டும்.

கா:–ஜெபத்தின் கருத்தென்ன?

ச:– இந்த மந்திரத்தின் கருத்தையாராயுங்கால் முதலில் கன்னிகை சோமன், கந்தருவன் அக்கினி என்ற மூன்று தேவர்கள் வசம் முறையாக இருந்து, பின் மனிதன்வசமாவதாகத் தெரிகிறது. ஆதலின் மேற்கூறிய தேவர்களைத் துதித்து அவர்களநுமதிபெற்றுக் கன்னிகையை ஒருவன் மணம்புரியவேண்டுமென்பது கருத்து.

கா:–இதனால் எல்லாப்பெண்களுக்கும் நான்குகணவர்கள் ஏற்படுவதாகத் தெரிகிறதே. இது சரியாகுமோ?

ச:– தேவர்களை நாயகர்களாகக் கொள்வதென்பதன் நுட்பமானகருத்தை ஆலோசித்தால்,பெண்ணின் ஞானேந்திரியங்களையும் கன்மேந்திரியங்களையும் அந்தந்த இந்திரியங்களுக்குரிய தேவர்கள் விருத்தி செய்து அவளை மனிதன்வசமாக்குகிறார்கள் என்றஇரகசியம் விவேகிகளுக்குப் புலப்படும்.

கா:–நல்லது; மேல்விருத்தாந்தமென்ன?

ச:– பிறகு மணமகன் தன்னுடைய அகங்கையைக் கீழாகவிரித்து அதன் மேல் மணப்பெண்ணின் கையைவைத்துப் பாணிக்கிரகணம் செய்துகொள்ளவேண்டும். மணமகன் மணமகளிடம் பெண் குழந்தைகளே பிறக்கவேண்டுமென்று விரும்பினால் அவளுடைய விரல்களைமட்டும் பிடித்துக்கொள்ளவேண்டும். ஆண்குழந்தைகளே பிறக்கவேண்டுமென்ற எண்ணமிருந்தால் பெண்ணின் கட்டைவிரலை உயர்ந்துநிற்கச்செய்து மணமகன் தன் கட்டைவிரலாற் சுற்றிப்பிடித்துக்கொள்ளவேண்டும். பாணிக்கிரஹணகாலத்தில் மணமகன் மணமகளைநோக்கி "உன்னிடம் குணவான்களான குழந்தைகள் பிறக்கும்படி தேவர்கள் ஆசீர்வதிக்கட்டும்" என்ற கருத்தடங்கிய மந்திரங்களை ஜெபிக்கவேண்டும்.

கா:–ஆஹா! மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. முதலில் மணமகள் கை மேலும் மணமகன்கை கீழுமாகப் பாணிக்கிரஹணம்செய்ய வேண்டுமென்ற விதியானது, வாழ்நாண்முழுதும் புருஷனுடைய வீட்டிற் பெண்ணுக்கு ஏற்றமும் கௌரவமும் இருக்கவேண்டுமென்பதைத் தெளிவாய் விளக்குகிறது.ஐயோ! இதை இக்காலத்தில் ஒருவரும் அறிந்தார்களில்லையே. பெண்களை விலைக்கு வாங்கிய பொருள்களைப்போல் நடத்துகிறார்களே! இது பெரும்பாவமல்லவா?

ச:— சாஸ்திர விதிப்படி மணம்புரிந்த பெண்களை மேன்மைபாக வைத்துக்கொள்ளவேண்டும். எந்த வீட்டில் பெண்களின்கண்கள் கலங்குமோ அந்தவீடு நிர்மூலமாப் நசித்து விடும் என்று மனுஸ்மிருதியிற் கூறியிருக்கிறது.

கா:—பிள்ளை பிறக்கவேண்டுமானால் கட்டைவிரலையும், பெண்பிறக்கவேண்டுமானால் மற்ற விரல்களையும் பிடிக்கவேண்டுமென்கிற முறையும் உசிதமாயிருப்பதாகவே புலப்படுகிறது. அனுபவத்தில் விரல்களில் ஒன்றிரண்டு இல்லாவிடினும் குற்றமில்லை; கட்டைவிரல் இல்லாவிடில், விரல்களுக்கும் சரீரத்துக்கும் சக்தி குன்றிவிடுகிறது என்பது யாவரும் அறிந்தவிஷயமே. விரல்களோடு கட்டைவிரல் சேர்ந்தால் தான் மனிதர்கள் முக்கியமான காரியங்களைச் செய்யவல்லராகிறார்கள். ஆதலின், பலமுள்ள கட்டைவிரல் ஆண்மையைக் குறிப்பதாகவும் மெல்லியவிரல்கள் பெண்மையைக் குறிப்பதாகவும் மஹரிஷிகளுக்குப் புலப்பட்டு விதியேற்படுத்தியது அழகாயிருக்கிறது. மேலும் வடமொழியில் கட்டைவிரலைக்குறிக்கிற அங்குஷ்டம் (அம்ருஷ்டம்) என்ற பதம் பொருளால் அஃறிணையாயினும் உயர்திணையாண்பால்விகுதிசேர்த்தே பிரயோகிக்கப்படவேண்டும்; விரல் என்று பொருள்படுகிற அங்குளி என்ற பதம் உயர்திணைப் பெண்பால் விகுதிசேர்த்தேபிரயோகிக்கப்படவேண்டும் என்ற கோட்பாடும் மேற்காட்டிய பாணிக்ரஹண நியமத்திற்கு அனுகூலமாயிருக்கின்றது.

ச:— வடமொழியிற் பதங்களுக்குப் பொருள் எவ்வாறுயினும், சப்தங்களுக்கு ஆண் பெண் அலி என்ற பகுப்பு இயற்கையிலேயே ஏற்பட்டுள்ளது. ஆதலால் அந்தப்பதங்களைச் சரியானபடி உச்சரிக்கமுடியாதவர்களுக்கு அநேகதோஷங்கள் நேரிடுகின்றன. அந்தப் பாஷையைப் பரம்பரையாய்ப் படித்துவருகிற நல்லொழுக்கமுள்ள அந்தணரிற்சிலரும், அக்ஷரம் ஸ்வரம் இவற்றை நாவினால் பிரயோகிப்பதில் தவறி எதிர்பாராத ஆபத்துக்குள்ளாகிறார்கள் என்னும் காரணத்தினாலேயே, உச்சாரணவழுவினால் உண்டாகும்பாவங்களைப் போக்குவதற்கு அந்தணர்கள் வருஷத்துக்கொருதரம் ஆயிரத்தெட்டுமுறை காயத்ரிஜபம் செய்து வருவதும், ஒவ்வொரு சடங்கின்முடிவிலும் உச்சரிப்பில் நேர்ந்தவழுக்களுக்காகப் பிராயச்சித்த ஹோமம் செய்துவருவதும் எல்லாரும் அறிந்தவிஷயமே.

கா:— நல்லது; அப்படி எந்த மஹான்களுக்காவது உச்சாரணவழுவினால் தீமைவிளைந்ததாகத் திருஷ்டாந்தம் கூறமுடியுமோ?

ச:— தேவர்களில் மிகவும் பிரசித்திபெற்ற த்வஷ்டாவென்பவர் 'இந்த்ரசத்ரு' என்கிறமொழியை உச்சரிப்பதில் ஸ்வரம் தவறித் தாம் எதிர்

பார்த்தவற்றுக்கு முழுதும் மறுதலையான பலனை அனுபவித்து ஆபத்தினால் மிகவும் வருந்தினர் என்று வேதமே கூறுகிறது.

கா:—அம்மா! இதுகேட்க எனக்கு மிகவும் பயமுண்டாகிறது. வட மொழியை ஒழுக்கமுள்ள அந்தணர்களே சொல்லவேண்டும் என்ற கோட்பாட்டின் ரகஸ்யம் இப்பொழுதுதான் நன்குவிளங்குகிறது. ஐயோ! நுட்பமான ஆராய்ச்சியும் பகுத்தறிவுமில்லாத சிலர் ஞானமில்லாமல் வடமொழியையும் எல்லோரும் சாதாரணமாய்ப் படிக்கலாமென்று வாதாடுகிறார்களே! தமிழ்ப்புலவர்களில் எந்த மஹான்களாவது இக்கருத்தையறிந்து வெளியிட்டிருக்கிறார்களா?

ச:— திருவள்ளுவர், வடமொழி எல்லாராலும் படிக்கக்கூடியதன்று என்ற காரணத்தினால், சதுர்விதபுருஷார்த்தங்களையும் அறம், பொருள், இன்பம், வீடு என்று பிரித்து அவற்றினியல்புகளனைத்தையும் குறுகத்தரித்தகுறளால் உலகத்தார்க்குப் புகட்டியிருக்கிறார்.

கா:—இது எதனால் விளங்குகிறது?

ச:— குறளின்சிறப்பைக்குறித்துச் சங்கத்தான்றோரிலொருவராகிய வெள்ளிவீதியார்,

"செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரியா ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரியா ரல்லாதா ரில்

என்று கூறியிருப்பதனால் விளங்குகிறது.

கா:—அம்மா! இப்பொழுது இது நன்குவிளங்குகிறது. உலகத்தில் அகங்காரமெல்லாம் அறியாமையாலேயே உண்டாகிறது. வேதத்தை உச்சரிப்பதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியதுதான். வடமொழியைப் பக்தியுடன் படிப்பதற்கு விரோதம் ஒன்றுமில்லையே. பூர்வத்தில் வடதேசத்தில் இந்தப்பாஷையை எல்லோரும் பேசியதாகவும், அந்தணனொருவன் கூறிய வடமொழியில் தச்சனொருவன் பிழைகளை எடுத்துரைத்ததாகவும் மஹாபாஷ்யத்திற் சொல்லியிருக்கிறது. பாணினிமுனிவர் உலகத்தில் இவ்விதமும், வேதத்தில் இவ்விதமும் வடமொழியை உபயோகிக்கவேண்டுமென்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்.

(தொடரும்)

ர. கிருஷ்ணமாசாரியர்,
வித்யாநிதி.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்

1921-ம் வரு மார்ச்சு-மீ 5-உ நடத்திய,

ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷை வினா.

ஸ்கூல்பைனல்வகுப்பு.

1 இலக்கியம்.

பரீக்ஷகர்:—ஆ. கார்மேகக்கோனார்.

1921-வரு மார்ச்சுமீ 5உ சனிக்கிழமை பகல் 10—1.

[அம்சம் 120]

I. 1. தாமரை புரையும் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனிச் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப

ஏம வைகல் எய்தின்றால் உலகே. இதற்குப் பதவுரை யெழுதிக் குன்றின்நெஞ்சுபகவெறிந்தவரலாற்றையுஞ் சுருக்கி எழுதுக.

2. குறுந்தொகை, திருவாசகம், காசிகாண்டம், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், இவைகள் எப்புலவர்களாற் பாடப்பெற்றன?

3. பொற்கிழிதூக்கிய பாண்டியன் யார்? இவ்வரலாற்றைச் சுருக்கமாய் உரைக்க. இக்கதையினை உரைக்கும் வேறு நூல்கள் எவை?

4 "பீடுடை யுணர்வான் மிக்கோர் பிஞ்ஞகன் சமாதியாலே
நாடிய பொருள்தே ராமல் நல்லன தமக் கியைந்த
பாடிய கவிதை கொண்டு பார்த்திவன் திருமுன் னேறிக்
கூடிய மகிழ்ச்சி யோடுங் கூறினர் தேறியாங்கு"
இச்செய்யுளுக்குப் பொழிப்புரை எழுதுக.

5. ஆலவாயுடையாரும் நக்கீரரும் வாதம் நிகழ்த்தியபோது அவர்கள் கூறிய செய்யுள்கள் யாவை? சிவபெருமான் தருமிக்குப் பாடிக்கொடுத்த பாசுரம் யாது ?

II. 1. கலம்பகம் என்று அந்நூலுக்குப் பெயர்வரக் காரணமென்? மறம், அம்மானை என்ற லென்ன?

2. "நாராயண னறியா நாதரு ணேசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்கம் அம்மானே"
இவற்றின்பொருளை விளக்கி யெழுதுக.

3. 'தாயே தந்தையிற் சிறந்தாள்' எதனால்?

4. 'சான்றோர் சான்றோர் பலராப' இப்பொருளுக்குக் காட்டியிருக்கும் உவமை என்ன?

5. இராமர் விபீடணனைக்குறித்துத் தம் கருத்துரைத்திருக்குமாற்றை வசனத்தில் எழுதுக.

III. 1. "மாற்கடஞ் சூழ்ந்த வைப்பி னங்கதன் மருங்கு காப்ப
நாற்கட லுடுத்த பாரி ணுயகன் புதல்வ னுமப்
பாற்கடல் சுற்ற விற்கை வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலி வாணைக் கண்டான்"
பொலிவான் யார்? க ண் ட து யார்? பொழிப்புரையும் எழுதுக.

2. இடைக்காடரது நண்பர் யார்? இடைக்காடர் தமிழறியும் பெருமானிடம் எவ்வாறு முறையிட்டார்?

3. பிரமனினும் புலவர்கள் எதனுற் சிறந்தவர்கள்.

4. கல்வி எத்தன்மையாற் கருந்தனமாகிறது.

5. பொன்னிக்குக் கம்பன் அடிமை! என்பதைக் கம்பர் எவ்வாறு பொருள்விரித்துக் காட்டினர்?

6. திருப்பாணழ்வாரென எதனுற் பெயர்வந்தது, அவர்செய்த தொண்டு யாது?

7. பாதாதிகேசம், ஸ்ரீவத்ஸம், காயகசார்வபௌமர், பகவந்நியமனம், அநவரதபாவனை, தொளதவஸ்திரம் இச் சொற்றொடர்களை விளக்குக.

IV. 1. "கள்ளிக்கு முள்வேலியும் கழுதைக்குக் கடிவாளமும் ஏன்" "கூளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டாற்போல்" இப் பழமொழிகள் எச் சந்தர்ப்பத்துள், பிரயோகப்பட்டிருக்கின்றன?

2. ஸர். தி. முத்துசாமி ஐயருடைய கல்வித்திறமை, நியாயாதிபத்தியம், பரோபகாரசீலம் இவற்றைப்பற்றிஎழுதுக.

3. அரங்கசாதமுதலியார் தமிழ்ப்பாஷையினும் விற்பன்னர் என்பதைக் காட்டுதற்கிருக்கும்சான்று யாது? அவரைப் பற்றி ஸர். முத்துசாமி ஐயரும் டாக்டர் மில்லர்துரையும் எவ்விதம் புகழ்ந்துரைத்திருக்கிறார்கள்?


4. ஸ்ரீதத்நன், நக்தட்டன், நபுலவிபுலர், அச்சணந்தியாசிரியர் இவர்களைப்பற்றித் தெரிந்ததை யெழுதுக.

5. ஜீவகன் எத்தனை பெண்டிர்களை மணந்தான்? நந்தகோன் முன கோவிந்தையாரை மணந்துகொள்வதாக உடன்பட்ட ஜீவகன பதுமுகனுக்கு அவளை ஈந்தது அவனது வாய்மைக்கும் சால்புக்கும் பொருந்துவதா?

6. சொக்கன், வெந்து, வேட்டு, தேத்து, தொடை, ஆன்ற, கேண்மை—இப் பெயர்களிலும் எச்சங்களிலும் பகுதிகளை எடுத்துக் காட்டுக.

7. சடிலம், ஆசு, பீடு, தரளம், திருமுகம், சீயம், வைகல், ஓதிமம், நல்குரவு, நிதி, நிரயம், தகிர் பொருள் எழுதுக.

வைரப்புறக்கணிப்பு.



சென்ற மேமாதத்தில் பம்பாயிற்கூடிய இந்தியப்பெண்மக்கள் பெருங் கூட்டத்திற் சிலகாரணங்களால் அந்நியநாட்டு வைரக்கற்களை நாம் புறக்கணிக்கவேண்டுமென்றும், இனி வைரநகைகளை நம்பெண்மக்கள் அணியாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் முடிவுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அம்முடிவுகளாவன:—

I. அன்னியநாட்டு வைரங்களை அடியிற்கண்ட காரணங்களை உத்தேசித்து உடனே பஹிஷ்கரிக்க வேண்டியது தேசக்ஷேமத்திற் இன்றியமையாததென இம்மகாநாடு அபிப்பிராயப்படுகின்றது:—

(1) வைரங்கள் அநேகமாகத் தென்னப்பிரிக்காவிலுள்ளசுரங்கங்களிலிருந்தேவருகின்றன. அங்கு ஆசியாக்காரர்கள் மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்பட்டுவருகிறார்கள். வெள்ளைக்காரர்களே உயர்ந்தவர்களென்ற இறுமாப்பு அங்கு நிலைத்துவிட்டது. மகாத்மா காந்தியையும் அவரது தர்மபத்தினியையும் இந்தியர்களையும் மிகவும் கேவலமாக நடத்திய அந்த நாட்டிலுள்ள வெள்ளைக்காரர்கள் அனுப்பும் வைரங்களை நமது கைகளால் தீண்டுவதுகூடப் பெரும் பாவமாகும். எனவே அந்த நாட்டிலிருந்து வரும் வைரங்களை வாங்குவதானது இந்தியா தனது மானத்தைப் பறிகொடுப்பதற்கு ஒப்பாகும்.

(2) வைரநகைகளுக்கு நடுத்தரவகுப்பினருக்குள் அபிலாஷை அதிகமேற்பட்டுவிட்டதாவென்பது சந்தேகமாயினும், வைரநகை அணிவோர், அணியாதார் என்று அவர்களை இரு பிரிவினராகச் செய்துவிட்டது.

(3) நமதுதேசம் மிகுந்த தாரித்திரியதசையிலிருக்கையில் அன்னியநாட்டுவைரங்களை வாங்கி நமது பணத்தைப் பிறநாடுகளுக்கு அனுப்புவது நியாயமன்று.

(4) தென்னப்பிரிக்காவிலுள்ள சுதேசிகளை மிகுந்தகஷ்டப்படுத்திச் சுரங்கங்களில் வேலைசெய்வித்து வெள்ளைக்காரர்கள் ஏராளமாக லாபம் சம்பாதித்துவருவதால் ஆப்பிரிக்காவில் எடுக்கப்படும் வைரங்களை வாங்குவதனால் நாம்,வெள்ளைக்காரமுதலாளிகள் ஆப்பிரிக்கா சுதேசிகளைக் கஷ்டப்படுத்துவதற்கு ஆதரவளிப்பவர்களாவோம்.

II. அன்னியநாட்டு வைரங்களிழைத்த நகைகளை நகைகளாக ஆலயங்களில் உபயோகித்துவரும் வழக்கத்தையும் ஆலயங்களின் பஞ்சாயத்தார்கள் உடனே நிறுத்தி, ஜூன்மாதம் 30-ம் தேதிக்குள் அவைகளை எல்லா இந்திய திலகர் சுயராஜ்ய நிதியில் சேர்த்துவிடும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. அவ்விதம் சேர்க்கப்படும் நகைகளை இந்நிகழ்ச்சிக்கு எவ்விதவிக்கினமுமின்றி அவர்கள் விநியோகம் செய்துவிடுவார்கள்.

III. ஐரோப்பிய மார்க்கெட்டுகளில் வைரங்களுக்குப் பிரியம் குறைந்து வியாபாரம் அங்கு படுத்துப்போய்விட்டதனாலும், கையிலுள்ள சரக்குகளை வியாபாரிகள் இந்தியாவிற் குவித்துவருவதாலும், வைரங்களின்விலை கூடிய சீக்கிரத்தில் இறங்கிவிடுமென்று நம்புவதற்கு ஆதாரமிருப்பதாலும், வைரங்களை வாங்கி ஏமாந்துபோய்விடாமலிருக்கும்படி இம்மகாநாடு இந்திய மகாஜனங்களுக்கு எச்சரிக்கை செய்கிறது.

IV. மேலேகண்ட தீர்மானங்களின் விவரங்களை உலகெங்கும் பிரசித்தம் செய்யவேண்டுமென்றும், முக்கியமாக ஸ்திரீகளை இனி வைர நகைகளுக்கு ஆசைப்படாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானம் செய்கிறது.

என்பனவாம்.

வைரங்களைப் புறக்கணிக்கவேண்டுமென்பதற்கு மேற்காட்டிய மூடிவுகளிற்சொல்லுங்காரணங்களேயன்றி வேறுசிலகாரணங்களுமுள்ளன.

அந்நியநாட்டுவைரங்களை வாங்குவதால் நாம்கொடுக்கும் விலைப் பொருளுக்கீடாக அவ்வைரங்கள் நமக்குக்கிடைப்பதாற் பொருள்நஷ்டமில்லையென்று சிலர்சொல்லக்கூடுமாயினும், நாம்கொடுக்கும் விலைப்பொருளானது கொடுக்கல் வாங்கல்களிலும் வர்த்தகத்துறைகளிலும் சென்று வளர்ச்சியடைதற்குரிய நாணயப்பொருளாயிருக்கிறது; அதற்கு பதிலாக வாங்கும் வைரங்கள் யாதொருவளர்ச்சிக்கு மிடமில்லாத கற்சில்லுக்களாயிருப்பதால் வாங்கியநாண்முதல் மிகுந்தபொருளின் வட்டிநஷ்டத்தையுண்டாக்கிக்கொண்டேயிருக்குமியல்பையுடையனவாயிருக்கின்றன. இதனையறிந்து அந்நியதேசத்தார் மிகுதியான வைரங்களையுடையவர்களாயிருந்தும் அவைகளைத் தாமே நகைசெய்துவைத்துக்கொள்ளாமல் விற்றுக்கொண்டிருப்பதே விலைகொடுத்துப் பெற்றுக்கொள்ளக் கூடாதென்பதைக் காட்டுகிறது.

அன்றியும், பெரும்பாகம் தரித்திரமே குடிகொண்டிருக்கும் இந்நாட்டில் வைரநகைகள்மிகுந்தால் அவற்றைக் கையடக்கமாயெளிதிலடித்துகொண்டுபோகச் சமயம்பார்க்கும் மோசநாசத்திருடர்களும் வழிப்பறிக்காரர்களும் களவுநகைவாங்கும் துஷ்டர்களும் இவர்களுக்குதவியாகும் சோம்பேறிகளும் மிகுந்து நாடுகேடடைவதற்கும் ஏதுவாகும். ஆனால் வட்டிவளர்ச்சியையும் வர்த்தகமுறைகளையும் விரும்பவேண்டாத பெரும் பொருள்படைத்த பாதுகாப்புடைய ராஜஸ்தானங்களிலும், தேவஸ்

தானங்களிலும் அழகொன்றையே விரும்பி ஆபரணங்களுக்கு உபயோகிப்பது தவறுகமாட்டாதென்றாலும், குடிவாழ்க்கையிலிருப்பவர்கள் கோடீசுவராராயிருந்தாலும் அவர் தமதிஷ்டமித்திரபந்துஜனங்களுக்கும் ஏழைகளுக்கும் தர்மஸ்தாபனங்களுக்கும் பொதுநன்மைகளுக்கும் உபகரித்தற்குதவியான பொருள்வளர்ச்சிக்கு விரோதமாகப் பெரும்பொருளை முடக்கும் வைரகைகளைப் புறக்கணிப்பது தகுதியுடையதென்று தோன்றுகிறது.

வைரகைகளை மிகவு முபயோகிப்பவர்களும் அவற்றில் மிகுந்த விருப்பமுடையவர்களுமாகிய நம்பெண்மணிகளே வைரமணிகளைப் புறக்கணிக்க முன்வருவதானது நம் நாடு முன்னேற்றமடையத்தொடங்கியிருக்கிறதென்பதற் கறிகுறியாயிருக்கிறது.

உ

புத்தகமதிப்புரை.

1. திருப்புகழ் முதற்பாகம்: இது திருப்பாதிரிப்புலியூர்வித்வான் சிவசிதம்பரமுதலியாரவர்களால் நன்குபரிசோதிக்கப்பெற்று வடக்குப்பட்டு,த. சுப்பிரமணியபிள்ளையவர்களாற்பதிக்கப்பட்ட இரண்டாம்பதிப்பைத்தழுவிச் சில சீர்திருத்தங்களுடன், புதிதாய்அகப்பட்ட இருபத்தைந்துபாடல்களையும்சேர்த்து சுமார் பாட்டுக்களுடையதாய் ஸ்ரீமத். வ. சு. சண்முகம்பிள்ளை, சேங்கல்வராயபிள்ளை யென்னுமிவர்களால் மூன்றுமுறையாகப் பதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முகவுரைகளும், இந்நூலாசிரியராகிய அருணகிரிநாதரது சரித்திரச்சுருக்கமும் தெளிவாக நன்கறியும்படி ஆராய்ந்து எழுதப்பட்டிருக்கின்றன. திருப்புகழ்ச்சிறப்புப்பாயிரமான முன்னோர்பாடல்களும் சில சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு அறியவேண்டும்விடயங்களுக்குக் கீழ்க்குறிப்பும் ஸ்தலவிவரணமு மெழுதிச்சேர்க்கப்பட்டுள்ளன.இறுதியிற் பாட்டுக்களுக்கு முதற்குறிப்பகராதியு மூள்ளது. இது,நல்லகாகிதத்திற் செவ்வையாகஅச்சிடப்பட்டிருக்கிறது. இதன்விலை கூ2. வேண்டுவோர் ஸ்ரீமத் வ. சு. சண்முகம்பிள்ளையவர்கள், 292 லிங்கசெட்டிதெரு, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

2. ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்:—இப்பெயருடன் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை, மைலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ணமடத்திலிருந்து சௌத்திரிஷ்ட தைமீ முதல் மாதந்தோறும் (ராயல்ஸைஸில்) 32 பக்கம் உடையதாக வெளிவருகிறது. இதில் இதுவரை நான்குபகுதிகள் வெளிவந்துள்ளன. இதில் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர், விவேகானந்தஸ்வாமிகள் முதலிய ஸமாஸஸங்மார்க்கநெறியின்றலைமுகிய பெரியோர்

களின் வைபவமும், அவர்களருளிய உபதேசத்திரட்டும், பிறமததூஷணமில்லாத வேறு பல அரியவிஷயங்களும் வர்த்தமானமும் நல்ல எழுத்திற் றிருத்தமாய் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இது தக்க பண்டிதர் பிரபுக்கள் முதலியோரின் ஆதரவால் வளர்ந்து உலகத்துக்குப்பயன்படும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா மூன்று. வெளிநாடுகளுக்குரூபா நான்கு. தனிப்பிரதி உள்நாடுகளுக்கு ரூ0—5—0. வெளிநாடுகளுக்கு ரூ0—6—0. வேண்டுவோர், மானேஜர், ராமகிருஷ்ணவிஜயம், மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

---

3. கதாரஸமஞ்சரி:—இது, கும்பகோணம் நகர உயர்தரகலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத் **S.** எக்ஞஸ்வாமி அவர்களாலும் ஸ்ரீமத் **M.M.** நாராயணஸ்வாமிஐயரவர்களாலும் கலாசாலை மாணவர்க்கு நல்லொழுக்கம், ராஜபக்தி, தேசபக்தி, அறிவு முதலியவற்றை விருத்திசெய்யுமாறு எளிதிற் பொருள்விளங்கக்கூடிய சிறந்தநடையில் நல்லகாதத்திற் றிருத்தமாய் அச்சிட்டு வெளியிடப்பட்டதொரு கதைக்கொத்தாம். இதனைக் கலாசாலையதிகாரிகள் மாணவர்க்குப் பாடபுத்தகமாக அங்கீகரித்து இதனை ஆக்கியோர்க்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேம். இதன் விலை ரூ0—4—0. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.

4. பெற்றோரும்பிள்ளைகளும்:—இது, முடிகொண்டான் ஸ்ரீமத் **M.** நாராயணஸ்வாமி ஐயரவர்களால், பெற்றோர்கள் பிள்ளைகளைப் பழக்கவேண்டியமுறையையும், பிள்ளைகள் பெற்றோர்களிடம் நடக்கவேண்டியமுறையையும் விளக்கித் தக்க மேற்கோள்களுடன் சிறந்தநடையிலெழுதப்பட்டிருக்கிறது. கீழ்வகுப்பு மாணவர்க்கு மிகவும் பயன்படத்தக்கது. இதன் விலை ரூ0—1—0. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

5. கோன்றைவேந்தனும் அன்னையும்பிதாவும், பழையவுரையுடன்:—இவை, சென்னைப் பச்சையப்பன்கல்லூரித் தமிழ்ச்சங்கத்தாரால் வெளியிடப்பட்டன. இதுபோலப் பிறதமிழ்ச்சங்கங்களும் இயன்ற வளவு தமிழ்நூல்களை அச்சிட்டு வெளியிடின், தமிழ் கூடிய விரைவில் நன்னிலைக்கு வருவதுடன், தமிழ்நூல்களும் திருத்தம் பெறும். சென்னைப் பச்சையப்பன்கல்லூரித்தமிழ்ச்சங்கம் இன்னும் பலநூல்களை அச்சிட்டு உலகத்துக் குபகாரமாகுமென்று நம்புகிறேம். இதன் விலை ரூ0—4—0. வேண்டுவோர், காரியதரிசி, பச்சையப்பன்கல்லூரித்தமிழ்ச்சங்கம், சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககூ.] தூர்மதி-ஹேல ஆடி-மீ [பகுதி கூ.
Vol. XIX. July—August—1921. No. 9.

ஆந்தையைப்பற்றிய ஐயம்.

"மடங்கலிற்சினை இமடங்காவுள்ளத்
தடங்காத்தானை வேந்தருடங்கியைந்
தென்ஞெடுபொருதுமென்பவவரை
யாரமாலறத்தாக்கித்தேரோ
டவர்ப்புறங்காணேனுயிற்சிறந்த
பேரமருண்கணிவளினும்பிரிக
வறநிலைகிரியாவன்பினவையத்தத்
திறனிலொருவனேநாட்டிமுறைதிரிந்து
மெலிகோல்செய்தேனுகுகமலிபுகழ்
வையைசூழ்ந்தவளங்கெழுவைப்பிற்
பொய்யாயாணர்மையற்கோமான்
மாவனுமன்னெயிலாந்தையுமுரைசா
லந்துவஞ்சாத்தனுமாதனழிசியும்
வெஞ்சினவியக்கனுமுளப்படப்பிறருங்
கண்போனண்பிற்கேளிரொடுகலந்த
வின்களிமகிழ்நகையிழுக்கியாஞென்றே
மன்பதைகாக்குநீள்குடிச்சிறந்த
தென்புலங்காவலினெரீஇப்பிறர்
வன்புலங்காவன்மாறியான்பிறக்கே"

என்பது ஒல்லூர்தந்த பூதப்பாண்டியன் தன்னெடிகல்கருதின மாற்றூர்மீதுகூறிய வஞ்சினமொழி. இதனுல் ஆந்தையென்பானெருவன்

பாண்டியற்குக் கண்போல நண்பிற்சிறந்தானென்பதும் அவன் எயி லென்னுமூருக்குத் தலைவனென்பதும் அறியலாவன.

இதுநிற்க; இலக்கணநூல்களில் 'ஆதன்தந்தை ஆந்தை' யென மருஉமொழிக் குதாரணங்காட்டப்பட்டமைகொண்டு, ஆந்தையென்னும் பெயர் அவன் ஆதனுடைய தந்தையாதல்பற்றியே யிடப்பெற்றதென்று பலராலும் கருதப்பட்டிவருகின்றது. சிறிது ஆழ்ந்துநோக்கில் அங் ஙனங்கொள்ளுதலிற் பெரிதும் இயைபின்மைதோற்றுதலால் அஃ தையப்படுதலடைத்து.

ஆந்தையென்பான் ஆதனுடையதந்தையெனின் ஆந்தை முற்றேன் றியவனும் ஆதன் பிற்றேன்றியவனுமாவர். பின்பிறந்தான்பெயரொடு கூட்டி முன்பிறந்தானுக்குப் பெயர்வழங்குவது முறைமையன்றென்பது நன்கறிந்ததாகலின் அது பொருந்துவதன்றென்று தோன்றுகின்றது. மேலும் மகன்பிறத்தற்குமுன்பு தந்தை பெயரில்லாதிருந்தானென்பது இயைபில்லாததேயாகும். அன்றி வேறுபெயரிருந்து பின்னர் வீழ்ந்த தெனின் அதுவும் பொருந்தாது. இன்னர் தந்தை இன்னரென்பதுபட அவர் பெயரொடு நன்கு பயிலாதார் ஒருவரிருவர்கூறுமத்துணையல்லது, அதுவே யவர்க்குப் பெயராகப் பலராலும் வழக்குப்பெறுதல் யாண்டு மில்லை.

ஒருவர்க்கு இருவர்முதலிய பலர் மகன்முறையினாதலுங் கூடும். அங்ஙனமாகத் தந்தைக்கெய்தும் பெயர் எவருடையதாகுமென் றறிந்து வழங்குதலு மியலாதாம். ஆகவே, இவற்றால் 'ஆதனுக்குத் தந்தை ஆந்தை' என்னுதல் பொருந்துவதென்று தோன்றவில்லை.

இனிப் பெயர்கூறும் முறையில் இன்னர்மகன் இன்னரென்று கூறுதலே இன்றும் வழக்காறாயுள்ளது. இதனை அக் காலத்தான்றோர் பெயர்களுள்ளுங் காணலாம். அவை:—குன்றூர்கிழார்மகனர்; பெருங் கோழிநாய்கன்மகன் கண்ணனர்; மதுரை அளக்கர்ஞாழார்மகனர் மள்ள னர்; மதுரைக் கணக்காயனர்மகனர் நக்கீரனர்; அதியமானெடுமானஞ்சி மகன் பொகுட்டெழினி; ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன்; மாற்றூர்கிழார்மகனர் கொற்றங்கொற்றனர்; ஆர்க்காடுகிழார்மகனர் வெள்ளைக்கண்ணத்தனர்;உமட்டூர்கிழார்மகனர் பாங்கொற்றனர், எருமை வெளியனர்மகனர் கடலனர்; காட்டூர்கிழார்மகனர் கண்ணனர் என்பவும் பிறவுமாம்.

இன்னும், பெண்பாலரைப் பெயர்வழங்குவதிலும், பரிமகளிர் என்றிங்ஙன மன்றிப் பிறவாறு காணப்படவில்லை.

முதியோர்பெயர்கொண்டு இளையோரைக் குறித்தலே முறையென்பது இமயவரம்பன்றம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன்; சோழன்நலங்கிள்ளிதம்பி மாவளத்தான் என்பவற்றுள்ளும் காணப்படும். இங்ஙன மன்றி இன்னன் தமையன் என்று காண்டலரிது.

பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு என்புழியும் மூத்தோர்பெயரே முற்கூறப்பட்டது.

இராகவன், தாசரதி, காகுஸ்தன் ஸௌமித்திரி என்பனபோன்ற வடமொழிவழக்குகளும் இக்கருத்தே பற்றியுள்ளன.

இனி, நக்கீரனுக்கு மகன்முறையாயினும் கீரங்கொற்றனும் என்பவர். இங்கும் கீரன் என்ற தந்தையின்பெயரே முற்கூறப்பட்டது.

இவற்றைக்கொண்டுநோக்குமிடத்து ஆதன் என்றபெயரை முன்னருணர்த்தித் தந்தை யென்பதைப் பின்னருணர்த்தும் ஆற்றலுடைய ஆந்தையென்னும்பெயரும், ஆதனுடையதந்தையென்று பொருள் கொள்ளுதலில் இயைபுடைத் தன்றென்றே தோன்றுகிறது.

இலக்கணநூலார், ஆதன்தந்தை ஆந்தை, பூதன்தந்தை பூந்தை, வடுகன்தந்தை வடுகந்தை என்பவற்றை மரூஉமொழிகளென்றனர். செந்தமிழ்ச்சான்றோர் திருப்பெயர்களுள்ளே சாத்தந்தையார் என்பதும் ஒன்று (புறம். 80). அது, முன்னர்க்கூறியனபோலவே, சாத்தன் தந்தை என்னும் பிருமொழிகளின்சேர்க்கையேயென்பது நன்குணரலாகும். ஆகவே, ஆந்தை யென்பதற்கு ஆதனுடையதந்தையென்று பொருள்கொள்ளுதல்போலவே, சாத்தந்தையென்பதற்கும் சாத்தனுடையதந்தையென்று பொருள்கொள்வோமாயின், சாத்தந்தையார் தமப்பனாராகவும் சாத்தன்அவர்மகனாகவும் பிருத்தல்வேண்டும். இது நிற்க; பதினெண்கீழ்க்கணக்கினுளொன்றாகிய திணைமொழியைம்பதின் ஆசிரியர், 'சாத்தந்தையார்மகனார் கண்ணஞ்சேந்தனார்' எனப்படுவர். இதனாற் கண்ணஞ்சேந்தனாரே சாத்தந்தையார்மகனாரென்பது இனிது பெறப்பட்டது. முன்னர் அவர்மகன் சாத்தனெனப் பெறப்பட்டது. அஃதிதனோடு மாறுகொள்ளுதலின் சாத்தந்தை யென்பதற்குச் சாத்த

னுடைய தந்தையென்று பொருள்கொள்ளுதல் பொருந்தாதென்று தோன்றுகிறது. இனிச் சாத்தந்தையார்க்கு மகன்முறையாயினர் சாத்தனுங் கண்ணஞ்சேந்தனுமாகிய இருவரென்றுகொள்ளின் சாத்தனுலேயே அவர்பெயர் பெறுதற்கு ஏதுவின்மையின் அதுவும் நன்குபொருந்துவதின்று. 'எயினந்தை மகனர் இளங்கீரனர்' என்னும் பெயரும் (அகம்,3) 'சாத்தந்தையார் மகனர் கண்ணஞ்சேந்தனர்' என்பதோடு பெரிதும் ஒப்புமை யுடையதாய் மேற்கண்ட கொள்கையை விரோதிக்கிறது.

இங்ஙனம் ஆந்தையென்றபெயருக்கு ஆதனுடைய தந்தையென்று பொருள்கொள்ளுதல் பலவகையானு மிடர்ப்பாடுடைபதாகலின் அதற்கு ஆதனுகிய தந்தையையுடையவன், அல்லது ஆதனைத் தந்தையாகவுடையவன், என அன்மொழித்தொகையாற் பொருள்கொள்ளுதல் கூடாதா என்பதே ஈண்டெடுத்துரைக்கப்புகுந்த முக்கியமான விஷயமாகும். அங்ஙனங்கொள்ளுங்கால் 'ஆதனுடைய மகன் ஆந்தை'யென்பதே போதரும். அஃதாயின், ஆதன்தந்தை ஆந்தையென, இலக்கணநூலார்கூறியது வழுவுடைத்தாம்பிறவெனின், அற்றன்று; என்னை? அவர், ஆதனென்னும் நிலைமொழியும் தந்தையென்னும் வருமொழியுங் கூடியவழி ஆந்தையெனமருவிற் றென்னு மிலக்கணமுடிபுகாட்டினரன்றி, ஆதனுடைய தந்தையென்றேனும் ஆதனுக்குத்தந்தையென்றேனும் ஆந்தையென்னும் பெயரின்பொருளினை வேற்றுமைவழியில் விரித்துரைத்தாரல்லராகலினென்பது. அவ்விலக்கணமுடிபு, ஆதன்+தந்தை=ஆந்தை; என்றெழுதிப் படிக்கத்தக்கது.

இனி, எந்தையென்பது என்னுடையதந்தையெனப் பொருள்தருமாறுபோல ஆந்தையென்னுஞ்சொல்லும் ஆதனுடையதந்தையென்றே பொருள்படக்குமெனின், அஃதொக்கும்; ஆயினும், எந்தையென்பது எம்முடையதந்தை யென்னும் வேற்றுமைப்பொருளொன்றேதோன்ற விகாரப்பட்ட நிலைமொழியுடைய மூறைப்பெயர். ஆந்தையென்பது அவ்வாறன்றி யல்வழிப்பொருளு முடன்கொள்ளக்கிடக்குமியற்பெயராதலால் அதற்கு எந்தையென்பது காட்டாகமாட்டாது. அன்றியும் அன்மொழித்தொகையான் ஒற்றுமைப்பொருள் கொள்ளத்தருகியுள்ளவிடத்தில் வேற்றுமைப்பொருள்கொள்ளுதல் மிகையுடைத்தாகும். ஆகவே, ஒற்றுமைப் பொருளில் ஆதனுகிய தந்தையையுடையான் ஆந்தை என்றாகி ஆந்தை ஆதன்மகன் என்பதே போந்தபொருளாகும்.

இவ்வாறே, பூந்தை பூதனுடைய மகன், வடுகந்தை வடுகனுடைய மகன், சாத்தந்தை சாத்தனுடையமகன், எயினந்தை எயினனுடைய மகனென்பதே போந்தபொருளாகக் கொள்ளத்தகும். பிசிராந்தையார், ஓதலாந்தையார் என்பனவற்றிற்கு மிஃதொக்கும்.

இனிப் பிறிதொருசான்று மிக்கொள்கையையே வலியுறுத்து கின்றது. சிலப்பதிகாரக் கட்டுரைகாதையின்கண்ணே,

"உதவாவாழ்க்கைக்கீரந்தைமனவி
புதவக்கதவம்புடைத்தனனோர்நா
ளரசவேலியல்லதியாவதும்
புரைதீர்வேலியில்லெனமொழிந்து
மன்றத்திருத்திச்சென்றீரவ்வழி
யின்றவ்வேலிகாவாதோவெனச்
செவிச்சூட்டாணியிற்புகையமூல்பொத்தி
நெஞ்சஞ்சுடுதலினஞ்சிநடுக்குற்று
வச்சிரத்தடக்கையமர்கோமா
னுச்சிப்பொன்முடியொளிவீயுடைத்தகை
குறைத்தசெங்கோற்குறையாக்கொற்றத்
திறைக்குடிப்பிறந்தோர்....."

எனவருதல் கற்றார்பலரு நன்கறிந்தது. கீரந்தையென்னும் பெயருக்குக் கீரனுடையதந்தையென்பதே பொருளாயின் இதிற் குறித்த கீரந்தையென்பானுக்குத் தக்கபருவம்நிறைந்த கீரன் என்ற மகனொருவன் அக்காலத்திருந்தாணுகல்வேண்டும். கதையின்போக்கா லும் பிறகுறிப்புக்களாலும் அக்காலத்து அக்கீரந்தைக்கு மகனொருவன் இருந்திருத்தல் சாலாதென்று எண்ண இடமுண்டு. ஆதலால், கீரந்தை என்பான் கீரனுடையமகன் என்று கொள்ளுதலே பொருத்தமுடைத் தாம். அன்றியும், கீரனுடையதந்தையே கீரந்தையாயிற், கீரந்தைமனவி (கீரனுடையதந்தையினுடைய மனவி) யென்று சுற்றிக்கூறுதலினும் கீரன்றாய்' என எளிதிற் கூறுதலே ஆண்டைக் கேற்புடைத்தாகும். ஆசிரிய ரங்ஙனங்கூறுமையும் கீரனுடையமகனே கீரந்தை என்றுகருத இடந்தருகின்றது. இவற்றையெல்லா மின்று மறிஞர்களாராய்ந்து உண்மையினை நன்கு விளக்குவார்களாக.

T. N. அப்பனையங்கார்
மதுரை.

ஸ்ரீ

ஒரு குறிப்பு.



சென்ற சித்திரைமாதச்செந்தமிழ்ப்பகுதியில், 'சேய்மையண்மையில்' என்னு மரிச்சந்திரபுராணச்செய்யுளில் ஒருதிருத்தத்தைக்குறித்து எழுதினேன். அது ஸ்ரீமான் **K. G.** சேஷையரவர்களால் முன்னரே வெளியிடப்பட்டதென்று இப்பொழுது வெளிவந்த ஆனிமாதப் பகுதியா லறியப்படுகிறது. ஆதலி னதுபற்றிய இக்குறிப்பு இன்றியமையாததாகும்.

'சத்தியதேவதைகதை' என் னும் புத்தகத்தையேனும் அதிற் குறித்துள்ளதாகச் சொல்லப்படும் திருத்தத்தையேனும் யான் இதுகாறுங்கண்டதில்லை. பார்த்திருப்பின் அத்திருத்தத்தையே மீட்டும் யான் வெளியிடவேண்டுவதில்லை; அன்றி, அது இன்னரால் முதன்முறையாகக் கண்டு வெளியிடப்பட்டதென்றேனுங் குறித்திருப்பேன்.

இதுநிற்க: பல ஆண்டுகளுக்குமுன்னரேவெளிப்பட்டதாகச்சொல்லப்படும் அவ்விஷயத்தைச் சிறிதுமறியாத என்போன்றார் பலருளரென்றே நினைக்கிறேன். 'சேய்மையண்மை' என்ற அச்செய்யுளுடன் கூடிய பகுதி கடைசிமுறையாக 1915-ஆம் வருஷம் ஸ்கூல்பைனல் வகுப்புக்குப் பாடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அவ்வருஷம் சர்வகலாசங்கத்தார் பதிப்பித்த புத்தகத்தில் யான் தவறென்று காட்டியபடியே அச்சிடப்பட்டுள்ளது. அதற் குரைகூறப்புகுந்த பெரியோரும் உண்மைப்பாடங்கண்டு நிறுவினரல்லர். இவ்விருபுத்தகங்களும், பிழையுடன்பதிக்கப்பட்ட வேறுசிலபிரதிகளுமே யான் அத்திருத்தத்தை வெளியிடுங்காலத்து என்கைபிலிருந்தன. ஆதலால் அப்பிழை திருத்தப்படவேண்டுமென்று கருதி யானெழுதலாயினேன்; ஆயினும் இதனை முதன்முதற்கண்டு வெளியிட்ட பெருந்தகையாளர்க்கே யானெழுதிய அத்திருத்தம் உரித்தாகுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

T. N. அப்பனேயங்கார்,

மதுரை.

காக்கைபாடினியர்.

(This copy right is reserved to the author.)

காக்கைபாடினியனார் எனவும் வழங்குகின்ற இப்பெயர்கொண்டோர் பலர். சிலர்க்கு அடையும் தொடையும் கொடுத்து வழங்குவதும் உண்டு. அங்ஙனம் வழங்குமுறையில் ஈண்டு ஆராய்ச்சிக்குக் கொள்ளப்பட்டவர், (தலைச்சங்க?) இடைச்சங்ககாலத்தவராய்த் தொல்காப்பியனுரொடு ஒரு சாலைமாணாக்காகி [தொல்-செய்-க-நச் உரை] ஆசிரியர் அகத்தியனார்பாற் கல்விபயின்ற பன்னிருவருள் ஒருவராகியுள்ளார். இவரது கலையின் பெருமை "நல்யாப்புக்கற்றோர்மதிக்கும் கலைக்காக்கைபாடினியர்" [யாப்-கல-எழுத்-க-விருத்தியுரை] எனவும் "காக்கைபாடினியர் முதலிய மாப்பெரும்புலவர்" [ஷ ஷ தளை-சூ-ஷ] எனவும் உரையாளர் பாராட்டுமாற்றுன் நன்கு விளங்கும்.

இவரைப்பற்றி உரையாசிரியருளொருவராகிய ஆறைப்போயிலான் என்பார் கூறுமாற்றுல் இவரது உயரியசெயலுள் ஒன்று அறியலாகும். அது வருமாறு:- "கொள்வோன் மனனுணர்வின்றி மறைமொழிபயன் கொடாதென்பது; அற்றேல் தொல்காப்பிய காக்கைபாடினியர் ஒருவன் தாழவும் வாழவும் முறையே கூறினராலெனின் அவை அவர் மறைக்கூற்றுன் வந்தவல்ல. அன்னேர்சொல் பழுதாகாநிலைமையுடைமையின் நேர்ந்தவை என்க." [ஊசிமுறி சூ-உரை].

இதனல், காக்கைபாடினியர், கொள்வோன்மனனுணர்வின்றி யுரைத்த மறைமொழி ஒருவன் வாழ்வதற்குப் பயன்பட்டது என்பதும், அஃது அவர் மறைக்கூற்றன் வந்ததன்று என்பதும், அவர் தஞ் சொற் பழுதாகாத உயரிய தபோநிலையையுடையவர் என்பதும் பிறவும் புலனும். தொல்காப்பிய காக்கைபாடினியர் என உம்மைத்தொகை யாக இணைத்துரைத்தமையொடு, அத்தொல்காப்பியர்காலத்துநிகழ்ந்த செய்தியொன்றையும் ஒட்டியுரைப்பதால், 'தொல்காப்பியனுரொடு கல்வி பயின்ற ஒருசாலைமாணாக்கரே ஈண்டுக்குறித்த காக்கைபாடினியரென்பது வெளிப்படையாம்.

இனித் தொல்காப்பியரானவர், தம்மாசிரியர் பத்தினி குமரியாரை வடபுலமிருந்து தென்புலத்திற்கு உடனழைத்துவருமாறு இட்டகட்டளையைத் தாங்கி, அழைத்துப்போந்தார் என்பதும், வருமாற்றில் வையையாற்றின் நீர்ப்பெருக்குக் குமரியாரைக் கடிதீர்ப்ப "முன்னுகப் பின்னுக நாற்கோல் நீள அகலம் நின்று*கொண்டு வருக" [தொல்-பாயிநச்] என்ற ஆசிரியன்கட்டளை கடந்து "சென்று ஓர்வெதிர்ங்கோலை முறித்து நீட்டி"க் குமரியாரைக் கரையேற்றிக்கொணர்ந்து தம்மாசிரியர் பக்கல் விடுத்து, நிகழ்ந்தவாற்றினைப் பட்டவாறே மொழிந்தனர் என்பதும், அது பொறாது ஆசிரியர் முனிந்து "நீயிர் சொர்க்கம்புகாப்பிர்" எனச் சபித்தனர் என்பதும், "யாங்கள் ஒருகுற்றமுஞ் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையின் எம்பெருமானும் சொர்க்கம் புகாப்பிர் என அவர் அகத்தியனுரைச் சபித்தார்" [கூடு-கூடு-கூடி] என்பதும் பிறவும் நச்சினர்க்கினியத்தால் யாவரும் நன்கறிவர். இந்நிகழ்ச்சியும் இதன் முதிர்வும் பிறவும் சிறுகூரீஇயுறை என்ற நூலுள்ளும் பரக்கப் பிறிதோராற்றுன் மொழியப்படுகின்றன.

இவையுண்மையெனின் முன்னர்க்காட்டிய ஆறைப்பொயிலான் என்பார் கட்டுரையிற் காணும் ஒருவன் வாழக்கூறியமொழி இச்செயலின் முதிர்ச்சியைக் காட்டும் தொடர் என்பது உய்த்துணரப்படும். அது வருமாறு—

"இவ்வாறு இருபுறத்தோரும் வரம்பிறந்து முனிந்துமொழிந்த பெருமொழியுள், தொல்காப்பியனுர்மொழி பிழையாவண்ணம், அகத்தியனுர் சொர்க்கம்புகாதநிலை நேர்ந்தமைக்கு ஈடாகத் தவத்தான் மனந்தூய ராய்ப் பெருநிலைபெற்றுயர்ந்த சீலர் இயற்றியநூல் என்றும் நின்றுநிலவல் மாபெனினும் அது விலங்க, மற் றவரியற்றியநூல் (அகத்தியம்) உலகில் நின்றுநிலவாது அழியுமாறுபண்ணி, அவர் பொன்னுலகில் என்றென்றும் நிலையாக உறையாவிடினும் அப்பொன்னுலகிற்கு இறைவர்பதப்பேறுநிகழ்வுழி ஆண்டுச்சென்று அன்னவர்க்கு முடிசூட்டுக்குந? பெற்றியருள் ஒருவராக என மறுசாபம் அளித்த" [சிறுகூரீஇயுறை-கெட்டகாதை-137-உரை] னர் காக்கைபாடினியர் என்பது.

இதனுல் இவ்வாசிரியர் தம்மாசிரியர் அகத்தியனுரை வாழ்வித்த அரும்பெருஞ்செயல் தெற்றெனவிளங்கும். நிற்க.

*"நாற்கோல் நீளம் அகலநின்று" என்றிக்கவேண்டும். பத்திராதிபர்.

பன்னிருபடலம் என்னும் புறத்திணை நூலுள் இவர் இயற்றியபகுதியும் உண்டென்ப. யாப்பினைக் காலஇயைபிற் கேற்குமாற்றான் முதனூலினின்றும் விரித்தோதிய ஆசிரியர் தொல்காப்பியனார்போலாது இவர் அதனைத் தொகுத்துரைத்தனரென்பர் யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியர்.

"தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னர்பகுத்துப் பன்னினர்—நல்யாப்புக்
கற்றோர் மதிக்குங் கலிக்காக்கை பாடினியார்
சொற்றார்தந் நூலுட் டொகுத்து"

[யா-கல-எழுத்-க-விருத்தியுரை](வீரசோ-அலங்-10.பெருந்-உரைமே)

இவ்வாசிரியர் இயற்றிய யாப்பிலக்கணநூல் ஆக்கியோராகிய இவர் தம்பெயரால்—"காக்கைபாடினியம்" எனப் பெயருற்று வழங்கலாகும்.

அந்நூல் காலவயப்பட்டு ஒழிந்தது எனினும் பலராலும் நன்கு மதிக்கப்பட்டுள்ளமையின் அதன் நூற்பாக்கள்பல உரையாசிரியர் பலராலும் தம் உரைமேற்கோளாக ஆண்டாண்டுப் பரக்க எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றினின்றும் முதலிறுதிகாணவொண்ணாத இந்நிலையினும் இவ்வாசிரியரின்மதங்கள் சில அறியப்படுகின்றன.

அத்துடன் உரையாசிரியர்கள் ஓரோவழி இவ்வாசிரியரைப்பற்றி எழுதியுள்ள குறிப்புக்களும், இவரதுகோளைப் புலனுக்குகின்றன. அவையாவன.

தொல்காப்பியமுடையாரையொப்ப இவ்வாசிரியரும் தனியினையாப்புக்கு ஒருறுப்பாகவேண்டாதவர் என்ப. இதனைத் "தொல்காப்பியனொடு ஒருசாலிமாணாக்காராகிய காக்கைபாடினியரும் உறுப்பென்னார்" என்ற நச்சினார்க்கினியர் [தொல்-செய்-க] உரையான் அறிக.

தொல்காப்பியனார் அசையினை நேர்-நிரை-நேர்பு-நிரைபு என வகைப்படுத்துக்கொண்டனர். காலசைப்பொதுச்சீர் வேண்டிலர். இவ்வாசிரியரோ நேர்-நிரை-என இருவகைப்படுத்தி காலசைப்பொதுச்சீர் வேண்டிக்கொண்டனர் [யாப்-கல-சீரோ-க-விருத்தியுரை].

இவ்வாசிரியர்மதமே பின்னூலாசிரியராகிய யாப்பருங்கலமுடையார்க்கு ஒருவழியாயிற்று.

நேரசையினைத் தனியசை எனவும், நிரையசையினை இணையசை யெனவும் பெயரிட்டாண்டனர் இவ்வாசிரியர். இதனை,

"தனியசையென்றுவிணையசையென்று
விரண்டெனமொழிமரபியல்புணர்ந்தோரே"
[யாப்-கலம்-அசை-க-விருத்தியுரை-மேற்கோள்]

என்றதுகொண் டறிக.

தொல்காப்பியனார் அசைக்குறுப்பாக எழுத்துவகையினைப் பகினைந்தாகக்கொண்டமை பேராசிரியர் [தொல்-செய்-உ] உரையாற் புலனும். இவ்வாசிரியர் (அசைக்குறுப்பாக) எழுத்துவகையினைப் பதின்மூன்றாகக் கொண்டனர். இதனைக்,

"குறினெடி லளபெடை யுயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய விடைமையொ டாய்தம்
இஉ ஐயென மூன்றன் குறுக்கமோ
டப்பதின் மூன்று மசைக்குறுப் பாகும்"

[யாப்-கலம்-எழுத்-க-விருத்தியுரைமேற்கோள்] என்றதனால் அறிக. இன்னும்,

"இயற்சீ ரெல்லா மாசிரிய வுரிச்சீர்"
[கூ-கூ-சீரோ-உ-கூ-கூ] என்றவரும் இவரே.

பாவிற்கு இனம்வேண்டிக்கொண்டவருள் இவரும் ஒருவர்.* இவர் கொண்டமுறை விருத்தம்-துறை-தாழிசை என்பது. இது,

"வெண்பா விருத்தந் துறையொடு தாழிசை
யென்றிம் முறையி னெண்ணிய மும்மையுந்
தத்தம் பெயராற் றழுவும் பெயரே"

* பாவிற்கு இனம்வேண்டாது வேனயர் வகுத்தாளும் விருத்தம்-துறை-தாழிசைகளைக் கொச்சகத்தின்பாற்படுத்திக்கோடலன்றிப் "பாவினங்கோடல் ஆசிரியர் தொல்காப்பியனார்கருத்தன்று" என்றல் பேராசிரியர் நச்சினார்க்கினியர் கோள். ஆசிரியர் இளம்பூரணவடிகள்கருத்து வேறு.

[ஷை-ஷை செய்-உ-ஷை ஷை] என்றதனால் அறியலாகும். இனி, தொல்காப்பியனார் வண்ணகவொத்தாழிசைக்கலியானது தரவு-தாழிசை-எண்-வாரம் என்ற நான்குறுப்புடன்வருமென்றார். "வண்ணித்துப் புகழ்தலின் வண்ணமெனப்படும்" "தாழிசையானே வண்ணித்துப்புகழ் தலின் அப்பெயர்பெற்றது" என்பர் போசிரியர்.

இவ்வாசிரியரோ—"அச்சொலப் பட்ட வுறுப்போ டாகவடி—வைத்த நடையது வண்ணக மாகும்" [ஷை-ஷை-செய்-31-ஷை ஷை] என்று அராகம் உறுப்பாகவைத்துக்கூறினார்*. இவர் கூற்றினைப் போசிரியர் தம் முரையகத்தே மறுத் துரையாடியுள்ளார். அது வருமாறு:—

"இனி, வண்ணகம் என்பது அராகம் என உரைத்து அவ்வுறுப் புடையன வண்ணகவொத்தாழிசை எனவும் சொல்லுவாருமுளர். எல்லா ஆசிரியருஞ் செய்த வழிநூற்கு இது [தொல்காப்பியம்] முதனூலாதலின் இவரொடு [தொல்காப்பியனாரொடு] மாறுபடுதல் மரபன்றென மறுக்க" [தொல்-செய்-ராசி-போ-உரை] என்பது.

இவர் தமிழ்கூறுநல்லுலகத்திற்குவரம்பு "வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்-வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்-றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த-நூல்" [தொல்-செய்-க-போ-உரை-மேற்கோள்] என ஆசிரியர் பனம்பாரனார்செப்பியவாறே செப்பினர்.

இவர்காலம் தொல்காப்பியர்காலமே. அவ்வாராய்ச்சியினைப் பார்க்க.

பெயர்விழையான்,
தச்சநல்லூர்.

---

* பின்னூலாசிரியராகிய அமிர்தசாகரனார் "அவற்றொடு முடுகிய லடியுடை யாகவுமடுப்பது வண்ணக வொத்தாழிசைக்கலி" என்றதும் இவ்வாசிரியர்மதம் பற்றியேயாம்.

* இளங்காக்கைபாடினியர்.



இவர், தொல்காப்பியனுரோடு ஒருசாலைமாணாக்கராகிய காக்கை பாடினியர்க்கு இளையவர். ஆசிரியர் தொல்காப்பியனுர்மதங்களுட் பல இவர்க்கு ஏற்புடைத்தாகும். இனி ஒருசாரார் சிறுகாக்கைபாடினியர் எனப்படுபவர் இவர்தாமோ என ஐயுறவுகொண்டுள்ளார். இவர்வேறு, சிறு காக்கைபாடினியர் வேறு. இவ்வாசிரியர்கோளுக்குமாறுக, யாப்பில் தலை என்பதோருறுப்புத் தனிப்படவேண்டியவர் மற்றவராவர். இவர் தமிழ்கூறுநல்லுலகத்திற்குத் தெற்கெல்லையாகக் குமரியாறு உள்ளகாலத் தைத் தோற்றமுற்று நிலையியவர். மற்றவர் குமரிப் பௌவம் தென்னெல்லை யாகியகாலத்து எழுந்து சிறுகாக்கைபாடினியம் என்ற யாப்புநூல் ஒன்று யாத்தவராவர். இப்பொருளுரைபற்றிப் பேராசிரியர் கூறுவது ஈண்டைக்கு வருமாறு:—"இணைநூன் முடிபு தன்னூன் மேற்றே"—என்பதனுற் காக்கைபாடினியர் ஓதிய தலையிலக்கணம் ஈண்டும் கோடல்வேண்டுமெனின், அஃதே கருத்தாயின் இவர் (தொல்காப்பியனர்)க்கும் அவர் முடிபேபற்றித் தலை தலையல்வேண்டும். அல்லதூஉம் அவர்க்கு இளைய ரான காக்கைபாடினியர் தலைகொண்டிலர் என்பது இதனுற் பெற்றும். தலைவேண்டினர் பிற்காலத் தோராசிரியர் என்பது. என்னை?

'வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்'

எனக் கூறி 'வடவேங்கடந் தென்குமரி' எனப் பனம்பாரனர் கூறியவாற்றுனே எல்லைகொண்டார் காக்கைபாடினியர். ஒழிந்த காக்கைபாடினியத்து—

---

* இவ்வாராய்ச்சி 'சங்கப்புலவர் வரலாறு' (Tamil men of Letters) என்றநூலின் பகுதி. இவ்வாராய்ச்சியிற்காணுங் குற்றங்களை அவ்வப்போது திருத்தியளிக்குமாறு அறிஞர்களைவேண்டுகிறேன்.

'வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்கம் நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே'

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் குமரியாறுள்ளகாலத்தாரல்லர் என்பதூஉம், குறும்பனைநாடு அவர்க்கு நீக்கல்வேண்டுவது அன்றென்பதூஉம் பெற்றும். பெறவே அவர் இவரோடு (தொல்காப்பியனார்) ஒருசாலைமாணாக்கரல்லர் என்பது எல்லார்க்கும் உணர்வேண்டு மென்பது" [தொல்கா. செய்யு 1. பேரா-உரை] என்பது.

மேற்காட்டிய இதனுள் 'ஒழிந்த காக்கைபாடினியம்'யாது என்று ஆராய்வுழிப் பிறிதோரிடத்து இவ்வுரையாசிரியரே "வடதிசைமருங்கின்" என்ற இந்நூற்பாவையே எடுத்தோதி "தெற்குக் குமரியன்றிக் கடல் எல்லையாகியகாலத்துச் சிறுகாக்கைபாடினியர் செய்தநூல்"—[ஷை-மரபி 95-ஷை-ஷை] என்று கட்டுரைக்கு முகத்தான் இது சிறுகாக்கைபாடினியர் செய்த சிறுகாக்கைபாடினியம் எனத் தெற்றென விளங்கும்.

விளங்கவே ஆசிரியர் தொல்காப்பியனொடு ஒருசாலைமாணாக்கராகிய காக்கைபாடினியர் ஒருவர்,* அவர்க்கு இளையராகிய இளங்காக்கைபாடினியர் இரண்டாமவர், சிறுகாக்கைபாடினியர் மூன்றாமவர் என்ப

---

* காக்கைபாடினியரும், சிறுகாக்கைபாடினியரும் தலையினை ஒருதப்பாகக் கொண்டு தலைவகைப்படுத்துமாறு பின்வருவனவற்றுற் காண்க:—

(a) 1. "இயற்சீ ரிரண்டு தலைப்பெய தம்முள்
விகற்ப வகையது வெண்டளை யாகும்".

2. "உரிச்சீ ரதனு ளுரைத்ததை யன்றிக்
கலக்குந் தளையெனக் கண்டிசி னோரே".

3. "இயற்சீ ரிரண்டு தலைப்பெய தம்முள்
விகற்ப மிலவாய் விரவி நடப்பின்
அதற்பெய ராசிரி யத்தளை யாகும்."

என்றார் காக்கைபாடினியர்.

தும் அன்னோர்மதமும்பிறவும் புலனுகும். இம்மூவரேயன்றிப் பிற்காலத்தில் தோன்றிய இடைக்காடனுர்க்கு இளையராகிய காக்கைபாடினியர் என்பார் ஒருவரும், காக்கையின் குரலைப் பாராட்டிக்கூறியதன்காரணமாகக் காக்கைபாடினி என்ற அடைபெற்ற நச்செள்ளையார் என்பார் மற்றொருவருமாக எண்ணத்தில் வேறுபட்ட இருவர் இன்னும் உளராவர். பின்னர்க் காண்க.

இனி இவ்விளங்காக்கைபாடினியர் செய்த நூல் ஒன்று உண்டு என்பது மேற் போராசிரியர் கூறிய கட்டுரையுள் "அவர்க்கு இளையரான காக்கைபாடினியர் தளைகோண்டிலர்"—என்றதில், இவர் மதம் ஒன்று புலனுவதால் அதினின்றும் ஊகித்தறியக்கிடக்கின்றது. அந்நூலின்பெயர் இளங்காக்கைபாடினியம் என்றிருக்கலாமென்று ஊகிப்பாரும் உளர்.

இவ்வாசிரியரின்காலம்—தொல்காப்பியனர் [கால] ஆராய்ச்சியினை நோக்கியறிக.

பெயர்விழையான்,
தச்சநல்லூர்.

(b) 1. "இயற்சீ சொன்மு நிலையது வெண்டளை
யுரிச்சீ ரதனி லொன்றுத லியல்பே".

2. "ஈரசை யியற்சீ சொன்றிய நிலைமை
யாசிரிய யத்தளை யாகு மென்ப".

3. "வெண்சீ ரிறுதி நிரைவரிற் கலித்தளை
வஞ்சி வ்கைமை வரைவின் முரும்".

என்றூர் சிறுகாக்கைபாடினியர்.

[யாப்பருங்கலம்-தளையோத்து-இ-சூத்திரவிருத்தி-மேற்கோள்].

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார்

1921-ம்வது மார்ச்சுமீ 5உ நடத்திய

ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷை வினு.

ஸ்கூல்டைனல் வகுப்பு.

2 இலக்கணம்.

பரீக்ஷகர்:--ரெ. இராமையங்கார்.

1921-வது மார்ச்சுமீ 5உ சனிக்கிழமை பகல் 2—4

[அம்சம் 90]

நன்னூல்.

1. நன்னூலைப்பற்றியும் அதன் ஆசிரியரைப்பற்றியும் தெரிந்த வற்றை யெழுதுக.
2. நன்னூலின் எழுத்திலக்கணம் எத்தனை பாகு பாடுடைத்து?
3. முதலெழுத்துக்களும் சார்பெழுத்துக்களு மெவை?
4. உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றிய லிகரம் இவற்றிற் கிலக்கணங்கூறி உதாரணந் தருக.
5. மாத்திரையென்ற லென்ன? எவ்வெவ்வெழுத்துக்கள் எவ்வெவ்வளவு மாத்திரை பெறும்?
6. மொழிக்குமுதலாமெழுத்துக்களும், ஈற்றெழுத்துக் களும் எவை? மெய்களுள் எவ்வெவை எவ்வெவ்வுயிரோடு முதலாம்?
7. காலங்காட்டும் இடைநிலைகளும் விகுதிகளு மெவை?
8. ஆரியச்சிறப்பெழுத்துத் தமிழில் எங்ஙனந் திரிந்துவரும்? லகர ரகர யகரங்களே முதலிலுடைய ஆரியச்சொற்கள் தமிழில் எங்ஙனம் வரும்?
9. தமிழிற்கேயுரிய சிறப்பெழுத்துக்கள் எவை?
10. உடம்படுமெய்யென்ற லென்ன? எவ்வெவை எவ்வெவ் விடத்து உடம்படுமெய்யாம்?
11. எகரவினுமுன்னும் சுட்டின்முன்னும் நாற்கணமும் எங் ஙனம் புணரும்?
12. கீழ்வருந்தொடர்களில் எவையேனும் பன்னிரண்டிற்குப் (பிரித்துப்) புணர்ச்சிவிதி கூறுக. (1) களங்கனி (2) ஆற் றுநீர் (3) காட்டாண் (4) மருத்துப்பை (5) பண்டைக்

காலம் (6) கீழ்த்திசை (7) ஈராயிரம் (8) பனம்பழம் (9) கட்சாடி (10) மட்பாணை (11) பொற்றூலி (12) கொற்சேரி (13) தற்கொலை (14) வேய்ங்குழல் (15) அஃறிணை (16) கன்னன்று (17) கட்டீது.

13. வல்லிறுசுட்டு, குறில்வழிலள, குறிலணைவில்லாளனக்கள், ஆமூன் பகரவீ, குறியதன்கீழா இவை யெவை?

14. குறிப்பிற் பொருள்தரும்மொழிக ளெவை?

15. ஆகுபெயர்க் கிலக்கணங்கூறி அதன்வகை ஒவ்வொன்றற்கும் ஒவ்வோருதாரணந் தந்து விளக்குக.

16. எட்டு வேற்றுமைசுட்டும் உருபும் பொருளும் முடிக்குஞ் சொல்லு மெவை?

17. பெயரெச்ச வினையெச்சங்கள், அறுவகைத்தொகைகள் இவற்றிற் கிலக்கணங்கூறி உதாரணந் தருக.

18. அறுவகைவினைக்களும் எண்வகைவிடைகளு மெவை?

19. ஒருவனென்பதுயாரிருபாற்றுய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

இனைத்தென் றறிபொருள் உலகி னிலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.

இவ்விரு சூத்திரங்கட்கும் உரைகூறி உதாரணந் தருக.

20. ஏகார ஓகார இடைச்சொற்களின்பொருள்க ளெவை?

---

3 வியாசம்

பரீக்ஷகர்:—ம. கோபாலகிருஷ்ணையர்.

1921-ஆம மார்ச்சுமீ 5உ சனிக்கிழமை பிற்பகல் 4½–5½

[அம்சம் 30.]

I. (a) அன்பு தன்னயங்கருதாத்தன்மையால் எழுவதைக் குமுத வல்லி அழுதவல்லி இவர்களின் செய்கைகளைக்கொண்டு விளக்குக. அல்லது

(b) இருளனது கைம்மாறுவேண்டாக் கடப்பாட்டையேனும், கருப்பணனது குணகிசயங்களைப்பற்றியேனும் எழுதுக.

II. (a) "சிதோஷ்ணநிலைக்கேற்ப மனிதரியல்பு மாறுபடும்"

அல்லது

(b) "தேச ஊழியம்" என்பதைப்பற்றி ஓர் வியாசம் எழுதுக.

ஸ்ரீ

விவாகரகஸியம்.

(உஎச-ஆம் பக்கத் தொடர்ச்சி.)



கா:–விவாகத்தில் பாணிக்கிரஹணம் நடந்தபிறகு என்ன செய்கிறார்கள்.

ச:– பிறகு மணமகன், மணமகளை வலதுகாலைத்தூக்கிவைத்துக் கிழக்கு முகமாகவாவது வடக்குமுகமாகவாவது ஏழடி நடக்கும்படிசெய்து, ஒவ்வொரு அடியும் வைக்கும்போது அவளுடைய வலதுகாலைப் பிடித்துக்கொண்டு, 'விஷ்ணுதேவதை உன்னுடன் தொடர்ந்து வந்து பாதுகாத்துப் பலத்தைக் கொடுக்கட்டும்' என்ற பொருளுடன் தொடங்குகிற ஏழுமந்திரங்களையும் ஜெபிக்கவேண்டும்.

கா:–எதற்காக ஏழடி நடக்கவேண்டும்?

ச:– அம்மா! 'ஏழடி கூடநடந்தால் பெரியோர்களுக்கு மனதில் நட்புண்டாகும்' என்று சொல்லக்கேட்டிருக்கிறோம். வடமொழிநிகண்டுகளில் 'ஏழடிநடக்குந் தன்மை' என்ற பொருள்படும் 'ஸாவதீநம்' என்னும் பதத்துக்கு ஸக்யம் என்ற பர்யாயபதம் கூறுகிறார்கள். ஏழாவதடி வைக்கும்போது ஜெபிக்கப்படுகிற மந்திரம், ஏழடிநடந்து விட்டபடியால் நீ எனக்கு உயிர்த்தோழியாகிறாய்' என்று பொருள் படுகிறது.

கா:–தோழி! ஏழடிநடக்கவேண்டும் என்றமுறையின் உட்கருத்து எனக்கு நன்கு விளங்கவில்லை.

ச:– (சிறிது ஆலோசித்து) இதற்கு, இந்தப்பூமியிலிருந்து புவர்லோக முதலிய மேலேழுலகங்களிலும் நாமிருவரும் இணைபிரியாமற் சேர்ந்து சஞ்சரிக்கும்படி தேவர்கள் ஆசீர்வதிக்கட்டும் என்ற கருத்தும் இருக்கலாம்.

கா:–முனிவர்களின் அபிப்பிராயம் நன்றாய் ஊகித்தால் விளங்கும்.

ச:– அதன்பிறகு தம்பதிகளிருவரும் அக்கினியை வலம்வந்து முன்கூறியபடி விரித்துள்ள பாயில் உட்காரவேண்டும். பின் மணமகள் தன்னை

விடாது தொட்டுக்கொண்டிருக்க மணமகன் 'ஜனனரகஸீயத்தை யறிந்த ஸோமதேவதைக்கு இந்த ஆகுதி' என்று தொடங்குகிற பதினாறு மந்திரங்களைச்சொல்லி நெய்யினால் அக்கினியில் ஆகுதி செய்யவேண்டும்.

கா:—ஸப்தபதிக்குப்பிறகு ஹோமம் முதலான எல்லாச் சடங்குகளிலும் மணமகள் மணமகனை விடாது தொட்டுக்கொண்டிருக்கவேண்டு மென்கிறவிதி அவளுக்கு வழங்கும் தர்மபத்தினி என்னும் பெயருக்குப் பொருத்தமாயிருக்கிறது.

ச:— பிறகு அவளை, மணமகன் அக்கினிக்கு வடபக்கமாக வலதுகாலடி வைத்து நடக்கும்படி செய்து, 'இந்தக்கல்லில் இரு, கல்லைப்போற் சலிக்காத மனநிலையுடையையாகுக' என்று பொருள்படுகிற மந்திரத் தைச் செபித்துக்கொண்டு கல்லில் உட்காரச் செய்யவேண்டும்.

கா:—இதற்காகவா அம்மிக்கல்லைக் கொணர்ந்து வைக்கிறார்கள்? இந்தமுறை யை ஆராயும்பொழுது தன் கிருஹ அரசாட்சியில் இவளை அக்கினி சாக்ஷிகமாக அபிஷேகஞ்செய்து வீற்றிருக்கும்படி செய்யவேண்டிய தென்பது கருத்து என்று தோன்றுகிறது. நம்தேசத்திலும் ஸ்காட்லாந்து முதலிய ஐரோப்பியதேசங்களிலும் பூர்வீக அரசர்கள் ஒருகல்லில் உட்கார்ந்து முடிசூட்டிக்கொண்டதாகச் சரித்திரங்கள் படித்திருக்கிறேன்.

ச:— பிறகுமணமகன் மணமகளுடைய இரண்டு அகங்கைகளையும்சேர்த்து விரித்து அதில் இரண்டு முறை பொரிகளை எடுத்து நிரப்பி அதன்மேற் சிறிது நெய்தெளித்து, 'இந்தப்பெண்ணே இந்த ஹோ மம் செய்கிறாள்' என்று தொடங்குகிற மந்திரத்தைச்சொல்லி அக் கினியில் அந்தப் பொரியை ஹோமம் செய்விக்கவேண்டும்.

கா:—(சிறிது ஆலோசித்தவள்போல் நடித்து) மணப்பெண்ணின் உடன் பிறந்தவனல்லவோ அக்கினியிற் பொரியிட்டு ஹோமம் செய்ய வேண்டும்?

ச:— அப்படியுஞ் சிலமஹரிஷிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்படி ஏழுவைத்தல், கல்லில்வீற்றிருத்தல், பொரியோமஞ்செய்தல் இம் மூன்றும் தனித்தனி மூன்றுதடவை செய்யப்படவேண்டும்.

கா:—இதன் கருத் தென்ன?

ச:— மணமகளைக் கல்லில் உட்காரவைப்பதால் மணமகன் மணமகளை நோக்கி "உன்னுடைய மனநிலையானது என்னிடம் கற்போல் ஸ்திர மாயிருக்கவேண்டும், உன் மனநிலையைக் கலைக்க மற்றவர்கள் எவ் வளவு உபாயம்செய்தாலும் அவைகளைக் கவனியாது தள்ளிவிட வேண்டும்" என்று அவளை மூன்றுமுறை சபதம்செய்விப்ப தாகவும், பொரியோமத்தால் கணவனுக்கு நீண்டவாழ்நாள் அளிக்க வேண்டுமென்று மணமகள் அக்கினியை மூன்றுமுறை பிரார்த்திப்ப தாகவும், அக்கினியை மூன்றுமுறை பிரதக்ஷிணம்செய்வதனால் இருவருக்கும் சரீரகாந்தி, பலம், புத்தி முதலியன விர்த்தியாக வேண்டுமென்றும் நல்லசந்தானமும் சம்பத்துக்களும் உண்டாகும் படி அருள்புரிய் வேண்டுமென்றும் அக்கினியைப் பலமுறை பிரார்த் திப்பதாகவும் பொருள்படுகிறது.

கா:—நன்று நன்று; ரகுமஹாராஜன் திக்குவிஜயஞ்செய்யப்புறப்பட்ட பொழுது 'அவனுக்கு ஆயுள்விருத்தியாகவேண்டுமென்று நன்முய் வாழ்கின்ற வயதுசென்ற மங்கையர்கள் பொரியிட்டுவாழ்த்தினர்கள்' என்று காளிதாசர் கூறியிருக்கிறார்.

ச:— பிறகு ஜயாதிஹோமங்களைச்செய்துவிட்டு மணமகன் மணமகளின் இடுப்பிற் கட்டிய தருப்பைப்புரியை அவிழ்த்துவிட்டு அவ ளை யானையின்பேரிலாவது குதிரையின்பேரிலாவது ஏற்றிக் கூட்டிக் கொண்டுபோகவேண்டும். பல்லக்கிலும் அழைத்துச்செல்லலாம்.

கா:—ஜயாதிஹோமமென்றலென்ன?

ச:— இது, அதுவரைசெய்யப்பட்ட சடங்குகள் சபலமாகவேண்டு மென்கிற கருத்துடன் முடிவாய்ச்செய்யப்படுகிற ஓமமாகும்.

கா:—இதனுடன் விவாகச்சடங்குகள் முடிந்துவிட்டனவென்று நினைக் கிறேன்,

ச:— இன்னுங் கொஞ்சமிருக்கிறது. விவாகச்சடங்கின்பொருட்டு உண் டாக்கிய அக்கினியை அணியாமல் ஜாக்ரதையாயெடுத்துக்கொண்டு மணமகளை மணமகன் தன்வீட்டிற்கழைத்துக்கொண்டுபோய்ப் பிர வேசஹோமம்செய்தபிறகு விவாகச்சடங்கு முடிவுபெறுகிறது.

கா:—இந்த அக்கினியைத்தான் அவியாமல் வீட்டில்வைத்து வாழ்நாண் முழுதும் பூஜிக்கவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார் களோ?

ச:— ஆம். இந்த அக்கினியானது நடுவில் அவிந்துபோய்விட்டால் இதன் சாம்பலை அரணிக்கட்டையிற் பூசி அதைக்கடைந்து அக்கினி யெடுக்கவேண்டும்; அல்லது வேதமோதி நியமந்தவறாமலிருக்கிற சுரோத்திரியனுடைய கிருகத்திலிருந்து கொண்டுவரவேண்டும். அக் கினி அவிந்ததோஷத்துக்காக மணமகனாவது மணமகளாவது ஒருநாள் உபவாசமிருக்கவேண்டும்.

கா:—வாழ்நாண்முழுதும் இந்த அக்கினியையே கிருகத்தில் வைத்துப் பூசிக்கவேண்டுமென்னும் நிர்ப்பந்தமேற்பட்டதற்கு என்னகாரணம்?

ச:— விவாககாலத்திற் சாக்ஷியாகவிருந்த அக்கினியில் தினந்தோறும் காலை மாலைகளில் ஹோமம்செய்வது தம்பதிகளுக்கு நன்மையை விளைவிக்கும் என்று கருதியிருக்கலாம்.

கா:—வெகுகாலத்துக்குமுன் நம்முன்னோர்கள் மிகவும்தட்பமான மலை நாடுகளில் இருந்தார்களென்றும், அங்கு, குளிர்ச்சியைத் தணிக்க வேண்டி எப்பொழுதும் வீட்டில் அக்கினியை அவியாமல் வைத் துக்கொள்ளவேண்டிய தவசியமாயிருந்தமையால் இந்த நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்றும், பிறகு அவர்கள் காலக்கிரமத்தில் அவ்விடத் திருந்து புறப்பட்டு விதஸ்தா, அஸிக்நி, சுதத்ரி, சிந்து முதலிய நதிகளைக்கடந்து *ஆரியாவர்த்தத்திற் சிலகாலம்வசித்துப் பிறகு அதிக உஷ்ணமான தென்தேசத்திற் குடியேறியபடியால் இப் பொழுது அந்தநிர்ப்பந்தம் அவசியமில்லையென்றும் நவீனசரித்திர ஆராய்ச்சியாளர்களிற் சிலர் சொல்லுகிறார்கள்.

ச:— காந்திமதீ! பரலோக்மென்று ஒன்று உண்டா? இல்லையா? என்ற ஆராய்ச்சியில் ஆழ்ந்தவர்களாயும், பூமியிலுள்ளசுகங்களையே முக் கியமாய்க்கருதினவர்களாயும், சாருவாகர்களுடைய கொள்கைகளைப் பெரும்பாலும் கைக்கொண்டவர்களாயும் இருக்கிற நவீனநாகரி

* இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையிலுள்ளதேசங்களுக்கு ஆரியா வர்த்தமென்று பெயர்

கர்கள் சொல்லும் யுக்திகள் சிலவிஷயங்களிற் சரியாகத்தோன்றி னாலும் என்மனதுக்கு இணிக்கவில்லை. இக்காலத்தில் தர்மம் காமத்தை யனுசரிக்கத் தலைப்பட்டுவிட்டதென்று உன்னாலே சொல்லப்பட்டதல்லவா?

கா:—மேல் நடப்ப தென்ன?

ச:— பிறகு மணமகன், இரதத்தைக் கொண்டுவந்து நிறுத்தி அதில் மந்திரத்துடன் குதிரைகளையாவது எருதுகளையாவது பூட்டி மணமகளை ஏற்றிவைக்கவேண்டும். "புருஷன்வீட்டில் வேறுவேறுசுபாவமுள்ள மாமி மாமன், நாத்தி முதலியஜனங்களுக்குநடுவில் முகமறியாமல் புதியவளாய்ப்பிரவேசிக்கிறவள் எப்படிச் சுகமாயிருக்கக் கூடும்" என்று ஒருசமயம் மணமகளுக்கும் அவளைச்சேர்ந்தவர்களுக்கும் கலக்கமுண்டாகலாம் என்று நினைத்து, மணமகன், மணமகளைநோக்கி "நீ கணவனுடைய தலையில் ஏறுவதாகநினைத்துக்கொள்; நல்லசந்தானத்தைப்பெற்று வீட்டிற்குத் தலையியாயிரு; மாமி, மாமன், நாத்தி முதலியசுற்றமும் பசுமுதலிய வீட்டிலுள்ள எல்லா ஐசுவரியங்களும் உன்னுடையனவாய்விடும்"என்று பொருள் படுகிற நட்பைக்குறிக்கும் இனியசொற்களடங்கிய மந்திரங்களை உறக்கஜெபித்து மணமகளுக்கும் அவள்சுற்றத்தார்க்கும் களிப்பை யுண்டாக்கவேண்டும். இந்த நியமம், மந்திரஞ்செய்த மஹரிஷிகளுடைய லோகாநுபவத்தை நன்குவிளக்குகிறது.

கா:—ஐயோ! பணம்சம்பாதிப்பதில்மட்டும் அதிகசிரத்தைவைத்த இக்காலத்துப் புரோகிதர்கள், விவேகிகள் ஆராய்ந்து மிகவும் சந்தோஷப்படக்கூடிய இந்த விஷயங்களைப் பெரிதும் அறிந்துகொள்ளுகிறார்களில்லையே என்று விசனிக்கிறேன்.

ச:— இக்காலத்தில் வேதமோதுமந்தணர்களிற் பெரும்பான்மையோர் பொருள்தெரிந்துகொள்ளாமலே அகஷராக்கூட்டங்களைமட்டும் அத்தியயனஞ்செய்து திருப்தியடைந்துவிடுகிறார்கள்.

கா:—காவியம் பயின்றவர்களும் சாஸ்திரம் படித்தவர்களும் பெரும்பாலும் வேதமோதுவதில், சிரத்தையற்றவர்களாய் வேதத்தின் உட்

கருத்தையறியாமல் மறையோரென்ற பெயரை மட்டும் வகிக்க விரும்புகிறார்கள். இது காலத்தின் கொடுமையே.

ச:— முன்காலத்தில் அங்கங்களுடன் வேதங்களையும் சாஸ்திரங்களையும் விடாதுபடித்தவர்கள்தான் பண்டிதர்களென்று சொல்லப்பட்டார்கள். இப்பொழுதோ பழையகல்விப்பயிற்சியின்முறை முழுதும் வேறுபட்டிருக்கிறது. இதைப்பற்றி அதிகம் பேசுவதிற் பயனென்ன?

கா:—தோழீ! நன்றுய்ச்சொன்னுய்! "எப்படியாவது பொருள் சம்பாதித்துக் குடும்பத்தைப் பாதுகாப்பது குடும்பத்தலைவனுடைய முக்கியமான் கடமை" என்று பொருள்படுகிற ஒரு வேதவாக்கியந்தான் இப்பொழுது எல்லாருக்கும் அனுபவத்தில் வந்திருக்கிறது.

(தொடரும்.)

ர. கிருஷ்ணமாசாரியர் M. A.
வித்யாநிதி.

சிறைவிடந்தூது.

(உரைம்பக்கத் தொடர்ச்சி.)

ஞானதயர்கொண்டுமெழியாதகவல்கொண்டுமலமந்துதி
யேனவிலியாமலுனதன்புபுரிகின்றதெக்காலமோ
வானதிலனுகியனலாகிவளியாகிவனமாகியெங்
கோனுகியருவாகியுயிர்தோறுமுறைகின்றகுமரேசனே. (சுச)

குமராகுறப்பேதைகொண்காபொருஞ்சூர்க்குலஞ்சாயவென்
றமராடுமெயில்வீரவென்றென்றிரந்தாலுமருளாய்கொலோ
தமராகியுடனுகியுறவாகியருடந்தைதாயாகிமற்
றெமராகிவிளையாடுமிளையாயதங்கூருமிகல்வேலனே. (சுடு)

வேல்பாய்தடங்கட்பணைத்தோளவர்க்கன்புவிளைதந்துபுன்
மால்பாயுநெஞ்சத்தெனக்கன்பளித்தாலும்வகைகாண்கிலேன்
பால்பாய்குடச்சூல்வளைக்காவிவாவிப்பரப்பெங்கணுஞ்
சேல்பாய்தருந்தண்டலைத்தேவர்தொழுகின்றசெந்தூரனே. (சுசு)

தொழுதும்புகழ்ந்துன்றுணைத்தண்டையந்தாடொழுந்தோறுநின்
றெழுதும்பிறப்பின்னுமெய்தாதுமுருகேசனருளெய்திலீ
மொழுகும்பிறப்பின்மைமயிம்மைக்குமறுமைக்குமொருதென்புலத்
தெழுதண்டமறலிக்குமென்கொண்டொழிப்பீரெடுத்தோதுமே. (௫௯)

ஓதுந்தமிழ்ப்பாடலுணராதபுலையர்க்குரைத்தன்னர்பால்
யாதும்பெறீர்வெள்கியேமாறிவாயாறுமிசைவாணரே
காதுஞ்சினச்சுரடங்கப்பொருஞ்செங்கணமர்பாடிலிப்
போதும்பொருட்பெற்றுமுருகேசனடிபின்புகப்போதுமே. (௬0)

போதோடொடோறுமுருகேசவென்றேபுலம்புற்றவென்
றீதோடும்வழிகண்டுசிறிதேனுமருளாய்கொல்செந்தாரனே
மாதோடும்வடவாலிலைத்துஞ்சிவருமாமனெனநீயுமோர்
வேதாகமச்சாகரத்தோடுவீளையாடிவிழிகூர்தியே. (௬௧)

கூராழிமாயன்பணித்தாமரைக்கோயில்கொள்ளும்பிரா
னீரார்சடைக்கற்றையானுமுடியாதுநினைநோக்குவார்
நீராதவினைசெங்கதிர்ப்பட்டபனியென்றுசிதறுங்கொலோ
சோர்கழற்றண்டைமுருகாவெனக்கென்கொறளியாததே. (௬0)

வேறு

தெளிதருமனங்குழையவிழிபுனலரும்பவொருசிமிருகாங்குவியவே
களியளிமுழங்குமிளமுளரியினிலங்குமிருகழலிணைதினந்தொழுவனே
வளிபமிதம்பொழியுமடகளிறுநின்றுமுறையலறவெளிவந்தெடுமா
னுளமகிழ்தருங்கருணைமருகவிமயம்புரியுமுமையவடருங்குமரனே. (௬௪)

குமரகுருபரமுருகசுறவர்மடமகளினேயகுவவுமுலையுழுதபுயனே
யமரர்பதிதழையமிடையசுரர்பதியெரியவிமழலொழுகுகுலிசமுதல்வா
தமரமிடுதினையுலகமடையமுடிவெகுளநிசிசார்திமிரதினகரகுகா
விமலவறுமுகவரிதன்மருகனெனநினையுமவர்வினைபரிதிதருவுபனியே. (௬௨)

பனிகொண்டலர்ந்தபரகெதிதந்திலங்குமிருபதபங்கயம்பாவிலார்
தனிநெஞ்சிரங்கியறுமுகனென்றிரந்துமொருதாமன்புவந்தருகிலார்
புனிதன்பெருங்கயிலையிறைவன்பயந்தமுகபுகர்கொண்டதந்தியினோயா
யினியந்தவன்பிறவியொழிகின்றதெந்தவகையெரிகும்பிமண்டுமிவரே. (௬௩)

மண்டமரிடுந்தறுகண்வஞ்சகிருதன்படவழங்கியகொடும்படையினை
லண்டர்மகண்டமுமருங்கதியுமெண்டிசையுமஞ்சலறநின்றதலவோ
பண்டிதசவந்தரதிகம்பாகிரந்தாபாம்பாமுருந்தன்மருகா
தெண்டிரைமுகந்துதரளங்கொழிசொரிந்துதருசெந்தினகரொன்றபரனே. (௬௪)

எந்தைபரனீயலாதுயர்ந்தவர்கள்யாவரெவரென்றுனதுநாம்மோதுவா
ரைந்தருவும்வேறுவேறருங்கதியும்வேண்டுமவருங்கதியலாமல்வாழ்வரோ
கந்தமுருகேசமான்முருந்தன்மருகாகுகாகடம்பணிபடீரமார்பனே
நந்துலவுவாவிமேவுசெந்தினகாளனேகடம்புரிமயூவீரனே. (எடி)

வீரவேலினைப்பொருமயூவாகனத்தைவிறன்மேயசேவலைப்பரவுவீ
ராரமாலைவெட்சிமலர்சூழ்புயாசலத்தைநமையான்சரோருகத்தைநினைவீர்
கோரவாளரக்கருடல்சோரியாறெனக்கழுகுகூளிகூடிநட்டமிடவே
போரெலாம்விளைத்துவருவீரவாகுவைத்தொழுதுபூதிபூசிநிற்பதழகே. (எசு)

வேறு

அழகுசெறிமுகபங்கயத்தானிமொருமொகெனவருதண்டையங்கழ
லசலநிரைபொருதிண்புயங்களருள்கூர்
விழிமுளரியபயந்தருங்கரமொருகடவுளிமயம்பயந்தருள்
விமலமுலையமுதங்கமழ்ந்தகனிவாய்
பொழிகிரணவுதயந்தருங்கதிரொளியொளிருமுருவம்பெருங்கதி
புரிகருணையிவனெஞ்சிரங்கநினைவாய்
வழிபிரசமொழுகுங்கடம்பனையொருபொழுதுதொழுதன்புகந்தவர்
மகபதிபொன்மகுடம்புனைந்துறைவரே. (எள)

வேறு

உறையிடுவேலும்வாளுமனையகண்ணைநாடியொழுகுவிகாமூடனேன்
மறைமுதலாயவேதனளவறியாதபாதமலர்முடிசூடிவாழ்வனே
நறைகமழோதியோதியிளமுலைதெய்வயானைநறுநுதலேழைகேள்வனே
யறைகழல்வீரசேவலுயரியதேவதேவவழகுகுலாமயூனே. (எஅ)

ஊர்தருசிங்குகுட்டமீளவலிவங்குவெப்பொடாகியவெலும்புருக்கிநோய்
வேர்விழுகிரந்திசத்திசூலவலிநெஞ்சடைப்புவேதனைதரும்பருக்கணை
யார்தருசிலந்திபித்தகாமளாசரம்புளுக்கோடாகியபவந்தரமற்றநோய்
சார்வரவிரங்கிரட்சிசூரபவெகுண்டசத்திசாடியதடக்கைமுத்தனே. (எக)

(தொடரும்)

சு. நல்லசிவன்பிள்ளை,
உபாத்தியாயர்,
மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

திருவாரூர் ஒருதுறைக்கோவை.

கோவை என்பது இன்னதென்பதூஉம், இன்னின்ன உறுப்புக் களையுடையதென்பதூஉம் அறிஞர்பலருமறிந்ததே. ஒருதுறைக்கோவை யென்பது அகப்பொருளிலே ஒருதுறையை எடுத்துக்கொண்டு அந்தத் துறையிலே நானூறுபாட்டுப் பாடுதலென்பர் பெரியார். இதற்கு "நாணிக்கண்புதைத்தல்" என்ற துறையில் அமிர்தகவிராயர் பாடிய ஒருதுறைக்கோவையைக் காட்டாகச் சொல்லுவர் பண்டிதரத்தினங்கள்.

அங்ஙனமின்றி வேறிலக்கல் என்னுந் துறையில் ஒரு நானூறு செய்யுள் செய்தார், கீழ்வேளூர்க் குருசாமிதேசிகரென்பார். இவர் சென்னை முதலியஇடங்களிற் சிறப்புடன் பன்னாள் வாழ்ந்த கீழ்வேளூர்ச் சுப்பிரமணியதேசிகரின் மூதாதையாவர். சுமார் இருநூறுவருடங்கட்கு முன்னிருந்தவர். இக்கோவையின்பிரதிகள் அருகிவருவதைமுன்னிட்டுக் கல்விச்செல்வம் பொருட்செல்வம் இரண்டும் ஒருங்கேவாய்ந்த பெரியார் யாராவது இதனை வெளியிட முன்வரவேண்டி இதனுடன் அக்கோவையி லுள்ள சில பாடல்களை வெளியிடுகிறேன்.

பூவசஞ்செய்துவிண்ணுடுபுனர்பகைபோக்கியவோர்
கோவசஞ்செய்வளராரூர்த்தியாகர்குவவுத்திண்டோள்
தாவசஞ்செய்யவென்றுனீதராயித்தாணியிடைப்
பாவசம்போகநினைப்பாயனென்னபாதகமே. (க)

கூனிக்குவேண்டலன்காணுதபாதமென்கோகநக
ஞானிக்ககங்கைநெலியினிற்காட்டநயந்தவர்செந்
தேனிக்குமான்மொழிபாகர்கமலித்தியாகர்செய்மா
லானிக்கென்றேவிந்தவாடிக்குமேல்வந்ததாயிழையே. (உ)

[கூனிக்குவேண்டலன்–சீராமன்; னூனி, ஆடி வரப் பாடியிருப்பது கவனிக்கத்தக்கது.]

விண்ணுக்கொருமருந்தாரூர்த்தியாகரைமேவவர்தம்
புண்ணுக்கொருமருந்தாவதுகூடல்புரப்பவடன்
கண்ணுக்குவமைபசுபதியென்னக்கழறிவைகாப்
பண்ணுக்கிறுதிபுரிவதென்றியாவர்பகர்ந்ததுவே. (அ)

[*புரப்பவள் தன் கண்ணுக்கு உவமை—உமாதேவியின் திருநயனத்துக்கு உவமை; அதாவது மீனம். பசுபதி—ரிஷபம். இவைநாப்பண்—இவற்றின் மத்தியிலுள்ளது; அது மேஷம்=ஆடு.]

பேரெச்சமாக்கிவினையெச்சநீக்கும்பெரியகடாள்
பாரெச்சமேவிப்பார்த்திபன்வாழ்த்துபதாம்புயத்தை
யீரெச்சம்வாழ்த்துதென்னூரர்மார்பகமீவதொளிர்
யோரெச்சமூர்வதைக்கோறலென்றன்னையுணர்ந்தனளே. (கூ)

[பார்த்திபன்—மூசுகுந்தன். ஈரெச்சம்—பதஞ்சலி, வியாக்ரபாதர். ஓரெச்சம்—அக்கினி.]

உறியடிசெய்தளைநெய்மாந்திஞென்முடியொண்டுளவின்
வெறியடிவீதிதிகழ்கமலாபுரிமேவியுள்ளான்
சிறியடியாகரைச்சேவித்தவளெனச்சிந்தைசெய்யாண்
மறியடியென்னநின்றூளன்னையென்னைவசனிப்பதே. (கூ)

[தன்மை, முன்னிலை, படர்க்கைவரப் பாடியது.]

தன்மையிறுதியறமுன்னிலையும்பர்தானவர்சூழ்
பொன்மையொருவரைவாயமராைப்பொருதழிக்கும்
வின்மையுறவைத்தவாரூர்பூம்புயமீதுமிக
வன்மையினெஞ்சம்படர்க்கையென்றுங்கொலிவ்வையகத்தே(கூ)

பாயசநீயடல்பாதகமாகுமென்பாட்டினுக்கு
மேயசம்பாவனையாவதுகேளன்னைமெல்லியலார்
தூயசங்கீதமுந்தொன்முறையோசையுந்தொன்றுதொட்டே
யாயசெம்பொன்மதிலாரூரைச்சென்றணைவதுவே. (கூ)

பலசட்டிபானையுடைத்தரிவெண்ணெய்பரிந்தயின்று
னலசொற்கவுணியர்பூங்குடமாய்த்தனர்நங்கைதந்தார்
சலசத்தடம்பணையாரூரர்மாலைதாரிதற்குக்
கலசத்தினையுடைத்தென்னைகொள்வாய்பயன்கார்மயிலே. (சடு)

இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

---

* கூடல்புரப்பவள் எனக்கூட்டிப் பொருள்கொள்ளுதல் பொருத்தமான தென்று தோன்றுகின்றது. கூடல்புரப்பவள் மீனாக்ஷியாதலால் அவள் கண் ணுக்குவமை மீனமென்றவாறு. (உதவிப்பத்தியாதிபர்)

1921-வது ஜூலைமீ 4உ (துர்மதிவது ஆனிமீ 21-உ) காலை 11-மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வரஸேதுபதி மன்னரவர்கள், அக்கிராசனாதிபதி.
2. மகா-ரா-ரா-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராயஐயரவர்கள் B.A.,
3. ,, M மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A.,B.L.,
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A.,B.L.,M.L.C.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1921-வது ஜூன்மாத வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. சங்கத்தின் கட்டடத்தை முன்னேயஸ்திதிக்குக் கொண்டு வருவதற்காக ராட்டரசன்கோட்டைநகரத்தார்கள் அடியிற்கண்டபடி பொருளுதவிசெய்வதாக அன்புடன் வாக்களித்துள்ளார்கள்.

(1) மகா-ரா-ஸ்ரீ அரு. ச. அ. அருணாசலம்செட்டியாரவர்கள் ரூ 60.
(2) ,, முத்து.க.ஆவி.சேவு.சேவுகன்செட்டியாரவர்கள்ரூ65.
(3) ,, கண.க ராம.இராமநாதன்செட்டியாரவர்கள் ரூ 75.
(4) ,, கண.க.சொ.சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள் ரூ 50.
(5) ,, செவ். சித. சிதம்பரம்செட்டியாரவர்கள் ரூ120.
(6) ,, வெ.கண.மா.மு.கதிரேசன்செட்டியாரவர்கள் ரூ50.
(7) ,, சுப.ராம.சுப.சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள்ரூ55.
(8) ,, கண. க. லெட்சுமணன்செட்டியாரவர்கள் ரூ 50.

(9)	மகா-ள-ள-ஸ்ரீ	வெ. கண. வெ. கண்ணப்பசெட்டியாரவர்கள்	ரூ 100.
(10)	,,	சுப.ராம.ராம.ராமசாமிசெட்டியாரவர்கள்	ரூ 55.
(11)	,,	அ. பெரி-அவர்கள்	ரூ 50.
(12)	,,	கண. உல. ராம அவர்கள்	ரூ 15.
(13)	,,	வெ. கண. சுப. அவர்கள்	ரூ 50.
(14)	,,	சுப. அ. வெ. அவர்கள்	ரூ 35.
(15)	,,	அரு. சேவு. அவர்கள்	ரூ 60.
(16)	,,	கண. க. அவர்கள்	ரூ 50.
(17)	,,	குப. அ. நா. மு. அவர்கள்	ரூ 30.
(18)	,,	சித. கண. ச. ராம. அவர்கள்	ரூ 35.
(19)	,,	கண. மெ. மு. அவர்கள்	ரூ 35.
(20)	,,	கண. மெ. நா. அவர்கள்	ரூ 45.
(21)	,,	கண. உல. மா. அவர்கள்	ரூ 50.
(22)	,,	ஆ. வீர. வீக. தி. குள-அவர்கள்	ரூ 50.
(23)	,,	கண. லெ. லெ. அவர்கள்	ரூ 50.
(24)	,,	சுப. ராம. மெ. மெய்யப்பசெட்டியாரவர்கள்	ரூ 50.
(25)	,,	ஆசு. பசு. அவர்கள்	ரூ 75.

இவர்கட்கு இச்சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றார்கள்.

III. இவ்வருஷம்நடைபெற்ற சங்கம் பண்டிதபரீக்ஷையில் இரண்டாவதுவகுப்பில் முதலில்தேறிய பாலாம்பிகை அம்மாளுக்கு (Special case ஆக) ஐம்பதுரூபாபெறுமான தங்கப்பதக்கம் அளிக்கவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. இவ்வருஷம் நடைபெற்ற சங்கம் பிரவேசபண்டிதபரீக்ஷையில் தேர்ச்சிபெறுத கலாசாலை மாணவருள் இருவரை (Special case ஆக)மேல்வகுப்பிற் சேர்த்துக்கொண்டு கல்விகற்றுக்கொடுக்கவும், அவர்கட்குப் போஷணை அளித்துவரவும் தீர்மானிக்கலாயிற்று.

B. இராஜராஜேஸ்வரவேதபதி,
அக்கிராஸனாதிபதி.
4—7—1921.

தொல்காப்பிய வாராய்ச்சி

நான்காவது புணரியல்.

(1) மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தி
னிரண்டுதலை யிட்ட முதலா கிருபஃ
தறுநான் கிற்றொடு நெறிநின் றியலு
மெல்லா மொழிக்கு மிறுதியு முதலு
மெய்யே யுயிரென் றாயி ரியல.

(இ-ள்) மூன்றை முடியிலேயிட்ட முப்பதெழுத்துக்களுள்ளே இருபத்துநான்காகிய மொழியீற்றெழுத்துக்களோடு இரண்டை முடியிலேயிட்ட மொழிக்குமுதலாகின்ற இருபதெழுத்துக்களும் ஆகிய இவற்றைத் தமக்கு முதலீறுநிலைகளாகக் கொண்டு வருநெறியிலே நிலைமைபெற்று நடக்கும் எவ்வகைபட்டமொழிக்கும் முதற்கண் உள்ளனவும் ஈற்றின்கண் உள்ளனவும் ஆகிய எழுத்துக்கள் மெய்யும் உயிரும் என்று கூறப்பட்ட அவ்விரண்டியல்புடையன எ-று. முதலாகிருபஃது—வினைத்தொகை.

எழுத்துக்கள்முப்பத்துமூன்றனுள் ஈற்றினும் முதலினும் வருவன நாற்பத்தாறு என்றனர். அவற்றுள் முதற்கண் வரும் எழுத்துக்களுட் சில ஈற்றின்கண்ணும் வருமென் றறிவித்தற்கு. அவ்விரண்டிடத்தும் வருவன பன்னீருயிரும் குற்றியலுகரமும் ஞநமயவக்களுமாம். முதலுக்கேவருவன கசதபக்கள். ஈற்றிற்கேவருவன ணனரலழளக்கள். முதலீறுகளில் வரப்பெறுதன ட ற ஙக்கள். எனவே மொழிமுதற்கண்வருவன பன்னீருயிரும் மொழிமுதற் குற்றியலுகரமும் கசதப ஞநமயவக்களும் ஆகிய இருபத்திரண்டுமாம். ஈற்றின்கண்வருவன பன்னீருயிரும் மொழியீற்றுக்குற்றியலுகரமும் ஞ ண ந ம ய ர ல வ ழ ள க்களும் ஆகிய இருபத்துநான்குமாம்.

குற்றியலுகரமுதலாய மூன்றற்கும் வினையவற்றிற்குமுள்ள வேற்றுமையை அறிவித்தற்கு "மூன்றுதலையிட்டமுப்பதிற்றெழுத்தின்" என்றார்; ஏற்புழிக் கோடலென்னும் உத்திபற்றி அவ்வேனைய மூன்றனுள், குற்றியலுகரத்தையே கொள்க. என்னை? அஃதான்றோன்றியீண்டுப் புணர்ச்சியிடத்து வேற்றுமை பெற்றிருத்தலின் என்க. இனி மொழிமுதற்குற்றியலுகரத்திற்கும் மொழியீற்றுக்

குற்றியலுகரத்திற்கும் வேறுபாடு இல்லை என்பதறிவித்தற்கும் அங்ஙனங் கூறினர் என்றலும் ஒன்று. உகரத்திற்கும் மொழிமுதற் குற்றியலுகரத்திற்குமுள்ள வேற்றுமை அறிவித்தற்கு "இரண்டுதலையிட்ட முதலாகிருபஃது" என்றார். இனி அறுநான்கிற்றினுள்ளும் உகரமும் குற்றியலுகரமும் வருவனவாயிருப்பவும் முதற்கண்மட்டும் அங்ஙனம் பகுத்துக்கூறியதனாற் போந்த பயன்றான் யாதோவெனிற் கூறுதும். ஈற்றுக்குற்றியலுகரம் தனித்தவிகியுடையதுவாய்ப் பெரும்பான்மையாக வழங்கும் வழக்குப்பயிற்சிநோக்கி அங்ஙனம் பகுத்திலர் என்க. இனி ஒற்றொலிமுன்னுகப் படைத்து உயிர்மெய்வருதலிற் பன்னீருயிருடன் இவற்றிற்கும் வேற்றுமையுள்ளதாயிற்று.

முதலும் இறுதியும் என்னுது இறுதியும் முதலும் என்றார், புணர்ச்சியிலக்கணம் தெரிவிக்கின்றாதலின்.

உயிரும் மெய்படைத்துப் புணர்தலின் உயிரே மெய் எனக் கூறுது மாற்றிக்கூறினர். "முதலாகிருபஃது" "அறுநான்கிற்றொடு" என்பன மொழிக்கட்பயின்றுவருநிலைகுறித்தாதலின் ஈற்றை முற்கூறாயினர். புணர்ச்சிக்கண் ஈறு சிறப்பாதல் கருதி "அறுநான் கிற்றொடு" என ஒடுக் கொடுத்தாருமாம். இறுதியினும் முதலினும் இவ்வெழுத்துக்கள் வரும்: அவ்வருதலே மேற் கூறுப. இறுதியும் முதலும் இங்ஙனமாகவே இடையினும் அவ்விரண்டனையன்றிப் பிற வில்லை என்க. இதனானே உயிர்மெய்யெழுத்தொருமுத்தன்று என்பது பெற்றும். நிலைவருமொழிகள் புணருமிடத்தும் அப்புணர்ந்தவற்றைப் பிரிக்குமிடத்தும் இன்ன பிறவிடத்தும் இவ்வுண்மை நன்குபுலப்படும்.

2. அவற்றுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்.

(இ-ள்) முற்கூறிய மெய்யும் உயிருமாகிய அவ்விரண்டனுள் மொழியீற்றின்கண்வரும் மெய்யெல்லாம் புள்ளிபெற்றே நிற்கும் எ-று. ஈறு மெய் என மாறுக.

எனவே மொழிக்கு முதலாகும் மெய்யெல்லாம் புள்ளிபெறுமனும் இடையாயினவெல்லாம் புள்ளிபெற்றும் பெறுமனும் கடையாயினவெல்லாம் புள்ளிபெற்றும் நிற்குமென்க.

இடையிற் பிரித்தலே மெய்ம்மயக்கத்தினும் புணர்ச்சிக்கண்ணும் "மெய்யுயிர்நீங்கின்" என்னுஞ் சூத்திரவுரையினும், பிறவற்றினும் கண்டு கொள்க.

இது "புள்ளியிற்றுமுனுயிர்" என்னும் சூத்திரத்தோடு மாட்டேறி நின்றது; மேற்கூறும் புணர்ச்சிகளெல்லாம் இருமொழிப்புணர்ச்சியல்லது இல்லை என்றும், அஃது எழுத்துவகையான் நான்காமென்றும், அவ்விருவகைமொழியும் சொல்வகையான் நான்காகும் என்றும், அங்ஙனம் புணர்வது சொல்லுஞ்சொல்லும் அன்று எழுத்தும் எழுத்துமே என்றும், அங்ஙனம் புணரும்வழி இயல்பொன்றும் திரிபிடன் மூன்றென்றும், அத்திரிபுகடாம் இவை என்றும், நிலைமொழி அடையடுத்தும் வருமொழியடையடுத்தும் அவ்விருமொழியும் அடையடுத்தும் புணருமென்றும் மருவின்றொகுதியும் புணர்ச்சிபெறும் என்றும், மூவகைத்திரிபினுள் மிக்குப்புணரும் புணர்ச்சி இருவகைய என்றும், வேற்றுமையெனப்பட்ட அவற்றது பெயரும் முறையுந் தொகையும் இவையென்றும், நான்காவதும் ஏழாவதும் ஒல்வழி ஒற் றிடைமிகும் என்றும், அகரமுனையிலே ஆறனுருபி னகரக்கிளவி கெடும் என்றும், வேற்றுமைகள் பெயரின் பின்னிடத்தனவாம் என்றும், பெயர்கட்குப் பெயரும் முறையும் இவையென்றும், அவற்றின்பின் சாரியை வருமென்றும், அச்சாரியைகள் இவையென்றும், அவை இவ்வுழித் திரிபும் இயல்பும் பெறும் என்றும், அச்சாரியைகளெல்லாம் புணர்மொழியுள்ளே இவ்விச்சொல்லோடு கூடிவரும் என்றும், அத்து அற்று என்பவற்றின்முன் வரும் வலி மிகும் என்றும், எழுத்தின்சாரியை இவையென்றும், அவ்வெழுத்தின்சாரியையுள் இவ்விவற்றிற் இவ்விவை என்றும், புணர்ச்சிக்கு இன்றியமையாதனவற்றை எடுத்துக்கூறினவர், முன்னர் "மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" என்ற சூத்திரத்தின் செய்கையைப் பின்னர்ப் "புள்ளியிற்றின்முனுயிர்" என விதித்தனராதலின் என்க.

ஆசிரியர் உயிர்மெய்யெழுத்தை ஓரெழுத்தாகக் கொள்ளாமையானே உயிர்மெய் யெழுத்து மொழிமுதற்கண்வரின் அதனை மெய்ம்முதலாகவும் ஈற்றின்கண்வரின் உயிரீறாகவும் விதித்தனர்; எழுத்துக்கள் முப்பது என்றமைக்கேற்ப "மெய்யேயுயிரென்றீரியல" என்று புகுந்தமையின் மெயிம்முதன் மெய்யீறு என் று கூறுங்கால் முதற்கண் அது புள்ளி பெறாது உயிராலேறப்பெற்றும் ஈற் றி ற் றனியாகப் புள்ளிபெற்றும் வரும் என்பதை இச்சூத்திரத்தான் விளக்கினர் என்க.

இங்ஙனங் கூறுக்கால் வருமொழிமுதற்கண் மெய் நிற்பின் நிலைமொழியீற்றுயிர் அம்மெய்ம்மே லேறுங்கொல்லோ என்னும் ஆசங்கைக்

கிடனும் என்க. புள்ளிபெறும் என்று இவ்வியற்கண் கூறுதலின் வேறொருபொருள் நுதலிவந்ததென்பது வெளிப்படை; ஒற்றுமைகயத் தானே உயிரேற அஃதிடங்கொடுக்குமென்பது குறிப்பித்தாரு மாம். அன்றெனிச்சூத்திரங் கூறியதுகூறலாய்முடியும் என்பது, "மெய்யினி யற்கை" "புள்ளியில்லா" "மெய்யின்வழியது" "உயிர்மெய் யல்லன மொழிமுதலாகா" என்றற் றொடக்கத்த சூத்திரங்களாற் பெறப்படும். என்னை? முதற்கண் மெய் உயிரொடுசேர்க்தும் ஈற்றிற் சேர்ந்தும் சேராமலும் வரும் என்று அறியக்கிடத்தலின் என்க. மெய்யானது உயிரொடு புணரிற் புள்ளிபெறுது.

(தொடரும்)

நவநீதகிருஷ்ணபாரதி.

ஸ்ரீ

புத்தகமதிப்புரை.

புதல்வர்கடமை:—இது, பெற்றோர்க்குப் புதல்வர் செய்யவேண் டியகடமைகளை விளக்கித் திரிசிரபுரம் நாஷனல்காலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத்-ம. கோபாலகிருஷ்ணையரவர்களால் இனியநடையில் எழுதி வெளியிடப்பட்டது. இ தி ல் இதிகாசபுராணங்களிலிருந்தும் கீழ்நாட்டு மேனாட்டுச்சரித்திரங்களிலிருந்தும் நாற்பது நல்லோர்களின் சரித்திரங்கள் ஆங்காங்குச் சந்தர்ப்பத்துக்கிணங்கச் சேர்க்கப்பட் டுள்ளன. இடையிடையே கம்பராமாயணம் திருக்குறள் வில்லிபாரதம் விநாயகபுராணம் பிரபோதசந்திரோதயம் அரும்பொருட்டிரட்டு முதலிய நூல்களிலிருந்து சமயோசிதமானசெய்யுட்கள் பல, மேற்கோளாக எடுத் தாளப்பட்டுள்ளன. அ வ ற் று க் கு அரும்பதவுரையும் இறுதியிற் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது படிப்பவர்க்கு நற்குண நற்செயல்களை விருத்திசெய்யத்தக்கதாயிருப்பதால், கலாசாலைமாணவர்க்குப் பாடபுத் தகமாக வைக்கத் தகுதியுள்ளதாயிருக்கிறது. இதன் விலை ரூ0-12-0. வேண்டுவோர், ம து ரை, புதுமண்டபத்திற் புத்தகவியாபாரம்செய்யும் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனருக்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

க

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககக.] துர்மதி-ஐப்பசி ஆவணி-மீ [பகுதி க0.
Vol. XIX. August—September—1921. No. 10.

இறந்துகொண்டுவரும் தமிழ்த்தொன்னூல்கள்.

முன்னுரை:

திருவருளால் இன்றளவும் உலகவழக்கிலும் ஒங்கிநின்றுநிலவும் தமிழ்மொழியிலே, பண்டைக்காலப் பெருந்தகையாளர் பலர் அரியபெரிய இலக்கண இலக்கியத்தொகுதிகளை அக்காலவியல்பிற்கேற்ப மனனஞ் செய்வதற்கெளிதாம்நிலையிற் செய்புளாக்கத் திட்பநுட்பமுடன் யாத்துப் பின்னோர்க்கு உலவாவைப்பாக என்றும் நிலவுதற்பொருட்டாகப் பனை யோலைகளிலும் தாழைமடல்களிலும் எழுதிப் போற்றி யளித்துப்போயி னர்.

அங்ஙனமளித்தருளியநூல்களுள் ஒருசில, எடுப்பாரும் எழுதுவா ரும் படிப்பாரும் பாலிப்பாரும் அற்றுக் காலப்பழமையாற் செல்லரித்து இராமபாணங்களாற் றுளைப்புண்டு உட்கி மட்கிப் பெயரளவினவாகி விட்டன. சில அடி நுனியற்று முற்றும் கிடைப்பதற் கரியனவாய்விட் டன. இன்னும் சிலநூல்கள் ஒப்புநோக்கிக்கொள்வதற்குங்கூட யாண் டும் அத்தகைய பிறிதொன்று கிடைப்பதற்கரியநிலையில் அருகிவிட்டன. அத்தகைய நூல்களுள் அடியிற்குறிக்கப்படுவனவும் சார்ந்தனவாகும். அவையாவன:—

1. "தத்துவரத்நாகரம்"
2. "ஊசி முறி" "ஆறைப்பொயிலான் உரை"
3. "மாறனிகண்டு"
4. "நாமதீபநிகண்டு"—பழைய உரை

5. "கைந்நிலை"
6. "பரிநூல்"
7. "தொல்காப்பியப்பொதுப்பாயிரம்" ஆத்திரேயன் போ சிரியன் உரை.
8. "சிறுகுரியுறை"
9. "சங்கர விலாசம்"
10. "மடல்"
11. "கொண்டல்விடுதூது"
12. "சிலபிரபந்தங்கள்"

என்பனவாம். இவையன்றி,

1. மாறன் அகப்பொருள்.
2. தொல்காப்பியச் சொல்லதிகாரம் கல்லாடனார் உரை.
3. ஷை ஷை போசிரியர் உரை.
4. பெருங்கதை.

முதலியன அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்னூடுகளிலும் வடநாடுகளிலும் ஒருபிரதிக்கு அதிகமாகவேனும் கிடைக்கின்றமையால் இங்கு அவை எண்ணமுற்றில. நிற்க;

மேற்காட்டியவற்றுள், தத்துவரத்நாகரம் என்பது ஒருசைவ சித்தாந்த இலக்கணநூல்: வேயமதங்களையெடுத்தோதி அவற்றின் நிலையினை உள்ளவாகண்டு மறுத்துரைத்துச் சுத்தசைவத்தை நிலைநாட்டுவது. சிவஞானசித்தியார்முதலிய சித்தாந்தநூல்களைவிட விரிவாயது.

இந்நூல் 13½ அங்குல நீளமும் 1⅝ அங்குல அகலமுமுள்ள பனையோலையில் எழுதப்பட்டுள்ளது. 188 இதழ்களை (அதாவது 376 பக்கங்களை) யுடையது. இவ்வேடு இற்றைக்கு 221 ஆண்டுகளுக்குமுன் (அதாவது கொல்லம் அ ா எ ல சு ளு ஆவணி மீ சவ) முருகன் மாறியாடும் பெருமாள் என்பாரால் எழுதப்பட்டது. **1043** விருத்தங்களையுடையது.

இறந்துகொண்டுவரும் தமிழ்த்தொன்னூல்கள் கூகு

இந்நூலை யருளியவர், "கோகழியடிகள்" என்பாரொருபெரியார். இந்நூல், திருநெல்வேலி ஈசானமடாலயத்திற் சின்னப்பட்டம் சூட்டப் பெற்ற சுவாமிநாததேசிகர் (இலக்கணக்கொத்து நூலாசிரியர்) சங்காபி ஷேகம்பெற்றகாலத்துத் திருவாவடுதுறையிலிருந்து, அவர் சித்தாந்த வுண்மை அறிந்துகோடற்காக மயிலேறும்பெருமாள்பிள்ளை என்னும் தனிகரொருவரால் தென்னாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

காலாந்தரத்தில் இவ்வேடு அத்தனிகர்கால்வழியினர்வசமாகி இக் காலத்தே போற்றியாதீனபரம்பரையாரொருவர்மூலம் கொற்கையிற்கிட்டி யது. இராமபாணமுற்ற இப் பழையவேடு கிடைத்து ஒன்பது வருடங் களுக்கு அதிகமாயிற்று. அதுமுதல் இதுவரை பாணம் உழுத பொட் டுக்களை ஒப்புநோக்கிக்கொள்வதற்காகப் பிறிதோர்பிரதியொன்று தேடி யலையுற்றேன். தருமபுரமடம், சொர்க்கபுரமடம், திருவாவடுதுறை மடம் முதலிய மடங்களிலும், தென்னாடு வடநாடுகளில் யானறிந்த இடங் களிலும் சென்றுதேடியும் தேடுவித்தும் வேறுபிரதியொன்றும் கிட்டி லது. கிடைத்த இவ்வொருபிரதியைப்பற்றித் திருவாவடுதுறைப் பண் டாரசந்நிதி ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகமூர்த்திகளிடம் அறிவித்ததில் அன்னோர் இவ்வேட்டைப்பார்வையிட்டுத் தாமே அச்சிடுவதாய் வாக் களித்தனர். அடுத்து, ஏட்டில் உள்ளவா பெயர்த்தெழுதி ஒப்புநோக்கி ஆய்ந்து அச்சிற்கு இலக்காய்ப் பிரதி தயாரானவேளை இந்நூலின் தொளர்ப்பாக்கியநிலைபோலும் அச்சிட வாக்களித்தார் சிவசாயுச்சிய நிலைபெற்றனர். இந்நிலையிற் காதிதவிலையேற்றமும், இதுவரை இந் நூலைத் தேடியெடுத்து எழுதிச் செப்பஞ் செய்யநேர்ந்தபொருட்செலவும், காலநிலையும் அச்சுறுத்த, அச்சிடவியலாமற் கட்டிவைத்துள்ளேன்; அச்சிடவிரும்புவார்க்கு அளிக்கவிரும்புகிறேன்.

இந்நூலின் விஷயசூசிகையால் இந்நூலின்பெருமையும், பொருளு ரையின்போக்கும் பரப்பும் நன்கு புலனுமாதலின் வேறு எடுத்தோதாது விடுத்தேன்.

பெயர்வினையான்,

தச்சநல்லூர்.

ஸ்ரீ

தத்துவரத்நாகரம்.

விஷயசூசிகை.*

கடவுள்வாழ்த்து
அருளிறைவணக்கம்
சந்தானமுறை
மடமுறைமை
சுத்தசைவநூல்கள்
சத்து இலக்கணம்
பதியிலக்கணம்
பசுவிலக்கணம்
பாசவிலக்கணம்
மலவிரிவு

சமயநிர்ணயம்.

சமயபக்கம்
அகச்சமயம்
உட்சமயத்தொகுதி
ஊர்த்தசைவம்
நிராகரணம்
அநாதிசைவம்
நிராகரணம்
ஆதிசைவம்
நிராகரணம்
மகாசைவம்
நிராகாணம்
பேதசைவம்
நிராகரணம்
அபேதசைவம்
நிராகரணம்
அந்தரசைவம்
நிராகரணம்
குணசைவம்
நிராகரணம்
நிர்க்குணசைவம்
நிராகரணம்
அத்துவாசைவம்
நிராகரணம்
யோகசைவம்
நிராகரணம்
ஞானசைவம்
நிராகரணம்

அணுசைவம்
நிராகரணம்
அவாந்திரசைவம்
நிராகரணம்
கிரியாசைவம்
நிராகரணம்

சூந்தசைவம்
(கிலோகாட்டு)

பாசுபதம்
நிராகரணம்
காளாமுகமகாவிரதம்
நிராகரணம்
வாமம்
நிராகரணம்
வயிரவம்
நிராகரணம்
சிவாத்துவிதம்
நிராகரணம்
சிவசமமௌனம்
நிராகரணம்
நிராகரணத்தொகுதி
புறச்சமயம்
நியாயம்
நிராகரணம்
வைசேடிகம்
நிராகரணம்
மீமாங்கிசம்
நிராகரணம்
சாங்கியம்
நிராகரணம்
சாங்கியாங்சம்
நிராகரணம்
வைணவம்
நிராகரணம்
பாட்டம்
நிராகரணம்
பிரபாகரம்
நிராகரணம்

வையாகரணிகம்
நிராகரணம்
மாயாவாதம்
நிராகரணம்
மந்திரவாதம்
நிராகரணம்
சந்திரவாதம்
நிராகரணம்
சூரியவாதம்
நிராகரணம்
ஔடதவாதம்
நிராகரணம்
ஊழ்வாதம்
நிராகரணம்
தருக்கவாதம்
நிராகரணம்
இயந்திரவாதம்
நிராகரணம்

சங்கற்பத்தொகுதி

தீர்த்தப்பிரமாணம்
நிராகரணம்
அத்துவா
நிராகரணம்
அர்ச்சனைசங்கற்பம்
நிராகரணம்
சாத்திரசங்கற்பம்
நிராகரணம்
வாக்கியாவியந்திர
சங்கற்பம்
நிராகரணம்
புத்தன்மதம்
நிராகரணம்
அருகன்மதம்
நிராகரணம்
உலோகாயதன்மதம்
நிராகரணம்
சமயபக்கம்

* இதிற்கண்ட விடயப்பெயர்கள் எழுதியபடியே பதிக்கப்பட்டன. பிழையுள்ளவற்றைத் திருத்திக்கொள்ளவேண்டும். பத்திராதிபர்.

சமயத்தொகுதி
அநாதிசிருட்டிவரலாறு
குடிலஉற்பத்தி
உருத்திரோற்பத்தி
சீவான்மா
அந்தரான்மா
பரமான்மா
ஞாஞான்மா
பூதான்மா
தத்துவவகை
கலஉற்பத்தி
வாக்கோற்பத்தி
விளக்கம்
வைகரி
மத்திமை
பைசந்தி
சூக்குமை
அதிசூக்குமை
உற்பத்திவிளக்கம் தொடர்ச்சி.
அக்கர அமைப்பு
அத்துவாவகை
தத்துவநிர்ணயம்
விளக்கம்
மாயாசத்தியிலக்கணம்
விளக்கம்
பூதக்கூறு
விளக்கம்
வாயுபேதம்
வாயுவகை
பிராணவாயு வியக்கம்
அபானவாயு வியக்கம்
உதானவாயு வியக்கம்
வியானஞதியியக்கம்
நாகன்கூர்மஞதியியக்கம்
தேவதத்தஞதியியக்கம்
ஏனயவியக்கம்
வாயுநிறபேதம்
நாடிபேதம்
மலத்தின்செய்கை
முக்குணபேதம்
சாத்துவிகம்
இராசதம்
தாமதம்
முக்குணநிமலர்
சடாதாரம்
மூலாதாரம்விளக்கம்
சுவாதிட்டானம் விளக்கம்
மணிபூரகம் விளக்கம்
விசுத்தி விளக்கம்
அஞகதம் விளக்கம்
ஆஞஞை விளக்கம்
ஆன்மவவத்தை
சதுர்தசாகரணவவத்தை
தத்துவாவத்தை
பஞ்சத்திரிஞ்சர்க்கஞவவத்தை
பஞ்சவிஞ்சர்க்கஞவவத்தை
குணசம்பந்தவவத்தை
அவத்தாந்திராவவத்தை
நனவுவிளக்கம்
கனவுவினக்கம்
சுழுத்திவிளக்கம்
துரியபோதவிளக்கம்
துரியாதீதம் விளக்கம்
உரியோர்
கேவலான்மா-விளக்கம்
சகலான்மா-விளக்கம்
சுத்தான்மா-விளக்கம்
பராவவத்தை
சகலகேவலவகை
சுத்தகேவலவகை
சமலாவவத்தை
அந்தக்கரஞவவத்தை விளக்கம்
இந்திரியவவத்தை விளக்கம்
கர்ப்பவவத்தை
சகசவவத்தை
மோகாதி
அமலவவத்தை
சித்தஅவத்தை
மோகவவத்தை
அவத்தாசயம்
மூப்பினிக்குணம்
வாதகுணம்
அதிலகுணவிளக்கம்
பயித்தியத்தின்குணம்
பித்தகுணவிளக்கம்
பொதுக்குணம் சிறப்புநோக்கு
தக்கத்திரயம்
ஆதிபௌதீகம்
ஆதிதெய்லீகம்

ஆதியாத்துமீகம்
சதுர்த்தசநாடிபேதம்
நாடிவகை
இடைகலையிடவிளக்கம்
பிங்கலை-சுழிமுனையிடவிளக்கம்
வாருணை-அலம்புடை விளக்கம்
பூடாவிளக்கம்
அத்தி-சிங்கு-சங்கினிவிளக்கம்
பைசுவனி—விளக்கம்
குகுவிளக்கம்
விச்சோதரி
பிறநாடி
வளியியக்கம்
அபானனியக்கம்
சங்கினியியக்கம்
உதானனியக்கம்
காகனியக்கம்
சிங்குவையியக்கம்
அலம்புடையியக்கம்
கிருகாரனியக்கம்
பிறநாடியியக்கம்
பிறஉறுப்பெண்ணியக்கம்
சட்கொடி
சட்பாவனை
சமேமி
தத்துவத்தொகுதி
தத்துவநிர்ணயம்
சேடன்விஞ
விடை

கர்ப்போற்பத்தி விளக்கம்.

தோற்றம்
பூப்பு
இணைவு
உருத்தோற்றம்
கருப்பபலம்
உருவிலக்கணம்
மலடு
பிண்டோற்பத்தி
பிண்டோற்பத்திவிளக்கம்
ஆயுளளவு
உறுப்பறை
இராசகர்ப்பம்
உருமாற்றம்
ஆத்மவிணைவு

கோளகை
இயமன்-நிருதிதளம்
வருணன்-வாயுதளம்
சோமதளம்
மத்தியதளம்
முக்குணதளம்
புத்திரப்பேறு
சற்புதல்வன்பெருமை
வீடு
மோட்சகுரு
முத்தி
முத்திசாதனம்
அட்டாங்கயோகம்
விளக்கம்
இயமம்
விளக்கம்
நியமம்
விளக்கம்
ஆதனம்
விளக்கம்
ஆதனவகை
பத்திராதன விலக்கணம்
கோமுகாதனம்
பதுமாதனம்
சிங்காதனம்
சோத்திரிகம்
வீரம்
சுகாதனம்
தண்டம்
முத்தம்
மயூரம்
ஆதனப்பெருமை
பிராணயாமம்
பிராணன்
பிராணவாயுவியக்கம்
பிராணசரம்
பிராணனியக்கமாறுட்டம்
வளர்பிறையோட்டம்
தேய்பிறையோட்டம்
பிறைசரமாறுட்டம்
மாதசரம்
இடவோட்டம்
வலவோட்டம்
இரண்டிடத்தோட்டம்

பஞ்சபூதசரம்
விளக்கம்
போர்க்குவற்குஞ்சரம்
பகைச்சரம்
விஞவிடுசரம்
பக்கசரம்
இராசிச்சரம்
இராசிச்சரபலன்
சரபூதியநிறம்
சரசுத்தி
சராசிநாழிகையாக்கம்
ஆயுள்நிர்ணயம்
சரவோட்டம்
ஞானயோகபெருமை
மாதசரவோட்டம்-ஆயுள்நிர்ணயம்
சரஉபயம்-மரணசயம்
பூரக பிராணயாம விளக்கம்
இரேசக-பிராணயாமம்
கும்பகம்
சூக்குமபிராணயாமம்
மாத்திராசய ஆக்கம்
பிரத்தியாகாரம்
தாரணை
தியானவகை
வேதாந்தவிரிப்பு
உண்மையோகம்
அட்டசித்திவகை
சித்திமார்க்கம்
சித்திபேதம்
சித்திநாட்டம்
சித்திப்பேறு
துவாதசாங்குலத்தடையாக்கம்
சித்திதரிசனம்
தத்துவரத்நாகரத்தொகுதி
மந்திரபக்கநிர்ணயம்
நாதவோசை
நாதவாக்கம்
பிரணவம்
கலையொடுக்கம்
பிரணவாக்கம்
உபதேசம்
மந்திரம்
ஓங்காரம்
அட்டாக்கரம்
சிரீபஞ்சாக்கரம்
பிரசாதபஞ்சாக்கரம்
தூலபஞ்சாக்கரம்
அக்கரதானரூபம்-தேவதை
சூக்குமபஞ்சாக்கரம்
தூலசூக்குமபஞ்சாக்கரம்
அதிசூக்குமபஞ்சாக்கரம்
திரிவருணபஞ்சாக்கரம்
கலாபஞ்சாக்கரம்
பிரமபஞ்சாக்கரம்
யோகபஞ்சாக்கரம்
ஞானபஞ்சாக்கரம்
சக்கரவகை
மகாவாக்கியம்
மந்திரபக்கம்
மந்திரோத்தமவதிதேவதை
மந்திரவட்கிடை
யோகவுண்மை
சித்தியுண்மை
குருசீடவிலக்கணத்தொகுதி.
மூக்குரு
மூக்குருவிளக்கம்
மூக்குருவின்றியமையாமை
சற்குருவிலக்கணம்
விளக்கம்
சற்சீடவிலக்கணம்
விளக்கம்
அசற்குருவிலக்கணம்
விளக்கம்
அசற்சீடவிலக்கணம்
விளக்கம்
சீடாகாரிலக்கணம்
விளக்கம்
குருவின்கடமை
பொய்யுபதேசவடைவு
மெய்யுபதேசவடைவு
மூடர்க்குபதேசித்தபலன்
சீடன்நெறி
சற்சீடனடையும்பலன்
தீட்சாசம்பிரதாய விலக்கணம்.
தீட்சாநெறி
ஞானபேதம்
ஞானவகை
உயர்ஞானம்

ஞானரூபம்
ஞானநிர்ணயம்
ஞானசீலம்
ஞானிவண்மை
ஞானியுண்மை
ஞானிகிட்டை
ஞானிபோதம்
ஞானநாட்டம்
வேதாந்தநிர்ணயம்
மாவாக்கியவகை
மாவாக்கியசுத்தி
வாக்கியரூபம்
அவத்தைவகை
மூப்பதவான்மவேறுபாடு
மூவகை இலக்கணசுத்தி
எழுபாதி
எழுபாதிவகை
ஞானிமுடிவு

வேதாந்ததரிசனம்.

சீடன்வினா
தேகசோதனை
இந்தியசோதனை
வினயசோதனை
விளக்கம்
சிடன்உணர்வுரை
குருவுரை
துரியதரிசனம்
துரியமகிமை
தவநாட்டம்
பிறப்பிறப்பறல்
வாக்கியப்பேறு
மயக்கம்
ஆத்மாநுபூதி
துரியவிலாசம்
ஐக்கியம்
துரியதாடணம்
நிர்ணயம்
ஆத்மசுத்தம்
தரிசனம்
ஆதீதவநுபூதி
பிறவாநெறி
ஆதிதாடணம்
பாலக்கணம்
பாபேட்சை
பரமோதயம்
பாதாநுபூதி
குண்டலினிவியாபகம்
மாயையிற்ரோற்றம்
மலவிகற்பம்
பாசநீக்கம்
அருட்சத்திபரியாயநாமம்
பரமதரியம்
பரமுத்தி
விசுவக்கிராசம்
பரத்துளடைவு
உபாதிசோதனம்
சிவதரிசனம்
சிவாதுபவம்
பதத்திரய நிர்ணயம்
விட்டுவிடாத விலக்கணை சுத்தி
பதவகை
சத்தியாதி தரிசனம்
சொரூபம்
அடைவாக்கம்
சுவாறுக்கிராதி
வெளியாமிடம்
வாக்கியசுத்தி

வேதாந்த தரிசனம்

பிரணவதரிசனம்
சூக்கும சொரூபதரிசன அநுபூதி
சுக சொரூப தரிசன அநுபூதி
சுவாது பூதி
அதிசூக்கும தரிசனம்
சுவாநுபூதி
சொரூபவகை
அநுபூதி
துரியநோக்கு
அநுபூதி
மோனமுத்திரை
காட்டியவாறு
திருவட்ட நிர்ணயம்
முத்திபேதம்
உண்மை முத்தி
அதிரகசிய (குரு) உபதேசம்
வினைவீட்டம்
ஞானியியல்
வினையிறுப்பு

சித்தாந்த தரிசனம்.

ஆசாரவகை
வித்தியாதத்துவசலனம்
மாயையிற்றோற்றம்
திரோதாபாசசலனம்
தத்துவ வகை
தத்துவதரிசனம்
தத்துவ சுத்தி
பாசசுத்தி
ஆத்மாநுபூதி
தூரிய வியாபகம்
தூரியதூடணம்
சாக்கிராதீததரிசனம்
அவத்தை நிர்ணயம்
அதீத தூடணம்
பரகாய வேட்கை
பரலக்கணம்
பரதரிசனம்
பராதநுபூதி
விசுவக்கிராசம்
விசுவக்கிராச நிர்ணயம்
உபசாந்த தரிசனம்
சிவதரிசனம்
சிவயோகம்
முத்திபேதம்
அவத்தாதிதரிசனம்
முத்திரை நிர்ணயம்
மூத்திராந்தம்
சாம்பவாந்தம்
ஞானசாம்பவம்
[இங்கே இரண்டு ஏடுகள் மிகச் சிதைந்து உருக்குலைந்துபோயின]
நாதாந்தம்
போதாந்தம்
யோகாந்தம்
சாத்திராந்தம்
சத்தியாந்தம்
சமயாந்தம்
சாம்பவாந்தம்
மூத்திரீாந்தம்
தத்துவாந்தம்
சாதகாந்தம்
வேதகாந்தம்
பாரந்தம்
சிவாந்தம்
முத்தாந்தம்
துவாதசாந்தம்
சோடசாங்கம்
தசாங்கம்
கிரியாந்தேட்டி
யோகாந்தேட்டி
ஞானந்தேட்டி
அந்தேட்டி நிர்ணயம்
பொருட் பிரிவு வகை
குருவாக்கு
யோகிநிலை
சற்குரவனுக்கம்
தானப்பேறு
பதவி வகை
குகையிலக்கணம்
பூசாபேதம்
ஞானத் தொகுதி
ஞானசந்தி
ஞானபூசை
ஞானநிட்டை
ஞானயோகம்
ஞானநாற்பாதம்
ஞானவாய்மை
ஞானமுத்தி
முத்திபேதம்
நின்மலமுத்தி
சுத்தமுத்தி
சுத்தமுத்தித்தெளிவு
யோகவரலாறு
கேசரியோகம்
ஆசரியாதியோகபலன்
தினகரயோகம்
சித்தமுத்தியோகாதி
சாதகயோகாதி
விளக்கம்
யோகாக்கம்
யோகபின்னம்
பரபக்கவாக்கபோகம்
அபரபக்கவாக்கபோகம்
இடைவிடாப்போகப்பெற்றி
இரகசியநிர்ணயம்
இரகசியபந்தனம்
இரகசியசாதனம்

இரகசியகாயசித்தி
சாதகாதிகாரம்
காயசித்திதுணுக்கம்
சாதகதலம்
சாதகரியக்கம்
காலசயம்
இரகசியசாதனை
ஆயுளேற்றம்
காயம்அழியாவகை
ஞானசித்தி
அட்டசித்திரகசியம்
விளக்கம்
ஞானசித்திவகை
விளக்கம்
ஓர்பிறப்படையாளுக்கம்
பிறவிமாறுமருந்து
சிவஞானமகிமை
நரகடைவோர்
திரிலோபெறுவோர்
முத்திபெறுவோர்
வீட்டுவிளக்கஞ் (சார்வு)
எண்ணின்முத்தி
ஒடுக்கோபதேசம்
முத்திப்பொருள்
மெய்ஞ்ஞானபோதபூரணம்
தத்துவரத்நாகரப்பொருள்
உயர்நிலை

ஒ

தென்னாட்டாரும் சோதிடமும்.

சோதிடம் வேதாங்கங்களிலொன்றென்றும் வேதமும் அதனங்கங்களும் வடநாட்டினின்று தென்னாடுபுகுமுன் தெற்கின்கட் சூடியேறியோ வெகுபழமைபாகவோ இருந்த மனிதர்களுக்கு வானசாத்திரமும், அதன்காரியமான சோதிடமும் இருந்தனவோ இல்லையோ வென்ற வினா ஒன்று, பண்டித சுப்பிரமணிய சாஸ்திரிகளது ஆராய்ச்சியை வாசித்தபிறகு உண்டாவது தமிழ்மக்களனைவருக்கும் இயற்கையேயாம்.

எக்காலத்தும், எங்கே மானிடவுற்பத்தி யுண்டாயிற்றோ அங்கே, தம்மைச்சுற்றியுள்ள பொருள்களைப்பற்றி யாராய்ச்சிசெய்தல் பலருக்கின்றேனும் சிலருக்காவது உண்டாதல் இயற்கைக் குணங்களிலொன்றும். அவ்வாறுகப் பழைய தமிழ்க்காவியங்கள் கூறியது ஒருபுறமிருக்க, கீன் (Keene) முதலிய தற்போதைய ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் தென்னாடு ஒருகாலத்தில் வெகுதூரம் சமுத்திரத்திற் பரவியிருந்ததென்றும் இந்நாடுதான் மற்றையநாடுகளுக்குத் தாய்நாடாக விருந்திருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்நாட்டிலிருந்த அக்காலத்தவர் தங்கள் கண்ணுக்குப் புலப்பட்ட சூரியன்; சந்திரன் நட்சத்திரங்கள் இவைகளை ஊன்றிக் கவனியாமலிரார். அங்ஙனமாயின் அவர்கள் தங்களது

மனதுக்குத் தோன்றியதையும், பலரால் கண்ணுற்றதையும் குறித்து வையாமலிரார். அப்படி ஏதேனும் குறித்துவைக்கப்பட்ட நூல்கள் இருக்கின்றனவா என்று கவனிக்கவேண்டியது நமது முதற்கடமை யாகும். "ஒருநாட்டார் அறிவுடையமக்களாயிருந்து பலவிதமான நூல் களை யியற்றியிருப்பார்களேயானால் அவர்கள் பிற்காலத்தில் இறந்தாலும் அவர்கள் எழுதிவைத்த நூல்களிற் சிலபாகங்களாவது அங்குமிங்கும் காணப்படலாம். இப்பெரும்பு அகத்தியம் இறந்துபட்டதாயினும் அதிலிருந்து ஒன்றிரண்டு சூத்திரங்கள் அங்குமிங்கும் காணப்படுகின் றன. அதுபோலவாவது இங்குக் காணப்படவேண்டிய தவசிய" மென வாதிப்பர் தென்னாட்டாருக்கு அச்சுவடியே இல்லையென்போர்.

பொதுவாக, நாகரிகமும் அதன்மேலேற்பட்ட ஆராய்ச்சியும் மிக்க இக்காலத்து, மேனாட்டாரும் அவரைப் பின்பற்றியோரும், சாஸ்திரங்க ளெல்லாம் மேனாட்டிலிருந்து இந்நாட்டிற்குவந்தனவென்பர். அந் நாட்டிலிருந்து இந்நாட்டிற்குக் கணிதம்,எழுத்து, சோதிடம் வானசாத் திரம் முதலாயின வருமுன்னர் இந்நாட்டில் இவைகள் இல்லையா? இந் நாட்டார் எண்ண, எழுத அறியாமலிருந்தனரா? என்று அழுத்தமாகக் கேட்பாரில்லை. தமிழிலுள்ள கணிதமுதலியவற்றிலிருந்து ஆராய்ச்சி செய்து வெளியிடும் விஷயங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளி யிடுவார்களாயின், நம்பழந்தமிழ் கன்னித்தமிழ் உயர்தனிச்செம்மொழி யன்றென யாவர் சொல்லத்துணிவர். தமிழும் உயர்தனிச்செம்மொழி யாகுமோவெனப் பலரை ஐயுறும்படி செய்தவர்கள் கா ல ம் செ ன் ற வெ. கனகசபைப்பிள்ளையவர்கள் எனலாம். இவை ஒருசார்புடையன வாகலான் இவ்வளவில் நிறுத்தி மேற்செல்வோம். வெகுபுராதனகாலமாக நாகரிகமுற்றதேசமென்றுசொல்லப்படும் கிரேக்க ரோம தேசங்களில் ரோமதேசத்தினரிற் பெண்டிர் நாம் வெளியிற்செல்லப் புறப்படும் காலங் கள் நல்லகாலங்களா என்று குறித்துச்சொல்ல இந்தியர்களை மாதங்களே தனத்திற் கமர்த்தி வாழ்ந்தனரென்று வாசிப்போமாயின் அது எந்நாட் டினரைக்குறிக்கும்? அக்காலத்து யவன கிரேக்க தேசத்தினரோடும் எகிப் தியரோடும் வியாபாரம் செய்தார் தென்னாட்டினரன்றே? இங்ஙனமாயின், தென்னாட்டினர் சோதிடம் சொல்லவல்லுனர் என்பதற்குப் புறச்சான்று இஃதொன்றன்றே?

பன்னூற்றாண்டுகட்குமுன்னரிருந்த வராகமிஹிரர் என்னும் வித்வான் திரட்டிய பஞ்சசித்தாந்திகா என்னும்நூலை அச்சிடும்போது டாக்டர் தீபோ(Dr Thibaut) தாமெழுதிய முகவுரையில்"வாரன்(Warren) ஆசிரியர் சொல்லுகிறபடி சந்திர சூரியர்களுடைய சேகாம்சங்களைக் கண்டுபிடிப்பதற்குத் தமிழ்ப்பாஷையைப் பேசும் தென்னாட்டார் ஸௌர அல்லது வாக்கியம் என்னும் விதியை அனுசரிக்கின்றனர். "அதன் பிரயோஜனம் என்னவெனில் மத்தியஸ்புடங்களைக் கண்டுபிடித்துப் பின்னர் வாக்கியப்பிழை தீர்த்துச் சுத்தஸ்புடத்தைக் கண்டுபிடிக்கும் வகையைவிட்டு நேரே அவைகளின் சுத்தஸ்புடத்தைக் கண்டுபிடித்தலாம்." என்று எழுதுகிறார். டாக்டர் தீபோ இந்நாட்டுக்கு வெகுகாலங்களின்முன்னர் வந்து பலபல வேலைகளிலிருந்து கடைசியிற் கல்கத்தா சர்வகலாசங்கத்தின் காரியதரிசியாயிருந்தவர். (Registrar Calcatta University). பலபாஷாவிற்பன்னரும் மேன்மைபொருந்திய வானசாஸ்திரியுமான அவரே தென்னாட்டில் தமிழர்கள் வழங்கும் வாக்கியகிரஹணம் சிலாகிக்கத் தகுந்ததென்றால் தமிழ்பேசும் ஜனங்களுக்குத் தனிப்பட்டநூல்களிருந்திருக்கவேண்டுமென்றுகிற தல்லவா. தமிழ்நூல்களில் தருவிப்பார்க்குமுன் ஆரியர் முதலிய கலிவல்லுனர் நூல்களில் தமிழர்களது சோதிடநூலைப்பற்றி ஏதாவது குறிப்பிருக்கின்றதா என்று ஆராய்வோம். அவ் வராகமிஹிரர் தாம் தொகுத்த பஞ்சசித்தாந்திகா என்னும் தொகைநூலில் பௌலிசசித்தாந்தம் என்ற நூலொன்றை அநேக இடங்களிற் குறித்திருக்கின்றனர். அவற்றுள் ஒன்றிரண்டு காட்டுதும்.

"திநாவஸாஷ்டா நவாஸ்ய திவஸா ஸித்தஸ்ய நவஹதாஃ।
"ஏளலீஸ. ஏதெ சுயிரோவாஸ்ரீத்ய ஸித்தஸ்தி நாஸ்யஷி வம்கேஷ்வி ॥"
"இதி பௌலிஸ விஜ்ஞாநே ॥"
"இதி பௌலிஸவிஜ்ஞாநெ நாம ஸ்ரஹா நாமாஷ்டாஷிமொஜ்ஜ்யாயஃ।"

ஆகவே, இத்தென்னாட்டாருக்குப் புலிசனால் (பௌலிசன் என்பது புலிசனென்பதன் திரிபுபோலும்) இயற்றப்பட்ட ஒரு வானசாத்திரநூல் இருந்ததென்று தெரிகிறது. மேலேகண்டவைகளினாற் சென்றகாலத்தும், இப்பொழுதும், இனியும் தென்னாட்டில் வழக்குடையது வாக்கியசித்தாந்தமாகிய புலிசசித்தாந்தமேயாம் என்பது நன்குபுலப்படும்.

தமிழர்களால்மட்டுமன்றித் தெலுங்கர்களாலும் இவ்வாக்கிய சித்தாந்தமே உபயோகப்படுத்தப்படுகின்றதென்று டாக்டர்தீபோ கூறுவாராலல் இதற்குமேல் வேறு எடுத்துக்காட்டும் வேண்டுமோ.

*[இனி இப்புலீச சித்தாந்தத்தைப்பற்றி டாக்டர் தீபோவின் அபிப்பிராயமென்னவெனில், "புலீசசித்தாந்தத்தினுடைய கொள்கைகளென்னவென்று நாம் கவனிக்கப்புகுவோமாயின், யவனபுரத்துக்கும் உச்சயினி, காசி இவைகளுக்குமுள்ள சேகாம்ச வித்யாசம் இன்னதென்று குறிப்பிடும் வியப்பினால் யவனபுரம் என்பது (தற்போதைய) அலெக்ஸாந்திரியாதான் எனக் கொள்ளுதலாம். பின்னும் தூர அளவுதெரிந்த இரண்டுபட்டினங்களின் சேகாம்சம் தெரிந்துகொள்ளுதல். அதே அதிகாரத்தில் அயனங்கள் பூர்வத்தில் இன்ன நக்ஷத்திரத்தில் இருந்தனவென்ற பெருஞ்சொல். இன்னும் பௌலிசசித்தாந்தவிஷயமாகப் பேசும்போது காலாவது அத்யாயத்திற் கொடுக்கப்பட்ட துருவவாக்கியங்களையும் கூறலாம். வராகமிஹிரர் எதினின்றும் தொகுத்தாரென்று சொல்வதற்கில்லை.] அது, மூன்று சித்தாந்தங்களுக்குப் பொதுவாயிருக்கலாம்; எங்கெல்லாம் வேண்டியிருக்கிறதோ அங்கெல்லாம் இந்தத் துருவங்களை வராகமிஹிரர் உபயோகித்திருக்கின்றனர். இந்த சாவாய்ப்பாட்டின் பெரும்யோக்கியதாம்சம் என்னவெனில் இதனில் ஆரம் (Radius) 120 பாகங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகள் பின்னரும் 60 பங்காகப் பிரிக்கப்பட்டிருப்பதேயாம். வழக்கம்போல இந்தியமுறையாக 3438 கலைகளாகப் பிரிக்கப்படவில்லை. இது கிரேக்கமுறைப்படி 60 ஆகப் பிரிக்கப்படாமல் 120 ஆகப் பிரிக்கப்பட்டாலும் கிரேக்க முறையையொத்த சாபலன்களைக் (Sirres) கொடுக்கிறது. அநேக இடங்களில் டாலமியின் சித்தாந்தப்படிக்குள்ள சாபலன்களை ஒத்திருக்கிறதாயினும் சிலவிடங்களில் முற்றும் மாறுகவிருக்கிறது. (நமது) ஸம்ஸ்கிருத மூலபாடம் அநேக இடங்களிற் பூர்த்திசெய்யப்படவேண்டியிருப்பதால்; பூர்த்திப் பிரதிகிடைக்குமானால் டாலமியின்கணக்குக்கு ஒத்துவருமென்பதிற் றடையேயில்லை.

---

*இருதலைப்பகரத்துட் காட்டப்பட்ட வாக்கியங்கள் இப்பொருளுரையுடையார் எழுதியபடியே பதிக்கப்பட்டன. அவை தெளிவாய் மொழிபெயர்க்கப்படவில்லையென்று தெரிகிறது. பத்திராதிபர்.

"மூடிவாக, இவ்வராகமிஹிராற் கொடுக்கப்பட்ட புலீசசித்தாந் தத்தை இன்னும் வேறுபலரால் எடுத்தாளப்பட்டிருக்கும் புலீசசித்தாந் தத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கவேண்டியிருக்கிறது. வராஹமிஹிரரது பிருகத்சம்ஹிதைக்குப் பட்டோத்பலர் எழுதிய பேருரையிலும், பிரும்மகுப்தரது ஸ்புடபிரும்ம சித்தாந்தத்துக்குப் பிரதூதசுவாமி எழுதிய பேருரைகளிலும் புலீசசித்தாந்தமேற்கோள்கள் காணப்படுகின்றன. அவைகளிலிருந்த முக்கிய பாகங்களைக் கோல்புருக் ஆசிரியர் தமது வியாசங்களின் இரண்டாம்பாகத்தில் தொகுத்திருக்கின்றார். அவை களிலிருந்து புலீசசித்தாந்திக்கு ஒருவருடத்துக்கு 365 நாள் 6 மணி 12 நிமிஷம் 36 செகண்டு என்று தெரிகிறது. நமக்குக்கிடைத்த பழமையான அபூர்த்தியான ஏடுகளிலிருந்து தெரிந்துகொண்டதில் வராகமிஹிரர்பார்த்துத் தொகுத்த புலீசம் வேறு;பட்டோத்பலர் கண்ட புலீசம் வேறு என்று விளங்குகிறது. அகர்கணத்தைக் கண்டுபிடிப்ப திலும் கிரகஸ்புடங்களிலும் அது தனக்குமாத்திரம் சுதந்திரமானதொரு வழியையனுசரிக்கிறதென்று முன்னரே கூறியுள்ளேன். அதன்படி ஒருவருஷத்தின் அளவு 365 நாள் 6-மணி 12 நிமிஷம்தான். பஞ்சசித் தாந்திகாவின் கடைசி அத்யாயத்திற் குறிக்கப்பட்ட கிரகஸ்புடகணன விதிகள் புலீசசித்தாந்தப்படியாகுமாயின்-இதிற் சந்தேகமில்லை. இரண்டு புலீசமும் வேறு வேறு வழியுடையனவாகும். காலக்கிரமத்திற் புலீச சித்தாந்தமும் பல மாறுதல்களையடைந்தது. பட்டோத்பலர்கண்ட புலீசத்திற்கும் வராகமிஹிரர்கண்டதற்கும் வெகுவித்தியாசங்களிருக் கும் பின்னதையும் புலீசமென்று கூறுவதும் ஆச்சரியமேயாம்."

இவ்வாறு ஒரு மேனாட்டுப்பண்டிதர் எழுதுவானால், தென்னாட் டில் தொன்றுதொட்டு ஸூரியசித்தாந்தந்தான் வழங்கிவருகிறதென்பதில் ஐயமேயில்லை. அப்படிவழங்கிவருவது நாமெல்லோரும் கையாண்டு வரும் வாக்கிய சித்தாந்தமே. இது புலீசனால் இயற்றப்பட்டதென்று அறியக்கிடக்கின்றதேயன்றி நூன் முழுவதும் அகப்படாமையால் அதன்பெருமைகளை விரித்துரைப்பது தற்போது சாத்தியமற்றதாகின் றது.

இனி, தமிழர் நட்சத்திரங்கள், கிரஹங்கள் முதலியவைகளுக்கு ஸம்ஸ்கிருதப்பெயர்களை உபயோகப்படுத்தினார்களா அல்லது சுத்தத் தமிழ் மொழிகளையே உபயோகித்துவந்தனரா என்று பார்ப்போமாயின்,

தமிழ்மொழிகளையே உபயோகப்படுத்தியிருக்கின்றனர் என்பது விளங்கும். ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயரேயன்றிப் பலபெயர்களையுமிட்டு வழங்கியிருக்கின்றனர்; அவை வருமாறு:—

புகலுறுபரிமாவாசிபுரவியேதுரகஞ்சென்னி
இகலுறுகுதிரைமுந்நாளிரலையைப்பசியின்பேரா
மகலிபதாழிபூதமடுப்பொடுதாசுகங்குல்
பகல்வருகிழவன்சோறுபரணியின்பெயரதாமே.

ஆரலேபழலேயங்கியளகிறுலறுமீனுவி
சீர்கொள்கார்த்திகைப்போகுந்தேருருளையனுள்வையம்
பார்சகடுரோகணிப்பேர்பரவுமான்றலைஐந்தானம்
மார்கழிமதிபேராளன்நரிப்புறம்மிருகசிரப்பேர்.

பேரிறைசெங்கையாழ்வில்லாதிரைப்பெயராம்பிண்டி
கார்திரள்மூங்கில்மாலைகரும்பொடாவணமேவிண்டல்
கூரியபுனர்தமாகுங்குடந்தாகொடிமுதையம்
பார்மதிபூசப்பேராம்பணிகவ்வைபாம்பாயில்யம்.

பாவுமுற்சனியேவாய்க்கால்வேட்டுவனெழிலிபாரிற்
கூவியஞமலிமாசிகொடுநுகமகப்பேர்தூற்கை
நாவிதனெலியேமற்றையிடைச்சனிபூரணம
மோவில்பாற்குனிபங்கூனிகடைச்சனியுத்திரப்பேர்.

உத்தமன்களிறுகவ்வியுயர்கவுத்துவமாங்கைம்மீன்
அத்தமென்கன்னியாடையம்பரம்பயறுகொய்மீன்
சித்திரைப்பெயர்மரக்கால்பதுமமேதீபஞ்சோதி
மொய்த்தவைகாசிமுற்றில்சுளகுடன்முறம்விசாகம்.

விசைகொள்புற்றுளிபுன்றேள்மெய்ப்பனையனுடப்பேரா
மசைவில்வல்லாரைவாளிதுளங்கொளிகேட்டையாகுந்
திசையுறுதருகுகொக்குத்தேட்கடையாணிமூலம்
வசையிலாக்குளமேபோய்கைவாவிபூராடமாமெ.

மானெனிற்குளமேகூவல்மணிமுடியாடையூர்தி
கானவுத்திராடஞ்சோணசிராவணமுலக்கையோண
மானபுட்பறவைகாக்கையாவணியவிட்டப்பேராந்
தேனனுய்சுண்டன்குண்டில்செக்கிவைசதயஞ்செவ்வே.

செவ்வியகொடுங்கோல்நாழிபுரட்டைசீர்பூரட்டாதி
யவ்வியமுரசுவேந்தனறிவனுத்திரட்டாதிப்பேர்
வவ்வியகடைமீன்தோணிமரக்கலந்தாலம்நாவாய்
கவ்வியேரேவதிப்பேரவைதினநாட்பொதுப்பேர்.

இராசிகளுக்குள், மேடத்திற்கு மறி, தகர், மேழகம், கொச்சை என்றும், இடபத்திற்கு விடை, புல்லம், சே, எருது என்றும், மிதுனத்துக்கு வீணை, தண்டு, யாழ், தாரம், என்றும், கடகத்துக்கு நண்டு, அலவன், நள்ளி, குளிர், என்றும், சிங்கத்துக்கு ஆள், அரி, கோண்மா, கடிவன் என்றும், கன்னிக்கு மாது, தையல் என்றும், துலாத்துக்கு நிறைகோல், தூங்கல், கட்டளை என்றும், விருச்சிகத்துக்கு விட்டன், தூட்டன், தேள் என்றும், தனுசுக்கு வில், சிலை, கார்முகம் என்றும், மகரத்துக்கு மான், கலை, சுரு என்றும், கும்பத்துக்குக் குடம், குட்டுவம் என்றும், மீனத்துக்கு மீன், கயல், சேல் என்றும், பெயராம்.

ஆகவே தமிழ்நாட்டார் தங்களுக்கெனத் தனிப்பட்ட வானகணித நூலொன்றையும் அதனுலுண்டாகும் பயனையறிவிக்கும் நூலொன்றையும், உடையவர்களாயிருந்தனரென யாதொருதடையுமின்றிக் கூறலாம்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

சிறைவிடந்தாதி.

(கூ0ச-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மூத்திநெறிகண்டமுதபத்தியினிரங்கிமூடிமூட்காமகன்றுதாயதோர்
சத்தியையடைந்துயோகசிற்பரினேந்துநீர்தொழற்குரியசெந்தின்மேவிலீர்
மத்தமதகந்திமாமுகற்கிளையதம்பியோர்மயிற்கடவுடந்தாலுவே
தத்தினுரம்புசேயருட்பெறுவதென்றுநீர்சலப்படுவதென்றுதீருமே. (ஆ0)

வேறு

தோதமம்மர்த்தளையாற்றியக்குண்டு
சோராக்கவலுழன்றுமூங்நீர்த்துரும்பானே
னேரார்பரங்குன்றுவந்தாயிரங்காயோ
போர்கலிபரவுஞ்செந்தூர்ப்பெருமானே. (அக)

மானங்குலங்கல்விமேன்மைவடிவிருந்துந்
தானமிவைதுறந்துநிற்கத்தகுவேளே
மீனந்தருஞ்சாலிவேலிப்பரப்புமலர்த்
தேனுந்தழையுந்திருவேரகத்தானே. (அஉ)

ஆனைத்தெருமலன்குற்றல்லற்படுவேற்குன்
றேனுர்கருணைச்சிறப்பளிப்பதெந்நாளோ
வானுர்முறைபரவுநின்றமலகிழவோய்
தானுறும்வேற்படையாயாறிரண்டுதோளானே. (அங)

தோளாறிரண்டுஞ்சுரக்கும்பெருங்கருணை
மூளாதுதிங்கண்முகமுந்தொழற்கருள்வாய்
வாளாமறையாவிநன்குடிவாய்நின்றமலர்த்
தாளாமுருகாதனிவேற்படையோனே. (அச)

படைப்பானுங்காப்பானும்பல்லுயிருமெல்லாந்
துடைப்பானுநீயாகித்தோன்றினையேதோன்றல்
கொடைக்கார்முகிலணவுங்குன்றுதொறுநின்றேய்
விடைப்பாகனன்றளித்தமெய்த்தவத்துமெய்யே. (அடு)

மெய்யேயுபநிடமேமெய்த்தவமேவேண்டார்க்குப்
பொய்யேயுயிரினைத்துங்காப்பொதுமயமே
வையேறுவெள்வேற்படையாய்வளையூர்ந்து
செய்யேறுசெந்திலாய்தாராய்திருநோக்கே. (அசு)

நோக்கமுநின்பொன்னடிக்கீழல்லாதுநோக்காது
வாக்குமூனையன்றிவழுத்துமோமான்மருகா
தேக்குகடல்சுவறச்செவ்வேற்படைவிடுத்த
கோக்களிறேசெந்திற்குமாவிரங்காயே. (அள)

காயுங்கனல்வாய்மெழுகிற்கனிந்துருகித்
தீயுந்தனிநெஞ்சனேன்பாற்சிறிதிரங்காய்
பேயுங்கழுகும்பிணங்கப்பெருஞ்சூர்மேற்
பாயுஞ்சுடரிலவேற்செந்திற்பதியானே. (அஎ)

செந்திற்கரசேசிவசிற்பரக்கொழுந்தே
மூந்தப்பழமறைக்குமெட்டாமுருகோனே
வந்திப்பவர்க்கிரங்கும்வாழ்வேவடிவேலோய்
பந்தத்தளையறுத்தாட்கொள்ளும்படிக்கருளே. (அஅ)

கொள்ளாப்பெருந்துயரமுன்னேவிதிகூட்டத்
தள்ளாடிநிற்குந்தமியேற்கிரங்குவதார்
முள்ளாடுசேவற்கொடியாய்மூருகாவெ
னுள்ளாருனையன்றியுண்டோவுரையாயே. (கo)

வேறு.

உரையுணர்வொழிந்துதனிமுதற்பொருளாயுயர்பெரும்பதங்களுங்கடந்தாய்
பிரையுறுபாலுநெய்யுமொத்தொடுங்கிப்பெருநிலப்பரப்பெலாங்கரந்தாய்
தரைமுதலாயபூதமைந்தாகித்தனித்தனிக்கடவுளுமானு
யரனருள்குமாவரிதிருமருகாவறுமுகாவபயநின்னபயம். (கக)

பயநெடும்புணரியடலரவம்விரிப்பங்கயமனையெனத்துயின்மு
யலனெனவுலகமுழுதுறப்படைப்புற்றம்புயப்பொருட்டினிலமர்ந்தாய்
கயிலையங்கிரியிலொருதனிப்பொருளாய்க்கடவுளருவப்பவீற்றிருந்தாய்
புயமெடுகுடுமிச்சினகரச்செந்திற்புரவலாவபயநின்னபயம். (கஉ)

நின்னிலைதெரிந்துவழுத்தியாதரித்துநினைதற்குநினைவினுக்கெட்டாத்
தொன்னிலையாகியளவில்பல்கோடியண்டங்கள்யாவையுந்தொகுத்துத்
தன்னிலையாதிமேருவாயுலகந்தாங்குதியறுமுகப்பெருமான்
முன்னிலையாவர்தனிபகுத்தறிவார்முருகனேயபயநின்னபயம். (கங)

முருகலர்முளரியந்தணனறியாமுழுமுதற்பிரணவத்தமர்ந்தாய்
கருமகாரியமுங்கருத்தனுமாகிக்காண்பனயாவையுமாகி
யொருவுதியொருவனுண்டெனிலுண்டேயூட்டுவானுகியநெடுமான்
மருகனேகுமாவள்ளிநாயகனேவரதனேயபயநின்னபயம். (கச)

வரந்தருகடவுளாறெனப்பகுத்துச்சமயங்களாறெனமருவிப்
பரந்தருபுடைநூலாறெனத்தோன்றிநான்மறைப்பகுதியிற்பரந்து
புரந்தரன்முதலோரேத்துதற்கரியபொருளெனநின்றனைபுலவா
கரந்தனேகுமாவள்ளிநாயகனேகடவுளேயபயநின்னபயம். (கஞ)

கடவுளோர்மூன்றுந்தொழிலொருமூன்றுங்குணங்களோர்மூன்றுமாய்க்கரந்து
சுடர்களோர்மூன்றும்பிறப்பினிலாண்பெணலியெனுந்தொன்மயமாகி
யுடலுமாயுயிருமுயிரனுபவிக்குமிருவினைத்தொடர்ச்சியுமொத்தாய்
படைநெடுஞ்சுடர்வேற்குமரனேசெந்திற்பரமனேயபயநின்னபயம். (கஎ)

பரகதியுணர்ந்துபரிபுரனினதுபாதபங்கயம்பணிந்தறியே
னரிதிருமருகாமுருகவென்றேத்தியாதரித்தருள்பெறவேண்டேன்
றிருவிலியெனதுதனிமைகண்டுனதுதிருவுளமிரங்கியாட்கொள்வா
யரனருள்கும்ராசாவணபவனேயறுமுகாவபயநின்னபயம். (கஏ)

அந்தரமிடைபுக்கொருதுணையின்றியலமருமெனக்குநின்கருணை
தந்தருவினைதீர்த்தாண்டுகொண்டருளுந்தன்மையிற்சிறியவுமுளவோ
கந்தனேகுமராபன்னிருதடந்தோட்காளையேகாலவேற்படையாய்
செந்திலம்பதிவாழ்ந்தையேமுருகாசெல்வனேயபயநின்னபயம். (கூஅ)

செல்வமுஞ்சிறப்புமனவியுமகவுநிதியமுந்தீதிலாநலனுங்
கல்வியுங்கவினுமென்பதற்குனதுகருணையினன்றிமற்றுளவோ
வல்வினைச்சிறியேனறிந்தவாறுனதுமலரடிவழுத்துதற்கிரங்கிப்
புல்வினையறுத்தசெந்திலம்பதியாய்புரந்தருளபயநின்னபயம். (கூக)

அத்தனேயபயமறுமுகாவபயமந்தரத்திமையவர்க்களித்த
முத்தனேயபயமுதல்வனேயபயமும்மயமொருமயமான
சித்தனேயபயஞ்சிற்பரானந்தத்தேசிகாவபயமெவ்வுயிர்க்குங்
கத்தனேயபயம்பன்னிருதடந்தோட்காளையேயருள்பதப்பூவே. (க00)

சரவணபவன்முன்னிற்க.

பாண்டியன்சிறையிலகப்பட்டுக் கோனேரிப்புலவன் பாடிய

சிறைவிடந்தாதிமுற்றும்.

குமரநாயகன்பாதாரவிந்தமேகெதி.

சு. நல்லசிவன்பிள்ளை,

சிறைவிடந்தாதிநூலாசிரியர்வரலாறு.

இந்நூல், இப்பத்திரிகையில் வெளியிடப் பெறுதற்காணகாரணம், இச் செந்தமிழ்த் தொகுதி 19 பகுதி 6 பக்கம் 212-ல் எழுதியிருக்கும் குறிப்பால் விளங்கும். அக்குறிப்பில், ஆசிரியர்வரலாறுமுதலியன தெரியவில்லையென்று குறித்திருந்ததைக்கண்ணுற்ற செந்தமிழ்ச்சந்தாதாரும், தமிழ்ப்புலவாபிமானியுமாகிய ஆரியூர் ஸ்ரீமத் ஆ. வ. பதுமநாபபிள்ளையவர்கள் தம்மிடமுள்ள புலவர்புராணம் இருவைஷ்ணவச்சருக்கத்திற் சிறைவிடந்தாதிநூலாசிரியர்வரலாறு கூறப்பட்டிருக்கின்றதைத் தெரிவித்ததுடன், தம்மிடமுள்ள புலவர்புராணத்தையும் எனக் கனுப்பி வரலாற்றை வெளியிடுமாறு செய்தனர். இன்னோர் புரிந்த நன்றி யென்றும் மறக்கற்பாலதன்று.

இந்நூலை இப்பத்திரிகையாயிலாக வெளியிடுதற்குமுன், அவ்வேட்டுப் பிரதி யென்னிடமிருப்பதை ஞாபகமுறுத்தித் தாம் அந்தாதி கலம்பகம், கோவைமுதலிய பன்னூல்களினின்றும் செய்யுள்களைத் தேர்ந்தெடுத்து, அச்சிட்டுவரும், செய்யுட்பாடக்கோவை யென்னும் தொகைநூலில், சிறைவிடந்தாதிச் செய்யுட்களிலும் சில சேர்க்கப்படிற் சிறப்புடைத்தா மெனக் கருதி வாங்கிச் சேர்த்தவர், எனதருமை நண்பரும் இச்சங்கத்தங்கத் தினரும், சௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தலைமைத்தமிழாசிரியரு மாகிய ஸ்ரீ. பு. சிதம்பர புன்னைவனநாதமுதலியாராவர். இவர் அப் பொழுது ஆசிரியர்வரலாறு விளங்காமையின் அவ்வேட்டுப்பிரதியிற் கண்டவாறே தந்நூலினுங் குறிக்கலாயினர். ஆரியூர்ப்பிள்ளையவர்கள் எடுத்துக்காட்டிய இவ்வரலாறு, செய்யுட்கருத்துக்களை உரைநடையி லெழுதியும், பிறமொழியிலுள்ள அருநூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தும் தமிழ்மக்கட்கனுகூலமாகத் தமிழ்ப்பத்திரிகைகளைப் பதிப் பித்தும் தமிழில் உரைநடைநூலைப் பெருக்கிவருகின்ற முதலியாரவர் கள் எழுதிவரும் ஆசிரியர்வரலாற்றுநூலுக் குறுதுணையாமெனக்கருது கின்றேன். இனிப் புலவர்புராணத்திற்கண்ட சிறைவிடந்தாதிநூலாசிரி யர் சரித்திரம் வருமாறு:—

பாண்டியநாட்டிலே தாமிரபரணிநதிதீரத்தையடுத்த திருக்குரு கூரென்னுந் திருப்பெயர்வாய்ந்த ஆழ்வார்திருநகரியில் அந்தணர் குல திலகராய்ச் சதுர்வேதபாரங்கதராய்ப் பாகவதசிரேட்டராய், ஆதிநாரா யணமூர்த்தியையேயன்றி யப்பெருமானமிசாவதாரமான ஸ்ரீராம கிருஷ் ணதிதேவர்களையும் பொருட்படுத்தாதவராகிய வீரவைணவ ரொருவ ரிருந்தனர். தெய்வத்தமிழ்ப் புலவராகிய நக்கீரர் பொய்யாமொழி முதலிய புலவர்வாய்க்கவிவேட்ட முருகப்பெருமான் அவ்வைணவர் கனவிற் சென்னியிலுள்ள, ஓரந்தணராகத்தோன்றி எம்மூர்க்குகன்மீது பாடுக என்று திருவாய்மலர்ந்தருளினர். கனவுகண்டுவிழித்தவைணவர் மறு நாட்காலையில், தமது வழிபடுகடவுளாகிய அவ்வூர் ஆதிநாராயணமூர்த்தி யின் ஆலயஞ்சென்று அக்கடவுளைவணங்கி மலையுறைவேடுவர்வணங்கு கின்ற குறுந்தேவும் இங்கென்னை யாட்கொள்ளக்குறித்தது யாதுகாரண மென்று கவன்று பெருந்துயருற்றனர். அன்றிரவு அவர் துயிலுகையில் அவ்வாதிநாராயணர் ஒருகரத்தில் வேற்படையும் மற்றொருகரத்திற் சக்கரப்படையுந் தாங்கிய திருக்கோலத்துடன் அவர்கனவிற்றோன்றிச்

செந்தூர்ப்பெருமான்மீது பாடுகவென்று கட்டளையிட்டுச்சென்றனர். அது கேட்டுப் பின்னுங்கவன்று அப்பெருமான்சந்நிதியிற் றுயிலுகையில் அன்று மவர்கனவிற்றோன்றி எல்லாத்தேவரு மெனதமிசமேயாவர்; அன்றியும், கந்தவேள்அமிசமுழுவதும் எனதமிசமேயென்று கற்றோர் பலருங் கூறுகிற்பர். ஆ தலி ன் நினதாணவத்தையொழித்திடுகவென்று கூறிச்சென்றனர். இவ்வாறு கூறியும் ஒருப்படாது நமதுதெய்வ மிறந்து பட்டது; இங்குற்றது மயிலூர்தெய்வமேயாம். இனி நாமிறந்து படுவதே நலமெனக்கருதி யவ்வாறுபுரியத்துணிந்திருக்கையில் அக்காலத்துத் தென்பாண்டிநாட்டை யரசுபுரிந்துவந்த வேளாண்குலதிலகராகிய வடமலையப்பபிள்ளையென்பார் தற்செயலா யவ்வூர்க்குவந்துற்றனர். அன்றுஅவர்கனவிற் குன்றமெறிந்தகுழகன்றோன்றி அவ்வந்தணர்வரலாறுணர்த்துங்கூறி யவரிறவாவண்ணம் வெள்ளிவிலங்குசெய்வித்தணிந்து காத்தியென்று கூற அவ்வாறே நூற்றுநாற்பது பலநிறையுள்ள இரசிதத்தினால் விலங்குசமைத்துவைத்துக்கொண்டு, அவ்வேதியையழைத்து உபசரித்து இஃ தமுருகப்பிரா னுமக்களித்ததென்றுகூறி அவர்க் கணிவித்துச் சிறைசெய்தனர். பின்னர்ச் சிலநாளாகச் சிறைத்துயருற்ற அந்தணர் ஒருவாறுதேறித் திருமாலுஞ் சொற்றனரேயென்று தெளிந்து அக்குகப்பெருமான்மீது பதிற்றுப்பத்தந்தாதியென்னுமோரந்தாதி பாடலுற்றனர். அங்ஙனம் பாடுகையில் ஒருபது பாட்டினுள் தனது தலையைக் கொய்தருளல்வேண்டுமென்றுபாடியவளவில் அவ்விலங்கு பாடெனத் தெரிக்கலுற்றது.

"ஒருபதுபாட்டாவதன்முனொருகவியிற்செய்வதொன்றுமுணரேன்வைவேன்
முருகவென்றன்னன்றலைகொய்தாண்டருளவேண்டுமெனமொழிந்தானப்போ
தருகிருப்பார்நடுங்குறப்பாடரென்னவேயிரட்டொலியிட்டதுவேறுயிற்
றருமதனோர்வடமலையப்பன்கனவிற்செவ்வேள்சென்றுரைக்கலுற்றான்"

என்று முருகதாச சுவாமிகள் கூறியிருப்பது,

"செய்வதொன் றறிகிலேன் செழுமென் போதுதாட்
பெய்வதொன் றறிகிலேன் பேதை யேன்சுடர்
வைதிகழ் வேற்படை முருக வன்றலை
கொய்தெனக் கிரங்கியாட் கொள்ள வேண்டுமால்"

என்ற சிறைவிடந்தாதி எட்டாவதுசெய்யுளால் வலியுறுகின்றது. பின்பு அச்செய்தியைச் சூழ்கினைதடிந்த கூரயிற்பெருமான் வடமலையப்ப

பிள்ளையின்கனவிற்றோன்றி யருளியதுடன், அவ்வேதியர்பாடிய பாடல்களை நமதுசெந்திலி லரங்கேற்றச்செய்து யாவருமதிசயிக்கத்தக்க பரிசிலுங்கொடுத்திடுக எனவுங் கூறிச்சென்றனர். அங்ஙனமே, வடமலையப்பபிள்ளை அப்பெருமான்கட்டளையைச் சிரமேற்கொண்டு அவ்வந்தாதியைச் செந்தூரி லரங்கேற்றுவித்து அதற்குச் சிறைவிடந்தாதியெனப் பெயருங்கொடுத்து அவர்க்குவேண்டிய பரிசிலுங் கொடுத்தனரென்பது புலவர்புராணத்திற்கண்டது.

"மூன்குறித்த தினத்தின்மன்னன் செயத்தகுமா டம்பரங்கண் முழுதுஞ் செய்து, வன்குணத்தோ ரையுந்தடித்தாள் குகன்றனெதிர் கவி முழுதும் வாசித் தாப, பின்குறித்த பனுவலுக்குச் சிறைவிடந்தா தியெனுமொரு பெயருஞ் சூட்டிப், பொன்குவையு மணிப்பணியும் புரவி முத லியவுமந்தப் புலவற் கீந்தான்"

'அப்புலவன்பெயராருமறைந்திலர்யாணுங்துணிந்தொன்றமைக்கவில்லை'

என்னும் மேற்கண்டவிவரங்களால் அச்சிறைவிடந்தாதி யிதுவே யென்பதும் இந்நூலாசிரியர் அவ்வைணவரே யென்பதும், அவர்பெயர் தெரிதற்கில்லை என்பதும் விளங்குகின்றன.

சு. நல்லசிவன்பிள்ளை.

அகஸ்தியர்.

சென்ற ஆனிப்பகுதியில் அகஸ்தியர் என்னும் விண்மீனைப்பற்றி எழுதியிருந்தேனல்லவா? பின்னர் ஆராய்ச்சியில் இதற்கு ஆங்கிலத்தில் காநோபியஸ் (Canopius) என்று பெயரென்றும், இது உத்தரகோள மண்டலத்திற் றெரியாதென்றும், தக்ஷிணகோள மண்டலப்பகுதியைச் சேர்ந்ததென்றும், இது வெறுங்கண்ணுக்குத் தோற்று மொரு நாண்மீனேனும், ஜூன்மாதத்திற்குப்பிறகு தோற்றுதென்றும் ஐரோப்பிய வானசாத்திர நூல்களிற் காணப்படுகிறது. இங்கிலாந்திலுள்ள "கிரீன்உவிச் அப்ஸர்வேட்டரி" என்னும் வானசாத்திரச்சாலையினின்று வெளியிடப்

பெறும் நாட்டிகல் அல்மனக் (Nautical Almanac) என்னும் கணித நூலில் இதற்கு ஆல்பா ஆர்கஸ் (Alpha Argus) என்று பெயரென்றும் இதனது தினகதி 009 விகலையென்றும் அறியப்படுகிறது. பரிபாடலிற் காணப்பட்டபடி இது வக்ரகதியுடையதென்று காணப்படுகிறது.

வாக்கியபஞ்சாங்கத்திலே வைகாசிமீ 27,28உகளில் இதன் அஸ்தமனம் காணப்படுகிறது. இது சுமார் ஒரு 20 வருடங்களாக அவ்விதமே பதிக்கப்பட்டிருந்தாலும் அஸ்தமனகாலமாத்திரம் வித்தியாசப்பட்டுவருகிறது. வாக்கியகணிதத்தில் நிபுணரான சாமாசாஸ்திரிகள் ஸமீபத்திற் காலஞ்சென்றனரெனக் கேட்க மிக வருத்தமாயிருக்கின்றது. புலீசசித்தாந்தத்திலே

விஷ்வத்ரயாத்ரிபுணாவஸுகிரிவியத்தம்தத்ஸாவம் ।
மாயாஹிவஸுகயஸ்தம்ஸஹிமத்ருணிதம்விநாயுஷ்மாஃ ॥ (1)

தாவிம்கைகடாயுஷ்மந்தாரஸௌஹஸ்ராம்ஸள ।
யாம்யாஸ்ரவநிதாஸ்ரவிஸுஷதிஸுகொஸ்நிரமஷ்யுஃ ॥ (2)

மணிதவிஷயொவஸுஷ்மாஷுகயஸ்நுஃவ்ருகாஸுதம்யாகி । (3)

இவற்றின் பொருள்:—இருபத்தைந்தை விஷ்வச்சாயையின் பாதியாற்பெருக்கி அதற்குநேராயுள்ள வட்டத்தைக் கண்டுபிடித்து, அதனோடு 15 கூட்டுக; கூட்டிப் பத்தாற்பெருக்கி அதனுடன் விஷ்வச்சாயையின் 21 மடங்கைக் கூட்டுக; இது விநாடியாம்.

மேற்கூறியவிநாடியாற் கடகமுதற்கொண்டு சூரியனிற்குமிடத்தைக் கண்டுபிடிக்கக் கணக்கின்படி நயாரிக்கப்பட்ட கருவிகளைக்கொண்டு சோதிப்போமாயின் அங்கே அகஸ்திய மகரிஷி புலப்படுகின்றார்.

இக்குறிப்புக்களையும் பண்டிதர்கள் கவனிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இலக்கணவிளக்கப்பரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

விவாக ரகஸியம்.

(கூ0உ-ம் பக்கத் தொடர்ச்சி.)

கா:—மணமகனும் மணமகளும் இரதத்தில் ஏறியதாகவன்றே கூறினாய்.

ச:— ஆம். இரதத்தைச் செலுத்துமுன் மணமகன் சக்கரங்கள் செல்லும் இரண்டுதடத்திலும், ஒன்றில் நீலநூலையும் மற்றொன்றிற் சிவப்பு நூலையும் போடவேண்டும்.

கா:—இது எதற்காக?

ச:— பிறருடைய திருஷ்டி அல்லது அவர்களால் ஏவப்பட்ட சூன்ய தேவதைமுதலியவற்றாலுண்டாகுந் தோஷத்தைநிவர்த்திக்க இவ்வாறு செய்யவேண்டும்.

கா:—தோழீ! சூன்யதேவதையென்றா லென்ன? புலப்படவில்லையே?

ச:— இது, தங்கள் எதிரிகளைவருத்துவதற்காகச் சிலரால் சிலசடங்குகள்செய்து அனுப்பப்படும் தேவதை. இது சடங்குமுதலியசெய்து தன்னை உபாசித்து வருவித்தவர்களின் மனத்துக்கிசைந்து பிறரை வருத்தத்தலைப்படும்.

கா:—இதைப் புதிய வைஜ்ஞானிகள் (Scientist) நம்புகிறதில்லை.

ச:— அதனாலென்ன? நம்தேசத்தவர்களெல்லாருக்கும் இந்த விஷயம் பெரும்பாலும் அனுபவத்தில் வந்திருக்கிறது.

கா:—மெய்தான். இராமாயணத்திலுள்ள நிகும்பலை விருத்தாந்தம் எல்லாருக்கும் தெரிந்ததுதானே. மேல்நடப்ப தென்ன?

ச:— விரிக்கப்பட்டநூலின்மேல் மணமகன் இரதத்தை நடத்திக்கொண்டு செல்லவேண்டும். செல்லும் வழியில் தீர்த்தங்கள், மஹாவிருக்ஷங்கள் நாற்சந்திகள் முதலியவை எதிர்ப்பட்டால் அவற்றில் ஸாந்நித்யம் செய்கிற தெய்வங்களின் பிரசாதத்தைவேண்டி அவ்வவற்றுக்கு ஏற்பட்டமந்திரங்களை ஜபிக்கவேண்டும்.

கா:—தெய்வங்களைநம்புகிற ஆஸ்திகர்கள் இவ்விதம் செய்வது நியாயந்தான்.

ச:— செல்லும்வழியில் நதியிற் பிரவாகமேற்பட்டு ஓடத்திலேறிப்போக நேர்ந்தால் மணமகன் அந்த ஓடத்தைத் தொட்டு மந்திரத்தை ஜெபித்து அக்நியுடனும் மணப்பெண்ணுடனும் ஓடத்தில் ஏறிக்கொள்ளவேண்டியது. ஓடம்நடத்தும்பொழுது மணமகள் ஓடக்காரர்களைப் பார்க்கக் கூடாது.

கா:—ஏன்கூடாது ?

ச:— பெரியபிரவாகத்தில் ஓடக்காரர்கள் சாகஸமான காரியங்களைச் செய்ய நேரிடும். அதைப்பார்த்து மணமகள் பயத்தினால் மனங்கலங்கலாம். அப்படிக் கலங்குதல் அமங்கலத்தைக் குறிக்குமென்று சூத்திரக்காரர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கலாம்.

கா:—நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

ச:— அவர்கள் ஏறிச்செல்லும் வாகனம் ஸ்மசானம் வழியாய்ப்போகும் படிநேர்ந்தாலும், அக்நிஸித்தாழி அல்லது இரதம் பழுதுபட்டாலும் முகாந்தம் (ஆரம்பஹோமம்) முதல் தொடங்கிப் பிராயச்சித்த ஆகுதிகளை ஹோமம் பண்ணி, ஐயாதிஹோமம்வரை செய்து முடித்து மறுபடியும் யாத்திரை தொடங்கவேண்டும். இளி, ஆல் முதலிய மஹாவிருக்ஷங்களையும் பெரியவனங்களையுந் தாண்டிச்செல்லுகையில் மணமகன் மந்திரங்களை ஜெபிக்கவேண்டும்.

கா:—அப்புறம்.

ச:— பிறகு தன்வீடுபோய்ச்சேர்ந்து 'இது என்வீடு இவர்கள் என் உறவினர் என்று மணமகளுக்குத் தெரியும்படி மணமகன் தெளிவாய் எடுத்துரைக்கவேண்டும்.

கா:—நியாயந்தான். இல்லாவிடில் நாயகனுடைய வீட்டையும் சுற்றத்தாரையும் மணமகள் எப்படித் தெரிந்துகொள்ளக்கூடும்.

ச:— பிறகு இரதத்திற்பூட்டிய இரண்டு குதிரைகளையும் மணமகன் தன்னுடையநன்றியறிவைக்குறிக்கும் மந்திரங்களைச்சொல்லி அவிழ்த்துவிடவேண்டும். பின்,வீட்டின்நடுவில்,சிவப்புநிறமுள்ள காளைமாட்டுத்தோலைக் கழுத்துப்புறம் கிழக்கும் மயிர்கள் மேலுமாக விரிக்கச்செய்து மணமகன் மணமகளுடன் வீட்டிற் பிரவேசிக்கவேண்டும். வீட்டிற்பிரவேசிக்கும்பொழுது மணமகன், மணமகளை இடைகழியிற் கணப்பொழுதும் தங்காமல் விரைவாய் நடத்தி உள்ளே அழைத்துக்கொண்டுசெல்லவேண்டும்.

கா:—ஏன் இந்த நிர்ப்பந்தம்? இடைகழியில் திருடனாவது இராக்கதனாவது இருப்பதாகத் தெரியவில்லையே?

ச:— நமதுதேசத்தில், புருஷர்களுக்காவது ஸ்திரீகளுக்காவது மரணம் சமீபித்தால் அவர்களை இடைகழியிற் கிடத்துவது வழக்கம்.

முதலிற் பிரவேசிக்கும்பொழுது அந்த இடத்திற்றங்கினால் மண மகளுக்கு ஒரு சமயம் அமங்களமான விஷயங்கள் ஞாபகத்துக்கு வராமாதலால் அப்படி கேரிடாமலிருப்பதற்கு மஹரிஷிகள் இந்த நிர்ப்பந்தத்தை ஏற்பித்தியிருக்கலாமென்று ஊகிக்கிறேன்.

கா:–நன்றாயிருக்கிறது.

ச:– பிறகு வீட்டின் வடகிழக்குப்பக்கத்தில் அக்நியை மூட்டி ஹோமம் செய்து மணமகன் மணமகளுடன் மேற்கூறியபடி விரிக்கப்பட்ட தோலில் உட்காரவேண்டும். உட்கார்ந்ததும் பிள்ளைசாகக்கொடுக் காத ஒரு ஸ்திரீயின் ஆண்குழந்தையை மணப்பெண்ணின்மடியில் உட்காரவைத்து மந்திரஞ்சொல்லி அக்குழந்தைக்குப் பழங்களைக் கொடுத்து ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் உதிக்கும்வரை மணமகன் மௌனமாயிருக்கவேண்டும். நக்ஷத்திரங்கள் உதித்தபின்னர் மணப்பெண்ணைக் கிழக்கு அல்லது வடக்குமுகமாகக் கூட்டிக் கொண்டுபோய்த் துருவநக்ஷத்திரத்தையும் அருந்ததிநக்ஷத்திரத் தையும் காண்பிக்கவேண்டும்.

கா:–இந்த முறையினால் மணமகன் தனக்கு மணமகளிடத்து அக்கினியி னருளால் நல்ல சந்தானமுண்டாகி வம்சம் தழைத்திருக்கவேண்டு மென்று பிரார்த்திப்பதாகத் தெரிகிறது. துருவநக்ஷத்திரம் அருந்ததிநக்ஷத்திரம் இவைகளைக் காண்பிப்பதற்குக் காரணம் அறியக்கூடவில்லை.

ச:– முன்பொருகாலத்தில் கச்யபர் வஸிஷ்டர் முதலான ஏழு மஹரிஷி கள் இருந்தார்கள் என்றும், அவர்களுக்குக் கிருத்திகையென்று பெயருள்ள ஏழுமனைவியர் உண்டு என்றும், அவர்களில் அருந்ததி என்பவள் பதிவிரதைகளின்நிலையில்நின்றுவழுவாதவளாக இருந்தா ளென்றும், மற்றவர்கள் கற்புநிலையிலிருந்து வழுவியதால் விலக் கப்பட்டார்களென்றும் பௌராணிகர்கள் சொல்லுகிறார்கள். இதை யனுசரித்து நக்ஷத்திரங்களைக்காண்பிக்கும்பொழுது சொல்லப்படு கிற மந்திரங்களின்பொருளை ஆராயுங்கால், மணமகள் அருந்ததி போலவும், தான் வசிட்டன்போலவும் ஆகவேண்டுமென்று மணமகன் பிரார்த்திப்பதாகவிளங்குகிறது.

கா:–தோழீ! நக்ஷத்திரங்களெல்லாம் இவ்வுலகத்திற் புண்ணியஞ்செய் தவர்களுக்கு ஜென்மாந்தரங்களில் ஏற்படுகிற உருண்டை வடிவ மான புண்ணியலோகங்களாயிருக்கவேண்டுமென்று சொல்லுகிறார் களே. அப்படியிருக்க, அவைகளுக்கு ஆண்பால் பெண்பால் என்ற பகுப்பும் கற்புநிலைமுதலிய குணங்களும் உண்டென்று எப்படி நம்பலாம்?

ச:– அந்தந்த உலகங்களுக்குரிய தேவதைகளின் சொரூபங்களையும் குணங்களையுத்தான் மந்திரம் சொல்லுகிறதென்று அறியவேண்டும்.

கா:—பிருஹல்பதிநக்ஷத்ரத்திற்குச்சமீபத்திலுள்ள மற்றொரு நக்ஷத்திரம் ஒரு சமயம் சந்திரமண்டலத்தில் வீழ்ந்தது. அதனால், புதனென்கிற வேறொரு நக்ஷத்திர உலகம் உண்டாயிற்று என்ற இந்த விருத்தாந்தத்தையே ஆச்சர்யமாகவைத்துத் தாராசசாங்கம் என்கிற கதையை உண்டுபண்ணிப் பௌராணிகர்கள் வர்ணிக்கிறார்கள். அந்தக் கதையை நாம் யதார்த்தமாக நம்பக்கூடாதென்று ஜ்யோஸ்திரம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

ச:— பதினாயிரம் கோபஸ்திரீகளை மணம்புரிந்து பகவான் வாசுதேவன் ஒவ்வொருவீட்டிலும் ஏககாலத்தில் தனித்தனியிருந்ததாக நாரதர் கண்டிருக்கிறார். கோபிகைகள் விஷயத்திலும் இவ்விதமே. இக்கதைகளின் உட்கருத்தை ஆராயுங்கால் வீடு முதலிய எல்லாவற்றையும் துறந்து, பரமாத்மாவையே இடைவிடாமல் தியானம் செய்கிற ஜீவர்கள், சுத்த ஸத்வமானலோகத்தில் ஏகாலத்திற் பரமாத்மாவையடைந்து பணிவிடைசெய்து நித்யமான பேரானந்தத்தையடைகிறார்கள் என்கிற வேதாந்தத்தினுட்கருத்து இவ்விதக் கதைகள்மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்று விவேகிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அதுபோலவே நக்ஷத்திரங்களின் விஷயங்களிலு மிருக்கலாம்.

கா:—அம்மா! அத்யாத்மஸ்வரூபங்களை நிரூபணஞ்செய்வதற்காக இவ்விதக்கதைகளை ஏன் சொல்லவேண்டும்? இவற்றால், ஆராய்ச்சியில்லாதசாதாரணஜனங்கள் கிருஷ்ணன் கோபஸ்திரீகளைத்தழுவினனென்றும், கள்ளனென்றும், இடையனென்றும், பூஜைசெய்யவருகனல்லவென்றும், தப்பான அபிப்பிராயங்கொண்டு 'எல்லாங் கிருஷ்ணார்ப்பணம்' என்று இடைவிடாது தியானஞ்செய்துவருகிற நம்முடைய மதக்கோட்பாட்டைத் தூஷணம் செய்யவும் இளம்புகிறார்களே.

ச:— 'எல்லாம் கிருஷ்ணார்ப்பணம்' என்கிறவாக்கியத்திலேயே தூர்ப்புத்திகள் கூறுகிற தூஷணங்களுக்கு நல்ல சமாதானம் விளங்குகிறதே. இது ஒரு பெரியவிஷயம். இதைப்பற்றி வேறொருசமயத்திற் பேசுவோம்.

(தொடரும்)

வித்யாநிதி. ர. கிருஷ்ணமாசாரியர் M. A.

மதுரை.

குறிப்பு:—இப்பகுதியில் இடமின்மையால், புத்தகமதிப்புரை வெளியிடப்படவில்லை. அடுத்த பகுதியில் வெளிவரும்.

பத்திராதிபர்.

1921-ஆ ஆகஸ்டுமீ 16உ (துர்மதிஆ ஆவணிமீ 1உ) காலை 11-மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரிய நிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வர சேதுபதி மன்னரவர்கள்—அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள், B.A.,
3. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள், B.A., B.L.,
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M. L. C.,
5. ,, வித்துவான் R. இராகவையங்காரவர்கள்,

இவர்கள் வந்திருந்தார்கள்.

I. 1921-ஆ ஜூலைமாத வரவுசெலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராக வேண்டுமெனக் கோரிய அடியிற் குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-ள-ள-ஸ்ரீ M. ராமையா முதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், நிருத்தூறைப் பூண்டி.

(2) ,, பண்டித. R. திம்மப்பையர் அவர்கள், உதவித் தமிழ்ப்பண்டிதர், சேலம்காலேஜ், சேலம்.

III. சங்கப்பதிப்புப் புத்தகங்களைச் சாதுர்மாஸ்ய ஸங்கற்ப மஹோத்ஸவத்தன்று ஸ்ரீவானமாமலை ராமாநுஜஜீயர்ஸ்வாமி அவர்கள் ஸந்நிதானத்தில் இனாமாக ஸமர்ப்பித்ததை அங்கீகரிக்கலாயிற்று.

IV. சங்கப்பரீக்ஷையிற் றேர்ச்சிபெற்ற மாணவர் ஒருவரின் அம்சங்களைக்குறித்தனுப்பவேண்டுமென்று சேலம்காலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ T. S. சடகோபையரவர்கள் கேட்டுக்கொண்டபடி Speial case ஆகக் குறித்தனுப்பும்படி தீர்மானிக்கலாயிற்று.

V. சங்கக்கட்டிடத்தின் நடுக்கூடத்தை லாந்தரும் மேல்மாடியில் தாழ்வாரம் இறக்கவும் தயாரிக்கப்பட்டுள்ள (Estimate) மதிப்புத்திட்டத்தை மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள் பார்வையிட்டு அபிப்பிராயம் கொடுத்ததன்மேல் அங்கீகரிக்கவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

VI. 1921–22-ம் ஆண்டிற்குத் தயாரித்துள்ள வரவுசெலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரித்தல் தள்ளிவைக்கலாயிற்று.

VII. சங்கத்தின் வருஷோத்ஸவகாலத்தில் வாசிப்பதற்காகத் தயாரிக்கலான சென்றஆண்டின் அறிக்கைப்பத்திரம் அங்கீகரிக்கலாயிற்று.

B. இராஜராஜேஸ்வரசேதுபதி,
அக்கிராசனாதிபதி.
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

மதுரை.
16—8—21.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி க்கூ.] தூர்மதி-ஹூ புரட்டாசி-மீ [பகுதி ககூ.
Vol. XIX. September—October—1921. No. 11.

பிழைதிருத்தம்.

இப்பகுதியில் கூஎ0 ஆம்பக்கம் இறுதிவரியில் செய்வேன் என்றிருப்பதை, செய்வோம் எனவும், கூஎஉ-ஆம் பக்கம் 11-ஆம் வரியில் ஒவ்வோரு ஙகூத்திரத்தின் புடைபெயர்ச்சியும் என்றிருப்பதை ஙகூத்திரங்களின் பரஸ்பர இடங்களில் மாறுதல் எனவும், கூஎச-ஆம் பக்கம் 27, 29-ஆம் வரிகளிலும் கூஎடு-ஆம் பக்கம் 2-ஆம் வரியிலும் அயனராசிச்சக்கரம் என்றிருப்பதை அயனராசிச்சக்காரம்பம் எனவும், கூஎசு-ஆம் பக்கம் 18-ஆம் வரியில் ஙகூத்திரராசிச்சக்கரத்தை என்றிருப்பதை ஙகூத்திரராவிராசிச் சக்கரத்தை எனவும், 27-ஆம் வரியில் இருக்குமேன்ரல் என்றிருப்பதை இருக்குமேயென்ரல் எனவும், கூஎஎ-ஆம் பக்கம் 16-ஆம் வரியில் இடைகலேயிற் சந்திரனும் பிங்கலேயிற் சூரியனும் என்றிருப்பதை இடைகலேயிற் சூரியனும் பிங்கலேயிற் சந்திரனும் எனவும் திருத்திக்கொள்ளவேண்டும்.

கள், ஸ்ரீமத். L. K. துளசிராம் அவர்கள், ஸ்ரீமத். V. சுந்தரமையாவர்கள், ஸ்ரீமத். K. வெங்கோபாவ் அவர்கள், ஸ்ரீமத். C. ஸ்ரீநிவாஸராவ் ஸாஹெப் அவர்கள், ஸ்ரீமத். R. S. நாராயணஸாமி ஐயரவர்கள், ஸ்ரீமத்.

T. S. சுப்பிரமணியஐயரவர்கள், ஸ்ரீமத். R. கணபதிஐயரவர்கள், ஸ்ரீமத். N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், பேரையூர் ஜமீன்தார் மகா-ரா-ரா-ஸ்ரீ முத்துவிஜய ரகுநாதசொடுமுடி தும்பையசாமி தும்பிச்சநாயக்கரவர்கள், சேற்றூர் ஜமீன்தார் மகா-ரா-ரா-ஸ்ரீ வடமலைத் திருவாத சேவகப்பாண்டியத்துரைத் தேவரவர்கள், தேவகோட்டை ஜமீன்தார் மகா-ரா-ரா-ஸ்ரீ A. L., A. R., ஆருணசலஞ்செட்டியாரவர்கள், மதுரை Dt. Munsiff மகா-ரா-ரா-ஸ்ரீ பழநியப்பமுதலியாரவர்கள், மதுரைத்தாலூகாபோர்டு பிரஸிடெண்டும், சிறுபாலை ஜமீன்தாருமான மகா-ரா-ரா-ஸ்ரீ ப. சி. முத்துசெட்டியாரவர்கள், மதுரை ஜில்லாபோர்டு உபாக்கிராசனதிபதி ஸ்ரீமத். அப்பாய்நாயுடு அவர்கள், மகா-ரா-ரா-ஸ்ரீ N. சுந்தரலிங்கஸ்வாமி காமயநாயக்கரவர்கள், மதுரைப் போஸ்டுமாஸ்டர் ஸ்ரீமத். விஜயராகவாசாரியரவர்கள், Postal Superintendant மகா-ரா-ரா-ஸ்ரீ டிரிமுத்துப்பிள்ளையவர்கள், மதுரை Police Inspector மகா-ரா-ரா-ஸ்ரீ அரங்கஸ்வாமிஐயங்காரவர்கள், வித்வான்கி ர. கிருஷ்ணமாசாரியர் M. A. அவர்கள், ஸ்ரீமத். M. S. பூர்ணலிங்கம்பிள்ளை M. A. அவர்கள், ஸ்ரீமத். V. முத்துஸ்வாமிஐயர் M. A. L. T. அவர்கள், செந்தமிழ்ப்பத்திராதிபர் ஸ்ரீமத். திரு. நாராயணையங்காரவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள், ஸ்ரீமத். காஞ்சி நாகலிங்கமுதலியாரவர்கள், இராமநாதபுரம் வக்கீல் ஸ்ரீமத். T. இராமானுஜையங்காரவர்கள், ஸ்ரீமத். A. உக்கிரபாண்டியம்பிள்ளையவர்கள், சென்னை ஸ்ரீமத். K. சதாசிவ செட்டியார் B.A. அவர்கள், திருநெல்வேலி ஹிந்துகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். த. மு. சொர்ணம்பிள்ளையவர்கள், வானமாமலை யாதீனவித்வான் ஸ்ரீமத். பக்ஷிவானமாமலைஐயங்கார்ஸ்வாமிகள், திருவையாற்று ஸம்ஸ்கிருதகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சந்தானமையங்காரவர்கள், திருச்சி ஸ்ரீமத். S. ராஜகோபாலாசாரியரவர்கள், கும்பகோணம் ராஜாங்கக்கலாசாலை யுபாத்தியாயர் ஸ்ரீமத். K. C. வீரராகவையரவர்கள், மதுரை அமெரிக்கன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ஆ. கார்மேகக்கோனரவர்கள், மதுரை ஸௌராஷ்டிர கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். P. C. புன்னைவனநாதமுதலியாரவர்கள், ஆம்பூர் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். P. M. வேணுகோபாலநாயுடு அவர்கள், ஸ்ரீமத். T. சுதர்சனசாரியரவர்கள், மதுரை ஸ்ரீமத். R. நாகேஸ்வரஐயரவர்கள், மதுரை Y. M. C. A. சங்கக்காரியதரிசி ஸ்ரீமத். துரைஸ்வாமிபிள்ளையவர்கள் முதலியோர் விஜயம்செய்திருந்தனர்.

17வ மாலை 4-மணிக்கு ஸபை கூடியது. முதலில் வருஷக்கொண் டாட்டத்துக்கு அக்கிராஸனராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற சென்னை எக்ஸிகூடிவ்கௌன்ஸில்மெம்பரும் ஸர்வகலாசங்கத்தின்உபாக்கிராசனதி பதியுமான கனம் K. ஸ்ரீநிவாஸையங்காரவர்களை வாத்தியகோஷத் துடன் சங்கத்தார் வரவேற்றுபசரித்தனர். அப்பொழுது மதுரை ஸேது பதி உயர்தரகலாசாலை மாணவர்கள் பட்டாளத்தாரைப்போல் உடை யணிந்து அணிவகுத்துநின்று மரியாதைசெய்தார்கள். பின்னர் திரு வையாற்று ஸம்ஸ்கிருத கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-சந்தான மையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப்பாடினர்கள். தமிழ்ச்சங்கக்கலாசாலை யுபாத்தியாயர் ஸ்ரீமத். நல்லசிவன்பிள்ளையவர்களியற்றிய மங்களவாழ்த் துச் செய்யுட்கள் பி. கலாசாலை யுபாத்தியாயர் ஸ்ரீமத். ஹரிஹரைய ரவர்களாற் படிக்கப்பட்டன. அதன்பின், தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனரான மாட்சிமைதங்கிய ஸேதுபதிமகாராஜாவர்கள் கேட்டுக் கொண்டபடி, கனம் K. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் ஸபைத்தலைமை வகித்தார்கள். மதுரைவக்கீலும் சங்கத்தின் நிர்வாகஸபையங்கத்தினரு மான ஸ்ரீமத். K. ராமையங்காரவர்கள் அக்கிராசனருக்கு மாலைசூட்டி னர்கள். பின்னர் மாட்சிமைதங்கிய ஸேதுபதி மஹாராஜாவர்களால்,

நமது இந்தியாதேசத்துக்கு இரண்டுமோதத்துக்குள்விஜயம்செய்யும் மேன்மையும் கௌரவமும் தங்கிய இளவரசரவர்கட்கு இச்சங்கத்தார் நல்வரவுகூறுகிறார்கள்; அவர்கள் இத்தேசத்திற் சகல ஸௌக்கியத் துடனுமிருந்து இத்தேசத்தவரின் ராஜவிசுவாசத்தையும் அன்பையும் நமது அதிமேன்மைதங்கிய சக்கரவர்த்தியவர்கட்குத் தெரிவிக்கவும் இச்சங்கத்தார் வேண்டுகிறார்கள்.

என்கிற தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டுச் சபையோரால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

பின்னர், சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமத் T. C. ஸ்ரீநிவா ஸையங்காரவர்கள், வருடக்கொண்டாட்டத்துக்குவரமுடியாத அங்கத் தினரிடமிருந்தும் அபிமானிகளிடமிருந்தும் வந்த தந்திகளையும் கடிதங் களையும், தமிழ்ச்சங்கத்தின் இருபதாம் வருட அறிக்கைப்பத்திரத்தை யும் படித்தார்கள்.

அதன்பின், வந்திருந்த கனவான்களுள், ஸேதுஸமஸ்தான வித்துவான் ஸ்ரீமந்-ராமராகவையங்காரவர்கள் தமிழின்பெருமையை

யும் தமிழ்ச்செய்யுளின் சிறப்பையும், தமிழ்ச்சார்கள் தமிழைப் பாதுகாத்துவந்தமுறையையும், மதுரையின்சிறப்பையும் தக்க மேற்கோள்களால் விளக்கி, நம் சங்கம் இதுவரை தமிழைவளர்த்துவந்தது போலவே இனியும் வளர்த்துவரவேண்டுமென்றும், சங்கக் கலாசாலையிற் பயிலும் மாணவர்க்கு வடமொழியையும் இசையையும் அவசியம் உபபாடமாயமைக்கவேண்டுமென்றும், பல புதுநூல்களைத் தேடி எழுதிப் பிரசுரஞ்செய்யவேண்டுமென்றும் அபிப்பிராயங்கூறினர்கள்.

ஸ்ரீமத். V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள், சங்கம் ஆராய்ச்சி (Research work) முறையில் வேலைசெய்யவேண்டுமென்று அபிப்பிராயங் கூறினர்கள்.

மதுரைப் போஸ்டுமாஸ்டர் ஸ்ரீமத்-விஜயராகவாசாரியாவர்கள், தமிழுக்கும் ஸம்ஸ்கிருதத்துக்கும் வேற்றுமையில்லையென்பதையும் வைஷ்ணவர்களுக்குள் வடகலை தென்கலை என்ற பிரிவு ஏற்பட்ட காரணத்தையும் மதுரை தமிழ்வேதத்துக்கும் வடமொழிவேதத்துக்கும் இடமென்பதையும் விளக்கித் தமிழ்ச்சங்கம் பல்லாற்றானும் அபிவிர்த்தியடையவேண்டுமென்றும் அபிப்பிராயங்கூறினர்கள்.

ஸ்ரீமத். M. S. பூர்ணலிங்கம்பிள்ளை M. A. அவர்கள், சங்கம் புதியஆராய்ச்சிமுறையில் வேலைசெய்யவேண்டுமென்றும், தமிழில் ஒருபெரிய அகராதியும் தமிழ்க்கவிசரிதமும், எழுதிவெளியிடவேண்டுமென்றும், அதற்குத் தக்கவித்வான்களுடைய உதவிவேண்டுமென்றும், தக்கவித்துவான்கள் இப்போது சிலரேயிருப்பதால் இவர்கள் காலத்திலேயே அவை வெளியிடப்படவேண்டுமென்றும் அபிப்பிராயங் கூறினர்கள்.

அதன்மேல், கனம்பொருந்திய அக்கிராசனரவர்கள் சங்கப்பரீக்ஷைகளிற்றேறிய மாணவர்க்குப் பரிசுமுதலிய அளித்துத் தமது பிரசங்கத்தைச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் விளக்கமாகவும் தமிழில் எழுதிப் படித்து அதையே ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துக் கூறினர்கள்.

அதன்பின், வானமாமலையாதீனவித்துவான் ஸ்ரீமத். பகவிவானமாமலை ஐயங்கார்ஸ்வாமி தாம் வடமொழியிற் செய்த மங்களவாழ்த்தைப் படித்துப் பொருள்கூறினர்கள்.

பின்னர், மதுரைவக்கீலும் சங்கத்தின்நிர்வாகசபையங்கத்தினரு மான ஸ்ரீமத். V. S. இராமஸ்வாமிசாஸ்திரிகள் கனவான்கள்கூறிய அபிப் பிராயத்தைப்பற்றிப் பேசுமிடத்து, சங்கக்கலாசாலைமாணவர்க்கு வட மொழியை முன் உபபாடமாகவைத்துப் பார்த்ததில், போதுமான பயன் ஏற்படாது, தமிழபிவிர்த்தியும் தடைப்பட்டமையால் இப்போது தனித்தமிழ்மாத்திரம் கற்பிக்கப்பட்டுவருகிறதென்றும், இச்சையைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது அவசியமேயென்றும், இயன்றவரை புது நூல்கள், தேடி எழுதிப் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்றும், ஸ்ரீமத். பூர்ண லிங்கம்பிள்ளையவர்கள் சொல்லியபடி தமிழ்ச்சொல்லகராதியில் இரண்டு பாகமும், அபிதானசிந்தாமணி யென்னும் பெயரகராதிபொன்றும் வெளி யிடப் பட்டுள்ளனவென்றும், தமிழ்ச்சொல்லகராதியின் மூன்றும்பாகம் விரைவில் வெளிவருமென்றும், அபிதானசிந்தாமணியிற் றமிழ்க்கவி சரித மும் இடையிடையே சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும், இன்னும் அவற் றைச் செம்மைசெய்து வெளியிடவுத்தேசமுண்டென்றும், இவற்றுக்கு விசேஷ திரவியசகாயம் வேண்டுமென்றும்கூறி அக்கிராசனர் முதலி யோர்க்கு வந்தனம் செலுத்தினர்கள். அதன்பின் சங்கத்தின் கௌரவ காரியதரிசி மகா-ள-ள ஸ்ரீ M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் அக்கிரா சனர்க்கு மாலைசூட்டினர்கள். அன்று இரவு 8-மணிக்கு ஸபை இனிது நிறைவெய்தியது.

18வ ஸபைநிகழ்ச்சி.

காலை 8½ மணிக்கு ஸபைகூடியது. அக்கிராசனரான கனம் K. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் வேறுகாரியமாகச் சென்றிருந்தமைபால் மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் ஸபையோர்வேண்டு கோட் கிணங்கிச் சபைத்தலைமைவகித்துத் தமிழ்ச்சங்கம் இருபது வருடகாலமாய்ச் செய்துவரும் அரியவேலைகளைப் புகழ்ந்தும், சங்கக் கலாசாலையிற் பயின்ற அநேகர் ஆங்கிலகலாசாலைகளிலும் பிற இடங்களி லும் தமிழ்ப்பண்டிதராயிருப்பதைப் பாராட்டியும், செந்தமிழ்வாங்கு வோர் தொகை குறைந்திருப்பதற்கிரங்கியும், இன்னும்பலர் செந்தமிழ் வாங்குவோராய்ச்சேர்ந்து ஆதரித்துவரவேண்டுமென்றும், முன்னுரை கூறினர்கள். திருவையாற்று ஸம்ஸ்கிருதகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சந்தானமையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப்பாடினர்கள்.

பின், சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமத் T. C. ஸ்ரீநிவாஸையங் காரவர்கள், யாழ்ப்பாணத்துச் சுன்னகம் வித்துவான் ஸ்ரீமத். அ. குமார சுவாமிப்பிள்ளையவர்க ளனுப்பியிருந்த தமிழ்மொழிவளர்ச்சி என்ற பொருளுரையைப்படித்து, அதிற் கூறப்பட்ட விஷயங்களைப் பாராட்டி அதிற்கூறியபடி தமிழ்ச்சங்கக்கலாசாலையை இன்னும் அபிவிருத்தி செய்ய விசேஷதிரவியஸஹாயம் வேண்டுமென்றும், தனித்தமிழ்ப்பரீ க்ஷைப் பாடவிஷயங்களைச் சங்கத்தின் வித்யாவிஷய ஆலோசனை ஸபை யார் கவனித்து வேண்டியது செய்வார்களென்றும் கூறினர்கள்.

அதன்பின், திருச்சி ஸ்ரீமத். S. ராஜகோபாலாசாரியர் B.A. அவர்கள் இந்தியக்கல்விச்சங்கம் (National university) என்னும் விஷயத்தை யும், மதுரை ஸௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். P. சிதம்பரப்புன்னைவனநாதமுதலியாரவர்கள் தமிழும் ஸர்வகலாசாலை யும் என்னும் விஷயத்தையும், இராமநாதபுரம் ஹில்லா பெண்பாடசாலை உதவிப்பரிசோதகர் ஸ்ரீமத். V. முத்துஸாமிஐயர் M.A., L.T., அவர்கள் ஆங்கிலப்பள்ளிக்கூடத்திற் றமிழ் என்னும் விஷயத்தையும் எடுத்துக் கொண்டு பாலர்வகுப்புமுதல் எம். ஏ. பட்ட பரீக்ஷைவரை தமிழையும் முக்கியபாடமாக்கவேண்டுமென்றும் ஆங்கிலமொழிந்த பாடங்களை யெல்லாம் மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றிவைக்கவேண்டுமென்றும், தமிழுக்கென்று தனியே ஒரு ஸர்வகலாசங்கம் ஏற்படவேண்டுமென்றும் பேசினர்கள்.

அதன்பின், மதுரை வக்கீல் ஸ்ரீமத். ஆர். எஸ். நாராயணஸாமி ஐயரவர்கள் பரிபாடற் பதினோராம்பாட்டிற்கண்ட நிகநிலையைப்பற்றி ஆக்ஷேபித்துப் பேசினர்கள். அதன்பின், செந்தமிழ்ப்பத்திராதிபர் ஸ்ரீமத். திருநாராயணையங்காரவர்களும், மதுரைவக்கீல் ஸ்ரீமத். ஆர். கண பதி ஐயரவர்களும் பரிபாடற்பாட்டிற்கண்ட நிகநிலைகள் சரியாயிருக்கலா மென்று தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

பின்பு, மதுரை Y. M. C. A. சங்கக்காரியதரிசி ஸ்ரீமத். துரைசாமி பிள்ளையவர்கள், தமிழ் என்ற விஷயமாகத் தாம் எழுதிய வியாசத்தைப் படித்துத் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் ஒவ்வொரு பரீக்ஷையிலும் ஒவ் வொரு பிரிவுக்கும் ஒவ்வொருவருடமாகச்சென்று தேறலாமென்று விதி யேற்படுத்தவேண்டுமென்றும் கூறினர்கள்.

அதன்பின், மதுரைத் தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் அரசியலாராய்ச்சி என்ற விஷயமாகத் தாமெழுதிய பொருளுரையைப் படித்து விளக்கினர்கள்.

அதன்மேல், அக்கிராசனரான மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள், ஸபையிற் பேசப்பட்டனவும் படிக்கப்பட்டனவுமான விஷயங்களையும் பொருளுரைகளையும் பாராட்டி, ஆங்கிலகலாசாலைகளிற் தமிழையும் முக்கியபாடமாக்கும்விஷயமாகப் பேசப்பட்டவற்றைச் சங்கக்கொண்டாட்டத்துக்கு அக்கிராஸனராகவந்த கனம் ஐயங்காரவர்கள் கேரிற் கேட்டிருக்கவேண்டுமென்றும், அவ்வாறு நேராமைக்குத் தாம் வியசனிப்பதாகவும், ஆயினும், தாம் அவரிடம் கூடி விஷயங்களைத் தெரிவிப்பதாகவும், ஸபையில் அவ்விஷயத்தைப்பற்றிப் பேசியவர்களும் ஒருகூட்டமாகச் சென்று கனம் ஐயங்காரவர்களிடம் கூடி விஷயங்களைத் தெரியப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும், பரிபாடற் பாட்டிற் கூறிய கிரகநிலை ஆராய்ச்சியில் ஏற்பட்ட ஆக்ஷேபஸமாதானங்களை எழுதிச் செந்தமிழில் வெளியிடவேண்டுமென்றும் அபிப்பிராயங் கூறினர்கள்.

அன்று பிற்பகல் 4½ மணிக்கு மறுபடியும் ஸபைகூடியது. ஸ்ரீமத். சந்தானமையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடினர்கள். அக்கிராசனரான ஸ்ரீமான் K. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் ஐந்தமணிக்கு விஜயம் செய்வதாயிருந்தமையால், ஸபையோர் விருப்பப்படி மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களே ஸபைத்தலைவராயிருந்தார்கள். முதலில் திருநெல்வேலி ஹிந்து கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். மு. சொர்ணம்பிள்ளையவர்கள் திருக்குறளுரைநூட்பம் என்ற விஷயமேற்கொண்டு, தமக்குக் கிடைத்த திருக்குறட் பழையவுரையேட்டுச்சுவடியொன்றிற்கண்ட சிலவிஷயங்களை எடுத்துப்பேசினர்கள். இவர் பேசிமுடிக்குமுன் அக்கிராசனரான கனம் ஐயங்காரவர்கள் விஜயம் செய்தார்கள். (பின்பு, கனம் ஐயங்காரவர்களும், மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுமாகிய இருவரும் ஸபாநாயகர்களாக இருந்து ஸபையை நடத்தினர்கள்.)

பின்னர், சென்னை ஸ்ரீமத். K. சதாசிவஞ்செட்டியார் B.A., அவர்கள் திருவள்ளுவர் என்ற விஷயமேற்கொண்டு திருக்குறளின் பெருமையையும், திருக்குறளிற் சொல்லப்பட்ட விசேஷதர்மங்களையும், தேவார திரு

வாசகங்களும் திருக்குறளும் ஒத்தகருத்துடையன என்பதையும், திருவள்ளுவரது வாக்குசயத்தையும் உவமை கூறுந்திறத்தையும் தக்க மேற்கோள்களால் விளக்கி யுபன்யசித்தார்கள்.

அதன்பின், திருநெல்வேலி இந்துகலாசாலைத்தலைவர் ஸ்ரீமத்-M. S. பூர்ணலிங்கம்பிள்ளை M. A. அவர்கள், ஊசிமுறி என்றவிஷயத்தை எடுத்துக்கொண்டு ஊசிமுறி என்பது இடைக்காடர்செய்தநூலென்றும், அதன் பெயர்க்காரணம் இதுவென்றும், கடைச்சங்கத்தார் பொறுமையும் செருக்கும் உடையராய், தங்கள் ஸபையில் நூலரங்கேற்ற விரும்பும் புலவர்களை அவமதித்துவந்தனரென்றும், அதுபொறுத இடைக்காடர் அவர்கள் செருக்கொழிக்கக் கருதி இந்நூலை இயற்றினரென்றும், இந்நூற்கு ஒன்பத்தாறு என வேறொருபெயரும் வழங்குமென்றும், இதனுற் சங்கத்தார் இவ்விதம் செருக்கொழிந்தனரென்றுங் கூறி, அந்நூலிலிருந்து சிலபாடல்களையும், அந்நூலிற் பயின்றுள்ள சில ஒலிக்குறிப்புக்களையும் படித்துவிளக்கினர்கள்.

அதன்பின், கும்பகோணம் இராசாங்கக்கலாசாலை யுபாத்தியாயர் ஸ்ரீமத்-K. C. வீராசாமையரவர்கள் தாமெழுதிய குமரிக்கருமணல் என்ற வியாசத்தைப்படித்தார்கள்.

பின்னர், மதுரையிலுள்ள இராமேஸ்வரதேவஸ்தான பாடசாலைப் பிரின்ஸிபால் வித்வாந்-ர. கிருஷ்ணமாசாரியர் M. A. அவர்கள் வடமொழியும் தமிழும் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு வடமொழி நூல்களில் இல்லாத அரியகற்பனைகளும் சில சித்தாந்தங்களும் தத்துவங்களும் தமிழிற் கம்பராமாயணம் முதலியநூல்களிற் காணப்படுகின்றனவென்று தக்க ஆதாரங்காட்டி உபன்யசித்தார்கள்.

அதன்பின், ஸேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்கள், தமிழைப்பற்றிய ஆராய்ச்சி என்ற விஷயமேற்கொண்டு, ஸம்ஸ்கிருதம்பயில்வார் வடதிசையில் மிக்குள்ளமையால் அதனை வடமொழியென்றும், தமிழ்பயில்வார் தென்திசையில் மிக்குள்ளமையால் அதனைத் தென்மொழி என்றும் கூறுவரென்றும், வடமொழி உலகத்துக்குப் பொதுவென்றும், வடதிசையாண்டவனுகிய இராமபிரான் தென்மொழியிலும் தேர்ச்சிபெற்றவன் என்றும், வடமொழியும் தென்

மொழியும் பெருமை சிறப்புமுதலியவற்றால் ஒப்புமைபுடையனவென் றும், வடமொழிவேதமுதலியனவும் தென்மொழிவேதமுதலியனவும் ஒற்றுமைபுடையனவென்றும் வடமொழி தென்மொழி வேதங் களிலிருந்தும் தக்கநூல்களிலிருந்தும் மேற்கோள்காட்டிச் சபையோர் வியந்துகொண்டாடும்படி பேசினர்கள்.

அதன்பின், மதுரை அமெரிக்கன்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் ஆ. கார்மேகக்கோனரவர்கள் தாம் எழுதிய மதுரைக்காஞ்சியா ராய்ச்சியில், நேமின்மையா லிடையிடையே சிலபாகத்தைப் படித் தார்கள்.

பின்னர், சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமத். T. C. ஸ்ரீநிவா ஸையங்காரவர்கள் காலமதிகரித்துவிட்டதனால், சென்னை லெக்ஸிகன் கமிட்டி தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-மு. ராகவையங்காரவர்கள் அனுப்பி யிருந்த தைந்நீராடல் என்ற வியாசமுழுவதையும் படிக்க இயலாமை யால் அதன் சுருக்கமான விஷயத்தை விளக்கிச் சொன்னர்கள்.

அதன்பின், மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் நடந்த உபன்யா சங்களையும் படித்தவியாசங்களையும் பாராட்டிப்பேசி, ஊசிமுறியைப் பற்றிச் சொல்லுமிடத்துச் சங்கப்புலவர்கள் இடைக்காடரிடமும் மற் றப் புலவர்களிடமும் பொறுமைகொண்டார்களென்று கூறுவது பொருந் தாதென்று மேற்கோள்காட்டியும், ஊசிமுறி அச்சிட்டு வெளியிடப்படு மானால் அதைப்பற்றிய விவரங்களையெல்லாம் அறிந்து மகிழலாமென் றும் அபிப்பிராயங்கூறி, அவர்களே தமிழ்ப்புலவர்களையும் உரையாசிரி யர்களையும்பற்றிப் பேசத்தொடங்கித் தொடித்தலைவிழுத்தண்டினர் முதலிய புலவர்களின் பெயர்க்காரணத்தையும் அவர்களியற்றிய செய் யுட்களிலமைந்த ஆழ்ந்த கருத்துக்களையும் சிந்தாமணியுரை நன்னூல் மயிலைநாதருரைகளிலுள்ள நுட்பங்களையும் விளக்கிச் சபையோர் கொண் டாடும்படி உபன்யசித்தார்கள்.

அதன்பின், சங்கத்தின் கௌரவகாரியதரிசியாகிய ஸ்ரீமத்-T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், அக்கிராசனரான கனம்பொருந்திய K. ஸ்ரீநி வாஸையங்காரவர்களையும், சென்னை ஹைக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமத்-C. P. இராமஸ்வாமிஐயரவர்களையும், மதுரை பாரிஸ்டர் மகாஸ-ஸ்ரீ P. T. ராஜன் அவர்களையும் சங்கத்தின் சாசுவத அங்கத்தினராகவும், அபிரா

மம் வித்யாபாஸ்கர செந்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனரான ஸ்ரீமத். D. காகலிங்கம்பிள்ளையவர்களைச் சாதாரண அங்கத்தினராகவும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று பிரேரணை செய்யச் சபையோர் அதனை அங்கீகரித்தனர்.

அதன்பின், மதுரை ஸௌராஷ்ட்ரஉயர்தர கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். P. சிதம்பரபுன்னைவனநாதமுதலியாரவர்கள் தாம் இயற்றிய மங்களவாழ்த்தைப் படித்தனர். பின்னர், சங்கக்கலாசாலை யுபாத்தியாயர் ஸ்ரீமத். ஹரிஹரையரவர்களால், யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் இராமநாதவித்யாலயத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். K. S. நவநீதகிருஷ்ண பாரதியவர்கள் அனுப்பியிருந்த மங்களவாழ்த்தும், சிதம்பரம் ஸ்ரீமீனாக்ஷி கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள் அனுப்பியிருந்த செய்யுளும் படிக்கப்பட்டன.

அதன்பின்னர், அக்கிராசனரான கனம் ஐயங்காரவர்கள் நடத்த உபந்யாசங்களையும் படித்தவியாசங்களையும் சிலாகித்து இம்முறையே மேலும் தமிழை அபிவிருத்திசெய்வதற்கு எல்லாரும் தக்கபடி முயன்றுவரவேண்டுமென்று கூறி முடித்தார்கள்.

அதன்பின், மதுரைவக்கீலும் சங்கத்தின் நிர்வாகசபையங்கத்தினருமான ஸ்ரீமத். P. சுப்பராயஐயரவர்கள் அக்கிராசனருக்கு வந்தனங் கூறவும், சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமத். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் ஸபைக்கு விஜயம்செய்தவர்களுக்கும் பிறர்க்கும் வந்தனங் கூறவும் கடவுள்வாழ்த்துடன் இரவு 8-மணிக்கு ஸபை இனிது நிறைவெய்தியது.

மாடமதுரைவளருந்தமிழ்ச்சங்கம்
நீடுபுகழ்பெற்றுநிலைபெறுக—ஏடலர்தார்த்
தேவைத்துரையைத்திறன்முத்துராமலிங்கக்
கோவைத்தலைவனெனக்கொண்டு.

சுபம்.

உதவிப்பத்திராதிபர்.

சென்னை எக்ஸிகியூடிவ்கவுன்சில் மெம்பரும் ஸர்வகலாசாலையின்
உப அக்கிராசனாதிபதியுமான

ஸ்ரீமாந். K. ஸ்ரீ நிவாஸ ஐயங்காரவர்கள் அக்கிராசனராக

தன்மதிஞ புரட்டாசிமீ உக (17—9—21) நடைபெற்ற

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இருபதாம் வருடக் கொண்டாட்டத்தில்

தமிழ்ச்சங்கக்கலாசாலை உபாத்தியாயர்

சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் பாடிய மங்களவாழ்த்து.

நிலமண்டில ஆசிரியப்பா.

கங்கையும் யமுனையுந் துங்கபத் திரையும்
பொங்குநீர்ப் பொருநைப் புண்ணிய நதியும்
பூவிரி தண்புனற் காவிரி யாறும்
இருநில மதனிற் றருவளன் யாவும்
வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி
நாடொறு நல்கும் பீடொருங் குடைத்தாம்
மழைதவழ் குடுமி மாடக் கூடற்
றீருக ரிதனிற் பெருவரைத் தோன்றிப்
பாண்டியர் தம்பா லீண்டி வளர்ந்து
சங்கத் தமர்ந்த துங்கத் தமிழ்மகள்
தென்னவர் தமக்குப் பின்னவ ரேயெனுஞ்
சேது காவலர் பாதுகாப் புற்றிவ்
வுலகினி னிலவுத லுணரா ரெவரே
மும்மன்னர் விழையு மம்மன்னர் மரபிற்
சென்னியர் போற்றுங் கன்னிநன் னாடு
பண்ணிய தாகிய புண்ணிய மனைத்தும்
ஓருருக் கொண்டு பாரிடைப் பிறந்தென
வந்து தோன்றிய செந்தமிழ் வள்ளலாம்
பாற்கரன் போன்மிளிர் பாற்கர பூபனும்
பலகலை யுணர்ந்த புலவர்முன் புரிந்த
சில மனைத்துந் திரண்டெனத் தோன்றிப்

பாலவ னத்தப் பதியாள் குரிசிலாய்
அமிழ்தெனப் போற்றுந் தமிழ்நல முணர்ந்த
பாண்டிப் பெருந்தவப் பாண்டித் துரையும்
தன்னே ரில்லாத் தமிழ்தழைத் தோங்கற்
குறுதுணை யாயிவ ணிறுவிய தண்டமிழ்ச்
சங்கஞ் சிறந்து தவ்வே நிருபான்
வயதூற்று வளருமிம் மங்களத் திருகான்
மாண்புறத் தலைமை வகித்தமன் யாரெனில்
நன்னலந் திகழுஞ் செல்வியம் பதியில்
உயர்தர நீதிப் பெயர்தரு பதியாய்
நன்றறி வார்திகழ் மன்றத் தமர்ந்தோன்
சென்னைக் கவர்னர் மன்னிய சபையில்
மன்னவர் நீதி வாதியென் றுரைக்கும்
நிகரிலாச் சட்ட நியாமக னுனென்
றுரைத்தன சபையிற் றிருத்த மமைக்கு
நிருவா கம்பெறு மொருபே ரறிஞன்
கனம்பெறு சருவ கலாசங் கத்திலும்
இணையிலா றுறையுந் துணையறி பதியாய்
ஏழ்நிலம் புகழ வாழ்வுறு பெரியோன்
பைந்தழாய் முகிலெச் சித்தையிற் பரவி
வந்துனை புரியு மந்த ணாளன்
மாநிலம் புகழுஞ் சீநி வாசப்
பேர்புனைந் துயர்ந்த பெருமையோனே
கல்வித் தலைமைக் கனம்பெறு மிவ்வேள்
இப்பெருந் திருநாட் கினிதெழுந் தருளித்
தலைமை யார்ந்த நிலைமையுற் றதனால்
தமிழுஞ் சங்கமுந் தழைத்திடு மெனற்கின்
கையுஞ் சிறிதும் வையகத் தின்றே
இந்திர சபையெனு மிப்பெருஞ் சபையில்
ஆரிய மென்னும் பாரிரும் பௌவக்
கரைகண் டுயர்ந்த வரைவல் லாளருங்
தண்டமிழ் முந்நீ ருண்டவல் லாருஞ்
இசைதூ ணுணர்ந்தின் னிசைசேர் குருவும்

ஆந்திர முணர்ந்த சாந்தமிக் கோரும்
ஓங்கிய நல்லிசை யாங்கில நிபுணரும்
செல்வத் துயர்ந்த சிங்கியர் பலரும்
கல்வியி லுயர்ந்த காட்சிமிக் கோரும்
ஒருங்கு நிறைந்து சிறந்தன ரன்றே
இன்னோர் குழுமு மியல்பிஃ தன்றே
சங்கமுங் கழகமுஞ் சபையுமென் றுரைப்பர்
சங்க மிருந்து தமிழா ராயும்
மங்கள மிகுமிம் மதுரைமா நகரில்
இப்பெருங் கூட்டம் இன்றியமை யாதென்
றுளங்கொடெல் லோரும் வளம்பெறத் தகுந்த
ஒற்றுமை யத்தை முற்று முணர்த்தி
நந்தமிழ் நாடு நலம்பெறக் கருதி
யாண்டு தோறு மீண்டுக் குழுமி
நல்லறி வென்னும் பல்கதிர்த் தீபம்
ஏற்றி விளக்குத லியல்பா மன்றே
சாருமிச் சபையுஞ் சபையின் றலைவனும்
சங்கமுஞ் சங்கத் தமிழுந் தலைவரும்
சங்க மீண்டுத் தழைத்தற் கேதுவாம்
சேது காவலர் மேதகு மாபும்
நிரந்தர போஷக துரந்தர ரான
புதுவை மாநகர்ப் புரவலர் மாபும்
சிந்தை வாக்குத் தேக மிவற்றுற்
சங்கத் துதவுந் தமிழபி மானரும்
இந்திய நாட்டிஃ னியதமுறப் புரக்கும்
ஐந்தாம் ஜார்ஜ்ஜனும் அரசர்கோ மகனும்
நிலவுல கதனிற் பலபகல் வாழ்வுற
வுலக காரண ஞெருதனி முதல்வன்
இலகு சேவடி யிறைஞ்சுது மினிதே.

செந்தமிழ்

நேரிசைவெண்பா.

தேங்கமழும் பூங்கமலச் செல்வத் தெரிவையர்க்கு
நீங்கரிய வாச நிலையென்ப—வோங்குயர்சீர்ப்
பொன்னிதியுந் தூய புகழ்நிதியு நல்குதமிழ்
நன்னிதியார் கூடனகர். (1)

இருநாழி நெற்கொண் டினிதா மறங்க
ளொருநாலெட் டும்புரியு மொப்பில்—பெருமாட்டி
யாண்டது மெம்மா னறுபத்து நான்காடல்
பூண்டதுங் கூடற் புரி. (2)

இந்நகரை யாண்டின் னியற்றமிழை யாதரித்த
தென்னவர்க்குப் பின்பச் செழுந்தமிழைப்–பொன்னினீப்போற்
பாரிப்பார் சேது பதிவேந்த ரென்பதனீ
யாரிப்பா ரிற்றெரியா தார். (3)

அம்மன்னர் தம்பா லமைச்சுரிமை பூண்டுலகி
லெம்மன்ன ரும்போற்று மேற்றத்தான்—மும்மன்னர்
போற்று பலதமிழ்நூல் பொன்று திருப்பவச்சி
லேற்றி யிவணல் கிறை. (4)

தக்கோர் புகழ்பொன்னுச் சாமி வரோதயனுந்
திக்கோர் புகழ்வேளின் செல்வனென—வெக்காலும்
வெண்டிப் புலவருக்கு வேண்டிற் றுதவுகொடைப்
பாண்டித் துரைப்பூ பதி. (5)

அன்ன பெரியோ னறம்விளங்க நாட்டியிவண்
மன்னுதமிழ்ச் சங்கம் வயதிருபா—னென்ன
வளரும் பருவவிழா மன்னனென வந்தான்
வளரும் பெருமதிநேர் வான். (6)

நீல மணியு நெடுமுகிலுங் காயாவும்
வேலையு மென்னமிளிர் மேனியான்—கோலமலர்த்
தாள்பரவு மெய்யான் சகத்தெவர்க்கு மெய்யான்பூ
வேள்பரவு மெய்யான் விழைந்து. (7)

ஓது புவிமே லுயர்நீதி மன்றத்தில்
நீதி பதியாய் நிலவியே—மேதகையோர்
போற்றவதி காரம் புரிந்தோன் புரிமுன்னா
லேற்ற மறையோர்க் கினன். (8)

சொல்லாருஞ் சென்னைத் துரைத்தனநிர் வாகமிகு
வல்லார் புகழமைச்சர் மன்னவையில்—நல்லார்க்கு
நாயகமா வீற்றிருந்து நன்மைசெயுந் தன்மையினன்
ரூயகமா ஞனெவர்க்குந் தான். (9)

தன்னிகரில் சென்னைச் சருவ கலாசாலை
தன்னிற் றுணைத்தலைமை சார்ந்துள்ளோன்—மன்னர்
புகழ்நீதி வாதியெனப் போற்ற வுயர்ந்தோன்
மகிழ்சீநி வாசனு மன். (10)

செல்வத்தாற் கல்வியாற் றேசாற் றிறமையினுற்
சொல்வித் தகரிறைஞ்சுந் தோற்றத்தாற்—றெல்புவியின்
மிக்கோ னிவனென்ன வேந்தவையிற் றேர்ந்தெடுத்த
விக்கோன் வரவிங் கினிது. (11)

சருவகலா சாலைத் தலைமை வகிக்கு
மொருவனு மிந்த வுரவோன்—பெருகினிமைப்
பைந்தமிழைக் கட்டாயப் பாடமா வாங்கிலத்தோ
டிந்தியர்க்குச் செய்யு மிசைந்து. (12)

பன்னு பலநூலின் பண்டிதரை யன்னேர்செய்
நன்னூலை யாதரித்தெந் நாளுமே—யன்னவருக்

கூக்கங் கொடுத்து முபசரித்து நந்தமிழைக்
காக்குங் கடமையிவற் காம். (13)

ஆதலினிக் கோமான்மிக் காயுள் சிறந்தோங்கி
மேதினியில் வாழ விழைவுறுமிவ்—வோதரிய
நற்சபையுஞ் சங்கமுமெந் நாளுந் தழைக்கவிறை
பொற்சாண்வந் திப்பாம் புரிந்து. (14)

தேவைத் துரையாய்ச் செகம்புரப்போன் செந்தமிழார்
கோவைத் துறைபலவுங் கொண்டகோ—பூவைப்
பொருந்து கலைமானும் பொன்மானும் பூவும்
பொருந்து நா மார்பப் புயன். (15)

இம்மதுரைச் சங்கத் திறையவனு கித்தினமு
மெம்மையெலாங் காக்கு மியல்பினுன்—செம்மைதிகழ்
மால்ராஜ ராஜேச் வரராச சேகரன்றன்
வேல்வாழ்க வாழ்கபுகழ் மெய். (16)

ஒற்றைத் தனித்திகிரி யோச்சிப் புவிவிளக்குங்
கொற்றச் சுடர்போற் குவலயத்தை—முற்றும்
இறைபுரியும் ஐந்தாம்ஜார் ஜென்றுமண்ட லேசன்
முறைசிறந்து வாழ்கபுவி மூன். (17)

மறைவாழ்க வான மழைவாழ்க மன்னர்
முறைவாழ்க வாழ்க முனிவோர்—பொறைசேர்
நிரைவாழ்க தெய்வ நிலைவாழ்க நீடு
தரைவாழ்க வாழ்க தமிழ். (18)

ஸ்ரீ

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்

இருபதாம் வருடக்கொண்டாட்டத்தில்,

சென்னை எக்ஸிகூடிவ் கௌன்சில் மெம்பரும், சர்வகலாசங்கத்தின் உபாக்கிராஸனுதிபதியுமான

மாட்சிமைதங்கிய

கே. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள்

அக்கிராசனராயிருந்து

செய்த உபந்நியாசம்.

சேதுபதியவர்களுக்கும் வித்துவான்களுக்கும் மற்றும் ஸபையோர் களுக்கும் வந்தனம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபதாம் வருஷோத்ஸவத்தில் என்னை ஸபாநாயகனாயிருக்கும்படி, சங்கத்தலைவரான இராமநாதபுரம் ராஜா அவர்கள் கேட்டார்கள். என்னிடம் மிகுந்த அன்புடையரான நண்பர்கள் பலரிருக்குமிடமாயும், நான் பிறந்த ஊரைப்போல் என் அபிமானத்திற் குடிகொண்ட புராதன சேஷத்திரமாயுமுள்ள இம்மதுரைமாநகருக்குவந்து ஆநந்திக்கலாம் என்ற ஆசையால் ராஜா அவர்கள் விருப்பத்திற் இணங்கினேன். கல்வி கேள்விகளிற் சிறந்தவரும் நான் இங்கு வரும்போதெல்லாம் என்னுடன் இனிமையாக அளவளாவும் ஆப்தரண் பருமான இங்ஙகரவாஜி மாதவையரவர்கள் காலஞ்சென்றது மனதை வருத்துகின்றது.

தமிழறிஞர் கூடியிருக்கும் இச்சபையில் தாய்மொழியாகிய தமிழி லேயே பேசவேண்டுமென்று எனக்குக் கட்டளையாயிற்று. பாஷாபிமானம் குறைவில்லாதிருந்தும், தமிழ்க்கல்வியிற் பாண்டித்யமும், ஸபையில் தமிழிற்பேசும் திறமும், தமிழிற் சிந்திக்கும் பழக்கமும் இல்லாமையால் இம்மஹாஸபையில் தமிழிற்பேச அச்சத்தோடு என் அபிப்பிரா

யங்களை எழுதி என் நண்பரும் தங்கள் காரியதரிசியுமான டி. ஸி. ஸ்ரீநி வாஸையங்காரைக்கொண்டு பார்வையிடச்செய்தேன். அதனால் நான் சொல்வதில் ஏதேனும் தவறுதலிருந்தால் அது அவரைச் சேர்ந்ததாகும்.

ஸபையோர்களே!

சென்ற சொற்பகாலமாக மேற்றேயத்தார்கூட்டுறவும் அவர்கள் கல்வியறிவும் பாஷையில் அவர்கள்நாகரிகத்தில் ஒருவிதமான கௌரவ புத்தி ஏற்பட்டிருந்தாலும் ஆத்மார்த்தமில்லாத கேவலம் லௌகிகவித் தையும்,பொருள்சேர்க்கும் உபாயமும் முறையும் பயில்வதே புருஷார்த்த மாக அவர்கள் கைக்கொண்டிருக்கிறார்கள் என்பது வியக்தமாய்த் தெரிந்தது. இப்போது முடிவடைந்த ஐரோப்பிய யுத்தமும் அந்த வுண் மையையே வெளிப்படுத்தியது. பரமார்த்தமான விஷயங்களை அலக்ஷி யம்செய்து பொருளும் பௌருஷமும் பிரதானமாகக்கொண்ட எந்த நாக ரிகமும், நிலையற்றதென்றும், நம்முன்னோர்கள் கைக்கொண்ட தர்மார்த்த காம மோக்ஷபுருஷார்த்தங்களை முறையே கடைப்பிடித்து அநுஷ்டித்து வந்த ஆசாரமும், அவர்கள் வளர்த்த கல்வியறிவும், அவர்கள் நாகரிகமும் மேற்றேயத்தாருடைய கல்வியறிவொழுக்க நாகரிகங்களுக்கு எவ்வித மும் கீழ்ப்பட்டதில்லையென்றும் நம் தேசத்தார் நன்றாய்த் தெரிந்து கொண்டார்கள். நம்முன்னோர்களுடைய கல்வி யறிவொழுக்கங்களில் அபிமானமும் அவற்றை விருத்திசெய்வதில் ஊக்கமும் ஏற்பட்டிருக் கின்றன.

ஜாதிவேறுபாட்டினாலும் பாஷைவித்தியாசத்தினாலும் நம்தேசத் தாருக்குள் ஒற்றுமைக்குறைவு இருப்பினும், மனுஷ்யஜன்மத்தை யடைந்த யாவரும் மேம்பாடடைந்து உஜ்ஜீவிக்கும் மார்க்கங்களிற் செல்லத்தக்க வுண்மையுபாயங்களை நம் பெரியோர்கள் கட்டளையிட்டிருக் கிறார்களென்பதை நன்குணர்ந்து நம் தேசத்தார் பரஸ்பர விசுவாசமும் ஐக்கியபுத்தியும் உடையராகிவருகிறார்கள்.

மேலும், சமீபத்தில் முடிந்த ஐரோப்பியமகாயுத்தத்தின்கொடுமை யையும் அதனால் ஜனங்களுக்குப் பலவழிகளில் ஏற்பட்டகஷ்டங் களையும் ஜனங்கள் அறிந்தார்கள். இப்பால், சிற்சில கூடாவொழுக்கங்க ளேற்பட்டிருப்பினும் ஜனங்களுக்குள், ஜீவகாருண்ய ஒழுக்கத்திலும் பரோபகாரத்திலும் ஒரு விசேஷ அபிமானமும் உண்டாயிருக்கிறது.

இதனாலும், மேலேசொன்ன பல காரணங்களினாலும், நம்மவர், தேசாபிமானமும் பாஷாபிமானமும் மிக்குடையராய் நம்முடைய பழைய வழக்கவொழுக்கங்களைத் தெரிந்துகொள்ளவும் அவர்கள்காலத்திலுண்டான இலக்கண இலக்கியங்களைப் படிக்கவும் நம் தேசபாஷைகளை வளப்படுத்தவும் முயற்சிக்கிறார்கள்.

இக் காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப, ஸகலஜனங்களும் உயர்ந்த பொருள்களையும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக்கூடியதாக உத்தமமான மநோதர்மங்களைப் பிரகாசப்படுத்தக்கூடிய நல்ல நடையில் நம் தேச பாஷைகளை வளப்படுத்த முயன்றவர்கள் மஹாராஷ்டிரர்களும் வங்காளிகளுமாவர். அவர்களில், பண்டார்கர், ராஜேந்த்ர லாலமித்ர், டாகூர் முதலான பெரியோர்களை அறியாதார் யாவர்? டாகூர் என்னும் மகாகவி, ஒருநாடு, ஒருபாஷை, ஒருஜாதி யென்றில்லாமல் உலகமுழுதும் உணர்ந்து உறுதிப்பொருளையறியும்வண்ணம் பாடியவர்.

நம்தமிழ்நாடும் அந்நன்முயற்சியிற் பின்னடையவில்லை. கற்றோர்க்கு உபகாரிகளும், தமிழைவளர்த்த பெருந்தகையாளர்களுமான இராமநாத புர ராஜவம்சத்திற் பிறந்தவரும், கல்விப்பயிற்சியையே பொழுதுபோக்காக்கொண்டவரும், தமிழ்வல்லுநரும் சைவசீலருமாயிருந்த ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள், செந்தமிழின் வளம்பெருக்கித் தமிழ் நாட்டை மேம்படுத்தக்கருதித் தமிழ்வல்லோர்களையும் தமிழ்வளர்ச்சிக்குதவியாகப் பிறபாஷையிற் பாண்டித்தியமுடையவர்களையும் ஒருங்கு சேர்த்து, அநவரதமும் அங்கயற்கண்ணியருள்நோக்குடைய இக்கூடன் மாநகரிற் பாண்டியர்களைப்போல் இச்சங்கத்தை ஸ்தாபித்தார்கள். நம் தமிழ்மொழியிலுள்ள பழைய இலக்கண இலக்கியங்களை நன்றாகப்படித்து அறிந்து ஆராய்ந்திக்கும். ஆற்றல் எனக்கு இல்லாவிடினும், அவற்றின் மேன்மையையும் தமிழ்மொழி மற்ற எந்தப்பாஷைக்கும் தாழ்ந்ததாகாது என்பதையும் கற்றோர்கள் அபிமானிகள்வாயிலாகத் தெரிந்துகொண்டிருக்கிறேன்.

சிலகாலம் படிப்போரும் கேட்போருமின்றி அநாதரவடைந்து செல்லரித்த ஏடுகளில் மறைந்துகிடந்த பழைய சங்கநூல்களாகிய தமிழ்நிதியை வெளியிட்டு அவற்றைக் கற்றோரும் மற்றோரும் எளிதிலறிந்து படித்துப் பயனடையும்படிக்கும், தமிழ்மொழிவளர்வடையும்படிக்கும்

குறிப்புரை, அபிதானவிளக்கம், மேற்கோள்விளக்கம், விஷயசூசிகை முதலான அங்கங்களுடன் அச்சிட்டுத் தமிழுலகத்திற்குப் பேருபகாரம் செய்த மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்கள் இப்போது தமிழின் செவ்விலக்கியமாக விளங்குகிறார்கள். அவர்கள் இச்சங்க வருஷோத்ஸவத்துக்குவந்து ஸபையை அலங்கரித்திருப்பது யாவர்க்கும் மிகுந்த ஸந்தோஷத்தைக் கொடுப்பதுடன், தமிழபிவிருத்திக்கும் தக்க ஹேதுவாயிருக்கிறது.

இப்பொழுது நாடுமுழுதும் பரவிவரும் தேசபாஷாபிமானம் நன்மைதரத்தக்கதே. ஆனால் அது பிறபாஷையில் வெறுப்பையுண்டாக்காமலிருக்கவேண்டியது அவசியம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பது திருவள்ளுவர் அருளிய அருமைத்திருக்குறள். நமது தேச பாஷைகளில் ஏற்பட்டிருக்கும் பிரதான நூல்கள் பரமார்த்த விஷயங்களைப் பெரும்பாலும் பற்றியதென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். நல்வழியில் ஒழுகும் உலகவாழ்க்கைக்கும் தேசக்ஷேமத்துக்கும் காலதேச இயல்புகளையறிந்து தேசத்தார் பலவழிகளிலும் விருத்தியடைவதற்கும் ஹேதுவாக இக்காலத்து நவீன சாத்திரங்களும் கலைகளும் (Sciences) மேற்றேயத்தார் நூல்களில் அமைந்திருத்தலால் அவற்றைத் தமிழ் மொழியிலும் பிரகாசிக்கும்படி தக்கோர்கள் நூல்கள் செய்வதும், எல்லா விஷயங்களும் யாவர்க்கும் புலப்படும்படி பரவச்செய்வதும் இன்றியமையாதன.

எவ்விதமான தாற்பரியங்களையும், எவ்விதமான அறிவையும், வித்தையையும் தமிழ்மக்கள் அறிந்துகொள்ளும்படி தமிழில் நூல்கள் செய்பவர்களும் செய்விப்பவர்களும் நம்நாட்டின் கல்விச்செல்வத்தையும் அது காரணமாகப் பொருட்செல்வத்தையும் யாவரும் அடையும்படி உதவும் உபகாரியாவார்கள். அவர்களை அம்முயற்சியில் தூண்டி ஆதரவுசெய்து தமிழ்நாடு பயன்பெறச்செய்வது இத்தமிழ்ச்சங்கத்தின் கடமையாகும்.

அந்நோக்கமுடைமையும் அதில்முயற்சியும் அதுகாரணமாக ஏற்படும் கற்றோர்கூட்டமும் அதன்பயனை இலக்கியவிருத்தியும் அனை-

னியப்பிரயோஜனமான ஒழுக்கம் அறிவு முதலியவற்றின் வளர்ச்சியும், காலானுகூலத்தில், தமிழர்களினபிமானத்தினால் இத்தமிழ்ச்சங்கத்தை ஒரு ஸர்வகலாசங்கமாக்கும்.

இச்சங்கத்தார் கொண்டிருக்கும் நோக்கங்களுள் விசேஷமாக நிறைவேறுவதனால் நமது நாட்டின் கல்வியறிவு நாகரிகம் முதலியன விசேஷ விருத்தியடையும். அவ்விதம் இத்தமிழ்ச்சங்கம் இம்மதுரைமாநகரி லிருந்து ஞானஒளிபரப்பும்படி அனுக்கிரஹிக்க ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.

சங்கநோக்கங்கள் நிறைவேறக் கல்விச்செல்வர்களும் பொருட்செல்வர்களும் மாத்திரமன்றி மடாலயங்கள், தேவாலயங்கள் முதலியவற்றின் அதிபர்களும் விசேஷ உதவிபுரியவேண்டும்.

தேசபாஷைகளைவளர்க்கவும், அவற்றால், சிறுவர்களுக்குப் பெரும் பாலும் கல்வி கற்பிக்கவும், அம்முயற்சிக்கு உதவிசெய்யவும் வேண்டுமென்று ராஜாங்கத்தாருக்கும் நோக்கம் உண்டு. 'சென்னை ஸர்வகலாசங்கத்தாரும் வித்வான்பட்டப்பரீக்ஷை வைத்திருப்பதுடன் நம்நாட்டுக்கல்வியில்வல்லவர்களுக்குப் புதிதாய் ஒருபட்டம் அளிக்கவும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பட்டம்பெற்றவர்களைக் கலாசாலைகளிற் பண்டிதர்களாகத் தகுந்த சம்பளத்தில் நியமிக்கக்கூடும்.

ஆயினும் இந்நன்னோக்கம் பயன்படும்வண்ணம் பெருமுயற்சிசெய்ய வேண்டியது நம்மவர்கடமை. நமது பாஷையைப் பலதுறையிலும் வளப்படுத்துவதுநம்மவர்களுக்கு என்றுமழியாக் கீர்த்தியைக் கொடுக்கும்.

இவையெல்லாம் இனிதுமுடிப்பதற்கேற்ற கல்வி செல்வங்களிரண்டாலு நிரம்பிய சேதுமன்னரவர்களை நம்தமிழ்ச்சங்கம் நிரந்தர அக்கிராசனாதிபதியாகப் பெற்றிருப்பது தமிழும் தமிழ்நாடும் புரிந்த புண்ணியபலமாயிருப்பதால் இத்தமிழ்ச்சங்கம் மேன்மேலும் வளர்ந்து உலகிற்கு மிக்க நன்மையைப் பயப்பிக்குமென் றெண்ணுகிறேன்.

தமிழ்மொழிவளர்ச்சி.

முற்காலத்திருந்த பெருநிலமன்னரும் குறுநிலமன்னரும் பிரபுக்களும் தமிழ்நூல்களைக் கற்றுங் கேட்டும், தமிழ்ப்புலவர்களை மதித்தும், நூலுரைகளைச் செய்தும் செய்வித்தும், வேண்டும்பொருள் விடுத்தும் தமிழ்மொழியைப் பொன்போலப் போற்றிப் புலவர்பாடும் புகழும்பெற்று விளங்கினர்கள். புலவர்களும் பலவகை நூல்களைப் படித்தும், படிப்பித்தும், புதிய நூலுரைகள் செய்தும், நூற்பொருள்களைப் போதித்தும் மன்னரும் பிரபுக்களும் மதிக்கும் புகழும் பெற்று விளங்கினர்கள். இவ்விருவகையாரும்போல அழியாப் புகழ்பெற்றவர் யாவர். பாரதராமாயணிகளைப் பாடுவித்தார், பாடினர் என்னும் இருவகையார் புகழும் இன்றும் விளங்குதலை யாவர் அறியாதவர்! "தேடினர்யாவரேகொலெழுவகையானுஞ்சீர்த்தி—நீடினரவரேயென்பர்நீணிலத்தயர்ந்தமாந்தர்" (பாரதம்).

தற்காலத்திலோ தமிழ்நூல்களைக் கற்றும், கேட்டும் மதித்துப் பேணும் மன்னர்தொகையுஞ் சுருங்கிற்று! பிரபுக்கள்தொகையுஞ் சுருங்கிற்று! கற்போர்தொகையுஞ் சுருங்கிற்று; புலவர்தொகையுஞ் சுருங்கிற்று! இங்கிலிசுபாஷையைக் கற்போர்தொகையும் வளர்கின்றது! கேட்போர்தொகையும் வளர்கின்றது! மதிப்போர்தொகையும் வளர்கின்றது! இங்கிலிசுபாஷை இதோபதேசம் எனனும் வடநூலிற் சொல்லிய "அர்த்தாகமஹித்தை" போலும். அர்த்தாகமம்—பொருள்வரவு. பொருள்வரவு போதுமா? அறம் வேண்டாமா? இன்பம் வேண்டாமா? வீடு வேண்டாமா? அறம், பொருள், இன்பம், வீடு எனனும் நான்கையுங்கொடுத்து நன்மைபயக்குந் தமிழ்மொழியைக் கைவிடலாமா? தமிழ்மொழியைச் சற்றும் பேணாது கைவிட்டார் பலர்! பரம்பரையாய்த் தமிழ்மொழியை வளர்த்துவந்த குலத்தோருள்ளும் பலர் பேணாதுவிட்டனர். ஆயினுஞ் சேதுபதியரசர்திருமரபினர் கைவிடவில்லை. ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் இந்தச் சங்கத்தைத் தாபித்து நடாத்திவந்தார்கள். இப்பொழுது மகத்துவம்பொருந்திய இராசராசேசுவரசேதுபதிமஹாராஜா அவர்கள் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்து நடாத்திவருகின்றார்கள். உபாக்கிராசனாதிபதியாயிருந்து ஆண்டிப்பட்டிச்செமிந்தார் ஸ்ரீமான் பெத்தாச்சிசெட்டியாரவர்களும் வேண்டுந் துணை செய்கின்றார். புதுக்கோட்டையரசரும் துணைசெய்கின்றார். நகரவாசியருள்ளுஞ் சிலர்

துணைசெய்கின்றார். தனிகருள்ளுஞ் சிலர் துணைசெய்கின்றார். செய்தும் என்ன ? பொருள் வரவு போதாது! மற்றைத்தனிகருள்ளும், இங்கிலிசுகற்று அதிகாரமும் பெற்றுப் பெரும்பொருள்வாங்கும் வைதனிகருள்ளும் பலர் துணைசெய்யவேண்டும். செய்யுங்கால் தமிழ்மொழிவளர்ச்சி இன்னுஞ் சிறக்கும். தனிகர்–செல்வர். வைதனிகர்–சம்பளம் பெறுவோர். புலவர் துணையும் வேண்டும்.

தமிழ்மொழிவளர்ச்சியின்பொருட்டு இச்சங்கத்தார் நடாத்திவருந் தமிழ்க்கலாசாலை, பரீக்ஷை, செந்தமிழ்ப்பத்திரிகை, பழந்தமிழ்நூற் பிரகடனம் முதலியன தமிழ்மொழி வளர்ச்சியைக் கிளர்ச்சிசெய்தே வருகின்றன. ஆயினும் நமக்குப் புலப்பட்டவைகளையுஞ் சொல்லுவாம்.

கலாசாலையிலே இன்னும் பலர்வந்து படிக்கும்பொருட்டுச் செல்வப்பிரபுக்களுடைய பொருளுதவியும் அரசினர்மதிப்பும் பெறுதற்கு வழிதேடவேண்டும். இக்கலாசாலைக்குக் கிளையாக மற்றையிடங்களிலும் ஆங்காங்குள்ள பிரபுக்கள் பொருள்சேர்த்துக் கலாசாலைகளைத் தாபித்து நடாத்திவரல்வேண்டும். பெருந்தொகைப்பொருள் செலவுசெய்து சிவாலய சம்புரோக்ஷணம், அன்னதானம், வேதபாடசாலை, தேவாரபாடசாலை முதலிய நடாத்திவரும் நகரவைசியர்களும் இவ்விஷயத்திலே மனம் வைக்கவேண்டும். சிவதருமங்களையும்,பிறதருமங்களையும் தமிழ்மொழியே அறிவிக்கின்றது.

பரீக்ஷாபாடங்களாக நிகண்டுகளையும் திருக்கந்தாதிகளையும், யமகவந்தாதிகளையும் படிப்படி எல்லா வகுப்புக்களுக்கும் வைத்தல் நல்லது. பிரவேச பண்டிதபரீக்ஷை முதலியவற்றிற்கு வருவோரெல்லாரும் இவைகளைப் படித்தவரல்லர். இவை உயர்தரப் படிப்புக்கு ஆதாரமாய்நின்று சொற்பொருளுணர்ச்சியையும் சொற்றொடருணர்ச்சியையுங் கொடுக்கும் என்பர்.

தன்மதிலு முதலாக நடக்கும் பண்டிதபரீக்ஷா பாடங்களும் பிறவும் காலத்திற் படித்துமுடிக்க இயலாமல் அதிகப்பட்டுப்போயின என்று இங்கே படிக்கவிரும்பும் சில மாணவகரும் உபாத்தியாயரும் சொல்லக்கேட்டோம். அதனையும் ஆலோசிக்க.

அந்தப் பாடங்களுள்ளே தண்டியலங்காரமும், யாப்பருங்கலக் காரிகையும் "பழையவுரை" என்றிருப்பது நம்முரைகளையும் வேறுரைகளையும் படிப்போரைத் தடுக்கின்றது. இங்குள்ள மாணவகர் சிலர் அவைகளையும் விரும்புகின்றனர்.

செந்தமிழ்ப் பத்திரிகையிலே மதிப்புரை ஒன்றிலே பத்திராதிபர்வர்கள் இலக்கணபுத்தகம் ஒன்றிலே செயற்பாலனவான திருத்தங்களையுஞ் சொன்னதுபோலப் பாடபுத்தகங்களிலும் நாலுரைகளிலும் பிறவற்றிலும்வரும் பிழைகளைத் திருத்தமுஞ் சொல்லிக் கண்டித்து வரல் வேண்டும். கண்டிக்குங்கால் அவைகளை ஆக்கினோரும், அவைபோன்ற பிறவற்றை ஆக்குவோரும் அச்சமுற்றுப் பிழைவாராமற் காக்கமுயலுவர். படிப்போருந் திருந்துவர்.

யாழ்ப்பாணத்திலே நாவலரவர்கள் பிழைகளோடும்வெளிப்பட்ட பாடபுத்தகம் முதலியவைகளைப் பெரும்பாலும் கண்டித்துவந்தார்கள். அதனாலே அவர்கள்காலத்திலே அடைந்த திருத்தங்கள் பல. இக்காலத்திலே இங்கிலிசுநடையோடும் பிழைகளோடும் வெளிப்படுவன பல. பிழைகள் என்னும் களைகள் நெருக்குமாயின், செந்தமிழ்ப்பயிர்வளர்ச்சி எப்படிச் சித்திக்கும்! இங்கிலிசு பாஷையைப் பலநாள் கற்றுப் பிழையின்றி வழங்கமுயலும் மாணவகர் தமிழ்ப்பாஷையையும் அவ்வாறு வழங்கமுயன்றால் என்னே! இங்கிலிசு, தமிழ் என்னும் இரண்டுங் கற்ற செல்வப்பிரபுக்களே தமிழ்மொழியிலும் வேண்டுந் திருத்தங்கள் செய்தற்குரியர். அவர்வாக்கு நன்கு செல்லும்! தனியே தமிழ்ப்படித்தோர்வார்த்தையைக் கேட்பவர் யாவர்!

பழையநூற்பிரகடனத்தோடு இதுவரையும் வெளிப்பட்ட பரீக்ஷாவினாக்களையெல்லாம் ஒருங்குதிரட்டிப் பாகம் பாகமாய்ச் செந்தமிழ்ப் பத்திரிகையிற் பிரகடனஞ் செய்தலோடாவது தனியேயாவது ஒரு புத்தகமாக வெளிப்படுத்தல்வேண்டும், வெளிப்படுமாயின், பரீக்ஷைக்குப் படிப்போரும் பிறரும் எவ்விலையாயினுங் கொடுத்து வருடந்தோறும் வாங்குவர். படிப்போசெல்லாம் அடிக்கடி பயின்று தனித்தனி விடைகளையும் ஆராய்ந்து பலநூல்களையும் படித்தலால்வரும் பயனையும் அடைவர்.

ப்ரதிபதி ஸோம சு. கதிரைவேற்பிள்ளையவர்களுடைய தமிழ்ச் சொல்லகராதியின் பிற்பாகம் இன்னும் வெளிப்படவில்லை. அதனையும் விரைந்து வெளிப்படுத்துதல் வேண்டும்.

இங்கே எழுதப்பட்டவைகளைக் கௌரவம் பொருந்திய அக்கிராசனாதிபதியவர்களுஞ் சபையார்களும் சிந்தைசெய்து செயற்பாலன செய்தல் கடனாகும்.

தாமதிவிடாது ஆவணிமீ உடுவை

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை,
சின்னகம்.

ஸ்ரீ:

பரிபாடல் 11-ஆம் பாட்டின் கிரகநிலை.

'விரிகதிர்மண்டில'மென்ற பரிபாடலிற்சொல்லப்பட்ட சில கோள்களி னிராசிநிலையில் ஐயப்பாடுற்று ஸ்ரீமத். பண்டித S. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமக்குத்தோன்றிய சில ஆக்ஷேபங்களை வெளியிட்டார்கள். (செந்தமிழ், தொகுதி-16. பகுதி-6-பக்-309-312.)

அவற்றைக்கண்ணுற்ற இலக்கணவிளக்கபரம்பரை ஸ்ரீமத். சோம சுந்தரதேசிகரவர்கள் செந்தமிழ்த் தொகுதி-19. பகுதி-8. பக்கம் 249 முதல் 255 வரை சோதிடப்பொருத்தமென்னும் வியாசத்தில் ஒருவாறு சமாதானம் சொல்லியிருக்கிறார்கள்.

அதை அநுசரித்து, மதுரைவக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ R. S. நாராயண ஸ்வாமி ஐயரவர்கள் பி.எ. பி.எல். இவ்வருடம் செப்டம்பர்மீ 18உ கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இருபதாம்வருடக் கூட்டத்தில், பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரிகளபிப்பிராயத்தைத் தழுவி அப்பரிபாடலிலும் உரையிலும் காட்டியபடி கிரகநிலையமைதலியலாதென்று சிலவற்றை ஆக்ஷேபித்துப் பேசினார்கள்.

அப்போது எனக்குத் தோன்றிய சிலவிஷயங்களைக்கொண்டு அப் பாட்டிலு முரையிலும் சொல்லிய கிரகநிலைகள் பொருத்தமுள்ளனவா யிருக்கலாமென்று காட்டினேன்.

அதைக் கேட்டுவந்த ஸபைத்தலைவரவர்கள் இவ்வாக்ஷேப ஸமா தானங்களைச் சுருக்கமாயெழுதிச் செந்தமிழில் வெளியிடவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். அதற்கிணங்கி இதனை எழுதலானேன்.

ஸ்ரீமத். R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் சொல்லிய ஆக்ஷேபங்க ளும் அவற்றுக்கு ஸமாதானங்களும் இனி வருமாறு:—

முதலாவது ஆக்ஷேபம்:—அகஸ்திய ருக்ஷத்திரமொன்றுண்டென் றும், அதற்கு ராசிமண்டலத்திற் சஞ்சாரமுண்டென்றும் சொல்லுவது, சோதிட கணிதவழக்கிலில்லாமையால் உண்மையாகமாட்டாதென்பதாம்,

சமாதானம்:—அகஸ்திய நக்ஷத்திரமுதிக்குங்கால் அதற்கு நக்ஷத்திரியர் அர்க்கியங்கொடுக்கவேண்டுமென்றும், அதன் உதயாஸ்தமனங்களும், பலனும் புராணங்களிற் சொல்லப்படுகின்றனவென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். கந்தபுராணத்தில் மார்க்கண்டேயப் படலத்தில் மார்க்கண்டமுனிவர் பிறந்தகாலக் கிரகநிலைகளைக் குறிப்பிடுமிடத்து,

"மீனமுமுடிந்தநளமேவுறமிதுனஞ்செல்ல
ஊனமில்வெள்ளிதானுமொன்பொனுமுச்சமாகுந்
தானமுற்றினிதுமேவுதபனனேமுதலாவுள்ள
ஏனையர்முனிவர்நாகரிடந்தோறுமிருப்பமன்னே". (செய்-186)

(முனிவர்-அகத்தியர்)

என்றதனால் முனிவர் என்ற அகஸ்திய நக்ஷத்திரம் இராசிமண்டலத்திற் றன்னிடமாகிய சொக்ஷத்திரத்திலிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பரிபாடலில், "பொதியின் முனிவன் புரைவரைக் கீறி மிதுனமடைய" என்றதனால் அகஸ்திய நக்ஷத்திரம் 'புரைவரை' என்ற உச்சவீட்டில்நின்றும்நீங்கி மிதுனராசியை யடைந்ததென்று சொல்லப் பட்டிருக்கிறது. இவற்றால் அகஸ்தியநக்ஷத்திரத்துக்கு ராசிமண்டலத்தில் ஸ்வக்ஷேத்திரம் உச்சம் முதலிய இடங்களுண்டென்றும் அது ராசிமண்டலத்திற் சூரியாதி நவக்கிரகங்கள்போற் சஞ்சரிக்குமியல் புடையதென்றும் வெகுகாலத்துக்குமுன்புள்ளபெரியோர்கள் கண்டறிந் திருக்கிறார்களென்பது வெளியாகிறது. செந்தமிழ்த் தொகுதி 19 பக்கம்-335ல் இதன்கதி நாள் ஒன்றுக்கு 009 விகலையென்று காட்டப் பட்டிருக்கிறது. இதன்படி கணக்கிட்டால் 11 நாளில் ஒரு விகலையும், 660 நாளில் ஒருகலையும் 110 வருடத்தில் ஒருபாகையும், 3300 வருடத்தில் ஒரு ராசியும் கடந்துசெல்லுவதென்றும், ராசிமண்டல பரிவர்த்தி 1-க்கு 39600 வருடங்கள் செல்லுமென்றும் தெரிகிறது. சிலர் இதற்கு, ஸப்தரிஷிமண்டலம்போல 27000 வருஷமே போதுமென்கிறார்கள். அகஸ்திய நக்ஷத்திரம் சலனமில்லாத ஸ்திரநக்ஷத்திரமாயிருந்தபோதிலும் ஸ்திரமான சூரியனுக்கு, பூமி சலனத்தால் மேஷாதி ராசிமண்டலசஞ்சாரந் தோன்றுவதுபோலப் பூமியின் துருவாக்கிரசலனத்தால் அகஸ்தியநக்ஷத்திரத்துக்குப் பிரத்தியேகமாகப் பல்லாயிர

வருடங்களில் ராசிமண்டல பரிவர்த்தி தோன்றுவதும் யுக்த மாயிருக்கிறது. தேவர்களாலும் முனிவர்களாலும் செய்யப்பட்ட பழமை வாய்ந்து விரிந்த வேதாங்கஜ்யோதிஷ நூல்கள் உபவேதங்கள்போலப்பிய சிப்பாரின்றி யிறந்துபட்டொழிந்த இக்காலத்திற் சின்னட் பல்பிணிச் சிற்றறிவுடையார்க் கேற்றவாறு சருங்கப்பயிலும் கணிதவழக்கிற் சொல்லப்படாமையால் நாம் அறிய முடியாதிருப்பதுகொண்டு அந்நூல்கள் பயின்றுவந்த முற்காலவழக்கிலும் அகஸ்திய நக்ஷத்திரவிருத்தாந்தம் இருக்கமாட்டாதென்று கருதுவது தகுதியாகாதென்று தோன்றுகிறது.

இரண்டாவது ஆக்ஷேபம்:—அப்பரிபாட்டிற் சொல்லிய கிரகங்களையெல்லாம் பாடினோர்கண்ணாரக்கண்டறிந்து சொல்லுதற்குரிய காலம் புலர்விடியலாகமாட்டாதென்றும் நள்ளிரவாயிருக்கவேண்டுமென்றுஞ் சொல்லியதாம்.

சமாதானம்:—ஒரு குறித்தகாலத்திலுள்ள கிரகநிலையை எழுதிவைக்கும் புலவர் அவற்றைக் கண்ணாரக்கண்டே எழுதிவைக்கவேண்டுமென்னும் நியதியில்லையென்பதை ஜாதகமெழுதுவாரும் கிரகஸ்புடம் பண்ணுவாரும் நவக்கிரஹநிலைகளைக் கண்ணாரப் பாராமலே அக்காலத்துக்கு முற்பட்டும் பிற்பட்டும் எழுதிவைப்பதால் அறியலாம். அவ்வாறே நல்லந்துவனாரும் அப்போதுள்ள பஞ்சாங்கரீதியாகவேனும் தாமே கணனம்செய்தேனும் சொல்லியிருப்பதாகக் கொள்ளலாம். அன்றியும் அப்புலர்விடியல், சூரியோதயத்துக்குமுன்பு நக்ஷத்திரங்கள் மறைந்துகொண்டுவரும்சமயமாயிருத்தலால் அவை கட்புலமாகவும் தெரியத்தக்கவையே. ஆனால் ஆவணிமுதற்றேதி புலர்விடியல்வேளையிற் சூரியன் கட்புலப்படாதிருப்பதுபற்றி அது சிங்கத்திலிருப்ப என வெளிப்படையாகக் கூறாது அங்கி யுயர்நிற்ப என்றகுறிப்பாற் கொள்ளும்படி சொல்லியிருக்கிறார். மற்றக் கிரகங்களெல்லாம் அப்போது அஸ்தமனத்தையடுத்திருக்கும் மகாந்தமுதல் உதயத்திலிருக்கும் கடகாந்தம் வரை 6 ராசிக்குள்ளேயிருப்பதாலும் அவை அப்போது கண்ணாரக் காணத்தக்கவையே.

மூன்றாவது ஆக்ஷேபம்:—அங்கியுயர்நிற்ப என்றதனாற் கார்த்திகையுச்சமென்று சொல்லப்படுகிறது. அப்படியானாற் சிங்காசி உதயமாகி ஒருநாழிகை சென்றிருக்கவேண்டும். இப்போது 'புலர்விடிய' லென்றமை

யால், சூரியன் அதற்கும் பின்பு உதயமாகும்படி சிங்கத்தின்நடுப்பாகத்தி லிருக்கவேண்டும். அப்படியிருந்தால் அதற்கு ஏழாமிராசியாகிய கும் பத்தின் நடுப்பாகத்திற் சந்திரனிருக்கப் பூரணையுங் கிரகணமுஞ் சம்ப விக்குமே யல்லது ஆறு மிராசியாகிய மகரத்திற் சந்திரனிருக்கப் பூரணை யுங் கிரகணமும் வந்திருப்பதாகச் சொல்லுவது தவறென்பதாம்.

சமாதானம்:—ஒவ்வொரு நகூத்திரமும் இரண்டேகால்நாழிகை வரை உச்சத்திலிருப்பதால் நகூத்திரங்களின் உச்சவாக்கியங்கள் உச் சத்தின் அந்தியகாலத்தைக் குறித்ததாகக் கொள்ளவேண்டும். பரணி உச்சத்துக்குக் கடகராசி யுதித்து நாலேகால் நாழிகையே செல்லாகி யிருக்குமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. கடகத்தின் நாழிகை ஐந்தரை யில் மிஞ்சிய ஒன்றேகாலேயரைக்காலும் சிம்மாதியில் நாழிகை ஒன்றே அரைக்காலுமாக நாழிகை இரண்டரையும் பரணியின் உச்சம் சாய்ந்த பிறகு கார்த்திகையுச்சாதியிலிருந்தே செல்லவேண்டும். ஆகையாற் கார்த் திகையுச்சாரம்பமாகும்போதே சிங்கம் உதயமாகமாட்டாது. சிங்கமுதியா மையால் அதிற்பிரவேசித்திருக்கும் சூரியனுதித்தற்கும் அவகாசமில்லை. ஆகையால் ஆவணி முதற்றேதியிற் கார்த்திகை யுச்சாதியிற் சிம்மோதய மாவது சூரியோதயமாவது ஸம்பவிக்கமாட்டாதென்று தெளிவாயறிய லாம். சூரியன் சிம்மாதியிலிருப்பதால் அப்போது அதிலிருந்து மக ராந்தம் முடிய ஆறுராசிகளிற் சந்திரன் சஞ்சரிக்குங்காலமே வளர்பிறை யாகிய பூருவபக்கமாகும்; அதனுளடங்கிய பூரணையும் மகராந்தத் தோடு முடிவடையக்கூடியதே. பூரணையுண்டாவதற்குச் சூரியனிருக்கு மிராசியிலிருந்து ஏழாமிராசியிற் சந்திரனிருக்கவேண்டுமென்பது கணித முறையன்று. சூரியனிருக்கும் பாகையினின்றும் (6 ராசிக்குள்) 167-ம் பாகையிலிருந்து 180-ம் பாகையோடு பூரணை முடிந்துவிடவேண்டுமென் பதே கணிதமுறை. ஆதலாற் சிம்மாதியிற் சூரியனிருக்க அதிலிருந்து மகராந்தம்வரை 180-ம் பாகையோடு பூரணை முடிவடைவது யுக்தமா யிருக்கிறது. அதிற் கிரகணம்வந்ததாகச் சொல்லுவதும் தவறுகமாட் டாது. அன்று சூரியோதயமானபிறகே சந்திரஸ்தமனமாகவேண்டி யிருத்தலாற் புலர்விடியலிற் கிரகணமும் கண்ணுக்காணத்தக்கதேயாம். சூரியோதயமானபின்பு சந்திரன் கும்பத்திற் பிரவேசிக்கும்போது அப்ப பாகப்பிரதமையும் கிரகணவிமோசனாம்பமும் உண்டாகவேண்டுமாகை யால் இதிற் சொல்லப்பட்ட சந்திரக்கிரகணம் கிரஸ்தாஸ்தமனமுள்ள தென்று மறியத்தக்கது.

நான்காவது ஆக்ஷேபம்:—சூரியன் சிம்மத்திலிருக்கச் சுக்கிரன் விருஷபத்திலும் புதன் மிதுனத்திலு மிருப்பதாகச்சொல்லுவது பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரிகள் காட்டிய "வதயொ ஹவெநஹயாஸ ஜவிெதள ஹவதஂ கயம।" என்ற வசனப்படி அஸம்பாவிதமென்பதாம்.

சமாதானம்:—"வதயொ ஹவெநஹயாஸ ஜவிெதள ஹவதஂ கயம" என்ற வசனம் இன்னநூலில் இன்னபாகத்தில் இன்ன விஷயத்துக்காகச் சொல்லப்பட்டதென்பது விளங்கவில்லை. இதன் பொருள் சூரியனிருக்கும் ராசியிலிருந்து நாலாமிராசியிற் புத சுக்கிரர்கள் எப்படியிருக்கக்கூடும்? என்பதாம். இது ஏதோ ஒரு கணித சாஸ்திரீதியான ஸ்புடக்கிரியையைப் பூருவபக்ஷம்பண்ணி ஆக்ஷேபிப்பது போலத் தோன்றுகிறது. சூரியனுக்கு நான்காவதுராசியிற் சுக்கிரனெப்படியிருக்கக்கூடும்? என்று வினவுவதால், பிராசீன கெணனசாஸ்திர ஸ்புடக்கிரியாமுறையில் ஒரு சமயம் சுக்கிரன் நான்காவது ராசியிலு மிருப்பதாகக்காட்டக்கூடிய பக்ஷாந்தரம் இருந்ததாகவே வெளியாகிறது. இவ்வசனம் நான்காவதுராசிபைமட்டும் மறுப்பதாகக் காட்டுவதால் மூன்றுவதுராசியிற் சுக்கிரன் ஏகதேசம் இருந்தாலு மிருக்கலாமென்பதை அங்கீகரிப்பதாயிருக்கிறது. இந்த வசனப்படி மூன்றுவது ராசியாகிய மிதுனத்தியிற் சுக்கிரனிருப்பதில் ஆக்ஷேபமில்லையென் றேற்படுகிறது. அதிலிருந்து சுக்கிரன் வக்ரத்தால் ஒன்றிரண்டு விகலை பின்தள்ளியிருந்தாலும் விருஷபத்திலிருப்பதாகவே ஏற்படும். இவ்வொன்றிரண்டுவிகலைகளைச்சிலநாழிகையுள், சுக்கிரன் கடக்கக்கூடுமாகையால் அன்று சூரியோதயமானபிறகு மறுநாளே சுக்கிரன் மிதுனத்துக்கு வரக்கூடிய நிலையிலிருக்கலாம். இந்த அற்பவித்தியாசத்தால் நான்காவதுராசியிலிருப்பதாகவைத்து உச்சத்திற் காணப்படவேண்டுமென்று தூஷிப்பது பொருந்தாது. ஏனென்றால், சூரியோதய சமயத்தில் ஒரு கிரகம் உச்சத்திலிருக்கவேண்டுமானால் அது சூரியனிருக்கும் பாகையிலிருந்து தொண்ணூறுபாகை விலகியிருக்கவேண்டும். பிரகிருதத்திற் சிம்மாதியிலிருக்கும் சூரியனுக்கு விருஷபாந்தத்திலிருக்கும் சுக்கிரன் 60 பாகையே விலகியிருப்பதால் உச்சத்திற் காணப்படவேண்டுமென்று தோஷம் சொல்லுதற்கு இடமில்லை. ஆனால், சூரியனிருக்கும் பாகையிலிருந்து சுக்கிரன் அதிசாரம் வக்கிரம் முதலிய காரணங்களாலாயினும்

வேறு பிறகாரணங்களாலாயினும் 60 பாகை விலக்கக்கூடுமா? கூடாதா என்பதைப்பற்றி நுணுகிய கணிதநூல்வல்லார் ஆராயவேண்டும். இவ்வாறே புதனும் மிதுனஞ்சத்திலிருப்பதாகக்கொள்ளற் கிடமிருப்பதால், சூரியனைவிட்டுப் புதன் 30 பாகையே விலகியிருப்பதாக ஏற்படுகிறது. இவற்றில் ஏதேனும் சொற்பவித்தியாசமிருப்பதா யேற்பட்டாலும் அதை வாக்கிய கணனத்துக்கும் திருக் கணனத்துக்கும் உள்ள வித்தியாசம் போலப் பூர்வகால கணனசாஸ்திரபேதத்தாலிருக்கக்கூடுமென்று கொள்ளற் கிடமிருப்பதால் அது தவறுகாது. 5000 வருடத்துக்குமுன் பிருந்த ஸப்தரிஷிநக்ஷத்திரமண்டலநிலையின்படத்தையும் இப்போ திருக்கும் ஸப்தரிஷிமண்டலநிலையின்படத்தையும் உற்றுப்பார்க்கும் பொழுது அதிலுள்ள நக்ஷத்திரங்களில் ஒன்றற்கொன்றுள்ள தூரங்கள் மிகவும் வித்தியாசப்பட்டு ஏற்றத்தாழ்வுள்ளனவா யிருக்கின்றன. அவ்வாறே பிறநக்ஷத்திர மண்டலங்களின் நிலைகளிலும் பூராட முதலிய வற்றில் முன்பு நெடுந்தூரத்திலிருந்த இரண்டு நக்ஷத்திரங்கள் நாளடைவில் நெருங்கிக்கொண்டுவந்து இப்போது சமீபித்திருப்பனவாகத் தெரிகிறும். இவற்றால், சூரியனிலிருந்து புதன் முப்பது பாகையும், சுக்கிரன் அறுபது பாகையும் சில சமய விசேஷங்களில் விலக்கக்கூடிய நிலையில் முன்பொருகாலத்திலிருந்திருப்பதாக நாம் தெரிந்துகொள்ளவேண்டுமென்று தோன்றுகிறது.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

நல்லந்துவனார் சோதிடப் பொருத்தம்.

ஆசிரியர் நல்லந்துவனார்பாடிய பரிபாடற் பதினேராஞ்செய்யுளின் முதற் பதினொன்று அடிகளால் இரண்டுவிஷயங்கள் நிச்சயமாகத் தெரிகின்றன. அவை, 1. அகத்திய நக்ஷத்திரத்தின் தோற்றம், 2. முதுவேனிற்குப் பின்வரும் கார்காலத்தின் தொடக்கம் என்பனவாம். இவ்விரண்டு விஷயங்களாலும் அறியக்கூடியவைகளை முதலில் ஆராய்ச்சி செய்வேன்.

I. அகஸ்தியநக்ஷத்திரத்தின் தோற்றம்:—

ரவிமார்க்கத்தைக் (Ecliptic) காட்டும் நக்ஷத்திரவரிசையில் தருவக (Lon-gitude) அளவில் திருவாதிரைக்கும் புனர்வசுவுக்கு மிடையில் அகத்தியனுளது. சூரிய சித்தாந்த அளவுப்படி அகத்தியன் திருவாதிரையிலிருந்து 22½ தருவகாம்சமும் புனர்வசுவிலிருந்து 3 தருவகாம்சமும் உள்ளது. (ஒரு வட்டம்=360 அம்ஸம் அல்லது டிகிரி). வராஹமிஹிர் பிருஹத்ஸம்ஹிதை 12-வது அத்யாயத்தில் 21-ஸ்லோகங்களால் அகத்தியநக்ஷத்திரத்தைப் பற்றிக் கூறியிருப்பதில் இறுதி ஸ்லோகத்தில் சூரியன் உரோகிணியையடையும்பொழுது அகத்தியன் தோற்றம் மறைந்து, (Heliacal setting) ஹஸ்தத்தையடையும்பொழுது அகத்தியன் உதயமாகி, (Heliacal Rising) கட்புலனாக அறியப்படுமென்று கூறினர். பராசரரும்படியே கூறினர். சூரியசித்தாந்த அளவுப்படி உரோகிணியிலிருந்து 40½° தருவகாம்சத்திலும் ஹஸ்தத்திலிருந்து 80° தருவகாம்சத்திலும் அகத்தியனிருக்கிறது. உரோகிணியிலிருந்து 50 அம்சமென்றும், ஹஸ்தத்திலிருந்து 70 அம்சமென்றும் ஒருவர் கூறுகிறார். சூரியன் உரோகிணியையடைந்து நாண்டி ஹஸ்தத்துக்குச்செல்ல நான்கு மாதமாகிறபடியால் அகத்தியன் நான்குமாதம் கண்ணுக்குப்புலப்படாது. ஆகையாலதற்குப் பொருத்தமாகப் பாடலியறிதல்வேண்டும்.

சூரியனால் மறைப்பட்ட அகத்தியன் மறுபடியும் வெளியே உதயமாகிக் கண்ணுக்குப் புலப்படும்போது தென்கிழக்குத்திசையில் அகத்தியனோக்கி வேதவிதிப்படி அர்க்கியப்கொடுத் துபசரிக்கவேண்டிய முறைகளை வராகமிஹிரர் 13 முதல் 18 ஸ்லோகங்களிற் கூறுகிறார். மாத்ஸ்யபுராணத்திலும் பவிஷ்ய புராணத்திலும் விஷ்ணுரகஸ்யத்திலும் தனமாலையிலும் இது விவரமாகக் கூறப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. சூரியன் கன்யாராசியையடைவதற்குமுன் மூன்றுதினங்களில் அகத்தியனுக்கு அர்க்கியங்கொடுக்கவேண்டுமென்று கருடபுராணத்திலும் கூறியிருப்பதை அநுசரித்து வடக்கே வங்காளத்தில் பாத்திரபதமாதத்தின் இறுதிமூன்றுதினங்களில் அகத்தியனுக் குற்சவம் நடக்கிறது. அகத்தியனது வெளிவரவினால் பூமிக்கு மிகுந்தரன்மையும் பரிசுத்தமும் மழைபுமுண்டாகுமென்று வராகமிஹிரர் 14 முதல்

12 ஸ்லோகங்களில் விரித்துக் கூறியிருக்கிறார். பரிபாடலில் "நெரிதரூஉம்" என்றதும் உரையில் 'இவ்விதிவழியால்' என்றதும் மேலேகாட்டிய முறைகளைத் தழுவியனவாகவே யிருக்கின்றன. ஆகையால் அப்பொழுது சூரியன் ஹஸ்தநக்ஷத்திரத்தை யடைந்திருத்தல்வேண்டும். தேற்கே பாண்டியநாட்டில்,சூரியன் ஹஸ்தநக்ஷத்திரத்தையடைவதற்குச் சற்று முன்னதாகவே தெரியக்கூடியது எந்தநக்ஷத்திரமென்று அடியிற் காட்டும் வேறுசிலகாரணங்களினால் நிச்சயிக்கவேண்டும்.

II. விரிகதிர்வேனி லெதிர்வரவு மாரி:—இதனால் அயனகாலம் கூறப்பட்டது.

மேலே முதற்பிரிவிற் கண்டிருக்கிற அளவுகளில் நக்ஷத்திரங்கள் மட்டும் குறிகளாயிருக்கின்றன. ஒவ்வொருநக்ஷத்திரத்தின் புடைபெயர்ச்சியும் பதினாயிரம் வருஷங்களிற்கூடச் சாதாரணமாய்க் கண்ணுக்குப் புலப்படாதாகையால் அவைகள் இருந்த இடத்திலேயே இருக்கின்றன என்று வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் நக்ஷத்திரங்களைப் பற்றியமட்டில் அவற்றின் அளவுகள் அநேகமாயிரம் வருடம் ஸ்திரமாயிருக்கும். சந்திரகதி, ரவிகதி முதலியவை நக்ஷத்திரங்களால் மட்டும் அளவிடப்பட்டன. இவற்றை ஒரு சமயம் மூன்றுவீதிகளாகவும், பிறகு நான்கு மண்டலங்களாகவும், பிறகு ஒன்பதுவீதிகளாகவும் பிறகு பன்னிரண்டு ராசிவீதிகளாகவும் பிரித்தார்கள். இது ஸ்திரமான நக்ஷத்திர ராசிமண்டலம். சலனத்திலிருக்கிற வேறொரு அயனராசிச் சக்கர அளவும் உண்டு. பார்ப்பதற்குச் சௌகர்யமாயிருப்பதை யுத்தேசித்து இதனை ஐரோப்பிய கணிதங்களில் அதிகமாக உபயோகப் படுத்தி வருகிறார்கள்.

அயனராசி விவரம்:—ஒவ்வொருவருடத்திலும் இரண்டுமுறை மாத்திரம் இரவும் பகலும் சமகாலமாயிருக்கும். அவற்றில் ஒன்றை மகாவிஷுபசங்கிராந்தி (Vernal equinox) என்றும் மற்றொன்றை ஜலவிஷுபசங்கிராந்தி யென்றும் சொல்லுவார்கள். அப்பொழுது சூரியனிருக்கும் நிலை விஷுவத் தென்று சொல்லப்படும். இவை இரண்டயனத்துக்கும் மத்யகாலம். இவை ரவிமார்க்கமும் விஷுவத்ரேகையும் சந்திக்குமிடங்கள். இவற்றில் ஒன்றிற்கு ஐரோப்பிய சோதிடக்கணக்குகளில் மேஷாதிகுறி (First point of aries) என்று அடையாளத்துக்

காகப் பெயரிட்டிருக்கிறார்கள். இதிலிருந்து அயனாசிச்சக்கர மாரம் பித்து அளவிடப்படுகிறது. இந்த அயனாசிகளினாரம்பகாலத்தைப் பஞ் சாங்கங்களில் ஒவ்வொரு தமிழ்மீ 8டியிலும் பார்க்கலாம். அயனாசி யாரம்பத்திலிருந்து புறப்படுகிறதாகத்தெரிகிற சூரியன், வடக்கிலும் தெற்கிலும் சாய்ந்து சுற்றி ருதுபேதங்களை யுண்டாக்கி மறுபடியும் முதலிடம்வந்து சேருகிறான். இவ்விதம் சூரியன் செல்லும்பொழுது முதல் நான்குமாதம் வேனிற்காலமாகும். அதைத் தொடர்ந்து பின் வருவது கார்காலமாகும். இந்த ருதுகாலபேதங்கள், ரவி, பூமி இவை களின் நிலைகளைமட்டும் பொருந்தியனவாயுள்ளன. மேற்கண்ட விஷ¬ வத் அயனஸ்தானம் எப்பொழுதும் ஒரேநக்ஷத்திர - இடத்திலிருந்தால் ருதுகால் ஆரம்பங்கள் எந்தவருஷத்திலும் ஒரு சமயத்திலேற்படும். ஆனால் அப்படியில்லை. சொற்பகாலத்தில் வித்தியாசம் தெரியாவிடினும் பலவருஷங்களில் வித்தியாசம் தெரிகிறது. பூமி, பம்பரத்தைப்போலும் அந்தணன் நூற்கதிர்போலும் கல்லுரற் குழவிபோலும் கூட்டுமத்திழுக் கிறவர்கள் தலைபோலும் கொஞ்சங் கொஞ்சம் பக்கஞ்சாய்ந்து ரவிமார்க் கத்திற் செல்லுவதால் இந்த விஷ¬வத் குறியின் கதி (சலனம்) ஏற்படு கிறது. ஆதலால் பூமியின் துருவநுனியானது பம்பரத்தின் தலைபோ லும் நூற்கதிரின் நுனிபோலும் குழவியின் நுனிபோலும் ஆகாயத்தில் ரவிமார்க்கத்தின் துருவத்தைச் சுற்றிவருகிறது. சூரியசித்தாந்த முத லான ஹிந்து சாஸ்திரங்களில் இந்த விஷ¬வத் அயனஸ்தானம் 27,000 வருஷங்களுக்கு ஒருதடவை ரவிமார்க்கத்தில் மேலேகண்டிருக் கிற ஸ்திரநக்ஷத்திர ராசிகளுக் கெதிராகச்சென்று வட்டம்சுற்றி மறுபடி யும் முந்திய இடத்திற்குவருகிறதென்று சொல்லியிருக்கிறது. இதன் படி ஒரு நக்ஷத்திரத்தைத் தாண்டிச்செல்ல 1000 வருடங்களாகின்றன. அதாவது ஒரு டிகிரி துருவாம்சத்துக்கு 75 வருடங்களாகின்றன. ஐரோப்பிய சாஸ்திரங்களில் இந்த விஷ¬வத் குறியின்கதியை டிகிரி யொன்றுக்கு 71½ வருஷங்களாக ஒரு வட்டத்திற்கு 25, 868 வருஷங்க ளென்று சமீபத்திற் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இவ்விதக்கணக்குப்படி மேற்கூறிய விஷ¬வத்ஸ்தானம் சுமார்5000 வருஷங்களுக்குமுன் ரோஹிணி நக்ஷத்திரத்தையும், 4,200 வருடங் களுக்குமுன் கார்த்திகையையும், அதற்குப்பிறகு சகாப்த ஆரம்பத்தில் அசுவினியையும் அடைந்திருந்தது. வராகமிஹிரருடைய சூரிய சித்

தாந்தப்படி 1360 வருஷங்களுக்குமுன் ரேவதிக்குச் சமீபத்திலும் நற் காலத்தி லுத்திரட்டாதிக்குச் சமீபத்திலும் இருக்கிறது. சகாப்த ஆரம்ப நான்முதல் இதுவரை 22 நாள் வித்தியாசப்பட்டிருப்பதைப் பஞ்சாங்கத் திற் பார்க்கலாம். இவ்வயனராசி வித்தியாசங்களுக்குத் தக்கவாறு நக்ஷத் திரங்களின் தோற்றம் மாறுதலடையும். ஆதலால் உலகவியாபாரங்களில் இதை முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். சூரியனைச் சுற்றும் பொழுதேற்படுகிற பூமியினுடைய கிழமேல் சலனம் நக்ஷத்திர ராசியைக் கொண்டும் தென்வடல் சலனம் அயனராசியைக்கொண்டும் அளவிடப் படும். காலநிர்ணயத்துக் கிரண்டு அளவையும் அவசியம் வேண்டும்.

அகத்தியன் உயர்ந்த தன்னிடத்தைவிட்டுப் பெயர்ந்து மிதுனத் தைப் பொருந்த:—கணிதசாஸ்திரக் கணக்குப்படி பாடலுக்குப்பொருந் திய விஷுவத் அயனஸ்தானத்தைக் கவனிக்கவேண்டும். வேனிற்கால மாகிய நான்குமாதமும் முடிந்து கார்காலம் தொடங்குகிறபடியால் அதற்கு முன்பு நான்கு அயனமாதத்திற் சூரியனிருந்த இடம் விஷுவத் ஸ்தானமாகிறது. கார்கால ஆரம்பத்திற் சூரியன் விஷுவத்தாகிய மேஷாயனத்திலிருந்து 120 திருவாம்சம் 4 ராசி=9 நக்ஷத்திரம் தாண்டிச்சென்றிருக்கிறான். அப்பொழுது அகத்தியன் உயர்நிலைவிட்டு மிதுனம்சேரலால் விருஷபம் தாண்டி மிதுனமடைந்தது. இவ்வாறு அகத்தியன் 2 ராசி=60 அம்சம் 4½ நக்ஷத்திரம் தாண்டியிருக்கும் சமயமாதலால் விஷுவத்திற்கும் சூரியனுக்கும் இடையில் அகத்தியன் புலப்படும். சித்தாந்தக்கணக்குப்படி அகத்தியனிலிருந்து கார்த்திகை மேற்கே 60 திருவாம்சத்திலும் பூரம் கிழக்கே 54 திருவாம்சத்திலும் உத்திரம் 65 திருவாம்சத்திலு மிருத்தலால் விஷுவத்தாகிய மேஷா யனம் கார்த்திகைதாண்டி எதிர்வந்து பரணியையடைந்தும் சூரியன் பூரத்திற்கும் உத்திரத்திற்கும் மத்தியிலுள்ள ஸ்தானத்தையடைந்தும் இருத்தல்வேண்டும். இது, சுமார் 4,200 வருடங்களுக்குமுன் கலியு காதி ஆரம்பத்திற்குச் சமீபமாகிறது. அயனராசிச் சக்கரம் கார்த்திகை யின் முதலிலிருக்கும்பொழுது அகத்தியன் விருஷபத்தின் இறுதியிலும், அயனராசிச்சக்கரம், கார்த்திகையை விட்டு எதிர்வந்து நாள்சுருக்கிப் பரணியையடையும்பொழுது அகத்தியன் மிதுனத்திலும் தோன்றும்.

எதிர்வரவுமாரி என்பதிலுள்ள விசேஷ சோதிடப்பொருத்தத்தை அறிக. "பின்வரும் மாரி" யென்று உரையெழுதியிருப்பதைக் காட்டிலும்

அது விசேஷமான பதப்பொருத்த முடையது. ஆகையால் இப்பாடல் கூறும் காலத்தில் அயனராசிச் சக்கரமாகிய விஷுவத்குறி, பரணியின் கடைசியையடைந்தும், சூரியன் பூரத்தைத்தாண்டியும், சந்திரனும் இராகுவும் பூரட்டாதி அல்லது உத்திரட்டாதியை அடைந்தும் இருத்தல் வேண்டும். மகரத்திலிருப்பதாகக் கூறுவதனால் உத்திரட்டாதியை விலக்குகிறது. இது அயனராசி மகரம். வடக்கே வங்காளத்தில் பாத்திர பதத்தில் அகத்தியன் தோற்றத்தைக் கொண்டாடுவதும் இதை ஆதரிக்கிறது. சந்திரன் ராகுவிலிருந்து 7 துருவாம்சத்திலிருக்கும்பொழுது கிரகணம் ஏற்படுவது நிச்சயம். 13½ அம்சத்திற்கப்பால் கிரஹணம் ஏற்படாது. இதனால் இவற்றின் நிலையை நிச்சயம் செய்யவேண்டும்.

மூவகை வீதியுளடங்கிய 27நாட்களுள்:—வராகமிஹிரர் பிருஹத்ஸம்ஹிதை 9வது அத்தியாயத்தில், சுக்கிரனுடைய கதியையும் பலனையும் 45 ஸ்லோகங்களால் விரித்துத் தமக்கு முன்னிருந்தவர்கள் 27 நக்ஷத்திரங்களையும் மூன்றுவீதிகளாகப் பிரித்துவழங்கிவந்தனரென்றும், அப்பிரிவில், பரணி முதல் ஒன்பது நக்ஷத்திரம் ஒருவீதியாகவும், பூரம்முதல் ஒன்பது நக்ஷத்திரம் ஒருவீதியாகவும், பூராடம்முதல் 9 நக்ஷத்திரம் ஒரு வீதியாகவும் வழங்கப்பட்டனவென்றும் கூறினர். இம்முறையை "மூவகை வீதியுளடங்கிய 27நாட்களுள்" எனப் பாடலிலும் உரையிலும் குறிப்பிட்டார்கள் போலும். ஆதியில் நான்குமண்டலமாகப் பிரித்திருந்த 28 நக்ஷத்திரங்களை 27 நக்ஷத்திரங்களடங்கிய மூன்றுவீதிகளாக விஷுவத்குறி கார்த்திகையிலிருந்தபொழுது வகுத்தனரென்றும் வேறுவாயிலாகத் தெரியவருகிறது. இதன்படி பாடலிற் சொல்லிய வெள்ளி பூரத்தினுரம்பத்திலும் புதன் பூரத்திலும், செவ்வாய் பூராடத்திலும் வக்கிரமானால் பரணியாரம்பத்திலும் இருத்தல்வேண்டும். ஆனால் வேறொருவிதக் கணக்கும் இருக்கிறது. மேஷவீதி உத்தராயணம் நிஷபவீதி பூர்ணயனம் மிதுனவீதி தெக்ஷிணயனம் என்றும், வைகாசி, ஆனி, ஆடி, ஆவணிமாதங்கள் மேஷவீதி என்றும், புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி மாதங்கள் நிஷபவீதி என்றும் கார்த்திகை, மிதுனவீதி என்றும் வருஷாதிதூலில் அயனவகுப்புச் சொல்லுமிடத்துக் கூறப்பட்டிருக்கிறது. இதன்படி வெள்ளி உத்திரத்தின் இரண்டாம்பாதத்தையும், செவ்வாய் கார்த்திகையையும் புதன் அனுஷத்தையும் அடைந்திருக்கவேண்டும். இந்தவீதிக்

கணக்கு அயனாரம்பம் அசுவினியிலிருந்தகாலத்திற்குப் பொருத்தமா யேற்பட்டதென்று பூரணயனத்திற்குச் சொல்லியிருக்கிற மாதங்களினால் தெரிகிறது. வெள்ளி சூரியனிலிருந்து 10 அம்சத்திற் குள்ளிருக்கும் பொழுது மறைந்துவிடும். 47 அம்சத்திற்குமேற்போகாது. புதன் சூரியனிலிருந்து 14 அம்சத்திற்குள்ளிருக்கும்பொழுது மறைந்து விடும். அதன் சமீபத்திலேயே எப்பொழுதும் இருக்கும். இதற்குப் பொருத்தமான வீதிக்கணக்கை வைத்துக்கொள்ளவேண்டும்.

விஷுவத்குறி சகாப்த ஆரம்பத்தில் அசுவினியைத்தாண்டி ரேவதி நக்ஷத்திரம் மூலகீலகாவுக்குச் சமீபத்தை யடைந்தபொழுது சூரியசித் தாந்தத்தில் நக்ஷத்திரங்களைக் கணிப்பதற்காக அதிலிருந்து அளவிட்ட படியால் அதுவே ஸ்திரமான நக்ஷத்திர ராசிச்சக்கர அளவாக ஏற்பட்டு மாறுதலின்றி வழங்கிவருதலைக்கொண்டு அதற்குமுன் பரணி கார்த்திகை ரோகிணி இந்த இடங்களில் விஷுவத் திருந்தபொழுது வழங்கிய ராசிச்சக்கர அளவுகளை மறந்து, இப்பொழுதிருக்கிற நக்ஷத்திர ராசி யளவையே அதற்கு மூன்திய காலத்திற்குபயோகிப்பது சரியன்று. ஆத லால் ராசிச்சக்கர அளவை யுபயோகிக்கும்போது அந்தக்காலத் தளவு இப்படியென்று முதலில் யோசித் ததன்படி கணக்கிடல்வேண்டும். மேற் கண்ட நக்ஷத்திரநிலைகளுக்குப் பொருந்திய நக்ஷத்திர ராசிச்சக்கரத்தை யும் எழுதிப்பார்க்கலாம்.

புலர்விடியலங்கியுயர்நிழ்ப என்பது பாடல். "கார்த்திகையுச்ச மாக விடிதலுண்டாக" என்பது உரை. கார்த்திகை உச்சமாகும்பொழுது கிழக்கே மீற்வானத்திற் சற்றுவடக்கில்தள்ளி மகம் உதிக்கும். அவ் விடத்திற் சூரியன் இருந்தால் அகத்தியன் புலப்படாது. சித்தாந்தக் கணக்குப்படி அக்கினிநக்ஷத்திரம் உச்சமாகும்பொழுது கிழக்கே பூரம் உதிக்கும். அகஸ்வித்தியாசத்தை உத்தேசித்துக் கிழக்கே உத்திரம் உதிப்பதாகவும் வைத்துக்கொள்ளலாம். அதிலிருந்து 20 துருவாம் சத்துக்குக் கீழே ஹஸ்தம் இருக்குமென்றால் வராஹமிஹிரர்காலத்தில் (560 A. D.) சிம்மராசியில் 24-வது துருவாம்சத்தைச் சூரியனடையும் பொழுது உஜ்ஜயினியில் அகத்தியன்தோன்ற ஆரம்பிக்குமென்றும், மற்றஜோசியர்களிற் கொஞ்சம் வித்தியாசப்படுமென்றும் கூறியிருத்தலால், சூரியன் ஹஸ்தத்தை யடைவதற்குச் சற்றுமுன்பே தென்னாட்டில் அகத்தியன் தோன்றக்கூடும். அக்கினி நக்ஷத்திரம் 5,500 வருஷங்

களுக்குமுன் விஷுவத்குறிக்குச் சமீபத்தில் ஸ்வர்க்கத்வாரம் என்ற பெயருடன் பிரசித்திபெற்றிருந்ததென்று தெரிகிறது. ஆகையால், பாடலிற் கூறிய அக்கினிநக்ஷத்திரம் பொருத்தமுள்ளதாகவும் சமீபத்தி லெழுதிய வுரையிற்கூறிய கார்த்திகை பொருத்தமற்றதாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது.

உரையின்படி கார்த்திகையை உச்சமாகவைத்துப் பொருத்தினால் "புலர்விடியல்" என்பது சூரியோதயத்துக்குச் சுமார் மூன்று நாழிகை முன்னதாகும். அல்லது நக்ஷத்திர ஆரம்பத்தை உயர்நிலையாக ஒரு வாறு வைத்துக்கொண்டால் அக்கினியை அதிபதியாகவுடைய கார்த்தி கையைச் சொல்லலாம்.

ஆகாசகங்கையென்ற சாயபாதம் அல்லது சோமதாரை மூடிகிற தெற்குக்கோடிக்குச் சமீபத்திலுள்ள அகத்தியன் கார்காலத்தை ஆரம் பித்துச் சையமலைக்கண் செல்லும்பொழுது ஆகாசகங்கை அம்மலையில் இறங்கி வைகைவழியாகச் செல்வதுபோல் தோற்றும்.

அகத்தியன்தோன்றும் தென்கிழக்குத் திசையைநோக்கி அந்த ணன் அர்க்கியங்கொடுக்கும்பொழுது இடைகலையிற் சந்திரனும் பிங்கல யிற் சூரியனும், பிரும்மரந்திரத்தில் அக்கினியும்தோன்ற அங்குட்ட அகத்தியன் ஹிருதயஸ்தானவுயாத்தில் உதிப்பது யோகசாஸ்திர விசேஷத்தையும் காட்டுகிறது.

இவ்விஷயத்தில் விரித்துரைத்தல் அவசியமாயினும் பாடலிற் கண்ட மற்ற விஷயங்களைப்பற்றி இவ்வாறெழுதின் மிகவும் விரியுமாகை யால் முக்கியமானவிஷயங்களைமட்டும் மேலே எடுத்துக்காட்டினேன். தமிழ்ப்பாடலுக்கும் வடமொழிச்சாத்திரங்களுக்கும் உள்ள ஒற்றுமை இப்பாடலால் நன்கு விளங்குகின்றது.

இங்ஙனம் எழுதினேன், கன்யாரவிமாத இறுதியில் தலாயனமாத முதலில் புதனும், குருவும், சனியும், ராகுவும் ஒரு வீட்டிலிருக்க ரேவதி நக்ஷத்திரக்ரஹணங் கூடியதினத்தில், தென்காசி, மதுரை வாசியாகிய,

ராம. கணபதி ஐயர் **B.A., B.L.,**

ஹைக்கோர்ட்டு வக்கீல்.

[குறிப்பு:—ஐரோப்பிய சாஸ்திரத்தில், கனோபஸ் (Canopus) என்னும் நக்ஷத்திரத்துக்குக் கொடுத்திருக்கும் அளவைத் திருவையாற்றுப் பஞ்சாங்கத்தில் அகத்தியனுக்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்து சாஸ்திர ஆராய்ச்சிசெய்த கோல்புருக் (Colebrooke) துரை இவ் விரண்டுநக்ஷத்திரமும் ஒன்றென்றார். சூரியசித்தாந்த அளவுப்படி ஒருநக்ஷத்திர அளவு வித்தியாசமாகிறது.—R. G.]

பதினென்றும்பரிபாடற் காலநிர்ணயம்.*

பரிபாடல் என்பது பலவாசிரியரால் இயற்றப்பட்ட சுமார் 70 பாடல்களடங்கியது. அவற்றுள் தமக்குக்கிடைத்த 22 பாடல்கள் மட்டும் பரிமேலழகர் உரையுடன், மஹாமஹோபாத்யாய உ.வே. சாமிநாதையரவர்களாற் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள், நல்லந்துவனார், தாம்பாடிய 6, 11, 20-ம் பாடல்களில் வைகையாற்றைப்பற்றி வர்ணித்திருக்கின்றார். அவற்றுள்,

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
வெரிசடை யெழில்வேழந் தகிலெனக் கீழிருந்து
தெருவிடைப் படித்தமுன் றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவெள் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடிய
லங்கி யுயர்நிற்ப வந்தணன் பங்குவி
னில்லத் துணைக்குப்பா லெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லே
மதிப மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுன மடைய விரிகதிர் வேனி
லெதிர்வரவு மாரி யியைகென விவ்வாற்றுற்
புரைகெழு சையம் பொழிமழை தாழ
நெரிதருஉம் வையைப் புனல்"

என்ற 11ம் பாடலின் முதல் பதினென்குவரிகளில் அவ்வர்ணனைக் காலத்தைக் குறிக்கத்தக்க சில குறிப்புக்களடங்கியிருக்கின்றன. இப்பாடலில், மகரத்திற் சனியும், மீனத்தில் வியாழனும், மேஷத்திற் செவ்வாயும், விருஷபத்திற் சுக்ரனும், மிதுனத்திற் புதனும் நிலவும் சந்திரக்கிரஹணமும் இருந்ததாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து க்ரஹநிலைகளைக்

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபதாம் வருடக் கூட்டத்திற் பேசப்பட்டது.

கூறிய ஆசிரியர், சூரிய சந்திரர் இருப்பிடத்தைப்பற்றிக் கூறவில்லை. ஒருவேளை சிலவரிகள் காணுமற்போயு மிருக்கலாம். புத—சுக்ரர் நிலையைக் கொண்டு சூரியன் நிலையையும், இம்மூவர்நிலையைக்கொண்டு சந்திரன் நிலையையும், நிரூபிக்கவேண்டும்.

புதன்.

வானசாஸ்த்ரப்படி, புதனுக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் 28 பாகை (Degree) க்குமே விருக்கமுடியாது. புதன் மிதுன (61° முதல் 90°வரை) ராசியிலிருப்பதால், சூரியன், (61°–28°=) 33-ம் பாகைக்கப் பால், (90°+28°=) 118-ம் பாகைக்கிப்பால் இருக்கவேண்டும். அதா வது, இப்பாடல்தினம், வைகாசிமீ 3ம் தேதிமுதல் ஆடிமீ 28ம்தேதிக் குள் ஏதாவ தொருதினமா யிருக்கவேண்டும்.

சுக்ரன்.

விருஷபராசி (31°முதல் 60°வரை)

சுக்ரனுக்கும் சூரியனுக்குமுள்ளதூரம் 48 பாகைக்குமே விருக்க முடியாது. சுக்ரன் விருஷபராசியிலிருப்பதால், சூரியன் (60°+48°=) 108° பாகைக்குள் இருக்கவேண்டும். அதாவது, சுக்ரரீதியாய்க் கணக் கிடுவோமாகில், இப்பாடல்தினம், ஆடிமாஸம் 18 தேதிக்குள் ஒருதின மாயிருக்கவேண்டும்.

புதன்—சுக்ரன்.

இவ்விருவர்நிலையினின்றும் கணக்கிடுவோமாகில், வானசாஸ்திரப் படி, இப்பாடல்தினம் ஆடிமாஸம் 18-ம் தேதிக்கப்பால் இருக்கமுடியா தென விளங்கும்.

அகஸ்திய நக்ஷத்ரம்.

(73-ம் அம்சம்)

போதியின் முனிவன் புரைவரைக்கீழி மிதுனமடைய=

(1) அகஸ்திய நக்ஷத்ரம் தன்து இருப்பிடமாகிய அஸ்தவரை சுடன்து மிதுனராசியுடன் உதயமாக,

அல்லது,

(2) அகஸ்தியர் (புரைவரை) மலையாகிய அஸ்தகிரிகடந்து, மிதுன ராசி உதயமாக. [புரை=இருப்பிடம்]

இவற்றுள், மிதுனராசி உதயமாக என்பதைக்காட்டிலும் மிதுன மத்தியிலுள்ள அகஸ்திய நக்ஷத்ர (73°) மே உதயமாயிற்று என்று சொல்லுவது மிகப் பொருத்தமாயிருக்கும். சந்திரனுள்பட ஆறு க்ரஹங்களும், அகஸ்தியநக்ஷத்ரமும், கார்த்திகைநக்ஷத்ரமும், ஆகாயத்திற் புலப்படுவதாகக் கவி வர்ணித்திருப்பதால், இன்னும் சூரியோதயமாகவில்லையென்பது நன்குவிளங்கும். 'அகஸ்தியம் உச்சங்கடந்து அஸ்தமனமாக' என்பதும் பொருந்தமாட்டாது.

அருணோதயம்.

(Dawn)

சூரியோதயத்துக்கு (முன் 18 பாகையில்) சுமார் 3 நாழிகைக்கு முன் அருணோதயமாகின்ற தென்றும், அருணோதயமானவுடனேயே, ஆகாயத்திலுள்ளநக்ஷத்திரங்கள் மறைகின்றனவென்றும், வானநூலோர் கூறுகின்றனர். ஆதலால், அகஸ்த்ய நக்ஷத்ர (73-ம் பாகை) த்திலிருந்து 18 பாகை (73°+18°=91°) க் கப்பாற் சூரியோதயமாகவேண்டுமென்றும், சூரியோதயத்துக்கு இன்னும் 3 நாழிகைக்குமேலிருக்கின்றது என்றும் விளங்கும்.

இதனால், இப்பாடல் தினம், ஆடிமீ முதல்தினத்துக்குமுன்னிருக்கமுடியாதென விளங்கும்.

புத–சுக்ர–அகஸ்தியநிலைகளைக்கொண்டு கணக்கிடுவோமாகில், இப்பாடல்தினம் ஆடிமாஸத்தில் 18 தேதிக்குள்ளிருக்கவேண்டுமென்று விளங்குகின்றது.


சந்திரன்.

பாம்பொல்லை மதியம் மறைய–சந்திர க்ரகண முண்டாக. இதனால், அன்று பௌர்ணமி என்றும், சந்திரன் சூரியனுக்கு 7-ம் இடமான மகரராசியில் முதல் 18 பாகைக்குள் உத்திராடம் அல்லது திருவோண நக்ஷத்திரத்திலிருக்கவேண்டுமென்றும் ஏற்படுகின்றது.

மேலும் இவ்வடிக்கு, 'சந்திரன் கிரஸ்தாஸ்தமனமாக' என்றும் கூறலாம். சந்திரக்ரஹணமேயில்லை, சந்திரன் அஸ்தவரையடைந்தான் என்பதுமாத்திரம் தகுமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

[பாம்பு=ஆயில்யம், கரை, வரம்பு. ஒல்=முடிவிடம். ஒல்கல்=அருகல், தளர்தல், குறைதல். ஒல்லை=காலவரை.]

காலநிர்ணயம்.



இவ்வாறு க்ரகநிலைகளும், பூர்ணிமையும், சந்த்ரக்ரஹணமும் ஆடிமாதம், 18உ க்குள் பொருந்திய வருஷமே, இச்செய்யுளிற் கூறப்பட்ட ஆண்டெனக் கூறலாம்.

= கி. பி. 372 = விக்ரம 429 = ஆங்கிரஸ ஹு
= கலி 3473 = சகம் 294 ஆடிமாஸம் 15உ.

இவ்வம்சங்கள் யாவும் பொருந்தியிருப்பதாய்த் தெரியவருகின்றது.

ஆனால், இவ்விஷயமும், இன்னும் எவ்வெவ்வாண்டுகளில், இவ்வம்சங்கள் யாவும் ஒருங்கே, துல்யமாய்ப் பொருந்தியிருக்கின்றனவென்பதும், அறிஞர் பலரால் ஆராய்ச்சி செய்யத்தக்கன.

கார்காலம்.

வேனில் எதிர்வரவு மாரி இயைக= வேனிற்காலம்போய்க் கார்காலம்வர, என்பதால், வர்ஷரிது ஆரம்பமான ஆவணிமாதம் என்றல்லவோ ஏற்படும். ஆடிமாதம் என்பது எப்படித் தகும்?

(1) முன்னொருகாலத்தில் 4 ரிதுக்களாய் வழங்கிவந்தார்கள் என்பதும், அம்முறையில் 4-ம் மாதமான ஆடிமாஸம் வர்ஷரிது தொடங்கலாம் என்பதும், சாதுர்மாஸ்யம் என்பது இவ்வழக்கைத்தான் குறிக்கின்றதென்பதும் சிலர்கொள்கை.

(2) ஆடிப்பூர்ணிமை யென்பது சாந்திரமானப்படி, ஆடி அமாவாஸைக்கு முற்பட்டால், வங்காளத்தில் ஸ்ராவண (ஆவணி) பூர்ணிமை யென்றும், தக்ஷிணத்தில் ஆஷாடபூர்ணிமையென்றும் வழங்குகின்றனர்.

(3) மேலும், வேதாங்கஜோதிஷகாலம் (கி. மு. 2000) முதல், வராஹமிஹிரர்காலம் (கி. பி. 520) வரை, சாந்திரமானமும், கார்த்திகாதி கணனமுமே வழங்கிவந்தபடியால், வராஹமிஹிரர்காலத்துக்கு முற்பட்ட 372ல் எழுதிய,ஆசிரியர் சாந்திரமான முறைமையனுசரித்து, எழுதியிருக்கலாம்.

(4) ஆடிமாஸச்சாரஹ (1st monsoon)ம், 18 ம் பெருக்கும் இவற்றுடன் கவனிக்கத்தக்கவை.

அங்கி.

புலர் விடிய லங்கி உயர்நிற்ப=விடியும்போது அங்கி உச்சத்திலிருக்க.

அங்கி=(1) அக்கினியைத் தேவதையாகவுடையகார்த்திகை நக்ஷத்திரம் (அசுவினி 33ம் அம்சம்).

=(2) அக்நி நக்ஷத்ரம், (58°)

புலர் விடியல்=(1) சூரியோதயம் (Sun rise)–உரையாசிரியர்;

(2) அருணோதயம் (Dawn).

கார்த்திகை நக்ஷத்ரம் (33ம் அம்சம்) உச்சத்திலிருக்க (33+90=) 123ம் அம்சத்தில் அன்று சூரியோதயம் என்பதும், அது, ஆவணிமீ 3ம் தேதியைக் குறிக்கும் என்பதும் உரையாசிரியர் கொள்கை. செய்யுட்காலம் ஆடிமீ 18ம் தேதிக்கப்பால் இருக்கமுடியாதென்று முன்னமேயே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், அங்கி உயர்நிற்ப=

கார்த்திகை (33°) அல்லது அக்னி (58°), அடிவானங்கடந்து மேலே வந்திருக்க, என்பதுதான், பொருந்தும்.

விஷுவதினம்.

(Vernal Equinox)

பொதியின்முனிவன் (அகஸ்த்ய நக்ஷத்ரம்) என்பது சைத்ர விஷுவதினத்தைக் குறிக்கலாம் என்று கணிதசாஸ்திர பீ. ஏ. பட்டதாரி யொருவர் கூறுகின்றார்.

ராசிமண்டலத்தில், அகஸ்திய நக்ஷத்ரம், அஸ்வினி 13ம் பாகையில், என்றும், ஸ்திரமாயுள்ளது. அதற்கும், அஸ்வதிக்குமுள்ள தூரம் என்றும் மாறாது.

உத்தராயணத்தில், சூரியன், பூமத்யரேகையைத் தாண்டும் ஸமஅஹோராத்ர தினமே விஷுவதின மெனப்படும்.

அந்தத்தினம் ஸ்திரமானதுமல்ல, நக்ஷத்ரமுமல்ல. அப்படிப்பட்ட சைத்ரவிஷுவு, 72 வருஷங்களுக்கொருகாள் பின்னடைந்தே வருகின்றது. வேதாங்கஜோதிஷகால (2000 கி. மு.)த்தில் (33°) வைகாசி மீ 3வ யிலும், வராஹமிஹிரர்கால (கி. பி. 520)த்தில் (அஸ்வினி=0°)சித்திரை முதல்தேதியிலும், இப்போது (338°) பங்குனி 9ம் தேதியிலும் வந விஷுவதினம் அமைந்துவந்திருக்கின்றது. அப்படியிருக்க, ஸ்திரமான அகஸ்திய நக்ஷத்ரத்தைச் சரமான விஷுவதின மென்பது பொருந்துமா?

கார்த்திகாதிகணனம்.

'எரிசடை இருக்கை' என்பதற்கு, 'மேட—இடப—மிதுன வீதிகளாய் 3×9 நக்ஷத்திரங்களமைந்திருக்க' என்று உரையாசிரியர் பொருள் கூறுகிறார்.

எரிசடை=அக்னி சிகை=கார்த்திகை
வேழம் =பரணி
இருக்கை=ரிக்ஷம்=நக்ஷத்ரம்,

'கார்த்திகைமுதல் பரணி ஈறுகவுள்ள 27 நக்ஷத்ரங்களுமமைந்த வானவீதியில்', என்பது மிகப் பொருந்தும். வேதாங்கஜோதிஷகாலம்

(2000 கி. மு.) முதல் வராஹமிஹிரர்காலம் (520 கி. பி.) வரை கிருத்திகாதிகணனமே வழங்கிவந்ததென்றும், பிறகுதான் அஸ்வினிகணனம் வழக்கில்வந்ததென்றும் அறிகிறோம். இந்நூலாசிரியரும் கிருத்திகாதிகணனத்தை யனுசரித்தே வர்ணித்திருப்பதால், இப்பாடற் காலம், வராஹமிஹிரர்கால (520 கி. பி.) த்துக்கு முற்பட்டகாலமென விளங்கும்.

முடிவு.

மூற்கூறியவற்றால், இப்பாடற்காலமானது, ஆடிமாஸம், 18ஆக்குள் வரும் பூர்ணிமை, க்ரஹணதினம், இரவு நான்காம் யாமம் என்று நிர்ணயமாகின்றது.

ஆனால், கி. பி. 372ம் வரு ஆடிமீ 15ம் ஆ என்பது உத்தேசமா (Hypothesis) யத்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் வேறுவருஷத்தில், வேறுதினங்களிலும் பொருந்துமா என்பது அறிஞர்பலரால் ஆராய்ச்சிசெய்யத்தக்கது.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் பி.ஏ., பி.எல்.,
மதுரை.

ஆ

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

தனித்தமிழ்ப்பரீக்ஷாவிரு.

பிரவேசபண்டிதவகுப்பு.

பரீக்ஷகர்:—இ. வை. அனந்தராமையர்.

இலக்கணம் I.

ஸௌத்திரிஆ பங்குனிமீ 22ஆ (4-4-21) திங்கட்கிழமை 10—1.

(அம்சம் 60.)

I. (1) நன்னூலென்பது எதற்கு உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளது?

(2) அதிகாரமென்பதற்கு விருத்தியிற்காணப்படும் விசேடவுரை யென்ன?

(3) காண்டிகைக்கும் விருத்திக்கும் முறையே கூறப்பட்டுள்ள இலக்கண மென்ன ?

II. (1) 'மொழிமுதற்காரணமாமணுத்திரளொலியெழுத்து' என் புழி விருத்திகாரர்கூறிய உரைவிசேடம் யாது ?

(2) உயிர்க்கிடக்கை முறைக்குக் கூறப்பட்ட காரணத்தை எழுதுக.

(3) பிறப்பிலக்கணத்தில் கஙக்களோடு ஒத்தமுயற்சியை யுடையதாகக்கூறப்பட்டுள்ள எழுத்து யாது ?

(4) மா, ஆம், மடு, மாடு, கேண்மியா என்பவைகள் முறையே எத்தனையெத்தனை மாத்திரையுடையன ?

III. (1) 'இவைசிலவில' என்றதனால் உரையிற்கொண்ட வினையிடை நிலைகள் எவை ?

(2) ஒருவன், கூனன், காரான், சேர்ப்பன் இப்பெயர்கள் முறையே பொருண்முதலாறனுள் எது எது அடியாகப் பிறந்தன ?

(3) தன்வினைப்பகுதிகள் எவ்வெவ்வகையாற் பிறவினைப்பகுதிக ளாகும் ? ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வோருதாரணம் எழுதுக.

(4) உண்ணுன், செய்யான் இவற்றிற் கெட்டது எதிர்மறை ஆகாரமா ? விகுதிமுதலாகாரமா ? ஆக்ஷேப சமாதானங் களால் விளக்குக.

(5) ஈறுபோதலென்னும் சூத்திரம் என்ன உத்தி ?

IV. (1) 'மூன்றுறுபெண்' என்னுஞ்சூத்திரத்திற்குத் தெளிவாக உரை எழுதுக.

(2) அல்+தினை, அவ்+நல்லன, ஆல்+நன்று இவற்றை விதி காட்டிப் புணர்க்க.

(3) சாரியையில் எழுத்துச்சாரியை பதச்சாரியையென இரு வகையுண்டென்பது எதனால் தெரிகின்றது ?

V. (1) குறிப்புச்சொற்கள் எவை?

(2) 'ஆறனுருபுமேற்குமவ்வுருபே' என்பதற்கு, பிறர்கூறிய பொருள் யாது? அதனை விருத்திகாரர் எங்ஙனம் மறுத்தார்?

(3) 'இம்முப்பெயர்க்கண்', 'இறுதிநிலையவைந்துமப்பொருண்மையினோர்ப' இவற்றில் முப்பெயர் எவை? ஐந்து எவை?

VI. (1) 'ஆறுந்தருவதுவினையே' என்னுமிடத்து, 'கொடிதுஞ்சும்' என்பது எதற்கும் எதற்கும் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது?

(2) 'ஐந்தொன்றுறுமுக்காலமுமுறைதரும்' ஆறு எவை? அவை தருங்காலம் யாது?

(3) தன்மை முன்னிலை யிடங்கட்குரிய பால்கள் எவை?

(4) யாசென்னுவினைக்குறிப்பு உயர்முப்பாலைக் கடந்துவருதற்கு மேற்கோளும் சமாதானமும் எழுதுக.

VII. (1) இடைச்சொல்லின் எண்பகுதிகளுள் இடையியலில் எவ்வெப் பகுதிகள் கூறப்பெறுகின்றன?

(2) 'இங்நான்கெண்ணுமஃதின்றியுமியலும்' இதில் நான்கென்றது எவற்றை? அஃதென்றது எதனை?

(3) சிறப்புவ்மை எச்சவும்மைகளை உதாரணங்காட்டி விளக்குக.

VIII. (1) உரிச்சொல்லின் பொதுவிலக்கணம் யாது? ஆசிரிய சமாதானங்களுடன் எழுதுக.

(2) 'மூரணந்தாதி' இதனைப் பதம்பிரிக்க.

(3) 'இனையவுடல்கொளுயிர்க்குணம்' இனைய என்றதனாற் கொள்ளப்படுவன எவை?

(4) கடியென்னும் உரிச்சொல்லுக்குள்ள பொருள்களுள் எந்த நான்கிற்கேனும் உங்கள் இலக்கியபாடத்தில் உதாரணங் காட்டிப் பொருளும் எழுதி அப்பாடலின் இடத்தையும் குறிக்க.

IX. குன்றக்கூறல் சருங்கச்சொல்லல்களுக்கும், கெடுதல் தொகுத்தல் மூவழிக்குறைதல்களுக்கும், முன்னிலைவினை ஏவல்வினைகளுக்கும், ஏவல்வினை வியங்கோள்வினைகளுக்கும், பெயர்ப்பகுபதம் குறிப்புவினைப்பகுபதம் குறிப்புவினையாலணையும்பெயர்ப்பகுபதங்களுக்கும், இசைநிறை அசைநிலைகளுக்கும், பொச்சாப்பு மறவிகளுக்கு முள்ள வேறுபாடுகளை விளக்குக.

புத்தகமதிப்புரை.

I. மஹரிஷிகள் சரித்திரம்:-பெரியகுளம் வக்கீல் ஸ்ரீமத். M. R. ஸ்ரீநிவாஸையரவர்கள், புராணம், இதிகாசம், காவியம் முதலியவற்றிலிருந்து மஹரிஷிகளின்பெயர்களைத் தொகுத்து அகராதிவரிசைப்படுத்தி அவர்கள் சரித்திரங்களை எளியநடையில் விளக்கிச் சிறுசிறு பகுதிகளாக வெளியிட்டுவருகிறார்கள். பகுதி ஒன்றுக்கு 50 பக்கமாக இதுவரை நான்கு பகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல் 16 பகுதிகளில் முடியுமென்று தெரிகிறது. வெளிவந்துள்ள நான்குபகுதிகளில் உயிர்வருக்கமும் ககரவர்க்கமும் முடிந்துள்ளன. இம்முறையே இந்நூல் முழுதும் வெளிவந்தால் உலகுக்கு மிகவும் பயன்படும். இது ஆங்கிலநூல்வல்லாரது ஆராய்ச்சிமுறையிற் புதிதாய் எழுதப்பட்டுள்ளது. படிப்பவர்க்கு நீதி, அறிவு நல்லொழுக்கம் முதலியவற்றை விருத்திசெய்யக்கூடியது. கலாசாலை மாணவர்க்குப்பாடமாகும் தகுதியுடையது. இதன் விலை தனிப்பகுதி ரூ 0-10-0. நான்குபகுதியும் சேர்ந்து ரூ 2-2-0. கலாசாலை யதிகாரிகளும், பிரபுக்களும், பிறரும் இதை மாணவர்க்குப் பாடமாக்கியும், பொருளுதவியும், வாங்கியும் ஆதரித்து ஐயரவர்களுக்கு இம்முயற்சியில் மேன்மேலும் ஊக்கமுண்டாக்குவார்களென்று நம்புகிறேம்.

II. செய்யுட்பாடக்கோவை:— (இரண்டாம்பாகம் தொளாயிரம் பாடல்களடங்கியது.) இது, மதுரை ஸௌராஷ்டிர உயர்தரகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். P. C. புன்னைவனநாதமுதலியாரவர்களால் தொகுக்கப்பெற்றது. இதில் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை, சதகம் முதலிய பிரபந்தங்களிலிருந்தும், நீதிநூல், புராணம் முதலியவற்றிலிருந்தும் செய்யுள்கள் தேர்ந்தெடுத்துச் சேர்க்

கப்பட்டுள்ளன. இதிற் ரெருகுக்கப்பட்ட செய்யுட்களுக்கு இறுதியிற் குறிப்புரையும் எழுதிச்சேர்க்கப்பட்டிருக்கிறது. இது தனித்தமிழ் பயிலத்தொடங்குவார்க்கும் ஆங்கிலகலாசாலே மாணவர்க்கும் பயன்படத் தக்கது. பெயரளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்பட்ட பலநூல்களின் நயமும் நூலாசிரியர்திறமும் ஒருங்கே கண்டுகளித்தற்கு இந்நூல் கருவியாகும். இதன் விலே ரூபா 1–4–0. இது, மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரி ஸ்ரீமத். பி. நா. சிதம்பரமுதலியாரவர் களாற் பதிப்பிக்கப்பட்டது. வேண்டுவோர் அவர்க்கு எழுதிப்பெறலாம்.

III. கம்பராமாயணச்சுருக்கம்:-இது, சென்னே ஸி. குமாரசுவாமி நாயுடு கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. இது, சம்பராமாயணத் தைத் தழுவி இடையிடையே செய்யுள்விரவிவரச் செவ்வியநடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதிற் பாலகாண்டமும் அயோத்தியாகாண்ட மும் தனித்தனி புத்தகமாக நல்லகடிதத்திற் றிருத்தமாயும் அழகாயும் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள், பாலகாண்டம் துரைத்தனத்தாரால் போதனமுறையிலிவார்க்குப் பாடமாக வைக்கப்பட்டதென்று தெரி கிறது. இப்புத்தகங்கள் மாணாக்கர்க்கு வியாசம் எழுதுந்திறத்தை விருத்திசெய்யவல்லதாயிருப்பதால் துரைத்தனத்தாரும் கலாசாலே யதிகாரிகளும் இவற்றை ஆதரித்து மாணவர்க்குப் பாடபுத்தகமாக ஏற்படுத்துவார்களென்று நம்புகிறேம். விலே பாலகாண்டத்துக்கு ரூ 0-10-0. அயோத்தியாகாண்டத்துக்கு ரூ 0-14-0. வேண்டுவோர், சென்னே ஸி. குமாரசுவாமிநாயுடு கம்பெனியார்க்கு எழுதிப்பெறலாம்.

IV. தபாலாபீஸ்:—இது, கும்பகோணம் துரைத்தனக் கல்லூ ரிப் போதகாசிரியர் ஸ்ரீமத். K. C. வீரராகவையர் M.A., அவர்களால், வங்காளவாசியும், கவிதாசிரோமணியுமான ஸர் ரவீந்திரநாத டாகூர் என்ப வர் இயற்றிய தபாலாபீஸ் என்னும் நாடகத்தை மூதனூலாகக்கொண்டு இனியநடையில் மூதனூலின் அபிப்பிராயம் நன்கு புலனாகும் வண்ணம் மொழிபெயர்க்கப்பட்டு நல்லகடிதத்திற் றிருத்தமாய் அச்சிடப்பட்டிருக் கிறது. இது, ஆன்மாவின் நிலேயையும் அதற்கு ஏற்படும் பந்தங்களே யும், அது பந்தமறுத்து வீடெய்து நெறியையும் உள்ளுறைப்பொரு ளால் நன்குவிளக்குவது. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ககூ.] தூர்மதி- ஹூ ஐப்பசி- மீ [பகுதி கஉ.

Vol. XIX. October—November—1921. No. 12.

அரசியலாராய்ச்சி.*

இதிற்கூறியவிஷயங்களாவன:—

1. உலகினுக்கு அரசன் றெய்வமென்பது.
2. உலகினுக்கு அரச னுயிராயிருக்கின்றனென்பது.
3. அரசிலாவுலக மில்லையென்பது.
4. அரசியலைத் திருக்குறளில், உரு-அதிகாரத்திலும், விநாயகபுராணத்தில் அரசியற்படலத்திலும் விரிவாகக்கூறியிருக்கின்றதென்பது.
5. அரசன் ஆறங்கம் அறுவகைத்தொழில், ஐவகைக்குழு, ஐவகைச் சுற்றம், எண்பேராயங்களுடனிருந்து, நாட்டிற் கைவகைப்பயன் தீர்த்து, எட்டுவகைக்குற்றஞ் சாராமல், நால்வகையுபாயஞ்செய்து, நீதியாகிய செங்கோல்செலுத்தவேண்டுமென்பது.
6. அரசனீதியைச் செங்கோல் என்பதற்குக் காரண மின்னதென்பது.
7. அரசன்செங்கோலால் உலகிற்குப் பல நன்மையுண்டாமென்பது.
8. அரசனே பசுக்களையும், உலகினரையும், அறவோரையும், திருவேடத்தாரையும், திருக்கோயில்வ்ழிபாடுகளையுங் காப்பவனென்பது.
9. அரசன் உலகினரை யின்னவிதமாகக் காக்கவேண்டுமென்பது.
10. அரசனுக்குக் குடிகள் ஆறிலொருகடமைகொடுக்கவேண்டுமென்பது.
11. அரசன் எப்படிநடப்பானே அப்படியே குடிகளு நடப்பார்களென்பது.
12. தீயோர்களைக்கொல்லுதல் அரசனுக் குரியதருமமென்பது.
13. அரசன் கொடுங்கோலனுபின் மழையில்லாமைமுதலிய கேடுண்டா மென்பது.

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபதாம்வருடக் கொண்டாட்டத்திற் செய்த பிரசங்கம்.

14. அரசனுக்குப் புலவர்களும் புல்வர்கட்கு அரசனும் வேண்டுமென்பது.

15. அரசன் புலவரைச்சார்ந்திருத்தலே அடையும்பயன்களிற் பெரும்பய னாகக் கொண்டிருத்தல்வேண்டுமென்பது.

16. அரசனீதியா லரசாண்டு நெடுநாட்புண்ணியமும் புகழும்பெற்றிருத்தி பின் முறைந்து தவஞ்செய்தல்வேண்டுமென்பது.

17. இவ்வரசியலாய்ச்சியிற்கூறிய நன்மைகளெல்லாமமைத்த ஐந்தாம் ஜார்ஜ்மன்னர்பெருமான் னீழிவாழ்கவென்பது.

உலகமெல்லாவற்றினுமுள்ள சராசரங்களையெல்லாங் காக்கும் பரா சாகிய சிவபிரான் மூத்தபிள்ளையாராகிய நிராயகருக்குப் பட்டாபிடேகஞ் செய்துமகுடஞ்சூட்டி அக்காவலுக்கு,இளவரசாக்கிவைத்திருக்கின்றனர்.

1. உலகெல்லார்க்குந் தெய்வம் அரசனேயாவான்.

"குலமகட்குத்தெய்வங்கொழுநனேமன்ற
புதல்வர்க்குத்தந்தையுந்தாயு—மறவோர்க்
கடிகளேதெய்வமனேவோர்க்குந்தெய்வ
மிலமுகப்பைம்பூணிறை" (இறை—அரசன்)

எனக் குமரகுருபரசுவாமிகள் நீதிநெறிவிளக்கத்திற் கூறியநுளியது காண்க. திருக்குறளினும் "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்— கிறையென்று வைக்கப் படும்" என்றார் (இறை—கடவுள்). "அருளுமே லரசாக்குமன் காயுமேல்—வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம்" "உறங்கு மாயினு மன்னவன் றன்னெளி—கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" (ஒளி-தெய்வத்தன்மை) எனச் சீவகசிந்தாமணியிற்கூறியிருக் கின்றார். "இகோயினுறைபவெ ன்றிகழார் நின்ற-வொளியோ டொழுகப் படும்" எனத் திருக்குறளிற் கூறினர். ஒளியென்பதற்கு அரசனிடத்தி லுள்ள தெய்வத்தன்மையென உரைகூறியிருக்கின்றார். ஒளியோடொழுகு தலாவது அரசன் கடவுளுந் தர் மனிதருமாக நடத்தல். இன்னுந் திருக்குறளிலே அரசியல் முதலதிகாரத்திற்கு இறைமாட்சியெனப் பெய ரிட்டதற்கு அரசன் உலகபாலாகிய தேவாதிசமமாயிருந் தலகங்காத்த லின் இறைமாட்சியெனக் கூறினர் என வுரை வகுத்திருக்கிறார். "திரு வுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டனே யென்னும்" எனத் திருவாய்மொழியிற் கூறியருளியிருக்கின்றார்.

"நாற்கவியும்புகழவருந்தண்டமிழாசிரியர்வளநாட்டினல்லதீதி
மார்க்கமுடனடந்துசெங்கோல்வழுவாமற்புவியாளும்வண்மைசெய்த
தீர்க்கமுள்ளவரசனேயெதெய்வமென்பார்கொடுங்கோன்மைசெலுத்திநின்ற
மூர்க்கமுள்ளவரசனுந்தன்மந்திரியுமாழ்நரகின்மூழ்குவாரே"

எனத் தண்டலையார்சதகத்திற் கூறினர். 'நீதிமன்னன் நிலத்துக்குத் தெய்வம்' என்பது பழமொழி. இந்திரன், வாயு, யமன், சூரியன் முதலோரம்சங்களால் அரசன் உண்டாக்கப்பட்டான் எனத் தருமநூலிற் கூறியிருக்கின்றதாம்.

2. இனி அரசன் உலகினுக் குயிராயுள்ளான் என்பர். "நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே—மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம், அதனால், யானுயி ரென்ப தறிகை-வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே" எனப் புறநானூற்றில் (கஅசு-ஆவது கவி) கூறியிருக்கின்றார். இக்கருத்தமைய, கைடதம் நகரப்படலத்தில் "தன்னுயி ராமென வுலகிற் றங்கிய-மன்னுயி ரணைத்தையும் புரக்கு மாட்சியான்" எனக் கூறியிருக்கின்றார்.

"கோவரியசீவன்குடிகளுடலாவார்
சீவன்சும்மாவிருக்கத்தேகமுழைத்தோம்புதல்போற்
பூவலயமீதிற்றம்பூட்சிகளினுலுழைத்துக்
காவலனைக்காக்கக்கடனுங்குடிகளுக்கே"

என நீதிநூலிற்கூறிய இக்கவியிலே, 'கோவரியசீவன் குடிகளுடலாவார்' எனக் கூறியதுகாண்க. கோ—அரசன். பூட்சி—உடம்பு.

3. இங்ஙனமாதலால், அரசிலாவுலகமில்லையெனக் கருதல்வேண்டும். விருகூக்கட்கரசாக அரசிருக்கின்றது; அதற்குத் தாருவேந்து என்றும் பெயருண்டு. பறவைகட்கரசாகக் கருடனிருக்கின்றது; அதற்குப் பறவைவேந்தன் என்றும் பெயருண்டு. மிருகங்கட் கரசாகச் சிங்கமிருக்கின்றது; அதற்கு மிருகராசன் என்றும் பெயருண்டு. தேவர்கட்கரசாக இந்திரனிருக்கிறான்; அவனுக்குத் தேவர்கோன் என்றும் பெயருண்டு. அசுரர்கட்குச் சூரன் முதலோர் அரசாகவிருந்தனர். அரவுகட்கரசாக ஆதிசேடனிருக்கின்றான்; அவனுக்குச் சர்ப்பராசன் என்றும் பெயருண்டு. உலகில் மானிடர்க்கரசாக இருப்பவற்கு நரபதி என்று நிகண்டிற் பெயர் கூறியிருக்கின்றார். இக்கருத்தெல்லாம் விளங்க, இராமாயணத்தில்,

"வள்ளுறுவயிரவாளரசில்லையக
நள்ளுறுகதிரிலாப்பகலுநாளொடு
தெள்ளுறுமதியிலாவிரவுந்தேவுட
னுள்ளுறையுயிரிலாவுடலுமொக்குமே"

"தேவர்தம்மூலகினுந்திமைசெய்தழன்
மாவலியவுணர்கள்வைகுநாட்டினு
மேலெவையுலகமென்றிசைக்குமன்னவை
காவல்செய்தோவரையின்மைகண்டிலம்"

"முறைதெரிந்தொருவகைமுடியநோக்குறின்
மறையவன்வகுத்தனமண்ணின்வானிடை
நிறைபெருந்தன்மையினிற்பசெல்வன
விறைகளேயில்லனயாவைகண்டிலம்"

என இராமபிரான் வனஞ்சென்றபின் அரசிலாவுலகமில்லை; ஆதலால் இனி நீ அரசாயிருக்கவேண்டு மெனப் பரதனேநோக்கி வசிட்டர்கூறியதாகக் கம்பர் கூறியிருத்தல் காண்க.

4. இவ்வரசியலைத் திருக்குறளில் விரிவாக இருபத்தைந்ததிகாரத் திற் கூறியிருக்கின்றார்; விநாயகபுராண மரசியற்படலத்தில், நூற்றைம்பத் தாறு கவிகளாற் கூறியிருக்கின்றார்; விரிவஞ்சி யீண் டவைகளை யெடுத் துக் கூறவில்லை.

5. இனி அரசனீதிக்கும் வெற்றிக்கு மேதுவாகவுள்ளன ஆறங்க மென்பர்; அவற்றைப் "படைகுடி கூழமைச்சு நட்பர ணுறு–மூடையா னரசருளோறு" என்னுந் திருக்குறளிற் காண்க. கூழ்–பொன். இவ் வாறங்கமுங்கொண்டு, அறுவகைத்தொழில், ஐவகைக்குழு, ஐவகைச் சுற்றம், எண்பேராயத்துடனிருந்து, நாட்டிற்கு ஐவகைப் பயந்தீர்த்து, எட்டுவகைக்கேஞ்சாராமல், நால்வகை யுபாயமுஞ்செய்து நீதியாகிய செங்கோல் செலுத்தவேண்டும். அறுவகைத்தொழிலாவன—"ஓதலே வேட்ட லீத லுல்கோம்பல் படை பயிற்றல்–மேதகு போர்செய் தீட்டல் வேந்தர்செய் தொழில்க ளாறே" எனச் சூடாமணிநிகண்டிற்கூறுதல் காண்க. ஐவகைக்குழுவாவன-மந்திரிகள், புரோகிதர்,சேனாபதிகள், தூது வர்கள்,ஒற்றர்கள் என்றிவர்களாம். ஐவகைச்சுற்றமாவன–மடைத்தொழி லோர், நிமித்தம்பார்ப்பவர், ஆயுள்வேதர், நட்பாளர், பார்ப்பார் என்றிவர்க ளாம். மடை–சோறு.

"தடுக்குமந்திரிபுரோகிதன்றெழிற்றூதனுற்ற
னெடுத்துவந்திருந்தசேனைக்கிறைவனங்குழுவென்றுகு
மடைத்தொழிலோர்நிமித்தம்வகுப்பவராயுள்வேத
ரடுத்தநட்பாளர்பார்ப்பாரைவகையுறுதிச்சுற்றம்"

எனச் சூடாமணிநிகண்டிற் கூறுமாறுகாண்க. எண்பேராயமாவன– காணத்தியலவர், கருமவிதிகள், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் எனச் சிலப்பதிகாரவுரையிற் கூறினர். ஐவகைப்பயமாவன–திருவிளையாடற்புராணம் பழியஞ்சின படலத்தில் "ஞஞ்சுபயந்தீர்த்தரசாளு–முறைமையு நன்ரூல்" எனத் தொகைமட்டுங் கூறினர். பெரியபுராணந் திருவாரூர்ச்சிறப்பில்,

"மாநிலங்காவலனுவான்மன்னுயிர்காக்குங்காலத்
தானதனுக்கிடையூறுதன்னுற்றன்பரிசனத்தா
லானமுறுபகைத்திறத்தாற்கள்வராலுயிர்தம்மா
லானபயமைந்துந்தீர்த்தறங்காப்பானல்லனே"

என வகைசெய்து கூறியிருக்கின்றார். எண்வகைக்கேடாவன—"விட்டில் தன் னரசு நால்வாய் மிகுமழை மிகுகாற்றேடே-நட்டம்வேற் றரசு கிள்ளை நாடுறங் கேடெட் டாமே" எனச் சூடாமணிநிகண்டிற் கூறினர். நால் வாய்-யானை. நட்டம்—அழிவு. கிள்ளை—கிளி. நால்வகையுபாயமாவன—சாம பேத தான தண்டமாம். பாரதங் கிருட்டினன்றூதுச்சருக்கத்தில், "ஞானமன்போடினி தரைத்துஞானமுனியகன்றதற்பின்சாமபேத—தான தண்டமெனநிருபர்தருமமுறையிற்புகலுந்தகுநிநோக்கி" எனக் கூறியது காண்க.

6. இனி அரசனீதிபைச் செங்கோலென்பர். நீதியானது ஒருபாற் கோடாமற் செவ்விய தூலாக்கோல்போலிருத்தலா லென்க.

7. இச் செங்கோலால், உலகிற் பல நன்மையுண்டாமென்க. விநாயக புராணம் அரசியற்படலத்தில்,

"மழைவளஞ்சுரக்குமாறும்வயனிலம்விளையுமாறும்
விழையறமவளர்க்குமாறும்வேதநூல்விளங்குமாறுந்
தழைபொருளீட்டுமாறுஞ்சமரிடைவெல்லுமாறும்
பிழைதபவாழுமாறும்பிறழ்தராக்கோலினுகும்"

எனக் கூறியதுகாண்க. "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதிபாய்—நின்றது மன்னவன் கோல்" "இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட—பெயலும் விளையுளுந் தொக்கு" எனத் திருக்குறளிலுங் கூறினர். பெயல்—மழை.

8. இச் செங்கோலரசனே பசுக்களையும், உலகத்தையும், அறவோர் களையும், திருவேடம்பூண்டவர்களையும், திருக்கோயில்வழிபாடுகளையுங் காப்பவனாவன்.

"ஆவையும்பாரையுமற்றறவோரையுந்
தேவர்கன்போற்றுந்திருவேடத்தாரையுங்
காவலன்காப்பவன்காவாதொழிவனேன்
மேவுமுலைக்குமீளாநரகமே"

"முன்னவனூர்கோயிற்பூசைகண்முட்டிடின்
மன்னர்க்குத்தீங்குளவாரிவளங்குன்றுங்
கன்னங்களவுமிகுத்திடுங்காசினிக்
கென்னருணந்தியெடுத்துரைத்தானே"

எனத் திருமந்திரத்திற்கூறுதல் காண்க. "ஆபயன் குன்று மறுதொழி லோர்நூன்மறப்பர்–காவலன் காவா னெனின்" எனத் திருக்குறளிலுங் கூறினர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் சமணருடன் வாதிட்டு, வையையாற்றில் ஏடெதிரேறவிட்டபோது கூறியருளிய திருப்பாசுர முதற்றிருப்பாட்டில், 'வாழ்கவந்தணர்வானவராவினம்–வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக' எனக் கூறியிருக்கின்றது. இத் திருப்பாசுரத்தில் ஒவ்வொருபாடலுக்கும் பொருள்கூறிவந்த சேக்கிழார்நாயனர், 'வேந் தனுமோங்குக' என வாழ்த்தியதற்குப் பொருள்கூறியதாவது, "ஆரூ மன்னீன வாழ்த்திய தர்ச்சனை–மூரு மற்றினை காக்கு முறைமைபால்" எனக்கூறியது காண்க.

9. அரசன் உலகினரை பெவ்வாறுகாக்கவேண்டுமெனில்?

"எந்தவேளையினுநொந்தவர்துயர்கேட்டிடரிழைப்பவன்றனதேக
மைந்தனேயெனினும்வதைத்திடவொல்கான்மாக்களின்சுகநலமன்றிச்
சிந்தனைமற்றேர்பொருளினிற்செலுத்தான்றீமொழிகனவினும்புகலான்
றந்தைபோற்றுய்போலெவரையுமோம்புந்தன்மையனேயிறையன்றே"

என நீதிநூலிற்கூறியவாறு காக்கவேண்டும். 'இடரிழைப்பவன்றன தேகமைந்தனேயெனினும்வதைத்திடவொல்கான்'–என்பதற் குதாரண மாக, திருவாரூரிலிருந்த மநுச்சோழனவன், தன்புதல்வன் பவனி வருங்கால் ஒருபசுக்கன்றைத் தேர்க்காலால் வதைசெய்தானென்று அப் புதல்வனை வீதியிற்கிடத்தித் தன்றேர்க்காலால் வதைசெய்தான். இத னைப் பெரியபுராணத்தில்,

"ஒருமைந்தன்றன்குலத்துக்குள்ளானென்பதுமுணரான்
றருமந்தன்வழிச்செல்லைகடனென்றுதன்புதல்வன்
மருமந்தன்றேராழியுறவூர்ந்தான்மதவேந்த
னருமந்தவரசாட்சியரிதோமற்றெனிதேயோ"

எனக் கூறியிருத்தல் காண்க. இன்னும்,

"வடவிழ்ப்பைந்தாரோயிமையோர்பதம்பெறினு
நாடுநெடுங்கனகலவைபுரியார்
வேடர்புரிவேட்டஞ்செய்யார்வினைதருஞ்சூ
தாடல்புரியார்மட்டுண்ணாரசரே"

"குணங்கெடுமுட்செடியையெலாம்புறத்தொதுக்கிமணமுளதாய்க்கோலிநாட்டி யிணங்கியிருந்ததைப்பிரித்துப்பிரிந்ததையெல்லாமிணக்கியிதமீர்வார்த்து வணங்கியிருந்ததையுயர்த்தியுயர்ந்ததையெல்லாம்வணக்கிமலரேகொய்யு மணங்குலாவுந்தோட்டம்வைத்தான்போலவுமேயரசியல்புமைந்ததம்மா"

என வாசிட்டத்திற் கூறுதல் காண்க.

10. இங்ஙனங் காக்கும் அரசனுக்குக் குடிகள் ஆறிலொருகடமை கொடுக்கு முறைமையுடையார்க ளென்பர். "சிறந்தசீர் ஞாலஞ் செய் தொழில் யாவையு-மறைந்திடில் வேந்தனுக் காறிலொன்றுமே"எனத் திரு மந்திரத்திற்கூறினர். திருவிளையாடற்புராணத்தில்,"ஆறிலொன்று,கொற் றவர்கடமைகொள்ளப் பண்டியிற் கொடுபோய்த்தென் ஞ-டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க் கூட்டி யுண்பார்" எனக் கூறினர். இக்கவியிலே அரசனுக்குரிய ஆறிலொருபங்குநீங்கக் குடிகள் கொள்கின்ற ஐந்து பங் கிற்கு வகையுங் கூறினரென்க. "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றுங்-கைம்புலத்தா ரோம்பப டல்" என்ற திருக்குறளில், 'இங்ஙன மில்வாழ்வானுக் கைந்துகூறுவேண்டுதலில் அரசனுக் காறிலொரு கடமை யாயிற்று' என உரை கூறியதுங் காண்க.

11. இவ்வியல்புடைய அரச னெப்படி நடப்பனோ அப்படியே குடி களுநடப்பார்கள். யதாராஜா ததா ப்ரஜா என்ற வாக்கியத்தா லறிக. "வேந்தனுலகைமிகநன்றுகாப்பது-வாய்ந்தமனிதர்களவ்வழியானிற்பர்" எனத் திருமந்திரத்துங் கூறுதல் காண்க.

12. அரசன் இவ்வகை நன்மை யெல்லாமுடையவனுயினுந் தீயோரைக் கெல்லுதல் அவ்வரசனுக்குரியதருமமாம். "கொலையிற் கொடியாரை வேந்தெறுத்தல் பைங்கூழ்—களைகட் டதனெடு நேர்" (பைங்கூழ்-பயிர்) எனத் திருக்குறளிலும்,

"தத்தஞ்சமயத்தருதிநில்லாதாரை
யத்தன்சிவன்சொன்னவாகமநூனெறி
யெத்தண்டமுஞ்செய்யுமம்மையிலிம்மைக்கே
மெய்த்தண்டஞ்செய்வதவ்வேந்தன்கடனே"

எனத் திருமந்திரத்திலுங் கூறுதல் காண்க.

13 இம்முறையின்றி அரசன் கொடுங்கோலனுயிருப்பின் மழை யில்லாமைமுதலிய கேடுண்டாமென்பர். "முறைகோடிமன்னவன்செய்யி னுறைகோடி-யொல்லாதுலானம்பெயல்"(உறை-பருவமழை.)"நாடோறு நாடிமுறைசெய்யாமன்னவ-னுடோறுநாடுகெடும்" எனத் திருக்குறளிற் கூறியது காண்க. இக்"கொடுங்கோன்மன்னவன்வாழுநாட்டிற்-கடும்புலி வாழுங்காடுநன்று" என்பர்.

"படுங்கோலமறியாமற்றண்டலையார்திருப்பணிக்கும்பங்களஞ்செய்வார்
நெடுங்கோலுந்தண்டமுமாவீணைகவீணைப்போனீதிசெய்வார்
கெடுங்கோபமல்லாமல்வினவுண்டோமழையுண்டோகேள்வியுண்டோ
கொடுங்கோன்மன்னவனுட்டிற்கடும்புலிவாழுங்காடுகுணமென்பாரே"

எனத் தண்டலையார்சதகத்திற் கூறுதல் காண்க.

14. இங்ஙனங் கொடுங்கோலின்றிச் செங்கோல்செலுத்துமர சனுக்குப் புலவர்களும், புலவர்கட் கரசனும் வேண்டும்: அது எது போலிருக்குமெனில், இராவினுக்குச் சந்திரனும் சந்திரனுக் கிராவும் சிறந்திருப்பதுபோலிருக்குமென்க. அன்றி, அரசனுக்கறிவுறுத்துங் காலத் தறிவுறுத்தி அவன் பெருமை, கொடை, வீரம், நாடு, நகர்முதலிய வற்றைச் சிறப்பித்துக்கூறுவோர் புலவர்களே யாவர். புலவர்கட்கு நன்கு மதித்துச் சிவிகை, யானை, குதிரை, ஆடை, அணிகலம், பொன், மனை, நகர், முதலியவைகளை வரிசையாக வுதவிச் சிறப்புச்செய்வோன் அர சனேபாவான் என்பதனாலுங் கொள்க.

15. முன்னுள்ள அரசர்களெல்லாம் புலவரைச் சார்ந்திருத்தலே தங்களடையும் பயன்களிலே பெரும்பயனாகக் கொண்டிருந்தார்கள். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனென்பான் கூறியகளியிலே சபதங்கூறியதை நோக்கவேண்டும். "என்னைப் பழித்த வேந்தரைப் போரிற் சிதறப் பொருது வென்றிலேனாயின், மாங்குடிமரு தன்முதலான புலவர்பலரும் என்னைப் பாடாது என்னிலவெல்லையை விட்டு நீங்குக" என்று சபதங்கூறினான். இதனால், எல்லாப்பொருளி னும் பெரும்பொருளாகப் புலவர்களையே கொண்டிருந்தானென்பது விளங்கிறதாம். "ஓங்கியசிறப்பினுயர்ந்தகேள்வி—மாங்குடிமருதன்றலைவ னாக-வுலகமொடுநிலைஇயபலர்புகழ்சிறப்பிற்—புலவர்பாடாது வரைகவென் னிலவரை" என்ற இவ்வடிகள் அவ்வாசான்கூறியபாட்டி னுள்ளன. புற நானூறு எஉ—ஆவதுபாட்டிற் காண்க.

16. இங்ஙனமாக அரசனிடு வேள்விமுதலிய பல வறங்களையுஞ் செய்துபுண்ணியமும் புகழும்பெற்று நெடுங்காலங்கழித்திருக்கின்ற அரசன் மறந்துபோய்த் தவஞ்செய்தல்வேண்டுமென்பர். இராமாயணம் அயோத்திய காண்டம் மந்திரப்படலத்தில்,

"ஆதலாலிராமனுக்கரசைநல்கியிப்
பேதைமைத்தாய்வரும்பிறப்பைநீக்குவான்
மாதவந்தொடங்கியவனத்தைநண்ணுவேற்
கியாதுநுங்கருத்தெனவினையகூறினான்"

என மந்திரிமுதலானவரைநோக்கித் தயரதமகாராசன்கூற, உடனே வசிட்டமகாமுனிவர் "புண்ணியந்தொடர்வேள்விகள்யாவையும்புரிந்த—வண்ணலேயினியருந்தவமியற்றவுமிக்கும்" என வுடன்பட்டுரைத்த வாறு காண்க.

17. இவ்வரசிபலாராய்ச்சியி லெடுத்துக் கூறிய நன்மைகளெல்லா மமைந்து நம்மைக் காத்தல்செய்திருக்கின்ற ஐந்தாம்ஜார்ஜ் மன்னர் பெருமான் நீடூழிவாழ்க. சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,

குமரிக்கருமணல்.*

பீடிகை.

"ஐயக் கடிஞை கையி னேந்தி
மையற சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணர் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி
யுண்டொழி மிச்சிலுண் டோடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளுங் காவலன்". தங்கிய

"சிந்தா விளக்கின் செழுங்கலை நியமம்" விளங்கிய

மதுரைமாநகரில் வளரும் தமிழ்ச்சங்கப் புலவீர்காள்! "மிக்கசெல்வத்து விளங்கியோர்வாழும் தக்கணமதுரை" யென அக்காலத்துச் சிறப்பு வாய்ந்ததுபோலவே இக்காலத்தும் முதன்மைபெறமுயன்றுவரும் மதுரைவாசிகளே! கல்வி ஒருங்கே உருக்கொண்டுவந்ததுபோல் இவண் சூழுமியிருக்கும் உங்கள்முன்பு என்சிற்றறிவுக்கெட்டிய சிலவிஷயங்களை எடுத்துச்சொல்லும்பொருட்டு வந்தேன்.

நான் உங்களுக்கு விளக்கிக்காட்டுவதாகக் குறித்துவந்த விஷயம் "குமரிக்கருமணல்" என்பது.

குமரி—ஒருநதி

சுத்தநூதிகள் ஏழிற் குமரி ஒன்று என்பதும், அது பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டுக்குத் தெற்கெல்லையாக இருந்தது என்பதும் பழையநூல்களிலிருந்து அறியக்கிடக்கின்றன. கன்னி, குமரி என்ற பெயர்களினாலே அது என்றும் அழியாத்தன்மையுடையது என்று தெரிகிறது. அத்தன்மையினாலேதான் அது பலவூழிகள் கழிந்தும் இன்றளவும் இலங்கிநிற்கின்றதுபோலும். இப்போது அது ஒருநதியைக் குறிக்காமல் இந்தியாவின் தெற்குக்கோடியிலுள்ள மூனைப்பாகத்தைக் குறிக்கின்றது.

---

* இது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இருபதாம்வருடக் கொண்டாட்டத்திற் படிக்கப்பட்டது.

ஒரு பழையகதை

இக்காலத்தில் ஹிந்துக்களாகியநாம் எப்படிக் கங்காஸ்நானம் செய்து நம் பாவங்களைப் போக்கலாம் என்று நினைத்துவருகிறோமோ அதுபோலவே முன்காலத்திற் கங்கைக் கரையில் வசித்தவர்கள் குமரியாற்றிலாடித் தம் பாவங்களை ஒழிக்கலாமென்று நினைத்துவந்ததாகத் தெரிகிறது. மணிமேகலையில் 'ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை'யில்,

"வார ணுரியோர் மாமறை முதல்வ
ஞரண வுவாத்தி யரும்பெறன் மனைவியான்
பார்ப்பார்க் கொவ்வாப் பண்பி னெழுகிக்
காப்புக்கடை கழிந்து கணவனை யிழந்தே
னெறிபய முடைமையி னிரியன் மாக்களொடு
தெற்கட் குமரி யாடிய வருவேன்"

என்று சாலி தானெழுகிய தீயவொழுக்கத்தாற் கணவனைப் பிரிந்து கன்னியாகுமரிக்கு நீராடச்சென்ற விவரத்தைத் தெரிவிக்கிறாள். இன்றும் நாம் குமரிக்கடலாடிவருதலை விசேஷமாகவே மதித்துவருகிறோம். கோடைநாட்களின்வெப்பத்தைத் தணித்துக்கொள்ளவும் அங்கே கனவான்கள் போய்வருவதுண்டு.

அரிசிமணற்கதை

இக்குமரிக்கரையின்கண், பார்வதியின் பல அவசரங்களுள் ஒன்றாகிய பகவதி தேவிக்கு ஒருகோயி லுள்ளது. அக்கோயிலைச்சுற்றிப் பலவர்ணங்களையுடைய மணல் பரந்துகிடக்கின்றது. இம்மாதிரியான மணல் திருவனந்தபுரஸமஸ்தானத்திற் பல இடங்களிலும் திருநெல்வேலியிலும் கீழ்கடற்கரையோரமாய் விசாகபட்டினம்வரை பல இடங்களிலும் கிடைப்பதாகச்சொல்லப்படுகிறது. குமரிமுனையிலுள்ள மணல் அரிசிபோன்ற உருவத்தையுடையதாகக் காணப்படுகிறது. முற்காலத்திற் சிவபெருமான் அத்தலத்திற் பார்வதிதேவியை மணப்பதாக இருந்ததாகவும், அதன் நிமித்தம் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டனவாகவும், அங்குவருபவர்களுக்கு அன்னமளிப்பதற்காக ஏராளமாய் அரிசி வந்திருந்ததாகவும், கடைசியிற் கல்யாணம் நடக்காமற்போகவே வந்த அரிசியெல்லாம் மணலாய் மாறிப்போனதாகவும், அவ்வரிசியே இக்காலத்தில் அரிசிமணல் என வழங்கப்படுவதாகவும் ஒரு புராதனக்கதை

யுண்டு. அது எவ்வாறுயினுமாகுக. இற்றைஞான்று அது புத்திக் கூர்மையுள்ள ஒருசாராருக்கு அபரிமிதமாக அன்னமளிப்பதை நாம் அறிகிறோம். அது எப்படியென்பதை எடுத்துச்சொல்லுகிறேன்.

பழையகாலத்து வெளிச்சம் உண்டாக்கும் வழிகள்.

ஆதிகாலந்தொட்டு மனிதர்கள் இருளடைந்த இடங்களில் வெளிச்சம்பெறுவதற்குப் பலவுபாயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நவீன காலத்தில் நாகரிகம் மலிந்த நம்நகரங்களில் தெருக்களிலும் பொதுத் தலங்களிலும் செல்வர்வீடுகளிலும் ஒருபொத்தானை அழுத்துவதினாலேயோ அல்லது ஒருகுமிழைத் தாழ்த்துவதினாலேயோ ஜனங்கள் மின்சார ஒளியை எழுப்பி இருளை அகற்றுகிறார்கள். இவ்வளவு சௌகரியம் பண்டைக்காலத்திற் கிடையாது. முற்காலத்தில் நம்நாடுகளிற் சுழுந்து நாணல் முதலியவைகளை எரித்தோ, அல்லது பந்தங்கள்கட்டி எண்ணெயிற் றோய்த்து எரித்தோ, வெளிச்சந்தோன்றச் செய்தார்கள். பெரும் பாணாற்றுப்படையில்,

> "அந்து ணவிர்புகை கமழக் கைமூயன்று
> ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
> செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின்" அதாவது,

"தீக்கடைகோலாலே அழகிய நுண்ணியதாய் விளங்கும் புகை மூற்படப் பிறக்கும்படி. கையாலே கடைந்துகொண்ட சிவந்தநெருப்பினையுடைய கடைக்கொள்ளியாற் றூளாயிட்ட காயத்தூளினையுடைய குழலாலெழுப்பின" என்று தீ பெறுகிறவழியைச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் குறிஞ்சிப்பாட்டில்,

> "..... வளமனைப்
> பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
> யந்தி யந்த ணரையரக் கானவர்
> விண்டோய் பணவை மிசைஞெகிழி பொத்த" அதாவது,

"செல்வத்தையுடைய மனைகளிற் பொலிவுபெற்ற தொடியினையுடைய மகளிர் விளக்கை அவ்விடத்தே கொளுத்தி அந்திக்காலத்திற் றொழிலை நிகழ்த்த, அக்காட்டில் வாழ்வார் விண்ணைத் தீண்டுகின்ற பரணின்மேலே தீக்கடைகோலாலே நெருப்பைப் பிறப்பித்து எரிப்ப" என்று சொல்லப் பட்டிருக்கிறது. அக்காலத்துப் பெண்டிர்கள் செல்வச்செருக்காற் றம்

குலத்திற்குரிய நற்குணங்களைக் கைவிடாது, தாமே விளக்கைக்கொளுத்துவதாகவும், அதனுடன் நில்லாமல் அந்திக்காலத்துத் தொழிலாகிய விளக்கை நமஸ்கரித்தலைச் செய்துவந்ததாகவும் அறிகிறோம். பின்னர், சக்கிமுக்கிக்கல்லும் பஞ்சும் எஃகும் உபயோகப்பட்டுவந்தன. இதே மாதிரிதான் ஐரோப்பாவிலுள்ள மேல்நாட்டுத் தேசங்களிலும் இருந்துவந்தது. ஆனால் அவர்கள் படிப்படியாய் மேன்மேலும் பதார்த்தங்களின் குணங்களை ஆராய்ந்து பலவழிகளிலும் சுகவாழ்வுக்கு யோக்கியமான சாதனங்கள்பலவற்றை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

மேனாடுகளில் வெளிச்சமுண்டாக்கும் பழையவழிகள்.

இங்கிலண்டு, ஜெர்மனி முதலிய தேசங்களிற் பூமியைவெட்டி, வெகு ஆழத்தில் அகப்படும் கனிகளிலிருந்து நிலக்கரி என்ற கரிவஸ்துவை வெளியிலெடுத்து, அதை காம் விறகுக்கட்டைகளை அடுப்பில் உபயோகிப்பதுபோல, உபயோகித்துவந்தார்கள். பின்னர், அந்நிலக்கரியைப் பெரியகங்காளங்களில் இறுக்கி அடைத்துக் காய்ச்சுவதினால் நன்றாக எரியும் ஒருவாயுவையும், கீல் அல்லது தார் எண்ணெய்போன்ற சில திரவபதார்த்தங்களையும், கடைசியாகக் கங்காளத்தில் நல்ல ஒரு கரியையும் பெறலாமென்பதைக் கண்டார்கள். இவ்வாறு கிடைக்கும் வாயுவை அபரிமிதமாக உண்டுபண்ணித் தெருக்களிலும் பொதுத்தலங்களிலும் வெளிச்சமுண்டாக்குவதற் குபயோகித்தார்கள். இதனாலுண்டாகும் பிரகாசம் மிகுதியாக இருந்ததனால் ஜனங்களும் அதைச் சிலாகித்துச் சாதனமாக்கிக்கொண்டார்கள். இந்த நிலக்கரிவாயுவை இன்னமும் உண்டாக்கி உபயோகித்துவருகிறார்கள். கருமையுள்ளதும் நல்வாசனையில்லாததுமான அந்தத் தார் எண்ணெயிலிருந்துதான் நம் கண்ணைக்கவரும் பலவர்ணமுள்ள சாயச்சரக்குகளைப் பேதித்து உண்டாக்குகிறார்கள். நம் ராஜதானியில் நிலக்கரி அருமையாய்த்தான் கிடைக்கிறது. அதனால் நம்முடையபிரதேசங்களில் இந்தமாதிரியான நிலக்கரிவாயுவை உபயோகிப்பதில்லை. ஆனால் நம் கலாசாலைகளில் ரசாயனப் பயிற்சி செய்வதற் கனுகூலமாக மண்ணெண்ணெயைப் பலமாகக்காய்ச்சி உடைத்து ஒரு எரியும்வாயுவாகமாற்றி அதை வெளிச்சத்துக்கும் சூடுண்டாக்குவதற்கும் உபயோகித்துவருகிறார்கள்.

மேனாட்டார்களின் புதியவழிகள்.

மேற்சொல்லிய வாயுக்களைக் காற்றுடன் கலவாமல் எரித்தால், நல்ல பிரகாசமுள்ள வெளிச்சம்கிடைக்கும். இந்த வெளிச்சத்தின் உஷ்ணநிலை

1300 சதாம்ச டிகிரியாகும். (கொதிக்கிற ஜலத்தின் உஷ்ணநிலை 100 டிகிரியாகும்) ஆனல், காற்றுடன் கலக்கச்செய்து எரித்தால், வெளிச்சம் அறவேயொழிந்து பிரகாசமில்லாதஒளி கிடைக்கும். இதன் உஷ்ண நிலை 1850 சதாம்ச டிகிரியாகும். இந்த இரண்டுவித ஒளிகளும் மிகுதி யாக உபயோகிக்கப்பட்டுவருகின்றன. இந்த இரண்டு ஒளிகளின் உஷ்ணநிலையிற் பதார்த்தங்கள் என்ன என்ன மாறுதல்களை அடைகின் றன என்பதை ரசாயனிகள் ஆராயும்வழக்க முண்டு. 1884ம் வருஷத் தில் ஜெர்மனிதேசத்திலுள்ள ஹெய்டல்பர்க் நகரத்தில் வசித்த பிரபல கீர்த்திபெற்ற புன்சன்சாஸ்திரியின் சோதனைச்சாலையில் ஆயிர் வான் வேல்ஸ்பேக் என்ற அறிஞர் தம் ஆராய்ச்சிகளைச் செய்துவந்தனர். ஒருசமயம் இவர் முன்சொல்லிய பிரகாசமற்ற ஒளியிற் சில உலோகங் களின் பஸ்மங்களை (ஆக்ஸிஜங்களை) க் காய்ச்சி ஆராய்ந்தனர். முக்கிய மாகச் சில அபூர்வலோகங்களின் ஆக்ஸிஜங்களைக் காய்ச்சிப்பார்த்தனர். கண்ணைப்பறிக்கும்படியான பிரகாசம் ஏதோ ஒரு ஆக்ஸிஜம் காயும் போது தென்பட்டது. உடனே தம் புத்திக்கூர்மையினல் அதன் நுட் பங்களைப் பலபட ஆராய்ந்தனர். ஆறு ஏழுவருஷகாலம் "கருமமேகண் ணுயினு"ராக அந்த ஆராய்ச்சியிற் செலவழித்துத் தாம் கண்டுபிடித்த நுட்பத்தை எல்லாருக்கும் பயன்படுத்தும்படியானவழியிற் பரிசீலனம் பண்ணினர். இப்பொழுது வருஷாவருஷம் அவர் ஏற்படுத்திய "மாண் டில்" (30) முப்பதுகோடி செலவாகின்றனவென்றல் அதன் அருமை பெருமைகளை என்னென்று சொல்வது! இதுவன்றே பேருபகாரம்!! தமக்குக்கிடைத்த நுட்பஅறிவை நுண்ணிதிற்பெருக்கி எல்லாநாட்டின ருக்கும் உபயோகமாகும்படி செய்ததிறமை என்னே என்னே!!! நம் ஜில்லாக்களிற் குக்கிராமங்களிற்கூட இவ்வரியபண்டிதரின் செய்வினைத் திறத்தாலேற்பட்ட 'மாண்டில்' அழகாகப் பிரகாசிக்கும் "காஸ்லைட்", அல்லது "வாஷிங்க்டன்விளக்கு" என்பன பட்டினப்பிரவேச காலங்களில் உலாவத்தலைப்பட்டுவிட்டன. பழையகாலத்துத் தீவர்த்திகளும் சக் கரத்தீவர்த்திகளும் பந்தங்களும் எங்கேயோ பறந்தோடிவிட்டன. கல்யாணக்கொட்டகைகளுக்கும் மகாநாடுகள்கூடும் பெரியமண்டபங்களுக் கும் இவைகளே வாவழைக்கப்படுகின்றன. பழையனகழிந்து புதியன புகுந்தேவிட்டன!! நாமும் தெரியாமலே அதற்கு உட்பட்டு நடக்கின் றோம். ஒவ்வொருவருஷமும் முப்பதுகோடி மாண்டில்கள் உபயோகிக் கப்படுகின்றனவென்றேன். மாண்டில்ஒன்று அரைரூபாவாக விற்கப்படு

கிறது. ஆகவே இந்த மாண்டில்செய்யும் தொழிலாளருக்குப் பதினைந்து கோடிரூபாய் விலைமுதலாகவேண்டும். இது சென்னைராஜதானியின் நிலத்தீர்வையின் முக்காற்பங்காய்விட்டது.

மாண்டில்செய்யும்விதம்

இந்தமாண்டில் என்பது கொசுவலைபோன்ற கண்களையும் சோளக் கதிர்போன்ற குழலுருவத்தையும் உடையது. பருத்திநூலால் இம் மாதிரி உருவம் முதலில் நெய்யப்படுகிறது; பிறகு தோரியம் நைட்ரேட், சீரியம் நைட்ரேட் என்ற வஸ்துக்கள் கரைந்த ஒரு திரவத்தில் அந்நூலாடையை ஊறவைத்து உலர்த்துகிறார்கள். பின்னர் அதை இலேசாகக் கொளுத்திவிடுகிறார்கள். நூல் எரிந்துவிடுகிறது. நூலில் ஊறி உலர்ந்திருக்கும் தோரியம் நைட்ரேட்டும் சீரியம்நைட்ரேட்டும் தோரியம் ஆக்ஸிஜும் சீரியம்ஆக்ஸிஜும் என்ற பஸ்மங்களாக மாறி உருக்குலையாமல் முன்பிருந்த நூலாடைமாதிரியே நிற்கின்றன. பிறகு இது நன்றுய்க் காய்ச்சப்பட்டு உறுதிப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்நிலையில் இதைக் கையால் தொட்டு எடுத்தோமானால், ஒருநிமிஷத்தில் நொறுங்கிப் பொடியாய்விடும். ஆகையினால் அந்தப் பஸ்மஉருவம் கிடைத்தவுடன் அதைக் கல்லோடியன் என்ற ஒரு திரவத்தில் நனைத்து எடுக்கிறார்கள். உலர்ந்தவுடன் அது ஒரு வெண்மையான மாண்டிலாக ஆய்விடுகிறது. இந்த நிலையில்தான் இது கடைகளில் விற்கப்படுகிறது. இதை ஒரு தரம் வாஷிங்டன் விளக்கில் மாட்டி எரித்துவிட்டாற் பிறகு அதினின்றும் அதைப் பிரித்து எடுக்கக்கூடாது. அப்படி எடுத்தால் உடனே அது நொறுங்கிப் பொடியாய்விடும். கல்லோடியன் எரியக்கூடியவஸ்து; அது எரிந்து மறையவே, பழையபஸ்மந்தான் மிஞ்சுகிறது; அதைத் தொட்டாற் பொடியாய்விடும். இந்தப் பஸ்மந்தான், பிரகாசமற்ற, அதிக உஷ்ணநிலையிலுள்ள ஒளியின் ஊடேவர, மிகுதியாகக் காய்ச்சப்பட்டு பழுக்கப்பழுக்கக் காய்ச்சின இரும்புபோல் வெண்மையான வெளிச்சத்துடன் "சூரியன்விளக்கு" எனப் பிரகாசிக்கின்றது.

மாலேசைட்மணல்.

முப்பதுகோடி மாண்டில்களும் செய்வதற்குத் தோரியம் ஆக்ஸிஜும் சீரியம் ஆக்ஸிஜூமும் இன்றியமையாதன. தங்கச்சுரங்கம் கண்டுபிடிப்பதற்கு எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பூமிப்பரப்புமுழுமையும்

தேடிப்பார்ப்பதுபோல, மேற்சொல்லிய பஸ்மங்கள் கிடைக்கும் இடங்களைத் திரைகடலோடியும் கண்டுபிடிக்க முயன்றார்கள். அருமையுடைத்தென்று அசாவாமை வேண்டும். இவ்வாக்ஸிஜங்கள் "மானேஸைட்" என்ற மணலில் அகப்படுகின்றன. ஆகவே இந்தமானேஸைட்டுக்கு பெரும் கிராக்கி வந்துவிட்டது. முதன்முதலாக இந்த மானேஸைட் நார்வே, ஸ்வீடன் என்ற ஐரோப்பியதேசங்களிற் கிடைத்தது. இவ்விடங்களிலிருந்துவந்த மானேஸைட்டிலிருந்து கிடைத்த ஆக்ஸிஜங்களை வைத்துக்கொண்டுதான் ஆயிர் வான் வேல்ஸ்பாக் என்ற அறிஞர் தம் ஆராய்ச்சியை நடத்தினர். ஆனால் அவ்விடங்களில் இது அபரிமிதமாகக்கிடைக்கவில்லை. பிறகு அமெரிக்காதேசத்து யூனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள கரோலினை என்ற ஸ்தலங்களிற் கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தலத்து மானேஸைட் அவ்வளவு சாரமுள்ளதாகத் தோன்றவில்லையாயினும் வேறுவகையில்லாததினாலே அதை உபயோகித்துவந்தார்கள். பின்னர்த் தென்அமெரிக்காவிலுள்ள பிரேஸில் நாட்டிற் கண்டுபிடிக்கப்பட்டது. இது முன்னதை விட நல்ல குணம்வாய்ந்துள்ளது. மிகுதியாக அகப்படக்கூடியது. ஆகவே 'கரோலினை' மானேஸைட்டைப் புறக்கணித்துவிட்டார்கள். மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி இரந்தழைத்தல் அவசியமன்றன்றே ? 1906-ம் வருஷம்முதல் பிரேஸில் மானேஸைட்டைத்தான் தோண்டியெடுத்து உபயோகித்தார்கள். பின்னர் இம்மாதிரியான மானேஸைட் மணல்கள் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் மலையாளத்திலும் அகப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. பிரேஸில் மானேஸைட்டைவிட மலையாளம் மானேஸைட் நயமாக இருக்கிறதாம். ஆகவே மேலேட்டார் இதை மிகுதியாக வேண்டஆரம்பித்தார்கள். இதைத்தான் நான் குமரிக்கருமணல் என்பது.

ஜேர்மானியர்முயற்சி

இக்கனிஜங்களைத் தேடி உபயோகிப்பதில் ஒரு அபூர்வ விஷயம் கவனிக்கத்தக்கது. ஜேர்மனியில்தான் முதன்முதல் மானேஸைட்டிலடங்கியுள்ள பலவஸ்துக்களையும் பிரித்தெடுக்க அறிஞர்கள் முயன்றார்கள். அவைகளின் குணங்களை ஆராய்ந்து அக்குணங்களுக்குத்தக்கபடி உபயோகிக்க யத்தனித்தார்கள். உலகத்திற் பல இடங்களில் அகப்படக்கூடிய மானேஸைட் பூராவும் தமக்கேகிடைத்தால் நல்லது என்று

நினைத்தார்கள். அங்கங்கே பொறுக்கியெடுத்த அறிவாளிகளான தூதர் களை அனுப்பி அவ்விடங்களில் அகப்பட்ட மாஞ்சைசட் கருமணலைத் தம்மூர்களுக்கு அனுப்பச்செய்தார்கள். அக்காலத்தில் ஜெர்மானியரசா யனிகளுக்குமட்டும் மாஞ்சைசட்டிலுள்ள வஸ்துக்களைப் பிரித்தெடுக்கு மாற்ற லிருந்தது. மற்றத்தேசத்து ரசாயனிகள் இதுவிஷயத்தில் அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையினாலே நாளடைவில் உலகத்தி லுள்ள மாஞ்சைட்மணலெல்லாம் ஜெர்மனிக்கே ஏற்றுமதிசெய்யப் பட்டது.

மலையாளமாஞ்சைட்.

மலையாளத்திலுள்ள மணலும் அங்கேதான் போயிற்று. 1911-ம்ஞ்ப முதல் குமரிமுனைப்பக்கத்திலுள்ள மணலுக்கெல்லாம் ஜெர்மானியர்கள் முக்கியகுத்தகைதார்களாய் ஏற்பட்டுவிட்டார்கள். அந்தவருஷத்திலும் அடுத்தவருஷத்திலும் 3200டன் மணல் ஹாம்பர்க் துறைமுகம்போய்ச் சேர்ந்துவிட்டதாம். குமரிப்பக்கங்களிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் ஏற்றுமதியான மாஞ்சைசட் கருமணலின் நிறையும் அதன்விலையும் கீழேகாட்டப்பட்டிருக்கின்றன:—

ஏற்றுமதி விவரங்கள்.

வருஷம்.	நிறை.		விலை.	
1911	832	டன்	360660	ரூபா
1912	1135	,,	621285	,,
1913	1235	,,	630180	,,
1914	1186	,,	621165	,,
1915	1108	,,	498570	,,
1916	1292	,,	565710	,,
1917	1940	,,	847335	,,
1918	2117	,,	882285	,,

மாஞ்சைசட்டின்விலை.

மேற்காட்டிய அளவில் முக்காற்பங்கு மலையாளத்திலிருந்து ஏற்று மதியானதாகவும் அதன் விலை முப்பத்துமூன்றுலக்ஷரூபாவாக மதிக்கப் பட்டதாகவும் சர்க்கார் அறிக்கையிற் காணப்படுகின்றது. ஆனால் 1914-ம் வருஷத்தில் ஐரோப்பாவிற் கொடுமான மகாயுத்தம் ஆரம்பிக்கவே,

இங்கிலாண்டுதேசத்தார்களும் அமெரிக்காவிலுள்ள யூனெடெட்ஸ்டேட்ஸ் தேசத்தார்களும் இம்மணலை ஏற்றிக்கொண்டுபோக ஆரம்பித்துவிட்டார்கள். 1910ம் வருஷத்துக்குமுன்பு இக்கருமணலைக் கவனிப்பார் கிடையாது. இப்பொழுது ஒருசாக்குமணலுக்கு முப்பது, முப்பத்தைந்து ரூபா விலையாகிறது. ஒருசாக்கு அரிசியின்விலைக்கு இரண்டுபங்காய் விட்டது.

மாணைசைட்டின் வியாபாரம்.

இன்னும் ஒருவிதமாய் இதைக் கணக்குப்போட்டுப் பார்ப்போம். ஒருடன் மாணைசைட்டிலிருந்து தொண்ணூராயிரம் மாண்டில்களுக்கு வேண்டிய தோரியம் ஆக்ஸிஜம் சீரியம் ஆக்ஸிஜங்களைச் சேகரித்துவிடலாகும். தற்காலக்கிரயப்படி, ஒருடன் மாணைசைட்மணல் 675 ரூபாவாகவும் 90000 மாண்டில்கள் 45000 ரூபாவாகவும் மதிக்கப்படுகின்றன. இவை செய்வதற்கு வேண்டிய மற்றவஸ்துக்களுக்கும் சாதனங்களுக்கும் இருபதினாயிரம் ரூபா வேண்டுவதாகவைத்துக்கொண்டாலும் 1-டன் மணல்விலைபோகப் பாக்கி 24000ரூபா மற்றநாடுகளுக்குப் போய்விடுகிறது. மற்றக் கைத்தொழிற் சாமான்களை நாம் எப்படி அவசியமாக மதித்து நம் நாடோடி வாழ்நாள்களில் ஏராளமாக வாங்கி மற்றநாட்டுத்தொழிலாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் கணக்கற்ற லாபத்தைக் கொடுத்துவருகிறோமோ, அதேமாதிரிதான் இம் மாண்டில் வாங்குவதிலும் செய்துவருகிறோம். வெண்ணெயைவைத்துக்கொண்டு நெய்க்கு அலைவார்களுண்டோ என்று சொல்லுவார்கள். ஆங்கிலமொழியைக் கற்று மேனாட்டு நாகரிகத்தையும் சாஸ்திரஞானத்தையும் நூறு வருஷமாக நாம் பெற்றுவந்தபோதிலும் நம்மிடமுள்ள வஸ்துக்களிலிருந்து நாம் அத்தியாவசியமாக நினைத்து வாங்கி உபயோகித்துவரும் சாமான்களை நாமே செய்துகொள்ள இன்னும் அசக்தர்களாயிருப்பது மிகவும் பரிதபிக்கத்தக்கதே.

நிற்க; மாணைசைட் கருமணலில் தோரியம் ஆக்ஸிஜம்தவிர வேறு சிலவஸ்துக்களுமிருக்கின்றன. மாண்டில்கள்செய்வதற்கு முக்கியமாய்த் தேவையானது தோரியம் ஆக்ஸிஜமும் ஒருசிறிது சீரியம் ஆக்ஸிஜமுமே வேண்டியவை. ஆகவே மாணைசைட்டின் மில்லி அதில் அடங்கியிருக்கும் தோரியம் ஆக்ஸிஜத்தின்பங்குக்குத் தகுந்தபடி ஏற்படுகிறது. அமெரிக்காவிலுள்ள பிரேஸில்தேசத்தில் அகப்படும் மாணைசைட்டில் 100-க்கு ஐந்து

அல்லது ஆறுபங்குக்குமேல் தோரியம் ஆக்ஸிஜும் கிடையாது; ஆனல் குமரியில் அகப்படும் மானேசைட்டிலோ நூற்றுக்கு 14 பங்குவரையிலும் தோரியம் ஆக்ஸிஜும் கிடைக்கிறதாம். ஆகவே குமரிமணலின் மேன்மையும் நயமும் வெளிப்படையாகின்றன. இந்தத் தோரியம் ஆக்ஸிஜத்தோடு நூற்றுக்கு அறுபதுவீதம் சீரியம் முதலிய லோகங்கள் சேர்ந்துகிடக்கின்றன. ஆகவே தோரியத்தைப் பிரித்து எடுக்கும் தொழிற்சாலைகளிற் சீரியமும் மிருதியாகக் குவிந்துவிடுகின்றது. இதற்கும் ஒரு உபயோகத்தைக் கண்டுபிடித்தார்கள்.

ஆயிர் வான் வெல்ஸ்பாக் என்ற ரசாயனஅறிஞர் ஆறு, ஏழுவருஷம் சிரமப்பட்டுத் தோரியஆக்ஸிஜத்தையும் சீரிய ஆக்ஸிஜத்தையும் கலக்கவேண்டியவிகிதத்தைக் கண்டுபிடித்தார். கொசுவலைபோலப் பின்னிய நூலாடையிற் கேவலம் தோரிய ஆக்ஸிஜும் மாத்திரமிருந்தால், அது அவ்வளவு பிரகாசத்தைக் கொடுப்பதில்லை. அதனுடன் சீரிய ஆக்ஸிஜத்தையும் கலக்கவேண்டியிருக்கிறது. எந்தவீதத்திற் கலப்பது என்பதைத் தெரியப் பன்னெடுநாள் அவர் முயன்றுவந்தனர். சிறிது சிறிதாக இதையும் அதையும் சேர்த்துச் சோதித்துக் கடைசியில் தோரியம் ஆக்ஸிஜும் 99 பங்கும் சீரியம் ஆக்ஸிஜும் ஒருபங்குமாக விருந்தால்தான் சூரியவெளிச்சத்திற்கொப்ப வெண்மையானஒளி கிடைக்கிறதென்பதைக் கண்டுகொண்டார். வேறு எந்தவீதத்திற் சேர்த்தாலும் இவ்வளவு பிரகாசம் கிடைப்பதில்லை. இந்த வீதந்தான் இன்றளவும் உபயோகிக்கப்பட்டுவருகிறது. இவரது ஊக்கமும் விடாமுயற்சியும் பொறுமையும் மிகவும் பாராட்டற்பாலன.

இன்னும், சீரியஆக்ஸிஜும் ஏராளமாகச் சேகரிக்கப்படுகின்றது என்றேன். முதலாவது அந்த ஆக்ஸிஜத்திலிருந்து அதன்மூலப் பொருளைக் கிரகித்தார்கள்; அது சீரியமென்பது. அது ஒரு மிருதுவான லோகம். சீக்கிரத்தில் தேயக்கூடியது. ஆனல் அது ஒரு இரும்பு அரத்துடன் உரசும்போது தீப்பொறிகள் பறக்கத்தெரிந்தன. உடனே இதை உபயோகத்துக்குக் கொண்டுவர வழிகள் தேடப்பட்டன. இந்தச் சீரியத்தைச் சுத்தஇரும்புடன்சேர்த்துக் காய்ச்சினல் ஒருமிசரம் கிடைக்கின்றது. இதை ஆங்கிலத்தில் அல்லாய் என்பார்கள். இந்த அல்லாய் மிருதுவானதல்ல; தேயும் குணத்ததுமல்ல; ஆயினும் ஒரு அரத்தில் உரசும்போது தீப்பொறிகள் நிரம்பக் கொடுக்கின்றன,

ஆகவே இந்த அல்லாய்களைத் தீக்குச்சியின்றிப் புகைச்சுருட்டுப்பற்ற வைப்பதற்கும் எரியும் வாயுக்களை எரிப்பதற்கும் சௌகரியமானகருவி யாகச் செய்து இப்பொழுது விற்கிறார்கள். இது முந்திய சக்கிமுக்கிக் கல்லையும் எஃகையும் ஒருவாறு ஒத்திருக்கிறது. ஆனால், காலத்துக் கேற்ப நாகரிகமுள்ளதாய்த் தோற்றுகிறது.

இந்தத் தோரியம், சீரியம், மற்றுமுள்ள சில அருமையானலோகங் கள், ஆகிய இவை மாண்டில்தொழில் நல்ல விருத்தியையடைந்துபிற்பாடு, ஏராளமாய்ச் சோதனைக்கு அகப்பட்டத்தொடங்கின. இந்த மாண்டில் ரசா யனத்தொழில் ஏற்பட்டதனாலே தங்கள் சோதனைச்சாலைகளில் ஆராய்ச்சி செய்வதற்கு அனுகூலமாகப் பல அரியலோகங்கள் ரசாயனிகளுக்குக் கிட்டின. இது ஒரு தொழிலானது கேவலம் சாஸ்திரத்துக்குச் செய் யும் பேருதவிக்கு ஒரு சான்றாகும். அதனாலேதான் இக்காலங்களிற் சர்வ கலாசங்க நிபுணர்களும் உயர்ந்த காலேஜ் நிபுணர்களும் கைத்தொழிற் சாலை நிபுணர்களுடன் அடிக்கடி அளவளாவி ஒருவருக்கொருவர் துணை யாய்நின்று ஆராய்ச்சிசெய்யவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது.

தற்காலத்தில் ரேடியம் என்ற ஒரு அபூர்வலோகம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அது அல்லும் பகலும் அனவரதமும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. அதினின்றுகிடைக்கும் ஒரு சேர்க்கைப்பொரு ளின் உதவியைக்கொண்டுதான் "ரேடியம்கடியாரம்" என்பதைச் செய்கி றார்கள். இந்த ரேடியத்தைப் பலவிதத்திலும் ஒத்திருக்கிற மீசோத் தோரியம் என்ற ஒருவஸ்து மானேசைட்மணலிலிருந்து தோரியத் துடன் இறக்கப்பட்டுவருகிறது. ஆனால் இதனுடைய அளவு நிரம்பக் குறைவாகத்தான் இருக்கிறது. 1120டன் மானேஸைட்மணலிலிருந்து ஒருஅவுன்ஸ் மீசோத்தோரியம் கிடைக்கிறதாம். இது மலையைக்கிள்ளி எலியைப்பிடிப்பதுபோலிருக்கிறது. இந்த ஒருஅவுன்ஸின்விலை ஐம்பது லக்ஷ ரூபாவாகிறது. பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும் இவை களைச் சாஸ்திர அறிஞர்கள் செய்துவருகிறார்கள். இவை தாராளமாய் உலகத்திலுள்ள ஜனங்களின் உபயோகத்துக்குவந்தபாடில்லை. மூயற் கொம்பு என்பதுபோல இவைரசாயன அதிசயங்களாகவும்அற்புதங்களாக வும் விளங்கிவருகின்றன. இன்று அற்புதப்பொருளாக இருப்பவை நாளை நாடோடிப்பொருளாகவருவது அனுபவமூலமாயும் சரித்திரமூலமாயும்

அறியப்படுகிறது. இவை, ஒரு சிறிது, ஜனங்களின் சிலவியாதிகளின் சிகிச்சையின்பொருட்டும் உபயோகப்படுகின்றனவாம்.

இவற்றால், குமரி முற்காலத்தில் தோன்றியவிவரத்தையும், இக் காலத்தில் விளங்கும் விவரத்தையும், அதன் சமீபத்திலுள்ள கருமணல் என்ன அமைப்பை உடையதென்பதையும், என்னகுணங்களையுடைய தென்பதையும் அதிலிருந்து "கிட்சன்" விளக்குமுதலியவைகளுக்கு அத்தியாவசியமான மாண்டில்கள் எப்படிச் செய்யப்படுகின்றனவென்ப தையும், அதன்வீலை நயம் மேன்மை முதலிய தாரதம்மியங்கள் எப்படிப் பட்டனவென்பதையும், அது சாஸ்திர அறிஞர்களுக்கு எப்படி உபயோக மாகின்றதென்பதையும் ஒருவாறு தெரிந்துகொண்டோம்.

பழைய தமிழ்க்காவியங்களிலும் நூல்களிலுமுள்ள விஷயங்களையே திரும்பத்திரும்ப வருஷாவருஷம் சொல்லிக்கொண்டுவருவதோடு இது வரையும் தமிழில்வராத சில புதிய மேனாட்டு அறிவு விஷயங்களையும், எடுத்துச்சொல்லவேண்டும் என்ற அவாவுடன் இவ் வுபந்யாசத்தை எழுதிப் படிக்கமுயன்றேன். புதிதுபுதிதாகத்தோன்றிவரும் சௌகரி யங்களை நாம் அனுபவிக்க எப்படிப் பின்வாங்குவதில்லையோ, அதேமாதிரி அப் புதுச்சௌகரியங்களுக்கு அடிப்படையாயிருக்கும் மேனாட்டுவழி க்களையும் சூழ்ச்சிகளையும் கற்றுத் தமிழ்மொழியாகிய நம் தாய்மொழியில் தொகுத்து எழுதி, இன்னும் ஆங்கிலம் வாசிக்கத்தெரியாமலிருக்கும் லக்ஷக்கணக்கான நம் சகோதரஜனங்களுக்குத் தெரியும்வண்ணம் நாம் முயற்சிக்கவேண்டும். அதாவது மேனாட்டுச் சாஸ்திர அறிவுநூல் விஷயங்களெல்லாம் தமிழில் மொழிபெயர்த்தோ அல்லது முதனூலாக எழுதியோ நாம் வெளியிடவேண்டும். இதுவே தற்கால அமைப்புக்கு இயன்ற சாதனமாகும். பொருளில்லாருக்கு இவ்வுலகமில்லை; அருளில் லாருக்கு அவ்வுலகமில்லை. பொருளைச் சம்பாதித்தே அருளைச் சேகரிக்க வேண்டும். "இல்லாரை யெல்லாருமெள்ளுவர் செல்வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு" என்பது கேவலம் வட்டுச்சுரைக்காயன்று.

"ஈட்டலுந்துன்பமற்றீட்டியவொண்பொருளைக்
காத்தலுமாங்கேகடுந்துன்பம்—காத்த
குறைபடிற்றுன்பங்கெடிற்றுன்பந்துன்பக்
குறைபதிமற்றைப்பொருள்"

என்பதெல்லாம் உபன்யாசத்துக்கு உபயோகப்படுமேயல்லாமல் உண்ப தற்கு உதவாது. நாமெல்லோரும் சன்னியாசிகளல்லோம். ஆதலின் நாம் பழையதுறைகளில் வேலைசெய்து சம்பாதிப்பதோடுநில்லாமற் புதிய மேனாட்டு இயற்கைச் சாஸ்திர அறிவுகளையும் நிறையத் தமிழிற் பாப்பித் தமிழ்மக்களும் தம்மைச்சுற்றியுள்ள பதார்த்தங்களின் குணங் களைத் தமிழ்மொழிபபிலுவதின்மூலமாகவே தெரிந்து அப்பதார்த் தங்களை மேன்மேலும் தம்முடைய உபயோகத்துக்குக் கொண்டுவரும்படி யான வழிகளைத் தேடச்செய்வதில் நாம் முயன்றுவரவேண்டும். நம் தமிழ்ச்சங்க ஆதரவில் நடக்கும் பரிசோதயில் முதன்மையாகத் தேரும் மாணவருக்குப் பரிசளிப்பதுபோல, வருஷத்துக்கு ஒருமுறையோ அல்லது பலதடவையோ தக்கநிபுணர்களுக்குச் சன்மானம்செய்து உபநி யாசங்கள்மூலமாகச்சாதாரணஜனங்களுக்கும்தெரியும்வண்ணம்மேனாட்டு அறிவுநூல்விஷயங்களை வியாபிக்கச்செய்யும்படி ஒருசங்கம் ஏற்படுத்த வேண்டும். மணிமேகலையிற்கண்ட வழக்கமென்ன? விழாவறைகாதை யில்,முரசறைவோன் முதலில் ஊரைவாழ்த்திப் பின்னர், "தருமோபதே சஞ் செய்ய அறிந்தவர்களே! பந்தரிலும் அம்பலங்களிலும் சென்று பிர சங்கம்புரிமின்; சமயவாதிகளே! வித்யாமண்டபத்தையடைந்து இருத் தற்குரிய இடங்களிலிருந்து வாதம்புரிமின்; யாரிடத்தும் பகையும் கோபமும் கொள்ளன்மின்" என்று முரசறைந்து இந்திரவிழாவைத் தெரி வித்தான். இக்காலத்துக்கேற்பச் "சோதனைமண்டபங்களைப் பெரிதாகக் கட்டி, நம் சகோதரர்களுக்கு மேனாட்டுச் சாஸ்திர அறிவு விஷயங்கள் தெள்ளிதிற் புலப்படும்படி பல பதார்த்தசோதனைக் காட்சிகளுடன் சாஸ் திரப் பிரசங்கங்கள் புரிமின்" என்பதையும் சேர்க்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம். இயற்கையறிவுமுதிர்ச்சிக்குத் தகுந்தபடிதான் நாம் நன்குமதிக்கப்படுவோம். இரண்டுகோடி தமிழ்மக்களும் ஆங்கிலங் கற்று இவைகளைக் கற்கமுடியவே முடியாது; இரண்டுகோடிதமிழ்மக் களும் தமிழிலேயே இவற்றைக் கற்றுக் கடைத்தேறக்கூடினும் கூடும். ஆதலினாலே நாம் அவ்வழியில் முயல்வோமாக. சோமசுந்தரக்கடவுள் அருள்புரிவாராக.


K. C. வீரராகவையர் M.A.,

ஸ்ரீ:

மார்கழிநோன்பு

ஆகிய

"தைந்நீராடல்"*



புண்ணியபூமியாகிய பரதகண்டத்து வாழும் நன்மக்களெல்லாம் அநாதிகாலமாகத் தத்தம் வருணாசிரமநிலைகட்கேற்பக் கருமானுஷ்டானங்களைக் கைக்கொண்டுவாழும் இயல்பினர் என்பது யாவரும் தெரிந்ததது. உரியகருமங்களை ஊக்கத்துடன் நடத்திவருந் தேசமாதல்பற்றியே, இப் பாரதவருஷம் கருமபூமி என்னும் பெயர்பெறலாயிற்று. இக்கருமங்கள் யாவும் வேணமாசு தீர்ந்து அந்தக்காணங்கள் தூயவாதற்பொருட்டு நிகழ்த்தப்படுவனவாகும். இவை, அவ்வவ் வாசிரமநிலைகட்கேற்ப எண்ணிறந்தனவாக உள்ளன. நித்யநைமித்திகமென்றொழுகும் கர்மவிதங்கள், உரியதெய்வத்தைப் பற்றியனவாய்ப் பெரும்பாலும் இம்மைப் பயன்கருதி நிகழ்த்தப்படுவன. இவற்றுள், யாகாதிகருமங்களொழிய, முன்னோர் அனுஷ்டானத்தையே பின்பற்றி அநாதிகாலமாக நடைபெற்றுவரும் நோன்புகளும் சில வுண்டு. பங்குனிமீ பௌர்ணிமைக்குப்பின் நடைபெறுவதும் ஹரிஹரி, ஹோளாகம் என்று வழங்கப்பெறுவதுமான காமனேன்பை வேதவிதியின்றிச் சிஷ்டாசாரமே பற்றியதென்று கூறுவர் முன்னோர்.

இவ்வாறு, இல்லறத்தார் நிகழ்த்திவந்த விரதங்களிலே "மார்கழிநோன்பு" என்பதொன்று பண்டைக்காலத்திற் பிரசித்தமாக வழங்கியதென்பது, ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவையாலும் திருவாதவூரடிகள் அருளிய திருவெம்பாவையாலும் தெரியவருகின்றது. திருப்பாவை வியாக்யானத்தின் தொடக்கத்தில் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை என்ற பெரியார் இவ்விரதத்தைப்பற்றிக் குறிக்குமிடத்து "இந்நோன்

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபதாம்வருஷக்கொண்டாட்டத்தில் Hon'ble ஸ்ரீமாந் K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிய வித்துவத்ஸபைமுன்பு படிக்கப்பட்டது.

புக்கு மூலம் என்னெனில், மீமாம்ஸையிலே ஹோளாதிகரணநியாயத் தாலே* சிஷ்டாசாரஸித்தம், 'மேலோர்செய்வனகள்' என்று ஸ்ரீ ஆண்டாள் தானும் அருளிச்செய்தாள்" என்று எழுதலால், மார்கழிநோன்புக்கு வேதவிதியில்லை யென்பதும், ஆண்ரோர் . அனுஷ்டானமே மூலமென்பதும் பண்டையோர்கொள்கையென்பது நன்குவிளங்கும்.

இவ்வாறு சிஷ்டாசாரமேபற்றி இந்நோன்பு வழங்கியதாகக் கூறப்பட்டிருப்பினும், அவ்வாசாரத்துக்கும் மூலவாலாறொன்று இருந்ததாகல் வேண்டுமென்பது நிச்சயம். அவ்வரலாறு யாது ? என்று அறியமுயல்வதே யான் இன்று எடுத்துக்கொண்டவிஷயத்தின் நோக்கமாகும். என் விஷயத்தைத் தொடங்குவதற்குமுன் அறிஞர்க்கெல்லாம் அறிவித்துக் கொள்வதொன்று உண்டு. சைவரும் வைஷ்ணவர்களும் திருவெம்பாவை திருப்பாவை என்ற அடியார்பிரபந்தங்களைப் பாராயணஞ்செய்பவராய் மார்கழிமாதத்தைச் சிறப்பாகக் கொண்டாடிவருகின்றனர். அங்ஙனம் கொண்டாடிவருதற்கு அவரவர் நூத்தம் மதரீதிக்கேற்ப வேறுவேறு ஐதீகங்கள் கூறக்கூடும். அக்கூற்றுக்களுட்புகுந்து இன்னர்கொள்கையே ஏற்புடையது என்று நிர்ணயிப்பதற்கு இங்கே நான் புகவில்லை. மற்று என்நோக்கம் என்னெனில், இந்நோன்புபற்றிப் பண்டைத்தமிழ்நூல்வழியாலும் பிறவழிகளாலும் தெரியும் வரலாறுகளை ஒருங்குதிரட்டி இம் மகாசபையின்முன் எடுத்துக்காட்டுவதேயாகும். மார்கழிக்கொண்டாட்டம் வைணவர்க்குள்ளும் சைவர்க்குள்ளும் சிறப்பாக நடைபெறுவதொன்றுதலால், அதன் ஆதிவரலாறு யாது ? என்றறிவதில், தமிழபிமானிகட்கு விருப்பமிருப்பது இயல்பே. அதனால், செந்தமிழறிஞர்கள் யான் கூறுவனவற்றைச் செவிக்கொள்வார்கள் என்றே நம்புகிறேன்.

மார்கழிநோன்பின் ஆதிவரலாற்றை யறிவதற்கு வேறுசில ஆதாரங்களும் உண்டாயினும், முற்கூறிய ஆண்டாள் திருப்பாவையும் வாதவூரடிகள் திருவெம்பாவையுமே சிறந்தகருவிகளாகச் சொல்லலாம். இவற்றுள், திருப்பாவை முப்பதுபாசுரங்கள் கொண்டது. இத்திருப்பாவைக்குப் பூர்வீகர் பலர் வியாக்யானங்கள் செய்திருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை அருளிய வியாக்யானமே பழமையும் பெருமையு முடையதாகும். திருப்பாவையிற்ஜீத்த மார்கழிநோன்பின் வரலாற்றை ஆப்பெரியார் அடியில் வருமாறு எழுதுகின்றார்.

* வழங்கிவரும் வேதத்தால் விதிக்கப்பட்டாதிருப்பினும் வஸந்தோத்ஸவாதிகளை மேலோர் வழக்காதல்பற்றி வேதவிதிதமென்று குறித்தணரும் நெறி,

(சர்வேசுவரன் உலகத்தை உய்விக்கவேண்டித்) "திருவாய்ப்பாடியிலே கிருஷ்ணனுய்வந்து திருவவதாரம்பண்ணித் தன்னுடைய லௌந்தர்யத்தாலும் குணசேஷ்டிதங்களாலும் பஞ்சலக்ஷங்குடியிலுள்ள பெண்களைத் தோற்பித்துக் கொண்டு ஒத்தபருவத்திற் பெண்களுந் தானுமாய் வளர்ந்தருளுகிற காலத்திலே, தானும் பிராப்த யௌவன்னுய் (யௌவனமடைந்தவனுய்) அவர்களுக்கும் யௌவனம் வந்து தலைக்கட்டினவாறே கோபவ்ருத்தர் (மூதியோரான இடையர்) எல்லாருங்கூடி "கிருஷ்ணன் தூர்த்தனுய் இராநின்றான்; இவன் முகத்திலே பெண்கள் விழிக்கலாகாது" என்று பார்த்து, இவர்களைக்கொண்டுபோய் நிலவறைகளிலே அடைக்க, பெண்களும் கிருஷ்ணனும் பண்ணின பாக்யத்தாலே வர்ஷமின்றிக்கேயொழிய, பெண்களிருந்து மனோரதிக்கிறார்கள்:—'கோதனராயிருக்கிற இடையர் வர்ஷார்த்தமாக நம்மை நோற்கச்சொல்லக் கடவர்கள், கிருஷ்ணன் இதுக்குக் கடைக்கூட்டனுகவும் (நிறைவேற்றிவைப்பவனுகவும்) கடவன்" என்று பெண்கள் ப்ரீதைகளாய்த் தரித்திருக்கிற தசையிலே, வர்ஷமின்றிக்கேயிருக்கிறபடியைக்கண்டு கோபவ்ருத்தரெல்லாருந் திரண்டு 'பசுக்களும் மனுஷ்யரும் பிழைக்கும்வழி ஏதோ?' என்று பார்த்து 'வர்ஷார்த்தமாக நோற்க வர்ஷம் உண்டாம்' என்று,—"இவ்வூரிற் பெண்களடைய நோற்கக்கடவர்கள், இந்நோன்புக்கு இங்குத்தைக்கு அதிபனுன ஸ்ரீநந்தகோபர்மகன் கிருஷ்ணன் கடனுவான்" என்று அத்யவஸித்து (தீர்மானித்து) பெண்பிள்ளைகளை அடையவழைத்துக் கிருஷ்ணனையும் அழைத்துப் பெண்களை நோற்கச்சொல்லி 'இவர்கள் நோன்புக்கு நீ கடனுகவேணும்' என்று கிருஷ்ணனை அபேக்ஷிக்க, அவன் 'எனக்கு க்ஷமமன்று' என்ன, 'இத்தனையுஞ் செய்யவேணும்' என்று மறுக்கவொண்ணாதபடி நிர்ப்பந்திக்க, அவனும் இசைந்தபின்பு, எல்லாருந் திரளவிருந்து "பெண்கள் நோற்பார்கள்; இதுக்கு வேண்டுவது கிருஷ்ணன் ஸஹகரித்துக்கொடுப்பான்" என்று ஒமறைந்து கிருஷ்ணன்கையிலே பெண்களைக் காட்டிக்கொடுத்து கோபவ்ருத்தரெல்லாரும் போனபின்பு, பெண்களும் கிருஷ்ணனும் கூடவிருந்து 'திருக்குரவைகோத்த ராத்திரிபோலவே பெண்காள்! இதுவும் நமக்கு ஓர் இராத்திரியே' என்று கிருஷ்ணன் கொண்டாடி, "இனி அசிர்ப்பு (சந்தேகம்) பிறக்கவைகல் (நெடும்போது) இருப்போமல்லோம்; இப்போது எல்லாரும் போய் அபராத்ரியிலே வந்து எழுப்புங்கோள், நோன்புக்குக் குளிக்கலாம்படி" என்று அருளிச்செய்து, கிருஷ்ணனும் பெண்களைப் பிரிந்துபோய்த் தரிக்கமாட்டாமே நப்பின்னைப்பிராட்டி திருமாளிகையிலே புக்கான்; பெண்களும் பரஸ்பர ஸம்ஸ்லேஷத்தாலே (சேர்க்கையாலே) கால்நடைதந்துபோய்த் தத்தம் மாளிகையிலே புக்கு உறங்கப்புக்கவிடத்தில், கண்ணுறங்காமையாலே மூற்படவுணர்ந்தவர்கள், கிருஷ்ணகுணசேஷ்டிதங்களை நினைத்து எழுந்திருக்கமாட்டாதே கிடக்கிற வர்களை உணர்த்தத் தனித்தனியே சென்றெழுப்பி எல்லாருங்கூடி உத்தேச்யமான ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையிலே சென்று கிருஷ்ணனை எழுப்பித் தங்கள் அபேக்ஷிதத்தை அறிவித்து.....அபேக்ஷிதம் பெற்று முடிக்கிறது"—எனத் தண்டுகொள்க.

இவற்றுல், கோகுலத்துள்ள ஆயர்கள் மழைபெய்யாக்குறையை நீக்கவேண்டிக் கண்ணனைத் தலைமையாக நியமித்துத் தங்கள் பெண்களை மார்கழிநோன்புநோற்கச்சொல்ல, அவர்கள் அதற்கியைந்து பெருமானையும் தோழிமார்களையும் துயிலுணர்த்தி அழைத்துக்கொண்டு, யமுனைநதியில் மார்கழிநீராடி நோற்றுக் கண்ணபிரானை நாயகனைப் பெறும் தங்கள் மனோரதத்தை அடையப்பெற்றார்கள்—என்பதே ஆண்டாள் அருளிய திருப்பாவையின்வரலாறென்பது அவ்வியாக்யாதாவின் கருத்தாதல் விளங்கும். ஆனல் மேலேகுறித்தசரித்திரத்திற்கு ஆதாரமாயுள்ள நூற்பிரமாணம் அவ்வுரையாளராற் காட்டப்படவில்லை. ஆயினும் ஸ்ரீமத்- பாகவதம், தசமஸ்கந்தம் 22-ஆம் அத்யாயத்தில், கண்ணன் கோபியர்துகில்கவர்ந்த சரிதங்கூறுந் தொடக்கத்தில் மார்கழிநோன்பு பற்றிய முக்கியமான செய்திகள் கூறப்படுகின்றன. அதன் மொழி பெயர்ப்பு அடியில் வருமாறு.

"அரசனே! கோகுலத்துள்ள பெண்கள் ஏமந்தருதுவின் முதல்மாதத்தில் (=மார்கழியில்) காத்யாயனிபூஜையாகிய விரதத்தைத் தொடங்கி ஹவிஸ்ஸைப் புஜித்துக்கொண்டு அதனை நடத்திவந்தார்கள். அருணோதயத்தில் அவர்கள் எழுந்திருந்து யமுனைநதியில் ஸ்நானம்பண்ணி மணலால் காத்யாயனிதேவியின் உருவத்தைச் சமைத்து, சந்தனம் மலர் தூபம் தளிர் பழம் இவற்றலும், சிறந்த நைவேத்யங்களாலும் அத்தேவியைப் பூஜித்தனர். "காத்யாயனீ! ஏ மஹாமாயே! ஏ மகாயோகினி! ஏ ஈஸ்வரீ! உன்னை வணங்குகிறேம்; எங்களுக்கு நந்தகோபர் மைந்தனுகிய கண்ணனை நாயகனுக அருள்வீராக"—என்ற இந்த மந்திரத்தை ஜபித்தவர்களாய் அவர்கள் கண்ணனைத் தியானித்துக்கொண்டு ஒருமாசகாலம் பூஜைசெய்து விரதத்தைவிடாமல் நடத்திக்கொண்டுவந்தனர். அக்கோபகன்னியர் ஒருநாள், யமுனைநதியில் ஸ்நானஞ்செய்வதற்காக அருணோதயத்தில் எழுந்திருந்து அவரவருடைய தோழிமார்களின்பெயரைச்சொல்லிக் கூப்பிட்டு ஒருவர்க்கொருவர் கையைக் கோத்துக்கொண்டும் கிருஷ்ணசரிதங்களைப் பாடிக்கொண்டும் நடந்துசென்றனர். அப்பெண்கள் யமுனைநதியின் ஒரு பக்கஞ் சேர்ந்து, அவ்விடத்தே, வழக்கப்படி தங்கள் ஆடைகளை அவிழ்த்துவைத்துவிட்டுக் கண்ணன் சரித்திரங்களைக் கானஞ்செய்துகொண்டு நீரில் விளையாடுவாயினர். பரமயோகிகளுக்கும் யோகியும் ஸர்வஜ்ஞனுமாகிய கண்ணபிரான் கோபகன்னியர் அங்ஙனம் நீர்விளையாட்டுகிழத்துவதறிந்து, அப்பெண்களின் விரதபலத்தை அளிப்பதற்காகத் தம் நண்பர்கள்சூழ, அவ்விடஞ் சென்றார்."

என்றும், சென்றபெருமான் கரையிலிருந்த அம்மகளிர்துகில்களையெல்லாங் கவர்ந்துகொண்டு பக்கத்திருந்த கடம்பமரத்திலேறிநிற்க,

நீராடிமுடிந்த பெண்கள் "ஆடையின்றி வாடையின் மெலிந்து, கையது கொண்டு மெய்யது டொத்திக்" கண்ணனிடம்வந்து தங்கள் துகில் களைத் தருமாறு பிரார்த்தித்தபோது, பெருமான் அவர்களன்பைப் பல வகையாகவுஞ் சோதித்து, முடிவில் அவரவர்துகில்களை அளித்துச் "சதிகளாகியநீங்கள் எந்த நோக்கத்தைக்கொண்டு காத்யாயனீவிரதத்தை நடத்தினீர்களோ அந்த மனோரதம் இன்றிரவில் என்னுடன் கூடி விளையாடுவதால்நிறைவேறும்;எல்லாரும் கோகுலம் செல்லுங்கள்" என்று நியமித்தருளினர் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வுபாக்கியானத்தையும் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை எழுதிய மூன் சரித்திரத்தையும் கூட்டி நோக்குமிடத்து, நாடு வளங்குன்றிய போது மழைபெய்யவும், உத்தமநாயகர்களையடைந்து இம்மைநலமெய்தவும்வேண்டிக் கன்னியர் காத்யாயனீதேவியைக் குறித்து மார்கழிமுழுதும் நோற்பதும், அதன்பொருட்டு அவர்கள் வைகறையில் எழுந்திருந்து ஒருவரையொருவர் துயிலெழுப்பிச் சென்று நதீதீரமடைந்து நீராடித் தேவியின்பிரதிமையொன்றைச் சமைத்துத் தத்தம் இஷ்டார்த்தங்கள் நிறைவேறப் பூஜிப்பதும் பண்டைமரபென்பது பெறப்படுகின்றது. மழைபெய்டாக்குறையை நீக்கவேண்டிக் கோபகன்னியரால் இந்நோன்பு நோற்கப்பட்டதாக ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை எழுதிய திருப்பாவைவ்யாக்யானத்துக்கு மூலம் எதுவாயினும் மேற்குறித்த பாகவத விஷயம், மார்கழிநீராட்டநோன்பை நன்குவிளக்குவதோடு, திருப்பாவைப் பாசுரங்களுக்கு ஏற்றசெய்திகள் பலவற்றை உடைத்தாயிருத்தலும் அறியத்தக்கதாம். ஆனால் இந்நோன்பு காத்யாயனி சம்பந்தமுடையதென்பதற்குத் திருப்பாவை மூலத்தில் ஆதாரமில்லையே என்று சிலர் சங்கித்தல் கூடும். இதற்கு, திருப்பாவைப் பாசுரங்களின் ஈறுகடோறும் வரும் 'எம்பாவாய்' என்ற தொடர், பாகவதத்திற்கண்டவாறு, ஈரநுண்மணலாற் சமைக்கப்பட்ட தேவியின்பிரதிமையைப்பற்றியதாகக் கொள்ளுதல் பொருந்துமாயின், தேவீசம்பந்தம் மூலத்தும் கூறப்பட்டதாகவே கருதலாம். பாவை என்பது, 'கொல்லிப்பாவை' என்புழிப் போல, ஈண்டுப் பெண்தெய்வத்தின் பிரதிமையைக் குறிப்பதாகும். 'நம்பாவைக்குச் செய்யுங்கிரிசைகள்' 'நம்பாவைக்குச் சாற்றிநீராடினால்' 'பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்' எனவரும் திருப்பாவைத் தொடர்களிலும் பிரதிமையொன்றுவைத்து வணங்குங் குறிப்புத்தோன்

முதல் காணலாம். ஆனல், பாவையென வருமிடங்கட்கெல்லாம் வியாக்யானத்துள் 'நோன்பு' என்ற பொருளே தரப்பட்டுள்ளது. நோன்புப் பொருளிற் பாவையென்ற பெயர் வேறிடத்துவழங்குதல் அருமையாயுள்ளது. அதனல் அப்பொருளும் பிரதிமையடியாக வந்ததாகவே கொள்ளற்பாலது. இனித் திருமால்பத்தியிற் சிறந்த ஆண்டாள் தேவீவிரதத்தை மூலமாகக்கொண்டு பாடினர் எனல் தகுமோ என்று, சிலர் சங்கித்தல்கூடும். கண்ணனைத் தம் நாயகனுக அடைவதற்குக் கோபியர் காத்யாயனீதேவியை ஆராதித்துப்போந்தசெய்தி சரித்திரப்பிரஸித்தமாயிருக்கும்போது, அக்கோபியர்விஷயத்தையே ஆண்டாளும் கொண்டு கூறினரெனின் அதனில் இழுக்குமுளதாமோ? திருமாலைத் தம் நாயகனுக அடையவேண்டி 'உன்னையு முப்பியையுந் தொழுதேன்' எனக் காமனையும் அவன் தம்பியாகிய சாமனையுங்கூடத்–தொழப்புக்க* ஆண்டாள் தேவியைப்பிரார்த்தித்து அப்பெருமானைப் பெறமுயன்ற கோபியர்செய்திகூறியதிற் குற்றமென்னை? தேவீவிரதமானது கண்ணனையடையவேண்டிக் கோபியர் தங்குலாசாரப்படி நிகழ்த்தியதாதலாலும், உத்தேசியத்தின் பெருஞ்சிறப்பை நோக்குமிடத்து அஃது எவ்வழியாலும் அடையத்தக்கதொன்றுதலாலும் அதனில் சம்பிரதாயவிரோதம் நீகழச் சிறிதும் இடமில்லையென்க.

இனி, திருவாதவூரடிகள் அருளிய திருவெம்பாவையை நோக்குவோம். இஃது இருபது பாசுரங்களுடையதாய்த் திருவாசகத்துள் அடங்கியுள்ளது. வாதவூரடிகள் திருவண்ணுமலைசென்று சிவபிரானை வணங்கிக்கொண்டு சிலகாலம் அத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் நாளில் மார்கழிமாதம் வருதலும், திருவாதிரையுற்சவத்துக்கு முற்படப் பத்துத்தினங்களுள்ளகாலத்தே மகளிரெல்லாம் வைகறையிலெழுந்து வீடுகடோறும்போய், ஒருத்தியை ஒருத்தியும் பலருமாகத் துயிலுணர்த்தி அழைத்துக்கொண்டு பொய்கையிற் கூட்டமாகத் திருவாதிரைவரை நீராடக்கண்டு, அம்மகளிர்கூறியதாக அவ்வடிகள் பாடியதென்பர். இதனைத் திருவாதவூர்புராணம் திருவம்பலச்சருக்கத்தில்,

* 'தையொருதிங்களும்' என்னும் திருப்பதிகம் பார்க்க.

"வென்றிடுங் கன்னிமேதிச் சென்னிவிக் கிரமன்றன்னைக்
கொன்றதன் பாவந்தீரக் குறித்திட வருள்வாய்போற்றி
அன்றுவந் தென்னையாளு மணியண்ணு மலையாய்போற்றி
என்றுதம் பரிவாலேத்தி யிறைஞ்சியங் குறையுநாளில்"

"மாதர்கொண் மாதரெல்லா மார்கழித் திங்கடன்னில்
ஆதிரை நாண்முன்னீராந் தாகிய தினங்கடம்மின்
மேதகு மனைகடோறு மழைத்திருள் விடிவதான
போதிவர் தம்மிற்கூடிப் புனற்றட மாடல்செய்வார்"

"அன்னவ ரியல்புகண்டா ராங்கவர் புகன்றதாக
மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசிப்பின்னர்
கன்னியர் பாடியாடுங் கவின்கொளம் மனைகண்டன்னர்
பன்னிய பாடலாக வம்மனைப் பாடல்செய்தார்"

எனவரும் பாடல்களால் அறியலாம். இனி அத்திருவெம்பாவைப் பாசுரங்களை நோக்குவோம். அதன் ஒவ்வொருபாடலும் "எம்பாவாய்" என்றே முடிந்துநிற்றலோடு, "போற்றிநா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்" என மார்கழி நோட்டத்தைப்பற்றிக் கூறியும், அம்மாதத்தே பெண்கள் ஒருவரையொருவர் வைகறையிற் றுயிலெழுப்பி நீராடிக் கண்ணபிரானைக் கணவனாக அடைய ஆய்ச்சியர் வேண்டியதுபோலச்—சிவனடியாரைத் தம் நாயகராக* அடையப் பிரார்த்திப்பதையுணர்த்தியுஞ் செல்வதாம். அன்றியும், ஆண்டாள்,

"ஆழி மழைக்கண்ணு வொன்றுநீ கைகரவேல்
ஆழியுட் புக்கு முகந்துகொ டார்த்தேறி
யூழி முதல்வ னுருவம்போன் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோன் மின்னி வலம்புரிபோ னின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

என நாடுசெழிக்க மழைபெய்யும்படி வருணனைவேண்டியதுபோல—

---

* 'மூன்னைப்பழம்பொருட்கும்' 'உங்கையிற்பிள்ளை'என்றதிருவெம்பாவைப் பாசுரங்களை நோக்குக.

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவில்லா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சாக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்"

என்று வாதவூரடிகளும் மழைக்கடவுளே வேண்டினர். இவற்றால் திருப்பாவையும் திருவெம்பாவையும் வேறுவேறு தெய்வச்சார்புடைய வாயினும் ஒரே பொதுக்குறிப்புடையன என்பது வெளிப்படும். ஆனால், வாதவூரடிகளது திருவெம்பாவையானது தேவி சம்பந்தமுடையதென் பதற்குப் பிரமாணமுண்டோ என்பதே இங்கு எழக்கூடிய கேள்வியாகும். அதனை ஆராய்வேன். திருவாசகத்தின் ஒவ்வொருபகுதிக்கும் அத னதன்விஷயம் புலப்படுமாறு, தலைக்குறிப்பு அமைந்திருப்பது பலரு மறிவர். அக்குறிப்புக்களின் வாக்காலும் போக்காலும் அவை திருவாத வூரடிகளாலோ அன்றி அவர்க்குப் பின்வந்த பெரியோர்களாலோ பண்டைக்காலத்தே அமைக்கப்பட்டவை என்பது புலப்பட்டத் தடை யில்லை. இத்திருவெம்பாவைக்கு அங்ஙனம் அமைந்த தலைக்குறிப்பு சத்தியை வியந்தது என்பதாம் [சத்தி-உமாதேவி]. இதனால் தேவியின் வணக்கமே திருவெம்பாவையின்கருத்தென்பது தெளிவாகும். இத் தலைக்குறிப்பையும், மார்கழிநீராட்டநோன்பிற் காத்யாயனி வணங்கப் படுவதாகக் கூறும் பாகவத உபாக்யானத்தையும், அவ்வுபாக்யானமே ஆண்டாள் திருப்பாவைக்கு மூலமாயிருத்தலையுஞ் சேர்த்து ஆராயுமிடத் தும் திருவாதவூரடிகளது திருவெம்பாவையும் தேவியின்விரதத்தை மகளிர் கொண்டாடிய முறையைக் குறிப்பதேயென்று கொள்ளத் தடை யில்லையென்க. ஆனால் "சத்தியை வியந்தது" என்பதற்கு—மனோன்மணி முதல் வாமையீறாகவுள்ள நவசத்திகளும் ஒருவரையொருவர் பிரேரிக்க அதனாற் பிரபஞ்சசிருஷ்டி தொடங்குங்காலம் மார்கழிமாதமென்றும், அக்காலத்து நிகழும் அந்தச்சத்திகளின் பிரேரகங்களேயே வாதவூரடி கள் திருவெம்பாவையில் தாயிலுணர்த்துவதாகக் கூறினரென்றும் சில ரால் கருதப்பட்டுள்ளது. ஆயின், இக்கருத்து, திருவெம் பாவைவரலாற்றைக்கூறும் திருவாதவூரர்புராணத்தேனும் வேறுபழைய

நூல்களிலேனும் குறிக்கப்படவில்லை. நவசத்திகளும் திருவெம் பாவையில் வியந்து கூறப்பட்டனர் என்பதே பழையகருத்தாயின், அதன் தலைக்குறிப்பு "சத்திகளை வியந்தது" எனப் பன்மையாக அமைந்திருக் கும். திருவெம்பாவையின் இருபதுபாடல்களுள் ஒன்பதுபாடல் கட்குமட்டும் நவசத்திகளின் பிரேரணையை விஷயமாகக் கூறி, ஏனைப் பதினொருபாசுரங்களுக்கு அவதாரிகைகூறவியலாமற் செல்வதாலும் அக்கருத்துரை தெளியத்தக்கதாயில்லை. அன்றியும், அதன்பாடல்களில், சிருஷ்டிநிகழும்படி நவசத்திகள் முறையே பிரேரிக்குஞ் செய்தி குறிக் கப்படாமல், சிவனடியாரைத் தம் தலைவராக அடைதல்வேண்டிப் பெண் கள் பிரார்த்திக்குங் கருத்துக் குறிப்பிக்கப்பட்டிருத்தலும், "இன் னருளே யென்னப்பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்" என மழை பெய்யவும் பிறவாறும் வேண்டப்படுதலும் காணலாம். ஒருகால் அக் கருத்துரை, திருக்கோவையாருண்மை முதலியனபோலத் திருவெம் பாவையின் ஸ்வாபதேசப் (உள்ளுறை) பொருளாகச் சிலர் கூறியிருத்தல் கூடும். அதனுண்மை எத்தகையதாயினும், வாதவூரர்புராணங் கூறு மாறு, மார்கழியிற் பெண்கள் நீராடி நோற்பதை வாதவூரடிகள் கொண்டு கூறினர் என்பதே யாவரும் எளிதில் அறியக்கூடியது. 'சத்தியை வியந்தது' என்ற திருவெம்பாவைத் தலைக்குறிப்பு, காத்யாயனி அல்லது சத்திபின் விரதத்தையே புலப்படுத்தக் கூடியதென்ற என் கொள்கையை, மழைவேண்டிக் கூறியதாக முன்பு காட்டிய 'முன்னிக்கடலை' என்ற திரு வெம்பாவைப் பாட்டிற் பராசத்தியே உவமைகூறப்பட்டிருத்தலும்,

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்"

என அந்தச் சத்தி சிறப்பாக வணங்கப்பட்டிருத்தலும் நன்கு வலி யுறுத்துதல் காணலாம்.

இங்ஙனம் திருப்பாவை திருவெம்பாவைகளால்* மார்கழிநோன் பின்வரலாறு அறியப்படுதல்போலவே, பண்டைச் சங்கநூல்களாயிலாக

* யாப்பருங்கலவிருத்தியின் இறுதிச் சூத்திரவுரையுள், "கோழியுங் கூவின குக்கி லழைத்தன-தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினே-ஆழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்-கூழை நனையக் குடைந்து குளிர்புனல்-ஊழியுண் மன்னு வோ மென்றேலோ ரெம்பாவாய்" என்ற பாட்டொன்று உதாரணங்காட்டப் பட்டுள்ளது. இதனால், திருப்பாவை திருவெம்பாவைபோல வேறொருபிரபந்த மும் முன்பு வழங்கியமை தெரியலாம். 'அறிவனடியேத்தி' எனவரும் தொடரி னின்று அஃது அருகக்கடவுளையோ, புத்தரையோ பற்றியதாதல்வேண்டு மென்று தோற்றுகின்றது. ஆயின் மார்கழிநோன்புக்கு அன்னோர் கூறும் வர லாறு தெரியக்கூடவில்லை. இஃதன்றிப் பிற்காலத்தில் தத்துவராயசுவாமிகள் பாடிய 'பாதுகாதை'யுள், சுவரூபானந்தர் திருவெம்பாவைகள் இரண்டு, வேதாந்த பரமாகக் காணப்படுகின்றன.

வும் அதன் செய்திகள் சில இப்போது தெரியவருகின்றன. பரிபாட லுள், வையையாற்றின்சிறப்பைப்பற்றிக் கூறும் 11-ம் பாடலிலே இந் நோன்பின்செய்திகள் சிலவற்றை ஆசிரியர் நல்லந்துவனர் அடியில்வரும் அடிகளாற் கூறுகின்றார்:—

"கனைக்கு மதிர்குரல் கார்வான நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா களிமாரிப் பிற்குளத்து
மாயிருந் தீங்கதி மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்க
வெம்பா நாக வியனில வரைப்பென
அம்பா வாடலி னுய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியி
னுதை யூர்தர வுறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையன் மகளிர் ஈரணி புலர்த்தர
வையை நினக்கு மடைவாய்த் தன்று;
மையாட லாடல் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாட லாடும் புணர்ப்பி னவரவர்
தீயெரிப் பாலுஞ் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைநீராடுதல்
நீயுரைத்தி வையை நதி" எனக் காண்க.

இவ்வடிகளாற் போந்தபொருள் வருமாறு:—"கறுத்த மேகங்கள் இடிக்குங் குரல் நீங்கப் பனிமிகுதலாற் குளிரால் நடுங்குதலையுடைய முன்பனிப் பருவத்தில், சூரியவெப்பம் தாக்காத கடைமாரியையுடைய மார்கழி மாதத்திலே, நிறைமதிநாளாகிய திருவாதிரையில், ஆகமங்களையுணர்ந்த பூசகர் தெய்வத்திற்குத் திருவிழாவைத் தொடங்கினராக, 'பூமியானது மழைவளம் பெற்றுக் குளிர்வதாக' என்று சொல்லி அம்பாவாடலைச் செய்வதற்குக் கன்னிப்பெண்கள் கூடி, சடங்கறிந்த முதிய பார்ப்பனிமார் நோன்பு நோற்கு முறைமையைத் தெரிவிக்க, பனியையுடைய அருணை தயத்திலே நீராடி, நீர்வாடைவீசுதலாற் கரையிற் றங்கியிருக்கும் அத்த னாது வேதாக்கினியை அக்கன்னியர் வணங்கியவராய், அவ்வக்கினி யிலே தம் ஈரத்தைப் புலர்த்திநிற்க, அவ்வந்தணர் வேள்வித் தீயிற்பெய் யும் ஹவிஸ்ஸானது வைகையே! உனக்கு வாய்ப்புடையதாயிருந்தது. ஓலையைப்பிடித்துப் படிக்கும் இளைய ஆண்மக்களோடு காமக்குறிப்பில்

லாத விளையாட்டைப்புரியும் கூட்டத்தாராகிய அப்பெண்கள், புலன்க ளடக்கித் தீமுன்னர்ச் செய்யுந்தவத்தை முன் (பிறவிகளில்) அடுத் தடுத்துச் செய்ததனாற்போலும் தாயருகாகநின்று தவமாகிய நைந்நீ ராடலை, வையையே! நின்னிடமாக வாய்க்கப்பெறுவாராயினர்; இதனை நீ கூறுவாயாக"—என்பதாம்.

இப்பரிபாடற் பகுதியால், வைகைக்கரையில் மார்கழிநீராடி நோற் கும் நோன்பு சங்கநாளிலே கன்னிப்பெண்களுக்குட் பெருவழக்காயிருந் தமை தெளிவாகும். "திங்கள் மறுநிறையாதிரை...விழவுதொடங்க"என அவ்வடிகளுள் வருவதனால் 'மார்கழித்திங்கள் மதிநிறைந்த' நன்னாளில் இந்நோன்பு ஆரம்பமாகி நடைபெறுவதென்பது உய்த்தறியலாம். இந் நாளம் தொடங்குவது, மார்கழியிறுதியோடு பூர்த்திபெறுவதாதல்வேண் டும். என்னெனில், அம்மார்கழிமாதமே இந்நோன்புக்குரிய காலமாகப் பாகவதமுதலியன குறிப்பித்தலால் என்க.

இனி, இந்நோன்பை 'அம்பாவாடல்' என்ற பெயரால் ஆசிரியர் நல் லந்துவனார் கூறுகின்றார். தாயோடு ஆடப்படுதலின் இப்பெயர்பெற்ற தென்பர், உரைகாரராகிய பரிமேலழகர். 'தாயருகாகின்று தவத்தைக் நீராடுதல்' என்று பின்வருந் தொடரைக்கொண்டு அவ்வுரையாளர் இப் பொருள் கருதினராகத் தெரிகின்றது. விரதநடத்துவோர் சிறுமியரே யாதலின் அவர் நீராடும்போது அவர்தாயரும் பக்கத்தில் நிற்பது இயல்பாதல்பற்றித் 'தாயருகாகின்று' என்று கூறப்பட்டதாகக் கொள் ளத்தக்கதேயன்றி, அந்நாளம் தாயர்நிற்பதை ஒரு பெரிய விசேடமாக்கி, அதுபற்றி 'அம்பாவாடல்' என்று மார்கழிநீராட்டத்துக்கே ஒருபெயர் வழங்கலாயிற்று என்று கொள்வது ஏற்புடைத்தாமோ? என்பது ஆராய்ச்சிசெய்தற்குரியது. அதனால் முன்குறித்த பாகவதவரலாற்றுக் கியைய அம்பாவாடலென்பதற்குத் 'தேவியின்பொருட்டு நிகழ்த்தப்படும் நீராட்டு' என்று பொருள்காணுதலே மிகவும் பொருத்தமுடையதாகத் தோற்றுகின்றது. அம்பா என்பது தேவியைக் குறித்தல் வெளிப்படை. மார்கழிநோன்பைத் திருவாதிரைக்குரிய இறைவனது விழாவாகப்* பரி மேலழகர் கருதினராயினும் அச்செய்தியொன்றும் மூலத்தாற் புலப்பட்டா மையுங் காண்க.

* 'ஆருத்திராதரிசனம்' என்னுந் திருவிழாவைப் பரிமேலழகர் கருதினர் போலும்.

இவ்வாறு, மார்கழித் திருவாதிரையில் நீராட்டத்துடன் தொடங் குவதாகக் கூறப்பட்ட நோன்பைத் திருப்பாவை கூறுமாறு 'மார்கழி நீராடல்' என்று குறியாது, 'தைந்நீராடல்' என்ற பெயராற் சங்கநூல் கள் கூறுகின்றன. இதனை—'தவத்தைந்நீராடல்' 'இன்னபண்பினின் றைந்நீராடல்' எனவரும் இப்பரிபாடற் றொடர்களிலும்,

> "வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
> தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ"* (கலித்தொகை 59)
>
> "நறுவீ யைம்பான் மகளி ராடும்
> தைஇத் தண்கயம் போலப் பலர்படிந்து" (ஐங்குறு 84)

எனவரும் முன்னூற்றொடர்களிலும் கண்டுகொள்க.† பரிபாடல் கூறு மாறு, மார்கழிப் பௌர்ணிமையிற் றொடங்குவதாகிய நீராட்டத்தைத் தைந்நீராடலென இங்ஙனம் முன்னோர் வழங்கிவந்ததன் காரணமறிதல் வேண்டி, திவான்பஹதூர் L. D. சாமிக்கண்ணுபிள்ளையவர்களை யான் உசாவியபோது, அவர்கள்-பௌர்ணிமையும் திருவாதிரையும் மார்கழி மாதம் 15-ஆம் தெய்தியிலேனும் அதன்பின்பேனும் ஒன்றுசேர்வது இயல்பென்றும், அமாவாசையோடும் பௌர்ணமியோடும் மாதங்கள் முடிவுபெறுதலால் முறையே அமாந்தம், பூர்ணிமாந்தம் என்னும் பெயர் கொண்ட இருவகை மாதமுறைகள் வழங்கிவருவன என்றும், அவற் றுள், பூர்ணிமாந்தம் என்ற முறைப்படி மார்கழியிடையிற் பௌர் ணிமைக்குப் பின்வரும் மாதம், மார்கழியின் பிற்பகுதியும் தையின் முற்பகுதியுமாமென்றும், அதனால் மார்கழிநீராட்டம் அல்லது தைந்

---

* "கூரிய எயிற்றினையுடைய இளையமகளிர்க்குமேலே வகுப்புடைய கோ லத்தாலே பொலிவுபெற்று, நீ தைத்திங்களில் நீராடிய நோன்பின்பயனைப் பெறு வையோ, பெருய்காண்" என்று இரந்து குறையுற்றுப் பின்னின்ற தலைவன் ஆற்றாளாய்த் தலைவியை நோக்கிக் கூறினன் என்க.

† 'ஒன்றெழிற்பொதுச்சொல்'(268), 'இருதிணை யாண்பெணு னொன்றனை யொழிக்கும்—பெயரும் வினையுங் குறிப்பி னானே' என்ற நன்னூற் சூத்திரங்களி னுரையில் மயிலைநாதர், உயர்திணைவினைச்சொல் ஆணெழித்துநின்றமைக்கு— 'மருதூரார் தைந்நீராடினர், இன்று இவ்வூராரெல்லாந் தைந்நீராடு' என்ற தொ டர்களை உதாரணங்காட்டலால் தைந்நீராடல் மகளிர்க்கேயுரியதென்பதும், ஆண் பாலார்க் குரியதன்றென்பதும் விளங்குதல் காண்க.

நீராட்டம் என்று இருவகையாகவும் அந்நீராடலைக்கூறுவது கூடுமென்றும் அன்புடன் கடிதமூலந் தெரிவித்தார்கள். மார்கழியில் நிகழ்த்தப்படுவதாகத் தெளிவாய் அறியப்பட்டதைத் தைந்நீராடல் என்று பரிபாடல் முதலியவை வழங்குதற்குப் பிள்ளையவர்கள் கூறிய இக்கருத்து மிகவும் ஏற்புடையதாகவேகொள்ளத் தடையில்லை. இதனால் மார்கழி நோன்பு முற்காலத்தே பூர்ணிமாந்தமுறைப்படி அனுஷ்டிக்கப்பட்டதாதல்வேண்டுமென்பதும், ஆயினும், ஸௌரமானப்படி தைம்மாதமும் அதனுடன்கலந்துவருதலால் 'தைந்நீராடல்' என்று அதற்குப் பெயர் வழங்கியிருத்தல்வேண்டுமென்பதும் பெறப்படுகின்றன.

இனி, மழைபெய்து நாடு செழிக்கவேண்டி ஆண்டாளும் வாதவூரடிகளும் கூறியதுபோலவே, 'வெம்பாதாக வியனில வரைப்பென' (=இம்மாநிலம் மழையாற் குளிர்வதாக) என்று கன்னியர்கூற்றில் வைத்துப் பரிபாடல் கூறுவதும் ஈண்டு நோக்கத்தக்கது. அன்றியும், கண்ணபிரானையும் சிவனடியாரையும் தம் கணவராக அடைதல்வேண்டிக் கன்னியர் நோற்பதாகத் திருப்பாவை திருவெம்பாவைகள் குறிக்குமாறு போலப் பரிபாடலிலும்—"வரைவுமலிந்த தோழி, கன்னிப்பருவத்துத் தைந்நீராடத் தவந்தலைப்பட்டேம் என வையையைநோக்கித் தலைமகன் கேட்பச்சொல்லியது" எனத் துறைக்குறிப்பு எழுதப்பட்டிருத்தலும் ஒப்பிட்டு அறியத்தக்கதாம். இத்துறைக்குறிப்புக்கு—கன்னிப்பருவத்தில் தைந்நீராடி நோற்ற விசேடத்தால் தன்தலைவி உத்தமநாயகனைப் பெற்று இப்போது விளங்குவதாகத் தோழி மகிழ்ந்து கூறினள் என்பது கருத்தாதல் காண்க. இவற்றால், திருப்பாவை திருவெம்பாவை பரிபாடல் மூன்றும் ஒத்த கருத்துடையவாதல் நன்கறியலாம்.

இனிப் பெண்பாற்பிள்ளைப்பாட்டின்செய்திகூறும் பிங்கலந்தைச் சூத்திரத்துள் (1369)—

"பேணுஞ் சிறப்பிற் பெண்மக வாயின்
மூன்று மாண்டிற் குழமண மொழிதலும்
ஐந்தின் முதலா வொன்பதின் காறும்
ஐங்கணைக் கிழவனை யார்வமொடு நோற்றலும்
புனிறீர் தோய்தலும் பாவை யாடலும்,"

எனவரும் அடிகளிலே 'பனிநீர் தோய்த்தலும் பாவையாடலும்' என்பது, தைந்நீராடிப் பாவைநோன்புநோற்பதைப்பற்றியதாகவே சொல்லலாம். 'குழமணமொழிதலும்' (=பாவைக்கு மணம்பேசிவிளையாடலும்) என வேறுவருதலால், 'பாவையாடல்' என்பது, பாவையைவைத்து விளையாடலன்றென்பதும், 'பனிநீர்தோய்த்'லுடன்கூடிவருதலின், அது, மார்கழிப்பாவைநோன்பேயாதல்வேண்டு மென்பதும்* உய்த்தறியக்கிடக்கின்றன. 'தைஇத்தண்கயம்' என்பவாகலின், 'பனிநீர்தோய்தல்' என்ற தென்க. எனவே, ஐந்துமுதல் ஒன்பதுவயதுவரையுள்ள சிறுகன்னியரே தைந்நீராடி நோற்றற்குரியர் என்பது பழைய விதியாதல் பெறப்படும். மேலேகுறித்த பரிபாடலிலும், காமக்குறிப்பில்லாத கன்னியர் நடத்தும் விரதமாகவே கூறப்பட்டிருத்தலுங் கண்டுகொள்க. இவ்வாறுயினும், சங்கத்துக்குப் பிற்பட்ட காலத்தே கன்னியரெல்லாராலும் இந்நோன்பு கைக்கொள்ளப்பட்டதாகவே, திருப்பாவை திருவெம்பாவைகளினின்று கருதப்படுகின்றது.

இனி, ஆண்டாளது திருப்பாவையில் இந்நோன்பின்செய்திகள் சில குறிப்பிக்கப்படுகின்றன. இவ்விரதகாலத்திற் கன்னியர்நிகழ்த்துங் கிரியைகளை—

"வையத்து வாழ்வீர்கான் நாமுநம் பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுட்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணேம் பாலுண்ணேம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்"

என்னும் பாசுரத்தாலும், இந்நோன்புக்காலத்தே வழங்கும் 'வாத்தியங்களையும் விருதுகளையும்—

---

* "திருந்துபூ வல்லி யுந்தி தோணெக்கஞ் சிறந்த பாவை" எனப்படுதலால் (திருவாலவாயுடையார்புராணம். 27, 58.) மார்கழிநோன்பாகிய திருவெம்பாவையைப் பாவை எனவும் தனியே வழங்குதலுண்டு என்பது தெரியலாம்.

"மாலே மணிவண்ணு மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலேயா யருளேலோ ரெம்பாவாய்"

என்பதனாலும், நோன்புமுடிந்ததும் மகளிர்கொள்ளுங் கோலத்தையும் விருந்தையும்—

"கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினு னன்றாகச்
சூடகமே வால்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றினைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறும்
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

என்பதனாலும், இந்நோன்பால் விளையும்பயன் மழைபெய்து நாடுசெழித்தலும் கோலம்நுத்தியுமா மென்பதை—

"ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாந் திங்கண்மும் மாரிபெய்
தோங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வ நிறைந்தேலோ ரெம்பாவாய்"

என்பதனாலும், இந்நோன்பைக் கன்னியர் நோற்பது தாம் ஒப்புயர்வற்ற தலைவரையடைந்து உய்வதற்கே என்பதை—

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்ரு மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றமேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்துநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னே
டுற்ரேமே யாவோ முனக்கேகா மாட்செய்வோம்
மற்றுநங் காமங்கள் மாற்றேலே ரெம்பாவாய்"

—எனத் திருப்பாவையிலும்,

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிராஞகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலேமேலோ ரெம்பாவாய்"

"உங்கையிற் பிள்ளோ யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றென்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்"

எனத் திருவெம்பாவையினும் வரும் பாடல்களால் அறியலாகும்.

இவ்வாறு இம்மைப்பயன்கருதிக் கன்னியரால் ஆதியில் நடத்தப் பெற்றுவந்த மார்கழி நோன்பானது, மறுமைகருதி அடியார்களால் ஈசுவரபரமாகப் பாடப்பெறும் பெருமையை அடைந்ததாயினும் அதன் பழஞ்செய்திகள் மறக்கப்பட்டும் கன்னிப்பெண்களாற் கைக்கொண்டு நடத்தப்படாமலும் போயிற்று. ஆயினும், அவ்வடியார்கள் அருளிய திருப்பாவை திருவெம்பாவைகளை முக்கியமாகக்கொண்டு அம்மாதத்து வரும் உதயகாலங்களில் ரோடுவதும் அத்திவ்யப்பிரபந்தங்களை யோது வதும், ஆராதனைகள் நடத்துவதுமாய் ஆண்பாலார் பெண்பாலார் எல்லா

ராலும் சமயாசாரமாக இக்காலம் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. திருவாதிரைக்குமுன் பத்துநாள்தொடங்கி அந்நாளோடு திருவெம்பாவையிருபதுபாடலும் சைவர்களால் ஓதப்பெற்றும், நாளொன்றுக்கு ஒருபாடலாகத் திருப்பாவைமுப்பதும் வைஷ்ணவர்களால் மாதமுழுதும் ஓதப்பெற்றும் கொண்டாடப்படுகின்றன. மார்கழிமுழுவதும் நீராட்டத்துக் குரியதாயினும், திருவாதிரையே அதற்குச் சிறந்தநாளாக முன்னுசெல்லாராலும் ஒருங்கு கொள்ளப்பட்டதாகும். இதனை,

> "மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
> விரிநூ லந்தணர் விழவு தொடங்க"
>
> என்னும் பரிபாடலாலும்,
>
> "மார்கழித் திங்கண் மதிநிறைந்த நன்னாளால்*
> நீராடப் போதுவீர் போதுமினே நேரிழையீர்"
>
> என்னும் திருப்பாவையடிகளாலும்,
>
> ".....மார்கழித் திங்கடன்னில்
> ஆதிரைநாண்முன் னீரைந் தாகிய தினங்களெல்லாம்
> .....புனற்றடமாடல் செய்வார்"

என்னும் திருவெம்பாவை வரலாற்றாலும் அறியலாம். ஆயினும், அதுஷ்டான முறையிலே சிற்சில பேதங்களைப் பண்டையோர் கொண்டிருந்தவர் போலவே தோற்றுகின்றனர்.

இவ்வாறு, மார்கழி நோன்பானது, தன்பூர்வநிலைமாறிச் சமயாநுஷ்டானமாக இப்போது எல்லாராலும் கொள்ளப்படினும், தமிழ்நாட்டின் பழைவழக்கங்கள் பலவும் இன்றுங் காணக்கூடிய இடமாகிய மலையாள நாட்டிலே, அந்நோன்பு, தன் முன்னிலைமையிற் சிறிது மாறி இன்றும் வழங்கிவருதல் அறியத்தக்கதாம். அந்நாட்டார் கொண்டாடும் முக்கிய உற்சவங்களுள்ளே, 'திருவாதிரைத்திருவிழா' என்பது ஒன்றாகும். இப்பெரிய விழா, மார்கழியில் இளம்பெண்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று, அம்மாதத்துவரும் திருவாதிரைநாளோடு முடிவுறுவதாக வழங்குகின்றது. அங்கு நடைபெறும் இத்திருவிழாவின்செய்திகள், ஸ்ரீமான்-கோபாலபணிக்கர் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற "மலையாளமும் அதில் வாழ்நரும்" (Malabar and its folk) என்ற நூலிற் காணப்படுகின்றன. அவை வருமாறு:—

---

* மார்கழியின் மதிநிறைந்த நன்னாளாகிய பௌர்ணமை, திருவாதிரைநக்ஷத்திரத்தை ஒட்டிவருவதாதல் காண்க.

"மலையாளத்தில் நடைபெறும் மூன்று முக்கிய உற்சவங்களிலே திருவாதிரை என்பதொன்றும். அஃது அங்கே தனுர்மாதத்தில் திருவாதிரைநாளிலே முறைப்படி நிகழும். இவ்வுற்சவம் பெண்களால்மட்டும் மிகுதியாகக் கொண்டாடப்படுகின்றது. உத்தேசம் ஒருநாள்தான் அது விசேடமாக நடைபெறும். இவ்வுற்சவம், புராணத்துக் கூறப்பட்டபடி, காமனுடைய அழிவுக்காலத்தைக் காட்டுகிறதென்பது ஜனங்களின் அபிப்பிராயம்.....(காமனுடைய) துக்ககரமான கதையானது ஞாபகத்தில் வைக்கப்பட்டு முக்கியமாக ஸ்திரீகளால் வருஷத்துக் கொருமுறை விசேஷ உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது. குறித்த நாளுக்கு ஒருவாரத்துக்குமுன்பாகவே இவ்வுற்சவம் தொடங்கப்பெறும். காலை நாலுமணிக்கே பெண்களெல்லாம் படுக்கைவிட்டெழுந்து ஆசாரமுறைப்படி தடாகங்களில் ஸ்நானம்செய்வார்கள். அவருள்ளும், பாலப்பருவமுள்ள பெண்களே கூட்டங் கூட்டமாகச்சேர்ந்து நீராடுதல் அதிகம். அக்காலங்களில் எல்லாரும் தண்ணீருக்குள் மூழ்கி உற்சாகமாகப் பாடுவர். அப்பாட்டு, யாரேனும் ஒருபெண்ணுல் சுருதியை அநுசரித்து மன்மதனைக்குறித்து ஆரம்பிக்கப்படும். இந்தப்பாட்டு, பெண்கள் தம் கைகளால் தண்ணீரைத் தட்டுவதனுல் உண்டாகும் ஒரு விசேஷ சப்தத்தை அநுசரித்துநிற்கும். அவர்கள் இடக்கையை மூடித் தண்ணீர்மட்டத்திற்குக் கீழே ஜலத்தில் அமிழ்த்திக்கொண்டு வலது உள்ளங்கையைச் சாய்ப்பாக அடித்து இந்தத் தாளத்தை உண்டாக்குகின்றனர். இப்பெண்கள் பாடுங்காலமுழுதும் இவ்வாறு சத்தம் செய்யப்படும். இத்தகைய தாளத்துடன் ஒருபாட்டு முடிந்ததும் மற்றவரும் அதனைப் பின்தொடர்ந்துபாடியும், சிறிதுநேரம் இளைப்பாறி மறுபடியும் அதனைத் தொடங்கியும் இவ்வாறு முறைவைத்துப் பாடிக் குதூகலிப்பது வழக்கம். இவ்விதமாக அருணோதய காலம்வரை பெண்களெல்லாம் காலத்தைப்போக்கி உடம்பை நன்முகத் துடைத்துக்கொண்டு சுத்தமும் மிக்க அலங்காரமுமுள்ள ஆடைகளை உடுத்தும் கண்களுக்கு அஞ்சனந்தீட்டியும், நெற்றிக்குத் தரித்துக்கொண்டும் தாம்பூலதாரணஞ் செய்தும் விளங்குவார்கள். பிறகு எல்லாப்பெண்களும் உற்சவத்தில் முக்கியமாக நடைபெறும் ஊஞ்சலாட்டத்தைத் தொடங்குவார்கள்.

* * * *

இவ்வாறு ஸ்நானம்செய்வதும் பாடுவதும் ஊஞ்சலாடுவதும் உற்சவக் கடைசிநாளோடு முடிவுபெறும். ஆனல் இக்கொண்டாட்டமானது இறுதிநாளிற் முன் விசேடமாக நடைபெறுவதாம், உற்சவமுடிவில், காலையிலே எல்லாப் பெண்களும் ஸ்நானஞ்செய்தபிறகு கொஞ்சம் வள்ளம் குடித்துவிட்டுப் பகலில் ஒருபெரிய விருந்து நடத்துவார்கள், அவ்விருந்தில் உயர்ந்த மலைப்பழங்களும் சர்க்கரைகலந்த சிந்திற்பாயஸமும் உண்ணப்படும். அஸ்தமனம்வரையிற் கொண்டாட்டமும் ஆடல்பாடல்களும் நடைபெறும். விஷு, ஓணம் என்ற திருவிழாக்களிற் புருஷர்கள் எவ்வாறு மாலையில் வந்திருப்பது ஆவசியகமோ,

அவ்வாறு இத்திருவாதிரைத் திருவிழாவினும் வந்திருத்தல் ஆவசியகம். அப்படிச் செய்யத்தவறிய புருஷர்செயலே, தங்கள் ஸ்திரீகளைவிட்டுப் பிரிந்து போவதற்கு அடையாளமாகக் கருதுவார்கள். மார்கழிமாதத்துப் பனியுறைப்பும் கீழ்காற்றின் குளிர்மிகுதியும், பெண்களின் மெல்லிய மேனிகட்கு மிக்க துன்பத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தும், இம்மகோற்சவத்தில், காலையில் நீராடுவதிலும் அந்நீராட்டத்தில் ஆடல்பாடல் நிகழ்த்துவதிலும் அதிக ஆனந்தத்தை அன்னோர் அடைகின்றனர். பனியின் உறைப்பால், காற்றில் இலை நடுங்குவதுபோலச் சரீரம் படபடத்துக்கொண்டிருந்தும் நீராடுகின்ற இக்கொண்டாட்டம் அவர்கட்கு அதிக மனோற்சாகத்தை அளிக்கின்றது. மலையாளநாட்டில் நடக்கும் இக்கொண்டாட்டத்தைப்போல வேறு எவ்விடத்தும் காண்பதரிது" எனக் கண்டுகொள்க.

மேலேகாட்டிய செய்திகளால், மலையாளத்துத் திருவாதிரைப் பெருவிழாவானது, பழைய மார்கழி நோன்பினின்றே சிற்சில மாறுபாடுகளுடன் இக்காலத்து நடைபெறுவதென்பது புலப்படும். திருப்பாவை திருவெம்பாவைகளின் கருத்தைத் தழுவிச் சைவமுறையாகவோ வைணவமுறையாகவோ மலையாளத்துப் பெண்களால் இவ்வுற்சவம் நடைபெறுவதன்று; மற்றுத் தமிழ்நாட்டுப் புராதனவழக்கொன்றைப் பற்றியே அஃது அங்கு வழங்குவதாம். மார்கழி நீராடும்போது, ஜலத்திற் பெருஞ்சப்தம் கிளப்பிக்கொண்டு மலைநாட்டுப்பெண்கள் மூழ்கும் மாதிரி கையையே, வாதவூரடிகளும்,

"மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி"

—எனவும்,

"பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புன லாடேலோ ரெம்பாவாய்"

எனவும் அருளிச்செய்தல் காண்க. இவ்வுற்சவத்திறுதியில் மலைநாட்டு மகளிர் ஆடையாபரணாதிகளால் தம்மை அலங்கரித்துக்கொண்டு கூடியிருந்துண்பதும் அவ்விருந்திடையே பாயசம் என்னும் அக்காரவடிசில்*

* 'திருவாதிரைக்களி' என்னும் உண்டிவிசேடம் மார்கழித் திருவாதிரையுற்சவத்திற் சிறப்பாகவழங்குதலும் இவ்வழக்கையே குறிக்கும்.

விசேடமாக உபயோகப்படுவதும் ஆகிய வழக்கங்கள் ஆண்டாள்காலத்தும் வழங்கியவைகளே என்பதைக் "கூடாரைவெல்லுஞ்சீர்" என்னும் பாசுரத்தில்,

"பாடகமே யென்றினைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறும்
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

எனவரும் அடிகளால் அறியலாம். இவ்வொற்றுமைகள் திருவாதிரைத் திருவிழாவுக்கும் பழைய மார்கழிநோன்புக்கும் உள்ளனவாயினும், அத் திருவிழா காத்யாயனீவிரதமாகக் கருதப்படாமல் மன்மதனைப்பற்றியதாக மலையாளநாட்டாரால் பாவிக்கப்படுகின்றது. ஆனால், மன்மதசம்பந்த முடையதாக அங்காட்டார் அதனைக் கருதுவதற்குச் சிறிதும் நியாயமே யில்லை. என்னெனில், காமனேன்பு பங்குனிமாதத்தே பூழங்காலமுதல் நடைபெறுவதேயன்றி மார்கழிக்குரியதன்றும். ஸ்ரீஆண்டாளும், மார் கழி நோன்பைத் திருப்பாவையாற் பாடிக் காமனேன்பைத் "தையொரு திங்களும்" என்ற தனிப்பதிகத்தாற் கூறுவதோடு, அந்நோன்பு பங்குனி யோடு முடிவுறுவதென்பதைக் குறிப்பித்தருளுதலும் காணலாம். ஆகி யிற் கன்னியர்க்குள்மட்டும் நடைபெற்றுவந்த இவ்விரதம் மலையாள நாட்டிற் பெண்களெல்லாராலும் நடத்தப்படுவதாகவும் தெரிகின்றது.

மேலே யான் விரிவாகக் காட்டிப்போந்த விஷயங்களால், மார்கழி நோன்பின் ஆதிவரலாறு இத்தகைய தென்பதும், சங்கச்செய்யுள்களில் 'தைந்நீராடல்' என்று கூறப்படும் விரதம் அம்மார்கழிநோன்பின்வேறுகா தென்பதும் புலப்படக்கூடியன. காத்யாயனீவிரதமே மார்கழிநோன் பாகு மென்ற கொள்கையைத் 'திருவெம்பாவையாராய்ச்சி' என்ற தலைப் பின்கீழ்ச் சிலவருஷங்கட்குமுன் மேலைச்செவ்வற்பட்டிச் சன்மார்க்க சபையில் வெளியிட்டுள்ளேன். ஆயினும், அதன்பின் அறிந்த அரிய விஷயங்கள்பல, என்கொள்கைணிப் பெரிதும் வலியுறுத்துவனவாய் அமைந்தமையால், அவற்றையெல்லாம் ஒருங்குதிரட்டி இம்மகாசபை யில் இப்போது வெளியிட்டாயினேன். செந்தமிழறிஞர் யான்கூறிய வற்றையெல்லாம் செவ்விதின் ஆராய்ந்து ஏற்றபெற்றி கொள்ளக்கடவர்.

திருவல்லிக்கேணி
16-9-21.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்.

ஸ்ரீ:

விவாக ரகஸியம்.

(கடகடம் பக்கத் தொடர்ச்சி.)

கா:–பிரவேசஹோமத்துடன் விவாகவிதிகள் முடிந்துவிடுமல்லவா?

ச:– இல்லை, இல்லை. மனையாளுடன் இல்வாழ்வான் அநுஷ்டித்துவர வேண்டிய ஸ்தாலீபாகம், வைச்வதேவம் முதலிய விதிகளின் உபதேசமின்றி விவாகச்சடங்கு முடிவுபெறுதல்லவா?

கா:–ஆம்; மெய்தான்; இல்லாவிடில் மணமகன் இல்லறத்துணை (ஸஹதர்ம-சாரிணி) யாகமாட்டாளல்லவா?

ச:– பிறகு தம்பதிகள், இல்வாழ்வார்க்கு ஏற்பட்ட நியமங்களுக்குரிய காரியங்களை யநுஷ்டிப்பதுடன், கல்யாணமானகாண்முதல் மூன்றிராத்திரி தரையிற் படுத்துக்கொள்ளுதல், பிரமசரியம் காத்தல், காரமும் உப்பும் இல்லாத உணவை யுட்கொள்ளுதல் முதலிய நியமங்களை வழுவாமல் அநுஷ்டிக்கவேண்டும். அவர்களுடைய படுக்கையினிடையில் அத்தி, அரசு, ஆல், இலவு இவற்றில் ஏதாவதொன்றின் வளரில் சந்தனத்தைத் தடவி வஸ்திரம் அல்லது நூலேச்சுற்றி வைக்கவேண்டும். இந்த விருக்ஷங்கள் கந்தருவருக்கும் அப்ஸரஸுகளுக்கும் இருப்பிடமென்று வேதந்தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

கா:–என் இந்தவளாரிற் கந்தருவனை ஆவாகனம் செய்யவேண்டும்?

ச:– இந்தக் கந்தருவனுக்கு விசுவாவசு என்று பெயர். விவாககாலத்திற் கன்னிகை அவன்வசமிருப்பதால் மணமகன் அவனைவணங்கித் துதித்துத் திருப்திசெய்து நல்ல சந்தானங்களையடையவேண்டியதற்காக ஸ்திரீயின்சரீரத்தைத் தொடவேண்டும் என்று விதி ஏற்பட்டிருக்கிறது.

கா:–விவாகம்நடந்தநாண்முதல் மூன்றிரவு தம்பதிகள் பிரமசரியத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்றும், நான்காநாள் விடியற்காலையிற் கந்தர்வனுடைய அநுக்ரஹத்தைப் பெற்றுத் தண்டத்தை எடுத்துவிட்டு ருதுதோஷத்தை ஸமனம்செய்து நல்ல முகூர்த்தத்திற் சேரவேண்டும் என்றும் சூத்திரக்காரர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்களல்லவா?

ச:– ஆம்.

கா:–இதனால், சாஸ்திரம் ருதுமதிகளுக்கே விவாகத்தை விதித்திருக்கிறதென்று சிறிதும் ஐயமின்றி விளங்குகிறது.

ச:– தோழீ! நான் சொல்லுவதை நீ கொஞ்சம் கவனித்துக் கேட்க வேண்டும். முன்காலத்திற் சிராத்தம் முதலிய சடங்குகளில் மாம்சங்களை உபயோகித்தல், பிராமணர்கள் எல்லாஜாதியிலும் விவாகம் செய்துகொள்ளுதல், பிரும்ம க்ஷத்திரிய வைசியர் இருஹங்களிற் சூத்திரர்களைக்கொண்டு சமையல்செய்வித்தல், வேதத்தை முழுது மோதித் தீக்ஷையை முடித்துக்கொள்ளுகிறவர்களே இல்வாழ்க்கையிற் பிரவேசிக்க யோக்கியதையடைதல் முதலிய அநேக சமயாசாரங்கள் சாஸ்திரசம்மதமானவையென்று பூர்வீகஸ்மிருதிகர்த்தாக்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. அக்காலத்தில் தர்மத்தை அநுசரித்துத் தழைத்தது காமம்; நான்கு புருஷார்த்தங்களில் அறமும் மோக்ஷமுமே முக்கியமானவையா யிருந்தன; பெரும்பாலோர் சத்வகுணத்தையே முக்கியமாய்க் கைக்கொண்டார்கள். பரலோகத்தில் ஏற்படுவதாகச்சொல்லிய தண்டனைகளில் மிகவும் பயமிருந்தது. உலகவாழ்க்கையிலுண்டாகும் சுகம் திரணம்போல் எண்ணப்பட்டது; அந்தணர்களும் தெருவிற் கிடக்கும் ஓட்டையும் பொன்னையும் ஒப்பநோக்குபவராய்க் கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைந்து பிரும்மத்தியானத்திலேயே ஈடுபட்டு அதையே பரமானந்தமாக எண்ணிவந்தார்கள். தனிகர்களும் பிரபுக்களும் அந்தணர்களுடைய வைராக்கியம் கர்மாநுஷ்டானம் முதலிய குணங்களைக்கண்டு அவர்களைப் பூஜித்து அணுவளவாவது அவர்களுடைய அநுக்கிரஹத்தைப் பெறுவதையே ராஜ்யலாபத்தைக்காட்டிலும் மேலானதாகக் கருதிவந்தார்கள். இப்பொழுதோ காமத்தையநுசரித்து வருந்துகிறது தர்மம்; பொருள், இன்பம் என்னும் இரண்டுபுருஷார்த்தங்களையே ஜனங்கள் முக்கியமாய்க் கருதுகிறார்கள். பெரும்பாலும் ரஜோகுண தமோகுணங்களே தழைத்தோங்குகின்றன. பரலோகமென்பது முயற்கொம்புபோலாய்விட்டது. உலகவாழ்க்கையில் அடையும் அதிகமான சுகானுபவத்தையே ஜனித்ததற்கு முக்கியபலமாக வித்துவான்கள்கூட நினைக்கிறார்கள். அந்தணர்

களோ மண்ணுசை பெண்ணுசை பொன்னுசைகளால் வருந்தித் தங்களுக்கேற்பட்ட நியமங்களிலிருந்து வழுவிப் போசை, கோபம், காமம் முதலியவற்றுக்கு அடியவர்களாக அலைந்து திரிகிறார்கள். புலவர்கள், தனிகர்களின் பிரீதியையும் பிரபுக்களின் பிரீதியையும் சம்பாதிப்பதையே ஈசுவரப்பிரசாதத்தைக்காட்டிலும் மேலானதாகக் கருதி அவர்களுடைய வாசலிற்போய்க் காத்துத் தங்கள் ஸ்வரூபத்தைமாய்த்து அவர்களோத் தோத்திரஞ்செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படியிருக்கையில் மூக்காலமுமுணர்ந்த மஹரிஷிகள் இயற்கையிலேயே ரஜோகுண தமோகுணங்கள் மேலிட்ட இக்காலத்தில் மேற்கூறிய மாம்ஸபோஜனமுதலிய ஆசரணைகள் பொதுவில் எண்ணிறந்த அநர்த்தங்களை விளைவிக்குமென்று நன்குணர்ந்து அந்த ஆசாரங்கள் இக்காலத்துக்கு உதவாதவென்று நிச்சயித்தடன் ருதுவாவதற்குமுன்னமே விவாகம்செய்வதுதான் இக்காலத்துக்குரியதென்றும் உறுதிசெய்து வெளியிட்டதாகத் தெரிறது. இதிலென்ன தோஷம்?

கா:—கம்பீரமான மனோபாவத்துடன் நீசொல்லுவது எனக்கும் நியாயமாகவே தோன்றுகிறது. உலகத்திற் காரியங்களெல்லாம் காலவசமாய் வேறுபடுகின்றன. பிரும்மசரியத்தை யநுஷ்டித்தல், குருகுலத்தில் வசித்தல், வேதமோதுதல், உதயத்தி லுபஸ்தானஞ்செய்தல், புருஷர்கள் முப்பதுவயதுக்குப்பிறகு இல்வாழ்க்கையிற் பிரவேசித்தல், அக்கினியை இடைவிடாது உபாசித்தல், வைச்வதேவபலி நியமப்படிகொடுத்தல், ஸ்தாலீபாகம்செய்தல், முதலியசடங்குகளின் சமாசாரமே இப்பொழுது மறைந்துவிட்டது. ரஜோகுண தமோகுணங்கள் மேலிட்ட நாமெங்கே? சுருதியிலும் ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்ட தர்மங்களெங்கே? அந்தத் தர்மங்களிற் சிலவற்றைமாத்திரம் நாம் இப்பொழுது அநுபவத்துக்குக்கொண்டுவரவேண்டும் என்னும் வாதம் விவேகிகள் ஒப்புக்கொள்ளத்தக்கதில்லை.

ச:— பிறகு அக்கினிபூஜை முதலியவைசெய்து தம்பதிகள், தங்களுக்குள் பரஸ்பரம் அன்பு விருத்தியாகவேண்டும் என்கிற பயனைக் கருதிச் சில ஆகுதிகளோ ஹோமம்பண்ணி ஜயாதிஹோமத்தையும் முடிக்கவேண்டும். அதன்பின் மணமகன், அக்கினிக்குமேல்புறத்திற் கிழக்குமுகமாக மணமகளை உட்காரச்செய்து ஹோமஞ்செய்

தெஞ்சியநெய்யிற் கொஞ்சமெடுத்து அவளுடைய தலையிற் றடவ வேண்டும். பின்பு மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு தம்பதிகள் ஒருவரையொருவர் பார்க்கவேண்டும். அதன்பிறகு மணமகன் மணமகளுடையமார்பிலும் மணமகள் மணமகனுடைய மார்பிலும் ஹோமஞ்செய்தெஞ்சிய நெய்யிற் சிறிதெடுத்துத் தடவவேண்டும். பின்பு மணமகன் மணமகளுடன் பள்ளியறையடைந்து தம்பதிகளின் சரீரஸம்ஸர்க்கத்தைக்குறிக்கிறமந்திரங்களை நன்கு ஜெபிக்க வேண்டும்.

கா:–ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளுதல், பிறகு மார்பைத் தொடுதல், அதன்பின் பள்ளியறையிற் பிரவேசித்தல் இவைகளைக் கேட்கும்பொழுது முதலிற் கண்களிப்படைதல், பிறகு மனத்தின் ஒருமைப்பாடு முதலிய காமசாத்திரத்திற் சொல்லுகிற பிரகாரங்கள் மனதிலுதிக்கின்றன.

ச:– பள்ளியறையில் ஜெபிக்கவேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட மந்திரங்கள், ஸ்திரீ புமான்களின் புணர்ச்சிவழிகளைத் தெளிவாய் உபதேசிக்கின்றன.

கா:–(புன்சிரிப்புடன்) தெரியாதவிஷயத்தை உபதேசிப்பதல்லவோ சாஸ்திரத்தின் இலக்கணம். ஆகாரம், நித்திரை, பயம், புணர்ச்சி முதலியவற்றைப் பசுக்களும் அறிந்திருக்கின்றன. அப்படியிருக்க மந்திரங்கள் புணர்ச்சிவழிகளை வர்ணிப்பதற்குக் காரணம் என்னால் அறியமுடியவில்லை.

ச:– அந்தமந்திரத்தில், புணர்ச்சியென்பது உலகத்தின்க்ஷேமத்துக்காக ஏற்பட்ட வேள்வியேயன்றிச் சரீரசுகத்துக்காக ஏற்பட்டதன்று; தம்பதிகளின்புணர்ச்சியென்பது யாகஞ்செய்புமுன் அரணிக்கட்டையைக் கடைவதற்கு ஒப்பாகும்; இருவருக்கும் அச்சமயம் நல்ல (ஸத்வகுணம் மேலிட்ட) மனநிலை பொருந்தினால்தான் குணவான்களான புத்திரர்கள் பிறப்பார்கள்; குணவான்களான புத்திர பௌத்திராதிகளால் தம்பதிகளின்ஞாபகம் உலகத்தில் என்றும் அழியாதுநிற்கும்; ஓஷதிகளின்விருத்திபோலப் பிரஜைகளின் ஜனனமும் உலகத்தின் அபிவிருத்திக்குக் காரணம்; இது, பிதிர்க்களுக்குச் செலுத்தவேண்டியகடனை நிவர்த்திப்பதற்காக அநுஷ்டிக்கவேண்

டிய முக்கியமாயும் பரிசுத்தமாயுமுள்ள சடங்குகளில் ஒன்று; கேவலம் சரீரசுகத்துக்காகக் கருதத்தக்கதன்று; அவரை, நெல் முதலிய விதைகளை விதைப்பதற்குக்கூட நல்ல முகூர்த்தம் முதலியன பார்த்துச் செய்யவேண்டியதாயிருத்தலால், உலகத்துக்கு மிகுந்த நன்மையையும் பெருந்தீமையையும் விளைவிக்கக்கூடிய மனுஷ்யவித்தை விதைப்பதில் மிகவும் ஜாக்ரதையாய் நாள் நக்ஷத்திரங்கள் பார்த்துப் பரிசுத்தமான மனநிலையுடன் இருக்கவேண்டும்; இதுவிஷயத்தில் மஹரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட முறையிலிருந்து சிறிது வழுவநேர்ந்தாலும் நல்லொழுக்கமில்லாத பிழைமுதல் போன்ற பயனற்ற புதல்வர்களை உண்டாக்கி அவர்களால் உலகத்துக்கும் தமக்கும் மிக்கதேட்டை விளைவித்தபாவத்துக்குள்ளாவார்கள்; என்ற நுட்பமான அர்த்தவிசேஷங்கள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றைத் தம்பதிகள் நன்குணரவேண்டும்.

கா:—மிகவும் நன்றாயிருக்கிறது. காளிதாசனுங்கூட, சாகுந்தளத்தில் "துஷ்யந்தனால் உலகக்ஷேமத்துக்காக ஹோமஞ்செய்யப்பட்டதே ஜ்யோதிஸ் சகுந்தலை கருப்பத்திற் தரித்திருக்கிறாள்" என்றும், மேகதூதத்தில், குமாரனைக்குறித்துச் சொல்லுமிடத்து, "ஈசனால் தேவர்களுடைய க்ஷேமத்துக்காக அக்கினியில் ஹோமம்செய்யப்பட்ட சூரியனுக்கும் மேலான ஒரு விசேஷமான தேஜஸ்" என்றும், நிஷேகம் என்கிற இந்தக் காரியமானது வேதத்தினால் ஏற்பட்டது ஆகுதி என்று சொல்லப்பட்ட ஒரு பரிசுத்தமானவேள்வியென்று சூசிப்பித்தும், ரகுவம்சத்தில் திலீபரை வர்ணிக்கும்பொழுது "சாத்திரங்களை நன்குணர்ந்த அந்த அரசனுக்குப் பொருளும் இன்பமுங்கூட அறமாகவே மாறின" என்று முன்சொல்லிய விஷயத்தையே அழகுபடுத்திக்கூறியும் முன்காலத்தில் "தர்மத்தை அநுசரித்துவளர்ந்தது காமம்" என்பதை நன்குவிளக்கியிருக்கிறார்.

ச:— அதற்கென்ன சந்தேகம்? எல்லா சாஸ்திரங்களின் நுட்கருத்தையும் அறிந்தவர்களன்றோ மகாகவிகளெனப்படுவர். 'திதி' என்பவள் கச்யபமகரிஷியைப் பிரதோஷகாலத்தில் நிர்ப்பந்தித்துப் புணர்ந்ததனால் அஸுரர்கள் ஜனித்து உலகத்திற்குப் பெருந்தீங்கு விளைவித்தார்களென்று பாகவதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

கா:—இந்தப் பள்ளியறைவிருத்தாந்தத்துடன் விவாகச்சடங்குகள் முடிந்து விடுகின்றனவல்லவா?

ச:— ஆம்.

கா:—தோழி! விவாகமுறைகளை நன்றாய் அறிந்துகொண்டேன். விவாகத்தில் மிகவும் முக்யமான தாலிகட்டும்விஷயத்தை நீ முழுதும் மறந்துவிட்டனை.

ச:— இல்லை; இல்லை; மஹரிஷிகள் செய்த சூத்திரங்களில் மங்களசூத்திரத்தைப்பற்றிய பிரஸ்தாபமேயில்லை. மணமகளின் கழுத்தில் மங்களசூத்திரங்கட்டவேண்டியதைக் குறிக்கும் மந்திரங்கூட வேதத்தில் ஓரிடத்தும் இல்லை.

கா:—கழுத்தில் மங்கள்சூத்திரங் கட்டும்பொழுது புரோகிதர்கள் ஏதோ சொல்லுகிறார்களே.

ச:— அவர்கள் சொல்லுவது சிஷ்டர்களாற் சொல்லப்பட்ட ஒரு சுலோகந்தான். அது மந்திரமன்று. "அழகியபெண்ணே! என் ஆயுளை விர்த்திசெய்யக்கூடிய இந்த மங்களசூத்திரத்தை உன்கழுத்திற் கட்டுகிறேன். நீயும் நூறுண்டு சுகமாய் வாழ்வாயாக" என்பது அந்தச் சுலோகத்தின் கருத்து. வடநாட்டில் அநேக இடங்களில் மங்களசூத்திரங் கட்டிக்கொள்ளும்முறை அநுஷ்டானத்தில் இல்லை. இதை உத்தேசித்தே "அந்தந்தத் தேசங்களிலும் கிராமங்களிலும் விவாகத்தில் அநுஷ்டிக்கப்படுகிற சிற்சில வழக்கங்கள் வேறுவேறுயுள்ளன. அவைகளை ஆங்காங்கு கண்டுகொள்ளவேண்டும். எல்லார்க்கும் பொதுவானமுறைகளைமட்டும் கூறுவோம்" என்று ஆச்வலாயனர் என்னும் மஹரிஷி தம் கிருஹ்யசூத்திரத்தின் ஆரம்பத்திற் கூறியிருக்கிறார்.

கா:—(மிகவும் கௌரவத்துடன்) அம்மா! உன்னையும் ஒரு மஹரிஷியாகவே நினைக்கிறேன். உன்னிடமுள்ள தெளிவானஞானம் சாதாரணமாய் மனிதர்களுக்கு வாய்க்காது. மந்திரங்களின்கருத்தை உள்ளபடி அறிந்திருக்கிறாய். பழமையான ஆர்யதர்மங்களை ஆராய்ச்சி செய்யும் முறை மிகவும் பாராட்டத்தக்கதாயிருக்கிறது. உன்னுடைய லோகாநுபவம் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. விஷயங்களைப் புகட்டுந்திறனும் வியக்கத்தக்கதே. உன்னுடைய இனிமையான சொற்கள் கர்ணம்ருதத்தை வருஷிக்கின்றன. உன்னைப் பார்ப்பதனாலே ஆத்துமா பரிசுத்தமடைகிறது. ஸம்பாஷத்தினாலடையும்பயனை எழுதிமுடியாது. இவ்விதமாகவே கிருஹ்யசூத்திரத்திலுள்ள மற்றவிஷயங்களின் நுட்பமான உட்கருத்தையும் உன்னிடமிருந்தே அறிந்துகொள்ளவிரும்புகிறேன்.

ச:— உன்னிடமுள்ள ஸத்துவகுணத்தினால் நீ இவ்விதம் பேசுகிறாயேயன்றி என்னிடத்திலுள்ள குணத்தினாலன்று. இப்பொழுது மிகவும் நேரமாய்விட்டது. மற்ற விஷயங்களை வேறொருசமயம் பேசுவோம். சுபம். சுபம்.

ர. கிருஷ்ணமாசாரியர் M. A.
வித்யார்தி.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

இருபதாம் வருஷக் கொண்டாட்ட

மங்களவாழ்த்து.

திருமக டழீஇய வருண்முகப் பூவினை
யுரைமக டழீஇய வொண்மலர் நாவினை
தன்னுறு செய்கையைத் தண்கடல் வளாகத்து
மன்பதை யொழுக்கமா மகிழ்ந்துகொள் பேற்றினை
கயவர் தம்மையுங் கசிந்தாங் களிக்கு
நயவ ராக்கு நலம்புரி கொடையினை
ஆங்கில வாரியருந் தகத்திய னினையை
ஒன்னுர் தம்மையு முருக்குமுரை சான்றினை
மன்னர் தம்மொடு மன்பதை மதிக்குந்
தன்னருந் தொல்சீர்த் துறைப்பணித் தலைமையை
தமிழறி வுடையரே தக்கோ ராமெனக்
குமிழ்மூக் கரிவையர் கூறச்செய் குணத்தினை
இடமெனப் பொறியம ரிறையென வுரைக்கும்
வடமொழிப் பெயர்க்கு மாண்புதந் தாண்டனை
இனையை யாதலி னந்தண கேண்மதி
நின்னை யெமதிறை நீள்வளத் தேவை
தன்னையு மழியாத் தமிழையும் வீழியெனக்
கொண்டிலகு புரக்குங் கோடாச் செங்கோல்
மன்னவர் தங்கண் மன்னவர் தமக்கெலா
நன்னர்செய் யிறையென நற்பெயர் படைத்த
காவல னம்மா கற்றுத்துறை போகிய
நாவலர் பாவலர் நண்ணு தமிழ்க்கூடற்
செந்தமிழ் மன்றத்துச் சென்னி யிருக்கைமிசை
மைந்துட னிருக்கென வாழ்த்திவைத் திருபான்
ஆண்டு வீழாவை நடத்தென வளித்தனன்
ஆதலின்,
வெந்து பொறிப்பவெங் கொந்தழ னுண்மணற்
கானத் தறுகெழீஇ யானைக் காத்தென
நந்தமிழ் நயக்க நாடிய கடவுளாம்
அருமை சான்ற விருமைதரும் பெரியோய்
நற்றமிழ் வானர் நயந்ததம் மில்லையு
மற்றுரை சான்ற நூலையு மகிழ்ந்து
போற்றிக்குறை மாற்றிப் பொற்புட னமைதற்
கேற்றவழி யொன்றினை யீதென வுரைத்து
வையகத் தின்பெலா மலர்ந்தொருங்கு பெறீஇ
வாழுநி பல்லாண்டு வாழுநி
யாழிசூ ழுலகி னதனெலாம் படைத்தே,

இங்ஙனம்,

K. S. நவநீதகிருஷ்ணபாரதி,
தலைமைத்தமிழ்ப்பண்டிதன்.

ஸ்ரீ ராமநாதவித்யாலயம்,
சுன்னாகம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1920 ஆவ ஆகஸ்டுமீ த்திய வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1920 August			வரவு 1919 August			விவரம்	செலவு 1920 August			செலவு 1919 August		
I General Section:							I General Section:						
(1) நன்கொடை, மாதச்சந்தா வகையில் வரவு ...	4199	...	...				(1) Establishment:—						
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	26	6	...				(a) மானேஜ்மெண்டாபீஸ் ஸிப்பந்திகட்குச் சம்பளம் செல்	106	15	6			
(3) Miscellaneous வரவு...	...	8	...				(b) கலாசாலே உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	95	...	...			
							(c) மாணவர்கட்குப் போவூணைக்காகச் செல் ...	22	6	10			
மொத்தம் ரூ ...	4225	14	...	479	...	1	(d) Literary Section ஸிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	45	...	...			
II Editorial Section:							(2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ...	69	11	6			
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ...	17	...	...				(3) Furniture வாங்கிய வகையிற் செல் ...	45	10	6			

(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	20	4	...						
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	14	...	...						
மொத்தம் ரூ ...	51	4	...	108	2	...			
III Press Section: (a) Printing									
(1) சங்கம்பவர்ப்பிரஸ்ஸில் நடந்தவேலைகளுக்கு அச்சுக்கூலி வரவு ...	144	4	...						
(2) ஷே வேலைகட்காக காஞ்சி தக் கிரையம் வரவு ...	9	6	...						
(3) பிரஸ் குத்தகைதாரிடமிருந்து சங்கத்திற்கு வரவேண்டிய குத்தகைப் பணம் மீதி வரவு ...	566	10	8						
(4) ஷியாரிடமிருந்து ஆர்டர்தாருக்கு வாபஸ்செய்யும்படிவந்த தொகைவரவு	100	...	...						
(5) ஷியர்ரிடமிருந்து காஞ்சி தக் கிரயம் வரவு ...	18	...	...						
(4) சங்கக்கட்டட வகையர ரிப்பேர் சம்பந்தமாகச் செலவு ...	755	11	7						
(5) தபால்,தந்திவகையில் செல் ...	26	10	3						
(6) புத்தகப்பிரசுர சம்பந்தமாகக் காஞ்சிதம், அச்சுக்கூலி வகையிற்செலவு ...	36	4	...						
(7) சங்க இல்லைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வகையில் செலவு ...	22	...	...						
(8) Miscellaneous செலவு	18	13	4						
மொத்தம் ரூ ...	1244	3	6	475	9	9			
II Editorial Section: (1) செந்தமிழ்ப் பத்திரிகை சம்பந்தமாகக் காஞ்சிதம் அச்சுக்கூலி வகையில் செலவு ...	242	4	6						
(2) தந்தி, தபால் வகையில் செலவு ...	18	14	9						
மொத்தம் ரூ ...	261	3	3	26	4	...			
III Press Section: (a) Printing									
(1) Furniture வாங்கிய வகையில் செலவு ...	31	7	...						

(B) Binding						(2) அச்சாபீஸ் சீர்திருத்தசம்பந்தமாகச் செலவு ...	22	...	...		
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில்டந்த வேலைகளுக்கு, பைண்டிங் சார்ஜ் வரவு ...	33	4	...			(3) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	52	4	5		
(2) Miscellaneous வரவு ...	1	...	...			(4) பிரஸ் குத்தகைதாருக்கு டெபாஸிட்டுத் தொக்கையில் வீப்பஸ் செய்தது ...	479	1	8		
மொத்தம் ரூ ...	872	8	8	461	... ...	(5 Special staffக்கு சம்பளம் செல்லாக்கிய வகையில் ...	33	9	4		
						(6) Miscellaneous செலவு	69	2	...		
						(b) Binding					
						(1) Furniture வாங்கியவகையில் செலவு ...	2	10	..		
						(2) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	33	11	6		
						மொத்தம் ரூ	723	13	11	477	2 8

ஆகமொத்தம் வரவு ரூ. ...	5149	10	8	1048	2	1	ஆக மொத்தம் செலவு ரூ.	2229	4	8	979	... 5
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத் தொகை ரூ. ...	176	10	11	1167	14	...	மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ...	*3097	...	11	1236	15 8
ஆகமொத்தம் ரூ. ...	5326	5	7	2216	...	1	ஆகமொத்தம் ரூ. ...	5326	5	7	2216	... 1

*By C. Pass Book 550-0-0
Advance for purchase of Press Materials at Madras 1800-0-0
Cash on hand 747-0-11

Audited and found correct.

V. S. RAMASWAMI,
AUDITOR.
1—11—20.

T. SUDARSANACHARI,
Joint Secretary,
MADURA TAMIL SANGAM.
3—9—20.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1920-ஆம் செப்டம்பர்மீ த்திய வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1920 September			1919 September			விவரம்	செலவு 1920 September			1919 September		
I General Section:							I General Section:						
(1) நன்கொடை,மாதச்சந்தா வகையில் வரவு ...	2032	...	...				(1) Establishment:— (a) மானேஜ்மெண்டு ஆபீஸ்சிப்பந்திகட்குச் சம்பளம் செல்...	136	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு.	40	15	...				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச்சம்பளம் செல் ...	107	...	...			
(3) Miscellaneous வரவு ...	...	8	...				(c) மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	96	2	...			
மொத்தம் ...	2073	7	...	359	14	2	(d) Literary Section சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ...	57	4	2			
II Editorial Section:							(2) Stationery, contingencies வாங்கியவகையிற்செல் ...	53	15	6			
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ...	11	...	...										

(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	12	3	...				(3) Furniture வாங்கிய வகையிற்செல் (புத்தக சாலைக்கு) ...	6	...	...			
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	18	3	...				(4) ஆபீஸ் உபயோகத்திற்கு Furniture வாங்கியவகையிற் செல் ...	28	14	...			
மொத்தம் ...	41	6	...	118	11	10	(5) சங்கக்கட்டட நிர்ப்பேர் வகையில் செலவு ...	22	11	...			
III Press Section:							(6) தபால், தந்திவகையில் செல் ...	22	9	9			
(a) Printing:							(7) புத்தகப்பிரசுர சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையில்செலவு ...	75	12	...			
(1) சங்கம் பிரஸ்ஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	143	14	...				(8) சங்க சில்லரை வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வகையிற் செலவு ...	4	...	...			
(2) மேலைவேலைகட்காகக் காகிதக்கிரயம் வரவு ...	5	5	...				(9) சங்கப் பரீக்ஷையில் பரிசு பெற்றவர்க்குப் பரிசுத்தொகையளித்த வகையிற் செலவு ...	105	...	...			
(3) Miscellaneous வரவு...	7	...	...				(10) சங்க வருஷோத்ஸவ சம்பந்தமாகச் செலவு ...	318	3	5			
(b) Binding:							(11) Miscellaneous செலவு	1	10	0			
சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்கு பைண்டிங் சார்ஜ் வரவு...	114	5	...										
மொத்தம் ...	270	8	...	972	15	9	மொத்தம் ...	1035	1	10	470	12	...

II Editorial Section:						
(1) சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ...	6	3	5			
(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைசம்பந்தமாக, காகிதம்அச்சுக்கூலி வகையிற் செல்	163	10	6			
(3) தபால், தந்தி வகையில் செல் ...	11	11	3			
(4) முனிசிபாலிட்டிக்கு வரிசெல்லாக்கியது ...	4	...	...			
மொத்தம் ...	185	9	2	33	7	...
III Press Section:						
(a) Printing:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	142	9	6			
(2) அச்சாபீசிற்கு டைப்ஸ் வகையறாவாங்கியது, ...	787	11	6			
(3) டை ஆபீசிற்கு Furniture வாங்கியது ...	597	15	6			
(4) அச்சாபீஸ் சீர்திருத்த சம்பந்தமாகச் செலவு	272	4	6			
(5) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	164	15	3			
(6) Miscellaneous செலவு.	44	6	...			

							(b) Binding:					
							(1) பைப்பந்திகட்டுச் சம்பளச்செல் ...	24	12	1		
							(2) மெஷீன் ரிப்பேர் வகையிற் செலவு ...	17	...	...		
							(3) Contingencies வாய்ய வகையிற்செலவு ...	79	13	...		
							மொத்தம் ...	2131	7	4	361	8 2
ஆகமொத்தம் வரவு ரூ ...	2385	5	...	1451	9	9	ஆக மொத்தம் செலவு ரூ ...	335	2	2	4	865 11 2
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ...	3097	...	11	1236	15	8	மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ...	*2130	3	7	1822	14 3
ஆகமொத்தம் ரூ ...	5482	5	11	2688	9	5	ஆகமொத்தம் ரூ. ...	5482	5	11	2688	9 5

*By C Pass Book 15—0—0
Advance for purchase of Press Materials at Madras 212—11—0
Cash on hand 1902—8—7

Audited and found correct,

V. S. RAMASWAMI,
AUDITOR,
1—11—20.

T. SUDARSANACHARI,
Joint Secretary,
MADURA TAMIL SANGAM.
8—10—20.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1920 ஆம் அக்டோபர்மீ த்திய வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1920 October			வரவு 1919 October			விவரம்	செலவு 1920 October			செலவு 1919 October		
I General Section:							I General Section:						
							(1) Establishment:—						
(1) நன்கொடை, மாதச்சந்தா வகையில் வரவு ...	260	...	...				(a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்	136	...	...			
(2) M. R. C. C. Bankல் போட்டுள்ள தொகையின்பேரில் வட்டி வரவு ...	781	6	6				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
							(c) மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	111	8	...			
(3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	80	12	6				(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	65	...	...			
(4) Miscellaneous வரவு ...	...	11	...				(2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ...	15	5	2			
							(3) புத்தகசாலைக்குப் புத்தகம் வாங்கிய வகையில் செல் ...	1	5	...			
மொத்தம் ரூ ...	1122	14	...	348	...	...							

						(b) Binding						
						(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	33	10	8			
						(2) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	55	2	9			
ஆகமொத்தம் வரவு ரூ. ...	1413	...	...	502	...	...	மொத்தம் ரூ	502	2	3	299	1	7
முந்த ஆரம்பத்திலிருந்த கையிருப்புத் தொகை ரூ. ...	2130	3	7	1822	14	3	ஆக மொத்தம் செலவு ரூ.	1910	9	...	968	8	7
						மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ...	*1632	10	7	1356	5	8
ஆகமொத்தம் ரூ. ...	3543	3	7	2324	14	3	ஆகமொத்தம் ரூ. ...	3543	3	7	2324	14	3
						*By C. Pass Book 400–0–0						
						Advance for purchase of Press Materials at Madras 912–11–0						
						Cash on hand 319–15–7						

Audited and found correct.

V. S. RAMASWAMI,

AUDITOR.

1—11—20.

T. SUDARSANACHARI,

Manager.

MADURA TAMIL SANGAM.

30—10—20.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1920-ஆம் நவம்பர்மீ த்திய வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1920 November			வரவு 1919 November			விவரம்	செலவு 1920 November			செலவு 1919 November		
I General Section:							I General Section:						
(1) நன்கொடை, மாதச்சந்தா வகையில் வரவு ...	870	8	...				(1) Establishment:— (a) மானேஜ்மெண்டு ஆபீஸ்சிப்பந்திகட்குச் சம்பளம் செல்..	136	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு.	31	10	6				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	89	9	3			
(3) Miscellaneous வரவு ...	...	2	...				(c) மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	157	14	8			
மொத்தம் ...	902	4	6	303	9	...	(d Literary Section சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ...	65	...	...			
I Editorial Section:							(2) Stationery, contingencies வாங்கியவகையிற்செல் ...	11	1	...			
(1) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தர்வரவு ...	2	...	...										
(2) விளம்பர சார்ஜ் வரவு ...	15	...	6										

(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	10	7	...				(3) Furniture வாங்கிய வகையிற் செல் ...	15	5	...			
							(4) Furniture ரிப்பேர் வகையில் செல் ...	1	4	...			
மொத்தம் ...	27	7	6	33	6	...	(5) சங்கக்கட்டட வகையரா ரிப்பேர் சம்பந்தமாகச் செலவு ...	274	10	...			
							(6) தபால், தந்திவகையில் செலவு ...	6	11	9			
III Press Section: ...							(7) சங்க சில்லரை வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	82	2	...			
(a) Printing:													
(1) சங்கம் பிரஸ்ஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	524	11	...				(8) Miscellaneous செலவு...	8	12	6			
(2) ஷேவேலைகட்காகக் காகிதக்கிரயம் வரவு ...	377	2	...				மொத்தம் ...	848	6	2	423	4	2
(3) Miscellaneous வரவு...	2	...	...				II Editorial Section:						
(b) Binding:							(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...			
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்கு பைண்டிங் சார்ஜ் வரவு...	103	2	...				(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைசம்பந்தமாக, வாங்கிய காகிதம் அச்சுக் கூலி வகையிற் செல் ...	407	6	...			
மொத்தம் ...	1006	15	...	399	3	...							

(3) தபால், தந்தி வகையில் செல் ...	10	12	3				
மொத்தம் ...	453	2	3	211	13	3

III PRESS SECTION:

(a) Printing:

(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	136	12	2			
(2) Furniture வாங்கிய வகையிற் செலவு ...	1	...	...			
(3) ரிப்பேர்வகையில் செலவு	2	12	...			
(4) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	46	5	...			
(5) Miscellaneous செலவு.	20	8	...			

(b) Binding:

(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	32	9	4			
(2) ரிப்பேர் வகையிற் செலவு	6	...	...			

								(3) Contingencies வாங்கிய வகையிற்செலவு ...	38	7	...			
								மொத்தம் ...	736	5	6	75	...	...
								ஆக மொத்தம் செலவு ரூ ...	2037	13	11	710	1	5
								மாதருடிவில் மீதி இருப்புத் தொகை ...	*1531	7	8	1382	6	3
ஆகமொத்தம் வரவு ரூ ...	1936	11	...	736	2	...		ஆகமொத்தம் ரூ. ...	3569	5	7	2092	7	8
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ...	1632	10	7	1356	5	8								
ஆகமொத்தம் ரூ ...	3569	5	7	2092	7	8	*By C Pass Book 25—0—0 Advance for purchase of Press Materials at Madras 812—11—0 Cash on hand 693—12—8							

Audited and found correct,

V. S. RAMASWAMI,

AUDITOR,

15—3—21.

T. SUDARSANACHARI,

Manager,

MADURA TAMIL SANGAM.

24—12—20.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1920-ஆம் டிசம்பர்மீ்த்திய வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1920 December			வரவு 1919 December			விவரம்	செலவு 1920 December			செலவு 1919 December		
I General Section:							I General Section:						
(1) நன்கொடை,மாதச்சந்தா வகையில் வரவு ...	120	...	...				(1) Establishment:—						
(2) M. R. C. C. Bank-ல் போட்டுள்ள தொகையின் பேரில் வட்டி வரவு. ...	781	6	6				(a) மானேஜ்மெண்டு ஆபீஸ்சிப்பந்திகட்குச் சம்பளம் செல்...	136	...	...			
(3) பரீக்ஷைக் கட்டணத்தொகை வரவு ...	1	...	...				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(4) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு.	55	10	...				(c) மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	115	19	8			
(5) Miscellaneous வரவு ...	...	1	...				(d) Literary Section சிப்பந்திகட்குச்சம்பளம் செல் ...	65	...	...			
							(2) Stationery, contingencies வாங்கியவகை விற்செல் ...	7	3	2			
மொத்தம் ...	958	1	6	20334	12	...							

II Editorial Section:							(3) பாண்டியன் புத்தகசாலைக்குப் புத்தகம் வாங்கிய வகையிலும், Hindu பத்திரிகைக்குச் சந்தாசெலுத்திய வகையிலும் செலவு...	23	...	...			
(1) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	6	4	...				(4) சங்கக்கட்டட வகையராநிப்பேர்சம்பந்தமாகச் செலவு ...	194	12	3			
(2) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	17	1	...				(5) தபால், தந்திவகையில் செலவு ...	9	3	3			
மொத்தம் ...	23	5	...	38	15	...	(6) பரீக்ஷை விஷயமாகச் செலவு ...	6	8	...			
III Press Section:							(7) Miscellaneous செலவு...	...	5	...			
(a) Printing:							மொத்தம் ...	664	10	4	20644	...	2
(1) சங்கம் பிரஸ்ஸில் நடந்த வேலைகளுக்குஅச்சுக் கூலி வரவு ...	273	...	...				II Editorial Section:						
(2) ஷெவேலைகட்காகக் காகிதக்கிரயம் வரவு ...	180	7	...				(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...			
(3) Miscellaneous வரவு...	11	8	...				(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைசம்பந்தமாக, வாங்கிய காகிதம் அச்சுக் கூலி வகையிற் செல் ...	35	...	...			
(b) Binding:													
(1) சங்கம் பைண்டிங் பீஸில் நடந்த வேலைகளுக்கு பைண்டிங் கார்ஜ் வரவு...	48	13	...										
மொத்தம் ...	513	12	...	313	15	...							

(3) தபால், தந்தி வகையிற் செல் ...	10	4	9			
மொத்தம் ...	80	4	9	75	13	6
III Press Section:						
(a) Printing:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	151	9	10			
(2) நிட்பேர்வகையில் செலவு	4	2	...			
(3) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	134	9	6			
(4) Miscellaneous செலவு.	27	2	...			
(b) Binding:			...			
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	29	10	1			
(2) Furniture வாங்கிய வகையிற் செலவு ...	...	10	...			

							(3) Contingencies வாங்கின வகையிற்செலவு ...	21	12	5		
							மொத்தம் ...	369	7	10	8	2 ...
							ஆக மொத்தம் செலவு ரூ ...	1114	6	11	20727	15 8
							மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ...	*1912	3	3	1342	... 7
ஆகமொத்தம் வரவு ரூ ...	1495	2	6	20687	10	...	ஆகமொத்தம் ரூ. ...	3026	10	2	22070	... 3
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ...	1531	7	8	1382	6	3						
ஆகமொத்தம் ரூ ...	3026	10	2	22070	...	3						

*By C Pass Book 500—0—0
Advance for purchase of Press Materials at Madras 1112—11—0
Cash on hand 299—8—3

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
15—3—21.

T. SUDARSANACHARI,
Manager,
MADURA TAMIL SANGAM.
27—1—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921 ஆம் ஜனவரிமீ த்திய வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1921 January			வரவு 1920 January		
I General Section:						
(1) நன்கொடை, மாதச்சந்தா வகையில் வரவு ...	250	...	...			
(2) M. U. C. S. & Stores-ல் போட்டுள்ள தொகையின் பேரில் வட்டி வரவு ...	2	...	2			
(3) சங்கப்பரீக்ஷைக் கட்டணத் தொகை வரவு ...	131	4	...			
(4) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	66	1	9			
(5) Miscellaneous வரவு ...	...	6	...			
மொத்தம் ரூ ...	449	11	11	676	12	9

விவரம்	செலவு 1921 January			செலவு 1920 January		
I General Section:						
(1) Establishment:—						
(a) மானேஜ்மெண்டாபீஸ் ஜிப்பந்திகட்குச் சம்பளம் செல்	136	...	...			
(b) கலாசாலே உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(c) 'Literary Section ஜிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	65	...	...			
(2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ...	7	8	7			
(3) Furniture வாங்கிய வகையிற் செல் ...	2	8	...			
(4) சங்கக்கட்டட வகையராரிப்பேர் சம்பந்தமாகச் செலவு ...	222	...	...			

II Editorial Section:							(5) தபால், தந்திவகையில் செல் ...	8	3	9		
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ...	6	...	...				(6) சங்க சில்லரை வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி எழுத்துருக்கூலிவகையில் செலவு ...	24	3	...		
(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	16	...	...				(7) Miscellaneous செலவு...	...	13	...		
(3) விளம்பர சார்ஜ் வரவு ...	1	8	...				மொத்தம் ரூ ...	573	4	4	515	12 4
(4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு	4	1	...									
மொத்தம் ரூ ...	27	9	...	130	7	..	II Editorial Section:					
							(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...		
III Press Section:							(2) செந்தமிழ்ப் பத்திரிகை சம்பந்தமாக வரங்கியகாகிதம் அச்சுக்கூலிவகையில் செலவு ...	90	14	...		
(a) Printing							(3) தபால், தந்தி வகையில் செலவு ...	20	5	3		
(1) சங்கம் பிரஸ்ஸில்நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	144	4	...				மொத்தம் ரூ ...	146	3	3	136	12 ...
(2) ஜே வேலைகட்காகக் காகிதக் கிரயம் வரவு ...	1	8	...									

(b) Binding					III Press Section:					
					(a) Printing					
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் செய்த வேலைகளுக்கு, பைண்டிங் சார்ஜ் வரவு ...	59	14	...		(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	128	10	11		
					(2) அச்சாபீசிற்கு டைப்ஸ் வகையார வாங்கியது ...	171	2	...		
மொத்தம் ரூ ...	205	10	...	285	(3) பிப்பேர்வகையிற்செலவு.	7	12	...		
					(4) Furniture வாங்கிய வகையில் செலவு ...	1	3	...		
					(5) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	39	15	4		
					(6) Miscellaneous செலவு..	23	8	...		
					(b) Binding					
					(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	27	8	3		
					(2) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	65	2	4		
					மொத்தம் ரூ	464	13	10	...	...

ஆகமொத்தம் வரவு ரூ. ...	682	14	11	1092	3	9	ஆக மொத்தம் செலவு ரூ.	1184	5	5	652	8	6
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத் தொகை ரூ. ...	1912	3	3	1342	...	7	மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ...	*1410	12	9	1781	12	...
ஆகமொத்தம் ரூ. ...	2595	2	2	2434	4	4	ஆகமொத்தம் ரூ. ...	2595	2	2	2434	4	4

*By C. Pass Book 6-0-0
Advance for purchase of Press Materials at Madras 1112-11-0
Cash on hand 292-1-9

Audited and found correct.

V. S. RAMASWAMI,

AUDITOR.

15—3—21.

LAKSHMINARAYANAN,

Ag. Manager.

MADURA TAMIL SANGAM.

18—2—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921 ஆம் பிப்ரவரிமீ த்து வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1921 February	வரவு 1920 February	விவரம்	செலவு 1921 February	செலவு 1920 February
I GENERAL SECTION:			I GENERAL SECTION:		
(1) சங்கம் உப அக்ராசனரி பதியும், ஸண்டிபட்டி ஜமீந்தாரு மான மகா-ள-ள-ஸ்ரீ S.Rm.M.Ct. பெத்தாச்சிசெட்டியா ரவர்களிடமி ருந்து சங்கக்கட்டிட பண்டிக்காக வாக்களித்த தொகை வரவு	5000		(1) ESTABLISHMENT:— (a) மானேஜ்மெண்டாபீ ஸ் இப்பந்திகட்குச் சம்பளம் செல்	129 8 9	
ஷேயார்மூலம் வட்டிக்குப் போடப்பட்டிருந்த சங்கக்கட்டிட பண்டித்தொகை வட்டியுள் பட வரவு	9079-6-2		(b) கலாசாலே உபாத்தியா யர்கட்குச் சம்பளம் செல் ...	107	
ஷேயாரிடமிருந்து, 1920, 1921-ம் வருடங்கட்கு வரவேண் டிய மாதச்சந்தாத்தொகை வரவு	ரூ 1200-0-0		(c) Literary Section இப் பந்திகட்குச் சம்பளம் செல் ...	20	
			(2) Stationery, contingen- cies வாங்கியவகையில் செல் ...	24 14 4	
			(3) பாண்டியன் புத்தகசாலைக் குப் புத்தகம் வாங்கியவகையிலும், 'Hindu' பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும் செலவு ...	6 4 ...	
			(4) சங்ககட்டடத்தைச் சங்கத் திற்காகக் கிரயத்திற்கு வாங்கிய வகையில், மாட்சிமைதங்கிய கனம் அக்ராசனரிபதியவர்கள், தம்	...	

புதுக்கோட்டைலமஸ்தானம் மூதலிய இடங்களிலிருந்து வழக் கப்படி வரவேண்டியமாதச்சந்தாத் தொகை வரவு 100-0-0							சங்கத்தினின்றும் கிரயத்தொ கை செலுத்தியதில் ஷியாருக்குச் சங்கத்தினின்றும் செல்லாகியது போக மீதம் செல்லாகவேண்டி யிருந்ததைச் செல்லாகியது ரூ 9858-5-4 ஷெ தொகைக்குவட்டிவகையில் செல்லாகியது ரூ 1641-10-8			
ஆக ரூ 15,379-6-2	15,379	6	2				ஆக ரூ 11,500-0-0	11,500	...	...
(2) சங்கப்பரீக்ஷைக் கட்டணத் தொகை வரவு ...	21	14	...				(5) சங்கக்கட்டடவகையரா நிப் பேர் சமபந்தமாகச் செலவு ...	26	13	9
(3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	16	5	9				(6) தபால்தந்திவகையில் செல்	25	13	...
மொத்தம் ரூ ...	15,417	9	11	272	7	9	(7) முனிஸிபாலிடிக்கு வரி செல் லாச்சியது ...	56	8	...
II. EDITORIAL SECTION:							(8) சங்கப்பதிப்புப் புத்தகப்பிர சுரசம்பந்தமாகக் காகிதம்வாங்கிய வகையில் செலவு ...	306	15	...
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிட மிருந்து சந்தா வரவு ...	238	14	...				(9) சங்கச்சில்லரைவேலைகள்சம் பந்தமாக அச்சுக்கூலி பைண்டிக் கூலிவகையில் செலவு ...	13	1	...
(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக் குச் சந்தா வரவு ...	214	4	...				(10) சங்கப்பரீக்ஷைவிஷயமாகச் செலவு ...	80	3	...
(3) விளம்பரக்கூலி வரவு ...	3	...	...				(11) சங்கத்தின் அக்ராசனஞ்சி பதியவர்களிடமிருந்து சங்கத்திக் குக் கடனாக வரவுவந்திருந்ததொ கையை ஷியாருக்குச் செல்லாக் கியது ரூ 1800-0-0			
(4) 'செந்தமிழ்'ப் பழைய தொகு திகள் விற்ற வகையில் வரவு	5	1	...							
மொத்தம் ரூ ...	461	3	...	17	11	...				

III Press Section:						சங்கத்தின் உப-அக்கிராசனதிபதியவர்களிடமிருந்து சங்கத்திற்குக் கடனாக வரவுவந்திருந்த தொகையை ஷே யாருக்குச் செல்லாகியது ரூ 1200 0 0						
(a) Printing						ஆக ரூ 3000-0 0	3000	...	...			
(1) சங்கம் பிரஸ்வில்நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	224	6	...			(12) Miscellaneous செலவு ...	...	12	...			
(2) ஷே வேலைட்சாகக் காகிதக் கிரயம் வரவு ...	29	6	...			மொத்தம் ரூ ...	15,297	12	10	586	15	8
(3) Miscellaneous வரவு ...	...	10	...			II Editorial Section:						
(b) Binding						(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல ...	35	...	...			
(1) சங்கம் டைபெண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்கு, பைண்டிக் கூலி வரவு ...	38	9	...			(2) செந்தமிழ்ப் பத்திரிகை சம்பந்தமாக வாங்கியகாகிதம் அச்சுக்கூலவகையில் செலவு ...	91	13	...			
						(3) தபால்,தந்திவகையில் செல்	32	4	...			
மொத்தம் ரூ ...	292	15	...	266	9	மொத்தம் ரூ ...	159	1	...	24	14	6
						III Press Section:						
						(a) Printing. (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	125	7	11			
						(2) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	47	3	9			
						(3) Miscellaneous செலவு ...	20	7	...			
						(b) Binding. (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	27	15	6			

						(2) Contingencies வகையில் செலவு		16	6		
						மொத்தம் ரூ		237	2 8	119	10
ஆகமொத்தம் வரவு ரூ.	16,171	11	11	556	11 9						
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத் தொகை ரூ.	1410	12	9	1781	12	மாத முடிவில் மிகியிருப்புத் தொகை		*1888	8 2	1606	15 7
ஆகமொத்தம் ரூ.	17,582	8	8	2338	7 9	ஆகமொத்தம் ரூ.		17,582	8 8	2338	7 9

*By C. Pass Book 556-0-0
Advance for purchase of Press Materials at Madras 1112-11-0
Cash on hand 219-13-2

Audited and found correct.

V. S. RAMASWAMI,
AUDITOR.
15—3—21.

LAKSHMINARAYANAN,
Ag. Manager.
MADURA TAMIL SANGAM.
2—3—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தி

1921-வது மார்ச்சுமீ க்கு வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1921 March			1920 March			விவரம்	செலவு 1921 March			1920 March		
I General Section:							I General Section:						
(1) Donations Contributions வகையில் வரவு ...	110	...	...				(1) Establishment:— (a) மானேஜ்மெண்டி குபீஸ் பிப்பத்திரட்குச் சம்பளம் செல் ..	86	...	..			
(2) M. R. C. C. Bank-ல் போட்டுள்ள தொகையின் பேரில் வட்டி வரவு. ...	844	6	6				(b) கலாசாலேஉபாத்தியாயர் கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(3) சங்கப் பரீக்ஷைக்கட்டணத்தொகை வரவு ...	1	...	...				(c) மாணவர்கட்குப் போஷனைக்காகச் செல் ...	45	1	...			
(4) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு.	37	13	...				(d) Literary Section பிப்பத்திரட்குச் சம்பளம் செல் ...	27	4	2			
(5) (a) Bankல் போட்டுள்ள தொகை withdraw செய்தது 1050-0-0							(2) Stationery, contingencies வாங்கிவகையிற்செல் ...	8	8	...			
							(3) புத்தகசாலேக்குவரும் பத்திரிகைக்குச் சந்தா செல் ...	2	12	...			
							(4) Furniture வாங்கிய வகையில் செல் ...	14	...	...			
							(5) சங்கக்கட்டட வகையாரா நிப்போர்சம்பந்தமாகச் செலவு ...	111	13	...			

(b) Miscellaneous வரவு 1-4-9						(6) தபால், தந்திலகையிற்செலவு ...		9	12	6		
ஆக 1051-4-9	1051	4	9			(7) புத்தகப்பிரசாரசம்பந்தமாகக் காகிதக்கிரையம் அச்சுக்கூலிவகையிற் செலவு ...		111	4	...		
மொத்தம் ...	2044	8	3	236	4	6	(8) சங்கச்சில்லரைவேலைகள்சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டுகூலிவகையிற் செலவு ...		50	4	...		
							(9) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ...		65	12	...		
II Editorial Section:							(10) (a) Bankல் withdraw செய்த தொகையை மறுபடியும் deposit செய்தது 1050-0-0						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	51	8	...				(b) Miscellaneous செலவு 1-6-0						
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	156	14	...				ஆக 1051-6-0	1051	6	...			
(3) விளம்பரக்கூலி வரவு ...	3	...	...				மொத்தம் ...	1690	12	8	552	4	4
(4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	27	2	...										
மொத்தம் ...	238	8	...	561	10	...	II Editorial Section:						
III Press Section:							(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...			
(a) Printing:							(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைசம்பந்தமாக வாங்கிய காகிதம் அச்சுக்கூலி வகையிற் செல் ...	43	9	6			
(1) சங்கம் பிரஸ்ஸில் நடத்த வேலைகளுக்கு அச்சுக்கூலி வரவு ...	215	3	...										

(2) மேலேலேட்காகச் காகி தக்கிரயம் வரவு ...	14	4	...				(3) தபால், தந்திவகையிற்செல்	17	13	3
(b) Binding:							மொத்தம் ...	96	6	9	57	3	6
(1) சங்கம் பைண்டிங் டிபார்ட்மெண்டில் நடந்த வேலைகளுக்கு பைண்டிக்கூலி வரவு ...	56	8	...				III Press Section:			
மொத்தம் ...	285	15	..	235	...	..	(a) Printing:			
							(1) பிப்பர்ஹிகட்குச் சம்பளம் செல் ...	196	2	1			
							(2) அச்சாபீஸிற்கு மேடப்ஸ் வகையரா வாங்கியவகையில் செல்	692	14	...			
							(3) Furniture வாங்கிய வகையிற் செல் ...	102	6	...			
							(4) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	39	14	7			
							(5) அச்சாபீஸ் சிர்திருத்தசம் பந்தமாகச் செலவு ...	288	9	...			
							(b) Binding:			
							(1) பிப்பர்ஹிகட்குச் சம்பளம் செல் ...	21	13	2			

							(2) Contingencies வாக்கிய வகையிற் செலவு ...	45	12	10		
							மொத்தம் ...	1387	7	8	1	7 ...
							ஆக மொத்தம் செலவு ரூ ...	3174	11	1	610	14 10
							மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ...	*12-2	12	4	2028	15 3
ஆகமொத்தம் வரவு ரூ ...	2568	15	3	1032	14	6	ஆகமொத்தம் ரூ. ...	4457	7	5	2639	14 1
கை தும்பத்திலிருந்த வகை இருப்புத்தொகை ...	1888	8	2	1606	15	7						
ஆகமொத்தம் ரூ ...	4457	7	5	2639	14	1	*By C Pass Book 850—0 0 Advance for purchase of Press Materials at Madras 104-3—8 Cash on hand 328—8—8					

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
5—6—21.

LAKSHMINARAYANAN,
Ag. Manager,
MADURA TAMIL SANGAM.
2—4—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921-ஆம் ஏப்பிரல்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1921 April	வரவு 1920 April	விவரம்	செலவு 1921 April	செலவு 1920 April
I General Section:			I General Section:		
(1) Donations, Contributions வகையில் வரவு ...	100	... ...	(1) Establishment:—		
(2) சங்கப் பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	19 4 ...	... ...	(a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	86	... ...
(3) Miscellaneous வரவு ...	10 13 ...	... ...	(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	... ...
மொத்தம் ரூ ...	130 1 ...	62,367 9 9	(c) மாணவர்கட்குப் போவதணைக்காகச் செல் ...	119 5 7	... ...
II Editorial Section:			(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	60 10 4	... ...
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ...	15	... ...	(2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ...	9 10 2	... ...
			(3) புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல் ...	2 12 ...	... ...

(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	18	8	...	...	...	...	(4) சங்கக்கட்டட வகையராரிப் பேர் சம்பந்தமாகச் செலவு ...	...	8	6	...	...	...
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	...	4	...	...	...	...	(5) தபால், தந்திவகையில் செல்	11	11	3	...	...	...
							(6) புத்தகப்பிரசர சம்பந்தமாகக் காகிதக் கிரயம் அச்சுக்கூலி வகையிற் செலவு ...	41	12	...	...	...	...
மொத்தம் ரூ ...	33	12	...	161	...	...	(7) சங்கச் சில்லரை வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	...	12	...	...	...	...
III Press Section:							(8) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ...	1	8	...	...	...	...
(a) Printing							(9) Miscellaneous செலவு ...	...	3	...	...	...	...
(1) சங்கம் பிரஸ்ஸில்நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	161	4	6	...	...	...	மொத்தம் ரூ ...	441	12	10	63,588	11	4
(2) ஷே வேலைட்காகக் காகிதக் கிரயம் வரவு ...	159	2	...	...	...	...	II Editorial Section:						
(3) Miscellaneous வரவு ...	...	8	...	...	...	...							
(b) Binding							(1) பிப்பத்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...	...		...
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்கு, பைண்டிங் சார்ஜ் வரவு ...	85	7	...	...	...	...	(2) செந்தமிழ்ப் பத்திரிகை சம்பந்தமாக வாங்கியகாகிதம் அச்சுக் கூலிவகையில் செலவு ...	40	...	...	...		...
							(3) தபால், தந்திவகையில் செல்	8	4	9	...		...
மொத்தம் ரூ ...	406	5	6	265	...	...	மொத்தம் ரூ ...	83	4	9	8	1	9

III Press Section:						
(a) Printing.						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	136	5	...	...	...	...
(2) அச்சாபீசிற்கு டைப்ஸ்வகையரா வாங்கியவகையில் செல் ...	75	...	...	...	...	...
(3) Furniture வாங்கிய வகையில் செல் ...	25	12	...	...	...	...
(4) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	187	13	11	...	...	...
(5) Miscellaneous செலவு ...	...	15	6	...	...	...
(b) Binding.						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	27	3	5	...	...	...
(2) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	34	12	9	...	...	...
மொத்தம் ரூ	487	14	7	...	...	...

ஆகமொத்தம் வரவு ரூ. ...	570	2	6	62,793	9	9	ஆக மொத்தம் செலவு ரூ.	1013	...	2	63,596	13	1
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத் தொகை ரூ. ...	1282	12	4	2028	15	3	மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ...	*839	14	8	1225	11	11
ஆகமொத்தம் ரூ. ...	1852	14	10	64,822	9	...	ஆகமொத்தம் ரூ. ...	1852	14	10	64,822	9	...

*By C. Pass Book 650-0-0
Cash on hand 189-14-8

Audited and found correct.

V. S. RAMASWAMI,

AUDITOR.

5—6—21.

LAKSHMINARAYANAN,

Ag. Manager.

MADUBA TAMIL SANGAM.

2—5—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921-ஆம் மேமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1921 May			வரவு 1920 May			விவரம்	செலவு 1921 May			செலவு 1920 May		
I General Section:							I General Section:						
(1) Donations Contributions வகையில் வரவு ...	100	...	...				(1) Establishment:— (a) மானேஜ்மெண்டு ஆபீஸ் செப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	164	3	8			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு.	39	10	6				(b) கலாசாலேஉபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(3) Miscellaneous வரவு ...	...	...	6				(c) மாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	126	7	2			
மொத்தம் ...	139	11	...	118	...	...	(d) Literary Section செப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	59	...	...			
							(2) Stationery, contingencies வாங்கியவகையிற்செல் ...	17	8	11			
II Editorial Section:							(3) புத்தகசாலைக்குவரும் பத்திரிகைக்குச் சந்தா செல் ...	2	12	...			
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	12	...	...				(4) Furniture வாங்கிய வகையில் செல் ...	2	12	...			
							(5) சங்கக்கட்டட வகையாகிப்பேர்சம்பந்தமாகச் செலவு ...	57	5	...			

(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	29	6	...				(6) தபால், சுங்கவகையிலுமலவு ...	9	9	6		
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	61	11	...				(7) புத்தகப்பிரசுரசம்பந்தமாகக் காகிதக்கிரயம் அச்சுக்கூலி வகையிற் செலவு ...	1				
மொத்தம் ...	103	1	...	36	10	...	(8) சங்கச்சில்லரைவேலைகள்சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டுக்கூலிவகையிற் செலவு ...	3	8	...		
							(9) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ...	1	9	...		
III Press Section:							(10) Miscellaneous செலவு	1	1	...		
							மொத்தம் ...	553	12	3	552	... 11
(a) Printing:												
(1) சங்கம் பிரஸ்ஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக்கூலி வரவு ...	248	...	...				II Editorial Section:					
(2) ஷவேலைகட்காகக் காகிதக்கிரயம் வரவு ...	63	12	...				(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...		
(3) Miscellaneous வரவு...	31	3	...				(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைசம்பந்தமாக வாங்கிய காகிதம் அச்சுக்கூலி வகையிற் செல் ...	107	13	...		
(b) Binding:												
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்கு பைண்டிங்சார்ஜ் வரவு ...	23	8	...				(3) தபால், தந்திவகையிற்செல்	19	13	6		
மொத்தம் ...	366	7	...				மொத்தம் ...	162	10	6	8	13 6

III Press Section:							
(a) Printing:							
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	167	3	4				
(2) அச்சாபீஸிற்கு டைப்ஸ் வகையரா வாங்கியவகையில் செல்	39	2	6				
(3) ரிப்பேர் வகையிற்செலவு...	3	4	...				
(4) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	80	1	7				
(5) Miscellaneous செலவு ...	...	7	...				
(b) Binding:							
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	32	5	7				
(2) Contingencies வாங்கிய வகையிற் செலவு ...	44	4	...				
மொத்தம் ...	366	12	...	...	...	...	

ஆகமொத்தம் செலவு ரூ ...	609	3	...	154	10	..	ஆக மொத்தம் செலவு ரூ ...	1083	2 9	560	14 5
மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ...	839	14	8	1225	11	11	மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ...	*365	14 11	819	7 6
ஆகமொத்தம் ரூ ...	1449	1	8	1380	5	11	ஆகமொத்தம் ரூ. ...	1449	1 8	1380	5 11

*By C Pass Book 250—0—0
Cash on hand 115-14-11

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
5—6—21.

LAKSHMINARAYANAN,
Ag. Manager,
MADURA TAMIL SANGAM.
1—6—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921-வது ஜூன்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1921 June			1920 June			விவரம்	செலவு 1921 June			1920 June		
I GENERAL SECTION:							I GENERAL SECTION:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	496	...	...				(1) ESTABLISHMENT:— (a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	106	...	...			
(2) M.R.C.C. Bank ல்போட்டுள்ள தொகையின்பேரில் வட்டி வரவு ...	781	6	6				(b) க்ளாசாலேடாத்தியர்கட்குச் சம்பளம் செல் ...	112	...	...			
(3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு.	158	3	3				(c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	20	...	..			
(4) (a) M.R.C.C. Bank ல் Deposit செய்துள்ள தொகையை Withdraw செய்தது ரூ50011—5—0							(2) Stationery, contingencies வாங்கியவகையிற்செல் ...	7	8	9			
							(3) புத்தகசாலேக்குப் புத்தகம் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தாசெலுத்திய வகையிலும் செலவு. ...	39	12	..			
							(4) Furniture வாங்கிய வகையில் செல் ...	3	4	...			

(b) Miscellaneous 0—8—0												
ஆக ரூ50011—13—0	50011	13	...									
மொத்தம் ...	51447	6	9	50260	9	...						
II Editorial Section:												
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	12	...	...									
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	23	2	...									
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	72	3	...									
மொத்தம் ...	107	5	...	35	2	...						
III Press Section:												
(a) Printing:												
(1) சங்கம் பிரஸ்ஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	207	7	...									

(5) சங்கக்கட்டட வகையாராயிப்போச்சம்பந்தமாகச் செலவு ...	87	3	...									
(6) தபால், தந்திவகையில்...	10	3	9									
(7) சங்க சில்லரைவேலைகள் சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங் கூலி வகையிற் செல் ...	22	10	...									
(8) கடன்வகைக்குச் செல்...	100		...									
(9) (a) M.R.C.C. Bankல் மறுபடியும் Deposit செய்தது ரூ50011—5—0												
(b) Miscellaneous செலவு ரூ0—10—0												
ஆக ரூ50011—15—0	50011	15	0									
மொத்தம் ...	50520	8	6	50843	4	10						

(2) ஷெவேலேகட்காகக் காகிதக்கிரயம் வரவு ...	18	1	...							
(b) Binding:										
(1) சங்கம் பைண்டிங் ஆபீசில் கடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	72	8	...							
மொத்தம் ...	298	...	...	100	...	...				

II Editorial Section:								
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...					
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகம் இவற்றின் பிரசுர சம்பந்தமாக வாங்கிய காகிதம் அச்சுக்கூலி வகைக்குச்செல் ...	239	10	3					
(3) தபால், தந்திவகையிற்செல்	24	10	9					
மொத்தம் ...	299	5	...				8	4	9
III Press Section:								
(a) Printing:								
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	148	9	7					
(2) ரிப்பேர் வகையிற்செலவு ...	20	14	...					
(3) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	49	2	8					
(4) Miscellaneous செலவு ...	28	6	...					

								(b) Binding:								
								(1) பிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...				18	7	9		
								(2) Contingencies வாங்கிய வகையிற் செலவு ...				52	...	...		
								மொத்தம் ...				317	8	...	22	7	3
ஆகமொத்தம் வரவு ரூ ...	51852	11	9	50395	11	..										
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ...	365	14	11	819	7	6		ஆக மொத்தம் செலவு ரூ ...				51137	5	6	50874	...	10
								மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ...				1081	5	2	341	1	8
ஆகமொத்தம் ரூ ...	52218	10	8	51215	2	6		ஆகமொத்தம் ரூ. ...				52218	10	8	51215	2	6
								*By C Pass Book 550—0—0								
								Cash on hand 531—5—2								
											1081—5—2					

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
2—7—21.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
1—7—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921-ஆம் ஜூலைமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1921 July			வரவு 1920 July			விவரம்	செலவு 1921 July			செலவு 1920 July		
I General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	100	...	...				(1) Establishment:— (a மானேஜ்மெண்ட் ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	123	10	8			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு.	62	1	...				(b) கலாசாலேஉபாத்தியாயர் கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(3) Miscellaneous வரவு...	8	9	6				(c) கலாசாலே மாணவர்கட்குப் போஷணைக்காகச்செல் ...	26	13	...			
							(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	31	9	9			
மொத்தம் ...	170	10	6	1483	9	2							
II Editorial Section:							(2) Stationery, contingencies வாங்கியவகையிற்செல் ...	24	12	3			
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	5	...	...				(3) புத்தகசாலேக்குப் புத்தகம் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தாச்செலுத்தியவகையிலும் செலவு. ...	20	12	...			

(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக் குச் சந்தாவரவு ...	45	10	...			(4) சங்கக் கட்டட வகையாரா நிப்பேர்சம்பந்தமாகச் செலவு ...	45	1	9	
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	10	12	...			(5) தபால், தந்திவகையில் செலவு ...	15	6	6	
						(6) சங்க சில்லரைவேலைகள் சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செல் ...	6	...	...	
மொத்தம் ...	61	6	...	70	...					
						மொத்தம் ...	401	1	11	1295 12 ...
III Press Section:										
(a) Printing:										
(1) சங்கம் பிரஸ்ஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	136	9	...							

(2) ஷேவேலைகட்காகக் கழி தக்கிரயம் வரவு ...	34	...	...				II Editorial Section:				
							(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...	
(b) Binding:							(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகம் இவற்றின் பிரசுர சம்பந்தமாக வாங்கிய காகிதம் அச்சுக்கூலி வகைக்குச்செல்...	31	12	...	
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் கடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	88	13	...				(3) தபால், தந்திவகையிற்செல்	12	9	6	
							மொத்தம் ...	79	5	6	51 2 ...
(2) Miscellaneous வரவு...	...	3	...				III Press Section:				
							(a) Printing:				
மொத்தம் ...	259	9	...	25	4	...	(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	143	14	9	
							(2) Contingencies வாங்கிய வகையில் செலவு ...	42	15	9	
							(b) Binding:				
							(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	29	...	...	

							(2) Contingencies ..வாகீய வகையிற் செலவு ...	23	9	7		
							மொத்தம் ...	239	8	1	396	5 11
ஆகமொத்தம் வரவு ரூ ...	491	9	6	1578	13	2						
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ...	1081	5	2	341	1	8	ஆக மொத்தம் செலவு ரூ ...	719	15	6	1743	3 11
							மாதமுடிவில் மீதி இருப்புத் தொகை ...	852	15	2	176	10 11
ஆகமொத்தம் ரூ ...	1572	14	8	1919	14	10	ஆகமொத்தம் ரூ. ...	1572	14	8	1919	14 10

*By C Pass Book 550—0—0
Cash on hand 302-15—2

852-15—2

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
13—8—21.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
10—8—21.